சமர்ப்பணம்

தமிழ்த் தாயே!

உனது திருவடிகளிலே சூட்ட ஆர்வமுடன் பாரதி கொண்டுவந்த மணமிக்க அழகிய புதுமலர்கள் எத்தனையோ.

அவற்றிலே பல சிதறுண்டு மறைந்து கிடந்தன. தேடித் தொகுத்து அவற்றை மாலையாக்கியுள்ளேன்.

உனக்கே இம்மாலை உரியது. ஏற்றருள்க.

—பெ. தூரன்.

பொருளடக்கம்

1.	முன்னுரை	9
2.	பாரதியார் வாழ்க்கை வரலாறு	17
3.	பாரதி தமிழ்	59
4.	பாரதியாரின் பத்திரிகைத் தொண்டு	71
5.	வங்கமே வாழிய	89
6.	வந்தேமாதரம்	93
7.	வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறுதல்	97
8.	விண்ணப்பம்	100
9.	வந்தேமாதரம்	102
10.	என்னே கொடுமை!	104
11.	எனது தாய் நாட்டின் முன்னுட் பெருமையும் இந்நாட் சிறுமையும்	105
12.	ஸ்வாமி அபேதானந்தர்	107
13.	யான்	111
14.	சந்திரிகை	113
15.	ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலஞ் சென்றதைப் பற்றிய இரங்கற் பாக்கள்	115
16.	சென்னை வாசிகளின் நிதானமும் விபின சத்திரபாலரின் சந்நிதானமும்	117
17.	திருவல்லிக்கேணி சுதேசிய கிருஹியம்	121
18.	காங்கிரஸ் நாஷனலிஸ்டு டெலிகேட்டுகளுக்கு நோட்டீஸ்	122
19.	ஸ்வதேச கீதங்கள்	125
20.	ஜன்ம பூமி	127
21.	ஞான ரதம்	130
22.	மாதா வாசகம்	132
23.	பாஞ்சாலி சபதம்	135

24.	மாதா மணி வாசகம்	137
25.	எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை	138
26.	சித்தக் கடல்	140
27.	நெல்லையப்பருக்குக் கடிதம்	141
28.	கிச்சடி	144
29.	ஜப்பான் தொழிற் கல்வி	148
30.	விக்தோர் ஹியூகோ என்ற பிரெஞ்ச் ஞானியின் வசனங்கள்	153
31.	பல	153
32.	புதிய உயிர்	160
33.	உல்லாஸ சபை	166
34.	தமிழ்	173
35.	பெண்கள் சர்வ்கலா சங்கம்	176
36.	பாட்டு	179
37.	புதுப் பேய்	181
38.	சுய ஆட்சியைப்பற்றி ஒரு யோசனை	186
39.	உடம்பு	187
40.	உண்மை	187
41.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்	188
42.	சில கவியரசர்	191
43.	வருங்காலம்	193
44.	சக்தி தர்மம்	193
45.	பூச்சித் தேவன்	194
46.	வேத ரிஷிகளின் கவிதை	202
47.	சக்தி தர்மம்	204
48.	விதி	208
49.	மாலை	211
50.	மாலை	211
51.	லோகோபகாரம்	212
52.	நவராத்திரி	217
53.	மாலை	218
54.	ஜப்பானியக் கவிதை	219
55.	ஏன்	224

56.	புயற்காற்று	224
57.	புதுச்சேரியில் புயற்காற்று	225
58.	சங்கீத விஷயம்	231
59.	காலம்	234
60.	வளர் பிறை	237
61.	தர்மம்	237
62.	நாற்குலம்	238
63.	பழைய உலகம்	238
64.	கிளிக் கதை	238
65.	குடிப்பாங்கு	239
66.	நானு விஷயங்கள்	242
67.	நம்பிக்கை	242
68.	தொழில்	243
69.	பொழுதுபோக்கு	247
70.	கடற் பாலத்தில் வர்ணசிரம சபை	252
71.	காமதேனு	262
72.	விளக்கு	262
73.	விடுதலை	266
74.	தெலுங்க மகா சபை	270
75.	பெண்	275
76.	அர்ஜுன சந்தேகம்	275
77.	ப்ராயச்சித்தம்	276
78.	பெண் விடுதலை	282
79.	தாதாபாய் நௌரோஜி	283
80.	மழை	287
81.	ராகவ சாஸ்திரியின் கதை	287
82.	கண்ணன் பாட்டு	288
83.	கண்கள்	290
84.	குழந்தைகள்	292
85.	உள்ளருத்த விளக்கம்	295
86.	பசு	297
87.	நகரம்	299
88.	செல்வம்	299

89.	ஹிந்து தர்மம்	300
90.	உயிரின் ஒளி	302
91.	கத்திச் சண்டை	302
92.	தமிழ் நாட்டின் விழிப்பு	303
93.	கலியுக கடோற்கசன்	303
94.	கோபந்நா	304
95.	திருவிளக்கு	311
96.	சித்திரக்காரருக்குக் கடிதம்	312
97.	ஸ்வராஜ்யம்	312
98.	பரலி. சு. நெல்லையப்பருக்குக் கடிதம்	318
99.	எட்டயபுரம் அரசருக்குச் சீட்டுக் கவிகள்	320
100.	வேப்ப மரம்	321
101.	காந்தாமணி	329
102.	குறிப்புகள்	339
103.	தேசீயக் கல்வி	345
104.	இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை	345
105.	சில குறிப்புகள்	346
106.	ரஸத் திரட்டு	353
107.	விநோதத் திரட்டு	361
108.	சுதேசமித்திரன் பத்திரிகையும் தமிழ்நாடும்	365
109.	விநோதக் கொத்து	370
110.	வெறும் வேடிக்கை	376
111.	விநோத விஷயங்கள்	381
112.	உலக விநோதங்கள்	389
113.	உலக விநோதங்கள்	395
114.	உலக விநோதங்கள்	399
115.	விசேஷக் குறிப்புகள்	404
116.	பட்டணத்துச் செய்திகள்	409
117.	ரஸத் திரட்டு	412
118.	ரங்கூன் சர்வகலா ஸங்க பஹிஷ்காரம்	416
119.	உலக நிலை	419
120.	குறிப்புகள்	423

121.	கால விளக்கு	428
122.	சில குறிப்புகள்	433
123.	ஹாஸ்யம்	438
124.	நேசக் கக்ஷியாரின் மூட பக்தி	444
125.	பூகோள மஹா யுத்தம்	449
126.	மணித்திரள்	454
127.	தீப் பொறிகள்	460
128.	புதுமைகள்	466
129.	மஹா மகம்	474
130.	புதுமைகள்	479
131.	புதுமைகள்	484
132.	காலக் கண்ணுடி	489
133.	ரிஷிகள் கடன்	494
134.	இந்தியாவின் அழைப்பு	498
135.	ஜர்லாந்தும் இந்தியாவும்	501
136.	என் ஈரோடு யாத்திரை	505
137.	ஒரு கோடி ரூபாய்	508
138.	ஸ்ரீ ரவீந்திர திக் விஜயம்	512
139.	பாரதியாரின் எழுத்துப் பணி	518
140.	துணை நூல்கள்	524



1928-ஆம் ஆண்டு நான் சென்னையிலுள்ள மாகாணக் கல்லூரியில் இண்டர்மீடியட் முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதே எனக்குப் பாரதிப் பைத்தியம் என்ற சிறப்புப் பெயர் உண்டு.

இந்தப் பைத்தியம் எனக்கு ஒரு துணிச்சலைக்கொடுத்தது. ஒரு நாள் தன்னந்தனியாகச் சுதேசமித்திரன் பத்திரிகாலயத் திற்குச் சென்று அதன் ஆசிரியரான திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள் முன்னிலையில் நின்றேன். "சுப்பிரமணிய பாரதி யார் சுதேசமித்திரனில் எழுதத் தொடங்கியதிலிருந்து அதாவது 1905-ஆம் ஆண்டு முதல் 1921-ஆம் ஆண்டு முடிய உள்ள பழைய சுதேசமித்திரன் பத்திரிகையின் தொகுதி களைப் பார்வையிட ஆர்வத்தோடு வந்திருக்கிறேன். பாரதியார் எழுதியவற்றை ஒன்றுவிடாமல் சேகரம் செய்ய வேண்டும் என்பது எனது ஆசை" என்று கூறினேன்.

என்னை யாரென்று அவருக்குத் தெரியாது. அறிமுகக் கடிதம் ஒன்றும் என்னிடமிருக்கவில்லை. அவர் என்னிடத் திலே என்ன கண்டாரோ எனக்குத் தெரியாது. என்னைப் பற்றி அதிகம் விசாரித்து அறிந்து கொள்ளக்கூட அவர் உத்தேசம் செய்யவில்லை. உடனே எனது விருப்பத்திற்கு அன்போடு சம்மதம் தெரிவித்தார். பழைய தொகுதிகள் நிறைந்து கிடக்கும் அந்த அறைக்குள்ளேயே இருந்து வேண்டியவற்றை நகல் எடுத்துக் கொள்ளலாம்; தொகுதி களை மட்டும் வெளியில் எடுத்துச் செல்லக் கூடாது என்ற ஒன்றைத் தவிர வேறு எந்தவிதமான நிபந்தனையும் இல்லை. என் விருப்பம்போலச் செல்லலாம்; திரும்பி வரலாம்.

இன்றைக்கு நினைத்தாலும்கூட எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. என்னிடத்திலே திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்களுக்கு அன்று எப்படி அவ்வளவு நம்பிக்கை பிறந்ததோ தெரியவில்லை. "என்னவோ சிறு வயசுப்

பையன், கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கிறவன், பழைய தொகுதிகளிலிருந்து காகிதங்களைக் கிழித்துக் கொண்டு போய்விட்டால் பிறகு அவற்றை ஈடுசெய்ய முடியாதே'' என்ற மாதிரி சாதாரணமாக உண்டாகக்கூடிய எண்ணமே அவருக்கு உண்டாகவில்லை. என் உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த ஆர்வத்தை அவர் நுட்பமாக எடுத்த எடுப்பிலேயே உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். இல்லா விட்டால் அவ்வளவு தாராளமாக, அன்போடு அநுமதி தந்திருக்க முடியாது. இந்தச் சம்பவத்தை நினைக்கும்போ தெல்லாம் எனக்கு அவரிடத்திலே தனிப்பட்ட ஒரு நன்றி யுணர்ச்சி பிறக்கின்றது. அதை எவ்வாறு வெளிப்படுத்துவ தென்று எனக்குத் தெரியவில்லை.

பாரதியார் எழுதிய கவிதைகள், கதைகள், கட்டுரை கள் பலப்பல அந்தக் காலத்திலே நூல் வடிவத்திலே வெளி வாரமல் மறைந்து கிடந்தன. அவருடைய நூல்களில் மூன்றும் தொகுதியாக இப்பொழுதுள்ள கட்டுரைகள் என் னும் தொகுப்பு அப்பொழுது வெளியாகவில்லை. அவற்றிற் பல சுதேசமித்திரன் தினசரித்தாள்களில் புதைந்து கிடந்தன. அவையல்லாத வேறு கட்டுரைகளும் அவற்றில் இருந்தன. சுதேசமித்திரன் வார மும்முறைப் பதிப்பொன்றும் பல ஆண்டுகள் வெளியாயிற்று. அதிலும் பாரதியார் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இவற்றையெல்லாம் ஒன்று விடாமல் திரட்டிவிட வேண்டும் என்று நான் துடித்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது வனமலர்ச் சங்கம் என்ற ஒரு சங்கத்தைக் கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் ஆரம்பித்திருந்தோம். சென்னை, திருச்சி, மதுரை முதலிய நகரங்களிலும் பிற இடங் களிலும் அதற்குக் கிளைச் சங்கங்கள் இருந்தன. நாட்டு விடுதலை, சுதேசி இயக்கம், தமிழ் இலக்கியம் இவற்றில் ஆர்வம் உள்ள கல்லூரி மாணவர்களே வனமலர்ச் சங்கத்தின் அங்கத்தினர்களாக இருந்தார்கள். வனமலர்ச் சங்கத்தின் ஆதரவில் பித்தன் என்ற பத்திரிகை ஒன்றை நாங்கள் ஆரம் பித்தோம். முதலில் அது கையெழுத்துப் பத்திரிகையாக மாதம் ஒரு முறை வெளியாயிற்று. அங்கத்தினர்கள் அதிகரிக்கவே கையால் எழுத முடியவில்லை. சைக்லோஸ் டைல் பிரதிகள் எடுத்து வெளியிட்டோம். விக்டோரியா ஹாஸ்டலில் எனது அறையில் சைக்லோஸ்டைல் வேலை சதா நடந்துகொண்டிருந்தது. பிறகு அந்த முறையாலும்

சமாளிக்க முடியவில்லை. ஆதலால் 32 பக்கங்கள் கொண்ட அச்சுப் பத்திரிகையாக நடத்துவதென்று தீர்மானித்தோம்.

அந்தப் பத்திரிகை இரண்டாவது மாதத்திலேயே 64 பக்கங்கள் கொண்டதாக வளர்ந்தது. நூல் வடிவிலே வெளி வராத பாரதியாரது கட்டுரைகளை அதில் வெளியிடுவ தென்றும், பிறகு நூலாகத் தொகுத்து வெளியிடுவதென்றும் நான் தீர்மானித்தேன்.

சுதேசமித்திரன் பழைய பிரதிகளின் தொகுதிகளுள்ள அறைக்குள்ளே மறைந்து கிடந்த பாரதியாரோடு நான் ஆர்வத்தோடு பல நாட்கள், மாதங்கள் அளவளாவிக் கொண்டிருந்தேன்.

பதினாறு ஆண்டுகளில் வெளியான தினசரிப் பத்திரிகை, வாரம் மும்முறைப் பத்திரிகை இவற்றின் தாள்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்துப் பாரதியாரின் கட்டுரைகளை யெல்லாம் திரட்டிப் பிரதி எடுப்பது எளிதான காரியமா? ஆனால் அது எனக்குக் கடினமான வேலையாகத் தோன்ற வில்லை. எதிரிலே ஒரு பத்துப் பழந் தொகுதிகளை அடுக்கி வைத்து அவற்றையே மேஜையாக்கிக் கொண்டேன். அவற்றின் ஒரு பக்கத்திலே உட்கார்ந்து வேலை செய்யத் தொடங்கினேன்.

இப்படிப் பிரதி செய்யும் பணியில் எனது நண்பர்கள் திரு. கே. எஸ். பெரியசாமியும், டாக்டர் ல. கி. முத்துசாமி யும் எனக்குப் பலநாள் உதவி செய்தார்கள். அவர்களுக்கும் பாரதிப் பைத்தியம் உண்டு. எங்களுடைய தோழமையி லேயே அது வளர்ந்ததாகையால் இந்தக் காரியத்தை உற் சாகமாகச் செய்தோம். பழம் பிரதிகள் நிறைந்த அறைக்கு ஒரு தனிப்பட்ட வாசனையுண்டு. அது எங்களுக்கு நறுமண மாக இருந்தது.

பாரதியார் கவிதை, கட்டுரை, கதை ஒவ்வொன்றையும் எழுதி வெளியிட்ட தேதி அவர் உபயோகித்த புனைபெயர்கள் முதலிய எல்லா விவரங்களையும் விடாமல் குறிக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை.

பாரதியார் முதலில் மிஸ்டர் C. சுப்பிரமணிய பாரதி என்று தம் பெயரை வெளியிட்டிருக்கிறார். பின்னால் காளி தாஸன், சக்திதாஸன் என்ற புனைபெயர்களில் பல கட் டுரைகள் எழுதியிருக்கிறார். தமது உண்மைப் பெயரிலேயே எழுதும்போது ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி என்று

குறித்திருக்கிறார். அந்தக் காலத்திலே கட்டுரை முதலியவற்றிற்குத் தமிழிலே தலைப்புக் கொடுப்பதோடு, ஆங்கிலத்திலும் தலைப்புக் கொடுப்பது ஒரு வழக்கமாக இருந்திருக்கிறது. பாரதியாருடைய கவிதைகள் சிலவே அவ்வாறு வெளியாயிருப்பதை இந்நூலில் குறித்திருக்கிறேன். பிற்காலத்திலே பாரதியாரின் எண்ணங்கள் முதிர்ந்தபோது ஆங்கிலத்தில் தலைப்புக் கொடுக்கும் பழக்கத்தைக் கண்டித்து எழுதியிருக்கிறார். இந்த மாறுதலை அவர் தமது பெயரை எழுதி வெளியிட்ட முறையிலுங்கூடக் காண முடிகிறது.

கவிதை, கதை, கட்டுரை எழுதிய காலத்தை அறிந்து அந்த முறையிலே அவற்றை வெளியிட வேண்டும் என்பதும், அதன் மூலம் அவருடைய நடை வளர்ச்சி, கருத்து வளர்ச்சி, கவிதை வளர்ச்சி முதலானவற்றையெல்லாம் ஆராய வேண்டும் என்பதும் என்னுடைய ஆசை. ஆங்கிலத்திலே பல கவிஞர்களைப் பற்றிய இத்தகைய நல்ல ஆராய்ச்சிகளை நான் படித்திருக்கிறேன். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆரம்பகால நாடகங்கள் என்றும், இடைக்கால நாடகங்கள் என்றும், முதிர்ச்சிக்கால நாடகங்கள் என்றும் அவற்றைக் குறித்து அவற்றின் சிறப்பை ஆராய்ந்திருக்கிறார்கள். ஆரம்பகால நாடகங்களில் சொல்லதிகம், கருத்தும் கவிதையும் குறைவு என்றும், இடைக்காலத்து நாடகங்களில் அவை சமநிலை பெறுகின்றன என்றும், முதிர்ச்சிக்கால நாடகங்களிலே கவிதைப் பெருக்கும், கற்பனைத் திறமும், கருத்தாழமும் சொற்களை மீறிக்கொண்டு பொங்குகின்றனவென்றும் திறனாய்வாளர்கள் கண்டிருக்கிறார்கள். அவ்வாறு பாரதியாரை ஆராய வேண்டுமென்று கவிதைகளுக்கும், கட்டுரை கதைகளுக்கும் அவை வெளியான தேதிகளைக் குறித்து வைத்தேன்.

முன்பே நூல் வடிவில் வந்த பல கவிதை முதலியவற்றிற்கு அத்தொகுதிகளிலேயே தேதி குறித்திருந்தேன். அத்தொகுதிகள் எப்படியோ என் கையைவிட்டு நழுவிவிட்டன. நிச்சயமாகத் திருப்பிக் கொடுத்துவிடுவதாக வாக்குறுதியளித்து மறந்துபோன அன்பர்களின் அஜாக்கிரதையால் அவை கிடைக்காமற் போய்விட்டன என்பதை நினைத்தால் எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஆனால் நல்ல வேளையாக இந்நூலில் வெளியிட்டுள்ளவைகளுக்கும் இன்னும் பலவற்றிற்கும் அவை வெளியான தேதிக் குறிப்புகள் அவற்றை எழுதி வைத்துள்ள தாள்களிலேயே இருந்தன. அவற்றைக்

குறித்திருக்கிறேன். பாடல்கள் பலவற்றிற்கும் அவ்வாறே செய்திருக்கிறேன். அவற்றிலிருந்து பாரதியாருடைய இலக்கியத் திறமையின் மலர்ச்சியை ஒருவாறு அறியலாம்.

அன்பர் பரலி சு. நெல்லையப்பர் பாரதியாரோடு தொடர்புடையவர்கள். பாரதியாரைப் பற்றிய பல விஷயங்களை அவர் பல தடவை என்னிடம் கூறியிருக்கிறார். பாரதியார் தமக்கு எழுதிய இரண்டு கடிதங்களை அவர் எனக்குக் கொடுத்தார். அந்த இரண்டு கடிதங்களும் பாரதியார் எழுதிய நூல்களை வெளியிடுவது பற்றியவை. அவையல்லாமல் குற்றாலத்திற்குச் சென்ற சமயத்தில் அந்த அருவியை வருணித்து நெல்லையப்பருக்குப் பாரதியார் ஒரு கடிதம் எழுதியிருந்தாராம். அந்தக் கடிதத்தைப் படித்தால் குற்றால அருவியின் அழகிய காட்சியைக் காண்பதுபோலவே இருக்குமென்று நெல்லையப்பர் கூறினார். அதையும் எனக்குக் கொடுக்கத் தேடியபோது அது கிடைக்கவில்லை. அவருக்கும் ஏமாற்றம்; எனக்கும் ஏமாற்றமாக முடிந்தது.

முன்னால் குறிப்பிட்ட கடிதங்கள் பதின்மூன்று ஆண்டுகள் என்வசமிருந்தன. பிறகு ஒருநாள் நெல்லையப்பரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த இரு கடிதங்களும் ஏதோ ஒரு காரியத்திற்காக வேண்டியிருக்கின்றன என அவர் எழுதினார். "பன்னிரண்டு ஆண்டுக்குமேல் உங்கள் வசம் இருக்கும் கடிதங்கள் உங்களுக்கேதான் சொந்தம். எனக்குக் கேட்க உரிமை கிடையாது. ஆனால் நீங்கள் விரும்பினால் கொடுத்துதவலாம்." என்று அவர் கடிதத்தில் தெரிவித்திருந்தார். அவரிடத்திலே பெரிதும் மரியாதை கொண்டுள்ள எனக்கு அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமலிருக்க முடியுமா? கடிதங்களை அனுப்பி வைத்தேன். குழந்தை உள்ளம் படைத்த நெல்லையப்பர் அவற்றை யாரிடமோ கொடுத்து இழந்துவிட்டார். நாங்கள் சந்திக்கும்போது இன்றும் அதை நினைத்துத் துக்கப்படுவதுண்டு. ஆனால் நல்ல வேளையாக அவற்றில் ஒரு கடிதத்தை நான் அப்படியே பிளாக் செய்து பாரதியாருடைய கையெழுத்திலேயே ஒரு சமயம் கலைமகளில் வெளியிட்டிருந்தேன். அது இப்பொழுது கிடைத்தது. மற்றது மறைந்து போயிற்று.

இந்நூலை இதுவரை வெளியிடாததற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. கீட்ஸ் என்ற கவிஞனைப்பற்றி ஆங்கிலத்திலே நான் ஒரு ஆராய்ச்சி நூல் படித்தேன். அவருடைய

வாழ்க்கையையும், கவிதைத் திறனையும் மிக விரிவாக ஆராய்ந்து அதில் எழுதியிருந்தது. கீட்ஸின் தலைமுடியின் நிறம் தங்க நிறமானதா செம்பட்டையானதா என்பதைப் பற்றிக்கூட அதில் விரிவாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருந்தது. அவரைப்பற்றி என்னென்ன தெரிந்து கூற முடியுமோ அத்தனையும் அந்த நூலிலே இருந்தது. அதைப்போலப் பாரதியாருக்கொரு வாழ்க்கை வரலாறும், இலக்கிய ஆராய்ச்சியும் செய்து இவற்றை வெளியிட வேண்டுமென்று நான் கனவு கண்டுகொண்டிருந்தேன். அவருடைய வாழ்க்கையைப்பற்றிப் பல விஷயங்களைத் திரட்ட வேண்டுமென்றும் திட்டமிட்டிருந்தேன்.

ஆனால் இதுவரை அவ்வளவு விரிவான ஆராய்ச்சி செய்ய ஒழிவு கிடைக்கவில்லை. இடையிடையே முயன்றும் காலக் குறைவால் பெரியதோர் அளவிற்கு ஒன்றும் சாதிக்க முடியவில்லை. ஆகையால் இனிமேலும் ஒழிவுக்காகக் காத்திருந்து பாரதியாரின் இலக்கியத்தை மறைத்து வைத்திருப்பது சரியல்லவென்று எனக்குத் தோன்றியது. ஆகவே பாரதியாரைப்பற்றிப் புதிதாக இதுவரை தெரிந்த விவரங்களையும், வெளிவராத அவருடைய கவிதை, கதை, கட்டுரை, மற்றக் குறிப்புகளையும் வெளியிட்டு விடுவதென்ற தீர்மானத்திற்கு வந்தேன்.

இவ்வாறு வெளியிடுவதற்கும் பாரதியாரைப் பற்றிய ஆராய்ச்சியில் முன்னர் வெளிவந்துள்ள நூல்களிலிருந்து மேற்கோள் குறிப்புகள் எடுத்துக்கொள்வதற்கும் அன்புடன் அனுமதி தந்த சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்களுக்கும், சென்னை அரசாங்கத்திற்கும், ஆசிரியர்களுக்குப் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த நூலிலே பாரதியாரின் கவிதை, கதை, கட்டுரை முதலியவற்றை அவை வெளிவந்த தேதிக் கிரமப்படி வெளியிட்டிருக்கிறேன். முன்பே நூல் வடிவில் வெளியான கட்டுரையானால் அது சுதேசமித்திரனில் வெளியான தேதி தெரிந்திருந்தால் அதை மட்டும் குறிப்பிட்டிருக்கிறேன். பாரதியார் எழுதியதாக அவர் பெயரில் சில கட்டுரைகள் அண்மைக் காலத்தில் சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அவை பாரதியாருடைய கட்டுரைகள்தாமா என்பதற்கு எனக்கு நிச்சய

மான சான்று கிடைக்காமையாலும் அவை முதல் முதலாக வெளிவந்த பழம் பத்திரிகைகளை நான் பார்க்க முடியவில்லை யாதலாலும் அவற்றை இத் தொகுதியில் சேர்க்க விரும்ப வில்லை.

பழைய சுதேசமித்திரனிலும்கூட வேறு புனைபெயர் களில் வந்துள்ள ஒரு சில கட்டுரைகள் பாரதியார் எழுதி யவைதானோ என்று ஐயுறும்படி உள்ளன. ஆனால் நிச்சய மாகத் தெரியாததால் அவற்றை நான் பிரதி செய்யவில்லை. இன்னும் ஊன்றிப் பார்த்திருந்தால் ஒரு சிலவாவது கிடைத் திருக்கும்.

இதுவரை நான் செய்த முயற்சி எனக்கு முழு மன நிறைவை அளித்திருப்பதாக யாரும் நினைக்கக்கூடாது. தமி ழுக்குப் புத்துயிர் தந்த கவிஞரின் எழுத்தை ஒன்று விடாமல் தொகுத்து வெளியிட வேண்டும் என்றும், அவரது எழுத்துத் திறமையின் வளர்ச்சியைக் காலக் கிரமத்தில் ஆராய்ந்து புது முறையிலே வாழ்க்கை வரலாறும், இலக்கியத் திறனாய்வும் எழுத வேண்டும் என்றும் நான் கொண்டுள்ள ஆசையை ஓரளவிற்கே இங்கு நிறைவேற்றியிருக்கிறேன். இந்தியா, ஞானபாது, சக்ரவர்த்தினி, தேச பக்தன், லோகோபகாரி முதலான பல பத்திரிகைகளின் பழம் பிரதிகளை இன்னும் நன்றாக ஆராய வேண்டும். சுதேசமித்திரனில் வெளியான கட்டுரை, கவிதைகளின் தேதியைக் குறித்து வைத்திருந்தது போலவே கவிதைகள் சிலவற்றை எழுதக் காரணமான நிகழ்ச்சிகளையும் குறித்து வைத்திருந்தேன். உதாரணமாக பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள் என்ற பாடலைப் பாடுவதற்குத் தீனபந்து ஆண்டருஸ் எழுதிய கட்டுரையொன்று காரணமாக அமைந்தது. தீனபந்து பிஜிக்குச் சென்று அங்கு இந்தியப் பெண்களின் நிலைமையை நேரிற் கண்டறிந்து அதுபற்றி மாடர்ன் ரெவியூ பத்திரி கையில் உருக்கமாக எழுதினார். அதைப் படித்த பாரதியார் அப்பாடலை இயற்றினார். இந்த விவரம் அப்பாடல் வெளி யான காலத்திலேயே அதனடியில் கொடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு குறித்து வைத்திருந்த காவிய நூல் கை நழுவி விட்டதென்று முன்பே குறித்திருக்கிறேன். அந்த விவரங் களை மீண்டும் சேகரித்தால் பாரதியாரை இன்னும் நன்கு அறிந்து அநுபவிக்க உதவியாகவிருக்கும்.

பாரதியாரும், வ. வெ. சு. ஐயரும் சேர்ந்து ரவீந்திர நாத டாகூரின் சிறு கதைகள் பலவற்றை அழகாக மொழி

பெயர்த்தார்கள். அவற்றின் தொகுப்பு நூல்களும் எப் படியோ என்னிடமிருந்து மறைந்து போயின.

நெல்லையப்பர் ஒரு தங்கமான மனிதர். பாரதியாரிடத் திலே பேரன்பு பூண்டவர்களில் ஒருவர். இவரைப் போலவே பாரதியாரை நேரில் அறிந்த ஒரு சிலர் நம்முடன் இருக் கிறார்கள். இவர்கள் அனைவரையும் விசாரித்து வாழ்க்கை விவரங்கள் பலவும் தயாரிக்க வேண்டும்.

இவற்றில் சிலவற்றைத்தான் நான் ஒரளவு செய்ய முடிந்தது. பாரதியாரின் இலக்கிய வளர்ச்சியைக் காலக் கிரமத்தில் ஆராய்வதை நான் முக்கியமாக இந்நூலில் கொண்டிருக்கிறேன். அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் விரிவாக இல்லாமற்போனாலும் ஒருவாறு கால நிர்ணயத் தோடு எழுத முயன்றிருக்கிறேன். பாரதியாரின் நூல் களுக்கு ஆங்காங்கே குறிப்பாகத் திறனாய்வும் கண்டிருக் கிறேன். இன்னும் விரிவான முறையில் இந்த ஆராய்ச்சி யைச் செய்ய பாரதியன்பர்களும், தமிழன்பர்களும் வருங் காலத்திலே முன் வருவார்களென்று நம்புகிறேன். அவ்வாறு செய்தால் அது தமிழ் நாட்டிற்கு ஒரு புது விழிப்பையும், தமிழுக்கு ஒரு புதிய சக்தியையும் ஊட்டிய பாரதியாருக்குச் செய்யும் சிறந்த சேவை என்பதோடு தமிழுக்கும் சிறந்த சேவையாகும் என்று நான் கருதுகிறேன்.

—பெ. தூரன்.

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

புதிய விவரங்கள் பல இப் பதிப்பிலே இடம் பெறு கின்றன. அநேகமாக பாரதியாருடைய இலக்கியப் படைப்பு எல்லாவற்றைப் பற்றியும் குறிப்புகளே இதிற் காணலாம். அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் திருத்திச் சற்று விரிவாக எழுதியுள்ளேன். இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள காலவரிசைக் குறிப்பு ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் பயன்படும். இப்பதிப்பு அளவில் மிகப் பெரிதாகி விட்டமையால் தாகூரின் ஐம்பெருங் கட்டுரைகளின் தமி ழாக்கம் தனி நூலாக வெளியிடப் பெற்றுள்ளது.

சென்னை,
7-3-1963.

பெ. தூரன்.



பாரதியார்

(1920-ஆம் ஆண்டில் சுரை க்குயிலில் எடுத்த படம்)

பாரதியார் வாழ்க்கை வரலாறு

1904-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே ஒருநாள், அது மிக நல்ல நாள். தமிழன்னையின் உள்ளம் களிப்பெய்த மலர்ந்த ஒரு புனிதத் திருநாள் அது. அன்றுதான் பாரதியார் தமது உண்மையான இலக்கிய வாழ்வைத் தொடங்க மதுரையம்பதியை விட்டுச் சென்னைமா நகருக்குப் புறப்பட்டார். சென்னையை நோக்கி ரெயிலிலே வந்துகொண்டிருந்த அவருள்ளத்திலே என்னென்ன எண்ணங்கள் குமுறிக் கொண்டிருந்தனவோ யார் அறிவார்கள்! எட்டைய புரத்தை விட்டு வந்து மதுரையிலே சிறிது காலத்திற்கு மேற்கொண்ட தமிழாசிரியர் வேலையை நினைத்துச் சிரிப்பும் இடையிடையே தோன்றியிருக்க வேண்டும். தமிழாசிரியர் வேலை தாழ்ந்தது என்பதற்காகவல்ல. ஆனால் அவருடைய இயல்பிற்கும் அந்தக் காலத்திலே தமிழாசிரியர் தொழில் இருந்த நிலைமைக்கும் அவ்வளவு பொருத்தமில்லை என்பதை நினைத்தே அவர் புன்னகை செய்திருக்க வேண்டும் ஒரு சில மாணவர்களுக்குத் தமிழினிடத்தே பக்தியையும், தேசத்தினிடத்தே பக்தியையும் உண்டாக்குவதை விடுத்துத் தமிழ் நாட்டிற்கே அவ்வித பக்தியை உண்டாக்க அவர் புறப்பட்டுவிட்டார்.

பாரதியார் 1904-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று, மதுரையிலுள்ள சேதுபதி உயர் தரப் பள்ளியில் தமிழாசிரியராஞர். இது தாற்காலிக

மாகக் கிடைத்த வேலை. இந்த ஆசிரியர் பணியை மூன்று மாதம் பத்து நாட்கள் அதாவது 1904 நவம்பர் 10-ஆம் தேதி வரை செய்துவிட்டுச் சென்னையை நோக்கிப் புறப்பட்டிருக்கிறார்.*

தமிழாசிரியராக அவருக்கு மாதம் 17½ ரூபாய் சம்பளம் கிடைத்தது.

பாரதியார் தமது இருபத்திரண்டாவது வயதிற் குள் சமஸ்தானப் புலவர், தமிழாசிரியர் ஆகிய இரண்டிலும் ஈடுபட்டு அவை இரண்டையும் தள்ளிவிட்டுப் பத்திரிகைத் தொழிலை நாடிச் சென்னைக்கு வந்தார்.

அவ்வாறு வருவதற்குச் சாதகமாக இருந்த நிகழ்ச்சியைப் பற்றித் திரு. வ. ரா. அவர்கள் மகாகவி பாரதியார் என்ற தமது அழகிய நூலிலே கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"இந்தச் சமயத்தில், சென்னையில் சுதேசமித்திரன் பத்திரிகையை நடத்தி வந்த காலஞ் சென்ற ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் மதுரைக்குப்

---

* இந்த விவரத்தை எனக்குத் தெரிவித்தவர் சேதுபதி உயர்தரப் பள்ளியின் தலைமையாசிரியராகிய திரு. எஸ். நாராயண ஐயர் அவர்கள். எனக்கு அவர் எழுதியுள்ள கடிதம் வருமாறு :—

மதுரை
30-3-1953

அன்புடையீர்,

தங்கள் 24-3-'53 தேதியுள்ள கடிதம் கிடைத்தது. அதில் குறித்தவாறு பழைய தஸ்தாவேஜிகளைத் தேடிப் பார்த்ததில் காலஞ்சென்ற அமரகவி திரு. சுப்பிரமணிய பாரதியாரவர்கள் 1-8-1904 முதல் 10-11-1904 வரை இப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி யிருப்பதாகத் தெரிகிறது. இச் செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள்
எஸ். நாராயண ஐயர்,
தலைமை ஆசிரியர்.

இதே விவரத்தை அந்த உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வரும் திரு. வி. ஜி. சீனிவாசன் அவர்களும் கண்டறிந்து எனக்குத் தெரிவித்தார்கள். இருவருக்கும் என் நன்றி உரியது.

போய்ச் சேர்ந்தார். அப்பொழுது சுப்பிரமணிய அய்யர் பாரதியாருக்கு அறிமுகமானர். பாரதியாரின் மேதையை அவர் உடனே தெரிந்து கொண்டார். உள்ளூர அவருக்கு ஆனந்தம். எப்படியாவது பாரதியாரைச் சென்னைக்குக் கொண்டு போய் விடுகிறது என்று அய்யர் தீர்மானங் கொண்டார். பாரதியாரின் மேதையை நேரில் கண்ட அய்யர், சென்னைக்கு வரும்படி பாரதியாரை வேண்டிக் கொண்டார்."

திரு. ஆக்கூர்-அனந்தாச்சாரி அவர்கள் கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமண்ய பாரதி சரிதம் என்ற ஒரு நூலை 1936-லேயே வெளியிட்டுள்ளார்கள். அதிலே அவர் கூறுவதாவது :

"எவருக்கும் கட்டுப்படும் சுபாவம் பாரதியாரிடம் இல்லாததன் காரணமாக 1904-ம் வருடம் எட்டையபுரம் சமஸ்தானத்திலிருந்து விலகிக் கொள்ள நேரிட்டது. பிறகு மதுரை சென்று அங்கு மூன்று மாத காலம் சேதுபதி உயர்தரப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக இருந்தார். அவருக்கு வேறெத் தொழிலேனும் மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மேலிட்டது. சென்னைப் போதனு முறைக் கல்லூரி வைஸ் பிரின்சிபாலும் தமது உறவினருமான லக்ஷ்மண அய்யருக்கு இவ் விஷயத்தைப் பற்றி எழுதினர். லக்ஷ்மண அய்யர் தமது நண்பரொருவர் மூலம் சுதேசமித்திரன் காரியாலத்தில் பாரதியாருக்கு வேலை ஏதாவது கிடைக்குமாவென விசாரித்தார். அவ்வமயம் உதவி ஆசிரியர் ஸ்தானம் காலியாக விருப்பதை அறிந்து பாரதியாரைச் சென்னைக்கு வரவழைத்து மிகுந்த சிபார்சின்பேரில் சுதேசமித்திரனில் வேலைக்கமர்த்தினர்."

திரு. ர. அ. பத்மநாபன் அவர்கள் **சித்திர பாரதி** என்ற தமது நூலில் வேறுகருத்துத் தெரிவிக்கின்றார்.

சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் பணி செய்த தமிழ் ஆசிரியர் சண்முகம் பிள்ளையவர்கள் உடல் நலிவு காரணமாக ஓய்வெடுத்துக் கொண்டார். அந்த ஓய்வுக் காலத்திற்கே தாற்காலிகமாக பாரதியார் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றிருக்கிறார். ஆதலால் அவர் தொடக்கத்திலிருந்தே வேறு வேலை தேடுவதற்கு முயன்றிருக்கிறார். சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் வேலை செய்த அய்யாசாமி ஐயர் என்பவர் இவருக்கு நண்பராஞர். அவருடைய தாய் மாமன் ராஜாராமய்யர் என்பவர் ஹிந்து பத்திரிகையின் நிருராயிருந்தார். மதுரைக் கல்லூரிக் கிளை தமிழ் பண்டிதர் கோபாலகிருஷ்ணய்யர் மூலமாக அவரை அணுகி சுதேசமித்திரனில் உதவியாசிரியர் வேலைக்கு ஒரு சிபார்சுக் கடிதம் பெற்றனர். ஜி. சுப்ரமண்ய அய்யருக்கு எழுதிய இக் கடிதத்தின் மூலமாகவே பாரதியாருக்கு சுதேசமித்திரனில் வேலை கிடைத்தாக அக்கடிதத்தைத் தாமே நேரில் வாங்கி பாரதியிடம் கொடுத்த அய்யாசாமி அய்யர் தெரிவித்தார்.

எப்படியோ 1904-ல் பாரதியார் சென்னை வந்து சுதேசமித்திரன் அலுவலகத்திலே பணியாற்ற அமர்ந்துவிட்டார். வங்க மொழித்துக் கவிகள் என்ற அவருடைய பாடல் சுதேசமித்திரனில் 15-9-1905-ல் வெளியாகி யிருக்கிறது. சுதேசமித்திரனில் பாரதியார் எழுதிய முதற் கவிதை இதுவென்றே எனக்குத் தோன்றுகிறது. அதற்கு முந்திய தேதியில் அவர் தமது பெயரிட்டுச் சுதேசமித்திரனில் எழுதியதாகக் கவிதையோ, கட்டுரையோ எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. சுதேசமித்திரனில் சேர்ந்த முதல் ஏழெட்டு மாதங்கள் அவர் சாதாரண உதவியாசிரியர் போன்றே தினசரிக் கடமைகளைச் செய்திருக்கலாம். தனியாக வேண்டுமானல் கவிதை எழுதி வைத்திருக்கக்கூடும்.

பாரதியாரின் கவிதை ஒன்று மதுரையிலிருந்து வெளியான 'விவேக பாநு' என்ற மாத இதழில் முன்பே வெளியாகியுள்ளது. 'தனிமை இரக்கம்' என்ற தலைப்புள்ள அக்கவிதை 1904 ஜூலை இதழில் வந்துள்ளது. இதுவே அச்சில் வந்துள்ள பாரதியாரின் முதற் கவிதை. இதையவர் எட்டையபுரத்தில் இருந்தபோதே பத்திரிகைக்கு அனுப்பியுள்ளார்.

சமஸ்தானத்துப் புலவராக இருந்து சமஸ்தானத்துக்கு உகந்த பாடல்களை எழுதுவதில் தொடங்கித் தேசத்துப் புலவராக மாறித் தேசத்துக்கும் தமிழுக்கும் உகந்த பாடல்களை எழுதும் வாய்ப்பைச் சுதேசமித்திரன் பத்திரிகையின் வாயிலாகப் பாரதியார் பெற்றார். அவர் உள்ளத்திலே அரும்பு விட்டுக்கொண்டிருக்கும் தேசிய உணர்ச்சி மலருவதற்கும் சென்னை வாழ்வே ஏற்ற சூழ்நிலையாக அமைந்தது.

ஆனால் உதவியாசிரியராகவே இருப்பதில் அவருக்குத் திருப்தியேற்படவில்லை. அவருடைய கருத்துக்களையும் புதிய தேசிய உணர்ச்சியையும் யாதொரு தடையுமில்லாமல் வெளியிடுவதற்கு வாய்ப்பேற்பட வில்லை. சுதேசமித்திரன் அலுவலகத்திலிருந்தே சக்ரவர்த்தினி என்ற மாத இதழ் வெளியாயிற்று. அதற்கு பாரதியார் ஆசிரியராக யிருந்தார்.

பங்கிம் சந்திரபாபு எழுதிய "வந்தே மாதரம்" என்ற அமர கீதத்தின் தமிழ் மொழி பெயர்ப்போடு அக் கீதத்தைப் பற்றிய விளக்கம் தாங்கிய கட்டுரையொன்று சக்ரவர்த்தினியின் 1905-ஆம் ஆண்டு நவம்பர் இதழில் வெளியாகியிருக்கின்றது.

1906 ஜனவரி 29-ஆம் தேதியில் சுதேசமித்திரனில் வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறிக்

கவி யெழுதும் அதே கை இரண்டு மாதங்களுக்கு முன்பு வந்தே மாதர கீதத்தைத் தமிழில் வரைந் திருக்கிறது. 1906 ஜனவரிக் கடுத்த பிப்ரவரியிலே "வந்தே மாதரம்" என்ற சொந்தப் பாடலைச் சுதேச மித்திரனிலேயே தீட்டியும் இருக்கிறது.

பாரதியாரின் தேசிய உணர்ச்சியின் மலர்ச்சிக்கு அவரது காசி வாழ்க்கை பெரிதும் உதவியிருக்க வேண்டும். அவர் இளமையிலே காசிக்குச் செல்ல நேரிட்டதையும் மற்ற விவரங்களையும் அறிந்து கொள்வதற்கு அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பிறப்பிலிருந்து தொடர்ச்சியாக அறிந்து கொள்வது நல்லது.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சிவலப் பேரியிலே சுப்பையர் என்பார் தமது நிலங்களைக் கவனித்துக்கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தார். அவருக்குக் குப்பம்மாள், சின்னசாமி அய்யர், சுந்தர ராஜ அய்யர் என்ற மூன்று மக்கள் உண்டு.

சின்னசாமி அய்யர் தமது அறிவுத் திறமைக் கேற்ப நல்ல உத்தியோகம் வகிக்க ஆசை கொண்டு எட்டையபுரம் சமஸ்தானத்தை யடைந்தார். "அவரது கூரிய புத்தியையும் தமிழ்ப் புலமையையும் கண்ட மகாராஜா, அவருக்குத் தமது அரச சபையில் முதல் ஸ்தானம் அளித்துக் கௌரவித்தார். சின்ன சாமி அய்யர் தமது தாய் மாமன் மகளான லக்ஷ்மியை மணந்து இல்லறம் நடத்தினர்.....சின்ன சாமி அய்யருக்கு இவ்வளவு நற்குணங்கள் அமைந்தும் முன் கோபம் மட்டும் அசாத்தியம். உறவினரோ மனைவியோ எதிர் நின்று பேசவும் நடுநடுங்கு வார்கள்." (திருமதி செல்லம்மா பாரதி—பாரதியார் சரித்திரம்)

சின்னச்சாமி அய்யருக்கும் லக்ஷ்மிக்கும் மைந்த ராக 1882-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மூல

நட்சத்திரத்தில் எட்டையபுரத்தில் சி. சுப்பிர மணிய பாரதியார் பிறந்தார். அவர் பிறந்த தேதியை 11—12—1882 என்று கிறிஸ்தவ சகாப் தத்தை முழுதும் ஒட்டிக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

பாரதியாருக்கு ஐந்து வயது நிரம்பு முன்னரே அவருடைய தாயார் காலமாய்விட்டார்கள். அதனால் அவரையும் அவருடன் பிறந்த சகோதரி பாகீரதி யையும் அவருடைய பாட்டியாராகிய பாகீரதி யம்மாளே அன்புடன் வளர்த்து வந்தார்.

சின்னசாமி அய்யருக்கு எட்டையபுரம் சமஸ் தானத்திலே செல்வாக்கு அதிகம். அதனால் பாரதி யாருக்கு அங்கே அதிகச் சலுகைகள் இருந்தன. சமஸ்தான வித்வான்களோடு தாராளமாகப் பழகவும் பேசவும் அவருக்கு உரிமையிருந்தது. வித் வான்களைப் போலப் பாடவும் வாய்ப்புண்டாயிற்று. பெரிய இடத்துப் பிள்ளையென்றால் அவனுடைய செயல்களுக்குச் சற்று அளவு கடந்தே புகழ்ச்சி ஏற்படுவது இயல்பு. அதனால் இயற்கையாகவே கவிதைத் திறமை பெற்றிருந்த இவருக்குத் தமது பதினெட்டாம் வயதில் "பாரதி" என்ற பட்டம் கிடைத்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. புலவர்க ளோடு அளவளாவுதலும், பாரதியென்ற பட்டமும் அவருக்குக் கவிதைத் துறையிலே நல்ல உற்சாக மளித்திருக்க வேண்டும்.

சின்னசாமி அய்யருக்குத் தம் மைந்தன் கணித சாஸ்திரத்திலும் யந்திரக் கலையிலும் வல்லவனாக வேண்டும் என்று ஆசை. பாரதியாருக்கு இயல்பான திறமை எதிலிருக்கிறதோ அந்தத் துறையிலே அவருக்கு எட்டையபுர சமஸ்தான வாழ்வுதான் பெரிதும் உதவியாக இருந்தது என்று சொல்ல வேண்டும்.

சின்னசாமி அய்யர் தமது விருப்பத்திற்கேற்பப் பாரதியாரைப் புத்தகமும் கையுமாகக் காலங் கழிக்க வேண்டுமென்று விரும்பினர். தந்தை யிடத்திலே மகனுக்குப் பயமும் அதிகம். அதனால் துள்ளித் திரிய விரும்பும் இளமைக் காலத்திலே பாரதியார் புத்தகத்தைத் தவிர வேறு தோழமை யின்றி வருந்தினராம். இதை அவர் ஸ்வசரிதை என்ற பாடலிலே நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆண்டோர் பத்தினி லாடியு மோடியும்
ஆறு குட்டையி னீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மர்த் தேறி யிறங்கியும்
என்னே டொத்த சிறிய திருப்பரால்
வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
வீதி யாட்டங்க ளேதிலும் கூடிடேன்
தூண்டு நூற்கணத் தோடு தனியனாய்த்
தோழமை பிறி தின்றி வருந்தினேன்

என்று அவர் தமது இளமை ஏக்கத்தை விவரிக்கிறார்.

பாரதியாரின் தாயார் லக்ஷ்மியம்மாள் இறந்த இரண்டாண்டுகளின் பின் சின்னசாமி அய்யர் வள்ளி யம்மாள் என்ற பெண்மணியை இரண்டாந் தாரமாக மணம் செய்து கொண்டார். அந்த அம்மாள் மூலமாக அவருக்கு ஆண் குழந்தை யொன்றும், பெண் குழந்தை யொன்றும் பிறந்தன.

பாரதியாருக்கு ஆங்கில உயர்தரக் கல்வி அளிக்க வேண்டுமென்றும், சீமைக்கு அவரை அனுப்ப வேண்டுமென்றும் சின்னசாமி அய்யருக்கு ஆசை யிருந்தது. முதலிலே திருநெல்வேலிக்கு அனுப்பி ஹிந்து கலாசாலையில் படிக்க வைத்தார். திருநெல் வேலிக்குச் செல்லும்போது அவருக்கு வயது என்ன என்பது தெரியவில்லை. 1887 முதல் 1890 வரை அங்கு படித்ததாக யோகி சுத்தானந்த பாரதியார் தமது பாரதி விளக்கம் என்ற நூலில் கூறுகிறார். அவ்

வாறுளல் அவர் தமது ஐந்தாம் வயதில் அங்கு படிக்கச் சேர்ந்தாக ஆகிறது. இது சரியென்று தோன்றவில்லை. ஐந்தாம் பாரம் வரை அங்கு படித்ததாக ஏற்படுவதால் அவர் மணமாகும் வரை யிலோ அல்லது அதன் பின்னருங் கூடவோ படித் திருக்க வேண்டும்.

பாரதியாருக்கு அந்தப் படிப்பும் பிடிக்கவில்லை.

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது
தீதெ னக்குப் பல்லாயிரஞ் சேர்ந்தன
நலமொ ரெட்டுஞ்சே யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்

என்று அவரே தமது திருநெல்வேலிப் படிப்பைப் பற்றிக் கூறுகிறார். ஐந்தாம் பாரம் வரையில்தான் பாரதியார் அங்கு படித்தார்.

இதன் மத்தியிலே பாரதியாருக்குக் கல்யாண ஏற்பாடாகிவிட்டது. 1897-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கீழ்க் கடயத்தில் வாழ்ந்த செல்லப்பா அய்யரின் புதல்வி செல்லம்மாளுக்கும் இவருக்கும் திருமணம் நடை பெற்றது.

மணமாகும்போது பாரதியாருக்கு வ ய து பதினென்கு என்று அவர் மனைவியார் எழுதுகிறார்கள்; பதினைந்து என்று மற்ற நூல்கள் கூறுகின்றன. ஆனால் தமக்கு அப்பொழுது வயது 12 என்று பாரதியார் தமது ஸ்வசரிதையில் இரண்டு முறை குறிப்பிடுகிறார். ஒரு வேளை அது அவர் ஞாபகப் பிசகாக எழுதியதாக இருக்கலாம். மணமாகும்போது திருமதி செல்லம் மாளுக்கு வயது ஏழு.

இந்தச் சந்தர்ப்பத்திலே ஸ்வசரிதை கூறும் மற்றொரு விஷயந்தான் நன்றாக விளங்கவில்லை.

பத்து வயதினிலே தோழமையின்றிப் பாரதி யார் வருந்தியதைப் பற்றி முன்பே குறித்தேன். அவ்வாறு துன்பம் உழன்ற காலத்தில் ஒன்பது வயதுள்ள ஒரு அழகிய கன்னியைக் கண்டு காதலுற்ற தாக அவர் ஸ்வரிதையில் கூறுகிறார்.

ஒன்ப தாயபி ராயத்த ளென்விழிக்
கோது காதைச் சகுந்தலை யொத்தனள்.

பிள்ளைக் காதலர்கள் இருவரும் "கானகத்தி லிரண்டு பறவைகள் காதலுற்றது போல" அன்பு கொண் டிருந்தனர். அவர்கள் காதலிலே உடலைப் பற்றிய எண்ணமே இல்லை.

ஊன கத்த துவட்டுறு மன்புதா
ளென்று மின்றி யுயிர்களி லொன்றியே
தேன கத்த மணிமொழி யாளொடு
தெய்வ நாட்கள் சிலகழித் தேனரோ

என்று இவ்வாறு பாரதியார் பாடுகிறார்.

இந்த நிலையிலே பாரதியாருக்குத் திருமணம் நடந்தது.

ஆங்கோர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்
ஆழ நெஞ்சிடை யூன்றி வணங்கினன் ;
ஈங்கொர் கன்னியைப் பன்னிரண்டாண்டினுள்
எந்தை வந்து மணம்புரி வித்தனன்

என்றும்,

கற்றுங் கேட்டு மறிவு முதிரு முன்
காதலொன்று கடமையொன் றுயின

என்றும் பாரதியார் கூறுவதிலிருந்து அவருடைய பிள்ளைப் பருவத்திலே ஏற்பட்ட ஓராழ்ந்த அன் புணர்ச்சியை நாம் அறிகிறோம்.

தக்க பருவமெய்தியவரிடையே தோன்றுவதும், சாதாரணமாகக் காதலென்ற சொல்லால் குறிக்கப்

படுவதுமான உள்ளுணர்ச்சியையே பாரதியார் தமது பத்தாவது வயதில் கொண்டிருந்தார் என்று நான் கருதவில்லை.

பத்து வயதுப் பாலகனுக்கு ஒத்த வயதின ருடைய சேர்க்கையிலே எத்தனையோ ஆசையிருப்பது இயல்பு. அப்படிப்பட்ட தோழமை கிடைக்காது வருந்திய பாரதியாருக்குத் தற்செயலாக அந்தப் பெண்ணின் தோழமை கிடைத்தது. அன்புணர்ச் சியை யெல்லாம் வெளியிட அவளே தனிப் பாத்திர மாக அமைகிறாள். அந்த ஆழ்ந்த அன்பைக் காத லென்றே கூறத் தோன்றுகிறது கவிஞருக்கு. சுமார் பதினைந்து ஆண்டுகள் கழித்து அதாவது 1910-ல் ஸ்வசரிதை எழுதும்போது இந்தத் தோழமை ஒரு பெரிய இன்பக் கனவாகத் தோன்றியிருக்கவேண்டும். லட்சியத் தெய்விகக் காதலாகவும் தோன்றியிருக்க வேண்டும். அவையே இத்தோழமையைக் காதல் என்று கூறத் தூண்டியிருக்க வேண்டும்.

பாரதியார் பிற்காலத்தில் இந்தக் காதலை நினைத்து ஏங்கினரென்று கூறுவதற்கில்லை. ஸ்வ சரிதையில் தவிர வேறு எங்குப் இதைப்பற்றி அவர் குறிப்பிடுவதாகத் தெரியவில்லை. 1905-ல் காசியில் நடைபெற்ற காங்கிரசுக்குப் பாரதியார் சென்றிருந்த தாகத் திருமதி செல்லம்மா பாரதி எழுதியுள் ளார்கள். அது சமயம் டம்டம் என்னும் ஊரிலிருந்த சகோதரி நிவேதிதா தேவியாரை அவர் சென்று தரிசிக்கிறார். அந்த அம்மையாரின் உபதேசத்திலே பாரதியாரின் உள்ளம் லயித்து விடுகிறது. அவ ருடைய உள்ளத்திலிருந்த கலக்கமெல்லாம் அம்மை யாரின் தரிசனத்திலேயே அகன்று விடுகிறது. பாரதியார் அவரையே தமது குருவாக ஏற்றுக் கொள்ளுகிறார். அது முதல் அவருக்குப் பெண்க

ளெல்லாம் பராசக்தியின் வடிவங்களாகவே காட்சி யளிக்கத் தொடங்குகின்றனர்.

1907-ல் முதல் தடவையாக பாரதியாரின் மூன்று தேசீய கீதங்கள் ஸ்வதேச கீதங்கள் என்ற பெயருடன் ஒரு துண்டுப் பிரசுரமாக வெளியாயின. இப்பிரசுரம் வெளியாவதற்கு வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் நூறு ரூபாய் வழங்கியுள்ளார். துண்டுப் பிரசுரத்தை இலவசமாகப் பள்ளிகளுக்கும் பொது நிலையங்களுக்கும் அனுப்பி வைத்தனர்.

1908-ல் பாரதியார் ஸ்வதேச கீதங்கள் என்ற நூலை வெளியிடுகிறார். பதினொரு பாடல்கள் அடங்கிய இதுவே அவருடைய முதல் நூலென்று கொள்ளலாம். அந்நூலை அவர் தம் குருவாகிய நிவேதிதாதேவியாருக்கே ஸமர்ப்பணம் செய்திருக்கிறார். "ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கிய தொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர் களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கின்றேன்" என்று அவர் எழுதியுள்ளார்.

1908-ஆம் ஆண்டிலேயே பாரதியாரின் உரை நடைச் சிறு வெளியீடுகள் இரண்டு தோனறின. சூரத் காங்கிரஸிற்கு பாரதியார் சென்று திரும் பியதின் விளைவாக அவை உருவாயின. ஒன்று எங்கள் காங்கிரஸ் யாத்திரை; மற்றொன்று புதிய கட்சியின் கோட்பாடுகள். பாலகங்காதர திலகர் 1907-ல் செய்த ஒரு சொற்பொழிவின் தமிழாக்கமே இந்த இரண்டாம் வெளியீடாகும்.

1909-ல் வெளியான ஜன்ம பூமி என்ற நூலில் பாரதியார் தமது குருவின் பெயரைக் குறிப்பிட்டு அவருக்கே அந் நூலையும் ஸமர்ப்பிக்கிறார்.

"எனக்கு ஒரு சுடிகையிலே, மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமை யையும் சொல்லாமலுணர்த்திய குருமணியும், பகவான் விவேகானந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை ஸமர்ப் பிக்கிறேன்."

பாரதியார் தமது ஞான குருவைக் கீழ்க்கண்ட வாறு துதி செய்து பாடியும் இருக்கிறார்.

அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிரு யெமதுயர் நா
டாம்பயிர்க்கு மழையா யிங்கு
பொருளுக்கு வழியறிரா வறிஞர்க்குப்
பெரும் பொருளாய்ப் புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கிய தாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்.

பாரதியாரின் வாழ்க்கையிலே பக்தியென்பது அடிப்படையாக இருந்தமைக்கு இவ்வம்மையாரின் அருளுபதேசம் முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந் திருக்கிறது.

பாரதியாருக்கு மணமாகின்ற காலத்திலேயே அவருடைய தந்தை சின்னசாமி அய்யரின் செல்வ நிலை சீர்கேடடையத் தொடங்கி விட்டதென்று கூறலாம்.

ஈங்கிதற்கிடை யெந்தை பெருந்துயர்
எய்தி நின்றனன் தீய வறுமையான்
ஓங்கிநின்ற பெருஞ் செல்வம் யாவையும்
ஊணர் செய்த சதியி லிழந்தனன்

செல்வத்தையிழந்த தந்தை மனமுடைந்து தளர்வெய்தலானார்.

ஆர்ப்பு மிஞ்சப் பலபல வாணிகம்
ஆற்றி மிக்க பொருள் செய்து வாழ்ந்தனன்
நீர்ப்ப டுஞ்சிறு புற்புத மாமது
நீங்கவே யுளங் குன்றித் தளர்ந்தனன்.

பாரதியாருக்கு மணமான ஓராண்டிற்குள்ளே சின்னசாமி அய்யர் நோயுற்றுக் காலமானார்.

தந்தை போயினன் பாழ்மிடி சூழ்ந்தது
தரணி மீதினி லஞ்சலென் பாரிலர்.

இவ்வாறு பாரதியார் துயருற்றிருக்கும்போது காசிக்கு வரும்படி அவருக்கு அழைப்புக் கிடைத்தது. அவருடைய அத்தை குப்பம்மாள் தம் கணவர் ஸ்ரீ கிருஷ்ணசிவனோடு அது சமயம் காசியில் வசித்து வந்தார். அவர்கள் அழைக்கவே பாரதியார் அங்கு சென்றார். எந்த ஆண்டிலே காசி சென்றார் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. 1901-ல் சென்றதாக திரு. ஆக்கூர் அனந்தாச்சாரியார் கூறுகிறார். ஆனால் 1902-ல் அவர் எட்டையபுரத்திற்குத் திரும்பி விட்டதாகத் திருமதி செல்லம்மா பாரதி எழுதுகிறார். 1898 முதல் 1901 வரை காசியிலிருந்ததாக யோகிசுத்தானந்தர் எழுதுகிறார் (பாரதி விளக்கம்.). ஆகவே இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் அவர் காசியில் வசித்திருக்கலாம். ஆங்கிலத்தோடு ஹிந்தியும் சமஸ்கிருதமும் படிக்க அவருக்கு அங்கே வாய்ப்புக் கிடைத்தது. மேலும் கல்கத்தா பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சைக்குப் படித்து அதில் முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

வடநாட்டினரைப் போலவே திருத்தமான உச்சரிப்போடு பாரதியார் ஹிந்தியில் பேசுவாராம்.

பாரதியார் தமது பதினெட்டாவது வயது சமயத்திலே காசியில் வாழ்ந்திருக்கிறார். சம்பவங்களும், அநுபவங்களும் உள்ளத்திலே ஆழ்ந்து பதி

கின்ற பருவம் அது. உயர்ந்த லட்சியங்களெல்லாம் ஓங்கியெழும் பருவமும் அது. வங்காளத்திலே குமிழி விட்டெழுந்து கொண்டிருக்கும் தேசீய உணர்ச்சி அவர் உள்ளத்தைத் தாக்கியிருக்க வேண்டும். வெறும் சமஸ்தான வித்துவானாக நின்றுவிடாமல் தேசீயக் கவியாக மாறுவதற்கு வேண்டிய உள்ளுணர்வைப் பெறக்காசி வாழ்க்கையும் பாரதியாருக்கு உதவிற்று என்று கூறலாம். அந்தத் தேசீய உணர்ச்சி பிற்காலத்திலே சென்னை வாழ்க்கையிலே நன்கு மலரலாயிற்று.

காசியிலிருந்தபோது பாரதியாருக்கு வடநாட்டிலேயே தங்கிவிட வேண்டுமென்ற எண்ணம் இருந்ததாம். ஆனால் டில்லி தர்பாருக்குச் சென்று திரும்பிய எட்டையபுரம் மகாராஜா காசிக்கு வந்தபோது பாரதியாரை எட்டையபுரம் வரும்படி அழைத்ததால் அதற்கிணங்கிப் பாரதியார் ஊர் திரும்பினார். (திருமதி செல்லம்மா பாரதி—**பாரதியார் சரித்திரம்.**)

சுதந்தர உணர்ச்சி பெற்ற பாரதியாருக்குச் சமஸ்தான சேவை பிடிக்காது போனதில் ஆச்சரியமில்லை. சுதந்தரத்தோடு வாழ விரும்பி அவர் எப்படியாவது எட்டையபுரத்தைவிட்டு வெளியேற உத்தேசித்திருக்க வேண்டும். 1902-ஆம் ஆண்டில காசியை விட்டு எட்டையபுரம் திரும்பியவர் 1904 ஆகஸ்டு முதல் தேதியிலேயே மதுரையில் தமிழாசிரியராகி விடுகிறார். இரண்டு ஆண்டுகள்கூட அவரால் சமஸ்தான வித்துவானாக இருக்க முடியவில்லை.

தாற்காலிகத் தமிழாசிரியர் பணியை விட்டு நீங்கி பாரதியார் சென்னை வந்ததும், சுதேசமித்திரனில் உதவியாசிரியர் ஆனதும் முன்பே நமக்குத் தெரியும். பாரதியாரின் உணர்ச்சிகளையெல்லாம் தடையின்றி வெளியிட அப்பொழுது

அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதற்கு வாய்ப்பளிக்க ஒரு தனிப் பத்திரிகை ஒன்று கிடைத்தது. மண்டயம் குடும்பத்தைச் சேர்ந்த நா. திருமலாச்சாரியர் என்பவர் தேசப்பற்று மிக்க ஒரு செல்வர். திருவல்லிக்கேணியில் வாழ்ந்து வந்த அவர் 1906-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்தியா என்ற தமிழ் வார இதழ் ஒன்றைத் தொடங்கினர். அந்த இதழ் பாரதியாரின் உணர்ச்சிகளை வெளியிடும் கருவியாக அமைந்தது. பாரதியார் அதன் ஆசிரியராகயிருந்த போதிலும் சட்ட முறைப்படி அவர் பெயர் ஆசிரிய ரெனக் குறிப்பிடப்பட்டவில்லை. இந்தியா "அதன் சொந்தக்காரர் எம். ஸ்ரீனிவாஸன் என்பவரால் பாப்பாம்ஸ் பிராட்வே 34-வது எண்ணில் இந்தியா பிரஸ்ஸில் வெளியிடப்படுகிறது" என்று இருந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிஷ்யராகிய சுவாமி அபேதாநந்தர் 1906 ஜூலை 15-ம் தேதி யன்று சென்னைக்கு விஜயம் செய்தார். அவருடைய வருகையைப் பற்றியும் சொற்பொழிவைப் பற்றியும் பாரதியார் இந்தியா பத்திரிகையிலே 1906 ஜூலை 21-ஆம் தேதி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

ஆனால் இந்தியா தோன்றியதும் பாரதியார் சுதேசமித்திரனைவிட்டு முற்றிலும் விலகிவிட்டதாகக் கொள்ள முடியாது. 1907 மே 18-ஆம் தேதியன்று கூடப் பாரதியாரின் கட்டுரையொன்று மித்திரனில் வெளியாகியுள்ளது. சென்னை வாசிகளின் நிதானமும் விபினசந்திரபாலரின் சந்நிதானமும் என்ற அக் கட்டுரைதான் அவர் புதுச்சேரி செல்லுமுன்பு மித்திரனில் எழுதிய கடைசிக் கட்டுரையென்று தெரிகிறது. அதன் பிறகு 1915 ஜூன் 15-ல் தான் மறுபடியும் மித்திரனில் அவருடைய கட்டுரை வெளியாகிறது.

1907 மே 18-க்குப் பிறகு மித்திரனில் அவ் வாண்டு டிசம்பர் 17-ல் தான் சூரத் காங்கிரசுக்குச் செல்ல விரும்பும் பிரதிநிதிகளுக்குப் பாரதியார் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அதனால் மே மாதத் திற்குப் பிறகே அவருக்கும் சுதேசமித்திரனுக்கும் இருந்த தொடர்பு நீங்கியிருக்குமென்று ஊகிக்கலாம்.

விபினசந்திரபாலரைப் பற்றிய கட்டுரையின் போக்குக்கும், பாரதியார் அதுவரை மித்திரனில் எழுதியவற்றின் போக்குக்கும் நல்ல வித்தியாச மிருப்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

விபினசந்திரபாலரின் சென்னை விஜயம், சூரத் காங்கிரஸ் ஆகிய இரண்டு சம்பவங்களும் பாரதி யாரின் எழுத்திலும் கொள்கையிலும் மிகப் பெரிய மாறுதலை யுண்டுபண்ணி யிருக்கின்றன. சூரத் காங்கிரஸ் பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு புதிய கட்டத் தொடக்கம் என்று கூறலாம்.

விபினசந்திரபாலர் வங்காளத்து தேசிய வீரர் களில் ஒருவர். உணர்ச்சிப் பெருக்கோடு பேசக்கூடிய நாவலர். அவருடைய பேச்சு மக்களின் உள்ளத்திலே புதியதோர் சுதந்தர ஆவேசத்தை வளர்த்தது. ஆந்திர நாட்டுக்கு வந்திருந்த அவரைச் சென்னைக்கும் வரும்படி செய்ததற்குப் பாரதியாரும் அவருடைய நண்பர்களுமே காரணஸ்தர் என்று வ. ரா. குறிப் பிடுகிறார்.

1907 மே 9-ஆம் தேதியன்று பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய் பர்மாவுக்கு நாடு கடத்தப் பட்டார். அதையொட்டி மே 17-ஆம் தேதி சென்னை விக்டோரியா நகர மண்டபத்திலே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விபினசந்திரபாலர் பேசினார். மற்றும் சில கூட்டங்களிலும் பேசினார். அவருடைய வீராவேச மொழிகளால் சென்னையில் தேசியக் கனல்

ஓங்கி வளரத் தொடங்கவே சர்க்கார் அவரைப் பலவந்தமாக இம் மாகாணத்தைவிட்டு வெளியேற்றியது.

லஜபதிராயைப் போற்றிப் பாரதியார் இந்தச் சமயத்திலே இரண்டு கவிதைகள் இயற்றியிருக்கிறார். நாடு கடத்தப்பட்ட லஜபதி,

தொண்டுபட்டு வாடுமென்றன் தூயபெரு நாட்டிற்
கொண்டு விட்டங் கென்னையுடன் கொன்றாலு
மின்புறுவேன்

என்று கூறுவதாகவும்,

ஒரு மனிதன் தனைப்பற்றிப் பலநாடு
கடத்தியவற் கூறுசெய்தல்
அருமையிலை ; எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்
பெருமையை நன்கறிந் தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பெட்பிற் பேணி
வருமனித ரெண்ணற்றூர் இவரையெலாம்
ஓட்டியெவர் வாழ்வ திங்கே ?

என்றும்1 உணர்ச்சி மிக்க வரிகள்" பாரதியாருடைய வாக்கிலே அப்பொழுது பிறந்திருக்கின்றன.

சுதந்தரப் போராட்டத்திலே சூரத் காங்கிரஸ் மிக முக்கியமானது. 1906-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசிலேயே மிதவாதிகளுக்கும் தேசீய வாதிகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் வெளிப்படையாகத் தோன்றலாயின. தாதாபாய் நௌரோஜி தலைவராக இருந்ததால் அவர் இவ் வேறுபாடுகள் மேலோங்காதபடி தம்முடைய வசீகர சக்தியால் நிலைமையைச் சமாளித்துவிட்டார். ஆனல் அடுத்த ஆண்டு காங்கிரஸ் கூடுவதற்குள் வேறுபாடுகள் மிகவும் வலுவடைந்துவிட்டன. நாகபுரியில் நடைபெற வேண்டிய காங்கிரசைச் சூரத்தில்

நடத்திவிட ஏற்பாடு செய்தார்கள். மிதவாதிகள் தங்கள் விருப்பம்போல் காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்காகவே இவ்வாறு ஏற்பாடு செய்யப் பட்டதாகத் தேசீயவாதிகள் அவர்கள்மேல் குற்றம சாட்டினர்கள். மிதவாதிகளும் தேசீயவாதிகளும் தங்கள் தங்கள் பலத்தைச் சோதனை செய்வதற் காகவே கூட்டுவதுபோல அமைந்தது இந்தக் காங்கிரஸ்.

பாரதியார் தேசீயக் கட்சியை ஆதரித்தார். அதற்குப் பலம் திரட்டும் வேலையில் வ. உ. சிதம்பரம் பிள்ளையோடு சேர்ந்து நின்றார். சுதேசக் கிருஹத்தி லிருந்து காங்கிரஸ் டெலிகேட்டுகளுக்குப் பாரதியார் அறிக்கை விடுவதை நாம் காண்கிறோம்.

வ. உ. சி. கண்ட பாரதி என்ற நூலிலும் இது பற்றி விவரம் காணப்படுகிறது. "தூத்துக்குடியி னின்று நான் (வ. உ. சி.) சில நண்பர்களுடன் புறப் பட்டுச் சென்னை போய்ச் சேர்ந்தேன். மண்டையன் கூட்டத்தார் வீட்டில் 'சென்னை ஜன சங்க'த்தின் அங்கத்தினர்களாகிய இளந் தேசாபிமானிகளை யெல்லாம் ஒரு கூட்டம் கூட்டி ஆலோசனை செய்தோம்.

"பாரதி மாமா (பாரதியாரை வ. உ. சி. அன்புடன் அழைப்பது) நூறு பிரதிநிதிகளுக்குக் குறையாமல் சென்னையிலிருந்து சூரத்துக்கு அழைத் துக்கொண்டு போக வேண்டுமென்று சொன்னார்.

"அப் பிரதிநிதிகளில் பணம் இல்லாதவர் களுக்குப் பணம் கொடுத்துக் கூட்டிக்கொண்டு போக வேண்டுமென்றும், அவர்களைச் சூரத்திற்குக் கூட்டிப் போய் வருவதற்குரிய செலவுத் தொகையில் ஒரு பாதியை மண்டையன் கூட்டத் தலைவர் ஸ்ரீநிவாஸாசாரியும், மற்றொரு பாதியை நானும்

கொடுக்க வேண்டுமென்றும் எங்களுக்குள் முடிவு செய்து கொண்டோம். சுமார் நூறு பிரதிநிதிகளைக் கூட்டிக்கொண்டு வருவதாகத் திலகருக்குத் தந்தி கொடுத்தோம்."

பாரதியார், வ. உ. சி. முதலியோர் மிகுந்த உற்சாகத்தோடு சூரத் போய்ச் சேர்ந்தார்கள். 1907 டிசம்பர் 27-ஆம் தேதி தொடங்கிய காங்கிரஸ் மிதவாதிகளின் விருப்பம் போல நடைபெறவில்லை. ரிஷ்பிகாரிகோஷைத் தலைவராகப் பிரேரேபணை செய்தது முதல் ஒரே குழப்பந்தான். அடுத்த நாள் வரை நடவடிக்கைகளைத் தள்ளி வைத்தார்கள். அடுத்த நாள் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. திலகர் தமக்குப் பேச உரிமை உண்டென்று தலைவர் அநுமதியை எதிர்பார்க்காமல் மேடைமீதேறினர். ஆரவாரம், நாற்காலி வீச்சு, செருப்பு வீச்சு, தடியடி என்றிப்படிக் காங்கிரஸ் முடிந்தது.

குழப்பத்தில் முடிந்தாலும் சூரத் காங்கிரசால் நன்மை ஏற்படாமலில்லை. திலகர் கட்சியிலும், அவர் கொள்கைகளிலும் பாரதியாருக்குப் பற்று மிகுந்தது. திலகரைப் போற்றியும், நிதானக் கட்சியாரை நையாண்டி செய்தும் பாரதியார் பாடல்கள் எழுதலானார்.

சென்னை திரும்பிய பிறகு அவர் இன்னும் தீவிர மாக இந்தியாவில் எழுதத் தொடங்கினார். "பாரதி யாரின் இந்தியா பத்திரிகைச் சட்ட வரம்பை மீறி நெருப்பு மழை பொழியத் தொடங்கிற்று" என்று எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு குறிப்பிடுகிறார்.

அரசாங்கம் சும்மா இருக்குமா? இந்தியாவின் மீது தனது கண் போடலாயிற்று. அப்பத்திரிகை வெளியாவதற்குக் காரணமானவர்களைக் கைது செய்ய உத்தரவும் பிறந்தது. இந்தியாவின் ஆசிரிய

ராகப் பாரதியார் இருந்தபோதிலும் அவருடைய பெயர் அதிலே ஆசிரியரெனக் குறிப்பிடப்படவில்லை யல்லவா ?

ஆதலால் ஸ்ரீநிவாசனையே போலீசார் கைது செய்தார்கள். பின்னல் பாரதியாருக்கும் பத்திரி கையின் சொந்தக்காரருக்கும் இதே கதி நேரும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. அவர்களும் அதை உணர்ந்து கொண்டார்கள்.

பாரதியார் ரகசியமாகப் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார். அவர் அங்கு சேர்ந்த ஒரு மாதத்திற்குள் மண்டையம் சீனிவாசாசாரியாரும் அங்கே வந்து சேர்ந்துவிட்டார்.

ஸ்ரீநிவாசனுக்கு ஐந்தாண்டு தீபாந்திர சிட்சை விதிக்கப்பட்டது. இது நியாயமல்ல வென்று 16—11—1908-ல் சுதேசமித்திரன் துணையங்கம் எழுதியுள்ளது.

இந்தியாவின் வீர முழக்கம் 1908-ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதி வாரம் வரை சென்னையில் ஒலித்தது.

பாரதியார் புதுச்சேரிக்குச் செல்லத் தீர்மானித் ததைப் பற்றிச் சிந்திக்கும்போது அந்தச் சமயத்தில் நாட்டில் ஏற்பட்ட சில முக்கிய நிகழ்ச்சிகளையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதே ஆண்டிலே ஜூலை மாதம் 13-ஆம் தேதி கைதுசெய்யப் பட்டு ஐந்து நாள் விசாரணைக்குப் பின் திலகருக்கு ஆறுண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பாரதியார் தமது தலைவராகக் கொண்ட பெரியார் மாண்டலேக்குக் கொண்டு போகப்பட்டார். தமிழ் நாட்டிலே பெரிய தேசிய வீரராக விளங்கிய கப்ப லோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அதே ஆண்டு மார்ச்சு மாதம் 12-ஆம் தேதி கைது செய்யப்

பட்டார். திருநெல்வேலிக் கலெக்டர் வின்சின் அழைப்பை ஏற்றுக்கொண்டு அவரைக் காணச் சென்றவிடத்தில் அவரைக் கைது செய்தார்கள். கைது செய்யுமுன் வின்சிற்கும் சிதம்பரனுருக்கும் நடந்த வாக்குவாதமாகப் பாரதியார் இரண்டு பாடல்களை எழுதினர். ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது; தேச பக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி என்ற தலைப்புக்களோடு அப் பாடல்கள் பாரதி நூல்கள்—முதல் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனல் 1909-ல் பாரதியார் வெளியிட்ட ஸ்வதேச கீதங்களின் இரண்டாம் பாக மாகிய ஜன்மபூமி என்ற நூலில் இப் பாடல்களுக்குக் கலெக்டர் வின்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல் லுதல், கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி என்ற தலைப்புக்கள் கொடுக் கப்பட்டிருந்தன. சிதம்பரனுரின் சார்பிலே ஒரு சாட்சியாகப் பாரதியாரும் சென்றிருந்தார்.

1908 ஜூலை மாதம் 7-ஆம் தேதி சிதம்பர னுருக்கு அரச நிந்தனைக் குற்றத்திற்காக இருபது வருடமும், சுப்பிரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்காக மேலுமோர் இருபது வருடமும் ஆக நாற்பது வருடம் தீவாந்தர தண்டனை விதிக்கப் பட்டது. சிவாவுக்குப் பத்தாண்டு தீவாந்தர தண்டனை.

இவ்வாறு நாடு கடத்தப்படுவதால் தேசத் திற்குச் செய்யக்கூடிய சேவையில் தடையேற்படும்; ஆதலால் அதை எவ்வகையிலாவது தவிர்த்துத் தாம் செய்யக்கூடிய சேவையை நாட்டிற்குச் செய்ய வேண்டும் என்பது அக்காலத்தவரின் பொதுவான கருத்து. காந்தீய வழியிலே சத்தியாக்கிரகம் செய்து சிறை செல்லுவதே ஒரு தருமமாக அப்பொழுது

ஏற்படவில்லை. இந்திய அரசியல் அரங்கிலே காந்தியடிகள் தோன்றுத காலம் அது.

ஆதலால் பாரதியார் புதுச்சேரிக்குச் செல்லுவது உசிதம் என்று அவருடைய நண்பர்கள் தூண்டியிருக்க வேண்டும். அவரும் புதுச்சேரி சென்றார். மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியாரும் அங்கு போய்ச் சேர்ந்தார். அச்சியந்திரங்களும் போய்ச் சேர்ந்தன. இந்தியா பத்திரிகை புதுச்சேரியிலிருந்து 1909 அக்டோபர் 20-ஆம் தேதி முதல் வெளிவரத் தொடங்கியது. ஆகவே அரசாங்கத்தின் பிடியிலகப்படாமல் தொடர்ந்து தேச சேவை செய்ய முடியுமாஞல் அதற்கான முயற்சியைச் செய்யவேண்டுமென்பதே பாரதியாருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் எண்ணம் என்று தெரிகிறது.

புதுச்சேரி வாழ்க்கை இனிமையாக இருக்குமென்று நினைத்துப் பாரதியார் அங்கு சென்றதாகக் கொள்ளுவதற்கில்லை. அவருக்கு அங்கே வாழ்க்கை இன்பமாக நடைபெறவுமில்லை. எத்தனையோ தொல்லைகள், துன்பங்கள்.

"முதல் முதல் பாரதியார் புதுவை ஈசுவரன் கோவில் தெருவில் திரு. மு. இராஜபாதரின் இல்லத்திற்கு அடுத்த ஒரு சிறு வீட்டில் குடியிருந்தார். பிறகு அவ்வீட்டைக் காலி செய்து, அதே வீதியில் 28-ஆம் எண்ணுள்ள ஒரு மாடி வீட்டில் குடியேறினர். அது ஒரு செட்டியாருக்குச் சொந்தம். அவர் பெயர் ஐயாக்கண்ணு செட்டியார். அவர் குள்ளமாக இருப்பார். தயாள குணம் உள்ளவர்.... இவரைப் பாரதியார் வேடிக்கையாக 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' என்று அழைப்பதுண்டு." (திரு. ரா. கனகலிங்கம்—என் குருநாதர் பாரதியார்). சபாபதி செட்டியார் என்பது அவர் பெயரென்று

திருமதி தங்கம்மாள் பாரதி எழுதுகிறார்கள் (பாரதியும் கவிதையும் பக். 58.).

"1908-ஆம் ஆண்டில் பாரதியார் இந்தியா பத்திரிகையைப் புதுவை மிஸியோம் எத்திரான் மோர் வீதியிலிருந்து நடத்தி வந்தார். 1910-ஆம் ஆண்டில் அச்சுக்கூடத்தை டூப்ளே வீதிக்கு மாற்றிக் கொண்டார்" (திரு. ரா. கனகலிங்கம்-பாரதியாரின் புதுவை வாழ்வு என்ற கட்டுரை). 1910-மார்ச் 12-ஆம் தேதி வரையில் இந்தியா புதுச்சேரியில் நடந்து வந்தது. பொருள் நெருக்கடி ஒரு பக்கம். அரசாங்கத்தாரின் கோபம் ஒரு பக்கம். இந்த நிலையிலே தமிழ் நாட்டாரின் ஆதரவு புதுச்சேரிக்கு எட்டுவதிலும் எவ்வளவோ சிரமமிருந்தது. மேலும் இந்தியா பத்திரிகை பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் வரக்கூடாதென்று 1908-ஆம் ஆண்டில் அரசாங்கம் தடை விதித்தது. மற்றக் காரணங்களைவிட அதுவே இப்பத்திரிகையின் ஆயுளை ஒரேயடியில் போக்கிவிட்டதென்று கூறலாம்.

மாணிக்டோலா வெடிகுண்டு வீச்சு சம்பந்தமாக ஸ்ரீ அரவிந்தர்பேரில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதில் அவர் விடுதலையடைந்தார். பிறகு அவர் கர்மயோகின் என்ற ஆங்கிலப் பத்திரிகையைக் கல்கத்தாவிலிருந்து கொஞ்ச காலம் நடத்தி வந்தார். அந்தப் பத்திரிகையைத் தழுவிக் கர்மயோகி என்ற பத்திரிகையைப் பாரதியார் புதுச்சேரியில் தொடங்கினார்.

இந்தியா வார இதழ் சென்னையில் நின்றதும் அந்தக் குறையைப் போக்குவதற்காக மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியாரின் சொந்தத் தமையனாரான எஸ். திருமலாச்சாரியார் விஜயா என்ற தமிழ்த் தினசரிப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார். இது திருவல்லிக்கேணி ஹைரோடிலிருந்து வெளியாயிற்று.

இதற்கும் அரசாங்கத்தால் தொல்லைகள் ஏற்படவே இதையும் புதுச்சேரியிலிருந்து நடத்த முடிவு செய்தனர். விஜயாவும் கர்மயோகியும் 1909 செப்டெம்பர் 7-ஆம் தேதி கிருஷ்ண ஜயந்தி முதல் வெளிவந்தன. பாரதியாரை ஆசிரியராகக்கொண்டு சூர்யோதயம் என்ற பத்திரிகையும் வெளிவரலாயிற்று. இவையெல்லாம் 1910-ஆம்ஆண்டிற்குள்ளேயே மறைந்து போயின.

பத்திரிகைத் தொண்டு முடிவடைந்தது: பாரதியாரின் வறுமையும் துன்பமும் மட்டும் வளர்ந்து கொண்டேதான் இருந்தன. தமது பொழுதையும், மனத்தையும் கவரக்கூடிய பத்திரிகைகளும் நின்றுவிடவே அவர் வாழ்க்கை வெறிச்சென்று போயிருக்க வேண்டும்.

பாரதியார் புதுவைக்குத் தனியாகவே சென்றார். மனைவி திருமதி செல்லம்மா பாரதி சென்னையிலே யிருந்தார். பிறகு அவருடைய தமையனார் வந்து கடயத்துக்கு அவரை அழைத்துச் சென்றார்.

பின்னால் திருமதி செல்லம்மா பாரதியும் புதுச்சேரி வந்து சேர்ந்தார். குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் சேர்ந்துகொண்டது.

பாரதியார் எத்தனையோ துன்பங்களை அநுபவித்தார். அவருடைய நிலையினைச் சித்தக்கடல் என்ற சிறு பகுதியினில் அவர் எழுதியுள்ள கீழ்க்கண்ட வாசகத்திலிருந்து ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

"மண்ணையும், காற்றையும், கடலையும் எத்தனையுகங்கள் ஒரே வடிவத்தில் வைத்துக் காப்பாற்றுகிறாய்! பராசக்தி, எனது கருவி கரணங்களிலே நீ பரிபூர்ணமாக ஸந்நிதி கொண்டு என்னையும் அங்ஙனமே காக்கவேண்டும்.

இன்பமில்லையா?

பராசக்தீ, இந்த உலகத்தின் ஆத்மா நீ.

உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களையெல்லாம் கொடுத்துவிடக் கூடாதா?

முதலாவது, எனக்கு என்மீது வெற்றி தர வேண்டும். குழந்தைக்கு ஜ்வரம் வந்தது. நினது திருவருளால் குணமாய்விட்டது. இரண்டு மாத காலம் இரவும் பகலுமாக நானும் செல்லம்மாளும் புழுத்துடிப்பது போலத் துடித்தோம். ஊண் நேரே செல்லவில்லை, இருவருக்கும். உறக்கம் நேரே வரவில்லை—இருவருக்கும். எப்போதும் சஞ்சலம். பயம், பயம், பயம்! சக்தீ, உன்னை நம்பித்தானிருந்தோம். நீ கடைசியாகக் காப்பாற்றினாய். உன்னை வாழ்த்துகிறேன்.

கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம், குழப்பம்—தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

பராசக்தீ, ஓயாமல் கவிதை எழுதிக்கொண்டிருக்கும்படி திருவருள் செய்யமாட்டாயா? கடன்களெல்லாம் தீர்ந்து, தொல்லையில்லாதபடி என் குடும்பத்தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க, நான் எப்போதும் உன் புகழை ஆயிரவிதமான புதிய புதிய பாட்டுக்களில் அமைக்க விரும்புகிறேன். உலகத்தில் இதுவரை எங்குமில்லாதபடி அற்புதமான ஒளிச் சிறப்பும், பொருட் பெருமையும் உடைய பாட்டொன்று என் வாயிலே தோன்றும்படி செய்யவேண்டும்.

தாயே, என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப் படுத்திக்கொண்டிருந்தால், நான் அரிசிக்கும், உப்புக்கும் யோசனை செய்துகொண்டிருந்தால்—உன்னை எப்படிப் பாடுவேன்?

மனைவியைப் பிரிந்து செல்லும்படி சொல்வதில் பயனில்லை. அவளும் உனது சரணையே நம்பி, என்னுடன் எப்போதும் வாழ்ந்துகொண்டு, உனது தொழும்பிலே கிடைக்கும் புகழில் பங்கு பெற்று மேன்மையுற விரும்புகிறாள். இயன்றவரை உண்மையோடுதானிருக்கிறாள். அவளையும் நீ ஸம்ரக்ஷணை செய்யவேண்டும்.

அவளுக்கு நோயின்மை, கல்வி, கவலையின்மை' பக்தி, ஞானம் முதலிய சோபனங்களெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

குழந்தையை உனது குழந்தையாகக் கருதி, இவ்வுலகத்தில் நீடித்துப் புகழுடன் வாழும்படி திருவருள் செய்யவேண்டும். காசியிலிருக்கும் குழந்தையையும் நீதான் காப்பாற்ற வேண்டும்.

எனது குடும்ப பாரமெல்லாம் உன்னைச் சேர்ந்தது. உன்னைப் புகழ்ச்சி புரியும் தொழில் என்னைச் சேர்ந்தது. தாயே, ஸம்மதந்தானே?

மஹா சக்தீ! என்னுள்ளத்தில் எப்போதும் வற்றுத கவிதையூற்று ஏற்படுத்திக் கொடு.

ஓயாமல் வியாதி பயம் கொண்டு உளைகின்ற நெஞ்சமே! தூர! தூர! கோழை.

புகையிலை வழக்கம் தொலைந்துவிட்டது, பராசக்தியின் அருளால். இனிக் 'கஸரத்' வழக்கம் ஏற்படவேணும், பராசக்தியின் அருளால். தோள் விம்மி வயிரம் போலாக வேணும். நெஞ்சு விரிந்து, திரண்டு வலிமையுடையதாக வேணும். இரத்தம் மாசு

தீர்ந்து, நோயின்றி, நன்முக ஓடி உடலை நன்கு காத்துக் கொண்டிருக்க வேணும்—பராசக்தியின் அருளால்.

செட்டி பணத்துக்கு எத்தனை நாள் பொய் சொல்லுகிறது? பொய் வாயிதா, பொய் வாயிதா பொய் வாயிதா—தினம் இந்தக் கொடுமைதானு? சீச்சீ!

பராசக்தி—உன்னை நான் நம்புவதை முற்றிலும் விட்டு, நிச்சயமாக நாஸ்திகனுய் விடுவேன். நீ என்னை அற்பத் தொல்லைகளுக்கு உட்படுத்திக் கொண்டே யிருந்தால்.

மஹாசக்தி—நீ யிருப்பதை எவன் கண்டான்? உனக்கு அறிவுண்டென்பதை எவன் கண்டான்? இந்த உலகம்—சரி, சரி, இப்போது உன்னை வைய மாட்டேன். என்னைக் காப்பாற்று. உன்னைப் போற்றுகிறேன்.

பிறருக்கு நான் தீங்கு நினையாதபடி நீ அருள் புரிந்தால் நல்லது. துஷ்டர்களைக்கூட நீ தண்டனை செய்துகொள். எனக்கு அதிலே ஸந்தோஷமில்லை. எனக்குப் பிறர் செய்யும் தீங்குகளை நீ தவிர்க்க வேண்டும். நான் உன்னையே சரணடைந்திருக் கிறேன்.

சொல்லு! மனமே, சொல்லு, பராசக்தி வெல்க! பராசக்தி வெல்க.''

இந்தக் குறிப்பு 1915 ஜூலை 2-ஆம் தேதி எழுதப்பட்டுள்ளது. அது சமயம் பாரதியாரின் இரண்டாவது குழந்தை சகுந்தலை மட்டும் அவ ருடன் இருந்தது. முதற் குழந்தை தங்கம்மா காசி யில் வாழ்ந்தது. சகுந்தலைக்குக் காய்ச்சலால் மிகவும் கவலைக்கிடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று

தெரிகிறது இதே மாதத்தில் பரலி சு. நெல்லையப் பருக்கு எழுதியுள்ள கடிதத்திலும் இது விஷயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட துன்பக் கனலில்தான் அவ ருடைய கவிதையும் எழுத்தும் புடமேறி மெருகு பெற்றுயர்ந்தன. அவருடைய மிகச் சிறந்த பாடல் களும் கதை கட்டுரைகளும் புதுச்சேரி வாழ்க்கைத் துயரினிடையே உருப்பெற்றன. பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு ஆகியவை இங்கே எழுதப்பெற்றவை. ஜீவசக்தி நிறைந்த புதிய உரை நடையில் பல கதைகள், கட்டுரைகள் இங்கு உதய மாயின. பாரதியாருடைய கவிதையும் உரைநடை யும் புதுச்சேரியில் மெருகேறிப் பூரண முதிர்ச்சி யடைந்தன என்று பொதுவாகக் கூறலாம்.

பாரதியார் துன்ப வாழ்க்கை நடத்தினர் என்று சொல்லுவதால் அவருக்கு யாருமே உதவி செய்ய வில்லை என்று தீர்மானித்துவிடக் கூடாது. புதுச் சேரியிலேயே பொன்னு முருகேசம் பிள்ளை, அவர் மனைவி அண்ணியம்மாள் என்றழைக்கப்பெறும் சௌந்திரம்மாள், விளக்கெண்ணெய்ச் செட்டியார், குவளைக் கண்ணன், சுந்தரேசையர், கிருஷ்ணசாமி செட்டியார் (வெல்லச்சு செட்டியார்) போன்றவர் கள் அவரவர்களுக்கு இயன்ற வழியிலே பாரதியா ருக்கு உபகாரமாக இருந்தார்கள். பிரிட்டிஷ் இந்தி யாவிலிருந்தும், சில சமயங்களில் தென்னப்பிரிக்காவி லிருந்தும் பொருளுதவி கிடைத்து வந்தது. அந்த உதவி கைக்கு வந்து சேருவதில் எத்தனையோ சிரமம் உண்டு.

ஏ. ரங்கசாமி ஐயங்கார் அவர்கள் சுதேசமித் திரன் பத்திரிகையை ஏற்று நடத்த தொடங்கியபின் மறுபடியும் அப்பத்திரிகைக்கு எழுதும் சந்தர்ப்பம்

பாரதியாருக்குக் கிடைத்தது. அரசியல் கலப் பில்லாதவாறு எழுதுவதென்று ஏற்பாடாயிற்று. அதற்காக மாதம் முப்பது ரூபாய் பாரதியாருக்குச் சம்மானம்.

"ரங்கசாமி ஐயங்கார் பாரதியாருக்கு முப்பது ரூபாய்தானே கொடுத்தார் என்று யாரும் அசட்டுத் தனமாகக் கேட்க வேண்டாம். ஐயங்கார் சுதேச மித்திரனை வாங்கி நடத்துகையில், அது நஷ்டத்தில் தான் நடந்து வந்தது. மேலும், அப்பொழுது முப் பது ரூபாய் என்பது இப்பொழுது நூறு ரூபாய்க்குச் சமானம். ஜீவாதாரமாக மாதம் முப்பது ரூபாய் பாரதியாருக்குக் கொடுத்து வந்து, அவரது பாடல் களைப் பிரசுரம் செய்த ரங்கசாமி ஐயங்காரைத் தமிழர்கள் எக்காலத்திலும் மறக்கலாகாது. அவ ரையும் அவரது ஜீவநாடியைப்போல் விளங்கி வந்த ஸி. ஆர். ஸ்ரீநிவாசனையும் தமிழ்நாடு முழுமனத் துடன் பாராட்டி வாழ்த்த வேண்டியதுதான் நேர்மையான கடமையாகும்" (வ. ரா.—மகாகவி பாரதியார்).

1907-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதவாக்கில் நின்றுபோன பாரதியாரது கட்டுரைகள் சுதேசமித் திரனில் 1915-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மறு படியும் வெளிவரலாயின. 1915 ஜூன் 15-ல் எதிர் ஜாமீன் என்ற கதை வெளியாயிற்று. பிறகு அடுத்த ஆண்டு ஜனவரியில்தான் கிச்சடியைப் பார்க்கிறோம். 1916 பிப்ரவரியிலிருந்து தொடர்ந்து கட்டுரைகள் வர ஆரம்பிக்கின்றன. அதற்கு மேலேதான் மாதா மாதம் முப்பது ரூபாயும் நிச்சயமாகவ்ரத் தொடங்கி யிருக்கும். இடையே கழிந்த பல ஆண்டுகளில் அன் பர்கள் உதவியும், பாஞ்சாலி சபதம் ஜன்மபூமி முதலான நூல்களின் வெளியீட்டாலும், லோகோப காரி, ஞானபானு முதலிய பத்திரிகைகளுக்கு எழுதிய

கட்டுரைகளாலும் ஒருவேளை கிடைத்திருக்கக்கூடிய பணமும் தவிர அவருக்கு வேறு வருவாய் இல்லை.

"எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டு பிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி, உனக்கேனடா இது கடமை என்று தோன்ற வில்லை?" என்று 1915 ஜூலை 19-ல் பரலி நெல்லையப் பருக்கு அவர் எழுதியுள்ள கடித வாக்கியத்தில் பாரதியாருடைய பணமுடை மறைந்து நின்று மிக நன்றாகத் துன்பக் கோலத்தில் காட்சியளிக்கிறது.

ஆனால் பாரதியாரின் புதுச்சேரி வாழ்க்கை எல்லா அம்சங்களிலும் துன்பம் நிறைந்திருந்ததாக யாரும் நினைக்கக் கூடாது. அவருக்கு இரண்டு பெரிய மஹான்களின் தொடர்பும், நட்பும் அங்கே கிடைத்தன. "கலியப்தம் 5011 பங்குனி 21-ந் தேதி (1911 ஏப்ரல் 3) ஸ்ரீ அரவிந்தகோஷ் புதுவைக்கு வந்தார். வந்த வகையில் ஐந்தாறு மாத காலம் அவர் கோமுட்டித் தெருவில் ஸ்ரீமான் சங்கர செட்டியார் வீட்டில் தங்கியிருந்தார் (பால பாரதி). ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் இவருக்குச் சற்று முன்பே வந்துசேர்ந்திருக்க வேண்டும். லண்டன் நகரத்தில் இந்திய விடுதியி லிருந்த மதன்லால் திங்கிரா என்னும் இளைஞன் 1909 ஜூலை 1-ஆம் தேதி கர்சான் வில்லி என்ற ஆங்கிலேயனைச் சுட்டு வீழ்த்தினன்; தானும் சுட்டுக் கொண்டு உயிர் துறந்தான். உடனே இந்திய விடுதியி லிருந்த சவர்க்கார், வ. வெ. சு. ஐயர் முதலியோ ரைக் கைது செய்ய ஏற்பாடாயிற்று. சவர்க்கார் பிடிபட்டார். ஐயர் மாறு வேடம் பூண்டு தந்திர மாகப் பல விபத்துக்களைச் சமாளித்துக்கொண்டு புதுச்சேரி வந்தடைந்தார்.

தேசபக்தியின் காரணமாகவே மூவரும் புதுச் சேரியிலே தஞ்சம் புக நேரிட்டது. ஸ்ரீ அரவிந்தர், ஐயருடைய கூட்டுறவு பாரதியாருக்குப் பெரிதும்

இன்பமும் ஆறுதலும் அளித்திருக்கவேண்டும். பாரதியார் சிறந்த கவிஞராகப் பூரண மலர்ச்சி பெறவும், ஸ்ரீ அரவிந்தர் ஆத்மஞானியாகவும், ஸ்ரீ ஐயர் மிகச் சிறந்த ரஸிகராகவும் புதுச்சேரி உதவிற்று. மூன்று வேறு வேறு துறைகளிலே மூவரும் சிறப்பெய்தினர்கள்; ஆனால் மூவரும் கவிதை உள்ளம் படைத்தவர்கள். தேசபக்தி, கடவுள் பக்தி முதலியவற்றில் ஆர்வமுடையவர்கள்.

அவர்களுடைய கூட்டுறவு அவரவருடைய தனித் தனி இலட்சியங்களையும் பக்தியையும் வலுவ்டையச் செய்திருக்க வேண்டும். மனத்தை வெல்லவும் சோம்பலை ஒழிக்கவும், தெய்வ நம்பிக்கையிலே செயலாற்றவும் பாரதியார் புதிது புதிதாகச் சங்கற்பம் செய்துகொள்ளுகிறார்.

"இந்த மனமாகிய கடலை வென்றுவிடுவேன். பல நாளாக இதை வெல்ல முயன்று வருகிறேன். இந்த மனத்தை வெல்ல நான் படும்பாடு தேவர்களுக்குத் தெரியும். இதிலே ப்ராண பயம், வியாதி பயம், தெய்வ பக்திக் குறைவு, கர்வம், மமதை, சோர்வு முதலிய ஸம்ஸ்காரங்கள் மிகுதிப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒழித்துவிட வேண்டும்.

"புகையிலைச் சாற்றினால் தலை கிறுக்குகிறது. இருபது லக்ஷம் தரம் புகையிலையை நிறுத்தி விடுவதாக ப்ரதிக்ஞை செய்திருக்கிறேன். இதுவரை கைகூடவில்லை....." (சிந்தக் கடல் 1915 ஜூலை 1)

நோயென்றால் பாரதியாருக்குப் பயம் அதிகம். நோய்க் கிருமிகள் அணுகக் கூடாதென்று நிரம்பவும் எச்சரிக்கை எடுத்துக்கொள்ளுவார். வெளியிலிருந்து வீட்டிற்குள் நுழையுமுன்னே யாராயிருந்தாலும் காலை அலம்பிச் சுத்தம் செய்துகொண்டுதான் வர

வேண்டுமென்று கடுமையான உத்தரவு செய்திருந்தார். ஹோட்டல்களிலிருந்து ஏதாவது வாங்கி உண்ணக் கூசுவாராம். "ஓயாமல் வியாதி பயம் கொண்டு உலைகின்ற நெஞ்சமே! தூ! தூ! தூ! கோழை" என்று அவர் தம்மைப்பற்றிச் சிந்தக் கடலில் எழுதியிருக்கிறார்.

பாரதியாருக்குக் கோபம் அதிகமாம். அவருடைய மனைவியோ நண்பர்களோ எதிர்த்துப் பேச முடியாது என்று வ. ரா. குறிப்பிடுகிறார்.

கற்பனை உலகத்திலே சதா சஞ்சரித்துக்கொண்டிருக்கும் கவிஞரோடு வாழ்க்கை நடத்துவது எளிதான காரியமல்ல. அவர் எந்தச் சமயத்திலே எதை எதிர்பார்க்கிறாரென்று மற்றவர்கள் காண்பது மிகவும் சிரமம். அதனால் கவிஞர் பெரிதும் ஏமாற்றமடைவதும் கோபங் கொள்வதும் இயல்பு. மேலும் சிறிய நிகழ்ச்சிகளெல்லாம் அவர் உள்ளத்திலே பெரிய தோர் உணர்ச்சி வெள்ளத்தைத் தோற்றுவித்து விடும். அதன் குமுறலை அவரே சகிக்க முடியாதென்றால் மற்றவர்கள் நிலைமையைச் சொல்ல வேண்டியதில்லை. கவிஞரின் உள்ளம் மிக மிக நுட்பமானது. மற்றவர்களுக்குச் சாதாரணமாகத் தோன்றுபவை எல்லாம் அவருடைய நுண்ணிய உள்ளத்திலே ஆழ்ந்து பதிந்து அலைமோதும்; கொந்தளித்து மேலெழும்—அனல் வீசவும் தொடங்கும். அவற்றின் எதிரொலியை அவரைச் சூழ்ந்து நிற்போர் அநுபவித்துத்தான் ஆகவேண்டும். விஷயம் உணர்ந்தவர்கள் இதை ஒரு பாக்கியமாகக் கருதுவார்கள். மற்றவர்களுக்கோ பெரிய வேதனைதான்.

இவ்வாறு கோபமும் படபடப்பும்கவிதைத் துடிப்பும் மிகுந்த கணவருடன் வாழ்வதிலே திருமதி செல்லம்மா பாரதி எத்தனையோ துன்பங்களைச் சகித்துக் கொள்ளவேண்டி யிருந்திருக்கும். அதிலும் குடும்பம்

நடத்துவதற்கு வேண்டிய பொருளும் இல்லாமல் புதுச்சேரியில் மறைந்து வாழ்கின்றபோது அவருடைய நிலைமை எவ்வாறிருந்திருக்கும்? ஆனால் இங்கே கோபத்தையும் படபடப்பையும் மட்டும் கூறி, விட்டுவிடுத்தல் சரியல்ல. பாரதியாரின் அன்பு வழிந்தோடும் நிலையையும் கூறவேண்டாமா? அது கவிஞருடைய அன்பு. சாதாரண உள்ளங்கள் எட்ட முடியாத உயரத்தை அது அடைந்திருக்குமல்லவா? அதன் பெருக்கையும் அவர் மனைவியாரும் மற்றவர்களும் அநுபவித்திருப்பார்களல்லவா? மேலும் பாரதியார் பெண்களுக்கு உயர்ந்த ஸ்தானம் அளிக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர். "ஜகத்திற்கு ஆதாரமாகிய பெருங் கடவுள் ஆண் பெண் என இரண்டு தலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூர்ணமான சமானம். பெண்ணை அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்" என்பது அவர் வாக்கு. பெண்களைப்பற்றிய அவருடைய கட்டுரைகளிலும் கவிகளிலும் அவருடைய உள்ளம் தெரிகின்றது. அதன் லட்சியக் கனவை உணர்ந்து அநுபவிக்கக்கூடிய வாய்ப்பும் அவருடைய மனைவியாருக்கு உண்டல்லவா?

நிவேதிதா தேவி யார் பாரதியாருக்கு குருவாக அமைந்தார் என்று முன்பே கூறினேன். ஆன்மிகத் துறையிலே ஆர்வத்தைப் பெருக்க ஸ்ரீ அரவிந்தரின் நட்பும் கிடைத்தது. மேலும் குள்ளச்சாமி, கோவிந்தஸ்வாமி, யாழ்ப்பாணத்துச் சுவாமி ஆகிய ஞானிகளின் தரிசனமும் உபதேசமும் தமக்குக் கிடைத்ததாகப் பாரதி அறுபத்தாறு என்னும் நூலில் அவர் குறிப்பிடுகிறார். சித்தர்களின் வாக்குப் போல அந்நூல் அமைந்திருக்கிறது. குள்ளச்சாமியைப் பற்றிப் பாரதியார் சில கட்டுரைகளிலும் எழுதியிருக்கிறார். பராசக்தியினிடத்தே பாரதி

யாருக்கு இளமையிலிருந்தே பக்தியுண்டு. பராசக்தியின் மேல் அற்புதமான பல பாடல்கள் பாடியிருக்கிறார். கண்ணனும், முருகனும் அவர் உள்ளத்தை ஒருங்கே கவர்ந்திருக்கிறார்கள். கண்ணன் பாட்டு தமிழ் இலக்கியத்திலே தனியிடம் பெறுகின்றது. புதுவை மணக்குளப் பிள்ளையாரின் மேல் விநாயகர் நான்மணிமாலை பாடியிருக்கிறார். தோத்திரப் பாடல்களும், வேதாந்தப் பாடல்களும் அவர் பாடியன எத்தனையோ. இவை யெல்லாம் அவருக்கு ஆத்மிகத் துறையிலிருந்த ஆர்வத்தை நன்கு காண்பிக்கின்றன. வாழ்க்கையிலே துன்பம் உழன்ற பாரதியாருக்குப் பக்தியே வலிமையளித்திருக்கிறது. நாட்டுப் பற்றும் தாய் மொழிப் பற்றும் அவருடைய மூச்சு நின்று போகாமல் உயிரளித்து வந்துள்ளன.

முதல் உலக யுத்தத்தின் இறுதியில் இந்தியாவுக்குப் பல நன்மைகள் ஏற்படும் என்று பலர் எதிர் பார்த்தார்கள். பாரதியாரும் அவர்களில் ஒருவர். யுத்தம் 1918 நவம்பரில் முடிவுற்றது. பாரதியாருக்கு அதற்கு மேலும் புதுச்சேரியில் தங்கியிருக்க மனமில்லை. ஏ. ரங்கசாமி ஐயங்காரின் ஆலோசனையின் படி அவர் பிரிட்டிஷ் இந்தியாவுக்குப் புறப்பட்டார். சூழ்நிலை அதற்குச் சாதகமாக இருந்தது.

இருப்பினும் நவம்பர் 20-ஆம் தேதியன்று புதுச்சேரி எல்லையைத் தாண்டியதும் அவரைக் கைது செய்து கடலூரில் சிறையிலிட்டனர். ஆனால் ரங்கசாமி ஐயங்காரின் முயற்சியால் விரைவில் விடுதலை கிடைத்தது. பாரதியார் சென்னைக்கு வந்து, பின் கடயம் சென்று அங்கு சில காலம் வாசம் செய்யலானார். அங்கு வந்த ஒன்றிரண்டு நாட்களில் பாரதியார் சுதேசமித்திரன் ஆசிரியரான ஏ. ரங்கசாமி ஐயங்காருக்கு நனறி தெரிவித்து ஒரு கடிதம்

எழுதியுள்ளார். கீழ்க்கண்ட அக் கடிதம் சுதேசமித்திரனில் 19-12-1918 தேதியில் வெளிவந்துள்ளது.

கடையம்,
டிசம்பர் 17

ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்காருக்கு நமஸ்காரம். ஞர்யிற்றுக்கிழமை (15-ஆம் தேதி) இரவு நான் இவ் வூருக்கு வந்து சேர்ந்தேன். என் விடுதலையின் பொருட்டாகத் தாங்களும் மற்ற நண்பர்களும் மிகவும் சிரத்தையுடன் பாடுபட்டதற்கு என் மனப் பூர்வமான நன்றி தெரிவிக்கிறேன்.

ஸ்ரீமதி அனிபெஸண்ட், ஸ்ரீ மணி அய்யர், ஸ்ரீ சி. பி. ராமசாமி அய்யர் முதலாக என் விடுதலை விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொண்ட தங்களுடைய மித்திரர்களுக்கெல்லாம் எனது நன்றி தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,
சி. சுப்பிரமணிய பாரதி

கடையத்திலிருந்து அவர் பர்லி. சு. நெல்லையப் பருக்கு 1918 டிசம்பர் 21-ஆம் தேதியிட்டு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். சுமார் 20 நாட்களுக்கு மேல் பாரதியார் சிறையில் இருந்திருக்கிறார்.

கடையத்திற்கு வரும்போதே பாரதியாரின் உடல்நிலை மிகவும் சீர்குலைந்துவிட்டது. உள்ளத்திலே உணர்ச்சி வேகம் மாறுதிருப்பினும் உடல் ஒடிந்து போய்விட்டது. அவர் ஒரு புது மனிதராகக் காணப் பட்டார்.

புதுச்சேரியிலிருந்து திரும்பிய பாரதியாரைப் பற்றி திரு. எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு 1921 செப்டம்பர் 17-ஆம் தேதி சுதேசமித்திரன் வார

அறுபந்தத்தில் எழுதியுள்ள கட்டுரையில் பின்வரு மாறு கூறுகிறார்.

"ஸ்ரீமான் பாரதியார் புதுச்சேரியினின்று வந்த பின்பு பழைய பாரதியின் உருவமேயில்லை. ஒரு வங் காளி போன்ற உருவத்தோடு காணப்பட்டார். அதற்கானபடி தலைப்பாகையும் பிறவும் பொருந்தி யிருந்தன. அவரது நடையும் கோலமும் யாவுமே மாறின. எல்லாம் புதுவிதமாக இருந்தது. ஒரு பிரம்ம ஞானி போன்றும் காணப்பட்டார். அவரைப் பார்த்தாலே உற்சாகந் தோன்றிவிடும். எவ்விதக் கர்வமும் இல்லை. அவர் படிப்பை அவர் அறியார். சிறு குழந்தை போன்றும் இருப்பார். தமக்கென்று ஒரு பெருமையை அவர் வைத்துக்கொள்ளவில்லை. எந்த இடத்தில் அவரை உட்கார வைத்துப் பாடச் சொன்னாலும் உடனே ஆனந்தத்துடன் பாட ஆரம் பித்து விடுவார். அவர் பாடுங்கால் கூட இருந்து கேட்ட பாக்கியம் நமக்குண்டு. அவர் பாடுகையில் அந்தப் பாட்டின் அத்தனை ரசங்களும் அவரது வதனத்தில் தத்ரூபமாய்த் தோன்றும்—ஜ்வலிக்கும். எவரையும் லக்ஷியம் பண்ணுகிற சிந்தை அவருக் கில்லை. எல்லோருக்கும் வணங்கிய உடம்பாகத் தாழ்ந்து பணிந்து நடந்து கொள்வார். ஆனால் ஏதேனும் நெஞ்சில் எண்ணம் குடிகொண்டுவிட்டால் ராஜபுத்திர வீரனாகி விடுவார்."

பழங் கொள்கைகள் சற்று வலிமையாக வேரூன்றி நிற்கும் நாட்டுப்புறத்திலே அவருடைய போக்கு யாருக்கும் திருப்தியளிக்கவில்லை. மேலும் பதின்மூன்று, பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு கடயத்திற்குத் திரும்பி வரும் அவரை எத்தனை பேர் அறிந்து கொண்டிருப்பார்கள்? வறுமையின் பிடி வேறு அங்கேயும் தளராமல் இருந்தது.

இந்த நிலையில்தான் பாரதியார் எட்டையபுரம் சென்று அங்கு சில காலம் தங்குகிறார்; அது சமயம், ஜமீன்தாருக்கு இரண்டு சீட்டுக் கவிகள் 1919 மே 2-ஆம் தேதியில் எழுதியிருக்கிறார். ஆகஸ்டு 6-ஆம் தேதி ஒரு கடிதமும் எழுதியுள்ளார். அவற்றுல் பயனென்றும் ஏற்படவில்லை.

பிறகு அவர் கடயம் திரும்புகிறார். அங்கிருந்து 28-10-1919-ல் காரைக்குடி சென்று அன்று மாலையே காளுடுகாத்தான் போகிறார். அங்கேயே அவரைத் தங்கும்படி செய்ய சில அன்பர்கள் முயன்றிருக் கிறார்கள். ஆனல் அது வெற்றி பெறவில்லை. அங் கிருந்து காரைக்குடி சென்று அங்கிருந்து கடயத்திற் குத் திரும்புகிறார். அந்தச் சமயத்தில்தான் காரைக் குடி ஹிந்து மதாபிமான சங்கத்தின்மீது பாரதியார் வாழ்த்துப் பாடல் பாடினர்.

கடயம் திரும்பிய பிறகு பாரதியார் தமது நூல்களை வெளியிடுவதற்கு ஒரு பெரிய திட்டம் வகுக்கிறார். இது பற்றி அவர் கடையத்திலிருந்து 1920 ஜூன் 28-ஆம் தேதியிட்டு ஒரு ஆங்கிலக் கடிதம் தயாரித்துள்ளார். அதிலே நூல் வெளியீட்டு விவரங்கள் காணப்படுகிறது. ஒவ்வொரு நூலிலும் பத்தாயிரம் பிரதிகள் அச்சிடுவதாகவும் அவ்வாறு நாற்பது நூல்கள் வருமென்றும் அவற்றிற்கு வேண்டிய முதலீட்டிற்காகப் பணம் வேண்டு மென்றும் அதில் காணப்படுகின்றன.

இதற்கிடையில் அவர் 1920 ஜூன் 20-ஆம் தேதி யன்று பொட்டல் புதூரிலே இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை என்ற பொருள்பற்றிப் பேசியுள்ளார்.

கடயத்தில் அதற்குமேல் அவரால் வசிக்க முடியவில்லை. மறுபடியும் சென்னையை நோக்கிப் புறப்பட்டார். சுதேசமித்திரன் மறுபடியும் அன்

போடு அவரை ஏற்றுக்கொண்டது மீண்டும் அதன் உதவியாசிரியரானார்.

இரண்டாம் முறை அவர் சுதேசமித்திரனில் சேர்ந்த காலம் நிச்சயமாகத் தெரியவில்லை. 1920 ஏப்ரல் 9-ஆம் தேதி ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் புதுச்சேரியிலிருந்து சென்னைக்கு வருகிறார். அன்று சென்னையில் அவருக்குப் பெரிய வரவேற்பு நடந்தது. பலர் அவரைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். பாரதியார் அது சமயம் சென்னையில் இல்லையென்றும் தெரிகிறது. அக்டோபர் இறுதியில் காரைக்குடி சென்றிருந்தார் 1920 நவம்பர் 15-ஆம் தேதியிலிருந்து சுதேசமித்திரனில் தொடர்ந்து அநேகமாக நாள்தோறும் குறிப்பு, ரஸத்திரட்டு, விநோதத் திரட்டு என்பன போன்ற தலைப்புக்களுடன் பாரதியார் எழுதுவதைப் பார்க்கும்போது அவர் அது சமயந்தான் மறுபடியும் உதவியாசிரியராக வேலை ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

இவ்வாறு அவர் எழுதும் குறிப்புகள் பொதுவாக இந்திய அரசியலைப்பற்றி மட்டுமல்லாமல் வேறு விஷயங்களைப் பற்றியும், ஐர்லாந்து, துருக்கி போன்ற பிற நாடுகளைப் பற்றியும், முதல் உலக யுத்தத்தின் விளைவாகத் தோன்றிய நிகழ்ச்சிகளைப் பற்றியும் இருக்கின்றன.

உலக விஷயங்களைப் பற்றி எழுதும்போதும் ஆங்கிலேயரைத் தாக்கியும், தாய்நாட்டு விடுதலைக்கு ஆர்வமூட்டக்கூடிய ஐரிஷ் சுதந்தரப் போராட்டம் போன்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும் அவர் முக்கியமாக எழுதுகிறார்.

இக் குறிப்புக்களெல்லாம் தனித்தனி இலக்கியப் படைப்பல்லவென்றாலும். பாரதியாருடைய அரசியல் ஞான விரிவையும். கருத்துக்களையும்,

கொள்கைகளையும் எழுத்துத் திறமையையும் இவை நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன. சக்திவாய்ந்த எழுத்து நடையையும், வசையுரை, நகைச்சுவை, முதலியவற்றையும் ஆங்காங்கு இவை நன்கு வெளிப் படுத்துகின்றன. அந்தக் காலத்து உலக நிலையையும் இவை நமக்கு ஒருவாறு புலப்படுத்துகின்றன.

இடையிடையே ரிஷிகள் கடன், மகாமகம் போன்ற அழகிய கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

சென்னைக்கு மீண்டபின் பாரதியார் பழையபடி பல கூட்டங்களில் பேசுவதைக் காண்கிறோம். சில சமயங்களில் வெளியூர்களுக்குச் சென்று சொற் பொழிவுகள் நிகழ்த்துவதுமுண்டு. 1921 மார்ச் 25-ல் அவர் கூடலூர் சென்றிருக்கிறார். அடுத்த ஆகஸ்டில் ஈரோட்டிற்கடுத்த கருங்கல்பாளையத்தில் 'மனித னுக்கு மரணமில்லை' என்ற பொருள் பற்றி பேசியிருக் கிறார். அது விவரம் எனது ஈரோடு யாத்திரை என்ற கட்டுரையில் கூறப்படுகிறது. அடுத்த நாள் ஈரோட்டில் 'இந்தியாவின் எதிர்கால நிலை' என்ற பொருள் பற்றிப் பேசியிருக்கிறார். அதைப்பற்றி வேறொரு கட்டுரையில் எழுதுவதாகக் குறித்த பாரதியார் அதை எழுதவேயில்லை. அதற்குள் அவர் பேனு ஒய்ந்துவிட்டது.

பாரதியாரின் உடல்நிலை மிகவும் சீர்குலைந்து விட்டதென்று முன்பே குறிப்பிட்டேன். அந்த நிலை யிலே திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை அவரைக் கீழே தள்ளிக் காயமுண்டாக்கி விட்டது.

இரண்டாம் முறை சென்னைக்குத் திரும்பியதும் பாரதியார் முதலில் தம்பு செட்டி தெருவில் சில மாதங்கள் வசித்தார். பிறகு திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் தெருவிலுள்ள ஒரு வீட்டிற் குக் குடி வந்தார். அடிக்கடி பார்த்தசாரதி சுவாமி

கோயிலுக்குச் செல்லுவார். கோயில் யானைக்குப் பழம் தேங்காய் அன்புடன் அளிப்பார்.

அந்தக் கோயில் யானைக்கு மதம் பிடித்திருந்த ஒரு நாளிலே அது பாரதியாரை இழுத்துக் கூடத்திற் குள் தள்ளிவிட்டது. குவளைக் கிருஷ்ணமாச்சாரி யார் இதை எப்படியோ அறிந்து ஒரே பாய்ச்சலாக அங்கு வந்து பாரதியாரை வெளியில் எடுத்து வந்தார். பாரதியாருக்கு மண்டையிலும் உடம்பிலும் காயம்.

காயம் ஆறிப் பாரதியார் பிழைத்தார். ஆனால் இந்தச் சம்பவத்துக்குப் பிறகு நெடுநாள் உலகில் வாழவில்லை. வயிற்றுக்கடுப்பு நோய் அவரை மரணப் பிடியாகப் பிடித்தது. இளைத்துப் போயிருந்த அவருடைய உடம்பு இதன் பிடியை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ளச் சக்தியற்று அதற்குப் பணிந்து விட்டது. 1921 செப்டம்பர் 10-ஆம் தேதி தேசபக்தன் ஆசிரியராகவிருந்த வ. வெ. சு. ஐயர் ராஜத்துவேஷத்திற்காகக் கைது செய்யப் பட்டார். கைது செய்யப்படு முன்பே அவர் ஆசிரியர் பதவியினின்றும் விலகிவிட்ட போதிலும் தேசபக்தனில் இவர் இருந்த காலத்தில் வெளிவந்த ஒரு கட்டுரைக் காகச் சிறை புக நேர்ந்தது. சிறைக்குப் போகுமுன் ஐயர் நோய்வாய்ப்பட்டுக் கிடந்த பாரதியாரைப் பார்க்க வந்தார். அடுத்த நாள் இரவு சுமார் 1-30 மணிக்கு பாரதியாரின் தூல வாழ்க்கை முடிவுற்றது.

பாரதியாரின் பிரிவைக் குறித்துச் சுதேசமித்திரனில் 1921 செப்டம்பர் 12-ஆம் தேதியில் ஒரு குறிப்பு வெளியாகியிருக்கிறது : "தமிழ் நாடு போற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நேற்றிரவு துறந்து விண்ணவருக்கு விருந்தாகி விட்டார் என்ற செய்தியை அறிவிக்க நமது மனம் பதறுகிறது. சில தினங்களாக நோயினால் வருந்திக்கொண்

டிருந்த அவரை மறுபடியும் ஸ்தூல சரீரத்தில் பார்க்கப் போகிறதில்லை என்று நாம் நினைக்கவில்லை. திங்கட்கிழமையன்று மித்திரன் வேலைக்கு வந்துவிடுவதாகச் சில தினங்களுக்கு முன் சொல்லியனுப்பிய அவர் அத்திங்கட்கிழமையன்று சாம்பராகி விட்டது என்ன கொடுமை!.....''

அதே நாளில் நகரச் செய்தி என்ற தலைப்பின் கீழ் இன்னும் சில விவரங்கள் எழுதப்பட்டுள்ளன: '' ஒரு வாரமாக ஸ்ரீ சுப்ரமணிய பாரதி தேக நோய் கொண்டு திருவல்லிக்கேணியில் அசௌக்கியமாய் இருந்து திடீரென்று நேற்று இரவு 1 மணிக்கு இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகமடைந்தார். அவர் இறந்த செய்தி தெரிந்தவுடன் ஸ்ரீமான்களான புதுச்சேரி ஸ்ரீனிவாசாசாரியார், திருமலாசாரியார், ஹரிஹர சர்மா, சின்னசாமி, நெல்லையப்பர், நீல கண்டன் முதலான பலர் வந்தனர்.....ஹரிஹர சர்மா, கிருஷ்ணசாமி சர்மா, முதலானவர்கள் பிரேதத்தைத் தாங்கிக்கொண்டு சுடுகாடு சென்று அங்கு தகனத்துக்குச் சற்றுமுன்னர் ஸ்ரீமான் சர்க்கரை செட்டியார், கிருஷ்ணசாமி சர்மா, ராமசந்திர அய்யர் இவர்கள் தமிழிலே பேசிய பிறகு, சுரேந்திர நாத் ஆர்யா தெலுங்கில் பேசினர். பாரதியார் இயற்றிய கீதங்கள் பாடிய பிறகு தீ மூட்டப்பட்டது. பாரதியார் ஆவி நற்கதியடையும்படி எல்லோராலும் பிரார்த்திக்கப்பட்டது.''

தமது எழுத்து வன்மையினாலேயே நாட்டிலே விழிப்பையும் மொழியிலே மறுமலர்ச்சியையும் உண்டாக்கிய கவிஞர் தமது 39-வது வயதிலேயே மறைந்து விட்டார். அவருடைய உள்ளத்தினின்று பொங்கிய உணர்ச்சிக் கனலை அவருடைய உடம்பு அதற்குமேல் தாங்க முடியவில்லை. உடல் தாங்க முடியாததைத் தமிழ் தாங்கி நிற்கிறது. அதனால் புதிய உரம் பெற்று வளர்கின்றது.

பாரதி தமிழ்

பாரதி என்ற பட்டம் பெற்று சி. சுப்பிரமணிய பாரதியார் சமஸ்தானப் புலவராக இளமையிலேயே வாழ்க்கை தொடங்குகிறார். ஆனால் அந்த வாழ்க்கையில் அவருக்கு விருப்பம் நீண்டநாள் இருக்கவில்லை. சமூக சீர்திருத்தத்திலும், தேச விடுதலையிலும் அவருக்கிருந்த ஆர்வத்தை அவருடைய காசி வாழ்க்கை ஒங்கச் செய்திருக்க வேண்டும். அவருக்கு பத்திரிகையில் உதவி ஆசிரியர் வேலை கிடைக்கிறது. கொஞ்சநாளில் அவரே இந்தியா என்ற பத்திரிகையின் ஆசிரியராகி விடுகிறார். அரசியல் கிளர்ச்சி மிகுந்த தலைநகர்ப் பட்டினமான சென்னை வாழ்க்கையும், பத்திரிகை தொழிலும் அவருடைய தேசபக்தியையும், மொழி யன்பையும் மேலும் மேலோங்கச் செய்கின்றன. அவருடைய கவிதையுள்ளம் தேச பக்திக் கனலால் ஒளிவிட்டு மலரத் தொடங்குகிறது. சமஸ்தானத்துக்கு உகந்த பழைய சம்பிரதாயப் பாடல்கள் பாடிய கவிஞர் நாட்டு மக்களின் உள்ளத்திலே தேசபக்திக் கனலைத் தூண்டும் தேசீயக் கவியாக மாறுகிறார். சமஸ்தானத் தொழிலிலே உலாவும் மடலும் பாடியதாக வ. ரா. குறிப்பிடுகிறார். அத்தகைய கவிதைகள் மறைந்து உணர்ச்சி மிக்க தேசீயப் பாடல்கள் தோன்றுகின்றன. பாரதியார் மக்களிடத்தே ஒரு தளர்ச்சியையும் தோல்வி

மனப்பான்மையையும் காண்கிறார். அவற்றைப் போக்கி மக்களைத் தட்டியெழுப்ப வேண்டு மென்று துடிக்கிறார். பாரத நாட்டின் பெருமையை யும், தமிழ் நாட்டின் பெருமையையும், தமிழ்மொழி யின் தனிப் பெருமையையும் பாடுகிறார். தாமாக எழுதிய கவிதைகளோடு பங்கிம்சந்திரர் எழுதிய "வந்தேமாதரம்" என்ற அமரகீதத்தின் மொழி பெயர்ப்பும், மாஜினியின் பிரதிக்ஞையை அடிப்படை யாகக் கொண்ட வீரப் பாடலும் உருவாகின்றன.

மன்னும் இமயமலையெங்கள் மலையே
மாநில மீதது போற் பிறிதிலையே

என்று பாரத நாட்டுப் பெருமையை விவரிக்கிறார்.

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு

என்று நாட்டு வாழ்த்துப் பாடுகிறார்.

இப் பாடல்களெல்லாம் 1908 ஜனவரிக்கு முன்பே வெளிவந்தவை. 1904-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சென்னைக்கு வந்து சேர்ந்த பாரதியார் மூன்று ஆண்டுகளிலே தேசீயக் கவியாகப் பெரிதும் முன்னேறிவிட்டார். இப்பாடல்களிலே நந்தனர் சரித்திரக் கீர்த்தனைப் பாடல்களின் மெட்டுக்களையும் (இவற்றை நந்தனர் கீர்த்தனை அனுகரணப் பாடல் கள் என்று பாரதியாரே குறிப்பிட்டிருக்கிறார்) ஆநந்தக் களிப்பு, கிளிக்கண்ணிகள் முதலான இசைப் பாடல் வகைகளையும் காணலாம். இப்பாடல்களைப் எழுதுவதற்கு முன்பே எழுதிய சில பாடல்களைப் பார்த்தால் அவைகளுக்கிடையேயுள்ள வேறுபாடு நன்கு தெரியும். 1906 செப்டம்பரில் எழுதிய "யான்" "சந்திரிகை" என்ற சானெட்டுக்களைப் படிக்கும் போது இந்த வேறுபாடு நன்கு தெளிவாகின்றது. 1906-ல் வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறி எழுதிய ஆசிரியப்பாவில் "யாஅன்" "எறிவதூஉம்"

என்பன போன்ற அளபெடைகளெல்லாம் வருகின்றன. ஆரம்பநிலைப் பாடல் என்பதை அதிலே நன்கு காணலாம்.

இந்தியா பத்திரிகையில் தமது விருப்பம்போல் யாதொரு தடையுமின்றி எழுதத் தொடங்கிய காலத்திலே அவருடைய கவித் திறமை நன்கு அமைந்துவிட்டது. அது புதுச்சேரி வாழ்விலே மெருகேறி, "குயில் பாட்டு", "கண்ணன் பாட்டு", "பாஞ்சாலி சபதம்" முதலிய பாடல்களில் பூரணமடைகிறது.

பாரதியாரின் கவிதையைப் படிக்கும்போது முதலிலே நமக்குத் தோன்றுவது அதன் எளிமையும் உணர்ச்சி வேகமுமேயாகும். அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டிற்கு விடுதலை வேண்டும் என்று அவர் உள்ளம் பொங்குகிறது. அவருக்கு இயல்பாக அமைந்துள்ள கவிதைத் திறமையிலே அந்த உணர்ச்சி உண்மையான உருப் பெறுகிறது. உள்ளத்திலே தெளிவிருக்கும்போது அது தெள்ளிய எளிய முறையிலே அனைவருக்கும் புரியும்படியாக வெளியாகின்றது; அந்தத் தெளிவும் உணர்ச்சியும் இல்லாத போதுதான் வார்த்தைகள் நேராக வருவதில்லை; பின்னிக்கொள்கின்றன; மனப்பாடம் செய்த நிகண்டுகளைத் தஞ்சம் புக நேரிடுகிறது.

ஆதலால்தான், "மடாலயங்களிலும், சமஸ்தானங்களிலும், பண்டிதர்களிடையேயும் தேங்கி வளர்ச்சி குன்றிக்கிடந்த தமிழைக் காப்பாற்றித் தேசிய வாழ்க்கையின் முன்னணிக்குப் பாரதியார் கொண்டு வந்தார்" என்று அவரைப் புகழ்கிறார்கள். கவிதையைப்பற்றிப் பாரதியார் 'புனர்ஜன்மம்' என்ற கட்டுரையிலே தமது கருத்தைத் தெளிவாக விளக்கியிருக்கிறார். "நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று. ருசி குறைந்தது. கரடு

முரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை நமது கவிஞர்களுக்கு நல்ல பாதையாகத் தோன்ற லாயிற்று. கவிராயர் 'கண்' என்பதை 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினர். ரஸம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது; உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன.....கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டு மென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாய மான கொள்கை.

"மேலும், நெடுங் காலத்துக்கு முன்னே எழுதப் பட்ட நூல்கள் அக்காலத்து பாஷையைத் தழு வினவை. காலம் மாற மாற பாஷை மாறிக்கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங் களையே வழங்கவேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை."

பாரதியாருடைய கவிதைகளிலும் கட்டுரை களிலும் இந்த எளிமையை நாம் காண்கிறோம். உணர்ச்சி நேராக உள்ளத்தைத் தொடுகிறது. அரண்மனையிலே அடைபட்டுக் கிடந்த தமிழ் மக்க ளின் பொது மேடைகளிலே புத்துயிர் பெற்று அவர் களுடைய உள்ளக் கிளர்ச்சிகளை வெளியிடும் வலிமை வாய்ந்த கருவியாக மலர்கிறது. நாடு விடுதலை யடைவதற்கு அறிகுறியாகத் தமிழ் விடுதலை பெற்றது என்று அறிஞர்கள் மகிழ்ந்தார்கள்.

கவிதையைப் பற்றிப் பொதுவாக மேலே கூறும் போது கட்டுரையைப் பற்றியும் குறிப்பிட்டேன். உரைநடையிலும் பாரதியார் சிறந்த இலக்கியம் உண்டாக்கியவர்.

சாதாரணமாக இக்காலத்திலே பாரதியாரைப் பற்றி நினைக்கும்போது அவருடைய கவிதையைத் தான் மனதில் வைத்துக் கொள்ளுகிறோம். ஒரு காலத்தில் பாரதியார் என்றால் அவருடைய தேசீயப் பாடல்களே நினைவுக்கு வரும். அந்த நிலை மாறி அவருடைய மற்றக் கவிதைகளையும் ஆராய்ந்து அனுபவிக்கும் காலம் வந்துவிட்டது. ஆனால் இன்னும் அவருடைய உரைநடை இலக்கியத்தைப்பற்றி யாரும் அதிகமாக எண்ணுவதில்லை.

வேகமும், எளிமையும், நேருக்கு நேரான சம்பாஷணைப் போக்கும், இடையிடையே ஹாஸ்யமும் கலந்து ஒரு புதிய நடையில் பாரதியார் எழுதுகிறார். பேச்சு மொழியை அவர் கையாளுவதிலே ஒரு புதிய ஜீவன் இருக்கிறது. "ஞான ரத"த்தில் அமைந்துள்ள நடை ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அதைக் கவிதை நடை என்றே கூறலாம். அவருடைய உரை நடையிலே இறந்துபட்ட சொற்கள் இல்லை; உயிருள்ள வழக்குச் சொற்கள் வலிமையோடு இடம் பெறுகின்றன. இதை அவருடைய கட்டுரைகள், கதைகள், குறிப்புகள் முதலிய எல்லாவற்றிலும் காணலாம். எழுதுவோனது முழுத் தோற்றத்தையும் அவனுடைய எழுத்து நடை வெளிப்படுத்திவிடும் என்று கூறுவதுண்டு. வலிமையும் உணர்ச்சி வேகமும் ஜீவனும் நிறைந்தது பாரதியின் நடை. அது பாரதியாரின் முழுத்தோற்றப் பொலிவையும் நன்கு காட்டுகிறது.

உரை நடையைக் கையாள்வதிலும் பாரதியாரின் கலை வளர்ச்சியை நாம் எளிதில் காண முடியும். 1906 பிப்ரவரியில் பாரதியார் ஒரு விண்ணப்பம் செய்துகொள்கிறார். பலராலும் எழுதப் பட்டிருக்கும் சிறந்த தேச பக்திப் பாடல்களைத் தொகுத்து வெளியிட வேண்டுமென்பது அவர்

நோக்கும். விண்ணப்பம் தொடங்குகிறது: "எமது தாய் நாடாகிய பாராதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றனுதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையவனுவேன்."

இதைப் படிக்கின்ற மூச்சிலேயே பாஞ்சாலி சபதத்திற்குப் பொருள் விளக்கக் குறிப்பாகப் பாரதியார் எழுதிய சூர்யாஸ்தமன வருணனையையும் படித்துப் பாருங்கள்.

"பார்! ஸூர்யனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத் தோன்றுகிறது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனை வித வடிவங்கள்! எத்தனை ஆயிர விதமான கலப்புகள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சி விட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனை வகை நீலம்! எத்தனை விதச் செம்மை! எத்தனை வகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்; எரிகின்ற தங்க ஜரிகைக் கரை போட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித் திரள். வர்ணக் களஞ்சியம். போ, போ, என்னுல் அதை வர்ணிக்க முடியாது."

அல்லது "கண்கள்" என்ற கட்டுரையில் நேரே உற்றுப் பார்ப்பதைப் பற்றிப் பாரதியார் கூறுவதைப் பாருங்கள். "நேரே பார்த்தால் விரோதக்

குறியென்று யோக்யன் ஏன் நினைக்கவேணும்? அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உன் மனசில் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்ளும் பொருட்டாக உன் கண்ணை நேரே பார்க்கிறேன். விரோதமில்லை. அவமரியாதையில்லை. விஷயம் தெரிந்துகொள்ளும் பொருட்டு.''

''பெண்'' என்ற கட்டுரையிலே 'இடிப் பள்ளிக் கூடத்திலே' பிரமராய அய்யருடைய கர்ஜனையைக் கேளுங்கள்: ''துருக்கி தேசம் தெரியுமா? அங்கே நேற்று வரை ஸ்திரீகளை மூடி வைத்திருப்பது வழக்கம். கஸ்தூரி மாத்திரைகளை டப்பியில் போட்டு வைத்திருக்கிறார்களோ இல்லையோ? அந்த மாதிரி. திறந்தால் வாசனை போய்விடும் என்று.''

இவையெல்லாம் பிற்காலத்திலே புதுச்சேரியில் எழுதப்பட்டவை. இவற்றிலே சொல் தடுமாற்றம் கிடையாது. கருத்துக்களும், உணர்ச்சிகளும் நேராகவும் வழக்கிலுள்ள சொற்களிலேயே வெளியாகின்றன. இவற்றையெல்லாம் தமிழிலே சொல்ல முடியுமா என்று பெரிதும் ஐயங்கொண்டிருந்த காலத்தில் மிக அழகாகத் தமிழிலே கூறலாம் என்று பாரதியார் காட்டினார். அவருடைய கட்டுரைகளைப் படிக்கும்போது அவர் பலவேறு விஷயங்களைப் பற்றித் தெளிவாக விளக்கியிருப்பது புலனாகும். உலக அரசியல் விவகாரங்களாயினும் சரி, ரவீந்திர நாத தாகூரின் கவிதைகளாயினும் சரி, எல்லாவற்றையும் தமிழிலே பாரதியார் சொந்த எழுத்துப் போல நல்ல முறையிலே மொழி பெயர்த்துத் தருவதையும் நாம் காண்கிறோம்.

பாரதியார் வாழ்ந்த காலம் சுதந்தர உணர்ச்சி அரும்பி மலரத் தொடங்கிய காலம். விஞ்ஞாப்ப முறையை விடுத்து அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்ட

காலம். தாதாபாய் நௌரோஜியும், திலகரும் விடுதலைப் போராட்டத்தை உருவாக்கிய காலம் அது. சுவாமி விவேகாநந்தர் ஒரு புதிய விழிப்பை உண்டாக்கிய காலம் அது. அரசியல், சமூகம் முதலிய வற்றில் இப் பெரியார்களின் கருத்துக்களும், இவர்கள் விரும்பிய மாறுதல்கள், சீர்திருத்தங்களைப் பற்றிய பேச்சுக்களும் நாடெங்கும் ஒலித்தன. பாரதியாருடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் அவற்றின் தெளிவான, ஆழ்ந்த பிரதிபலிப்பைக் காணலாம். அவருடைய கவிதைக் குரல் அக் கருத்துக்களுக்குப் புது வலிமையையும் அழகையும் கொடுக்கிறது. கவிஞரே அவற்றைப் புதிதாகக் கூறுவது போன்று உணர்ந்து மக்கள் அவற்றில் லயித்து விடுகிறார்கள்.

பாரதியாரின் அந்திய காலத்தில்தான் காந்தியடிகள் தென்னப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வெற்றியுடன் திரும்பி வந்து இந்திய அரசியலில் பங்கு கொள்ளத் தொடங்குகிறார். அன்பு, அஹிம்சை என்ற காந்தியக் கருத்துக்கள் அரசியல் விவகாரங்களிலே அதுவரை நாட்டில் பரவவில்லை. அரசியலிலே அவற்றைப் புகுத்தும் துணிச்சல் பெரியதோர் அளவிலே காந்தியடிகளுக்குத்தான் வந்தது. அதை அவர் அப்பொழுது தென்னப்பிரிக்காவிலே வெற்றிகரமாகச் சோதனை செய்துகொண்டிருந்தார். பாரதியாருக்கு அரசியல் தலைவர் திலகர், காந்தியடிகளல்ல. இந்த அடிப்படை உண்மையை மனதில் வைத்துக் கொண்டு பாரதியாருடைய தேசீயப் பாடல்களைப் படிக்கவேண்டும்.

திலகரை ஆர்வத்தோடு பின்பற்றிய பாரதியார் ஆரம்ப காலத்தில் காந்தியடிகள் கூறிய கருத்துக்கள் சிலவற்றை ஆமோதிக்காததோடு தமது மாறுபட்ட கருத்துக்களை விளக்கி வெளிப்படையாக எழுது

வதையும் காண்கிறோம். அக்காலத்தில் மகாத்மா காந்தி வெறும் ஸ்ரீமான் காந்தியாகவே இருக்கிறார். இருப்பினும் பாரதியார் காந்தியடிகளின் சத்தியாக் கிரக இயக்கத்தைக் கூர்ந்து கவனித்து வருகிறார். அடிகளின் அன்பிற்கு முன்னால் தென்னப்பிரிக்க வெள்ளையரின் கொடுமை பணிந்து விடுவதைத் தமது இந்தியா பத்திரிகையில் சித்திரம் போட்டு விளக்குகிறார். பிற்காலத்திலே அவரைப்பற்றி "மஹாத்மா காந்தி பஞ்சகம்" என்ற பாடலில் போற்றும்போது நுட்பமான தமது கவிதா மேதையால் அவருடைய பெருமையையும், அவ ருடைய அஹிம்சா மார்க்கத்தின் தனிச் சிறப்பையும் உணர்ந்து பாராட்டுகிறார். காந்தியடிகளால் நமது நாட்டிற்குக் கதிமோட்சம் பிறக்குமென்று அவர் காண்கிறார். ஆதலால்தான்,

கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ ?

என்று அடிகளைப் போற்றுகிறார்.

உயிர்களெல்லாம் கடவுளின் வடிவம் என்பது உயர்ந்ததோர் உண்மை. அந்த உண்மையைக் காந்தியடிகள் கொலையும் போரும் நிறைந்த அரசிய லில் புகுத்தத் துணிந்தது கவிஞருக்குப் பேராச்சரி யத்தை யளிக்கிறது.

இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்
கிழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல தனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான் !

என்று வியந்து பாராட்டிப் பாடுகிறார்.

மேலும் பாரதியார்,

நெருங்கிய பயன் சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியாவிற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே

என்று அப்பாடலே முடிக்கிறார். அஹிம்சா நெறியினால் இந்தியாவிற்கு விடுதலே கிடைக்குமாயின் அந்த வழியைப் பின்பற்றி வையகம் வாழ வேண்டுமென்று அவர் உலகத்திற்கே இந்த வழியைச் சிபார்சு செய்கிறார்.

பாரதியாரின் கவிதைகளேத் தனித்தனியே ஆராய்வது இங்கே எனது நோக்கமல்ல. இந்நூலினிடையே ஆங்காங்கு உரிய இடங்களில் சுருக்கமாக அதைச் செய்திருக்கிறேன். பொதுவாக அவருடைய கவிதை வளர்ச்சி, உரைநடை வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுவதே இங்கு எனது நோக்கம்.

முக்கியமான உலக மொழிகளிலே தேசீயப் பாடல்களில்லாத மொழி ஒன்றும் இல்லேயென்றே கூறலாம். மேல்நாட்டு மொழிகளிலுள்ள பல தேசீயப் பாடல்கள் அந்நாட்டு மக்களுக்கு என்றும் உணர்ச்சியூட்டும் சக்தி வாய்ந்தவையாக அமைந்திருக்கின்றன. அவற்றோடு சரிநிகராக வைத்துப் போற்றக்கூடிய தேசீயப் பாடல்களேப் பாரதியார் நமக்குத் தந்திருக்கிறார். சிறந்த தேசீயப் பாடல்கள் தமிழில் இல்லே என்ற குறையை நீக்கிய தனிப் பெருமை அவருக்கே உரியது. அவர் பாடிய தேசீயப் பாடல்களில் சில அந்தக் காலத் தேவைக்காக உண்டானவையாக இருக்கலாம். அந்தத் தேவை மறைந்த பிறகு அவற்றின் முக்கியத்துவமும் மறைந்துவிடலாம். ஆனல் நாட்டைப்பற்றி நினேக்கும்போது என்றும் உணர்ச்சிப் பெருக்கோடு பாடி அநுபவிக்கும் பாடல்கள் பல அவற்றிலே இருக்கின்றன. அவை மக்களின் உள்ளத்தை என்றும் கவர்ந்துகொண்டே யிருக்கும்.

புதுச்சேரிக்குச் சென்று அங்கும் விடாமுயற்சியோடு தமது பத்திரிகைகளின் வாயிலாகத் தேசப் பற்றையும், சுதந்தர ஆர்வத்தையும் வளர்த்த

பாரதியார் பத்திரிகைச் சட்டத்தின் மூலமாகத் தமது முயற்சிகளை பிரிட்டிஷ் அரசாங்கம் தடுத்து விட்டதை உணர்கிறார். 1910 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலே அவருடைய பத்திரிகைகள் நின்று விடுகின்றன (இதுபற்றிய விவரம் அடுத்த பகுதியில் பார்க்க) அதற்குப் பிறகு அவருடைய உள்ளம் தேசியப் பாடல்களும் அரசியல் கட்டுரைகளும் அல்லாத வேறு இலக்கியத் துறைகளிலே முக்கிய மாகச் செல்லுகிறது. அதற்கு முன்பும் அத்துறை களிலே அவர் கவனம் செலுத்தாமலில்லை. முன்பே பல பக்திப் பாடல்களைப் பாடியிருக்கிறார். பராசக்தி யும் கண்ணனும் முருகனும் அவர் சிந்தையிலே மாறுதிருக்கிறார்கள். மேலும் ஞானரதம் போன்ற நூல்களுக்கு அடிகோலியிருக்கிறார். ஆனால் பெரிய தோரளவிலே 1910-க்குப் பிறகுதான் அவருடைய உள்ளம் அந்தத் துறைகளிலே செல்லுகிறது. கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலான இலக்கியங்களும், கதைகளும், கட்டுரை களும் தமிழுக்குச் சிறந்த புது அணிகளாகக் கிடைக் கின்றன. அவருடைய தேசிய உணர்ச்சி இந்த இலக்கியப் படைப்புக்களின் போதும் இடையிடையே மேலோங்குவதையும் நாம் காண்கிறோம். பாஞ்சாலி சபதத்திலே இதைத் தெளிவாகக் காணலாம். பாரதி யாரின் இறுதி மூச்சு வரை இந்த உணர்ச்சியின் வேகத்தை நாம் உணர்கிறோம். அவரது வாழ்க்கை யின் அந்திக் காலத்திலே சுதேசமித்திரன் உதவி யாசிரியராக மறுபடியும் அமர்ந்தபோதும் இதை உணர்கிறோம். ஆனால் அது பழைய பாரதி இடி முழக்கத்தின் எதிரொலி போலவே சற்று லேசாக நமக்குக் கேட்கிறது. நாட்டிற்கும், தமிழுக்கும் செய்யவேண்டிய தமது கடமைகளை மிகச் சிறந்த முறையிலே என்றும் அழியாதவாறு முன்பே பாரதியார் செய்து முடித்துவிட்டார். உடலொடுங் கி

சென்னைக்கு மீண்டும் வந்த பாரதியார் அந்த உடலோடு தாம் அதிக நாட்கள் உலகத்திலே இருக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டார் போலும். அதுவே மரணத்தைப் பற்றிய நினைவிலே அவரை அடிக்கடி இழுத்துச் சென்றிருக்கிறது.

> காலா, உனைநான் சிறு புல்லென மதிக்கிறேன்; என்றன்
> காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்

என்று தொடங்கும் பாடலை அவர் 1919 டிசம்பர் இறுதியில் வெளியான சுதேசமித்திரன் ஆண்டு அநுபந்த மலரில் எழுதியிருக்கிறார். 1921 ஜூலை மாதம் இறுதியிலோ அல்லது ஆகஸ்ட் முதலிரண்டு தேதிகளிலோ பாரதியார் ஈரோட்டிற்குச் சென்றிருக்கிறார். அங்கே கருங்கல் பாளையம் என்ற ஊரிலுள்ள வாசகசாலையில் பேசியதைப்பற்றி எழுதும்போதும், "எனக்கு ஒரு விஷயந்தான் முக்கியமாகத் தெரியும். அதையே அங்கும் எடுத்துப் பேசினேன். அதாவது இந்த உலகத்தில் மானுடர் எக்காலத்திலும் மரணமில்லாமல் இருக்கக்கூடுமென்ற விஷயம்" என்று கூறுகிறார். அடுத்த செப்டம்பர் 11-லேயே அவருடைய உடம்பு வீழ்ந்து விடுகிறது.

ஆனல் மரணமில்லாமல் வாழலாம் என்று பாரதியார் கூறியது அவரைப் பொறுத்த அளவிலே பொய்யாகவில்லை. அவருடைய பூதவுடல் அதன் இயல்புக்கு ஏற்றவாறு நலிந்து மறைந்துவிட்டாலும் பாரதியார் சாகவில்லை. அவருடைய எழுத்துக்களின் மூலம் அவர் சிரஞ்சீவியாக இருக்கிறார். தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, நரை கூடிக் கிழப் பருவமெய்தி, கொடுங் கூற்றுக்கு இரையெனப் பின் மாயும் வேடிக்கை மனிதரைப் போல அவர் வீழ்ந்துவிடவில்லை. அவருடைய தமிழின் மூலம் அவர் அமரர் ஆனர்.

பாரதியாரின் பத்திரிகைத் தொண்டு

பாரதியார் 1904-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் உதவியாசிரியராகச் சேர்ந்தார். அந்த சமயத்தில் தமது சொந்தக் கருத்துக்களை வெளியிட அவருக்கு அதிகம் வாய்ப்பு இருக்கவில்லை. சுதேசமித்திரன் அலுவலகத்திலிருந்தே சக்கரவர்த்தினி என்ற மாத இதழும் வெளியாயிற்று. அதற்கு பாரதியார் ஆசிரியரானார். 1905 நவம்பர் மாதத்தில் வெளியான அதன் இதழிலிருந்து வந்தே மாதரம் என்ற பாரதியாரின் கட்டுரை 28—12—1905 சுதேசமித்திரன் இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகை எவ்வளவு காலம் நடைபெற்றதென்று தெரியவில்லை. இதில் பாரதியாரால் எழுதப்பட்ட "வியாசங்களும் பாடல்களும் புதுமணம் கமழ்ந்து யாவராலும் விரும்பப்பட்டன" என்று திரு. எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு சென்றுபோன நாட்கள் என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

1906-ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்தியா வார இதழ் தொடங்கிற்று. இதன் சொந்தக்காரர் மண்டயம் குடும்பத்தைச் சேர்ந்த நா. திருமலாச்சாரியார் என்பவர்.

ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸஹோதரத்வம் அதனுடைய லட்சியம். தனிப்பிரதி விலை அணா

ஒன்று. ஆனால் பாரதியார் அதற்கு ஆண்டுச் சந்தா நிர்ணயித்த வழியே தனிப்பட்டது.

நமது பத்திரிகையின் சந்தா விவரம்

	ரூ.	அ.	பை.
எல்லா கவர்ன்மெண்டாருக்கும்	50	0	0
ஜமீந்தார்கள், ராஜாக்கள் முதலியவர்களுக்கு	30	0	0
மாதம் ரூ. 200-க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு	15	0	0
மற்றவர்களுக்கு	3	0	0

இந்தியா சென்னையில் 34, பிராட்வேயிலிருந்து 1908-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை வெளியாகியுள்ளது. முதல் இரண்டு தொகுதிகள் ஒரு அளவிலும் மூன்றும் தொகுதி தொடக்கத்திலிருந்து முன்பு வெளியான அளவைப்போல இரண்டு மடங்கு அளவில் அதாவது தினசரிப் பத்திரிகை அளவிலும் வெளியாகியுள்ளன.

இந்தியா பத்திரிகையைப் பற்றி திரு. இராமானுஜலு நாயுடு கூறுவதாவது: "அந்தக் காலத்தில் பாரதியார் தீவிர தேச பக்தராயிருந்தார். எதிலும் நிதானத்தையே அனுசரித்து நின்ற ஸ்ரீமான் ஜீ.சுப்பிரமண்ய ஐயரின் கொள்கைகளில் பாரதியார் வேறுபட்டுப் பிரிந்து, இந்தியா என்ற தமிழ் வாரப் பத்திரிகையைத் தொடங்கி அதற்கு ஆசிரியராய் அமர்ந்தார். அந்தப் பத்திரிகையின் சொந்தக்காரர் வேறொருவராவர். பாரதியாரின் தமிழ் நடை அது முதற்கொண்டு ஒரு புது வழியில் மாறியது. அதற்கு முன்னர் எவரும் அவ்வழியில் பத்திரிகை நடத்தவில்லை என்று சொல்லும்வாறுக வெகு சிறப்புடனும் திறமையுடனும் எழுதி வரத் தொடங்கினர். சிறு

சிறு பதங்களுடன் கூடிய ஒரு நவீன கம்பீர நடை. இந்தியா பத்திரிகை சனிக்கிழமை தோறும் வெளியாகி வந்தது. நாலாயிரம் பிரதிகள் வரை போய்க் கொண்டிருந்தது. ஒவ்வொரு பத்திரிகையிலும் அவ்வார வர்த்தமானத்தின் சார்பாய் ஒரு பெரிய சித்திரம் கண்ணுக்கினிய காட்சியாய் மிக்க அழகுடன் பிரசுரிக்கப்பட்டு வந்தது. அந்தப் படம் இன்னின்னவாறு இருக்க வேண்டுமென்று சித்ரீகருக்குப் பாரதியார் சொல்லுங்காலையில் அப்படத்தின் அம்சங்களையெல்லாம் தமது முகத்திலும் அபிநயங்களிலும் காண்பித்து விடுவார். சித்ரீகரின் மனத்தில் அந்தப் பாவனைகள் நன்கு பதிந்துவிடும். அவ்விதமே சித்திரமும் தயாராகும்.

"இந்தியா பத்திரிகை பிரபலப்பட்டபொழுது அது மிகவும் உக்கிர வாசக முள்ளதாயிருந்தது. சிறிதும் அச்சமின்றி எழுதப்படலானது. அந்த அம்சம்தான் கடைசியில் அப்பத்திரிகைக்கு ஆபத்தாய் முடிந்தது. பத்திரிகை என்றைக்கும் நடக்கும் படியான ரீதியில் சாந்தமாய் சட்ட வரம்புக்கு உட்பட்டு நடக்கும்படி பல நண்பர்கள் கூறியும் பாரதியாரின் எழுதுகோல் பழையபடியே இருந்தது. பத்திரிகைக்கு ஆபத்து நிச்சயமென்று பலர் கூறினர். ஒரு சமயம் பாரதியார் டிராம் வண்டியில் செல்லுகையில் இந்தியா பத்திரிகையைப் படித்த ஒரு உத்தியோகஸ்தர் மிக்க கோபாவேசமாய் இப்பத்திரிகையின் ஆசிரியரை அவசியம் தண்டிக்க வேண்டுமென்று பாரதியாரிடம் கூறினர். பாரதியார், "அப்படியா?" என்றார். இந்த சம்பவத்திற்குப் பிறகு இந்தியா பத்திரிகை தனக்கென்று ஒரு புதுக் காரியாலயமும் அச்சுக் கூடமும் அமைத்துக்கொண்டு வேறாய்விட்டது. பத்திரிகையே வேறு கை மாறினும் அதன் கொள்கை எப்போதும்போல் இருக்கும் என்று ஒரு தனிக் குறிப்பும் வெளியிடப்பட்டது.

"இந்தியா பத்திரிகை வரவரக் 'கார'மாகி விட்டது. சிவாஜி தன் சைந்யத்தாருக்குக் கூறியது என்று அகவல் ரூபமாய் பாஞ்சாலி சபதம் போல் பெருங் காவியமாகத் தொடர்ச்சியாய்ப் பத்திரிகையில் எழுதி வந்தார். அது முற்றும் வீர ரஸமாய் இருந்தது. அதனைத் தனிப் புத்தக உருவமாய் வெளியிடுவதற்குப் பாரதியார் விரும்பினர். அது ஆபத்தென நண்பர்களால் தடுக்கப்பட்டது. இந்தியா பத்திரிகைக்குப் பாரதியார் அந்தரங்கத்தில் ஆசிரியராக இருந்தாரேயன்றி வெளிப்படையாய் அன்று. ஸ்ரீ ஸ்ரீநிவாசன் என்பவர் ஆசிரியரும் பிரசுரிப்பவருமென்று பத்திரிகைகளில் வெளி வந்துகொண்டிருந்தது. பாரதியார் ஒரு நிருப நேயர் போன்று இந்தியா பத்திரிகையில் பாடல்களை மட்டும் தமது பெயருடன் வெளியிட்டு வந்தார்.

"அவ்வப்போது நடந்தேறிய சம்பவங்களுக்கெல்லாம் சிறு சிறு பாடல்களை இந்தியா பத்திரிகையில் தமது பெயருடன் வெளியிடுவதானார். வந்தேமாதர கீதத்திற்கு, 'இனிய நீர்ப் பெருக்கினை இன்கனி வளத்தினை' என்று தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றும் வெளியிட்டார். அப்பாடல்களின் மூலமாக மட்டும் அவர் பெயரைத் தமிழ் நாட்டினர் அறிந்து வந்தனர்.

"இந்தியா பத்திரிகைக்குப் பாரதி ஆசிரியரென்று எவருமே அறியார். பாரதியாருக்குத் தமிழ் நாட்டிலிருந்த பெயர் இவ்வளவுதான். சென்னையிலுள்ளார் மட்டும், அதிலும் சில முச்சிபஸ்தர்கள் மட்டும் உண்மையை உணர்ந்திருந்தனர். தமது பாடல்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஸ்வதேச கீதங்கள் என்று இரண்டணா விலையில் ஒரு புத்தகமாக வெளியிட்டார். அதைக் குறித்து இந்தியா பத்திரிகையில், 'சுப்பிரமணிய பாரதியாரின்

பாடல்கள் அடங்கிய ஸ்வதேச கீதங்கள் வரப் பெற்றேம்' என்று தம்மை அந்நியர் போலக் கொண்டு அதற்கு ஒரு மதிப்புரையும் வரைந்தார்.

"பாரதியின் இந்தியா பத்திரிகை சட்ட வரம்பை மீறி நெருப்பு மழை பொழியத் தொடங்கிற்று. இது பாரதியாரைப் பிடித்த கெட்ட காலம்தான். இந்தியா பத்திரிகையின் ஆசிரியரைக் கைது செய்ய வாரண்டும் பிறந்தது. போலீசார் இந்தியா பத்திரிகையின் காரியாலயத்துள் பிரவேசித்து பாரதியாருக்கு வாரண்டைக் காண்பித்தனர். தாம் ஆசிரியரல்லவென்றும், தமது பெயர் வாரண்டில் இல்லை யென்றும் கூறிக்கொண்டிருக்கையில் இந்தியா பத்திரிகையை வெளியிடுபவரான ஸ்ரீநிவாசன் என்பவர் அங்குற்று, "என்ன" என்றார். போலீசார் அவரே ஆசிரியராகப் பதிவு செய்யப் பெற்றவரென்று அறிந்து அவரைக் கைது செய்தனர். விசாரணைக் காலத்தில் ஸ்ரீநிவாசன் தாம் ஆசிரியரல்ல வென்றும், பாரதியாரே உண்மை ஆசிரியரென்றும், தாம் ஒரு குமாஸ்தா போலவே இருந்து வந்ததாயும் தமக்கு வியாசம் எழுதச் சக்திகூடக் கிடையாதென்றும் தெரிவித்துக் கொண்டார். ஆயினும் அவருக்கு ஐந்து வருஷ கடின காவல் விதிக்கப்பட்டது. பாரதியாருக்கும் வாரண்டு பிறந்தது. அதற்குத் தப்பிப் பாரதியார் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார்.

"இது சம்பந்தமாகச் சுதேசமித்திரன் 16—11—1908-ல் துணையங்கத்தில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. 'சென்னையிற் பிரசுரமாய் வந்த இந்தியா என்ற வாராந்தரத் தமிழ்ப் பத்திரிகையில் சென்ற மார்ச்சு மாதம் முதல் ராஜத் துவேஷமான வியாசங்கள் தோன்றி வருவதாக அதன் பேரில் ராஜத் துவேஷக் குற்றஞ் சாட்டி

அதை அச்சிட்டுப் பிரசுரப்படுத்துவோரான ஸ்ரீநி வாசய்யங்காரைக் கைதிப்படுத்தி விசாரணை செய் ததில் ஐகோர்ட்டில் அவருக்கு ஐந்து வருஷ தீபாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டது. இப்படி விதிக்கப்படு மென்றே பொதுவாக எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ராஜத் துவேஷக் குற்றம் செய்ததாகக் கவர் மெண்டார் யாரை நினைக்கிறார்களோ அவர்களைப் பிடித்து விசாரணைக்குக் கொண்டு வருவதும், ஜட்ஜிகள் கொடுந் தண்டனை விதிப்பதும் இப்போது சாதாரணமாய்விட்டது. குற்றஞ் செய்தவர்களைத் தண்டித்தல் அவசியம் என்று எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்; ஆனால் ராஜத் துவேஷக் குற்றஞ் செய்கிறவர்கள் படித்தவர்களாயும், கௌரவமான நிலைமையில் இருப்பவர்களாயும் இருப்பதால், அவர் களிடத்தில் கவர்மெண்டாரும், ஜட்ஜிகளும் அவ் வளவு கொடுமை காட்டாமல் இருக்கக்கூடும். ஸ்ரீநிவாசய்யங்கார் குற்றமுள்ள வியாசங்களை எழுதினவரல்ல; எழுதினவரும், அந்தப் பேப்பருக்குச் சொந்தக்காரரும் அகப்படாமல் மறைந்து போனார்கள். ஸ்ரீநிவாசய்யங்கார் பெயர் போலீஸ் கமிஷனர் ஆபீசில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் அவர் அகப்பட்டுக் கொண்டாரேயன்றிக் குற்றத் துக்கு முதல் உத்தரவாதம் அவர் பேரில் தங்கியதல்ல. இந்த ஒரு காரணத்தினாலேயே அவருக்குக் கொடுந் தண்டனை விதிக்காமல் இலகுவான தண்டனை விதித் திருக்கக்கூடும். அல்லது இந்தியா பத்திரிகையில் ராஜத் துவேஷக் குற்றமுள்ள வியாசங்கள் தோன் றின துவக்கத்திலேயே கவர்ன்மெண்டார் எச்சரித் திருந்தார்களானால் இப்போது ஓடிப் போயிருக்கிற எடிடரும் புரொப்ரைட்டரும் அப்படிப்பட்ட வியா சங்கள் தோன்ற இடங் கொடுத்திருக்க மாட் டார்கள் அவைகளால் விளையும் தீங்கும் குறைந் திருக்கும்.

"தண்டனையடைந்த ஸ்ரீநிவாசன் என்பவர் சிறையில் நன்னடக்கையுடன் நடந்து கொண்டா ரென்று ஒரு வருஷத்திற்குப் பிறகு விடுவிக்கப்பட்ட தாக வதந்தி. பாரதியார் சென்னையை விட்டுப் போனதற்குப் பிறகு இந்தியா பத்திரிகையும் சென்னையில் நின்றுவிட்டது.

திரு. எஸ். ஜி. ராமானுஜலு நாயுடு மேலும் தரும் விவரங்களாவன: "இந்தியா பத்திரிகையுடன் பால பாரதம் என்ற ஆங்கில வாரப் பத்திரிகையும் வெகு திறமையுடன் நடத்தினர்."

புதுச்சேரிக்கு மாற்றப்பட்டு இந்தியா 1908 அக்டோபர் மத்தியிலிருந்து மறுபடியும் பழைய அளவில் வெளியாகிறது. இடையிலே சிறிது காலந் தான் இந்தியா நின்றிருக்கிறது. புதுச்சேரி சென்று பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று பாரதியாரும் அவர் நண்பர்களும் முன்பே தீர்மானம் செய்துகொண்டது போலவே தோன்று கிறது. அதன்படியே ஸ்ரீநிவாசாசாரியாரும் புதுச்சேரி செல்லுகிறார்.

பாரதியார் புதுச்சேரி சேர்ந்த ஒரு மாத காலத் திற்குள் இவரும் அங்கு போய்ச் சேர்ந்தார். பத்திரி கையைப் புதுவையிலிருந்தே வெளியிடுவதென்று இருவரும் ஏற்பாடுகள் செய்தனர். "பிரெஞ்சுச் சட்டப்படி புதுவையில் ஒரு பத்திரிகை நடத்த வேண்டுமானால், அதற்குப் பொறுப்பாளியாகப் பிரெஞ்சு இந்தியக் குடி ஒருவர் இருந்தாக வேண்டும். வில்வநல்லூரில் வசித்து வந்த ஸ்ரீ எஸ். லக்ஷ்மி நாராயணையர் என்பவர் அந்தப் பொறுப்பை ஏற்க ஒப்புக்கொண்டார். ஸ்ரீநிவாசாசாரியார் சென்னை யில் வைத்திருந்த அதே அச்சுக்கூடத்தின் சாமான் கள் புதுவை போய்ச் சேர்ந்தன. இந்தியா முன்னை விட அருமையாய், நிர்ப்பயமாய், புதுவையிலிருந்து

வெளிவரலாயிற்று" (தி. ஜ. ர., புதுமைக் கவி பாரதியார்.)

"1908-ம் ஆண்டில் பாரதியார் இந்தியா பத்திரிகையைப் புதுவை மிஸியோம் எத்திரான் மேர் வீதியிலிருந்து நடத்தி வந்தார். 1910-ஆம் ஆண்டில் அச்சுக்கூடத்தை டுப்ளே வீதிக்கு மாற்றிக் கொண்டார்" (பாரதியாரின் புதுவை வாழ்வு என்ற கட்டுரையில் திரு. ரா. கனகலிங்கம்.)

ஆனால் இந்தியா நீண்ட நாள் தொடர்ந்து நடைபெறவில்லை. மக்களின் ஆதரவு புதுவைக்கு எட்டுவதில் உள்ள சிரமம், அதன் விளைவான பொருளாதார நெருக்கடி, அரசாங்கத்தாரின் கோபம் இவையெல்லாம் இதன் ஆயுளைக் குறைத்து விட்டன. பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் இப்பத்திரிகை வரக்கூடாதென்று 1909-ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கம் செய்த தடையே இதன் முடிவுக்கு முக்கிய காரணமாகும்.

1909 மார்ச்சு 27-ல் புதுச்சேரியிலிருந்து வெளியான இந்தியா தொகுதி 1 இதழ் 24-ல் பாரதியாரின் ஸ்வதேச கீதங்களின் இரண்டாம் பாகமாகிய ஜன்ம பூமி என்ற நூலைப் பற்றிப் பின்வருமாறு விளம்பரம் காணப்படுகிறது :

ஜன்ம பூமி

ஸ்வதேச கீதங்கள் என்ற நூல் வெளியேறியதற்கப்பால் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரால் எழுதப்பட்ட பாக்களும் கீர்த்தனங்கள் முதலியனவும் அடங்கியது. முதற் பாகத்தைவிட மாதுரியத்திலும் சுதேச பக்தியிலும் சிறப்பு வாய்ந்தது. அச்சடித்துத் தயாராகிவிட்டது. வேண்டியவர்கள் புதுச்சேரி

இந்தியா ஆபீஸில் ஸ்ரீ ஸ்ரீனிவாசாசாரியாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

அதன் விலை அணு மூன்று.

இதே இதழில் ஞான ரதத்தில் கந்தர்வ லோகம் என்ற பகுதியில் கடற்கரை என்ற உட்பிரிவு தொடங்குகிறது. ஆதலால் இந்நூலில் ஒரு சிறு பகுதியே சென்னையிலிருந்து வெளியாகியிருக்கலாம் அல்லது தொடக்கம் முதல் புதுச்சேரியிலிருந்து வெளியாகியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்தியாவின் இதழ்கள் அனைத்தையும் பார்க்க இயலாமையால் இதை நிச்சயமாகக் கூற முடிய வில்லை.

இந்தியாவில் காரிபால்டியின் வாழ்க்கை வரலாறு, ராணி லக்ஷ்மியாய் சரித்திரம், லண்டன் கடிதம் முதலானவற்றை வ. வெ. சு. ஐயர் லண்டனில் இருக்கும்போதே எழுதி வந்தார். தேசீய உணர்ச்சியைப் பெருக்கும் இத்தகைய விஷயங்களும் செய்திகளும் கட்டுரைகளுமே இந்தியாவில் அதிகமாக இடம் பெற்றன.

தேச விடுதலைக்கு யார் யார் தீவிரமாக உழைக்கவில்லையோ அவர்களையெல்லாம் தாக்கி எழுதுவதில் பாரதியார் கொஞ்சமும் தயங்கவில்லை. மிதவாதிகள் பலமுறை அவருடைய கூரிய சொல் லம்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். அன்னிபெஸன்ட் அம்மையாரைப் பற்றியும் அக்காலத்தில் பாரதியாருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. அவரையும் தாக்கி எழுதியிருக்கிறார்.

கார்ட்டூன் சித்திரம் வரைந்து, முக்கிய விஷயங்களை விளக்குதல் அல்லது யாரையாவது கேலி செய்தல் ஆகிய முறையைத் தமிழ்ப் பத்திரிகையில் பாரதியார் அப்பொழுதே கையாள்கிறார்.

ஸ்ரீ அரவிந்தர் ஓராண்டுக் காலம் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டிருந்து பிறகு விடுதலை பெற்றபோது அச்சம்பவம் பற்றிச் சித்திரமும் சித்திர விளக்கமும் இந்தியாவின் 1909 மே 13-ஆம் தேதி இதழில் வெளியாகியுள்ளன. கிரஹண விமோசனம் என்பது அச் சித்திரத்தின் தலைப்பு.

"அரவிந்த சூரியனை விழுங்க வந்த போலீஸ் பாம்பு நீங்கிப் போய்விட்டது" என்று சித்திரத்தின் அடியிலே எழுதியிருக்கிறார். அப்படத்திற்குக் கீழ்க் கண்ட விளக்கமும் வெளியாகியுள்ளது.

சித்திர விளக்கம்

"அரவிந்தர் என்ற ஞானச்சுடரை—அரவிந்தர் என்ற தர்ம சூரியனை 'அநீதியாகக் குற்றம் சுமத்துதல்' என்ற இராகு வந்து மறைத்திருந்தது. விழுங்கி விடலாமென்பது அந்தப் போலீஸ் பாம்பின் எண்ணம். சூரியனை விழுங்கப் பாம்பால் முடியுமா? சிறிது காலம் மூடியிருந்து பின் தானே அகன்று போய்விட்டது. இதுவே இவ்வாரச் சித்திரத்தின் கருத்து."

மிதவாதிகளைக் கேலி செய்து பல சித்திரங்கள் வெளிவந்துள்ளன. அக்காலத்தில் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய சாத்வீக இயக்கத்தைப் பாராட்டியும் சித்திரம் வந்துள்ளது.

இந்தியா புதுவை சென்றதும் எஸ். திருமலாச்சாரியார் விஜயா என்ற தினசரிப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார். அப்பத்திரிகை முதலில் சென்னையில் 83, ஹைரோடு, திருவல்லிக்கேணி என்ற இடத்திலிருந்து வெளியாகியிருக்கிறது அதைப்பற்றிய விளம்பரம் 1909 மார்ச்சு 27 இந்தியா இதழில் காணப்படுகிறது. அப்பொழுது அதற்கு யார் பத்திராதிபர் என்பது தெரியவில்லை. இந்தியா 1909

ஆகஸ்டு இதழில்தான் முதல் முதலில் விஜயா புதுச் சேரியிலிருந்து வெளிவருவது பற்றி விளம்பரம் வருகிறது. செப்டம்பர் 7-ஆம் தேதி கிருஷ்ண ஜயந்தி முதல் அதைத் தொடங்கப் போவதாக விளம்பரம் கூறுகிறது. அதற்குப் பாரதியார் ஆசிரியரானார்.

அநேகமாக இந்தியா வெளிவந்துகொண்டிருந்த வரையிலும் இப் பத்திரிகையும் நடந்து வந்திருக் கிறது.

இந்தியா 1909 அக்டோபர் 2 இதழில் கர்மயோகி என்ற பத்திரிகை வெளிவருவது பற்றிய விளம்பரம் வந்துள்ளது. ஸ்ரீ அரவிந்தர் நடத்திய கர்மயோகின் என்ற பத்திரிகையை ஒட்டித் தமிழில் பாரதியார் நடத்திய மாதப் பத்திரிகை இதுவாகும். 1909 டிசம்பர் 4-ஆம் தேதிக்கு முன்பே இப் பத்திரிகை வெளியாகிவிட்டதாகத் தெரிகிறது. இதன் காரியா லயம் புதுவை வெள்ளாளத் தெருவில் இருந்திருக் கிறது.

1909 டிசம்பர் 4-ஆம் தேதியில் வெளியான இந்தியா இதழிலேயே சித்ராவளி என்ற மற்றொரு புதிய மாதப் பத்திரிகை இந்தியா காரியாலயத்தி லிருந்தே விரைவில் வெளியாகப் போவதைப் பற்றி விளம்பரம் காணப்படுகிறது. இப்பத்திரிகை வெளி யாயிற்று இல்லையா என்பது தெரியவில்லை. வெளி வந்ததாக அறிவிப்பு ஒன்றும் இந்தியாவில் நான் பார்த்த அளவில் தென்படவில்லை. பெரும்பாலும் சித்திரங்களாகவே இருக்குமாறு இதை நடத்த வேண்டுமென்பது பாரதியாரின் திட்டம். சித்திரங் களின் விளக்கம் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருக்கு மாம்.

தமிழ் மக்களைத் தட்டியெழுப்பப் பாரதியார் கொண்டிருந்த ஆர்வத்தை 1908 ஏப்ரல் 10-ல்

வெளியான இந்தியா இதழிலுள்ள கீழ்க் கண்ட இரண்டு குறிப்புக்களிலிருந்தும் தெரிந்துகொள்ள லாம்.

தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் கப்பலோட்டிய வீர வரலாறு அனைவருக்கும் தெரி யும். அவர் சிறைப்பட்ட பின்பும் தொடர்ந்து சுதேசியக் கப்பல் விடுவதற்கான பெரு முயற்சி நடந்தது. அதுபற்றித் தூத்துக்குடி சுதேசியக் கப்பல் என்ற தலைப்பில் இந்தியாவில் வெளியாகியுள்ள குறிப்பாவது:—

"தூத்துக்குடி சுதேசியக் கப்பலுக்கு இருநூறு ரூபாய் வந்ததற்குப் பிறகு வரவு நின்றுவிட்டது. 'கப்பல் நிதி' என்ற பெயரால் 150 ரூபாய் தூத்துக் குடிக்கு அனுப்பிவிட்டோம். ஆறு பங்காயிற்று. என்ன வெட்கம்! என்ன வெட்கம்! தமிழ் நாட்டு ஜனங்களிடம் அவர்கள் சொந்தக் காரியத்திற்காக இரண்டு லக்ஷம் ரூபாய் கேட்டதற்கு இருநூறு வசூலாகியிருக்கிறது. கப்பலுக்கு ஓரிரண்டு உபகாரி கள் உதவி செய்ய முன் வந்திருப்பதாகவும், இன்னும் இரண்டு வாரங்களிலே கப்பல் முன்போல நடக்கு மென்றும் கேட்டு சந்தோஷமடைகிறோம். நமது பத்திரிகையைப் பார்த்துக் காசியில் ஒரு தேசாபி மானி இவ்விஷயத்திலும் முயற்சி எடுத்து வருவ தாய்த் தெரிவதும் திருப்திக்கிடமான சமாச்சாரம். ஆனால் தமிழ்நாட்டுப் பொது ஜனங்கள் உறங்கிக் கிடக்கும் அற்புதந்தான் வருத்தமுண்டாக்குகிறது. இவர்களை எப்படி விழிக்கச் செய்வது?"

அதே இதழில் தேச பக்தி என்ற தலைப்புடன் மற்றுமோர் குறிப்பு:—

"துருவன், பிரஹ்லாதன் முதலியோர் விஷ்ணு விடத்திலே செலுத்திய பக்தியை நாம் ஸ்வதேசத்தி

னிடத்திலே செலுத்த வேண்டுமென்று நமது பத்திரிகையில் பல முறை எழுதியிருக்கிறோம் பக்திப் பெருமை தெரியாத. ஐரோப்பாவில்கூட ஜர்மானிய தேசத்தார் நமது தேசத்தில் சுதேசியத்தின் விருத்தியைப் பார்த்துவிட்டுத் தாமும் சுதேசியத்தை ஓர் பெரும் தர்மம் (மதம்) ஆக்கி நடத்த வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். சுவாமி விவேகானந்தர், 'எனது பாரத புத்திரர்களே, இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு நீங்கள் வணங்கவேண்டிய தெய்வங்கள் யாதெனில் பாரத தேசத்து முப்பது கோடி ஜனங்களே. இவர்களெல்லாம் மஹா சக்தியின் ஆவிற் பாகங்கள். இவர்களையே நீங்கள் ஆராதனை செய்யவேண்டும். இவர்களுக்கே நீங்கள் தொண்டு செய்ய வேண்டும். இதைக் காட்டிலும் சிறந்த மதம் வேறு கிடையாது' என்று அருளிச் செய்திருக்கிறார்.

"பாரத நாடு முழுமையும் இம் மதத்தை முற்றிலும் அங்கீகாரம் செய்து கொண்டிருக்கத் தமிழர்கள்மட்டிலும் கொஞ்சம் பின்னடைந்திருக்கிறார்கள். இங்ஙனம் பின்பட்டிருப்பது பிழை. தமிழர்களே, இப் பிழையை நீங்கள் சீக்கிரம் நிவிருத்தி செய்து கொள்ளாத விஷயத்தில் ஸர்வ நாசமடைந்து போவீர்கள். அறிவுடன் வாழுங்கள்."

1909 ஏப்ரில் 17-ஆம் தேதி இதழிலே சௌமிய என்னும் புது வருஷம் பிறந்ததை ஒட்டி இந்தியா கீழ்க்கண்ட தலையங்கம் எழுதியுள்ளது:

புது வருஷம்

"பாரத வாஸிகளுக்குப் புதிய வருஷம் பிறந்திருக்கிறது. இவ்வருஷத்தில் நமது நாட்டிற்குப் பல நன்மைகள் விளையுமென்று சில சோதிட சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் சோதிட சாஸ்திரம் என்ன செய்யும்? ஒருவன் கண்மூடித்தனமாக அந்நிய

தேச வஸ்திரம் வாங்கும்போது குறுக்கே வந்து நிற்குமா? நன்மையும் தீமையும் மனிதர்கள் தமக்குத் தாமே விளைவித்துக் கொள்ளுகிறார்களல்லாது அவை வெளியிலிருந்து வருவன அல்ல. தத்தம் கருமபலன்களையே எல்லா ஜீவராசிகளும் அநுபவிக்கவேண்டும். நமக்கு நன்மை வரவேண்டுமானால் நாம் செய்ய வேண்டிய விஷயங்கள் பின்வருவன:—

1. நமது தேசப் பொருள்களையே வாங்குதல்; அந்நிய சாமான்களை விலக்குதல்.

2. நாமாகப் பாடசாலைகள் வைத்துக்கொண்டு நமது குழந்தைகளுக்கு ஆரிய தருமங்களைப் போதிப்பித்தல், அந்நியருடைய கல்வியிலேயிருக்கும் நன்மைகளைக் கிரஹித்துக்கொண்டு, தீயதை விலக்குவதற்குக் கூட்டு முயற்சிகள் செய்தல்.

3. நமது தேசத்தார் இப்போது மிகவும் ஹீனமான சரீர நிலைகொண்டிருப்பதை நீக்கும் பொருட்டாக சரீரப் பயிற்சிக்கூடங்கள் அத்யாவசியமாக ஏற்படுத்துதல்.

4. ஜாதீய பஞ்சாயத்துக்கள் வைத்தல்.

5. கிராமந்தோறும் பாரதமாதா கோயில் என்று ஓர் ஆலயம் ஏற்படுத்தி அநுதினம் பூஜை முதலிய கைங்கர்யங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

"மேலே கூறப்பட்டிருக்கும் தர்மங்களை நாம் சிரத்தையுடன் நடத்தி வருவோமானால் நமது ஜாதிக்கு க்ஷேமமுண்டு; இல்லாவிடின், இல்லை."

1910 ஜனவரி 22-ஆம் தேதி இந்தியாவில் **பால பாரத** என்ற ஆங்கில வாரப் பத்திரிகை வெளியிடுவது பற்றிய விளம்பரம் வந்துள்ளது. இதற்கும் பாரதியாரே ஆசிரியர். இது முன்பு சென்னையில் நடைபெற்றது.

அதே இதழில் விஜயா, இந்தியா பத்திரிகைகளை அச்சிடும் ஸ்ரீ ஸரஸ்வதி அச்சியந்திரசாலையின் விலாச மாறுதல் தரப்பட்டுள்ளது. இனிமேல் அச்சகம் புதுவை வழுதாவூர் வீதி 10 நெ. வீடு என்ற இடத்தில் இருக்குமென்றும், பத்திரிகைகளின் அலுவலகங்களும் அங்குதானிருக்குமென்றும் அதில் தெரிகின்றன.

பின்னல் சூரியோதயம் என்ற பத்திரிகைக்குப் பாரதியார் ஆசிரியராகிறார்.

1909 நவம்பர் 20-ஆம் தேதி இதழிலிருந்து அதாவது புதுச்சேரியிலிருந்து வெளியாகும் இந்தியாவின் இரண்டாம் தொகுதி 5-ஆம் இதழிலிருந்து மறுபடியும் அது தினசரிப் பத்திரிகை அளவிலும் அதிகப் பக்கங்களுடனும் படங்களுடனும் வெளிவரத் தொடங்குகிறது. இவ்வாறு பத்திரிகை பெரிதாகியும் சந்தா மாறவில்லை. சந்தாவை உயர்த்துவது நியாயமென்றும், பத்திராதிபர் தமது தேச பக்தியால் அவ்வாறு செய்யாதிருப்பினும் இந்தியா அபிமானிகள் சந்தாவைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் சிலர் கடிதமெழுதுகிறார்கள். சந்தாவை உயர்த்துவதோடு பத்திரிகையை வாரம் இருமுறை வெளியிட வேண்டுமென்று சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். குறைந்தது 1500 பேர் இதற்குச் சம்மதம் தெரிவித்தால் வாரம் இருமுறையாக்கத் தாம் உடன் படுவதாகப் பாரதியார் எழுதுகிறார்.

அவ்வாறு விருப்பம் தெரிவிக்கப்பட்டதோ என்னவோ, இந்தியா அடுத்த யுகாதியிலிருந்து வாரம் இருமுறையாக வெளியாகுமென்று 1910 ஜனவரி 24-ஆம் தேதி இதழில் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஆனல் இந்தியா வாரம் இருமுறைப் பத்திரிகையாக வரவேயில்லை. இந்திய சர்க்கார் பிறப்பித்த

பத்திரிகைச் சட்டம் பாரதியாரின் முயற்சிகளையெல்லாம் ஒரேயடியில் வீழ்த்திவிட்டது. இந்தச் சட்டத்தைப்பற்றி 1910 பிப்ரவரி 12-ஆம் தேதி இந்தியா இதழில் விவரமும், தலையங்கமும் வெளியாகியிருக்கின்றன. 1910 மார்ச் 5-ஆம் தேதி இதழில் 'சிற்பமும் கவிதையும்' என்ற பொருள் பற்றித் தலையங்கம் காணப்படுகிறது. அத்தலையங்கம், "இதைக்குறித்து எழுதினால் பத்திரிகைச் சட்டம் நம்மை அண்டாது. ஆகையால் இதையாவது நம் ஜனங்களுக்குச் சொல்வோம்" என்று ஆரம்பத்தில் கூறுகிறது. இதிலிருந்து அந்தச் சட்டத்தின் பிடிப்பு எவ்வளவு வலிமையாக இருந்திருக்குமென்று தெரிந்து கொள்ளலாம்.

இந்தியாவின் அடுத்த இதழையும் நான் பார்த்தேன். அதற்கு மேலே எத்தனை இதழ்கள் வந்தனவோ தெரியாது. அதிகம் வந்திருக்க முடியாது.

வாரம் இரு முறையாக இந்தியாவை வெளியிடத் திட்டமிட்ட பாரதியார் அதை ஒரு முறையாகக்கூட வெளியிட முடியாது போயிற்று. பத்திரிகைச் சட்டத்தின்படி அவர் நடத்தும் பத்திரிகைகளை பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் நுழையவிடாமல் தடுத்து விட்டனர். அதனால் பாரதியாரின் பத்திரிகைப் பெருமுயற்சி ஒடுங்கியது.

அவருடைய பத்திரிகைகளை அடக்க முயன்றதோடு அவரையே கைது செய்யப் பல சூழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. 1910 பிப்ரவரி 26-ஆம் தேதி இந்தியா இதழில் 'எப்படி நம்புவது' என்ற தலைப்புடன் ஒருசிறு கட்டுரை வெளியாகியுள்ளது. அதிலே ஒரு சீ. ஐ டீ. பாரதியாரை ஆங்கிலேயரிடம் பிடித்துக் கொடுக்கச் செய்த தந்திரம் பற்றிய விவரம் வெளியாகியுள்ளது. சென்னையிலேயிருந்த காலத்தில் ஏற்பட்ட பழக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு

அவன் பாரதியாரிடம் அடிக்கடி வந்து கொண்டிருந்தான். இந்தியாவுக்கு விஷயம் திரட்டியளிக்கும் செயலிலும் ஈடுபட்டான். அவன் செய்த சூழ்ச்சி வெளியானபோது அவனைப் பக்கத்தில் அணுகவிடக் கூடாது என்று கூறிய நண்பர் ஒருவரிடம் பாரதியார், "நாம் அதற்கு தர்மதேவதையின் ஸகாயமும் பாரதமாதாவின் அருளும் உள்ளவரை நமக்குத் தீங்கு வராதென்றும், நாம் யாருக்கும் கனவிலும் கூடத் தீங்கை எண்ணவில்லை என்றும் சொல்லி முடித்தோம்" என்று கூறியதாக அக்கட்டுரை கூறுகிறது.

பாரதமாதாவின் அருள் பாரதியாருக்கு நிச்சயமாக இருந்ததென்றுதான் கூறவேண்டும். இல்லாவிட்டால் அவருடைய பத்திரிகை முயற்சிகள் ஒடுக்கப்பட்டு அவர் மனம் குன்றியிருந்த சமயத்தில் அவருக்குப் புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்க வ. வெ. சு. ஐயரும், ஸ்ரீ அரவிந்தரும் தக்க சமயத்தில் புதுச்சேரி வந்து சேர்ந்திருக்க முடியுமா? ஐயர் 1910 அக்டோபர் இறுதியிலும் ஸ்ரீ அரவிந்தர் 1911 ஏப்ரல் தொடக்கத்திலும் புதுச்சேரியை அடைந்தனர்.

பத்திரிகை முயற்சிகள் ஓய்ந்த பிறகு பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலிய சிறந்த இலக்கியங்களை உண்டாக்குவதில் பாரதியார் முக்கியமாக ஈடுபடுகிறார்.

புதுச்சேரி விட்டுக் கடயம் வந்த பிறகு அமிர்தம் என்ற பத்திரிகை தொடங்க முயல்கிறார். இம்முயற்சி வெற்றி பெறவில்லை. பிறகு மீண்டும் சுதேசமித்திரனில் உதவியாசிரியராகி மறையும்வரை பணி செய்கிறார்.

பாரதி தமிழ்

வங்கமே வாழிய

வங்க வாழ்த்துக் கவிகள்

15 செப்டெம்பர் 1905 விசுவாவசு ஆவணி 31

நேற்று மாலை நடந்த கடற்கரைப் பெருங் கூட்டத்தில்
மிஸ்டர் சி. சுப்பிரமணிய பாரதியார் சொல்லியவை

அங்கமே தளர் வெய்திய காலையும்
அங்கோர் புன்னரி தந்திடு மூனுணைச்
சிங்கமே யென வாழ்தல் சிறப்பெனுச்
செம்மை கூறிநந் தாய்ப் பெருந் தேயத்தைப்
பங்கமே பெறு மிந்நிலை நின்றுயர்
பண்டை மாண்பிடைக் கொண்டினி துய்த்திடும்
வங்கமே யென வந்தனை வாழிநீ
வங்கமே நனி வாழிய வாழிய 1

கற்பகத் தருப் போலெது கேட்பினும்
கடிது நல்கிடும் பாரத நாட்டினிற்
பொற்புறப் பிறந்தேம், நமக்கோர் விதப்
பொருளு மன்னிய நீதல் பொறுக்கிலேம்
அற்பர் போலப் பிறர்க்கர நோக்கியா
மவனி வாழ்தலா காதென நன்கிதை
வற்புறுத்திடத் தோன்றிய தெய்வமே
வங்கமே நனி வாழியவாழிய 2

கண்ணினீர் துடைப்பாய் புன்னகை கொள்வாய்
கவினுறும் பர தப்பெருந் தேவியே
உண்ணிகழ்ந்திடுந் துன்பங் கனிதியால்
உன்றன் மைந்தர்கள் மேனெறி யுற்றனர்
பெண்ணி னெஞ்சிற் கிதமென லாவது
பெற்ற பிள்ளைகள் பீடுறவே யன்றே?
மண்ணிநீ புகழ் மேவிடவாழ்த்திய
வங்கமே நனி வாழிய வாழிய 3

வங்கம்—தோணி

(இது சுதேசிய மாணவர் கடற்கரைக் கூட்டத்தில் பாடியது)

குறிப்பு:—1. திரு.எஸ்.ஜி.இராமானுஜலு நாயுடு அவர்கள் தமது பத்திரிகையாகிய அமிர்த குண போதினியில் சென்ற போன நாட்கள் என்ற தலைப்பின் கீழ் பாரதியாரைப் பற்றிச் சில குறிப்புக்கள் தொடர்ச்சியாக எழுதியுள்ளார். அதிலே, "மித்திரனில் எனது தாய் நாட்டின் முன்னுட் பெருமையும் இந்நாட் சிறுமையும் என்று தொடர்ச்சியாக (பாரதியார்) பாடல்கள் எழுதத் தொடங்கினர். மித்திரனில் இதுதான் அவரது முதற் பாடலாகும். இது இப்போது வெளிவந்துள்ள அவரது நூல்களில் சேர்க்கப்படவில்லை" என்று அவர் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் பாட்டு இந்நூலில் ஏற்ற இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதை எழுதுவதற்கு முன்பே வங்கமே வாழிய என்ற இப்பாடல் சுதேசமித்திரனில் வெளியாகி யிருக்கிறது. அதேபோல இன்னும் நான்கு பாடல்கள் முன்னதாகவே வெளியாகி யுள்ளன. நான் ஆராய்ந்த அளவில் வங்கமே வாழிய என்ற பாடலே சுதேசமித்திரனில் வெளியான முதற் பாடலாகக் காண்கிறது. இப்பாடல் வெளிவந்தபோது பாரதியாருக்கு வயது இருபத்துமூன்று. பாரதியார் 15 செப்டம்பர் 1905க்கு முன்பே பல பாடல்கள் இயற்றியுள்ளதாக அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியோர் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு வயதிலேயே எட்டையபுரம் சமஸ்தானத்தில் இருந்தபோது இவர் மடல்களும் உலாக்களும் பாடியதாகவும் அவற்றோடு தனிப் பாடல்கள் பல பாடியதாகவும் அவை யனைத்தும் மறைந்து போய் விட்டதாகவும் திரு. வ. ரா. எழுதியிருக்கிறார் (மகாகவி பாரதியார் பக். 12). அந்தக் காலத்திலேயே இவருக்குப் பாரதியார் என்ற

பட்டமளிக்கப்பட்டிருப்பதிலிருந்தும் இவர் இளமையிலேயே பல பாடல்கள் பாடி யிருக்கலாம் என்று அறியலாம். ஆனல் அப்பொழுது பாடிய பாடல்களில் ஏதாவது அவரது கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளதா என்று நிச்சயிக்க முடியவில்லை. "அண்ணுமலை ரெட்டியாரைப் போல அழகாக யாராவது இக்காலத்தில் காவடிச் சிந்து பாட முடியுமா?" என்று எட்டையபுரம் சமஸ்தானப் புலவர்கள் ஒரு சமயம் கேட்டதாகவும், அவர்களுக்குப் பதில் கூறும் வகையில் பாரதியார் முருகக் கடவுளின்மேல் காவடிச் சிந்தொன்றைப் பாடினரென்றும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். அதில் ஒரு சரணம் மட்டும் கிடைத்துள்ள தாக வெளியாகியுள்ளது. அது வருமாறு:—

பச்சைத் திருமயில் வீரன்,
அலங் காரன், கௌமாரன்—ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன்—அடி
பணி சுப்பிர மணியர்க் கருள்,
அணி மிக்குயிர் தமிழைத் தரு
பக்தர்க் கெளியசிங் காரன்—எழில்
பண்ணு மணிசலத் தூரன்

மதுரையிலிருந்து வெளியான விவேகபாநு என்ற மாத இதழில் 1904 ஜூலை வெளியீட்டில் கீழ்க்கண்ட பாடல் வெளியாகியுள்ளது.

கலிமை யிரக்கம்

குயிலனையீ! நின்னெடு குலவியின் கலவி
பயில்வதிற் கழித்த பன்னுள் நினைந்துபின்
இன்றெனைக் கிடையே எண்ணில் யோசனைப் படும்
குன்றமும் வனமும் கொழிதிரைப் புனலும்
மேவிடப் புரிந்த விதியையும் நினைந்தால்
பாவியேன் நெஞ்சம் பதைக்கெனல் அரிதோ?
கலங்கரை விளக்கொரு காவதம் கோடியா

மலங்குமோர் சிறிய மரக்கலம் போன்றேன்
முடம்படு தினங்காள்! முன்னர்யான் அவளுடன்
உடம்பொடும் உயிரென உற்றுவாழ் நாட்களில்
வளியெனப் பறந்தநீர் மற்றியான் எனது
கிளியினைப் பிரிந்துழிக் கிரியெனக் கிடக்கும்
செயலையென் இயம்புவல் சிவனே
மயலையிற்றென்றெவர் வகுப்பரங் கவட்கே.

இங்ஙனம் எட்டயபுரம்

ஸி. சுப்பிரமணிய பாரதி.

வங்கமே வாழிய என்ற பாடலே முதல் முதலாகச் சுதேசமித்திரனில் வெளிவந்த பாரதியார் பாடல் என்று கொள்வது மட்டும் பொருத்தமாகத் தோன்றுகிறது.

அக்காலத்திலே வங்காளத்தில் பொங்கி எழுந்த தேசிய உணர்ச்சி எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்திருக்கிறது. மாணவர்களுடைய உள்ளத்தையும் அது கவர்ந்தது வியப்பில்லை. தேசிய உணர்ச்சி மிக்க மாணவர் கூட்டத்திலே வங்காளத்தை வாழ்த்திப் பாரதியார் இப்பாடலைப் பாடியிருக்கிறார். சுதந்திரப் போரில் முன்னணியில் நின்று பாரத நாட்டின் விடுதலைக்கு அடிகோலுவதோடு இந்நாடு மறுபடியும் பழம் பெருமையை அடையக் கொண்டு செல்லும் தோணியைப் போல வங்காளம் திகழ்கின்றதென அவர் பாராட்டிப் பாடுகின்றார். வங்காளப் பிரிவினை சம்பந்தமான சட்டம் 1905 செப்டம்பர் 29-ல் ஏற்பட்டது; 1905 அக்டோபர் 16-ல் பிரிவினை செய்யப்பட்டது. ஆதலால் செப்டம்பர் 15-க்கு முன்பே அது பற்றிய பேச்சும் எதிர்ப்புக் கிளர்ச்சியும் தோன்றியிருக்க வேண்டும்.

குறிப்பு:—தலைப்புடன் கொடுக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவ சகாப்தத்தை ஒட்டிய தேதியும் அதற்குச் சரியான தமிழ்த் தேதியும் ஒரு கவிதை, கட்டுரை அல்லது கதை முதல் முதலில் சுதேசமித்திரனில் வெளிவான காலத்தை குறிக்கும். வேறு பத்திரிகை அல்லது நூலில் வெளியாகியிருந்தால் அது அங்கேயே குறிக்கப்படும்.

வந்தேமாதரம்

28 டிசம்பர் 1905 விசுவாவசு மார்கழி 14

திருவல்லிக்கேணியில் பிரசுரமாகும் சக்கரவர்த்தினி என்ற மாதாந்தரப் பத்திரிகையில் அதன் ஆசிரியர் மிஸ்டர் சி. சுப்பிரமணிய பாரதியாரால் வரையப்பட்டிருப்பது.

இப்போது பெங்காள மாகாணத்திலிருக்கும் ஒவ்வொரு ஹிந்துவாலும் ஸாம கீதத்தைப்போல அத்தனை பக்தியுடன் பாடப்பட்டு வருகின்ற வந்தே மாதரம் என்ற திவ்ய கீதத்தை நான் மொழி பெயர்க்கத் துணிந்தமை, கர்வங்கொண்ட செய்கை யென்று பலர் கருதக்கூடும். இந்த கீதமெழுதிய பெங்காளி வித்வானாகிய பங்கிம் சந்திர சாடர்ஜியின் தைவிகச் சொற்களைத் தமிழ்ப்படுத்த எனக்குப் போதிய வன்மையில்லாவிடினும் தமிழ்நாட்டா ருக்கு அச் செய்யுளின் பொருளுணர்த்த வேண்டு மென்ற ஆசைப் பெருக்காலேயே யான் இதனைத் துணிந்திருக்கிறேன். இவ் வந்தேமாதரம் என்ற கீதம் பங்கிம் சந்திர சாடர்ஜியின் நூல்களிலே மிகச் சிறப்புக் கொண்டதாகிய ஆனந்த மடம் என்ற நாவல் கதையினிடையே அமைக்கப்பட்டிருக் கின்றது.

ஆனந்த மடம் என்ற கதையானது உண்மை யாகவே நடந்த சரித்திரத்தைத் தழுவியது. வாரன்

ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாயிருந்த காலத்தில் சந்நியாசிகள் சேர்ந்து நடத்திய ஓர் பெருங் கலகத்தைப் பற்றியே மிடி நூல் விரித்துக் கூறுகின்றது. பெங்காளத்தில் 1774—5 வருஷத்தில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அதற்கப்பால் அனேக ஆயிரம் சந்நியாசிகள் ஒன்றுய்க் கூடி அந்நியர்களைத் தமது தாய்ப் பூமியிலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் கலகஞ் செய்யத் தொடங்கினர்கள்.

இவர்கள் இரகசியமாகக் சந்திக்கும் பொருட்டு ஆள் நுழையக் கூடாத கருங்காட்டில் ஆனந்த மடம் என்பதோர் இடம் வைத்திருந்தார்கள். இவர்கள் மகமதியப் படைகளைப் பல இடங்களில் தோல்வி செய்ததுமன்றி ஓர் ஆங்கிலேயப் பட்டாளத்தையும் முறியடித்தார்கள். எனினும் பிரிட்டிஷார் விடாமல் தாக்கியதன்பேரில் இந்த வீர சந்நியாசிக் கூட்டத்தார் கடைசியாகப் பிரிந்து போயினர். இந்த வீரத் துறவிகளில் ஒருவராகிய பவாநந்தர் வந்தே மாதரம் என்ற ஆரம்பங் கொண்ட அரிய கீதத்தைப் பாடியதாகப் பங்கிம் புலவர் தமது நூலில் அமைத்திருக்கிறார்.

25 வருஷங்களுக்கு முன் இவர் இந்தப் பெரு நூலைப் பிரசுரித்தபோது அந்தக் கீதத்தின் கண்ணே பெரும் பகுதி சமஸ்கிருதமாகவே யிருந்தபடியால் அவருடைய நேயர்கள் பலர் அதைக் குறை கூறினர்கள். ஆனால் அம்மகான் அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொருட்டாக்கவில்லை. எழுதி 25 வருஷங்களுக்குள்ளாக மேற்படி திவ்ய கீதம் பெங்காளத்து ஜனங்கள் எல்லோருடைய நாவிலு மிருக்குமென்பதை அந்தக் கவியரசர் அறிந்திருந்தார் போலும். அதிலிருக்கும் சம்ஸ்கிருதம் வெகு எளிதாயிருப்பதால் எந்தப் பெங்காளிக்கும் வெகு

சுலபமாகப் பொருள் விளங்கிவிடும். அதுவுமின்றி அந்தக் கீதமானது பழமையில் முன்னோர்களால் வழங்கப்பட்டு வந்ததும் ஒப்பற்றதுமான சம்ஸ்கிருத பாஷையோடு தற்காலப் பாஷை கலப்புற்று அமைக்கப் பெற்றிருப்பதால் பூர்வ காலத்துடன் தற்காலத்தை இணைப்பதாக இருக்கின்றது. தாய்த் தேசத்தை அந்தப் பாடலில் தாயென்று வழங்கியிருப்பது மிகவும் பொருத்தமுடைத்தே.

பலரால் இக்கீதத்திற்கு எழுதப்பட்டிருக்கும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பானது பெங்காளி கீதத்திலிருந்து சில இடங்களில் மாறுபடுகின்றது. அவ்வாறு மாறுபட்ட இடங்களில் என்னால் கூடிய அளவு பெங்காளிச் சொற்களை அநுசரித்தே தமிழ் மொழி பெயர்ப்பெழுதியிருக்கிறேன். எனது தமிழ் எத்தனை குறைவுபட்டிருந்த போதிலும் தெய்வப் புலவராகிய பங்கிம்பாபுவின் மதிப்பைக் கருதித் தமிழுலகத்தார் இதனை நன்கு ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

வந்தே மாதரம்

(முதல் மொழிபெயர்ப்பு)

முப்பதுகோடிவாய் நின்னிசை முழங்கவும்—பெங்காளிப் பாஷையிலே 7 கோடியென்றே கூறியிருக்கின்றது. ஆனால் அது பெங்காள மாகாணத்தை மட்டிலுமே குறிப்பிட்டது. 30 கோடி இந்தியா முழுமையின் ஜனத் தொகை.

(நவம்பர் இதழ் சக்ரவர்த்தினியில் வந்தது)

குறிப்பு: —வந்தே மாதர கீதத்தின் மொழி பெயர்ப்பை ஒட்டிய ரஸமான ஒரு சம்பவத்தைச் சமீபத்தில் திரு. வீ. கே. ராமனுஜ ஐயர் அவர்கள் என்னிடம் கூறினார்கள். இவர் மயிலாப்பூரிலே வக்கீலாக இருக்கிறார். இவர் மஹேச குமார சர்மாவுக்கு நெருங்கிய உறவினர் மஹேச குமார சர்மா ஆனந்த மடம் என்ற நூலைத் தமிழிலே பெயர்த்து அழகாக

எழுதியிருக்கிறார். அதிலே வெளியிடுவதற்காக வந்தேமாதர கீதத்தை மொழி பெயர்த்துத் தரும்படி பாரதியாரைக் கேட்டுக் கொண்டாராம். இரண்டு மூன்று மாதங்கள் அவருடைய வேண்டுகோள் நிறைவேறவில்லை. பிறகு ஒரு நாள் இரவு சுமார் பத்து மணிக்கு பாரதியார் மஹேச குமார சர்மாவின் வீட்டுக் கதவைத் தட்டினார். அவர் அப்பொழுது சென்னை ஜார்ஜ் டவுனில் வசித்து வந்தார். பாரதியார் திருவல்லிக்கேணியிலிருந்தார். அந்த நேரத்தில் பாரதியார் வந்தது சர்மாவுக்குச் சற்று ஆச்சரியத்தை விளைவித்தது. "சர்மா, பாட்டு வந்துவிட்டது—எழுதிக் கொள். கடற்கரையிலே உட்கார்ந்திருந்தேன். நீ கேட்ட பாட்டு திடீரென்று உதயமாயிற்று. கடற்கரையோரமாகவே நேராக இங்கு வந்து விட்டேன்" என்று பாரதியார் கூறினராம்.

பாரதியார் இரண்டு விதமாக இக் கீதத்தை மொழி பெயர்த்திருக்கிறார். இங்குள்ள கட்டுரை அப்பாடலுக்கு நல்ல முன்னுரையாக அமைந்துள்ளது.

வேல்ஸ் இளவரசருக்குப் பாத கண்டத்தாய்

நல்வரவு கூறுதல்

(பாரத மாது தானே பணித்தன்று)

29 ஜனவரி 1906 விசுவாவசு தை 17

மிஸ்டர் சி. சுப்பிரமணிய பாரதி இயற்றிய

ஆசிரியப்பா

வருக செல்வ வாழ்கமன் னீயே!
வடமேற் றிசைக்கண் மாப்பெருந் தொலையினேர்
பொற்சிறு தீவகப் புரவலன் பயந்த
நற்றவப் புதல்வ நல்வர வுனதே.
மேதக நீயுநின் காதலங் கிளியும்
என்றனைக் காணுமா றித்தனை காதம்
வந்தனிர் வாழ்திரென் மனமகிழ்ந் ததுவே.
செல்வகேள்! என்னருஞ் சேய்களீ நின்னுடை
முன்னே ராட்சி தொடங்குறூஉ முன்னர்
நெஞ்செலாம் புண்ணாய் நின்றனன் யாஅன்.
ஆயிர வருட மன்பிலா வந்நியர்
ஆட்சியின் விளைந்த அல்லல்க ளெண்ணில

போனதை யெண்ணிப் புலம்பியிங் கென்பயன்?
மற்றுன் நாட்டிலேர் வந்ததன் பின்னர்
அகத்தினிற் சிலபுண் ஆறுத லெய்தின.
போர்த்தொகை யடங்கியென் னேழைப் புத்திரர்
அமைதிபெற் றுய்வ ராயினர். எனவே
பாரதி தேவி பழமைபோற் றிருவருள்
பொழிதர லுற்றனள். பொருள்செயற் குரிய
தொழிற்கணம் பலப்பல தோன்றினபின்னும்
கொடுமதப் பாவிகள் குறும்பெலா மகன்றன.
யாற்றினிற் பெண்களே யெறிவ தூஉம், இரத்
தருளையிற் பாலரை உயிருடன் மாய்த்தலும்
பெண்டிரைக் கணவர்தம் பிணத்துட னெரித்தலும்,
எனப்பல தீமைக ளிறந்துபட் டனவால்,
மேற்றிசை யிருளினே வெருட்டிய ஞான
ஒண்பெருங் கதிரின் ஒளிரு கிரணமென்
பாலரின் மீது படுதலுற் றனவே.
ஆயினு மென்னே? ஆயிரங் கோடி
தொல்லைகள் இன்னும் தொலைந்தன வில்லை.
நல்குர வாதி நவமாந் தொல்லைகள்
ஆயிர மெனவந் தடைந்துள நுமரால்.
எனினுமிங் கிவையெலா மிறையவ னருளால்
நீங்குவ வன்றி நிலைப்பன வல்ல.
நோயெலாந் தவிர்ப்பான் நுமரே யெனக்கு
மருத்துவ ராக வந்தன ரென்பதூஉம்
பொய்யிலை. ஆதலிற் புகழ்பெறும் ஆங்கில
நாட்டின ரென்றும் நலமுற வாழ்கவே.
என்னருஞ் சேய்களு மிவருநட் பெய்தி
இருபான் மையர்க்கு மின்னலொன் றின்றி
ஒருவரை யொருவர் ஒறுத்திட லிலாது
செவ்விதின் வாழ்க! அச் சீர்மிகு சாதியின்

இறைவனு முந்தை இன்பொடு வாழ்க!
வாழ்க நீ! வாழ்கநின் மனமெனு மினிய
வேரிமென் மலர்வாழ் மேரிநல் லன்னம்.
மற்றென் சேய்கள் வாழிய! வாழிய!

குறிப்பு.— 1901 முதல் 1911 வரை ஏழாம் எட்வர்டு சக்கரவர்த்தியாக இருந்தார். அவருக்குப் பின் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியாகப் பட்டம் சூடியவர் அவர் காலத்தில் வேல்ஸ் இளவரசராக இருந்தார். அவரை வரவேற்றே இப்பாடல் பாடப் பெற்றுள்ளது. இணையற்ற உணர்ச்சி மிக்க தேச பக்திப் பாடல்களைப் பாடித் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய பாரதியார் வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறிப் பாட்டியற்றியிருப்பது ஆச்சரியமாகவே தோன்றும். முழு மனத்தோடு இதைப் பாரதியார் இயற்றினாரா என்பது சந்தேகந்தான். தாம் ஏற்றுக் கொண்டிருந்த வேலையினால் ஏற்பட்ட கடமையை நிறைவேற்றவே இதை அவர் செய்திருக்கலாம். என்றாலும் இப்பாடலிலும் பாரதியாரது தேச பக்தி ஒளிவிடுவதை நாம் காணலாம். ஆங்கிலேயரால் புதிய தொல்லைகள் பல நம் நாட்டிற்கு நேர்ந்துள்ளன என்பதைக் குறிப்பிட பாரதியார் தவறவில்லை. மேலும் இப்பாடல் "என் சேய்கள் வாழிய வாழிய" என்ற மொழிகளோடு முடிவதையும் கவனிக்கவேண்டும்.

விண்ணப்பம்

13 பிப்ரவரி 1906 விசுவாவசு மாசி 2

எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனுதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையவனுவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்படமாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேச பக்தி'ப் பாக்கள் புனைந்தனுப்புவாராயின் அவையும் நன்றியறிவுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

சிறிய ஆற்றலுடையேனுகிய யான் இப்பெரிய தொழிலை நிறைவேற்றுவதன்கண்ணே எவ்வாற்றானும் துணை புரிய விரும்புவோர் கால பரியயம் செய்யலாகாதென்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

சி. சுப்ரமணிய பாரதி

விலாசம்:—சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

குறிப்பு:—இவ்விண்ணப்பம் மறுமுறையும் 28 பிப்ரவரி 1906-ல் 'ஓர் சுதேசிய விண்ணப்பம்' என்ற தலைப்புடன் வெளியாகியுள்ளது. தேசபக்திப் பாடல்கள் வேண்டும் என்கிற ஆவலை இது வெளிப்படுத்துகிறது. பிறரிடம் சிறந்த தேசிய கீதங்களை எதிர்பார்த்துப் பாரதியார் ஏமாற்ற மடைந்திருக்க வேண்டும். இத்துறையில் சிறந்த பாடல்கள் இல்லாத குறையை அவர் அடுத்த ஒன்றிரண்டு ஆண்டுகளி லேயே தமது பாடல்களால் முற்றிலும் களைந்துவிட்டார். பாரதியார் இயற்றிய சுதேச கீதங்கள் என்ற நூல் 1908-ல் வெளியாகியது. வங்க வாழ்த்துக் கவியின் மூலமும் அடுத்து வரும் வந்தேமாதரம் முதலிய பாடல்கள் மூலமும் பாரதி யார் இப்பணியை 1905-லிருந்தே தொடங்கி விட்டார் என்பதை நாம் அறிகிறோம்.

வந்தேமாதரம்

24 பிப்ரவரி 1906 விசுவாவசு மார்கழி 13

ஆரியமென்ற பெரும்பெயர் கொண்டவெ
மன்னையின் மீதுதிகழ்
அன்பெனு மென்கொடி வாடிய காலை
யதற்குயிர் தந்திடுவான்
மாரியெ னும்படி வந்து சிறந்தது
வந்தே மாதரமே
மாணுயர் பாரத தேவியின் மந்திரம்
வந்தேமாதரமே
வீரிய ஞான மரும்புகழ் மங்கிட
மேவி நலாரியரை
மிஞ்சி வளைந்திடு புன்மை யிருட்கணம்
வீவுற வங்கமகா
வாரிதி மீதி லெழுந்த இளங்கதிர்
வந்தே மாதரமே
வாழிந லாரிய தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே 1

காரடர் பொன்முடி வானி மயந்தரு
கங்கை வரம்பினிலும்
கன்னியை வந்தொரு தென்றிசை யார்கலி
காதல் செயா யிடையும்

வீரர்கள் மிஞ்சி விளங்கு புனமுதல்
வேறுள வூர்களிலும்
விஞ்சை யெனும்படி யன்புடன் யாரும்
வியந்திடு மந்திரமும்
பாரத தேச விரோதிகள் நெஞ்சு
பதைத்திடு மந்திரமும்
பாதக ரோதினு மேதக வுற்றிடு
பண்புயர் மந்திரமும்
வார முறுஞ் சுவை யின்னற வுண்கனி,
வான மருந்தெனவே
மாணுயர் பாரத தேவி விரும்பிடும்
வந்தே மாதரமே 2

—சி. சுப்பிரமணிய பாரதி

கன்னி-கன்னியாகுமரி.

குறிப்பு:— இப்பாடலின் இரண்டாவது செய்யுள் சுதேச மித்திரனில் 27 பிப்ரவரி 1906-ல் வெளி வந்துள்ளது. பங்கிம் சந்திரர் எழுதிய வந்தேமாதர கீதத்தைப் போற்றி மொழிபெயர்த்த பாரதியார் இப் பாடலில் வந்தே மாதரம் என்னும் மந்திரத்தின் பெருமையை எடுத்தோது கிறார்.

என்னே கொடுமை!

4 ஏப்ரல் 1906 விசுவாவசு பங்குனி 22

பூர்வ காலத்தில் அர்ஜுனுதிகள் செய்ததாகப் புராணங்களிலே கூறப்படும் அம்புத் தொழில் முறைகளைப் பின்பற்றி இரண்டு ரஜபுத்திரர்கள் செய்த அற்புதமான துப்பாக்கி வித்தைகளை நோக்கும் போது உள்ளத்திலெழுந்த சில எண்ணங்கள்.

மல்லார் திண்டோட் பாஞ்சாலன்
மகள் பொற்கரத்தின் மாலுற்ற
வில்லால் விஜயன் அன்றிழைத்த
வித்தைத்தொழிலை மறந்திலிரால்
பொல்லா விதியால் நீவிரவன்
போர்முன்னிழைத்த பெருந்தொழில்கள்
எல்லா மறந்தீ ரெம்மவர்காள்
என்னே கொடுமை யீங்கிதுவே! 1

வீமன் திறலு மவற்கிளைய
விஜயன் திறலும் விளங்கிநின்ற
சேமமணிப்பூந் தடநாட்டில்
சிறிய புழுக்கள் தோன்றி வெறுங்
காம நுகர்தல் இரந்துண்ணல்
கடையாம் வாழ்க்கை வாழ்ந்து பினர்
ஈமம் புகுத லிவைபுரிவார்
என்ன கொடுமை யீங்கிதுவே! 2

—வி. சுப்பிரமணிய பாரதி

எனது தாய் நாட்டின் முன்னுட் பெருமையும் இந்நாட் சிறுமையும்

11 ஏப்ரல் 1906 விசுவாவசு பங்குனி 29

கண்ணிகள்

புன்னகையு மின்னிசையு மெங்கொளித்துப் போயின
இன்னலொடு கண்ணீ ரிருப்பாகி விட்டனவே! [வோ
ஆணெலாம் பெண்ணுய் அரிவையரெலாம் விலங்காய்
மாணெலாம் பாழாகி மங்கிவிட்டதிந் நாடே!
ஆரியர்கள் வாழ்ந்துவரும் அற்புதநா டென்பதுபோய்ப்
பூரியர்கள் வாழும் புலைத்தேச மாயினதே
வீமாதி வீரர் விளிந்தெங்கு போயினரோ!
ஏமாறி நிற்கு மிழிஞர்களிங் குள்ளாரே!
வேதவுப நிடத மெய்ந்நூல்க ளெல்லாம்போய்
பேதைக் கதைகள் பிதற்றுவரிந் நாட்டினிலே!
ஆதி மறைக்கீதம் அரிவையர்கள் சொன்னதுபோய்
வீதி பெருக்கும் விலையடிமை யாயினரே!
செந்தேனும் பாலும் தெவிட்டி நின்ற நாட்டினிலே
வந்தே திப்பஞ்ச மரபாகி விட்டதுவே!

மாமுனிவர் தோன்றி மணமுயர்ந்த நாட்டினிலே
காமுகரும் பொய்யடிமைக் கள்வர்களும் சூழ்ந்தனரே!
பொன்னு மணியுமிகப் பொங்கி நின்ற விந்நாட்டில்
அன்னமின்றி நாளு மழிவார்க ளெத்தனேபேர்?

—சி. சுப்பிரமணிய பாரதி

குறிப்பு:— இன்னும் வரும் என்று இப்பாடலின் இறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்களும் தமது சென்று போன நாட்கள் என்ற கட்டுரையிலே பாரதியார் இத்தலைப்பைக் கொண்டு தொடர்ச்சியாகப் பாடல்கள் எழுதினரென்று கூறுகிறார். ஆனல் மற்றப் பகுதிகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஸ்வாமி அபேதானந்தர்

21 ஜூலை 1906

(இந்தியா பத்திரிகைக் கட்டுரை)

இந்த வாரத்தில் சென்னையிலே நடந்த சமாசாரங்களுக்குள் வெகு முக்கியமானது ஸ்வாமி அபேதானந்தரின் வரவேயாகும். பாரத நாட்டு மகரிஷிகளில் ஒருவரும் ஜகத் பிரசித்தருமாகிய ஸ்வாமி விவேகாநந்த பரம ஹம்ஸரது ஸகபாடியும் ஸ்ரீமத் ராமகிருஷ்ண பரப்ரஹ்மத்தின் சிஷ்யருமான அபேதாநந்தர் பல வருஷ காலமாக ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில் மண்ணுசையிலும் பொன்னுசையிலும் அமிழ்ந்து கிடக்கும் மனிதர்களிடம் வேதாந்த மார்க்கம் உபதேசித்து அவர்களுடைய இரும்பு நெஞ்சுகூட ஞானத் தீயில் இளகுமாறு செய்வித்துப் பெருங்கீர்த்தி பெற்றுவிட்டு, இப்போது தமது தாய் நாட்டிற்கு மீண்டு வந்திருக்கிறார்.

இவருக்குச் சென்னையிலே நடந்த உபசரணைகளையும், இவர் சென்னையிலே செய்த உபந்நியாசக் கருத்துக்களையும பற்றி மற்றோரிடத்திலே பிரஸ்தாபம் செய்திருக்கிறோம். இவரும் இவரது கூட்டாளிகளும் கடல்மீது எத்தனையோ ஆயிரம் காதம்

கடந்து போய் இத்தேசத்தின் பெயர் கேட்டவுடனே அந்நியர்கள் முடி வணங்குமாறு செய்யும் நன்மைக்கு நம்மவர்களால் என்ன கைம்மாறு செய்ய முடியும்? இந்த மகான்கள்தாம் என்ன கைம்மாறை எதிர் பார்க்கிறார்கள்? யாதொரு பற்றுமில்லாமல், இரந்து உண்பவர்களாய் உலகத்தாரின் ஞான வழிக்கு ஏற் பட்டிருக்கும் மாயையாகிய குருட்டுத் தன்மையை நீக்கி, ஒளியளிக்க வேண்டுவதே கடமையாகக் கொண்டு நாள் கழித்து வரும் இப்பெரியார்களுக்கு உலகம் அளக்கத் தகாதவாறு கடமைப்பட்டிருக் கிறது. ஆத்மாவே உண்மையென்றும் அதனை மறைத்து நிற்கும் மற்றத் தோற்றங்களெல்லாம் வெறும் மயக்கமே என்றும் போதனை செய்யத் தலைப்பட்டிருக்கும் அபேதானந்த ஸ்வாமிகள், அந்தப் பாரமார்த்திக நிலைமை அறியாமல் வியாவஹாரிக நிலையிலே உழலும் நம்மவர்களுக்குக்கூட மிகவும் பயன்படத்தக்க சில ஹிதோபதேசங்கள் தந்திருக் கின்றார். ஞாயிற்றுக்கிழமை மாலை டவுன்ஹால் வெளி மைதானத்திலே இவர் உபந்நியாசம் புரிந்த காலத்தில் நம்மவர்களின் பேடித் தன்மையையும் பயங்காளித் தன்மையையும் பற்றிப் பேசியது கொஞ்சமில்லை. "ஆண்மை இழந்து பள்ளத்தில் விழுந்து கிடக்கிறீர்களே! எழுந்து நின்று உங்களது புருஷத் தன்மையை நிரூபித்துக் கொள்ளுங்கள்" என்று இத்தேசத்தாரை நோக்கிக் கூறுவதில் விவே காநந்தர் எம்மட்டு ஆத்திரம் கொண்டிருந்தாரோ அம்மட்டு அபேதானந்தரும் கொண்டிருப்பதைக் காண்கிறோம். தீர புத்திரர்களாகிய ஆரியர்கள் ஏதோ ஒருவிதமான மதி மயக்கத்தால் குழந்தை களைப் போலவும் பெண்களைப் போலவும் நடந்து கொள்வதைப் பார்த்தால் அனைத்தையும் துறந்த ஞானிக்குக்கூட ஒருவிதான பரிதாபம் ஜனிக்கு மல்லவா?

அபேதாநந்தருக்கும் அவர் போன்ற ஞானி களுக்கும் நாம் பெரிய உபசரணைகள் நடத்துவதால் மட்டும் அவர்களது பிரீதிக்கு உள்ளாய் விடமாட் டோம். பல்லக்குகள், புஷ்பஹாரங்கள், வாத்தியங் கள் என்பவற்றைக் கொண்டு ஒரு ஞானியின் கிருபையைச் சம்பாத்தியம் செய்து விடுவதென்றுல் அது எளிதான காரியமா? அவர்களது உபதேசத்தின் உண்மையைக் கிரகித்து நம்மால் இயன்றமட்டும் அதன்படி நடக்க முயல்வதே நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய கடமையாகும்.

தீரத் தன்மையைப்பற்றி மட்டிலுமல்லாமல் ஐக்கியம் முதலிய மற்ற விஷயங்களைப்பற்றியும் அபேதாநந்தர் பேசியிருக்கிறார். இந்தியாவில் 30 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். ஆனல் ஒருவனுக் கொருவன் சம்பந்தமில்லாமல் ஒவ்வொருவன் ஒவ் வொருமாதிரி எண்ணங் கொண்டிருக்கிறன். ஆத லால் வெவ்வேறு வகைப்பட்ட 30 கோடி எல்ணங் கள் ஏற்பட்டுப் போய்விடுகின்றன. எனவே ஒரு காரியமும் எளிதாகச் சாதிக்க முடியாமல் போய் விடுகிறது. பிரிட்டிஷ் தேசத்தில் 4 கோடி ஜனங்கள் மாத்திரமே இருந்த போதிலும் அவர்களனைவரும் ஒரே விதமான எண்ணங் கொண்டிருப்பதனல் அவர்கள் காரியங்கள் மிகவும் எளிதாகக் கைகூடிவிடு கின்றன. இதனை விவேகாநந்தர் வெகு தெளிவாக எடுத்துக் கூறி இருக்கிறார்.

இது நிற்க. அபேதாநந்தர் சென்னை மாகாணத் திலும், நகரத்திலும் பெற்ற உபசரணைகள் அவருக்கு இத்தேசம் முழுவதிலும் நடைபெறும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனல் அத்துடன் இவர் சென்ற இடமெல்லாம் ஜனங்கள் இவரது போதனைகளைப் பக்தியுடன் கேட்டுப் பயன் பெறுவார்களென்று இத்தகைய மஹான்கள் இந்நாட்டிலே தோன்றி

வருவார்களாஞல் ஆரிய பூமியானது மறுபடியும் புராதன காலத்துப் பெருமையைக் காட்டிலும் மேற் பட்ட பெருமைக்கு வந்துவிடும்.

குறிப்பு:— ஸ்வாமி அபேதாநந்தர் 15 ஜூலை 1960-ல் சென்னைக்கு விஜயம் செய்தார்.

அபேதாநந்த ஸ்வாமிகள்மீது ஸ்தோத்திரக் கவிகள் எவ்ற பாடலும் இது சமயம் எழுதப்பட்டிருக்கும் என்று ஊகிக்கலாம்.

யான்

17 செப்டம்பர் 1906 பராபவ புரட்டாசி 2

அருளா லெவையும் பார் என்றான்—அதை
அறியாதே சுட்டியென் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால்—கண்ட
என்னையுங் கண்டிலே னென்னடி தோழி!

—தாயுமானவர்

ஆயிரங் கோடி அறிஞர்கள் பற்பல
ஆயிர யுகங்க ளாராய்ந் தறிகிலா
'யான்' உடை யியற்கை யாரே அறிவன்!
மீனுணர்ந் திடுங்கொல் வியன்கடற் பெருமை?
அருள்வழிக் காண்கென் றருளினர் பெரியோர்:
மருள்வழி யல்லான் மற்றொன் றுணர்கிலேன்!
அகிலமும் 'யான்' என ஆன்றோ ரிசைப்பர்
மகிதலத் திருளின் மண்டிய மனத்தேன்
யானதை யொரோவழிக் கண்டுளேன்; எனினும்
மானத ஒளியது மங்குமோர் கணத்தே
யானெனும் பொருள்தான் என்னைகொல்? அதனையிவ்
வூனெனக்கொள்வ ருயிரிலார் சிலரே.
*பிரமமே யானெனப் பேசுவர் பேசுக!
†பிரமமே யானெனப் பேசினர் பெரியோர்.

—சி. சுப்பிரமணிய பாரதி

*ப்ரம்மம் அல்லது ப்ரமை. 'நான்'என்னும் உணர்ச்சியே தப் புணர்ச்சி.

†ப்ரம்மம் அல்லது முதற் பொருள்.

குறிப்பு:— பாரதியார் இப்பாடலை சானெட் (Sonnet) என்று தலைப்பில் கூறுகிறார். இதுவும் அடுத்த பாடலும் Sonnet I, II என்று ஆங்கிலத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. சானெட் என்பது நம் நாட்டு யாப்புவகை அல்ல. இது மேல்நாட்டு யாப்புவகை. இது முதலில் இத்தாலி மொழியில் தோன்றிப் பிறகு இதன் சிறப்பின் காரணமாக ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறுவார்கள்.

சானெட் பதினான்கு வரிகள் கொண்டது. இந்த யாப்பின் அமைப்பிற்குத் தனிப்பட்ட இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. பாரதியார் எழுதியிருக்கும் இப்பாடலில் பதினான்கு வரிகள் உள்ளன. சந்திரிகை என்ற பாடலில் பதினான்கு வரிகளோடு தனிச் சொற்கள் இரண்டிடங்களில் வருகின்றன. வரிக் கணக்கைத் தவிர வேறு வகையில் மேல்நாட்டு இலக்கணம் தமிழ்ப் பாடலில் இல்லை. ஏனெனில் அந்நாட்டு யாப்பு முறையும் தமிழ் யாப்பு முறையும் வேறானவை.

ஆங்கிலத்திலே ஷேக்ஸ்பியர் முதலிய பல சிறந்த கவிஞர்கள் அமரத்துவம் பெற்ற சிறந்த சானெட்டுக்களை இயற்றியுள்ளார்கள். அவற்றைப் படித்துப் பாரதியார் பெரிதும் மகிழ்ந்திருக்க வேண்டும். அதனாலே இந்த யாப்பு முறையைத் தமிழில் புகுத்த அவர் விரும்பியிருக்கிறார்.

சந்திரிகை

25 செப்டம்பர் 1908 பராபவ புரட்டாசி 10

யாணர்க் குறையுளா மிந்து நாடதனிற்
காணற் கினிய காட்சிகள் பலவினு
மாணப் பெரிய வனப்பமைந் தின்கவி
வாணர்க்கமுதா வயங்கிடும் பொருளி தென்
றாணப் புலவோ னுரைத்துளன் முன்னுள்
அஃதுதான் :—
கருமையிற் படர்ந்த வானமாங் கடலிடை
ஒருமையிற் றிகழு மொண்மதித் தீவினின்
றெல்லாத் திசையினு மெழில்பெற வூற்றுஞ்
சொல்லா வினிமைகொள் சோதியென் றேதினன்.
ஓர்முறை
கடற்புற மணன்மிசைத் தனியே கண்ணயர்ந்
திடைப்படு மிரவி லினிதுகண் விழித்துயான்
வானக நோக்கினேன் மற்றதன் மாண்பினை
யூனமா நாவினி லுரைத்தலும் படுமோ?
நினைவறுந் தெய்விகக் கனவிடைக் குளித்தேன்
வாழிமதி!

—சி. சுப்பிரமணிய பாரதி

யாணர்-அழகு. ஆணப் புலவன்-ஆங்கிலப் புலவன்.

குறிப்பு:— இதுவரை வந்துள்ள பாடல்களைப் படிக்கும் போது கவிதைத் தொழிலிலே பாரதியாரின் ஆரம்ப நிலை மனத்திலே தெளிவாகப் புலனாகும். இப் பாடல்களில் புகுந்துள்ள சில சொற்களுக்குப் பொருள் எழுத வேண்டியது அவசியமென்று கருதிப் பாரதியாரே பாடலின்கீழ் அவற்றை விளக்கியிருக்கிறார். இவ்வாறு தொடங்கிய கவிதை ஒன்றிரண்டு ஆண்டுகளிலே ஆச்சரியமான முறையிலே முழு மலர்ச்சி பெறுகின்றது. அவ்வாறு மலரும் பாரதியாரின் கவிதா சக்தி இப்பாடல்களிலும் மின்னலிடுவதைக் கண்டு சுவைக்கலாம்.

ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலஞ்சென்றதைப்பற்றிய

இரங்கற் பாக்கள்

26 நவம்பர் 1906 பராபவ கார்த்திகை 11

பார்க்க : பாரதி நூல்கள்

யாரையும் வணங்கிப் பிழைக்கும் சுபாவம் பாரதியாருக்கு இல்லை. ஆனால் அவர் சங்கீதத்திற்குத் தலை தாழ்ந்து வந்ததை இப்பாடலில் அறியலாம்.

"மன்னரையும் பொய்ஞ் ஞான மதக்குறவர்
தங்களையும் வணங்கலாதேன்
தன்னனைய புகழுடையாய், நினைக்கண்ட
பொழுதுதலை தாழ்த்து வந்தேன்;
உன்னருமைச் சொற்களையே தெய்விகமா
மெனக் கருதி வந்தேன்"

என அவர் சுப்பராம தீக்ஷிதரைக் குறித்துப் பாடுவதிலிருந்து அவருக்கு இசையிலே உள்ள ஆர்வம் வெளியாகின்றது.

ஸங்கீத விஷயம், பாட்டு முதலிய அவர் எழுதிய கட்டுரைகளிலிருந்தும் இசை சம்பந்தமான அவருடைய கருத்துக்களை அறியலாம்.

சுப்பராம தீக்ஷிதர் அவர்களைப்பற்றிப் பின்வரும் குறிப்பு சுதேசமித்திரனில் காணப்பட்டது. "சங்கீத வித்தையிலே தேவாம்சம் பெற்று விளங்கிய முத்து சாமி தீக்ஷிதரின் சகோதரரான பாலசாமி தீக்ஷிதரின் குமாரர். இராகமாலிகை, தான வர்ணம் முதலிய சிறந்த உருப்படிகள் செய்திருக்கிறார். ஆந்திர பாஷையில் மஹா தேர்ச்சி. சங்கீதத்திலும் அப்படியே. சங்கீத சம்பிரதாய பிரதர்சினி என்ற நூல் வெளியிட்டார். காலமாகும்போது அவருக்கு 68 வயது.

ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் எட்டயபுரம் சமஸ்தான் வித்வானாக இருந்தார். இவரை முத்துசாமி தீக்ஷிதரின் புதல்வர் என்பது தவறு. முத்துசாமி தீக்ஷிதருக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை."

சென்னை வாசிகளின் நிதானமும் விபின சந்திரபாலரின் சந்நிதானமும்

18 மே 1907 பிலவங்க வைகாசி 5

சென்னை வாசிகளின் நிதானமெல்லாம் சந்திர பாலரின் சந்நிதானத்திலே பறந்து காற்றுப்போய் விட்டது. நேற்று மாலை விக்டோரியா நகர மண்டபத்தில் லாலா லஜபதிராய் தீபாந்தரத்திற்கேற்றி அனுப்பப்பட்ட விஷயமாக மஹாஜன சபையாரால் கூட்டப்பெற்ற பெருங் கூட்டத்தில் நடந்த செய்திகளை நேரே வந்து கண்டவர்களெல்லாம் இனி மயிலாப்பூர் வக்கீல்கள் ஜனத் தலைவர்களென்று மூச்சுவிடக்கூட இடமில்லையென்பதை நன்றாக அறிந்திருப்பார்கள்.

நேற்று மாலை மீட்டிங்கிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பின் வருவனவாகும்:—

1. இதுவரை பழைய கட்சிக்காரருக்கு முக்கிய தர்மமாக இருந்த விண்ணப்ப முறைமையை நேற்று அவர்கள் தாமாகவே பேதமையாகுமென்று நிறுத்தி விட்டனர்.

2. அப்படி அவர்கள் விண்ணப்பம் செய்ய விரும்பாதபோதிலும் வெறுமே இந்தியா மந்திரிக்கு

மீட்டிங்கைப்பற்றித் தகவல் கொடுக்க வேண்டுமென்று மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யர் சொன்னதைக் கூட ஜனங்கள் அங்கீகரிக்காமல் கோபமடைந்தார்கள்.

3. மயிலாப்பூர் வக்கீல்கள் தாம் ஜனத் தலைவர்கள் என்று கனவு கண்டு கொண்டிருந்தது பொய்க் கனவென்பதை அறிந்து கொண்டார்கள்.

4. ஸர்க்காரிலே ஸர் என்றும் உர் என்றும் பட்டம் பெற்றுத் திரிந்தவர்களே யெல்லாம் ஜனங்கள் மதிப்புடன் நடத்திய காலம் போய் இப்போது அவர்களைப் பகிரங்க ஸ்தானங்களிலே பேசவொட்டாத நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள்.

5. இங்கிலீஷிலே பேசக் கூடாது. தமிழ் நாட்டிலே ஜனத் தலைவர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு வருவோர் பொது விஷயங்களைப் பற்றித் தமிழிலேயே பேசவேண்டுமென்று ஜனங்கள் வற்புறுத்தினார்கள்.

6. ஸர். வி. சி. தேசிகாச்சாரிக்கும் மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யருக்கும் ஜனங்கள் சரியான பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். சென்னை மாணாக்கர்களிலே பெரும்பாலார் வெளியூருக்குச் சென்றிருந்த படியால் பழைய கட்சியார் இம்மட்டோடு பிழைத்தார்கள். ஒரு வாரத்திற்குமுன் இந்தப் பொதுக் கூட்டம் நடந்திருக்குமானால் நமது மயிலாப்பூர் நண்பர்களின் ஸ்திதி இன்னும் வேடிக்கையாக முடிந்திருக்கும். லாலா லஜபதிராய் தீபாந்திரத்துக்குப் போவதைப் பற்றி ஜனங்கள் மனது கொதித்துக் கொண்டிருக்கும்போதுகூட இவர்கள் சர்க்காராரை ஸந்தோஷப்படுத்தி வைத்து அர்ச்சனை செய்வதுதான் தமது பாலதையென்று நினைப்பது விநோதமாயிருக்கிறது.

இவர்கள் என்ன நினைத்தாலும் சரியே. இனி அதைப் பகிரங்கமாக வெளியிட்டுக் கூறத் துணிய மாட்டார்கள் என்று நேற்றே தெளிவாய்விட்டது.

சி. சுப்ரமணிய பாரதி

குறிப்பு:— 1. விபின சந்திரபாலர் வங்காளத்து தேசிய வீரர்களில் ஒருவர். சிறந்த பேச்சாளர். இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரையில் அந்தக் காலத்தில் அவரது பேச்சு ஒலித்தது. மக்கள் அதைக் கேட்டுப் புது உணர்ச்சி பெற்றனர். 1907-ல் அவர் சென்னையில் பேசிய பேச்சு மக்கள் மனத்தில் தேசிய நெருப்பை ஒங்கி வளர்த்தது. அதனால் சென்னை மாகாணத்தை விட்டு வெளியேறும்படி சர்க்கார் அவரை வலுக்கட்டாயப் படுத்தியது.

அவருடைய பேச்சும், நியூஇந்தியா, வந்தேமாதரம் என்ற பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் இளைஞர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. இதை பாரதியார் இக்கட்டுரையில் குறிப்பாக எடுத்துக் கூறுகிறார்.

2. பஞ்சாப்சிங்கம் என்று போற்றப்பட்ட லாலா லஜபதிராய் 1907 மே 9ஆந் தேதி பர்மாவுக்கு நாடு கடத்தப் பட்டார். ஸர்தார் அஜித் சிங்கும் அவரோடு நாடு கடத்தப் பட்டவர். லாலா லஜபதியை நாடு கடத்தியதை ஒட்டியே விக்டோரியா நகர மண்டபத்தில் கூட்டம் கூடியிருக்கிறது.

லாஜபத்ராய் துதி, லாஜபத்ராய் பிரலாபம் என்று பாரதியார் பாடியுள்ள இரண்டு அழகிய கவிதைகளும் இந்தத் துதசப் பிரஷ்டத்தைக் குறித்தே எழுந்தவை.

1907 டிசம்பர் 27ஆந் தேதி தொடங்கிய சூரத் காங்கிரசுக்குச் சற்று முன்பே லஜபதிராய் விடுதலையடைந்து நாடு திரும்பினார். அவரை அந்தக் காங்கிரசுக்குத் தலைவராக்க வேண்டுமென்று தேசியவாதிகள் விரும்பினர். ஆனால் அடங்கிய இயல்புள்ள லஜபதிராய் அந்தப் பெருமையை ஏற்றுக்கொள்ள இசையவில்லை. மிதவாதிகளும் தேசியவாதிகளும் மாறுபட்டு நின்ற சமயத்தில் தலைமை வகிக்க அவர் விரும்பவில்லை.

லஜபதி விடுதலையாகி யிருந்தாலும் இரகசியப் போலீஸின் (சி. ஐ. டி.) கண்காணிப்பிலேயே இருந்து

வந்தார். அதன் தொந்தரவு பொறுக்க முடியாமல் அவர் வெளி நாடுகளிலேயே இருக்க விரும்பினர். முதல் உலக யுத்தத்தின்போது அவர் எத்தனையோ இன்னல்களுக்கிடையில் மனம் சோராமல் அமெரிக்காவில் காலம் தள்ளினர். இந்தியாவுக்காக அவ்விடத்திலும் சேவை செய்வதையே அவர் நோக்கமாகக் கொண்டார். கடைசியில் பிரிட்டிஷ் ஆட்சியாளர் அனுமதி தந்ததன் பிறகு லஜபதி 1920 பிப்ரவரி 20-ஆம் தேதி இந்தியா திரும்பினர். அதே ஆண்டு செப்டம்பரில் கல்கத்தாவில் நடந்த விசேஷ காங்கிரசுக்கு அவர் தலைமை வகித்தார்.

லஜபதிக்குக் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் அவ்வளவு பற்றுதல் இல்லை. இருந்தாலும் அடிகள் போர் தொடங்கியவுடன் அதில் முக்கிய பங்கு கொள்ள அவர் தயங்கியதில்லை. இப் போரின் காரணமாக அவருக்கு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை கிடைத்தது. சிறையிலே அவருக்குக் காச நோய் பற்றியது.

சைமன் கமிஷன் 1927-ல் ஏற்பட்டதும், அதைப் பகிஷ்கரிப்பதெனக் காங்கிரசு முடிவு செய்தது. 1928 அக்டோபர் 30-ஆந் தேதி இக் கமிஷன் லாகூருக்கு வந்த போது அதை வரவேற்கப் பொதுமக்கள் யாருமே இல்லை. "சைமனே திரும்பிப் போ" என்று முழங்கவும், கறுப்புக் கொடி பிடிக்கவுமே அவர்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டார்கள். பஞ்சாப் சிங்கம் காந்தியடிகளின் சாந்த மொழியைக் கண்டப் பிடித்து அமைதியாய்க் கூட்டத்தின் முன்னணியிலே காட்சி அளித்தார். போலீஸார் தடிகொண்டு தாக்கத் தொடங்கினர். அந்தச் சிங்கத்தையும் அடித்தார்கள். போலீஸ் சூபரின்டென்டெண்டு ஸ்காட் இரண்டு அடி அடித்தான். மேலும் எங்கிருந்தோ இரண்டடி; ஒன்று நெஞ்சின் மேலே. அந்த அடிகளின் காரணமாகவே அவர் அகால மரணமடைந்தார். போலீஸ் தடிகொண்டு தாக்கிய போது அவர் வீராவேசத்துடன், "தேசத் தொண்டர்களை அடிக்கும் ஒவ்வொரு அடியும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சவப் பெட்டியை மூடுவதற்கு அடிக்கப் படும் ஓர் ஆணியாகும்" என்று முழங்கினர்.

திருவல்லிக்கேணி சுதேசிய கிருஹியம்

17 டிசம்பர் 1907 பிலவங்க மார்கழி 2

சூரத்தில் நடக்கிற காங்கிரசுக்கு நாங்கள் எல்லோரும் இவ்விடமிருந்து நாளது டிசம்பர் மாதம் 20-ஆந் தேதி வெள்ளிக் கிழமை மாலையில் ரிசர்வ் வண்டிகள் மூலமாய்ச் செல்லுகிறபடியால் இந்த ராஜதானியிலிருந்து காங்கிரசுக்குச் செல்லும் பிரதிநிதி (டெலிகேட்ஸ்)களும் பார்ப்பவர்களும் (விசிட்டர்ஸ்) இது பார்த்தவுடன் அவர்கள் புறப்படும் விவரத்தைத் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு 87-வது நம்பர் சுதேசிய கிருஹத்தாருக்குத் தெரிவிக்கும்படிக்கும் நாளது மாதம் 20-ஆம் தேதி காலையில் மேற்படி கிருஹத்திற்கு வந்து சேரும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சி. சுப்பிரமணிய பாரதி

காங்கிரஸ் நாஷனலிஸ்டு டெலிகேட்டுகளுக்கு நோட்டீஸ்

19 டிசம்பர் 1907 பிலவங்க மார்கழி 4

இதற்கு முந்திய நோட்டீஸ் 17-ஆந் தேதி மித்திரனில் போட்டதிலிருந்து அனேக நாஷனலிஸ்டு டெலிகேட்டுகள் சென்னைக்கு சனிக்கிழமையன்று வந்து அன்று சாயந்திரமே சூரத்துக்குப் புறப்பட்டுப் போகக்கூடுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் இந்த மாகாணத்திலிருந்து போகும் நாஷனலிஸ்டு டெலிகேட்டுகளுக்கு நாம் தெரிவிக்கிறதென்னவென்றால் நாம் காங்கிரசுக்கு இரண்டு பிரிவாகப் போகவேண்டியிருக்கிறது. அதாவது :நாளை 20-ஆம் தேதி சாயந்திரம் போகிறவர்கள் ஒரு பிரிவு, 21-ஆம் தேதி சாயந்திரம் போகிறவர்கள் மற்றொரு பிரிவு. டெலிகேட்டுகளோ விஸிட்டர்களோ தங்களுடைய விருப்பத்தை 87, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை சுதேசமித்திரன் ஹத்திற்குத் தெரிவித்தால் எந்தப் பிரிவோரும் போகலாம்.

பி. சுப்பிரமணிய பாரதி

சுதேசமித்திரன்.

குறிப்பு:— இந்த இரண்டு அறிக்கைகளிலிருந்து சூரத் காங்கிரசுக்குத் தமிழ்நாட்டு டெலிகேட்டுகளை அழைத்துச் செல்வதில் பாரதியார் உற்சாகமாக முனைந்து நின்றிருக்கிறார்

என அறியலாம். தேச விடுதலைப் போரிலே சூரத் காங்கிரஸ் குறிப்பிடத்தக்க ஒரு கட்டம். காங்கிரசிற்குள்ளேயே மித வாதிகள் என்றும் தேசீய வாதிகள் என்றும் இரண்டு கட்சிக் காரர்கள் தோன்றினர். மிதவாதிகள் பழைய விண்ணப்ப முறை, வேண்டுகோள் முறையையே பின்பற்ற விரும்பினர் கள். இவர்களைத்தான் பாரதியார் பழைய கட்சியார் என்று அழைக்கிறார். இவர்களுக்குக் கோகலே போன்றோர் தலைவர் கள். தேசீயவாதிகள் தீவிரமான கொள்கைகளை அனுசரிக்க வேண்டுமென்று விரும்பியவர்கள். இவர்களுக்கு லோகமான்ய பாலகங்காதர திலகர் தலைவர். 1896 முதற்கொண்டே அவர் காங்கிரசில் கண்டிப்பான முறைகளைப் புகுத்த முயன்று வந்தார். 1907-ல் நடந்த கல்கத்தா காங்கிரசிலேயே மிதவாதி களுக்கும் தேசீயவாதிகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் வெளிப்படையாகத் தோன்றலாயின. ஆனால் அதில் தலைமை வகித்த தாதா பாய் நௌரோஜியின் திறமையால் அவை ஒருவாறு சமாளிக்கப்பட்டன. 1907-ல் இவ்வேறுபாடுகள் இன்னும் வலுவடையவே நாகபுரியில் நடைபெறவேண்டிய காங்கிரசை மிதவாதிகள் சூரத்திற்கு மாறினர். சூரத்திற்கு மாற்றுவதால் தங்கள் விருப்பம்போல் காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாம் என்று மிதவாதிகள் கருதியிருப்ப தாகத் தேசீயவாதிகள் அவர்கள்மேல் குற்றம் சாட்டினர்.

ஆனால் 1907 டிசம்பர் 27-ந் தேதி தொடங்கிய சூரத் காங்கிரசில் மிதவாதிகளின் விருப்பம்போல் எல்லாம் நடை பெறவில்லை. ராஷ்பிகாரிகோஷைத் தலைவராகப் பிரேரேபணை செய்தது முதல் காங்கிரசில் ஒரே குழப்பம்தான். அதனால் மேற்கொண்டு அன்று ஒன்றும் செய்ய முடியாமல் அடுத்த நாள்வரை நடவடிக்கைகளைத் தள்ளி வைத்தார்கள். அடுத்த நாள் நிலைமை இன்னும் மோசமாகி விட்டது. தலைவர் அனுமதி கொடுக்காவிட்டாலும் தமக்குப் பேச உரிமையுண் டென்று திலகர் மேடைமீதேறினார். கூச்சலும் குழப்பமும் ஒங்கின. மிதவாதிகளின் தலைவர்களில் ஒருவரான சுரேந்திரநாத் பானர்ஜியை நோக்கி யாரோ செருப்பை வீசினார்கள், நாற்காலிகள் தாராளமாகப் பறந்தன. தடி யெடுத்தார்கள் சிலர். இவ்வாறு அன்றும் காங்கிரசு கலகத்தில் முடிவாயிற்று.

தேசபக்தி உணர்ச்சி மிருந்த பாரதியாரின் உள்ளப் போக்கை இந்தக் காங்கிரசு மிகவும் மாறுதலடையச் செய் திருக்க வேண்டும். திலகரின் நாரிசனமும், அவருடைய

வீரக்கனலும் நமது கவிஞரை முற்றிலும் கவர்ந்து விட்டன என்று துணிந்து கூறலாம். விபின சந்திர பாலரின் வீரா வேசப் பேச்சுகளும் பாரதியாரை ஒரு தேசிய கவியாக மாற்ற உதவியிருக்கின்றன.

"ஸ்வராஜ்யம் எனது பிறப்புரிமை ; நான் அதைப் பெற்றே தீருவேன்" என்று கர்ஜனை செய்த திலகரிடம் பாரதியாருக்கிருந்த மிகுந்த பக்தியை அவர் இயற்றிய **வாழ்க திலகன் நாமம், லோகமான்ய பால கங்காதர திலகர்** என்ற இரு பாடல்களிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். பின்னைய பாட்டு திரு. எம். வி. ஈஸ்வர ஐயர் 1908-இல் வெளியிட்ட **ஸ்ரீ திலகரின் ஜீவிய சரிதம்** என்ற நூலில் வந்தது.

மேலும், மிதவாதிகளின் கொள்கை பாரதியாருக்குச் சம்மதமில்லை என்பதை **கோக்கலே சாமியார் பாடல், மேத்தர திலகருக்குச் சொல்லுவது, நிதானகட்சியார் சுதேசியத்தைப் பழிந்தல்** முதலிய பாடல்களிலிருந்து தெரியலாம்.

ஸ்வதேச கீதங்கள்

இத்தலைப்புடன் வெளி வந்த நூலே பாரதியாரின் முதல் நூலாகக் கொள்ளலாம். பலரும் எழுதிய தேசபக்திப் பாடல்களைத் தொகுத்து வெளியிட விரும்பி, அது குறித்து, 13-2-1906-இல் சுதேசமித்திரனில் விண்ணப்பம் விடுத்து அநேகமாக ஏமாற்றமடைந்த பாரதியார் தாமே இயற்றிய சிறந்த தேசபக்திப் பாடல்கள் அடங்கிய இந்நூலை 1908–ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிட்டிருக்கிறார். இந்நூலின் முகவுரை பாரதியாரால் 10 ஜனவரி 1908-ல் எழுதப் பெற்றிருக்கிறது. இது பற்றி முதல் விளம்பரம் 21-1-1908-ல் மித்திரனில் வெளி வந்ததிலிருந்து இப் பாடல்களெல்லாம் 1907-லும் அதற்கு முன்பும் எழுதப்பட்டவை என்று தெரியலாம். இந்நூலின் விலை இரண்டணாவாக இருந்தது.

இந்நூலில் இடம் பெற்றிருந்த பாடல்களாவன:—

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. நாட்டு வணக்கம்
4. எங்கள் நாடு
5. நடிப்புச் சுதேசிகள்
6. தொண்டு செய்யும் அடிமை

7. மேத்தா திலகருக்குச் சொல்வது
8. லாஜபத்ராய் துதி
9. லாஜபத்ராய் பிரலாபம்
10. தாதாபாய் நவுரோஜி
11. பூபேந்திர விஜயம்
12. சுதந்திர பெருமை
13. மாஜியின் பிரதிக்ஞை
14. புதுவருஷம்

1907-1908-ல் பாரதியார் எழுதி வெளியிட்ட வேறு நூல்களாவன. "ஸ்ரீ திலகர் 1907-ஆம் வருஷத்தில் புதிய கக்ஷியைத் தழுவிப் பிரசங்கங்கள் செய்ய, அதில் முதல் பிரசங்கத்தைப் புதிய கட்சியின் கோட்பாடுகள் என்ற பெயருடன் நூல்வடிவமாக ஆங்கிலமும் தமிழுமாய் ஒரு அணா விலையில் வெளியிட்டார். ... .சூரத்தில் நடந்த காங்கிரசுக்குப் பாரதியாரும் சென்றிருந்தார். சூரத்தில் காங்கிரஸ் பிளவுபட்டது. பாரதியார் தாம் சென்னையிலிருந்து பிரயாணப்பட்டது முதல் மறுபடியும் சென்னை வந்து சேர்ந்த வரையில் நடந்த விஷயங்களைக் கோவையாகத் தொகுத்து இந்தியா பத்திரிகையில் வெளியிட்டு எங்கள் காங்கிரஸ் யாத்திரை என்று ஒரு புத்தகமாகவும் இரண்டணா விலையில் பிரசுரம் செய்தார். ஒவ்வொன்றும் புதுச்சுவை, புது நடை, புதிய அழகு கொண்டு இலங்கின." (திரு. எஸ். ஜி. இராமநுஜலு நாயுடு-சென்று போன நாட்கள்.)

ஜன்ம பூமி

1909-ல் ஸ்வதேச கீதங்களின் இரண்டாம் பாக மாக ஜன்மபூமி என்ற நூல் வெளியாயிற்று. அதன் முகவுரையிலே பாரதியார் தேசபக்தி என்னும் புதிய மார்க்கத்தால் உள்ளக் கிளர்ச்சி பெற்றுத் தாம் அப்பாடல்களைப் பாடியதாகக் கூறுகிறார். மேலும் அவர் எழுதுவதாவது: "சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன். நான் எதிர்பாராத வண்ணமாக மெய்த் தொண் டர்கள் பலர் 'இம்மலர்கள் நல்லன' என்று பாராட்டி மகிழ்ச்சி யறிவித்தார்கள். மாதாவும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள். இதனால் துணிவு மிகுதியுறப் பெற்றேனாகி, மறுபடியும் தாயின் பத மலர்க்குச் சில புதிய மலர்கள் கொணர்ந்திருக் கிறேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சி யளிக்குமென்றே நினைக்கின்றேன். 'குழ லினிது யாழினி தென்பர் தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்' என்பது வேத மாதலின்."

இந்நூலில் இடம் பெற்றிருந்த பாடல் களாவன :—

1. ஜாதிய கீதம் (வந்தே மாதர கீதத்தின் முதல் மொழிபெயர்ப்பு.)
2. ஜய பாரத!
3. பாரதேவியின் திருத்தசாங்கம்

4. மாதாவின் துவஜம்
5. எங்கள் தாய்
6. தொண்டு செய்யும் அடிமை
7. நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்
8. ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது
9. தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி
10. பாரத தேவியின் அடிமை
11. அபேதானந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள்.
12. சுதந்திரப் பெருமை
13. சுதந்திர தாகம்
14. சுதந்திரப் பள்ளு
15. சுதந்திர தேவியின் துதி
16. ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்

"என்று தணியுமிந்த சுதந்திர தாகம்" என்று தொடங்கும் ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம், இந்தியா பத்திரிகையில் வெளிவந்தபோது அதுவும் பாரதியார் மீது அரசாங்கம் கோபம் கொள்ளக் காரணமாக இருந்தது என்று ஸ்ரீ வ. ரா. குறிப்பிடுகிறார். (மகாகவிபாரதியார் பக். 33.)

மேலே குறிக்கப்பட்டுள்ள பாடல்களில் சில வற்றிற்கு ஜன்மபூமியில் வேறு தலைப்புக்கள் கொடுக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஏழாம் பாடலுக்கு 'நிதானக் கட்சியார் கூட்டம்' என்பது தலைப்பு.

எட்டாம் பாடலுக்கு கலெக்டர் வின்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல் என்பது தலைப்பு. இத்தலைப்புடன் பின் வரும் குறிப்பும் இப்பாடலுக்கு எழுதப்பட்டுள்ளது.

நந்தன் சரித்திரத்திலே ஆண்டை நந்தனுடைய சிதம்பர வாஞ்சையை மற்றப் பறையர்கள் வந்து

சொல்லக் கேட்டு மஹா கோபங் கொண்டு நந்தனை நோக்கி, "சேரி முற்றுஞ் சிவபக்தி பண்ணும்படி விட்டையாம் அடியிட்டையாம்" என்பது முதலான வார்த்தைகள் கூறிப் பயமுறுத்துகிறன். அதன் குறிப்பைத் தழுவித் திருநெல்வேலி ஜில்லா கலெக்டராகிய வின்ச், ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குக கூறியதாகப் பின்வரும் கண்ணிகள் எழுதப்பட்டுள்ளன.

ஒன்பதாவது பாடலுக்கு, கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை சொல்லிய மறுமொழி என்பது பழைய தலைப்பு.

ஞான ரதம்

தமிழுக்கே புதிதான ஓர் அழகிய உரைநடை யில் மிக அற்புதமாக இந்நூலைப் பாரதியார் 1910 ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கிறார். இதற்கு எழுதிய முகவுரையில் புதுச்சேரி, ஸௌம்ய, ரை, 15 (1910 ஜனவரி 28) என்று தேதி குறிக்கப்பட்டுள்ளது. இந் நூலைப் பற்றி திரு. எஸ். ஜி. இராமாஜலு நாயுடு கொண்டுள்ள கருத்துக்கள் என்ற கட்டுரையில் கூறுவ தாவது: "ஞானரதம் என்ற தலைப் பெயருடன் தமிழ் நாடு என்றும் கண்டிராத துள்ளிக் குதிக்கும் ஒரு புதிய கந்தர்வ நடையில் இயற்கையின் அழகுகளைப் பற்றியும், தேசச் செய்திகளைப் பற்றியும், நெருங்கிய நண்பர்களின் மன மாறுபாடுகளைப் பற்றியும் அற் புதமான கற்பனையுடன் வாரந்தோறும் இந்தியாவில் எழுதி வந்தார். அவற்றை ஒருங்கு சேர்த்து ஞானரதம் என்று புத்தகமாக வெளியிட்டார். அதற்கு இணையான நூல் தமிழ் மொழியில் இல்லை. சொற் சுவை பொருட் சுவை நிரம்பியது. பாச்சுவை பரவிய நடையால் அமைந்தது."

இந்நூல் சென்னையிலே தொடங்கப் பெற்றிருக் கிறது. திருவல்லிக்கேணியிலே வீரராகவ முதலி தெருவில் ஒரு மாலை நேரத்தில் பாரதியார் சிரம பரிகாரத்தின் பொருட்டு ஒரு மஞ்சத்தில் படுத் திருப்பதாக நூலின் பீடிகை தொடங்குகிறது. ஞான

ரதத்திலேறிப் பல உலகங்களுக்குப் பறந்து சென்ற அவர் தர்மலோகத்திலிருந்து தவறி விழுந்து மூர்ச்சை போட்டுப் பழைய திருவல்லிக்கேணி இல்லத்திலேயே கண் விழித்தாக நூல் முடிகிறது.

மாதா வாசகம்

1910 நவம்பரில் பாரதியார் பாடல்களின் மற்றொரு தொகுப்பு நூல் வெளியாயிற்று. அதன் பெயர் மாதா வாசகம் என்றும், அது பாரதியாரின் மூன்றாவது கீத நூல் என்றும் திரு. எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு குறிப்பிடுகிறார்.

இந்நூலில் இடம் பெற்றிருந்த சில பாடல்களானவன:

1. மகாசக்தி
2. மகா சக்திக்கு விண்ணப்பம்
3. காளிக்கு ஸமர்ப்பணம்
4. மஹாசக்திக்கு ஸமர்ப்பணம்
5. நான்
6. மனத்திற்குக் கட்டளை
7. தெளிவு
8. ஸ்வசரிதை
9. ஜாதீயகீதம் (புதிய மொழிபெயர்ப்பு)
10. பாரதமாதா திருப்பள்ளி யெழுச்சி
11. கிருஷ்ணன் மீது ஸ்துதி

ஸ்வ சரிதை என்பது தனி நூலாகவும் வெளியாயிற்று என்று தெரிகிறது. அதன் முகவுரையிலே பாரதியார் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்:—

"இச் சிறிய செய்யுள் நூல் விஞ்ஞதார்த்தமாக எழுதப்பட்டது. ஒரு சில பாட்டுக்கள் இன்பமளிக் கக் கூடியனவாஞலும் பதர் மிகுதியாகக் கலந்திருக் கக்கூடும். இதன் இயல்பு தற்கூற்றெனப்படும். அதா வது கதாநாயகன் தன் சரிதையைத் தான் நேரா கவே சொல்லும் நடை."

இது விஞ்ஞதார்த்தமாக எழுதிய பாடலா அல் லது உண்மையான வாழ்க்கை நிகழ்ச்சியை வெளி யிடுகின்றதா என்பதை ஆராயவேண்டும்.

" என்னை யீன்றெனக் கைந்து பிராயத்தில்
ஏங்கவிட்டு விண்ணெய்திய தாய்"

என்ற வரிகளும்,

" நெல்லை யூர்சென்றவ் வூணர் கலைத்திறன்
நேருமாறெனை எந்தை பணித்தனன்"

என்ற வரிகளும் உண்மையான வாழ்க்கைச் சம்பவங் களைக் கூறுகின்றன.

ஆங்கிலக் கல்வியின் மேலும் பால்ய விவாகத் தின் மேலும் பாரதியாருக்கிருந்த வெறுப்பினையும் இப் பாடல்கள் உண்மையாக எடுத்துரைக்கின்றன. ஆனல் பாரதியாருக்கு அவருடைய பதினேந்தாம் வயதில் கல்யாணமாயிற்றென்று அவருடைய சரித் திரமெழுதியோர் கூறுகின்றனர். ஆனல்,

" ஈங்கோர் கன் னியைப் பன்னிரண்டாண்டினுள்
எந்தைவந்து மணம் புரிவித்தனன்"

என்று ஸ்வ சரிதை கூறுகின்றது.

இந்நூலையும் ஆறில் ஒரு பங்கு என்ற கதையை யும் அரசாங்கம் பறிமுதல் செய்தது. அதுபற்றி 1912 அக்டோபரில் பாரதியார் இந்து பத்திரிகைக்கு ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

To

The Editer of 'The Hindu'

Sir,

I appeal to the people of India—in whose name the Government of India is carried on—against the injustice of the said Government in proscribing my two innocuous Tamil booklets Kanavu (Dream), a poem, anb Ariloru pangu (one-sixth), a short story—obviously on the presumption that the latter are seditious I hold that those who have reported to the Government that my booklets contain expressions which may not be permitted by its law are ignorant persons. I ask for a re-examination of the contents of these booklets by competent persons. I have already approached the Government of Madras on this subject both by means of private communication and writings in the Press. But, so far, my efforts have been unavailing. I make this further appeal to the Indian people and demand justice to my booklets at their hands, not in my own interests so much—for these booklets mean almost nothing to me from the points of view of money and fame—as in the interests of what little of freedom of the pen is left to us in British India. If you proscribe love poems and social reform stories on the ground that thay issue from the pen of a suspected person, you greatly exceed your limits I pray that the public Press should take up this question.

8-10-1912 SUBRAMANIA BHARATI

பாஞ்சாலி சபதம்

1912-ல் பாஞ்சாலி சபதம் முதற் பாகம் புதுச் சேரியிலுள்ள வித்யாவிலாஸ் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இந்நூலின் முகவுரையில் காணப்படும் கருத்துக்கள் தமிழில் புதிய இலக்கியம் எவ்வாறு உருவாக வேண்டும் என்று பாரதியார் விரும்பினார் என்பதை நன்கு காட்டுகின்றன. "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக் குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்தல் வேண்டும்."

"காரியம் மிகப் பெரிது; எனது திறமை சிறிது. ஆகையால், இதனை எழுதி வெளியிடுகின்றேன். பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழிகாட்டியாக."

திறமை சிறிது என்று அவர் அடக்கத்தோடு கூறிக்கொண்டாலும் எடுத்த காரியத்தை அற்புதமாக, ஓர் அம்சத்திலும் குறைவு நேரிடாதபடி வெற்றியோடு செய்து முடித்திருக்கிறார்.

இந்நூலைப்பற்றி திரு எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு கூறுவதாவது: "அதன் பின்னர் பாஞ்சாலி சபதம் என்ற அரிய நூலை வெளியிட்டார். அதிலுள்ள ரஸத்தை என்னென்று புகழ்வோம்! அதற்கு அதுவே நிகர். அதை முதற்பாகமாகத்தான் வெளியிட்டார். இரண்டாம் பாகம் பார்க்கத் தமிழ் நாட்டிற்குப் பாக்கியமில்லை."

1921-ஆம் ஆண்டுவரை இந்நூலின் இரண்டாம் பாகம் வெளியாகவில்லை என்று அவர் கூறுவதிலிருந்து தெரிகிறது. இப்பொழுது பாஞ்சாலி சபதம் முழுவதும் இரண்டு பாகங்களாக நமக்குக் கிடைத்துள்ளது.

மாதா மணி வாசகம்

1914-இல் இப்பெயருடன் தென்னப்பிரிக்காவில் பாரதியாரின் நூல் ஒன்று வெளியாயிற்று என்று பாரதி நூல்கள் முதல் தொகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்நூலில் அடியிற்கண்ட பாடல்கள் வந்துள்ளன:—

1. சரஸ்வதி தேவியின் புகழ்
2. ஸூர்ய தர்சனம்
3. வெண்ணிலா
4. ஹே காளி!
5. மகா காளியின் புகழ்
6. மகா சக்தி பஞ்சகம்
7. மகா சக்தி வாழ்த்து
8. வெற்றி
9. அச்சமில்லை
10. சங்கு
11. அறிவே தெய்வம்
12. பரசிவ வெள்ளம்

எதிர் ஜாமீன்

அல்லது

மாப்பிள்ளை விலை

---

15 ஜூலை 1915 நவ ரூபாய் 22

இது பாரதி நூல்கள், மூன்றும் தொகுதியில் வந்துள்ளது.

ஆனால் அநேகமாகப் பாதிக் கட்டுரையாகிய பின் பாகம் அதில் இல்லை. ஆதலால் அப்பகுதியைத் தருவதோடு தொடர்ச்சி எளிதில் அறிந்துகொள்ளும் பொருட்டு முன் பகுதியின் சுருக்கத்தையும் இங்கு தருகிறோம்.

முன் பகுதிச் சுருக்கம்: நம் நாட்டிலே வறுமை அதிகம். இந்த நிலையிலே நமக்குள்ளே பலர் பல விதமான இழிந்த காரியங்கள் செய்வது வியப்பில்லை. பிராமணருக்குள் விவாக காலங்களிலே எதிர் ஜாமீன் கேட்கும் பழக்கம் இருந்து வருகிறது. மாப்பிள்ளைகளுக்கு விலைத் தரங்கள் போட்டு இத்தனை ரூபாய் கிரயம் என்று முடிவு செய்து விவாகம் நடத்தும் வழக்கம் மானமுள்ள நாடுகளிலே இல்லை.

மாப்பிள்ளைகள் உயர்ந்த கிரயம் கொடுத்தால் ஒழிய அகப்படுவதில்லை. நாலைந்து பெண்களைப்

பெற்றுவிட்டால் ஏழைகள் என்ன செய்வார்? திரு நெல்வேலி ஜில்லாவிலே ஒரு கிராமத்திலே ஒரு பெண்ணுக்கு விவாகம் நடந்தபோது அவளுடைய பெற்றோர் மாப்பிள்ளைக்குப் பணம் கொடுத்தார் கள். பிறகு ருதுசாந்தியின்போது அந்த மாப் பிள்ளை, "ஐந்நூறு ரூபாய் கொடுத்தால்தான் ருது சாந்தி செய்து கொள்ளுவேன். இல்லாவிட்டால் பெண் உங்கள் வீட்டோடே இருக்கட்டும்" என்று சொல்லி ஐந்நூறு ரூபாய் தண்டம் வாங்கிக்கொண் டான்.

வெளியாகாத பருதி:—

இதுபோலவே சீமந்தத்துக்கும் கிரயம் வாங்கிக் கொண்டான். பிறகு அந்தப் பெண்ணை விலக்கி வைத்துவிட்டு வேறொரு பெண்ணை விவாகம் செய்துகொண்டு புது மாமனாரிடத்திலும் முன்னைப் போலவே 'பல வருஷங்கள்' செய்து வருகிறான். பணம் கொடுக்க வழியில்லாத குடும்பத்தாரும் அவர்களைப் பார்த்துப் பரிதவிக்கும் சிலரும், இந்த விஷயத்தில் ஏதேனும் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று விரும்புகிறார்கள். கலியாணமாகாமல் காலேஜிகளில் படிக்கும் பிரமசாரிப் பிள்ளைகள் தமக்குள் சபை கூடி இனிமேல் மாமனாரிடம் தண்டம் வாங்குவ தில்லை என்று பிரதிக்ஞை செய்துகொள்ள வேண்டு மென்று சிலர் சொல்லுகிறார்கள். பிள்ளையின் தகப்பனார்தான் பணம் வாங்குகிறான்? அதற்குப் பிள்ளை சபதம் செய்துகொண்டால் என்ன பிரயோ ஜனம்? நியாயத்திலேகூடத் தகப்பன் வார்த்தையை மீறி நடக்கும் பிள்ளைகள் நமது நாட்டிலே பலரில்லை. இதுவெல்லாம் வீண் வார்த்தை. பெண்களுக்கு விடுதலை யுண்டானால் ஒழிய விவாக சம்பந்தமான ஆயிரத்தெட்டு உளறல்கள் நீங்க வழி யில்லை.

சித்தக் கடல்

1 ஜூலை 1915
2 ஜூலை 1915

பாரதியாரின் உள்ளத்தையும் உள்ளத்தில் குமுறிய ஆர்வத்தையும். அவருடைய புதுச்சேரி வாழ்க்கைத் துன்பத்தையும் ஒரு கூணம் இங்கே காண்கிறோம். பராசக்தியிடம் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியையும் இதில் உணரலாம்.

நெல்லையப்பருக்குக் கடிதம்

19 ஜூலை 1915

ஓம்.

புதுச்சேரி,
19th July 1915.

எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளையைப் பராசக்தி நன்கு காத்திடுக.

தம்பி—மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள், நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன் நினது உள்ளக் கமலத்திலே பேரறிவாகிய உள்—. ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்றே கருதுகிறேன்.

* * *

நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும். வேறு வழியில்லை.

ஹா! உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வட நாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்த பாஷைப் பத்திரிகைகளில் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்துகொள்ள முடியுமாஞல்—தமிழ் நாட்டிற்கு எத்தனை நன்மை யுண்டாகும்; தமிழ், தமிழ், தமிழ்—என்று எப்

போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம்—தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.

* * *

தம்பி—நான் ஏது செய்வேனடா; தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது.

தம்பி—உள்ளமே உலகம்.

ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங் காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ. பற! பற! மேலே, மேலே, மேலே.

* * *

தம்பி—தமிழ்நாடு வாழ்க என்றெழுது. தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ் நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன—கலைகளெல்லாம் பயிற்சிபெற்று வளர்க என்றெழுது. தமிழ் நாட்டில் ஒரே ஜாதிதான் உண்டு. அதன் பெயர் தமிழ் ஜாதி. அது ஆர்ய ஜாதி என்ற குடும்பத்திலே தலைக்குழந்தை என்றெழுது. ஆணும் பெண்ணும்—ஒருயிரில் இரண்டு கலைகள் என்றெழுது.

ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது.

பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தவன் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள் தொழில்கள் என்று கூவு.

தப்பாக வேதம் சொல்பவனைக் காட்டிலும் நஞ்சுகக் கிரைப்பவன் மேற்குலத்தான் என்று கூவு.

வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருகுக. முயற்சிகள் ஓங்குக. ஸங்கீதம், சிற்பம், யந்திரநூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு.

சக்தி, சக்தி, சக்தி என்று பாடு.

தம்பி—நீ வாழ்க.

* * *

உனது கடிதம் கிடைத்தது. குழந்தைக்கு உடம்பு செம்மையில்லாமல் இருந்தபடியால் உடனே 'ஜவாப்' எழுத முடியவில்லை. குழந்தை புதிய உயிர் கொண்டது. இன்று உன் விலாஸத்துக்கு 'நாட்டுப் பாட்டுக்கள்' அனுப்புகிறேன். அவற்றைப் பகுதி பகுதியாக உனது பத்திரிகையிலும் ஞானபானுவிலும் ப்ரசுரம் செய்வித்திடுக. 'புதுமைப் பெண்' என்றொரு பாட்டு அனுப்புகிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக. எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி—உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை? நீ வாழ்க.

உனதன்புள்ள,
பாரதி.

கிச்சடி

காளிதாஸன்

19 ஜனவரி 1916 ராகூஸ்தை 6

சமீபத்திலே, பம்பாயில் கூடிய காங்கிரஸ் சபை, முஸ்லீம் சங்கம் முதலியவற்றில் நடந்த உபந்நியாசங்களை வாசித்துப் பார்த்தேன். பெரும் பாலும் ரஸமாகத்தான் இருந்தது. இவை போன்ற பிரசங்கங்களை யெல்லாம் தமிழில் தெளிவாக மொழி பெயர்த்து அப்போதைக்கப்போது குட்டிப் புத்த கங்கள் போட்டால் நல்லது. இந்த விஷயத்தில் ஸ்ரத்தை யெடுத்தால், தமிழ் நாட்டுக்கும் உப காரம்; அவர்களுக்கும் நல்ல லாபமேற்படும். சபை களிலே இரண்டு விதமுண்டு. சபை முடிந்தவுடனே செய்கை தொடங்குவதற்கு ஆகவேண்டிய விஷயங் களை முடிவு செய்யும் சபை ஒரு வகை. பொதுப் படையாக நியாய நிர்ணயங்கள் செய்து விட்டுக் கலையும் சபை மற்றொரு வகை. முதல் வகுப்பில் சேர்ந்த சபைகளில் மேற்கோள் எடுத்துக் காட்டுதல் குறைவாக இருக்கும். இரண்டாவது வகுப்பு சபை களில், அந்தப் பண்டிதர் இப்படிச் சொன்னார்; இந்தப் பண்டிதர் அப்படி எழுதி யிருக்கிறார் என்று மேற்கோள் வசனங்கள் மிகவும் அதிகமாக நடை பெறும். பம்பாயில் நடந்த சபைகள் பெரும்பாலும் மேற்படி இரண்டு லக்ஷணங்கள் சேர்ந்தவையாதலால்

அங்கே பழையவரும் புதியவருமாகிய இங்கிலீஷ் பண்டிதரின் வசனங்களை அடிக்கடி மேற்கொள் காட்டிப் பேசினார்கள். திருஷ்டாந்தமாக:—

"ஸ்வதந்திரமே மனிதரை ஸ்வதந்திரத்திற்குத் தகுதியாக்குகிறது" (அதாவது நீரிலே இறங்கித் தான் ஒருவன் நீச்சுப் படிக்க முடியும்; இல்லா விட்டால் முடியாது என்பதுபோல).

இந்த வாக்கியம் மகா கீர்த்தியுடன் நெடுங் காலம் இங்கிலாந்தில் முதல் மந்திரியாக இருந்த க்ளாட்ஸ்டன் என்பவர் சொல்லியது. நல்ல ராஜ் யத்தைக் காட்டிலும் ஸ்வராஜ்யம் நல்லது; இது கூறிய பானர்மான் என்பவரும் இங்கிலீஷ் முதல் மந்திரி ஸ்தானம் வகித்தவரேயாம். ஸம்ஸ்கிருதம் முதலிய புராதன பாஷைகள் படித்த வைதிகப் பண்டிதர்களைப் போலவே, நமது தேசத்தில் இங்கி லீஷ் படித்த வித்வான்களும் பெரும்பான்மையாகப் புத்தகப் பழக்கம் அதிகமாகவும் லௌகிகப் பழக்கம் குறைவாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் நாளடைவில் சீர்படுமென்று நம்புகிறேன்.

ஓகோ! இந்த மேற்கோள் சங்கதி எடுத்ததி லிருந்து என்னையும் இன்று அந்தக் குணம் பலமாகப் பிடித்துக் கொண்டது.

லார்ட் ஹால்டேன் என்று ஒரு இங்கிலீஷ் மந்திரி இப்போது பென்ஷன் வாங்கிக் கொண் டிருக்கிறார். இவர் நல்ல மேதாவி. இவர் சொல்லு கிறார்:—

"இந்த யுத்தம் முடிந்தவுடனே ஜனாதிகாரம் வந்து நம் முன்னே நிற்கும் (அதாவது பொது ஜனங்கள் கையிலே அதிகாரம் வந்து தங்கும்). நம் முடைய யஜமான்கள் பொது ஜனங்கள் நம் மீது

அதிகாரம் செலுத்த வருமுன்பாகவே அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு நம்மால் இயன்ற அளவு பாடுபட வேண்டும்.'' பள்ளிக்கூடம் என்ற வார்த்தை எடுத்ததிலிருந்து ஆஸ்திரேலியா தேசத்துப் பெண் பள்ளிக்கூடம் ஒன்றைப் பற்றிய கதை ஞாபகத்துக்கு வருகிறது. அதில் வாசித்துக் கொண்டிருந்த ஒரு ஆஸ்திரேலியப் பெண்ணை இன்ஸ்பெக்டர் வந்து பரீக்ஷை நடத்தியபோது பின்வரும் கேள்வி கேட்டாராம்:—

இந்தியா தேசத்து ஜனங்களின் சாதாரண போஜனம் எது?

அந்தப் பெண் சொல்லிய மறுமொழி:— ''பஞ்சம்.'' வேடிக்கையான கதை.

கல்வி சம்பந்தமாக இன்னுமொரு மேற்கோள்: இன்று கிச்சடியே ''மேற்கோள் கிச்சடி''தானே? மிஸ்டர் ஆர்ச்சர் என்ற ஒரு ஆங்கிலேயர் சில தினங்களில் முன்பு லண்டன் பத்திரிகை யொன்றில் கல்வியைப் பற்றி எழுதிக்கொண்டு வரும்போது, ''இங்கிலாந்திலே இப்போது கல்விக்கு மூலாதாரமாக வசன காவியங்களையும், செய்யுட் காவியங்களையும், வைத்திருப்பது சரியில்லை. ஸயன்ஸ் (இயற்கை நூல்) படிப்புத்தான் மூலாதாரமாக நிற்கவேண்டும்'' என்கிறார்.

இவருடைய கொள்கை பலவித ஆக்ஷேபங்களுக்கிடமானது. ஆனால், தனிப் பள்ளிக்கூடங்கள் எந்த முறைமையை அனுசரித்த போதிலும், ராஜாங்கப் பள்ளிக்கூடத்தார் இவருடைய கொள்கையைத் தழுவியே படிப்பு நடத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். கற்பனையும் அலங்காரமும் எனக்குக்கூட மிகவும் பிரியந்தான். ஆனால், ''நெல் எப்படி விளைகிறது?'' என்பதைக் கற்றுக் கொடுக்

காமல், "அன்மொழித் தொகையாவது யாது?" என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும் போது கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன்மொழித் தொகை சிலரைக் காப்பாற்றும், ஊர் முழுதையும் காப்பாற்றாது. நெல்லுத்தான் ஊர் முழுதையும் காப்பாற்றும். அன்மொழித் தொகையைத் தள்ளி விட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அன்மொழித் தொகையைப் பயிர் செய்து நெல்லை மறந்துவிடுவது சரியான படிப்பில்லை யென்று சொல்லுகிறேன். அவ்வளவுதான்.

ஜப்பான் தொழிற் கல்வி

சக்திதாஸன்

12 பிப்ரவரி 1916 சுதேசமித்திரன் 30

சக்தி வேண்டும்

தெளிந்த அறிவும் இடைவிடாத முயற்சியும் இருந்தால் சக்தியுண்டாகும். தெளிந்த அறிவென்பது இரண்டு வகைப்படும்—ஆத்ம ஞானம் லௌகிக ஞானம் என. ஆத்ம ஞானத்தில் நமது ஜாதி சிறந்தது. லௌகிக ஞானத்தில் நம்மைக் காட்டிலும் வேறு பல தேசத்தார் மேன்மை யடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேசங்களில் ஜப்பான் ஒன்று. புத்தகங்களாலும், பத்திரிகைகளாலும், யாத்திரைகளாலும் நாம் ஜப்பான் விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளுதல் பயன்படும். கூடிய வரை பிள்ளைகளை ஜப்பானுக்கு அனுப்பிப் பலவித மான தொழில்களும் சாஸ்திரங்களும் கற்றுக் கொண்டு வரும்படி செய்வதே பிரதான உபாய மாகும். தொழிற் கல்வியிலும் லௌகிக சாஸ்திரப் பயிற்சியிலும் நாம் மற்ற ஜாதியாருக்கு ஸமான மாக முயலுதல் அவசரத்திலும் அவசரம்.

தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து ஒரு தமிழ் வாலிபர் சில வருஷங்களாக ஜப்பானிலே போய் நூல் நூற்றல், துணி நெய்தல், சாய மேற்றுதல்

முதலிய தொழில்கள் படித்துக் கொண்டிருக்கிறார். இங்கிருந்து புறப்படு முன்பாக அந்தப் பிள்ளை வெகு சாதாரணராக இருந்தார். அங்கே போய் மூன்று, நான்கு வருஷங்கள் வாசம் செய்ததி லிருந்து அவருக்கு ஏற்பட்டிருக்கும் அறிவுப் பயிற்சி, ஊக்கம், தைரியம், ஸ்வஜனபிமானம் முதலிய குணங்கள் வியக்கும்படியாக இருக்கின்றன. திருஷ் டாந்தமாக, சில தினங்களின் முன்பு அவர் இங் குள்ள தமது தமையனுருக்கு ஒரு கடிதம் எழுதியிருந் தார். அந்தக் கடிதம் எனக்கு வாசித்துக் காட்டப் பட்டது. மிகவும் ரஸமாக யிருந்தபடியால் அதன் ஸாராம்சங்களை இந்தப் பத்திரிகை படிப்பவருக்குத் தெரிவிக்கிறேன்.

ஜப்பானில் தொழிற் கல்வி பழகும் ஒரு தமிழ் வாலிபர் தம்முடைய தமையனுருக்கு எழுதிய கடிதத் தின் ஸாராம்சங்கள்:—

அண்ணுவுக்கு நமஸ்காரம்:

சாயத் தொழில் விஷயமாக ஏற்கெனவே கேட்ட பாடங்களை அனுபவத்தில் சோதனை செய்து வரு கிறேம். மிகவும் துரிதமாக வேலை நடந்து வரு கிறது. சாயமருந்துகள், மாதிரித் துணிகள் முதலிய சாமான்களெல்லாம் போதுமான அளவு சேகரஞ் செய்துவிட்டேன். ஆனல் இன்னும் செய்யவேண்டிய காரியம் எவ்வளவோ இருக்கிறது. துணி சம்பந்த மான பரிபூரண ஞானம் ஏற்பட வேண்டுமானல், சாயம், (துணியில்) அச்சடித்தல், இரண்டிலும் இன்னும் பல பல சோதனைகள் செய்து பார்க்க வேண்டும். ராஜாங்க சர்வகலா சங்கத்து விவசாயக் கலாசாலையில் போய்ப் பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழில் படிக்கவேண்டும். டோக்கியோ (ஜப்பான் ராஜதானி) நகரத்திலும், பக்கங்களிலும் உள்ள

தொழிற்சாலைகள் எல்லாம் பார்த்தாய் விட்டது. வெளி நகரங்களுக்கு சீக்கிரத்தில் போய் வருவேன்.

நெசவு சம்பந்தமான பலவகைத் தொழில் களிலே நான் பாரத தேசத்திற்குத் திரும்பி வந்த பிறகு அங்கே என்ன தொழில் தொடங்கலாமென் பதைக் குறித்து இங்கிருந்து எவ்விதமான தீர்மான மும் செய்ய முடியாது. அங்கு வந்த பிறகுதான் பார்க்கவேண்டும். நமது நாட்டு முதலாளிகள் கொடுக்கும் உதவிக்குத் தகுந்தபடிதான் தொழில் செய்ய முடியும்.

ஒரு ஜப்பானிய சாஸ்திரியின் உபதேசம். இந்த விஷயமாக எனது கலாசாலைத் தலைவரிடம் ஆலோசனை செய்தேன். அவர் சொல்லியதென்ன வென்றால்:

"நூற்புத் தொழிலுக்கு நல்ல முதல் போட்டுப் பெரிதாக நடத்தினால்தான் லாபமுண்டாகும். வேலையும் ஸௌகரியமாக நடக்கும். நெசவுத் தொழில் அப்படியில்லை. அதிலே, சரக்கு நயத் துக்குத் தக்கபடி தொழிற்சாலையைப் பெரிதாகவோ சிறிதாகவோ தொடங்கிவிடலாம். இந்தியாவிலே தொழிற் பண்டிதரும் கை தேர்ந்த தொழிலாளி களும் கிடைப்பது அருமையாதலால், ஆரம்பத் திலேயே நீராவி, மின்சாரம் முதலிய சக்திகளைக் கொண்டு வேலை தொடங்குதல் ஸௌகரியப்படாது. சேதமும், உற்பத்திக் குறைவும் அதிகமாக உண்டா கும். விசேஷமாகப் பட்டுத் தறிகள் வைப்போர் இவ்விஷயத்தில் ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.

ஆரம்பத்திலே உயர்ந்த கைத்தறிகள் வைத்து மெல்லிய, சாதாரண, அல்லது கனமான, எந்தமாதிரி

வேண்டுமென்றாலும்—துணிகள் செய்து கொள்ளலாம். ஒரு வருஷத்துப் பழக்கத்திலே தொழிலாளிகளுக்குப் போதுமான தேர்ச்சியுண்டாய்விடும். இரண்டாவது அல்லது மூன்றுவது வருஷத்தில் சக்தி யந்திரம் (பவர்) உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஜப்பானில் வந்து நெசவுத் தொழில் படிக்கும் ஹிந்து வாலிபர்கள் எங்களுடைய ராஜாங்கத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு வருவதுடன் சாதாரணத் தொழிற்சாலை யொன்றில் சேர்ந்து ஒரு வருஷம் வேலை செய்து பழகவேண்டும். அப்போதுதான் தங்களுடைய ஆக்கம், பயன், ஆட்சி இவை நன்றாக மனதில் படியும்.

இங்ஙனம் கை ஜப்பானிய சாஸ்திர நெசவுத் தொழில் விஷயமாக மாத்திரமேயன்றி சாயத் தொழில் சம்பந்தமாகவும் எனக்கு நல்ல போதனைகள் சொன்னார். சாயத்தொழில் சொல்லிக் கொடுக்கும் வகுப்புகளிலே அன்னிய தேசத்துப் பிள்ளைகள் வந்து சேர்தல் இன்னும் சிறிது காலத்திற்குள் சிரமமாகிவிடும். ஆகையால் சீக்கிரத்திலேயே பல தமிழ்ப் பிள்ளைகள் இங்கு வந்து மிகப் பயனுள்ளதாகிய இத் தொழில் பழகிக்கொண்டு போகும்படி செய்ய வேண்டும்.

இத் தொழில்களில் ஏதேனும் ஒரு சாகையிலே மட்டும் விசேஷ பாண்டித்யம் ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்கிறேன். நான் இருக்கும் இடத்திற்கும் பள்ளிக்கூடத்துக்கும் 2½ மைல் தூரம் இருக்கிறது. நடந்துதான் போகிறேன். வண்டியேறுவதில்லை. இடைப்பகல் ஆஹாரம் கையிலேயே கொண்டுபோய் விடுகிறேன். சந்தோஷத்தோடுதான் இருக்கிறேன். என்னைப்பற்றிக் குடும்பத்தாருக்கு எவ்விதமான கவலையும் வேண்டியதில்லை.

பிறந்த நாடு

நமது ஜாதியாருக்கும் தேசத்தாருக்கும் என்னாலே ஆனவரை ஊழியம் செய்ய வேண்டுமென்று விரதம் கொண்டிருக்கிறேன். செட்டுக் குடித்தனம், ஆனால் திருந்திய ஜீவனம் நமது ஜனங்களுக்கு அவசியமென்று நினைக்கிறேன். நல்ல காற்று, நல்ல நீர், சுத்தமான, பயனுடைய ருசியான தகுந்த அளவுள்ள ஆஹாரம், சுத்தமான உடை இவையெல்லாம் திருந்திய ஜீவனத்திற்கு லக்ஷணங்கள். இதற்கெல்லாம் படிப்பு அவசியம்.... ...சோறில்லாமல் சோர்ந்து கிடக்கும் ஜனக் கூட்டத்தாருக்கு தர்மோபதேசங்கள் பண்ணுவதிலே எனக்கு ஸந்தோஷமில்லை. அது பாவமென்பதை நான் அறிவேன். ஆனாலும் என்ன செய்வது? மனதிலிருப்பதைச் சொல்லித்தானே ஆக வேண்டும்? ஜனகோடிகள் படித்தாலொழிய நாகரிகப்படுவதற்கு வேறு வழியில்லை. நமது காங்கிரஸ் சபை விஷயத்தில் எனக்கு அஸ்ஸை கிடையாது. ஆனாலும் அந்த சபையாரிடம் எனக்குச் சிறிது அதிருப்தியுண்டு. அவர்கள் ஒரு சார்பையே கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். முதலாவது ஆஹாரத்திற்கு வழி தேட வேண்டும். அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நியாயந்தான். அது கிடைக்கும்வரை பிழைத்திருக்க வேண்டுமே? உண்டாலன்றே உயிரோடிருக்கலாம்? படிப்பு, கைத்தொழில் இவற்றை காங்கிரஸ் சபையார் போதுமானபடி கவனிப்பதாகத் தோன்றவில்லை. நமது ஜனங்களிலே பெரும்பாலோர் ஏழ்மையிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடப்பதைக் கல்வியாளர் சும்மா பார்த்துக்கொண்டு ஒன்றும் செய்யாமலிருப்பது மடமையிலும் மடமை. கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப்போரும் உண்மையாவே தேசபக்தரே யாவர்.

விக்தோர் ஹியூகோ எள்ற பிரெஞ்ச் நூலரின்

வசனங்கள்

சக்திதாஸன்

24 பிப்ரவரி 1916 ரா.கூ.ஸ.மாசி 12

பார்க்க: பாரதி நூல்கள்—மூன்றும் தொகுதி

பல

காளிதாஸன்

8 மார்ச் 1916 ரா.கூ.ஸ மாசி 25

பல துளி பெருவெள்ளம். பல உயிர் பெருந் தெய்வம். தேசத்தின் மேன்மைக்குப் பலர் பல விதங்களிலே தொழில் செய்து வருவதைக் கண்டு ஸந்தோஷமுண்டாகிறது.

ஸ்ரீமான் காந்தி

நமது தேசத்தார் ஆப்பிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு "ஒப்பந்தக் கூலி"க்காரராகப் போவதை எந்த விதத்திலும் தடுத்து விடவேண்டு மென்று ஸ்ரீ காந்தி பாடுபடுகிறார். "ஒப்பந்தக் கூலி" யென்பது விலையடிமையைத் தவிர வேறொன்று மில்லை. இந்த விஷயம் நமது தேசத்துப் பண்டிதர் களுக்கும், செல்வர்களுக்கும் நெடுங் காலமாகத் தெரியும். ஆனாலும் ஆத்ம சக்திக் குறைவினால்

இதுவரை தடுக்க முடியவில்லை. லார்டு ஹார்டிஞ்ச் வைஸ்ராய் வேலையைவிட்டுப் போகுமுன்பு, இந்த "ஒப்பந்தக் கூலி" கூடாதென்று சட்டஞ் செய்துவிட வேண்டுமென்பதாக ஸ்ரீ காந்தி மன்றாடுகிறார். நமது தேசத்து மானஸ்தரெல்லோரும் இந்த விஷயத்தில் தத்தமக்கு இயன்றவரை முயற்சி செய்யும்படி வேண்டுகிறேன்.

ஸ்ரீமதி மங்களம்மாள்

சென்னைப் பட்டணத்தில் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ சதாசிவய்யருடைய புத்திரியாகிய ஸ்ரீமதி மங்களம்மாள் திருவல்லிக்கேணி ஸம்ஸ்கிருதப் பெண் பள்ளிக்கூடத்திலே சில தினங்களின் முன்பு செய்த உபந்நியாஸத்தில் நம்மவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.

ஹிந்துக்களுடைய நாகரிகத்துக்குத் தலைமைக் களஞ்சியம் ஸம்ஸ்கிருத பாஷையாதலால் நமது நாட்டில் பாண்டித்யம் பெற்று விளங்க வேண்டுமென்ற எண்ணமுடைய எல்லோரும்—பிராமணரும் சூத்திரரும், ஆணும், பெண்ணும்—ஸம்ஸ்கிருத பாஷையில் தேர்ச்சி பெற முயலவேண்டுமென்று ஸ்வாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். ஸ்ரீமதி மங்களம்மாளும் அதே கொள்கையையுடையவ ரென்று புலப்படுகிறது.

பிராம்மணர்களிலே ஸ்திரீகளுக்கு வேதமந்திரம் படிக்க அதிகாரம் கிடையாதென்ற வார்த்தையை ஸ்ரீமதி மங்களம்மாள் ஒப்புக் கொள்ளவில்லை. அந்த வார்த்தை இடைக் காலத்திலேயே ஏற்பட்டது. வேத மந்திரங்களிலேயே பல பெண்களால் எழுதப் பட்டன.

மேலும் விவாகம் செய்யும்போது பெண் ணுடைய இஷ்டத்தை மீறிச் செய்வது அநாகரிக

வழக்கமென்பதை இவர் நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். "பெண்களாகிய நாம் ஆப்பிரிக்கா அடிமைகளில்லை. குடும்பத்து எஜமானிகள்" என்று ஸ்ரீ மங்களம்மாள் சொல்லியதை எங்கள் வீட்டுப் பெண் குழந்தைக்கு வாசித்துக் காட்டினேன். குழந்தைக்கு ஸந்தோஷம் பொறுக்க முடியவில்லை. தனக்குத்தெரிந்த வீடுகளுக்கெல்லாம் போய் இந்த வார்த்தையை எல்லோரிடத்திலும் முழங்கி விட்டு வரவேண்டுமென்று குழந்தை நிர்மானம் செய்திருக்கிறது.

தமிழ்

தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவ வேண்டுமானால், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோரெல்லோரும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை அனுஸரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை. ஐரோப்பிய ஸ்திரீயாகிய மிஸ்ஸஸ் பெஸண்ட் கூடச் சில தினங்களின் முன்பு பெங்களூரில் செய்த பிரசங்கமொன்றிலே தமிழ் பாஷையை மிகவும் வியந்து கூறி, நாமெல்லோரும் தமிழ்ப் பயிற்சியில் தக்கபடி சிரத்தை செலுத்தாமல் இருப்பது பற்றி வருத்தப் பட்டதாகத் தெரிகிறது. இப்படி நம்மைப் பார்த்துப் பிறர் இரக்கப்படும்படியான அவமான நிலை விரைவில் நீங்க வேண்டுமென்று தேவர்களை வணங்குகிறோம்.

ஒலிபரப்பும் இயல்

இந்த விஷயத்தைப் பற்றி ஓங்கோல் என்ற ஊரில் வக்கீல் வேலை பார்க்கும் ஸ்ரீ நாராயண

சாஸ்திரி என்பவர் 'ஹிந்து' பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். ஹிந்து—மகம்மதியருக்கிடையே பரஸ்பர மதிப்பும் அன்பும் அதிகப்படும் படி செய்வதற்கு அவர் சில வழிகள் குறிப்பிடுகிறார்.

அவற்றுள் முக்கியமானவை பின் வருமாறு:—

1. ஹிந்துக்களிலே சிலர் மஹம்மதிய வேத சாஸ்திரங்களைப் படித்து அவற்றிலே தேர்ச்சி பெற வேண்டும்.

2. அங்ஙனமே, மஹம்மதியர்களில் சிலர் ஸம்ஸ்கிருதம் படித்து ஹிந்துக்களுடைய வேத சாஸ்திரங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

3. ஹிந்துக்களுடைய மனத்திலே மஹம்மதியர் நமது தேசத்தார் என்பதும், இஷ்ட தேவதை வேறுக இருப்பதைப் பற்றி அவர்களை மிலேச்சரென்று நினைப்பதுகூடப் பிழையென்பதும் நன்றுக ஞாபகமிருக்க வேண்டும்.

4. மஹம்மதியரும் அங்ஙனமே ஹிந்துக்களை காபிர் (அவிசுவாஸிகள்) என்று நினைப்பது பெரிய தவறென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

5. விவாகம் முதலிய சோபன காலங்களில் ஹிந்துக்கள் மஹம்மதியரையும், மஹம்மதியர் ஹிந்துக்களையும் அழைத்து உபசாரங்கள் செய்து தனியாக விருந்துகள் செய்து வைக்க வேண்டும். ஹிந்துக்களுக்குள்ளே ஜாதிக் கட்டுகள் இருப்பதைப் பற்றி மஹம்மதியர் அருவருப்புக் கொள்ளக் கூடாது.

இங்ஙனம் ஸ்ரீ நாராயண சாஸ்திரி சொல்வதை நாட்டிலுள்ள ஹிந்து மஹம்மதியத் தலைவர்கள் கவனித்து அந்தந்த இடங்களிலேயே இயன்ற வரை

இருதிறத்தாருக்குள்ளேயும் ஸஹோதர உணர்ச்சி மேன்மேலும் பெருகி வருவதற்கு வேலை செய்தால் தேசத்துக்கு அளவிறந்த நன்மையுண்டாகும்.

தமிழ் நாட்டில் நாடகம்

தமிழ் நாட்டில் நாடகப் பாட்டுக்கள் நாள் தோறும் நூற்றுக்கணக்காக அதிகப்பட்டு வருகின்றன. ஆனால், இவற்றிலே தெளிவு, அறிவு வளம், கல்விப் பயிற்சி, சொல் நயம், ரஸ வொளி முதலிய லக்ஷணங்கள் கொஞ்சமேனும் காணப்படவில்லை. வண்டிக்காரன் பாட்டு, பாம்புப் பிடாரன் பாட்டு, குறத்திப் பாட்டு முதலிய பாமரப் பாட்டுக்களிலே இலக்கணப் பிழைகள் இருந்தபோதிலும் கவிதா ரஸம் அமைந்திருப்பது காண்கிறோம். இந்த நாடகப் பாட்டுக்கள் வெறும் பாமரமாக இருப்பதுடன் கவிதா ருசி அணுகூடக் கலக்காமல் பெரிய பீடை யாக ஏற்பட்டிருக்கின்றன. மேலும் தமிழ்ப் பாஷையின் இயல்புக்குப் பொருந்தாத மெட்டுக் களில் நாடகக்காரருக்கு எப்படியோ பிரியமுண் டாகியிருக்கிறது. "இதற்கெல்லாம் விமோசனம் என்ன?" என்று ஒரு தமிழ்க் கவிஞரிடம் கேள்வி போடப்பட்டது. அதற்கு அவர் சொல்லிய மறு மொழியை இங்கெழுதுகிறேன்.

"இந்த விஷயத்தில் நாடகக்காரரைக் குற்றஞ் சொல்வது நியாயமில்லை. பெரும்பாலும் நமது நாட் டில் ஏழை வாலிபர்கள் ஸங்கீதத்திலும் உல்லாஸத் திலும் பிரியமுடையவர்களாக இருக்கும்போது ஜீவனத்துக்காகவும், சில சமயங்களில் உல்லாஸத்தின் பொருட்டாகவும் நாடகங்களிலே சேர்கிறார்கள். இவர்களுக்கு ஏராளமான பாட்டு வேண்டியிருக் கிறது. பழைய மெட்டுக்களும், அர்த்தம் தெரியாத கடுஞ் சொற்களும் இவர்களுக்கு அவசியமில்லை.

'தமிழ்ப் புலவர்'களிடம் போனால் நிகண்டுக்குக்கூட அர்த்தம் தட்டும்படியான வார்த்தைகள் எழுதிக் கொடுப்பார்கள். ஸாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது; பெரும்பாலும் இவர்களுக்கு ஸங்கீதமும் தெரியாது.

"தீவிரமான தாள கதியும், மதுரமான இசையும் உடையதாய் நர்த்தனத்திற்கு உதவக் கூடிய பாட்டுக்கள் நாடகக்காரர்களுக்கு வேண்டும்.

"தவிரவும், தமிழ் சங்கீதமும் பல வருஷங்களாகப் புதுமையும் உல்லாஸமும் இழந்து சோர்ந்து கிடக்கிறபடியால், நாடகக்காரரும் நாடகம் பார்க்கும் பொது ஜனங்களும், ஹிந்துஸ்தானி, பார்ஸி மெட்டுக்களையே விரும்புகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட மெட்டுக்களுக்குச் சரியான பதங்கள் சேர்த்துக் கொடுப்போர் எவ்வளவு மூடர்களாக இருந்தபோதிலும், அவர்களை நாடகக்காரர் ஆவலுடன் ஏற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. கவிதா ரஸங்களைப்பற்றி யோசனை செய்து கொண்டிருந்தால் அன்றன்றைக்கு நாடகம் நடக்கவேண்டுமே அதற்கென்ன செய்வது?.....புதிய கவிதை புலவர்களிடம் தோன்ற வேண்டும். புதிய மெட்டுக்கள், தமிழ்நாட்டு சங்கீத வித்வான்கள் ஏற்படுத்த வேண்டும். அப்போது தமிழ் நெறிக்கு இசையாத பார்ஸி மெட்டுக்களும், காதைத் தொளைக்கும் பாமரமான பத வரிசைகளும் நாடகத்தை விட்டு நீங்கும்."

குறிப்பு:--பல ஆழ்ந்த கருத்துக்கள் இக்கட்டுரையிலே இடம் பெற்றிருக்கின்றன. 1906-ல் பாரதியார் வெளியிட்ட இக்கருத்துக்களில் பலவற்றை இன்று நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்தாலும் அவற்றுல் பெரிதும் நன்மை ஏற்படும்.

காந்தியடிகளைப் பற்றி முதல் முதலாக இக்கட்டுரையில் தான் பாரதியார் குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்

என்று தோன்றுகிறது. அவரைப் பற்றிப் பாடியுள்ள **மஹாத்மா காந்தி பஞ்சகம்** என்ற அழகிய பாடல் பிற்காலத்திலே பாடப்பெற்றது. அந்தக் காலத்திலே அவர் மஹாத்மா என்று போற்றப்படவில்லை; அன்று அவர் வெறும் ஸ்ரீமான் காந்திதான்.

தாய் மொழியின் மூலமாகவே சகல சாஸ்திரங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும்; அதுதான் உண்மையான கல்வி பரவுவதற்கு வழி என்பதைப் பாரதியார் அன்றே கூறியிருப்பதை இன்றுகூட நம்மவர்களிற் பெரும்பாலோர் உணர்ந்து கொள்ளாமலிருக்கிறார்கள்.

நாடகப் பாட்டு விஷயமாக அன்றிருந்த பிரச்சினை இன்றும் இருக்கின்றது. ஆனால் பெயர் மட்டும் மாறிவிட்டது. அதை இன்று சினிமாப் பாட்டு என்று கூறுகிறோம். பிரச்சினை ஒன்றுதான். இதுபற்றிப் பாரதியாருடைய கருத்துக்களை எல்லோரும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். முக்கியமாக சங்கீத வித்வான்கள் இதை நன்கு மனத்திற்கொண்டு கச்சேரிகளிலேயும், ரேடியோவிலும், பிற இடங்களிலும் திருப்பித் திருப்பி ஒரு பத்துப் பன்னிரண்டு பாட்டுக்களையே பாடிக் கொண்டிருக்காமல் புதுப் பாடல்களைப் பாட வேண்டும்; மக்களுக்குப் புரியும்படியாகவும் அவர்களுடைய உள்ளத்திலே எளிதில் உணர்ச்சிகளை எழுப்ப உதவும்படியான தாய் மொழியிலும் பாட வேண்டும்.

புதிய உயிர்

"இவ்வுலகத்தில் மனிதனுக்கு ஏற்படக் கூடிய வலிமைகளை யெல்லாம் நான் எனக்கு உண்டாக்கிக் கொள்வேன். மனிதனுக்கு வசப்படக் கூடிய செல்வங்களையெல்லாம் எனக்கு வசமாக்கிக் கொள்வேன். மனிதனுக்கு விளையக் கூடிய அறிவுகளையெல்லாம் என்னிடம் விளைவித்துக் கொள்வேன். மனிதனுக்குக் கிடைக்கக் கூடிய இன்பங்களை யெல்லாம் நான் தேடி யனுபவிப்பேன்; ஸர்வ சக்தி பெறுவேன்"

என்று மனத்திலே ஒரு நிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாகூமை பெறுவதற்குத் தீராத விருப்பமும் துணிவுமே வழி. வேறுவழியில்லை. ஒருவன் தெய்வ பக்தியுள்ளவனாக யிருந்தாலும் அல்லது நாஸ்திகனாக இருந்தாலும் இந்த வழியை அனுசரிக்கலாம். நாஸ்திகன் அறியக் கடவது யாதெனில்:

இவ்வுலகம் நமது தாய் என்பது.

"உலகம் என்னிடம் பகைமையுடைய வஸ்துவில்லை. உலக வனத்தில் நான் ஒரு மலர்.....உலகம் என் அறிவுக்கு வசப்படுவதை அனுபவத்திலே கண்டிருக்கிறேன். உலகம் என்னிடம் அன்பு பூண்டது". இந்தச் செய்தியை ஸாமான்ய மதி

யுடைய எவனும் தன் உள்ளத்திலே பதியச் செய்து கொள்ளுதல் சிரமமில்லை. உலகம் நமக்குப் பிரதி கூலமாக இருந்தால், இங்கே மூன்று க்ஷணங்கள்கூட உயிருடன் வாழ முடியாது; "ஆஞல், உலகம் நமக்கு நோய் உண்டாக்குகிறதே. இறுதியில் நம்மைக் கொன்றுவிடுகிறதே; இதை நம்மிடம் அன்பு பூண்ட தாக எங்ஙனம் சொல்லலாம்?" என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம்.

உலகம் நம்முடைய தாய். அது நமக்குத் துன்பங்கள் விளைவிக்கும்போது நமக்குப் பாடங்கள் கற்றுக் கொடுக்கிறது. மூடக் குழந்தையைத் தாய் அடிப்பது போலவும், கட்டி புறப்பட்ட சதையை ரண வைத்தியன் அறுத்தெறிவது போலவும், உலகம் நம்மைத் துன்பப்படுத்துகிறது. பெருந் துன்ப மடைந்து அதனல் பரிசுத்த நிலை பெற்ற மேதாவிகள் எல்லோரும் இவ்வுண்மையைக் கண்டு கூறியிருக்கிறார்கள். திருஷ்டாந்தமாக, ஏழைத்தனம் பெரிய துன்பங்களிலே ஒன்றென்பது மனித ஜாதியின் பொது அநுபவம். எனினும் இதைக் குறித்து விக்டர் ஹ்யூகோ என்ற பிரான்ஸ் தேசத்து ஞானியொருவர் பேசும்போது, "வறுமைத் தீயிலே ஸத்தில்லாத மனிதர் அழிந்து போகிறார்கள். ஸத்துடையவர்கள் பத்தரை மாற்றுத் தங்கம் போல் தேறிச் சுடர் வீசி மாண்பு பெறுகிறார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

நோயிலே செத்தவன் போக, அதிலிருந்து நன்றாகத் தேறியெழுந்தவன் அறிவிருந்தால் முன்னைக் காட்டிலும் தான் அதிக சுகநிலையில் இருப்பதை உணர்ந்து கொள்வான். வெளிப்படையாகத் தோன்றும் நோய்க் குறிகள் எல்லாம் உடலுக்குள் இருக்கும் விஷத்தை வெளியேற்றிச் சுகந்தரும் பொருட்டாக இயற்கையால் செய்யப்படும் உபா

யங்களே யாகுமென்று சிறந்த வைத்தியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஸூக்ஷ்ம ஞானத்திலே நாட்டமில்லாத ஐரோப்பிய 'ஸயன்ஸ்'காரர்கூட அடியிலே பூச்சி நிலையிலிருந்து உயிர் மேன்மேலும் படிப்படியாக ஏறி மனித நிலை பெற்றிருப்பதை நோக்கும்போது உயிர்களை மேன்மைப் படுத்த வேண்டும் என்பதே இயற்கையின் உட்கருத்தென்பது தெளிவாகிறதென்று சொல்லுகிறார்கள். ஜந்துக்கள் செய்யும் போராட்டங்களும், அவை படும் துன்பங்களும் அவற்றின் உயர்வுக்காகவே ஏற்படுத்தப் படுகின்றன என்பதையும் அங்கீகாரம் செய்து கொள்கிறார்கள். இங்ஙனம் நம்மை உயர்வுறச் செய்ய வேண்டும் என்ற நோக்கமுடைய இயற்கைக்கு நாமும் அறிவுத் துணையிலே உதவி புரிவோமானால், அவ்வுயர்வு விரைவிலே கைகூடும்.

வீணாக அஞ்சுவதிலே பயனில்லை. இவ்வுலகம் நம்மிடம் கருணையுடையது என்பதை நாஸ்திகரும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒப்புக் கொண்டால் அவர்களுக்கு நல்லது.

தெய்வ பக்தி யுடையோர்

இனி, தெய்வ பக்தி யிருப்பதாக வாயிலே சொல்லிக் கொண்டு, வெள்ளிக்கிழமை தோறும் கோயிலுக்கு அபிஷேகம் பண்ணி வைப்பவர்களிலேயும் பெரும்பான்மையோர் உண்மையான பக்தி கொண்டவரில்லை. தெய்வ பக்தி உண்மையா பொய்யா என்பதை அறிந்துகொள்ள ஒரு சுலபமான வழியிருக்கிறது. தீராத தைரியம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். எதற்கும் அஞ்சாத தைரியமே உண்மையான தெய்வ பக்திக்கு

லக்ஷணம். அஃதில்லாத பக்தி தேங்காய்க்கும் சர்க்கரைப் பொங்கலுக்கும் வீண் செலவு.

தெய்வம் உண்டா?

தெய்வம் உண்டென்று நீ நம்புகிறாயா? உண்டானால் அது சர்வ சக்தியுடையது. அது என்னைப் படைத்தது. நானாக என்னை உண்டாக்கிக் கொள்ளவில்லை. அது என்னைக் காக்கின்றது. எனது செய்கையாலே நான் உயிர் பிறக்கவில்லை. அதையே சரணடைவேன். இனி எதற்கும் பயமில்லை. அதை நான் பரிபூர்ணமாகச் சரணடைந்தால் அதன் சக்திகளெல்லாம் என்னிடத்திலே தோன்றும். 'மேருவைச் சார்ந்த காக்கையும் பொன்னிறமடையும்.' அதனால் அமரத் தன்மை பெறுவேன். இவ்விதமாக ஒருவன் மனத்தை உறுதி செய்து கொண்ட பிறகு அவ்வுறுதிக்கு இணங்கும்படி தன் செய்கைகளையெல்லாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

அடிப்படை

முதலாவது, நோய் தீர்த்துக்கொள்ளவேண்டும். நோயுள்ள உடம்பு பயனில்லை. நோயை ஒருவன் தனது மனோ பலத்தாலே நீக்கி விடலாம். நல்ல காற்று, நல்ல நீர், ஒளி, வெயில், இவற்றிலே உடம்பு பழகவேண்டும். நாள்தோறும் ஏதேனும் ஓர் காரியத்திலே உடல் வெயர்க்கும்படி உழைக்க வேண்டும். இது புதிய உயிர் கட்டுவதற்கு அடிப்படை.

உணவு

இரண்டாவது, நல்ல உணவு தேடி உண்ண வேண்டும். சுத்தமாகவும் ருசியாகவும் வயிறு நிறைய உணவு கொள்ள வேண்டும். "மிகினும் குறையினும் நோய் செய்யும்." நமது தேசத்து ஜனங்

களுக்கு உணவைக் குறைக்கும்படி உபதேசஞ் செய்தல் அவசியமில்லை. உணவு மிகுதியால் நோய்ப் படும் கூட்டத்தார் நமது தேசத்திலில்லை. உணவுக் குறைதான் இங்கே யிருக்கும் ஸங்கடம். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்ற ஆங்கில சாஸ்திரி கல்வியைப் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதிலே குழந்தை களுக்கு ஊண் மிகுதியால் உண்டாகும் நோய்களைக் காட்டிலும் ஊண் குறைவால் உண்டாகும் நோய் மிகவும் கொடியன என்று சொல்லுகிறார். ஊண் மிகுதிக்கு இயற்கையிலே மாற்றுண்டு. ஊண்குறை வுக்கு மரணந்தான் மாற்று. "உண்டவன் உரஞ் செய்வான்." பரிசுத்தமான உணவுகளை நிறைய உண்ணுதல் வேண்டும். இனிய பழங்கள் நாள் தோறும் உண்ணத்தக்கன. உணவுக்குப் பணம் எந்த உபாயத்தாலேனும் தேடிக் கொள்ளவேண்டும். தேகத்திலே உழைப்பும் மனத்திலே தைரியமும் இருந்தால் பணந்தேடுவது கஷ்டமில்லை. சோம்பேறி யாக ஒருவன் நிறையப் பணத்தைக் குவித்து வைத் துக்கொண்டு அக்கம் பக்கத்து ஜனங்கள் பட்டினி கிடந்து சாவதைப் பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் கொடிய பாவம்.

செல்வர் கடமை

நமது நாட்டுச் செல்வர்கள் இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டும். உன் சொத்தை எல்லாருக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, நீ ஏழையாக வேண்டு மென்று நான் சொல்லவில்லை. கைத்தொழில்களும் வியாபாரங்களும் ஏற்படுத்தி அக்கம் பக்கத்தாரிடம் சரியானபடி வேலை வாங்கிக்கொண்டு சரியானபடி கூலி கொடு. உனக்கும் நல்ல லாபம் கிடைக்கும். கூலி குறையக் கொடுக்கும் முதலாளி லக்ஷ்மிதேவி யைக் காலால் உதைக்கிறான். அவன் மகன் தரித் திரத்திலும் நோயிலும் வருந்துவான். ஸகல ஜனங்

களுக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்காத ஊரில் வாழும் செல்வர்களெல்லாம் திருடர். அங்கே குருக்களெல்லாம் பொய்யர். பண்டிதரெல்லாம் மூடர். மேன்மை நிலை பெற வேண்டுமானால் கைத்தொழில்கள் பெருகும்படி செய்யவேண்டும். சாத்தியமில்லையென்று சொல்லி ஏங்குவதிலே பயனில்லை. எப்படியேனும், எப்படியேனும், செல்வத்தை வளர்க்க வேண்டும். மிச்சம் மற்றொரு முறை சொல்லுகிறேன்.

உல்லாஸ சபை

காளிதாஸன்

29 மார்ச் 1916 ராக்ஷஸ பங்குனி 17

[ராக்ஷஸ வருஷம் பங்குனி மாதம் 10-ந் தேதி புதன் கிழமையன்று மாலை வேதபுரம் உல்லாஸ சபையில் நடந்த செய்தி]

சபைக்கு வந்திருந்த பேர்:—

(1) ஜிந்தாமியான் ஸேட் (2) வெங்கட்டராவ் (3) குண்டு ராயர் (4) குமாரசாமி வாத்தியார் (5) எலிக்குஞ்சு செட்டியார் (6) காளிதாஸன் (7) மணவாளன் செட்டியார்.

வராத பேர்:—கோமதி நாயகம் பிள்ளை, மாரப்ப முதலியார்.

எலிக்குஞ்சு செட்டியார்: இன்று சபாநாயகராக இருக்கும்படி காளிதாஸரை வேண்டுகிறேன்.

காளிதாஸன்: எனக்குச் சம்மதமில்லை. வெங்கட்ராவைப் போடுங்கள்.

எலிக்குஞ்சு செட்டியார்: காளிதாஸரே சபாநாயகராக வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜிந்தாமியான் சேட் : எனக்கு அதுவே சம்மதம்.

குமாரசாமி வாத்தியார் : எனக்கும் அப்படியே.

சபையாரின் பொது வேண்டுகோளின்படி காளிதாஸன் அக்கிராசனம் வகித்தார்.

எலிக்குஞ்சு செட்டியார் : சபாநாயகரே, விவகாரம் ஆரம்பிக்கலாமா?

சபாநாயகர் : அப்படியே செய்யலாம்.

எலிக்குஞ்சு செட்டியார் : இந்தக் காளிதாஸரை நமது சபையைவிட்டு நீக்கிவிட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதைச் சபையார் அங்கீகாரம் செய்ய வேண்டும்.

குமாரசாமி வாத்தியார் : ஏன் காணும், செட்டியாரே என்ன காரணம்?

ஜிந்தாமியான் சேட் : செட்டியார் மனத்தில் இந்தக் கருத்திருக்கும்போது அவர் காளிதாஸரை இன்று சபாநாயகராக இருக்கும்படி கேட்டது கேலிதானே? நமது சபையில் இப்படி நாணயக் குறைவான கேலிகள் செய்வதைப் பார்த்தால் எனக்கு அருவருப்புண்டாகிறது.

எலிக்குஞ்சு செட்டியார் : நாணயக் குறைவா? யாருக்குக் காணும் நாணயக் குறைவு? சாஹப், உம்முடைய மஹம்மதிய குணங்களை நம்மிடம் காட்ட வேண்டாம் தெரியுமா?

ஜிந்தாமியான் சேட் : செட்டியாரே, அதிக வார்த்தை பேசிவிட்டீர். ஒரு தரம் பொறுத்தேன். ஹோஷ்யார்! (ஜாக்ரதை!)

எலிக்குஞ்சு செட்டியார் : என்ன ஸாஹப், தாடியை உருவுகிறீரே, அடித்துப் போடுவீரோ?

ஜிந்தாமியான் சேட் : ஹொஷ்யார்!

எலிக்குஞ்சு செட்டியார் : நம்முடைய கடையிலே உம்மைப் போலவே நாலு முரடர் வேலைக்கு வைத்திருக்கிறேன். ஞாபகமிருக்கட்டும்.

ஜிந்தாமியான் சேட் : ஹொஷ்யார்! ஹொஷ்யார்!

எலிக்குஞ்சு செட்டியார் : என்ன காணும், வெகு பயமுறுத்துகிறீரே. யாரென்று நினைத்தீர் நம்மை? (என்று சொல்லிக் கொண்டு எலிக்குஞ்சு செட்டியார் எழுந்து நின்று கையை ஓங்கினார்.)

சபையார் கலீரென்று சிரித்தார்கள். ஏனென்றால், எலிக்குஞ்சு செட்டியார் 4¾ அடி உயரம். ஜிந்தாமியான் ஸேட் 6¾ அடி உயரம். செட்டியார் 1¼ அடி அகலம். ஸேட் 3¼ அடி அகலம். செட்டியாருக்கு வயது 55. ஸேட்டுக்கு வயது 33.

இந்தச் சமயத்தில் காளிதாஸன் எழுந்து, "உல்லாஸத்திற்கு ஒரு அளவிருக்கவேணும். வரை கடந்து போகலாகாது. செட்டியாரே உட்காரும்,... என்னைச் சபையிலிருந்து நீக்க வேண்டும் என்று பிரேரணை செய்தீர். முகாந்தரங்கள் சொல்லும்" என்றார்.

குமாரசாமி வாத்தியார் : ஆமாம், காரணம் சொல்லும். காரணம்?

எலிக்குஞ்சு செட்டியார் : நமது சபையின் காரியங்களை வாரந்தோறும் சென்னப்பட்டணத்துப் பத்திரிகையில் பிரசுரம் செய்யும்படி நாம் காளிதாஸரை நியமித்தோம். அதன்படியே அவர் முதலாவது கூட்டத்து விவஹாரங்களைச் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு எழுதினார். அதற்கப்பால், கடந்த கூட்டங்களில் ஒன்றைப் பற்றியேனும் எழுத

வில்லை. இன்று நடப்பது ஆறுவது அல்லது ஏழாவது கூட்டமென்று நினைக்கிறேன். இவர் இத்தனை அஜாக்கிரதையுடன் நமது சபையாருக்கு வாக்குத் தவறியது பற்றி இவரை நீக்கிவிட வேண்டுமென்று சொல்லுகிறேன்.

காளிதாஸன்: சபையார் என்னை மன்னிக்க வேண்டும். நமது சபை விவகாரங்கள் ரஸமாக இருக்கும் சமயங்களில் பத்திரிகைக்கு எழுதலாம். அப்படி விசேஷமொன்றும் சென்ற கூட்டங்களில் நடக்கவில்லை. ஆகையால் எழுதவில்லை.

எலிக்குஞ்சு செட்டியார்: ரஸம், ரஸமில்லை. அதெல்லாம் நீர் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சபையில் நடக்கும் விஷயங்களை நீர் அப்படியே எழுதிவிட வேண்டும். பத்திரிகைக்காரர் போடா விட்டால் நீர் ஜவாப்தாரி இல்லை.

(இங்ஙனம் சிறிது நேரம் வாதங்கள் நடந்த பின் கடைசியாக சபையார் செய்த முடிவு—காளி தாஸரை நீக்கிவிட வேண்டுமென்று செட்டியார் சொல்லியது பிழை. சபையில் என்ன நடந்த போதி லும் அதை அப்படியே காளிதாஸர் பத்திரிகைக்கு எழுதி விடவேண்டும். கொஞ்சங்கூட ரசமில்லாத வார்த்தைகள் ஒரு கூட்டத்தில் பேசப்பட்டதாகக் காளிதாஸருக்குத் தோன்றுமானால் அவர் சபையா ரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு எழுதாமலிருக் கலாம்.)

குமாரசாமி வாத்தியார்: மேலே விசாரணைகள் செய்வோம்.

குண்டு ராயர்: பெல்ஜியம் தேசத்திலே எமீல் வெர் ஹேரன் (**Emile Verhaeren**) என்று ஒரு கவி இருக்கிறார். அவருடைய கவிதை புது வழியாக இருக்கிறதென்று ஒரு பத்திரிகையில் வாசித்தேன்

எப்படி யென்றால், இதுவரை உலகத்துக் கவிகள் நமது நவீன நகரங்களிலேயுள்ள யந்திர ஆலைகள், மோட்டார் வண்டிகள் முதலிய வஸ்துக்களைத் தமது கவிதையிலே சேர்ப்பதில்லை. இந்த வஸ்துக்களிலே அழகில்லையாதலால் கவிதையிலே சேர்க்கத் தகாதன என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். வானம், காற்று, நீர், வனம், மலை, பெண், செல்வம், மது, தெய்வம், தவம், குழந்தை முதலிய அழகுடைய வஸ்துக்களையே கவிகள் வர்ணிப்பது வழக்கம். எமீல் வெர் ஹேரன் என்பவருடைய கொள்கை யாதென்றால்:—"வலிமையே அழகு. ஒரு பொருளின் வெளியுருவத்தைப் பார்த்து அது அழகா இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது. யந்திரங்களிலே வலிமை நிகழ்கின்றன. ஆதலால் அவை அழகுடையன. அவற்றைக் கவி புகழ்ச்சி செய்தல் தகும்."

காளிதாஸன்: வலிமை ஓர் அழகு. அழகு ஒரு வலிமை. யந்திர ஆலை, நீராவி வண்டி, நீராவிக் கப்பல், வானத்தேர், பெரிய பீரங்கி எல்லாம் அழகுதான். உயர்ந்த கவிகள் வலிமையுடைய பொருள்களை அவ்வக் காலத்தில் வழங்கிய வரையிலே வர்ணனை செய்துதான் இருக்கிறார்கள். இதிலே புதுமையொன்றுமில்லை. வலிமைக் கருவிகள் இப்போது சில புதுமையாகத் தோன்றியிருக்கின்றன. இவற்றை ஐரோப்பியக் கவிகள் விலக்கி வைத்தது பிழை. ஆனால் பழைய தெய்வத்தையும், இயற்கையையும் மறந்து யந்திரங்களைப் பாடத் தொடங்கினால் விதை செத்துப் போய்விடும்.

எலிக்குஞ்சு செட்டியார்: அது கிடக்கட்டும். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதை ஆலோசனை பண்ணுங்கள். காக்கைக்கு 100 வயதென்று சொல்லுகிறார்கள். அது வாஸ்தவமானால், தெய்வத்துக்குப் புத்தியில்லையென்று நான் சொல்லுகிறேன். காக்

கைக்கு 100 வயது, மனிதனுக்கும் 100 வயதா? அதிலேகூட மனிதனைவிடக் காக்கையின் வயது கொஞ்சம் அதிக நிச்சயமாகத் தோன்றுகிறது. இதென்ன படைப்பு?

குமாரசாமி வாத்தியார் : எலிக்குஞ்சு செட்டியாரே, உமக்கு இப்போது வயது 55 ஆகிறது. இதனால் என்ன பிரயோஜனம்? காக்கை ஊரிலுள்ள அசுத்தங்களையெல்லாம் நீக்கி இயன்றவரை வியாதிகளைக் குறைத்து மனிதருக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் நன்மை செய்கிறது. நீர் பை, பையாகப் பணத்தை உள்ளே போட்டு மூடி வைத்திருக்கிறீர். போன மாதம் ஒரு அவஸரத்துக்காக 50 ரூபாய் கடன் கேட்டேன். பொய் முகாந்தரம் சொல்லி மழுப்பிவிட்டீர். உம்மால் யாருக்கென்ன பிரயோஜனம்?

எலிக்குஞ்சு செட்டியார் : உம்மாலே உலகத்துக்கு என்ன நன்மை காணும், குமாரஸாமி வாத்தியாரே? அதை முதலாவது சொல்லும்.....

இப்படி வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கும் போது, எலிக்குஞ்சு செட்டியார் வீட்டு வேலைக்காரன் ஒருவன் வாயில் நுரை தள்ளும்படி ஓடி வந்து, "ஐயா, நம்ம வீட்டு வைக்கோல் போரிலே நெருப்புப் பற்றிக் கொண்டு எரிகிறது" என்று சொன்னான்.

"நெருப்பா?" என்று செட்டியார் உடனே எழுந்து ஓடினார். சபையைக் கலைத்துவிட்டு நாங்களெல்லோரும் செட்டியாருக்கு உதவி செய்யும் பொருட்டு அவர் வீட்டுக்குப் போனோம். அங்கே போய்ப் பார்க்கும்போது.....அது மற்றொரு நாட் கதை. இன்று கதை இத்துடன் முடிகிறது.

குறிப்பு:—பாரதியாரின் நகைச்சுவையையும் நேருக்கு நேர்பேசுவது போன்ற உயிருள்ள வசன நடையையும் இம் மாதிரியான கட்டுரைகளிலே காணலாம்.

எலிக்குஞ்சு செட்டியார், விளக்கெண்ணெய் செட்டியார், வெல்லச்சு செட்டியார், பிரமராய ஐயர் எல்லாம் பாரதியார் தம் புதுவை நண்பருக்குக் கொடுத்த செல்வப் பெயர்கள். அவர்கள் ஆறுமுகம் செட்டியார், பாரதியார் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரரான செட்டியார், கிருஷ்ணசாமி செட்டியார், பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர் ஆகும்.

தமிழ்

சி. சுப்ரமணிய பாரதி

3 ஏப்ரில் 1916 ரசுஞ.ஸ பங்குனி 22

கல்கத்தாவிலிருந்து வெளிப்படும் 'மாடன் ரெவ்யூ' என்ற மாதப் பத்திரிகையின் தை—மாசி ஸஞ்சிகையை நேற்றுப் பொழுது போக்கின் பொருட்டாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதிலே திருநெல்வேலி ஹிந்து காலேஜ் சரித்திர பண்டிதர் ஸ்ரீ நீலகண்டையர் ஒரு சிறிய கடிதமெழுதியிருக்கிறார். ஏற்கெனவே மேற்படி பத்திரிகையில் ஸ்ரீயதுநாத ஸர்க்கார் என்ற வித்வான் எழுதியிருந்த சில வார்த்தைகளைக் குறித்து ஸ்ரீ ஐயர் தமது கருத்துக்களை வெளியிடுகிறார்.

கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறதென்றும் தேச பாஷைகளிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையுமென்றும் ஸ்ரீ சர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலிப் பண்டிதர் சொல்கிறார்:-"பாஷைத் தொல்லை பெருந் தொல்லையாகவே இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் தேச

பாஷையில் கற்றுக் கொடுப்பது அதிக பயன்படு மென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர் களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப் பிழைகளும் நிறையச் செய்த போதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷ யங்களை விவரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ் தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது.''

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்டையரின் நிலை மையை நினைத்து நான் பிரமிப்பும் வருத்தப் படு கிறேன். சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாத வர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!

மேலும் இவர் தமக்குத் தாய் மொழி தெரியா தென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப் போனார் என்பது எனக்கு அர்த்தமாக வில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர், ஸ்விஸ் ஜாதியார், இத்தாலி தேசத்தார், ஹாலந்துக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறி விலும் சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போது தான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனித ரில்லை, வாலில்லாத குரங்குகளில்லை, நமக்குப் பாஷைகள் இருக்கின்றன; நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள்; கவிகள் இருக் கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத் தார் தெரிந்துகொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தானத்து வகுப்புக்களைக் காட்டிலும் குறைவுபட்டதென்று

நம்மிலே சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் கிரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்க முண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அது வரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச்சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்க வேண்டும். இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.

குறிப்பு:—பாரதியாரின் அளவு கடந்த தாய் மொழிப் பக்திக்கு இக்கட்டுரை ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. தாழ்வு மனப்பான்மையுற்றுச் சோர்ந்து கிடந்த தமிழரைப் பாரதியார் இது போன்ற வசனங்களாலும், "யாமறிந்த மொழிகளிலே" என்று தொடங்குவது போன்ற பாடல்களாலும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்ததோடு தமிழினிடத்தே மிகுந்த பற்றும் பெருமையும் கொள்ளுமாறு செய்தார்.

பெண்கள் சர்வகலா சங்கம்

சக்திதாஸன்

26 ஏப்ரல் 1916 நள சித்திரை 14

நமது தேசத்தில் இப்போது புதிதாக யோசனை செய்யப்படும் காரியங்களில் பூனாவில் ஸ்ரீ கார்வே என்பவர் ஏற்படுத்தப் போகிற ஸ்திரீகளின் சர்வ கலா சங்கம் பிரதான வகுப்பைச் சேர்ந்தது. இந்த முயற்சிக்குச் சர்க்காரின் உதவி கிடைத்தால் அதனை ஸ்ரீ கார்வே மிகவும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளக் காத்திருக்கிறார். அவ்வுதவி பின்னிட்டுத்தான் கிடைக்குமென்றால் அதுவரை தமது காரியத்தை இவர் நிறுத்தி வைக்கப் போகிறதில்லை. ஜனங்களின் சஹாயத்தை மாத்திரமே வைத்துக்கொண்டு இந்தச் சர்வகலாசங்கத்தை ஸ்தாபனம் செய்து விடலாமென்ற நம்பிக்கை இவருடைய மனத்தில் பரிபூரணமாக ஏறியிருக்கிறது. ஆனால் இவர் ஒரு விஷயத்தை முன்யோசனையில்லாமல் தொடங்கிப் பின்னிட்டு அதன் கஷ்டங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் இடைமுறிந்து போகும் தன்மையுடையவரல்ல. தம்மால் நிர்வகிக்க முடியாத காரியத்தைப் படபடத்த விருப்பத்தாலே கைக்கொள்ளக் கூடியவரல்ல. இவர் ஒன்றைத் தொடங்கினால் அக்காரியம் தெய்வங்கள் எதிர்த்து நாசஞ் செய்தாலொழிய மனிதர் எதிர்ப்பினாலே நின்று போய் விடாது. முதிர்ந்த அறிவு, வயது, அநுபவம் இவற்றி

ஞல் காரியசித்திக்குத் தகுதி பெற்றவர். வீண் படாடோபமும் ஆடம்பரமும் இல்லாதவர். உண்மையான தேசாபிமானி. அநாதைக் கைம் பெண்களுக்கு இவர் செய்திருக்கும் நிலையான உபகாரம் நம்மவர்களால் மறக்கக் கூடியதன்று.

ஸ்திரீகளுக்கென்று தனியான யூனிவர்சிடி இதற்கு முன் பூமண்டலத்திலேயே இரண்டுதான் இருக்கின்றன. ஜெர்மனியில் லேப்ஜிக் பட்டணத்திலே ஒன்றிருக்கிறது. ஜப்பானில் ஒன்றேற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே இந்தக் காரியத்தை முதலாவது ஸ்ரீ கார்வேதான் ஆரம்பம் செய்கிறார்.

ஒரு காரியத்தைத் தொடங்குவோன் அதன் சம்பந்தமான விஷய நுட்பங்கள் தெரிந்தவனுகவும் விடாமுயற்சி யுடையவனுகவும் இருந்தால் அந்தக் காரியம் எப்படியும் கைகூடிவிடும். பொதுவாக எல்லா தேசங்களிலும் அநேக நற்காரியங்கள் பணமில்லாமல் முறிந்து போவது வழக்கம். அதிலும் நமது தேசம் உலக முழுவதிலுமுள்ள எல்லா நாடுகளைக் காட்டிலும் இப்போது அதிகஏழைமை கொண்டிருப்பதால் இங்கே பணமில்லாமல் உடைந்து போன காரியங்களுக்கு அளவில்லை. இருந்தபோதிலும் தர்மதீரர் இதைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அறிவும் மன உறுதியும் சேர்ந்தால் வானத்தை வெல்லலாம். லௌகிக காரியங்கள் சாதிப்பது எம்மாத்திரம்? ஸ்ரீ கார்வேயின் பிரயத்தனத்திற்குப் பணம் போதுமான வரை சேர்ந்து கொண்டுதான் வருகிறது. பூனுவிலே ஒருவர் தமது வீட்டை விற்று 10,000 ரூபாய் கொடுத்ததாகத் தெரிகிறது. ஸ்ரீ கார்வே ஏற்படுத்தப் போகிற சர்வகலா சங்கத்தில் தேச பாஷைகளின் மூலமாகவே சகல சாஸ்திரங்களும் கற்றுக் கொடுக்கப்படும். இவ

ருடைய சர்வகலாசங்கம் ஸ்தாபனமாகிப் பத்து வருஷம் நடக்குமானால் அதுவரை நம் நாட்டு ஆண் பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ் பாஷை மூலமாகவே கல்விப். பயிற்சி நடந்து வருமானால் பிறகு நமது நாட்டில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் உயர்ந்த கல்வியும் அறிவுத் திறமையும் சாஸ்திரப் பழக்கமும் பெற்றிருக்கும்படி நேரிடும். அந்த நிலை ஏற்படு முன்னாகவே ஆண் பள்ளிக்கூடங்களிலும் சுதேச பாஷைகளின் பழக்கம் அதிகப்பட்டு விடுமென்று நம்புகிறேன்.

பாட்டு

குறிப்பு:—சக்திதாஸன் என்ற புனை பெயரில் இத் தலைப்பிலே பாரதியார் தொடர்ச்சியாக ஆறு கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இவை வெளியான தேதிகளாவன:—

1. 3 மே 1916—நள கிந்நரை 21
2. 4 மே 1916—நள கிந்நரை 22
3. 11 மே 1916—நள கிந்நரை 29
4. 27 மே 1916—நள வைகாசி 14
5. 10 ஜூன் 1916—நள வைகாசி 28
6. 19 ஜூலை 1917—நள ஆடி 5

நவ ரஸங்களைப் பற்றியும் இக்காலத்துச் சங்கீதத்தைப் பற்றியும் பல ஆழ்ந்த கருத்துக்களைப் பாரதியார் இக்கட்டுரைகளிலே தந்திருக்கிறார்.

"ரஸ ஞானமில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து சங்கீத வித்வான்களிலே பலர் ஸங்கீதத்துக்கு நவரஸங்களே உயிர் என்ற செய்தியை அறியாதவர்கள்.

முத்துசாமி தீக்ஷிதர். தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக 'ஸங்கதி'களுடன் பாடுவோரே 'முதல்தர வித்வான்கள்.' இந்தக் கீர்த்தனங்களெல்லாம் ஸம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையிலிருக்கின்றன. ஆகவே முக்காலே மும்மாகாணி 'வித்வான்'களுக்கு அந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவர்களுக்கு 'ரஸம்' தெரிய நியாயமில்லை."

* * *

"நானும் பிறந்தது முதலாக இன்று வரை பார்த்துக் கொண்டு வருகிறேன். கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராம நீ ஸமானமெவரு', 'மரியாத காதுரா', 'வரமு லொஸதி'..... ஐயையோ, ஐயையோ, ஒரே கதை.

"எந்த 'வித்வான்' வந்தாலும் இதே கதைதான். தமிழ் நாட்டு ஜனங்களுக்கு இரும்புக்காதாக இருப்பதால், திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுகளே வருஷக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோற் காதுள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்."

பாரதியார் இவ்வாறு கூறி முப்பத்தைந்து ஆண்டு களுக்கு மேலாகிவிட்டன. நிலைமை மட்டும் அநேகமாக அப்படியே இருக்கிறது!

பூர்வீக மகான்களுடைய பாட்டுக்களே மறந்துவிட வேண்டுமென்பது பாரதியாருடைய கட்சியல்ல. "பத்து முப்பது கீர்த்தனங்களேயே ஓயாமல் பாடி ஸங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக் கூடாது என்பது அவர் கருத்து. தமிழிலே புதிய புதிய நல்ல பாடல்கள் உண்டாக வேண்டும்; அவை இசையரங்குகளிலே முக்கிய இடம் பெறவேண்டும் என்பதும் அவர் ஆசை.

"வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவ சியம். ஆனல் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தந் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுக்களே மீட்டு மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனல் நமது ஜாதி ஸங்கீத ஞானத்தை யிழந்து போகும்படி நேரிடும்."

இக்கட்டுரைகள் பாரதி நூல்கள் முன்றும் தொகுதியில் கலைகள் என்ற பகுதியில் ஸங்கீத விஷயம், பெண்ணின் பாட்டு என்ற தலைப்புகளுடன் வெளியாகியுள்ளன.

புதுப் பேய்

ஒரு சிறிய கதை

13 மே 1916 தள சித்திரை 31

காளிதாசன்

வேதபுரம் எலிக்குஞ்சு செட்டியார் மகளுக்குப் பேய் பிடித்திருக்கிறது. பெயர் காந்திமதி. பெண் நல்ல அழகு. சிவப்பு நிறம். முகத்தில் ஒரு மாசு மறு இல்லாமல் நிலா வீசும். மென்மையான பூங் கொடியைப்போல் இருப்பாள். இரண்டு மூன்று பாஷைகள் தெரியும்.

நேர்த்தியாகப் பாடுவாள். வீணை வாசிப்பாள். தினந்தோறும் வர்த்தமானப் பத்திரிகைகள் படித்து உலகத்தில் நடைபெறும் செய்திகளை வெகு நுட்ப மாகத் தெரிந்துகொள்ள முயற்சி செய்வாள். யாரே னும் ஒரு மந்திரி, அல்லது ஒரு பெரிய ராஜ்ய தந்திரி, அல்லது பெரிய ஞானசார்யர், தனத்தலைவர் ஆகிய இவர்கள் பேசும் வார்த்தைகளுக்குள்ளே தொளைத் துப் பார்த்துக் கால் மைல் தூரம் அர்த்தம் கண்டு பிடிப்பாள். உபந்நியாசம் செய்வோர் சொல்லக் கூடாதென்று மறைத்து வைக்கும் வார்த்தையைக் கூடக் கண்டு பிடித்துச் சொல்லுவாள். பெண் நல்ல புத்திசாலி.

இவளுக்குப் போன மாசம் வரையிலே ஒரு குறையும் கிடையாது. ஸாதாரணமாக இருந்தாள். திடீரென்று ஒரு வெள்ளிக்கிழமை மாலை தலை சுற்றி ஆடத் தொடங்கிவிட்டாள்.

'ஹா' என்று கத்துவதும், சிரிப்பதும், பிதற்று வதும் பெரிய அமளியாய் விட்டது. செட்டியார் என்னை வந்து கூப்பிட்டார். நான் பார்க்கப் போனேன். என்னைக் கண்டவுடன் காந்திமதி கட கடவென்று சிரித்தாள். கண்ணைப் பார்த்தால் வெறி பிடித்தவளைப் போலிருந்தது.

"காந்திமதி, உனக்கு என்ன செய்கிறதம்மா?" என்று கேட்டேன். மறுமொழியில்லை. இரண்டு மூன்றுதரம் வற்புறுத்திக் கேட்டபிறகு, "ஹா, காளி தாசனு? வா வா, தூங்குகிறாயா? எழுப்ப வந்தேன், காளிதாசனு? ஓஹோ; கவியெங்கே, என்மேலே பாட்டுப் பாடு நான் புதுப் பேய்.....ஆஹா வெனேஜூலோஸ், மடாதிபதி, தென் ஆப்பிரிகா, வீணை, திருச்சிஞப்பள்ளி பாட்டுப் பாடு" என்று எதெல்லாமோ சொன்னாள். நான் திகைத்துப் போய்விட்டேன்.

"எப்படியிருந்த ..த்தி!" என்று சொல்லி எலிக் குஞ்சு செட்டியார் கண்ணீருதிர்த்தார். "ஏனம்மா? பிதற்றுகிறாயே, உனக்கு உடம்பு என்ன செய்கிறது?" என்று மறுபடியும் கேட்டேன்.

"எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. நான் புதுப் பேய். உங்களுக்கெல்லாம் நோய் பிடித்திருக்கிறது. நான் அதை நீக்கிவிட வந்தேன். விபூதி கொண்டு வா" என்று காந்திமதி அலறத் தொடங்கினாள். எலிக்குஞ்சு செட்டியார் ஒரு பித்தளைத் தட்டிலே விபூதி கொண்டுவந்து என் கையிலே கொடுத்தார். நான் பெரிய மந்திரவாதி என்று அவருடைய அபிப்

பிராயம். ஏதாவது வியாதி சாதாரணமாக நரம்பு களைப் பற்றியதாக இருந்தால் மந்திரம் செய்து நோயாளியின் மனத்தை உறுதியாக்கி வியாதியை விரைவிலே ஓடித்துவிடலாம். பேய்க்கு மந்திரம் செய்யும் வழி எனக்குத் தெரியாது. தவிரவும் எனக்குப் பேய் பிசாசுகளில் நம்பிக்கை கிடையாது.

எதற்கும் ஒரு கை பார்க்கலாமென்று உத்தேசித்து விபூதித் தட்டைக் கையிலே வாங்கிக்கொண்டேன். காந்திமதி படீரென்று பாய்ந்து என் கையிலிருந்த தட்டைப் பிடுங்கிக் கொண்டாள்.

"ஹா, ஹா, ஹா! எனக்கா விபூதி போட வந்தாய்? சும்மா இரு. அப்படியே கண்ணை மூடிக் கொள்ளு. நான் உனக்கு விபூதி போடுகிறேன். எலிக்குஞ்சு, நீயும் வா, அப்படியே உட்காரு, உனக்கும் விபூதி போடுகிறேன். இன்னும் உங்கள் கூட்டத்தையெல்லாம் அழைத்து வா. எல்லாருக்கும் விபூதி போடுகிறேன். தென் ஆப்பிரிக்கா ராஜூல் முஸ்லிம் சங்கம், மதன்மோஹன் மாளவியா, திருச்சினுப்பள்ளி பண்டார, 'டாக்டர்' கிழநரி, சென்னப்பட்டணம், கொண்டுவா, கொண்டுவா. எல்லோருக்கும் நான் விபூதி போடுகிறேன்" என்றாள்.

எலிக்குஞ்சு செட்டியார் விம்மி விம்மி அழத் தொடங்கினார்.

"அழாதே, கோழையே, போ, வெளியே போ" என்றாள் காந்திமதி.

எலிக்குஞ்சு செட்டியார் வெளியே போய்விட்டார். அவராலே துக்கம் பொறுக்க முடியவில்லை.

"பேய், பிசாசுகளே கிடையாது. எல்லாம் பொய்" என்று சொன்னேன். காந்திமதி சிரித்தாள்.

"பேயில்லை" என்று மறுபடி சொன்னேன்.

"புதுப் பேய்" என்றாள்.

யான் : என்ன வேண்டும்?

அவள் : விளக்கு.

யான் : என்ன விளக்கு?

அவள் : நெய் விளக்கு.

யான் : என்ன நெய்?

அவள் : புலி நெய்.

யான் : எங்கே கிடைக்கும்?

அவள் . காட்டிலே.

யான் : எந்தக் காட்டிலே?

அவள் : பொதியமலைக் காட்டிலே.

எனக்குக் கோபம் வந்துவிட்டது.

"காந்திமதி, உனக்குப் புத்தி சரியில்லை. நான் மந்திரத்தால் உன்னைக் குணப்படுத்தப் போகிறேன். கொஞ்ச நேரம் பேசாமலிரு; பேசினால் இந்தப் பிரம்பாலே அடிப்பேன்" என்று பயமுறுத்தினேன். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து என் கையிலிருந்த பிரம்பைப் பிடுங்கி முறித்தெறிந்து விட்டாள்.

பிறகு மறுபடியும் அலறத் தொடங்கினாள்:—

"நெய், நெய், நெய் கொண்டுவா. நட, நட. தூங்காதே, எழுந்திரு. நான் புதுப் பேய். எல்லோரும் நெய் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பெண்ணை மிகவும் கஷ்டப்படுத்துவேன்" என்றாள்.

"காந்திமதி, நீ சொல்லும் வார்த்தை அர்த்த மாகவில்லையே" என்றேன். "அர்த்தமா தெரிய வில்லை? காளிதாசன், காளிதாசன்! கதை கதை" என்று சொல்லி எதெல்லாமோ பிதற்றிய பின்பு 'ஹா' என்று மற்றொரு முறை அலறி, அப்படியே மூர்ச்சை போட்டு விழுந்தாள். நான் பெருமூச் சுடன் வெளியேறினேன். சுமார் அரை மணி நேரம் கழிந்த பின்பு, செட்டியார் மறுபடி வந்து கூப் பிட்டு, "காந்திமதிக்குத் தெளிந்துவிட்டது" என்றார். பின்பு போய்க் கேட்டபோது, பேயாடிய விஷயம் ஞாபகமில்லையென்று சொல்லுகிறாள். இப்படி இரண்டு மூன்று வெள்ளிக் கிழமையாய் நடந்து வருகிறது.

இதனுடைய ஸூக்ஷ்மம் தெரியவில்லை. எனக்குப் பேய் பிசாசில் நம்பிக்கை கிடையாது.

சுய ஆட்சியைப் பற்றி ஒரு யோசனை

25 மே 1916 நள வைகாசி 12

பாரத நாட்டுக்கு உடனே சுய ஆட்சி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் ஒரு பெரும் விண்ணப்பம் தயார் செய்து, அதில் மாகாணந்தோறும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கையெழுத்துப் போட்டு இந்த க்ஷணமே ப்ரிடிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்ப வேண்டும்.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்த நெருக்கடியிலே நாம் உள் நாட்டுத் திருத்தங்களுக்கு மன்றாடுவதனால் நாம் ப்ரிடிஷ் ராஜாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கடமை தவறிப் போகுமென்று சொல்லி நமது முன்னேற்றத்தைத் தடுக்க விரும்புவோரின் அர்த்தமில்லாத வார்த்தையைக் கருதி இக்காரியத்தை நிறுத்தி வைக்கலாகாது.

அயர்லாந்து, போலந்து என்ற தேசங்களின் திருஷ்டாந்தத்தைக் காட்டலாம்.

புதுச்சேரி
அநலம் வைகாசி 7

சி. சுப்பிரமணியபாரதி.

குறிப்பு:—முதல் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த போது பாரதியார் இந்த யோசனையைக் கூறியிருக்கிறார். அயர்லாந்து போலந்து தேசங்கள் தங்கள் விடுதலைக்காக அந்தச் சமயத்திலும் முயற்சி செய்து கொண்டிருந்தன. யுத்தம் நடப்பதால் இம்முயற்சியை அவை நிறுத்தி வைக்க வில்லை.

உடம்பு

சக்திதாஸன்

22 ஜூன் 1916 நள ஆவி 9

குறிப்பு:—இக்கட்டுரை பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் வெளியாகியிருக்கிறது.

உண்மை

சக்திதாஸன்

26 ஜூன் 1916 நள ஆவி 13

குறிப்பு:—இக்கட்டுரை பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் வெளியாகியிருக்கிறது.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்

சி. சுப்ரமணிய பாரதி

7 ஜூலை 1916 நள ஆவி 24

சுதேசமித்திரன் பத்திராதிபர் அவர்களுக்கு:—

சென்னப்பட்டணத்தில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தமது பெண்ணை ருதுவான பிறகு விவாகம் செய்து கொடுத்த செய்தி எனக்கு சந் தோஷம் தருகிறது.

நமது ஜன ஸமூகத்தில் மாறுதல்கள் நடக்க வேண்டும். மாறுதலே உயிர்த் திறமையின் முதற் குறியாகும். மேன்மேலும் சௌகரியத்தை விரும் பித் தானுகவே புதிய புதிய மாறுதல்கள் செய்து கொள்ளாத ஜந்துவை, இயற்கைத் தெய்வம் வலிய வந்து கீழ்நிலைமைக்கு மாற்றுகிறது. புராதன ஆசா ரங்களில் நல்லதைக் கடைப்பிடித்துக் கெட்டதை நீக்கிவிட வேண்டும். "புராண மித்யேவ நஸாது ஸர்வம்." பழமை என்ற ஒரே காரணத்தால் எல் லாம் நல்லதாய் விடாது.

மேலும் விவாக சமயத்தில் சொல்லப்படும் சில வேதமந்திரங்களைக் கொண்டே பூர்வ காலத்தில் பிராமணர்கூட ருதுவான பிறகுதான் பெண்

களுக்கு மணம் செய்வித்தார்கள் என்று ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தாம் அவ்விஷயத்தைப் பற்றி ஏற்கனவே எழுதி வெளியிட்டிருக்கும் புத்தக மொன்றில் ருஜுப்படுத்தியிருக்கிறார். ஆகவே குழந்தைக் கல்யாணம் வேதோக்தமென்றும், தெய்வக் கட்டளையென்றும் இவர் நம்பவில்லை. இடைக் காலத்தில் நம் ஜாதியார் அறிவும், தைரியமும், சக்தியும் இழந்துவிட்ட பிறகு வந்து நுழைந்த அசம்பாவித வழக்கங்களில் இதுவொன்றென்பது ஸ்ரீ சாஸ்திரியாரின் கொள்கை. இந்தக் கொள்கையை நமது நாட்டில் எத்தனையோ ஜனங்கள் மனதிற்குள்ளே அங்கீகாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். இங்ஙனம் ஒப்புக்கொண்ட பிறகும் புதிய சீர்திருத்தத்தை நடைமுறையிலே கொண்டு வருவதற்குத் தைரியமில்லை.

பொதுவாக இங்கிலீஷ் படித்தவர்களிலே பலரும், இங்கிலீஷ் படிக்காவிட்டாலும் விஷயங்களைத் தாமாகவே யோசனை செய்து பார்க்கும் வழக்கமுடைய வேறு பலரும் நமது ஜனக்கட்டிலே எத்தனையோ குற்றங் குறைகள் இருப்பதாக ஒயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவனவனுக்கு நியாயமாகத் தெரிந்ததை அவனவன் தனது அனுஷ்டானத்தில் காட்டும் முறைமை நமது நாட்டில் நன்றாக ஏற்படவில்லை. தர்மத்துக்காகத் தாங்கள் ஸங்கடப்படுவதிலே பெரும்பாலோருக்கு ஸம்மதமில்லை. அதுவும் இங்கிலீஷ் படித்த கூட்டத்தாரில் மனோதைரியமுடையவர்களின் தொகை மிகவும் சொற்பமென்பது என்னுடைய அபிப்பிராயம். உள்ளும் புறமும் ஒன்றுபோல நடக்கவேண்டும். படித்த வித்வான்கள் வஞ்சக நடை நடந்தால் அந்த தேசம் சூன்யமாகிவிடும். மனோதைரியமில்லாவிட்டால் பயனுடைய செய்கை எதுவுமே செய்ய முடியாது.

விதி வசத்தால் நமது ஜனங்களுக்கு இந்த க்ஷணத்திலே பல விஷயங்களிலும் வழி காட்டக் கூடிய திறமை இங்கிலீஷ் படித்த சிலரிடத்திலே தான் காணப்படுகிறது. அதற்குக் காரணம் பூமண்டலத்தின் சாஸ்திரங்களும் நவீன யோசனைகளும் நமது பாஷையில் மொழி பெயர்க்கப்படாமல் இருப்பதொன்று; நம்மவர் அன்ய தேசங்களில் யாத்திரை செய்து தற்கால அனுபவங்கள் திரட்டிக் கொண்டு வராமலிருப்பது இரண்டு; நமக்குள் வந்து புகுந்திருக்கும் கோரமான வறுமை மூன்றுவது.

எனவே, இந்தக் கூட்டத்தாரில் சிலர் கொஞ்சம் துணிவாகச் செய்கைகள் செய்வதைக் காணும்போது ஆரம்பத்தில் சொல்லியபடி எனக்கு ஸந்தோஷ முண்டாகிறது. இப்படி நம்மவர் எல்லா விஷயங்களிலும் நியாயத்தைத் துணிவுடன் செய்து காட்டி நாட்டில் புதிய உயிரை நிலை நிறுத்தும்படி தேவ கருணை செய்க.

சில கவியரசர்

காளிதாஸன்

10 ஜூலை 1916 நள ஆவி 27

குறிப்பு:—இக்கட்டுரையில் பாரதியார் போத்தன்ன தெலுங்கக் கவிராயரைப் பற்றியும் கர்பர், திருவள்ளுவர், இளங்கோ என்னும் தமிழ்க் கவிகளைப் பற்றியும் பேசுகிறார். ஆந்திர தேசத்தார் போத்தன்னாவுக்கு ஆண்டுதோறும் விழா நடத்த வேண்டுமென்று விரும்புவதுபோலத் தமிழ்நாட்டார் பிறந்த தமிழ்க் கவிகளின் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்றும் அவ்வாறு கொண்டாடுவதால் புதிய கவிஞர்களும் இலக்கியமும் தோன்றும் என்றும் எடுத்துரைக்கிறார்.

இக் கட்டுரை பாரதியார் நூல்கள் மூன்றும் தொகுதியில் கலைகள் என்ற பகுதியில் கவி என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இக் கட்டுரையில் உள்ள இரண்டு பத்திகள் அதில் இல்லை. இதில் இல்லாத சில பத்திகள் உள்ளன. ஒரு வேளை பாரதியார் இக் கட்டுரையைப் பின்னால் திருத்தி அமைத்திருக்கலாம்.

கவி என்ற கட்டுரையில் வராத இரு பத்திகளை மட்டும் இங்கு தருகிறோம்.

போத்தன்னாவைப் பற்றிய குறிப்பின் கடைசிப் பத்தியாகக் கீழ்க்கண்ட வாக்கியங்கள் உள்ளன.

"மஹான்கள் கவிகளாயினும், சாஸ்திரக்கார ராயினும், வேறு எவ்வகையிலே தேசத்துக்கு உப காரம் செய்திருந்தபோதிலும், அவருடைய ஜன்ம தினத்தைக் கொண்டாடி சபைகள் நடத்தி, ஆராய்ச் சிகள் செய்வது தேசத்தின் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணையாகும்."

கவி என்ற கட்டுரையிலே திருவள்ளுவர், இளங்கோ என்பவர்களைப்பற்றி அவர்கள் பிறந்த ஊர், அவர்கள் ஜன்ம தினத்தைக் கண்டறிய வழி ஆகிய விஷயங்கள் பேசப்படுகின்றன. ஆனால் கம்ப ரைப்பற்றி இவ்விதக் குறிப்புக் காணப்பெறவில்லை. அது சில கவியரசர் என்ற கட்டுரையிலே திருவள்ளு வரைப் பற்றிய குறிப்புக்குப் பின் கீழ்க்கண்டவாறு ஒரு பத்தியாக உள்ளது.

"கம்பநாடர் மாயவரத்துக்கு ஸமீபத்திலுள்ள திருவெழுந்தூரில் பிறந்தவர். அந்த ஊரிலே அவ ருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று சில வருஷங்களின் முன்பு ஒருவர் முயற்சி செய்தார். ஊக்க மில்லாமையால் அம்முயற்சி நிறைவேற வில்லை. கம்பனுடைய ஜன்ம திதி நிச்சயமாகத் தெரியவில்லை."

வருங்காலம்

சக்திதாஸன்

11 ஜூலை 1916 நள ஆவி 28

குறிப்பு:—பார்க்க: பாரதி நூல்கள் மூன்றும் தொகுதி—சமூகம்.

சக்தி தர்மம்

சக்திதாஸன்

20 ஜூலை 1916 நள ஆடி 10

குறிப்பு:—இக்கட்டுரை பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் தத்துவம் என்றபகுதியில் வெளியாகியுள்ளது. ஆனால் இது சாக்தம் என்ற பகுதியோடு முடிந்து விடுகிறது. மூன்றும் தொகுதிக் கட்டுரையில் கணபதி என்ற பகுதி யொன்று அதிகமாகக் காணப்படுகின்றது.

சக்தி தர்மம் என்ற இதே தலைப்புள்ள மற்றொரு கட்டுரை சுதேசமித்திரனில் வெளியாகி இருக்கிறது. அது பாரதி நூல்களில் காணப்படவில்லை. அதை உரிய இடத்தில் இந்நூலில் சேர்த்துள்ளேன்.

பூச்சித் தேவன்

ஒரு சிறிய கதை

காளிதாஸன்

27 ஜூலை 1916 கள ஆடி 13

திருநெல்வேலி வட்டத்தில் குட்டையூர் என்றொரு ஜமீன் உண்டு. அங்கே ஜனங்களெல்லாம் மிகவும் ஏழைகள். மறவர் குடி 200, 300 வீடுகளுண்டு. மற்ற குடிகளைக் காட்டிலும் இந்த மறவர் அதிக ஏழைகள். இவர்களில் சிலர் ஜமீன்தாருக்குப் பல்லக்குச் சுமப்போர். அடைப்பக்காரர் சிலர். வெளியே பருத்தி நிலங்களிலே வேலை செய்து பிழைப்பவர் சிலர். அநேகருக்கு வேலை கிடையாது. பக்கத்துக் கிராமங்களிலே போய்த் திருடிக்கொண்டு வருவார்கள். அதிலும் அதிக வரும்படி கிடைப்பதில்லை. இந்த இலாகவே ஏழை இலாகா. ஒரிரவு திருடிக்கொண்டு வந்த பொருளில் ஊர்க்காவல் சேவகருக்குப் பாதி கொடுத்தது போக மிச்சம் ஐந்தாறு நாள் ஜீவனத்துக்குக் கூடப் போதாது. சுமார் 25 வருஷங்களுக்கு முன்பு அங்கே ஜமீன்தாராக இருந்த வெள்ளையப்ப நாய்க்கர் இறந்துபோன சமயத்தில், அவருடைய மகனுக்கு 12 வயதுதான் ஆயிருந்தது. ஆதலால், அவனைச் சென்னைப் பட்டணத்திலுள்ள ஜமீன்தார்ப் பிள்ளைகளின் பள்ளிக்

கூடத்தில் சேர்த்துவிட்டு, அவனுக்குத் தகுந்த வய தாகும்வரை ஜமீன் அதிகாரத்தைக் 'கோட்டா வாசுக்' (கோர்ட் ஆப் வார்ட்ஸ்) காரர் நடத்த வேண்டுமென்று ஸர்க்கார் அதிகாரிகள் தீர்மானம் செய்தார்கள். திருச்சிஞப்பள்ளியிலே டிப்டிகலெக்ட ராகவிருந்த துரைசாமி அய்யரைக் 'கோட்டா வாசுக்' கார்யஸ்தராக நியமனம் செய்தார்கள். பழைய ஜமீன்தாரை அடுத்துப் பிழைத்தவர்களிலே அநேகருக்குச் சம்பளம் நின்று போய் விட்டது. ஊரிலே கஷ்டம் அதிகப்பட்டது. மறவர் தரித்தி ரத்தில் முழுகிப் போயினர்; களவுகள் அதிகப் பட்டன; உள்ளூரிலேயே திருடத் தொடங்கி விட்டார்கள். இந்த மறவரில் நமது பூச்சித்தேவன் ஒருவன்.

பூச்சித்தேவன் களவுகள்

பூச்சித்தேவன் உடம்பில் நல்ல வலிமை யுடையவன். ஆனல் களவிலே நல்ல தேர்ச்சி பெற வில்லை. ஆகையால் பெரிய திருடர் இவனைச் சேர்த்துக் கொள்வதில்லை. சிறு சிறு களவுகளிலே இவன் திருப்தி கொண்டிருந்தான். நாளைக்கு வேண்டுமே யென்ற கவலை இவனுக்குக் கிடையாது. அந்தந்த நாள் ஆகாரத்துக்குக் கிடைத்தால் போதும். பெரிய களவுகளிலே சேராதபடியால் இவனை டாணைக்காரர் தொல்லைப்படுத்துவதில்லை. பிராமண வீதிகளுக்கு வருவான். வெளிப்புறத்திலே வேஷ்டிகள், பாட்டி மாருடைய சேலைகள் உலரப் போட்டிருக்கும். ஏதேனுமொன்றை அவிழ்த்துக் கொண்டு போய் எங்கேனும் ஒன்றரையணுவுக்கு விற்று அன்று பகல் போஜனத்துக்கு வழி தேடிக் கொள்ளுவான்.

இரைக் கொள்ளை

மேலத் தெருவின் ஓரத்தில் புன்செய் வெளியை அடுத்த வீட்டில் ஒரு கிழவி தனது பிள்ளையுடனே

குடித்தனம் பண்ணிக் கொண்டிருந்தாள். இவ்விரு வருக்கும் அந்த ஊர் சத்திரத்திலிருந்து நாளொன் றுக்கு மூன்று படி அரிசியும், மேல் சாமானும், படிச் செலவாகக் கொடுக்கும்படி பழைய ஜமீன்தார் காலத்தில் ஏற்பாடாயிருந்தது. அது 'சோட்டா வாசு'க் காலத்திலேகூட நிற்கவில்லை. இவர்கள் வீட்டிலே மண் பாண்டங்களைத் தவிர வேறொரு சாமானும் கிடையாது. இங்கேதான் பூச்சித்தேவன் அடிக்கடி திருட வருவான். நடு நிசியில் கொல்லைக் கதவை எளிதாகத் திறந்துகொண்டு உள்ளே நுழை வான். கூடத்திலே பழஞ் சோற்றுப் பானை வைத் திருக்கும். அதைத் திறந்து பழையதை எடுத்துக் கொண்டு போவான். சத்தத்திலே கிழவி கண் விழித்து விடுவாள். "அது யாரடா அங்கே, பாடையிலே போவாய், படக்கென விழுவாய், யாரெங்கே!" என்று கத்துவாள். "நான்தானம்மா, பூச்சித்தேவன். பானையைத் தொடவில்லை. கோலாலே கை படாமல் சோற்றை மாத்திரம் துணியிலே கவிழ்த்துக்கொண்டு போகிறேன். போய் வருகிறேனம்மா" என்று சொல்லிவிட்டுப் போவான். கிழவி வைதுகொண்டே மறுபடி கதவை நேரே அடைத்துவிட்டு வந்து படுத்துக்கொள்ளுவாள்.

சுந்தரய்யங்கார் வீட்டுச் செய்தி

ஒரு நாள் பகல் 2 மணியிருக்கும்; மாடத் தெரு சுந்தரய்யங்கார் வீட்டிலே அவருடைய தாயார் மாத்திரம் தனியாகக் குடியிருந்தாள். அய்யங்காரும் அவருடைய மனைவியும் வெளியூருக்குப் போயிருந் தார்கள். கிழவி வெளித் திண்ணையிலே உட்கார்ந்து ராம ஜபம் பண்ணிக் கொண்டிருந்தாள். அப்போது பூச்சித்தேவன் அங்கே போய், "தாகத்துக்குத் தண்ணீர் கொடுங்களம்மா" என்று கேட்டான். கிழவி உள்ளே போய், ஒரு செம்பிலே ஜலம் கொண்டு

வந்து வைத்தாள். அதை இவன் எடுத்துக் குடித்துக் கொண்டிருக்கையில், கிழவி சூத்திரன் தொட்ட பாத்திரத்தைத் தான் தொடக்கூடாதாகையால் அதைக் கழுவும் பொருட்டு மற்றொரு பாத்திரத்திலே ஜலம் கொண்டு வருவதற்காக உள்ளே போனாள். திரும்பி வந்து பார்க்கையில் பூச்சித்தேவனையும் காணவில்லை; செம்பையும் காணவில்லை. கிழவி கூவே கூகூவே கூ என்று கத்துகிறாள். இந்தக் கூக்குரலைக் கேட்டுப் பக்கத்து வீட்டுப் சுப்பா சாஸ்திரி குடுகுடுவென்று வெளியே ஓடிவந்து, "என்ன ஸங்கதி?" என்று கேட்டார்.

"அந்தப் படுபாவி பூச்சித்தேவன் வந்து குடிக்கத் தீர்த்தம் கேட்டான். செம்பிலே கொண்டுவந்து கொடுத்துவிட்டு உள்ளே போய்ப் பாத்திர சுத்திக்கு வேறே தீர்த்தம் கொண்டு வருமுன்னே ஆளைக் காணவில்லை. செம்பைக் கொண்டு போய்விட்டான். நான் என்ன செய்வேன்? நல்ல செம்பு. வாங்கி மூன்று மாதங்கூட ஆகவில்லை" என்று கிழவி சொன்னாள்.

"எவ்வளவு நாழிகை யாச்சு?" என்று கேட்டார் சுப்பா சாஸ்திரி. அதற்குக் கிழவி, "இப்போதான். ஒரு நிமிஷங்கூட ஆகவில்லை" என்றாள்.

சாஸ்திரி திரும்பிப் பார்த்தார். ஏறக்குறைய 15 வீடுகளுக்கப்பால் எதிர்ப் பத்தியிலே யிருந்த ஒரு கடையின் முன்பு பூச்சித்தேவன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, ஓரே ஓட்டத்தில் கடைக்குப் போய்ச் சேர்ந்தார்.

அங்கே பூச்சித்தேவன் பாத்திரத்தைக் கடைச் செட்டியிடம் கொடுத்து, "இதை வைத்துக்கொண்டு கால் ரூபாய் கொடும், செட்டியாரே. நாளைக் காலையில் வந்து பணத்தைத் திருப்பிக் கொடுத்து

விட்டுச் செம்பை வாங்கிக்கொண்டு போகிறேன்" என்று சொன்னான். செட்டி செம்பைக் கையிலே வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பூச்சித் தேவன் கோபத்துடன், "என்ன செட்டியாரே, செம்பை அழகு பார்க்கிறீரோ? இதை வைத்துக் கொண்டு கால் ரூபாய் கொடுக்க வலிக்கிறதோ? ஸம்மதமுண்டானால் பாரும். இல்லாவிட்டால் செம்பைக் கொடும் இங்கே. பக்கத்துத் தெரு சோணசலஞ் செட்டியார் நல்ல மனுஷ்யன். அவர் நமக்குச் செம்பு, கிம்பு வைக்காமல் சும்மா கடன் கொடுப்பார். அவரிடம் வாங்கிக் கொள்கிறேன். நீட்டும், செம்பை நீட்டும் இங்கே" என்றான். கடைச் செட்டி, "பொறு தம்பி, பொறு. இதோ கொடுக் கிறேன்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். இந்த சந்தர்ப்பத்திலேதான் சுப்பா சாஸ்திரி அவ்விடம் போய்ச் சேர்ந்தார்.

பூச்சித்தேவனை நோக்கி அதன் மகனே இதன் மகனே என்று சுப்பா சாஸ்திரி சோணமாரியாக வையத் தொடங்கினார்:

பூச்சித்தேவன், "என்ன சாமி, பயித்தியம் கியித்தியம் பிடிச்சுக்கொண்டதா? சங்கதி என்ன? ஏன் வைகிறீர்? சொல்லும்" என்றான். "அட அயோக்கியப் பயலே! சுந்தரய்யங்கார் வீட்டுச் செம்பைத் திருடிக்கொண்டு வந்து கடையிலே விற்கப் போகிறாய்! ஏன் வைகிறேனென்று வேறே கேட்கிறாயா? என்னோடு வாடா நீ. டாணுவுக்குப் போகலாம் வா. வாடா நீ, வா" என்று அட்ட காஸம் பண்ணினார் சுப்பா சாஸ்திரி.

பூச்சித்தேவன் கலகலவென்று சிரித்துக்கொண்டு, "சாமி, நீர் கூப்பிட்டால் உம்மோடு நானுக டாணு வுக்குப் போய் மாட்டிக்கொள்ள வேண்டுமென்று எனக்கு ஆத்திரமா? புத்தியில்லாமல் பேசுகிறீரே.

நடக்கவேண்டிய சங்கதியைச் சொல்லும்" என்றான். சுப்பா சாஸ்திரி மஹா கோபத்துடன், "செம்பை ஏனடா திருடிக்கொண்டு வந்தாய்?" என்று கேட்டார்.

பூச்சித்தேவன், "ஐயோ, திருட்டுக் கிருட்டென்று பேசக்கூடாது, தெரியுமா? ஜாக்கிரதை! பெரிய களவு கண்டு பிடித்துவிட்டார், இவர்! உம்! செட்டியாரே! பார்ப்பான் கையிலே செம்பைக் கொடுத்துப் போகச் சொல்லும். களவு கண்டுபிடிக்க வந்தார் பெரிய களவு!" என்று நகைத்துக்கொண்டே அங்கிருந்து போய்விட்டான். செம்பு சுந்தரய்யங்கார் வீடு போய்ச் சேர்ந்தது.

பூச்சித்தேவனுக்குச் செல்வம் உண்டானது

பூச்சித்தேவன் கண்ணுக்கு நல்ல லக்ஷணமாக இருப்பான். ஜில்பாக் குடுமி; கொம்பு மீசை; மிருகவுடம்பு;—பொதுவிலே அழகுள்ளவன். இப்படியிருக்கையிலே, 'கோட்டாவாசு'க் காலம் போய், அடுத்த ஜமீன்தார் பட்டத்துக்கு வந்தார். அவருக்கு அழகான சேவகர் வைத்துக் கொள்வதிலே பிரியமதிகம். இவனே வேலைக்கமர்த்திக் கொண்டார். நாளாக நாளாக இவன் மேல் அவருக்கு எந்தக் காரணத்தினாலோ அளவு கடந்த அபிமான முண்டாய்விட்டது. எனவே, இவனுக்கு மறக் கூட்டத்தில் கவுரவமதிகப்பட்டது. டாணாக்காரர் இவனைக் கண்டால் இரட்டை ஸலாம் போடுவார்கள். எங்கேனும் பெரிய கொள்ளைகள், வழிப்பறிகள் நடந்தால் இவனுக்குப் பங்கு கொடுப்பதென்ற நியதி யேற்பட்டது. ஆபத்து வந்தால், ஜமீன்தாருடைய தயவு மூலமாக இவன் காப்பாற்றுவானென்ற எண்ணம் திருடருக்கெல்லாம் உண்டாய்விட்டது. அக்காலத்தில் மதுரையிலே ஒரு பெரிய மிராசுதார்

வீட்டில் களவு நடந்து பணமும் நகைகளுமாக ஐம் பதினாயிரம் ரூபாய் போய்விட்டது. டாணாக்காரர் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தும் துப்புத் துலங்க வில்லை. அதிலே பூச்சித்தேவன் சம்பந்தப்பட்டதாகக் குட்டையூரிலே மாத்திரம் சிலருக்குச் சந்தேக மிருந்தது. ஆனால் அதை யாரும் அதிகாரிகளிடம் சொல்லத் துணியவில்லை. பூச்சித்தேவனுக்கு விரோத மாக சாக்ஷி சொன்னால் தலை போய்விடுமென்ற பயம் எல்லாருக்குமிருந்தது. என்ன காரணத் தாலோ, பூச்சித்தேவன் பெரிய செல்வனாகிவிட் டான். அரண்மனை வேலையிலிருந்தபடியாலும், ஜமீன்தார் இவனிடம் மிகுந்த பக்ஷம் பாராட்டின படியாலும் இவனுக்குப் பணம் பெருகிய விஷயத்தில் யாருக்கும் ஆச்சரியமுண்டாகவில்லை. ஊரிலே பூச்சித் தேவர் என்ற பெயருண்டாற்று.

"அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரி குடை பிடிப்பான்." பூச்சித்தேவனுக்குக் கண், தலை தெரியவில்லை. ஊரில் யாரேனும் தன்னிடம் அவ மதிப்புக் கொண்டதாகச் சந்தேகமேற்பட்டால், அவர்களைத் தன் வீட்டுக்கு இழுத்துக் கொண்டு வரச் சொல்லி அடிப்பான். தெருவில் யாரேனும் "பூச்சி" என்று சொன்னால் தன்னைத்தான் சொல்லு கிறார்களென்று சண்டைக்குப் போய் அவர்களை வாய்க்கு வந்தபடி திட்டுவான். 'அந்தப் பாப்பாரப் பயல்', 'இந்த முதலிப் பயல்' என்று யாரையும் இழி வாகப் பேசுவான். டம்பத்துக்காக ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினான். அங்கே காலையில் பிள்ளைகளெல்லாம், "பூச்சியப்பத்தேவர் நீடூழி வாழ்க" என்று சொல்லிப் பிள்ளையாரைக் கும்பிட்ட பிறகுதான் பாடஞ் சொல்லலாமென்று விதியேற் படுத்தினான். கிராமத்துப் பெண்களைக் கெடுக் கலானான். ஏழைகள் பணத்தை நாலு விதங்களிலே

அபகரித்தான். ஊர் முழுதும் இவனைப் பாவி'' என்று பேசத் தலைப்பட்டார்கள்.

முடிவு

இப்படியிருக்கையில், அந்தவூர் வடக்குத் தெரு மறவருக்கும் தெற்குத் தெரு மறவருக்கும் ஏதோ ஒரு விஷயமாக ஒரு பெருஞ் சண்டை யேற்பட்டது. தடிகள் கத்திகளுடன் இரண்டு பக்கத்திலுமிருந்து 100, 150 பேர் வந்து கலகம் பண்ணினார்கள். அதிலே பூச்சித்தேவனும் போனதில் விலாப்புறத் திலே பெரிய குத்துக் காயம் ஏற்பட்டது. இதற் கிடையிலே ஸர்க்கார் அதிகாரிகள் இரண்டு பக்கத் தலைவர்களையும் பிடித்து வைத்தார்கள். சிறைச் சாலை வைத்தியர் பூச்சித்தேவனுடைய விலாப்புண் ணைத் தீர்த்து விடுவதற்கு மூன்று மாதங்களாயின. திருநெல்வேலி நியாயஸ்தலத்தில் விசாரணை நடந்து இவனுக்கு ஏழு வருஷ கடுங்காவல் விதிக்கப்பட்டது. சென்னைப் பட்டணத்திலுள்ள பெரிய நியாய ஸ்தலத்தில் முறையீடு (அப்பீல்) செய்துகொண் டான். வக்கீல்களுக்கும் மற்றவர்களுக்குமாகப் பதி னாயிரம் ரூபாய் செலவாயிற்று. இறுதிவரை இவனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. கீழ் ஸ்தலத் தின் தீர்ப்பையே பெரிய நியாயஸ்தலத்தில் உறுதிப் படுத்திவிட்டார். ஏழு வருஷம் சிறையிலிருந்து வந்தபின் இவனை ஜமீன்தார் கவனிக்கலில்லை. மிஞ்சி யிருந்த சொற்பப் பொருளை வைத்துக்கொண்டு இப்போது மறுபடியும் பூச்சித்தேவன் என்ற பெயருடன் கூடிய வரை யோக்கியனாகவே ஜீவனம் செய்து வருகிறான்.

வேதரிஷிகளின் கவிதை

அதிதி-பரசக்தி

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி

2 ஆகஸ்டு 1916

(குறிப்பு:—அதிதி என்ற சொல்லை உச்சரிக்கும்போது முதற் 'தி'கரத்தை 'உந்தி' என்பதுபோல் மெல்லோசையாகச் செல்லுக. இரண்டாவது 'தி'கரத்தை 'திங்கள்' என்பதுபோல் வல்லோசையாக்க வேண்டும்.)

மாக்ஸ்முல்லர் (Max Muller) எழுதுகிறார்:—

"உண்மையில் 'அதிதி' என்ற தெய்வப் பெயரே 'அநந்தம்' அல்லது எல்லையில்லாமை என்ற கருத்தைக் குறிப்பிடுவதற்கு மனித பாஷைகளில் உண்டான பதங்கள் எல்லாவற்றிலும் முந்தியது. 'திதி' என்றால் கட்டுப்பட்டது, பிரிவுபட்டது, எல்லையுடையது என்று அர்த்தம்.

'அதிதி' கட்டுப்படாதது, பிரிவுபடாதது, எல்லையில்லாதது."

இந்த அதிதி என்ற அநந்த சக்தி தேவர்களுக்கெல்லாம் தாய். எல்லாப் பொருள்களும், எல்லா உலகங்களும் இதனிடத்திலே தோன்றின. அஞ்ஞானக் கட்டுகளிலிருந்து விடுதலை பெற விரும்புவோன் அதிதியையே துணையாகக் கொள்ள வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது.

பிரமனுகிய முதற்கடவுளுக்குத் தாயென்றும் மகளென்றும் சொல்லப்படும் இந்த அதிதியைக் குறித்து ரிக் வேதத்தில் காணைப்படும் சில மந்திரங் களை இங்கு மொழி பெயர்த்துக் காட்டுகிறேன்.

(ரிக் வேதம் 1 - மண்டலம்; 89 - ஸூக்தம்; 10 ரிக்.)

அதிதியே வானம். அதிதி இடைவெளி. அதிதி தாய். அதிதியே தந்தையும் மகனும். அதிதி தேவர்கள் எல்லாம். அதிதி ஐந்து மனுடலத்து மனிதர். சென்றதெல்லாம் அதிதி. இனி வருவதும் அதிதியே.

(5 - 79 - 3)

காலையில் தேவியாகிய அதிதியை அழைக் கிறேன். நடுப்பகலிலும், மாலையிலும் அவளையே அழைக்கிறேன்.

(10 - 65 - 9)

அதிதியையும் அவள் மக்களாகிய இந்திரன், வாயு, வருணன், மித்திரன், அர்யமான் என்ற தேவ ரையும் அழைக்கிறோம். இவர்கள் மண்ணிலும் வானிலும் நீரிலும் கலந்து நிற்கின்றனர்.

குறிப்பு :—வேதரிஷிகளின் கவிதை என்ற நூலிலே அதிதி என்ற பகுதியில் மேலேயுள்ள விஷயம் ஆரம்பத்தில் இருக்கவேண்டும். அது விட்டுப் போயிருக்கிறது.

சக்தி தர்மம்

சக்திதாஸன்

5 ஆகஸ்டு 1916 கன ஆடி 22

கடவுளே ஆணென்றும் பெண்ணென்றும் இரண்டு கலைகளாக வழங்குதல் புராதன தேசங்கள் யாவற்றிலுமே உண்டு. சிலவிடங்களில் சக்தியே பிரதானமென்று கொள்கையிருந்தது.

உதாரணமாகக் கிறிஸ்துநாதரின் மாதாவுக்கு 'மாரி' என்று பெயர். (இதனை ஆங்கிலேயர் 'மேரி' என்று பிழையாக உச்சரிக்கிறார்கள்.) இந்த மாரியென்னும் பெயர் பாலஸ்தினே தேசத்தில் கிறிஸ்து பிறப்பதற்கு முன் எத்தனையோ நூற்றாண்டுகளாக வழங்கிவந்தது. அங்கு மாத்திரமன்று, அங்கிருந்து வடக்கே நெடுந்தூரம் கருங்கடல்வரையிலுமுள்ள நில முழுவதிலும் மிகவும் பழமைக் காலங்களிலே 'மாரி' என்பதோர் தெய்வப் பெயர் வழங்கிற்று. கருங்கடலுக்கும் தர்தனெல் (இங்கிலீஷ்-டார்டனெல்ஸ்) ஜல சந்திக்குமிடையே ('ஸங்காரியுஸ்' என்று கிரேக்க பாஷையில் சொல்லப்படும்) சங்கரி நதிக் கரையில் முற்காலத்திலே பிஸ்கேனு(Piscenus) என்றதோர் பெரிய நகரமிருந்தது. அங்கு பெருங் கோயிலொன்று கட்டி 'மாரியம்மா' என்ற தெய்வத்தை வணங்கினார்கள். அதற்கருகே மாரியாந்தினி என்றோர் நகரிருந்தது. இந்த மாரியை உலகத்தின்

தாயென்றும் எல்லாத் தேவர்களுக்கும் ஆதாரமான மகாசக்தி என்றும் அந்த நாட்டிலும் அதன்சுற்று வட்டங்களிலுமிருந்தோர் கொண்டாடினார்கள். இயற்கைத் தெய்வமே மஹா சக்தி என்று சொல்லப் படுகிறது. அதனையே பூர்வ காலத்தில் பல்வேறு தேசத்தார் பலபெயர் கூறி 'ஈஸிஸ்' (ஈசி) என்றும், 'மாரி' யென்றும் 'துர்க்கை' யென்றும் வணங்கி வந்தார்கள்.

அதனை அரசர் வீரதேவதையாகவும், சில இடங்களில் ஸம்ஹார தேவதையாகவும் கொண்டாடினர். பொது ஜனங்கள் அரசர் வழியை அனுசரித்தனர். யோகிகளும், ஞானிகளும், கவிகளும் அதனைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் ஆதியான மோனவெளி யென்று போற்றினர். எல்லாம் ஒன்றுதான். "வாக்கையும் மனதையும் கடந்த பரம்பொருளை" ஆணென்று சொன்னலென்ன, பெண்ணென்று சொன்னலென்ன? தாயென்றலென்ன, தந்தையென்றலென்ன? எனினும் தெய்வத்தைக் கருதும்போது, "வாக்கையும் மனதையும் கடந்த பரம்பொருள்" என்றுமாத்திரம் நினைப்பது பிரயோஜனமில்லை. அது உண்மையன்று.

"சுத்த அறிவே சிவம்." வாஸ்தவந்தான். ஆனால் இந்த உலகம் என்ன? இதுவும் சிவமே. அறிவுக் கெட்டாதது; பெயர் சொல்ல முடியாதது; ஆதலால் அப்பொருளுக்கு வெறுமே, 'தத்' (அது) என்ற பெயர்காட்டி வேதரிஷிகள் போற்றினர். பின் அதையே அதிதி யென்றும், விஷ்ணுவென்றும், ருத்ர னென்றும் ப்ரம்மணஸ்பதி என்றும், இந்திரன், வாயு, ஸூர்யன், அக்நி, மித்திரன், வருணன், பூமி, சிந்து என்றும் பலவகைகளிலே வணங்கினார்கள். தெய்வம் உண்டென்பதை எப்படி

யறிந்தோம்? உலகமிருப்பதாலே அறிந்தோம். தெய்வம் உயிர்; உலகம் அதன் வடிவம். உலகம் தெய்வந்தான். உலகத்துச் செய்கைகளெல்லாம் தெய்வத்தின் செய்கைகளே. உலகத்தின் நடைகளிலும் விதிகளிலும் தெய்வத்தை உணரவேண்டும். இந்த வழியறியாதோர் உலகத்துக்குப் பயப்படுகிறார்கள். இவ்வுலகத்தைவிட்டுத் தப்பினால் இன்பமுண்டாகுமென்று நினைக்கிறார்கள். அதிலிருந்து பல்வேறு பிழைகளும் தொல்லைகளும் விளைகின்றன. இந்த உலகம் நாராயணனுடைய லீலை. அவன் தனது சக்தியுடன் விளையாடும் விளையாட்டு. சக்தி மார்க்கத்தில் இந்த உலகத்து ஞானம் அதிகப்படவேண்டும். பராசக்தி தெய்வம். ஆத்மஞானத்தைக் காட்டும் நூல்கள் அவளுடைய வேதம். லௌகிக சாஸ்திரமும் அவளுடைய வேதந்தான். பௌதிக சாஸ்திரம் (ஸயன்ஸ்) சக்தி தர்மத்துக்கு முதலாவது வேதம் — வேதாரம்பம். ஸ்தூலத்தை அறிந்தாலொழிய ஸூக்ஷ்மத்தை நன்கு தெரிந்து கொள்ள முடியாது. இஹலோக ஞானத்தை இகழ்ச்சியாகப் பேசும் "ஆத்ம சாஸ்திரம்" பொய். உண்மையான ஆத்ம சாஸ்திரம் இஹலோக ஞானத்தை வளர்க்கும். வான சாஸ்திரம் இல்லாத நாட்டில் ஞான வாசிட்டம் பயன் தரமாட்டாது. எந்த மதமும் ஆரம்பத்தில் லௌகிக ஞானத்தை இகழவில்லை. எல்லாரும் கண்ணை மூடிக்கொண்டு எப்போதும் சிவனைத் தியானம் செய்துகொண்டிருந்தால் சிவன் கோயில் கட்டியிருக்க முடியாது; ஒரு வேலையும் நடக்காது. கண்ணைத் திறந்து உலகக் காரியங்கள் செய்துகொண்டே சிவனை அறிய முயல்வதுதான் சரியான ஞானம். எல்லா மதங்களிலும் இதுதான் உண்மை. உள்ளத் துறவுடன் இன்பங்களைத் துறந்திடுக என்று ஈசோபநிஷத்துக் கூறுகின்றது. ஆனால் கிறிஸ்து மதம், மகம்மதிய மதம், பௌத்த மதம்

முதலிய புறமதங்களிலும் நமது தேசத்து மதங்கள் சிலவற்றிலும், பிற்காலத்துப் பாதிரிகளும் பக்கிரிகளும் பிக்ஷுக்களும் ஸந்நியாசிகளும் ஒரே முழக்கமாக லௌகிக ஞானத்தையும், லௌகிக அனுபவத்தையும் பழிக்கத் தொடங்கி விட்டார்கள். சக்தி தர்மம் சிலவகையான வார்த்தைக்கே இடங் கொடுக்காது. ஏன் ?

பராசக்தியை முதலாவது இவ்வுலகத்திலே கண்டு வணங்குதல் வேண்டும் ; நக்ஷத்திரங்கள் எல்லாம் அவளுடைய விழிகள்; நீயும் காற்றும் அவளுடைய வேகம் ; மண் அவளுடைய திருமேனி ; இருப்பதெல்லாம் அவளுடைய கூலதான்; அவளை இகத்திலே கண்டு போற்றி நலம் பெறவேண்டும்.

குறிப்பு:—இதே தலைப்பில் 24-7-1916-ல் மற்றொரு கட்டுரை வெளியாகி யிருக்கிறது. அது மட்டும் **பாரதி நூல்கள்** மூன்றும் தொகுயில் வெளியாகியுள்ளது. இக் கட்டுரை அதில் சேரவில்லை.

விதி

சக்திதாஸன்

9 செப்டம்பர் 1916 தள ஆவணி 25

விதி மூன்று வகைப்படும் :—

1. தெய்வ விதி
2. சாஸ்திர விதி
3. நாட்டு விதி

தெய்வ விதி

இந்த மூன்றிலே தெய்வ விதியை மாற்ற முடியாது. காற்றிலே வீசிய கல் இடையிலே தடுக்கா விட்டால் மண் மேலே வந்து விழும் ; தீ சுடும் ; பலி குளிரும். மின்னல் அழிக்கும். வெயில் ஒளி செய்யும். இவற்றைப் பிற விதிகளால் சிறிது நேரம் தடுத் தாலும் தடுக்கலாம். இயற்கை விதிகளை மாற்றிவிட வழியில்லை. நன்மை நினைத்தால் நன்மை விளையும். தீமை நினைத்தால் தீமை விளையும். பொய் இழிவு தரும். உண்மை கைதூக்கும். இவை மாறுத விதிகள். இக்காலத்து இயற்கை விதிகளை ஒன்றொன்றாக ஆராய்ந்து கண்டுபிடித்துப் பின் அவற்றை அனு சரித்து வாழவேண்டும். இந்த விதிகளிலே மனித ஜாதியார் இன்றுவரை, "கற்றது கைமண்ணளவு,

கல்லாததுலகளவு." இவற்றின் ஞானம் வளர வளர மனித ஜாதி மேன்மை பெறும்.

சாஸ்திர விதி

சாஸ்திரம் மனிதனுல் எழுதப்பட்டது. ஆதலால் இன்னும் நிறைவு பெறவில்லை. தெய்வ விதிகளைக் கூடியவரை பின்பற்றியே சாஸ்திரக்காரர் எழுத முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனல் காலதேச வர்த்தமானங்கள் மாறுபடுகின்றன. தெய்வ விதிகளைப் பற்றிய புதிய வித்தைகள் வழக்கப்படுகின்றன. அப்போது சாஸ்திர விதிகளை மாற்றுதல் அவசியமாகிறது. திருஷ்டாந்தமாக வைத்திய சாஸ்திரத்தைப் பாருங்கள். கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி விதிகள் மாறுகின்றன. பூர்வீக ஐரோப்பிய வைத்தியர்கள் பெரும்பான்மை எல்லா வியாதிகளுக்கும் நோயாளியின் உடம்பைக் குத்தி ரத்தத்தைக் கொஞ்சம் வெளியேற்றினுல், அதுவே நல்ல முறையென்று நினைத்திருந்தார்கள். தலை நோவு, ஜ்வரம் எது வந்தாலும் உடம்பைக் குத்தி ரத்தத்தைக் கொட்டித் தீரவேண்டும். இந்த மடமையாலே, பலர் ரத்த நஷ்டமே முதற் காரணமாய் அநியாயமாக மடிந்து போனர்கள். இக்காலத்தில் அந்தக் கொள்கை மாறிவிட்டது. ஜ்வரம் வந்தால் பத்தியம் மதுரையில் ஒரு மாதிரி, வேலூரிலே மற்றொரு மாதிரி.

இலக்கணத்தை எடுங்கள் :—

"பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினனே" என்று பவணந்தி முனிவரே சொல்லுகிறார்.

தர்ம சாஸ்திரத்தை எடுங்கள் :—

பஞ்சபாண்டவர் காலத்தில் ஒரு ஸ்திரீ பல புருஷரை விவாகம் செய்து கொள்ளலாம். வேத வியாஸர் காலத்தில் தமையன் பிள்ளையில்லாமல் இறந்து போனால் தம்பி அவனுக்கு ஸந்ததி ஏற் படுத்திக் கொடுக்கலாம்.

விசுவாமித்திரர் காலத்தில் க்ஷத்திரியர் அறிவினால் பிராமணராகி விடலாம் மனுஸ் மிருதியின் விதிகள் வேறே. பராசரர் விதிகள் வேறே. நடப்பிலுள்ள வைத்தியநாத தீக்ஷிதர் விதிகள் வேறே இங்கிலாந்துக்கு வேறு ஸ்மிருதி. ப்ரான்ஸ் தேசத்துக்கு வேறு. பாரஸீகத்துக்கு வேறு. நமக்கு வேறு. நமக்குள் வடநாட்டில் வேறு. தென்னாட்டில் வேறு. வைஷ்ணவருக்கு வேறு. ஸ்மார்த்தருக்கு வேறு.

சாஸ்திரங்களையெல்லாம் காலத்துக்குத் தகுந்த படி மாற்றிக்கொண்டு போகிறோம். வேதத்தைத் தான் மாற்ற முடியாது; உண்மையான வேதமாக இருந்தால்.

நாட்டு விதி

நாட்டு விதி என்பது அர்த்த, நீதி சாஸ்திரங் களின் விதி. இதனைத் தற்காலத்தோர் அரசியல் விதி யென்று சொல்லுகிறார்கள். அதுவும் சாஸ்திர விதியோடு சேர்ந்ததுதான். ஆனால் மற்ற இலக்கணம் முதலிய சாஸ்திரங்களின் விதிகளைக் காட்டிலும் அரசியல் விதிகள் மிகவும் விரைவுடன் மாறுபடுவ தால் இதனைத் தனியாக ஒரு பகுதியாக்கும்படி நேரிட்டது. எனவே, தெய்வ விதிக்குப் பரிபூரண மாக உட்பட்டு சாஸ்திர விதிகளையும் நாட்டு விதி களையும் மேன்மேலும் புத்திசாலித்தனமாகச் சீர் திருத்திக்கொண்டு வந்தால், மனுஷ்ய ஜாதிக்கு க்ஷேமமுண்டாகும்

மாலை

காளிதாஸன் தொடுத்தது

15 செப்டம்பர் 1916 நள ஆவணி 31

குறிப்பு:—பார்க்க: பாரதி நூல்கள் மூன்றும் தொகுதி—பகுதி—சமூகம்.

மாலை

காளிதாஸன் தொகுத்தது

19 செப்டம்பர் 1916 நள புரட்டாசி 4

குறிப்பு: பார்க்க:—பாரதி நூல்கள் மூன்றும் தொகுதி. பகுதி—கலைகள்—மாலை (1) விக்டர் ஹ்யூகோ என்ற பிரஞ்சு நாவியின் வசனங்கள் என்ற கட்டுரையும் இக் கட்டுரையோடு சேர்க்கப்பட்டுள்ளது.

லோகோபகாரம்

சக்திதாஸன் எழுதியது

22 செப்டம்பர் 1916 நள புரட்டாசி 7

ஏற்கெனவே 'சக்தி தர்மம்' என்ற மகுடத்தின் கீழ் ஓரிரண்டு விஷயங்கள் எழுதியிருக்கிறேன்.

'லோகோபகாரம்' என்றாலும் அதே அர்த்தந் தான். லோகோபகாரமாவது லோகத்துக்கு உப கரணம் அல்லது கருவியாக நடத்தல்.

லோகத்துக்கு உபகாரத்தை அதாவது இனிய செய்கையைச் செய்தல். லோகத்துக்கு இனியது செய்வோன், லோக சக்திக்கு ஒரு கருவியாகவே தொழில் செய்கிறான். சக்தியின் கருவியாக இருந்து தொழில் செய்வதையே சக்தி தர்மம் என்றும் சொல்லுகிறோம். பிறருக்கு நாம் செய்தல் இஃதே யாம்.

லோகத்துக்கு இனியது செய்வோன் தன் உள்ளத்தில் பயம் வைத்துக் கொண்டிருக்கலாகாது. பயம் தீர்வதற்கு வழியென்ன? பகை தீர்ந்தால் பயந் தீரும். பகை தீர்க்கும் வழியென்ன? நம்முடைய மனத்தில் பிறர்மீது பகை யெண்ணம் தோன்றும மிருக்க வேண்டும். பாம்பினிடத்திலே நாம் விரோத புத்தி கொள்ளாவிட்டால் அது நம்மைக் கடிக்காது. இந்த வார்த்தையைப் பரிஹாசம் பண்ணுதல்

எளிது. யாரும் செய்யலாம். ஆனால் அது உண்மை. பாம்பைப் பழக்கி வைக்கும் திறமை அன்புக்குண்டு; பாம்பினிடத்தில் கருணை செய்யும் ஞானியைப் பாம்பு கடிக்காது. லோகோபகாரத்தைக் கருதி அந்த ஞானி மனதிலே அன்புடன் அந்தப் பாம்பைக் கோபித்தால் அது அவ்விடம் விட்டு ஓடிப் போய் விடும்.

எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே புத்தன் சொல்லிய தர்மம். மஹான்களெல்லாம் காட்டிய வழி இதுதான். தற்காலத்தில் மனித ஜாதி கூடியவரை நாகரிகப் பட்டிருப்பதால், மிருகங்கள், பக்ஷிகள், பூச்சி, புழு இவற்றால் மனிதனுக்குள்ள பயம் அநேகமாகத் தீர்ந்து போய் விட்டது.

இப்போது மனிதர் ஒருவருக்கொருவர் பயப் படுவதுதான் அதிகம். இதற்கு இதுவரை மனித ஜாதியார் கண்டுபிடித்து அனுசரணையில் வழங்கி வரும் மருந்து உபயோகமில்லை. பயத்தினால் விரோதம் வளர்கிறது. விரோதத்தால் போர் உண்டாகிறது; மனித ஜாதி வீணாக அழிகிறது. எல்லோருக்குமே நஷ்டமுண்டாகிறது. பரஸ்பர பயம் நீங்க வேண்டு மானால் அதற்குப் போர் சரியான மருந்தில்லை. உலகம் தோன்றிய காலமுதல் இன்றுவரை போர்கள் நடந்துதான் வருகின்றன. இது மட்டிலும் மனித ஜாதியிலே ஒருவருக்கொருவர் பயப்படுவது துளி கூடக் குறையவில்லை.

அன்பிருந்தால் பயந் தெளிந்து போகும். ஒரே குடும்பத்திலே ஒருவரையொருவர் கண்டு மரண பயங் கொள்வதில்லை. உலக முழுதும் ஒரே குடும் பத்தைப்போல் வாழக்கூடாதா? எளியவன் அன்பு தொடங்கி வலியவன் சும்மா இருந்தால் ஒன்றும் நடக்காது. எளியவன் வலிமையை விரும்பி நடக்க

வேண்டும். வலியவன் எளியவனிடம் அன்பு செலுத்த வேண்டும்.

யாரிடத்திலும் அன்புடன், யாரிடத்திலும் பயமின்றி நல்லோன் லோகோபகாரஞ் செய்கின்றான்; பராசக்தியின் கையிலே தன்னை ஒரு கருவியாக ஒப்புவித்துவிட்டு, அவள் சித்தப்படி தொழில் செய்து வருகிறான். உலகத்தை ஆக்குதல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழிலுக்கும் பராசக்தி வெவ்வேறு விதமான கருவிகளை வழங்குகிறாள். காற்றும் ஒளியும், வெம்மையும், மண்ணும், நீரும், சித்தமும் உயிரை ஆக்குவதற்குக் கருவிகளாகின்றன.

காற்றும், ஒளியும், வெம்மையும், மண்ணும், நீரும், சித்தமும், பிற உயிர்களும் உயிரைக் காப்பதற்குக் கருவிகளாகின்றன.

இவையனைத்தும் காலமும் சேர்ந்து நாசத்திற்குக் கருவிகளாகின்றன. மனித உயிராகிய நான் மற்ற மனித வுயிர்களைக் காக்கும் கருவியாகத் தொழில் செய்வது நன்று? அழிக்கும் கருவியாகப் போவது நன்று? காப்பது நன்று.

மேலும் கர்ம விதியை மறக்கலாகாது. காக்க விரும்புவோன் காக்கப்படுவான்; அழிக்க விரும்புவோன் அழிக்கப்படுவான். நன்மை விரும்பினால் நன்மை விளையும்; இல்லாவிட்டால் விளையாது.

ஒருவன் லோகோபகாரத்தை மாத்திரமே விரும்பி நடக்கத் தொடங்கினால் அவனுடைய சொந்த வியாபாரங்களுக்குச் சேதமுண்டாகுமென்று சிலர் நினைக்கிறார்கள். இது பிழை. தனது இன்பத்தை விரும்புவோன் முதலாவது செய்ய வேண்டிய காரியம் லோகோபகாரம்.

"நன்றி யொருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி" நமக்குத் திரும்பி வந்தே தீரும். அடுத்த ஜன்மத்தி

லன்று; இந்த ஜன்மத்திலேயே திரும்பி வரும். இது கண்ணுலே கண்ட செய்தி. செல்வம், புகழ், துணை. வினையேற்றம் முதலிய எந்த நலத்தை ஒருவன் விரும்பினபோதிலும், பிறர்க்கு நன்மை செய்யா விட்டால் அது கைகூடாது. அனுபவத்திலே பார்த்துக் கொள்ளலாம். குடும்பத்தைக் காப்பவன், ஊருக்கு நலஞ் செய்வோன் இவர்கள் உண்டு வாழ்ந் திருப்பதனுல் உலகத்துக்கு நன்மையன்றே? நீ பிறரைக் காப்பாற்றினுல் தெய்வம் உன்னைக் காப்பாற்றும்.

தெய்வம் உண்டு. "நலஞ் செய்வோன் என்றும் கெட்டவழி சேரமாட்டான்" என்றுகிதை சொல்லு கிறது. அவனுக்குக் கெடுதி நேரிடாதபடி அவ னுடைய யோக கூஷமத்தைத் தான் சுமப்பதாகத் தெய்வம் வாக்களித்திருக்கிறது. ஆனுல் ஆரம்பத் திலே சோதனைகள் நேரிடும். மனந்தளராமல் லோகோபகாரம் செய்துகொண்டே போனுல் பிறகு சோதனைகள் நின்றுபோய் நன்மை உதயமாகும். லோகோபகாரத்திலே "ஆரம்பத்தில்" மனத் தளர்ச்சி ஏற்படுவது சகஜம்.

'ஏதடா இது! தெய்வத்தை நம்பி, தெய்வமே கர்த்தா, நாம் கருவி யென்று நிச்சயித்து மற்றவர் களுக்கு நன்மை செய்யப்போன இடத்தில் நமக்குத் தீமையுண்டாகிறதே! கிணறு வெட்டப்போன இடத் தில் பூதம் புறப்படுகிறதே! உலகத்தைக் கிளியென்று நினைத்து அதன் பசி நீரப் பால் வார்க்கும்படி போனுல் அது கழுகாக மாறி நம்மைக் கொத்து கிறதே!' என்று திகைத்துப் போய் மனிதன் லோகோபகாரத்தைக் கைவிடக்கருதல் ஸாமான்யம். இது தவறு. தெய்வம் நமக்குத் தகுதி யேறும் பொருட்டாக நம்மைச் சோதனை செய்கிறது.

உள்ளம் பதறுதிருந்தால் விரைவிலே வானந் தெளியும்.

லோகோபகாரம் எப்போது, எந்த வயதில் தொடங்கலாம்? இப்போது, இந்த நிமிஷத்திலே தொடங்க வேண்டும். யார் தொடங்கலாம்? ஆண், பெண், அலி, வலியவன், எளியவன், கிழவன், குழந்தை, குருடன், நொண்டி எல்லோரும் தொடங்க வேண்டும்.

பிறருக்கு இனியது செய்தலாவது யாது? நோய் தீர்த்தல் உணவு கொடுத்தல், அறிவு கொளுத்துதல் முதலிய செய்கை.

பிறரென்றல் அதற்கெல்லையுண்டா? சக்திக்குத் தக்கபடி எல்லை. குடும்பத்தைக் காத்த பிறகு நாட்டைக் காக்கவேணும். பிறகு மனித ஜாதி முழுதையும் காக்கவேணும்.

லோகோபகாரத்தினால் மனிதன் என்ன பயனடைவான்? எப்போது?

லோகோபகாரத்தையே பரிபூரணமாகச் செய்வோன் மனிதநிலை கடந்து அமரநிலை பெறுவான். இவ்வுலகத்தில் இந்தப் பிறவியில் பயன் அடைவான். செய்கையின் வேகத்துக்குத் தக்கபடி பயனின் வேகம்.

சக்தி காக்கும்

நவராத்திரி

சி. சுப்பிரமணிய பாரதி

4 அக்டோபர் 1916 நவ புரட்டாசி 19

இத் தலைப்புடன் இரண்டு கட்டுரைகள் மூன்றும் தொகுதியில் வெளிவந்துள்ளன. பகுதி—தத்துவம்.

கீழ்க்கண்ட பகுதி கடைசிப் பத்தியாக இரண்டாம் கட்டுரையில் இருக்கவேண்டும். ஆனால் அது வெளியாகவில்லை.

"அறிவு தான் விரும்பும் பொருளின் இயற்கையைப் பெற்றுவிடுமென்பதை அனுபவத்தில் தெரிந்து கொள்வதும் எளிது. ஆதலால், நவராத்திரி பூஜை தொடங்கியிருக்கும் இக்காலத்தில் எல்லா வஸ்துக்களையும் எல்லா அணுக்களையும் இயக்குகின்ற பராசக்தியை ஸ்தாபனம் செய்துகொள்ளுவோம். அகண்டத்தில் விளங்கும் தேவியைப் போற்றுவோம். உலகமே அவள் வடிவமாதலால் உலகத்தை வணங்குவோம். இமயமலையிலே பார்வதியாகவும், தெற்கு முனையிலே கன்யாகுமரியாகவும் திருக்கோயில் கொண்டவளை மஹாலக்ஷ்மி தேவியை, அறிவை, சக்தியை, ப்ரதிஷ்டை செய்து பூஜிப்போம். ஓம்."

மாலை

காளிதாஸன் தொடுத்தது

16 அக்டோபர் 1916 நள ஐப்பசி 3

குறிப்பு:— இக் கட்டுரை மாலை (2) என்ற தலைப்புடன் மூன்றும் தொகுதியில் கலைகள் என்ற பகுதியில் வெளியாகியிள்ளது.

மூன்றும் தொகுதியில் கவி என்ற தலைப்பில் உள்ள கட்டுரையின் முதற்பகுதி மாலை என்ற இக் கட்டுரையின் பாகமாக முதலில் வந்திருக்கிறது.

சமூகம் என்ற பகுதியில் ஹிந்துக்களின் கூட்டம் என்ற கட்டுரையில் ஜாதிப் பிரிவு என்ற பகுதியாக வந்துள்ள பாகமும் மாலை என்ற இக் கட்டுரையிலே கடைசிப் பாகமாக முதலில் வந்திருக்கிறது.

ஜப்பானியக் கவிதை

மிஸ்டர் பி. கப்பிரமணிய பாரதி

18 அக்டோபர் 1916 நள ஐப்பசி 5

குறிப்பு— இக்கட்டுரை பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் கட்டுரைகள் என்ற பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும் அது சரியானபடி முழு உருவத்துடன் இல்லை. கட்டுரையின் ஒரு பகுதியும், இடையிடையே சில வாக்கியங்களும் அதிற் காணப்படவில்லை. ஆதலால் சுதேசமித்திரனில் வெளியாகியுள்ளபடி முழுக் கட்டுரையும் இங்கு தருகிறோம்.

ஸடீபத்திலே "மாடர்ன் ரிவ்யூ" என்ற கல்கத்தாப் பத்திரிகையில் உயோநே நோகுச்சி என்ற ஜப்பானியப் புலவர் ஒரு லிகிதம் எழுதியிருக்கிறார். அவர் அதிலே சொல்வதென்ன வென்றால்:— இங்கிலாந்து அமெரிக்கா என்ற தேசங்களிலுள்ள இங்கிலீஷ் கவிதையைக் காட்டிலும் ஜப்பானியக் கவிதை சிறந்தது. காரணமென்ன?

மேற்குக் கவிதையில் சொல்மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண் சேர்க்கையில்லாமல் சொல்லும் வழக்கம் ஐரோப்பியக் கவிதையிலே இல்லை. எதுகை, சந்தம் முதலியவற்றைக் கருதியும், சோம்பற் குணத்தாலும், தெளிவில்லாமையாலும், பல சொற்களைச் சேர்த்து வெறுமே, பாட்டை அது போகிற வழியெல்லாம் வளர்த்துக்கொண்டே போகும் வழக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அதிகமிருக்

கிறது. தம்முடைய மனத்திலுள்ள கருத்தை நேரே வெளியிடுவதில் மேற்குப் புலவர் கதைகளெழுது வோரைக் காட்டிலும் சக்தி குறைந்திருக்கிறார்கள்.

ஜப்பானில் அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்றுகூடச் சேர்ப்பது கிடையாது. கூடை கூடை யாகப் பாட்டெழுதி அச்சிடவேண்டும் என்ற ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக்கொண் டிருப்பவன் புலவனாகமாட்டான். கவிதை யெழுது பவன் கவியன்று; கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி. புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை, மோனம், பலர்களின் பேச்சு இவற்றிலே ஈடுபட்டுப் போய், இயற்கையுடனே ஒன்றுகி வாழ்பவனே கவி.

* * *

ஜபானிய பாஷையில் பதினேழசை கொண்ட 'ஹொக்கு' என்ற பாட்டு ஒரு தனிக் காவியமாக நிற்கும். முப்பத்தோரசையுள்ள 'உத்தா' (உக்தம்) என்பதும் அங்ஙனமே. உயோநே நோகுச்சி தமது கருத்தை விளக்கும் பொருட்டுச் சில திருஷ்டாந்தங் கள் காட்டியிருக்கிறார். அமெரிக்காவில் மிஸ் ரீஸ் (Miss Lizette Woolworth Reese) என்பதோர் கவி ராணி யிருக்கிறார். வேண்டாதவற்றைத் தள்ளி விடுவதில் அந்த மிஸ் ரீஸ் என்ற பெண் புலவர் பெயர் வாங்கியிருக்கிறார். அநாவசியமான பதச் சேர்க்கை, அநாவசியமான கருத்து—விளக்கம் என்ற இரண்டுமில்லாமல் முத்துப்போலே பதங்கள் கோக்கும் நல்ல தொழிலாகிய, அக் கவிராணி இங்கிலீஷ் பாஷையில் எழுதியிருக்கும் அடிகள் சிலவற்றை நோகுச்சி எடுத்துக் காட்டுகிறார்.

மழை

(மிஸ் ரீஸ் எழுதியதன் மொழிபெயர்ப்பு மாதிரியடிகள்)

ஓ! வெண்மையுடையது; மழை இளையது. கூரை மேலே சொட்டுச் சொட்டென்று விழுகிறது; வீட்டுக் குள் நூறு வஸ்துக்கள் ஓடி வருகின்றன. பூண்டுகளின் மணம். பழமையின் நினைவு. இவை யெல்லாம் புல்லாந்தரையிலே குணந் தெரிகிறது. உடைந்த கண்ணுடித் துண்டு போலே. *(1)*

சிறிய வெளிக்கதவு புடைக்கிறது பார். அதுவரை செவந்த கொடிப்பூண்டுகள் நேரே ஓடிச் செல்லு கின்றன. *(2)*

ஓ! வீட்டுக்குள் நூறு வஸ்துக்கள் வந்து நுழை கின்றன. சுற்பூரச் செடியின் மணம். பழைய மகிழ்ச்சி, பழைய துன்பம்; இளைய வெண்மழையிலே கிடைத்தன. *(3)*

மேற்கூறிய பாட்டை எடுத்துக்காட்டிவிட்ட பிறகு நோகுச்சி சொல்லுகிறார்:—

"வெண்மையுடையது; மழை இளையது" என்ற முதலடியில் வியப்பில்லை. அதிஸாமான்யமான வார்த்தை. கடைசி விருத்தம் வயிரம்போலிருக் கிறது. அதை மாத்திரம் தனிக் கவிதையாக வைத்துக்கொண்டு மற்றதையெல்லாம் தள்ளி விடலாம். ஜப்பானியப் புலவன் அப்படியே செய்திருப்பான். சிறிய பாட்டுப்போதும். சொற்கள், சொற்கள், சொற்கள்-வெறும் சொற்களை வளர்த்துக் கொண்டு போய் என்ன பயன்?

ஜப்பானிலே பதினெட்டாம் நூற்றாண்டில் "பூஸோன் யோஸாஹோ" என்ற ஜப்பானியக் கவிராயர் ஒரு 'ஹொக்கு' (பதினெழுசைப்பாட்டு) பாடியிருக்கிறார். அதன் மொழிப்பெயர்ப்பு:—

"பருவமழையின் புழையொலி கேட்பீர், இங்கென் கிழச் செவிகளே." இந்த ஒரு வசனம் ஒரு தனிக் காவியம். பாட்டே இவ்வளவுதான்.

மேற்படி ஹொக்குப் பாட்டைப் படித்துவிட்டுத் திரும்பத் திரும்ப மனனம் செய்யவேண்டும். படிப்பவனுடைய அனுபவத்திற்குத் தக்கபடி அதிலிருந்து நூறு வகையான மறைபொருள் தோன்றும். பல பல பதங்களை அடுக்கி ஏடுகளைப் பெருக்குவது சிறந்த கவிதையன்று. கேட்பவனுள்ளத்திலே கவிதை யுணர்வை எழுப்பி விடுவது சிறந்த கவிதை.

* * *

மற்றுமொரு நேர்த்தியான "ஹொக்குப்" பாட்டு. வாஷோ மத்ஸுவோ (Basho Matsuso) என்றொரு ஜப்பானியக் கவி யிருந்தார். இவர் வறுமையே விரதமாகப் பூண்டிருந்தாராம். ஒரு சீடன் இவரிடம் கல்வி கற்று முடிந்து வீட்டுக்குத் திரும்புகையிலே இவரிடம் மூன்று ரியே (அதாவது ஏறக்குறைய முப்பது வராகன்) காணிக்கையாகக் கொடுத்தான். இவர் ஒருநாளுமில்லாதபடி புதிதாக வந்த இந்தப் பணத்தை வைத்துக் காப்பது தமக்குத் தொல்லையாதலால் வேண்டியதில்லை என்று திரும்பக் கொடுத்து விட்டாராம்.

இவருக்கு காகா (Kaga) என்ற ஊரில் ஹொகூஷி என்றொரு மாணாக்கர் இருந்தார். இந்த ஹொகூஷியின் வீடு தீப்பட்டெரிந்து போய்விட்டது. அந்தச் செய்தியை ஹொகூஷிப் புலவர் தமது குருவாகிய "வாஷோ—மத்ஸுவோ" என்பவருக்குப் பின்வரும் பாட்டில் எழுதியனுப்பினர்.

"தீப்பட்டெரிந்தது :
வீழு மலரின்—அமைதியென்னே !"

மலர் தனக்கு வாழுங்காலம் மாறிக் கீழே விழும் போது எத்தனை அமைதியுடனிருக்கிறதோ அத்தனை அமைதியுடன் மனிதனுக்கு வரும் துன்பங்களை நோக்குகிறான். 'வீடு தீப்பட்டெரிந்தது. ஆனால் அதுபற்றித் தன் மனம் அமைதியிழந்து போக வில்லை' என்ற விஷயத்தை ஹொகூஷி இந்தப் பாட்டின் வழியாகத் தெரிவித்தார்.

* * *

"சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மையென்று நோகுச்சிப் புலவர் சொல்வதுடன், ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர்மாறாக நிற்கிறதென்றும் சொல்லுகிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது. "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்." கிழக்குத் திசையின் கவிதையிலேயே இவ்விதமான ரஸம் அதிகந்தான். தமிழ் நாட்டில் முற்காலத்திலே இது மிகவும் மதிப்பெய்தி நின்றது. ஆனாலும், ஒரேயடியாய் கவிதை சுருங்கியே போய் விட்டால் நல்லதன்று. ஜப்பானிலே கூட எல்லாக் கவிதையும் "ஹொக்குப்" பாட்டன்று. நோகுச்சி சொல்வதிலே அருமையான உண்மையிருக்கிறது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

ஏன்

காளிதாஸன்

1 நவம்பர் 1916 நள ஐப்பசி 17

பார்க்க:— பாரதி நூல்கள் முன்றும் தொகுதி.
பகுதி—சமூகம்

புயற் காற்று

22 நவம்பர் 1916 நள கார்த்திகை 8

குறிப்பு:— இப் பாடல் பாரதி நூல்கள் முதல் தொகுதியில் ஸ்வசரிதையும் பிற பாடல்களும் என்ற பகுதியில் வந்துள்ளது. இதுவும் அடுத்து வரும் புதுச்சேரியில் புயற் காற்று என்ற கட்டுரையும் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட இயற்கை நிகழ்ச்சியைக் குறிக்கின்றன.

புதுச்சேரியில் புயற் காற்று

சி. சுப்பிரமணிய பாரதி எழுதியது

27 நவம்பர் 1916 நள கார்த்திகை 13

இரவு

நள வருஷம் கார்த்திகை மாதம் 8-ம் தேதி புதன்கிழமை இரவு புதுச்சேரியில் யுகப் பிரளயத்தைப் போலே யிருந்தது.

நெடும் பொழுதாக — புதன்கிழமை மாலை தொடங்கியே — மழையும் காற்றும் கடுமையாகத் தான் இருந்தன. இடைவிடாத மழை. இடைவிடாத காற்று.

இரவு பதினெரு மணிக்குமேல் பெரிதாக வளர்ந்துவிட்டது. ஊழிக் காற்று; படீல், படீல், படீல்.

வீடுகள் இடிந்து விழுகின்றன; மரங்கள் சாய்கின்றன; காந்த விளக்குக் கம்பி அறுந்து போகிறது. நான்கு சுவர்களும் மேலே விழுந்துவிடும் போலிருந்தன; நல்ல கோட்டை போன்ற வீட்டிலே இருந்தேன். இருந்தாலும் சத்தம் பொறுக்க முடிய வில்லை ஊழிக் காற்று. மருத்துக்களின் களியாட்டம். பேரச்சம்.

வெளியே என்ன நடக்கிறதென்று சாளரத்தைத் திறந்தால் மழை நீர் சரேலென்று வெள்ளமாக உள்ளே பாய்கிறது. ஒன்றும் கண்ணுக்குத் தெரிய வில்லை. ஒரே பேரிருள். திறந்த சாளரத்தை மூடுவது பிரமப் பிரயத்தனம்.

காலைப் பொழுது

கார்த்திகை மாதம் 9-ம் தேதி வியாழக்கிழமை நல்ல பொழுது விடிந்தது. புயற்காற்று நின்றது.

ஊர்க்காரர் வெளியேறி வீதிக்கு வந்தார்கள். புதுச்சேரிப் பட்டணத்தை நேற்றுப் பார்த்த கண்ணுக்கு இன்று அடையாளம் தெரிய இடம் இல்லை: தெருவெல்லாம் ஒடிந்த மரங்கள். தென்னையும் பூவரசும் வீதிகளில் அதிகம். நூற்றில் எண்பது முறிந்து கிடந்தன. ஓடுகளும், மாடங்களும், கூரைகளும் சேதப்படாத வீடு நான் ஒன்றுகூடப் பார்க்க வில்லை. சில கூரைகள் நெடுந்தூரம் தள்ளி விழுந்து கிடந்தன. காலையிலே தபால் வரவில்லை. தந்திக் கம்பிகளும் காந்த விளக்குக் கம்பிகளும் அறுந்து போய்விட்டன. காந்த விளக்குத் தொழிற்சாலையின் தலை விழுந்துவிட்டது. சுற்று வீதியில் ஏழைக் குடிசைகள் அழிந்து போய்விட்டன. உயிர்ச் சேதமும் நிகழ்ந்திருக்கிறது. தொகை தெரியவில்லை.....

இதுவரை கிடைத்த தகவல் :—

முத்தியால் பேட்டையில் 6000 வீடு நெசவு காரருண்டு. அனேகமாக அத்தனை வீட்டிலும் தறி, சாமான் எல்லாம் சேதம். பெரும்பாலும் வீடுகளே சேதம். மொத்த நஷ்டம் கணக்கிட முடியவில்லை. ஜனச் சேதம் அதிகமில்லை.

பாக்கமுடையான் பேட்டையில் கிராமத்தில் பெரும்பகுதி அழிந்து போய்விட்டது. ஜனச் சேதம் அதிகம்.

அரியாங்குப்பம், குறிச்சிக்குப்பம் முதலிய பாக்கத்துக் கிராமங்களிலெல்லாம் ஜனச் சேதமும் வீடு நஷ்டமும் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

பல வாலிபர்கள் ஜனக் கஷ்டத்தை இயன்ற வரை நீக்கும் பொருட்டாக அன்னதானம் செய்து வருகிறார்கள். இன்றுகூட ஊதலடிக்கிறது.

புயற்காற்றுத் தேவரை வணங்குகிறோம் அவர்கள் உலகத்தில் சாந்தி யேற்படுத்துக.

(வெள்ளி நவம்பர் 24, புதுச்சேரி)

புதன்கிழமை ராத்திரி அடித்தது புயற்காற்றில்லை. அது மருத்து தேவர்களின் களியாட்டம். தெருவெல்லாம் ஒடிந்த மரம். காடு தோட்டமெல்லாம் அழிந்த வனம். பயிரெல்லாம் வெள்ளம் போன தரை.

வீடெல்லாம் இடி. சுவர்; பல கிராமங்களிலே கூரை வீடுகள் அநேகமாக ஒன்றுமில்லை யென்று சொல்லுகிறார்கள். கடற்பாலத்திலே போட்டிருந்த ஆஸனப் பலகைகளைக் காற்றுக் கொண்டு போய் விட்டது. கலவை காலேஜில் பெரிய மகிழ மரம் ஒடிந்து விழுந்துவிட்டது. ஜன்னல்கள் சேதம். இன்று வெள்ளிக்கிழமையான போதிலும் காற்றுக்காக ரஜா. பெரிய காலேஜிலும் ரஜா.

அனேகமாக எல்லாக் கச்சேரிகளிலும் ரஜா வாகவே நடந்து வருகிறது. காந்த விளக்குக் கம்பிகளை இப்போதுதான் ஒரு ஓரத்தில் ஒட்டத் தொடங்கியிருக்கிறார்கள். தெருவில் வெட்டுண்டு கிடக்கும் மரங்களை இன்னும் எல்லா இடங்களிலும் எடுக்கத் தொடங்கவில்லை. பல இடங்களில் காக்கைகள் விழுந்து செத்துக் கிடக்கின்றன. இந்த மாதிரி உற்பாதம் எந்தக் காலத்திலும் பார்த்தது

கிடையாது என்று பெரிய கிழவர்களெல்லாம் சொல்லுகிறார்கள்.

ராஜாத் தோட்டம்

இந்த ஊரில் ராஜாத் தோட்டம் ஒன்றிருந்தது. ஆஹா! என்ன நேர்த்தியான உபவனம். வாயு அந்தத் தோட்ட முழுவதையும் அழித்துவிட்டான். மரங்களெல்லாம் கையாலேஒடிக்கப்பட்ட கரும்பைப் போலே ஒடியுண்டிருக்கின்றன. ஊரைச் சுற்றிலும் நாலு குக்கிராமங்கள் ஜலத்துக்குக் கீழே. இங்கே பஞ்சம். வாழைத் தோட்டங்களே இழந்தார் பலர். வெற்றிலைத் தோட்டமிழந்தவர் பலர். நேற்றுப் பகலில் சலவைப் பங்களாவுக்கு எதிரே வயல் நடுவிலுள்ள ஒரு திட்டை மேலே ஏழெட்டுப் பேர் நின்று கொண்டிருந்தார்கள். சுற்றிலும் தண்ணீர். ராத்திரி மழைக்கெல்லாம் அந்தத் திட்டை வெளியிலே நின்று விறைத்தார்கள். பகலிலே ஆட்கள் போய் நீரிலே நீந்தி இழுத்துக்கொண்டு வந்தார்கள். தண்ணீரில் எத்தனை ஜனங்கள், எத்தனை ஆடுமாடுகள் மிதந்து போயிருக்கக் கூடுமோ? கணக்குத் தெரிய இடமில்லை. விறகு வெட்டிகளுக்கு நல்ல லாபம். தென்னை மரத்தை வெட்டித் தள்ளினால் இரண்டு ரூபாய் கூலி. வீடு காப்புக்காக அபாயமாகத் தோன்றும் தென்னை மரங்களையெல்லாம் வெட்டுகிறார்கள்.....

அன்னதானம்

அன்னதானம் பல இடங்களில் நடக்கிறது. கஞ்சி விடுகிறார்கள். கஷ்ட நிவர்த்தி போதாது. ஏழை ஜனங்களின் கஷ்டங்கள் பொறுக்கக்கூடிய நிலைமையிலே யில்லை. தெய்வந்தான் ரக்ஷிக்க வேண்டும்.

குறிப்பு:—இந்தக் கடுமையான புயற்காற்றைப் பற்றி கவிச் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதி சரிதம் என்னும் நூலில் திரு. ஆக்கூர் அனந்தாச்சாரி அவர்கள் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார் :—

'ஓர் நாளிரவு முழுதும் பாண்டியில் கடும் புயலும் மழையும் மாறி மாறி அடித்தன. வெள்ளைக்காரத் தெருவில் பாபு அரவிந்த கோஷும், ஈசுவரன் தர்ம ராஜா கோவில் தெருவிலுள்ள வீடொன்றில் ஸ்ரீமான் பாரதியாரும், மற்றொன்றில் வ. வெ. சு. அய்யரும் குடியிருந்தனர். ஏறக்குறைய எல்லா வீடுகளும் புயலுக்கும் மழைக்கும் சரணாகதியடைந்து தரையோடு தரையாய்ப் போயின. ஜனங்கள் மழை குளிர் இவற்றுல் நடு நடுங்கிப் போயினர். வ. வெ. சு. அய்யர் வீட்டில் முழங்கால் வரை ஜலம். தமது குழந்தைகளைத் தோளின்மேல் சுமந்து நின்றவண்ண மாக இரவெல்லாம் இருந்தார். பாரதியார் அதற்கு முந்தின நாள் குடியிருந்த வீடு திடீரென்று விழுந்தது. ஆனல் அன்று புதிதாய்க் குடி புகுந்த வீடோ அப் பெரும் புயல் மழை இவற்றை லக்ஷியம் செய்யாமல் ஒருவாறு தாங்கியது. ஆனல் நெற் குவியல் மாத்திரம் நனைந்துவிட்டது. பாரதியார் வீட்டுக் கண்ணுடி ஜன்னல்களைச் சுவரில் ஓயாமல் மோத வைப்பதே காற்றின் வேலையாயிருந்தது. கண்ணுடி உடைந்து தூள் படுத்திருக்கும் அவரது குழந்தைகள் மீது விழுந்தது. அப்போது அவை களுக்கு எவ்வித ஆபத்தும் வரக் கூடாதெனப் பராசக்தியைப் பிரார்த்தித்தார். இச் சம்பவத் தால்,

'காற்றடிக்குது கடல் குமுறுது' முதல்
'தினக் குழந்தைகள் துன்பப்படா திங்கு
தேவியருள் செய்ய வேண்டுகின்றேம்.'

வரை உள்ளதோர் ஸ்வாரஸ்யமான கீதம் பிறந்தது.

"நள வருஷம் கார்த்திகை மாதம் 8உ புதன் கிழமை இரவு முழுதும் பிரளய காலமாகவே இருந்து ஜனங்களுக்குப் பெரிதும் பீதியை உண்டாக்கியது. பொழுது விடிந்தது. புயலும் மழையும் அஸ்தமித்தன. வெளியே வந்து பார்த்தால் அலங்கோமலாகக் கிடந்தது. பாரதி, அய்யர், அரவிந்தர் முதலியோர் பண வசூல் செய்து கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவினர்."

குறிப்பு:—ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி அவர்கள் எழுதிய பாரதியும் கவிதையும் என்னும் நூலில் இந்தப்புயற்காற்றில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு நேர்ந்த கொடிய அநுபவமும் மற்ற விபரங்களும் தரப்பட்டுள்ளன.

சங்கீத விஷயம்

சி. சுப்பிரமணிய பாரதி எழுதுகிறார்

19 டிசம்பர் 1916 தன மார்கழி 15

பொதுப் பள்ளிக்கூடத்தில் சங்கீதம் கற்றுக் கொடுக்கவேண்டும். இது மற்ற நாகரிக தேசங்களில் சாதாரணமாக நடந்து வருகிறது. உயிரிலே பாதி ஸங்கீதம். சாஸ்திரத்தை யாருமே பேணுமலிருந்தால், பாடகர்கூட அதைக் கைவிட்டு விடுவார்கள். ஆதலால் சுதேசமித்திரன் (விசேஷ அனுபந்தம்) பத்திரிகையில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ஸங்கீதம் சீர்திருந்த வேண்டுமென்ற கருத்துடன் எழுதிய லிகிதத்தைப் படித்தபோது எனக்குச் சந்தோஷமுண்டாயிற்று.

இங்கிலீஷ் பாஷையிலே ஒரு பெரிய கவிராயன் ஸங்கீத ஞானமில்லாதவரைக் கள்ளரென்றும் குறும்பரென்றும் சொல்லிப் பழிக்கிறான். பாட்டு ஸகலருக்கும் நல்லது. தொண்டையும் எல்லாருக்கும் நல்ல தொண்டைதானென்பது என் மதம். கூச்சத்தாலும் பழக்கக் குறைவாலும் பலர் தமக்கு நல்ல குரல் கிடையாதென்று வீணே நினைத்துக் கொள்கிறார்கள்.

பாட்டுக் கற்க விரும்புவோர் காலையில் சூரியனுக்கு முந்தியே எழுந்து பச்சைத் தண்ணீரிலே

குளித்துவிட்டுக்கூடியவரை சுருதியும்லயமும் தவ்றுத படி ஸரளி வரிசை முதலியன பழகவேண்டும். உச்ச ஸ்தாயிதான் எப்போதும் நல்லது. உடம்பை நிமிர்த்து முகத்தை நேரே நிறுத்தி முகத்திலும் வாயிலும் கோணல் திருகலில்லாதபடி வாயை ஆவென்று சிங்கம் போலே திறந்து பாடவேண்டும். தொண்டையிலே கரகரப்பிருந்தால் வெறு மிளகைத் தின்னவேண்டும். கற்கண்டு சேர்ப்பது நல்ல தில்லை.

பாட்டுக் கச்சேரி நடத்தும்போது, நடுவிலே மற்ற வாத்தியக்காரரை வாசிக்கச் சொல்லிவிட்டுப் பாடகர் வெறுமே இருப்பதும், தெம்மாங்கு முதலான வேடிக்கைப் பாட்டுக்கள் பாடுவதும் தமக்கு ரஸப்படவில்லை யென்று ஸ்ரீநிவாசய்யங் கார் சொல்லுகிறார். அதை நான் ஒரு பகுதி ஆக்ஷே பிக்கிறேன். வீணை, குழல் முதலிய இசைக் கருவி களும் மத்தளம் முதலிய தாளக் கருவி களும் வாய்ப்பாட்டின் உதவியில்லாமல் தனியே இன்பந் தருகின்றன.

வாத்யம் எட்டாத ஸ்வரத்தைத் தொடப் போய்க் கஷ்டப்படாது. தொண்டையிலே கரகரப் பும், அடைப்பும் இருக்கும்போது கச்சேரி நடத்த வராது. சரியானபடி சுருதி சேர்ந்த பிறகுதான் தொழில் செய்யத் தொடங்கும்.

வீணையும் குழலும் பறையும் வாய்ப்பாட்டில்லா மல் தனியே ஒலிப்பது பழைய நாளிலும் உண்டு. கண்ணன் குழலுக்கு இடைப் பெண் ஒத்துப் பாடி யது முண்டு. எம்பெருமான் தனியே இசைப்பது முண்டு. தெம்மாங்கு முதலியன ஹாஸ்ய ரசத்தை உடையவை. அவற்றை முழுதும் நிறுத்திவிடக் கூடாது. ஆனல் ஒரே மெட்டை வளைத்து வளைத் துப் போன இடமெல்லாம் சொல்லிப் பயனில்லை

தமிழ் பிழையாகவும் பொருள் ரஸமில்லாமலும் பாட்டுக்கள் இருந்தால் அவற்றை மன்றிலே கொண்டு வருதல் நியாயமில்லை.

இருந்தாலும் மத்தளக்காரனுக்குப் பாட்டுக் காரன் பயந்து கட்டுப்பட்டு நடக்கும் விபரீதம் சில இடங்களிலே காணப்படுவதைக் கண்டனை செய்து ஸ்ரீநிவாஸய்யங்கார் சொல்லும் வார்த்தை ஒப்புக் கொள்ளத்தக்கது.

ஏனென்றால் பாட்டுக்காரன் தனது பாட்டுக் களுக்குத் தவறாமல் தாளம் போட்டு வரவேண்டும். இவ்வளவு தாள ஞானம் இருந்தால் பாடகனுக்குப் போதும். அதிகமிருந்தால் மிச்சம். இந்த விஷயந் தெரியாமல். மத்தளக்காரனுக்குப் பட்டுக்காரன் பயப்படுவது மிகவும் வேடிக்கை.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ராகப் பழக்கம், வர்ணங்கள், கீர்த்தனங்கள் முதலிய விஷயங்களைப் பற்றி எழுதியிருப்பதெல்லாம் (பெரும்பகுதி)கேட்ட வுடன் நியாயமென்று கொள்ளத்தக்கது. கீர்த் தனங்கள் பழகுவது மாத்திரம் அவரவரிஷ்டப்படி போகவேண்டும். எது எப்படியாயினும் யாராவ தொரு வித்வான் இந்தத் தமிழ்நாட்டுக்குப் புதிய கீர்த்தனங்கள் ஏற்படுத்தும் வழிகாட்டிக் கொடுத் தால், ஆயிரம் பேர் அதைப் பின்பற்றி மேன்மை பெறுவார்கள்.

குறிப்பு:- இதே தலைப்புடன் பாரதி தூல்கள் மூன்றும் தொகுதியில் மற்றொரு கட்டுரை இருக்கிறது. அக்கட்டுரை பாட்டு என்ற தலைப்புடன் சுதேசமித்திரனில் வெளி யானதை முன்பே எடுத்துக் காட்டியிருக்கிறோம். இக்கட்டுரை அத்தொகுதியில் சேரவில்லை.

காலம்

காலிதாஸன்

26 டிசம்பர் 1916 தன மார்கழி 22

'ஜாதி' என்ற சொல் இரண்டர்த்தமுடையது. முதலாவது, ஒரு தேசத்தார் தமக்குள் ஏற்படுத்தி வைத்துக் கொள்ளும் பிரிவு. வேளாள ஜாதி, பிராமண ஜாதி, கைக்கோள ஜாதி என்பதுபோல். இரண்டாவது, தேசப் பிரிவுகளைத் தழுவிய வேற்றுமை. ஜப்பானிய ஜாதி, சீன ஜாதி, பார்ஸீ ஜாதி, பாரத ஜாதி, ஆங்கிலேய ஜாதி, ஜர்மானிய ஜாதி, ருமானிய ஜாதி என்பதுபோல். இவ்விரண்டும் அதிக அனுகூலம் இல்லையென்பது ஸ்ரீமான் ரவீந்திர நாத டாகுருடைய கக்ஷி.

அமெரிக்காவிலே பிறந்தவன் தன்னை அமெரிக்க ஜாதியென்பதும், இங்கிலீஷ் ஜாதி இல்லை யென்றும் நினைத்துக் கொள்ளுகிறான். இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயனுக்கும் குடியரசுத் தலைவன் வில் ஸனுக்கும் நடை, உடை, ஆசாரம், மதம் பாஷை எதிலும் வேற்றுமை கிடையாது. ஆனால் தேசத்தை யொட்டி வேறு ஜாதி, நேஷன். இந்த தேச ஜாதிப் பிரிவு மேற்குப் பக்கத்தாரால் ஒரு தெய்வம் போலே ஆதரிக்கப்படுகிறது. அங்கு, யுத் தங்களுக்கு இக்கொள்கை ஒரு முக்கிய காரணம்.

எல்லா தேசத்தாரும் ஸகோதரரென்றும், மனுஷ்ய ஜாதி முழுதும் ஒன்றேயென்றும், ஆதலால் தேச வேற்றுமை காரணமாக ஒருவரை யொருவர் அவ மதிப்பதும் அழிக்க முயல்வதும் பிழைகளென்றும் ஸ்ரீ டாகுர் சொல்லுகிறார்.

அமெரிக்காவில் ஒரு சபையிலே இவர் மேற்படி கொள்கையை எடுத்துக்காட்டுகையில், அந்த தேசத் தானொருவன் இவரை நோக்கி, "இவ்விதமான கொள்கையிலிருந்தது பற்றியே உங்கள் தேசத்தை அன்னியர் வென்று கைப்பற்றிக் கொள்ள நீங்கள் தோற்றுக் கிடக்கிறீர்கள்" என்றான்.

"நாங்கள் இப்போது புழுதியோடு புழுதியாக விழுந்து கிடந்தாலும் எங்கள் பூமி புண்யபூமி. உங்களுடைய செல்வத்தின்மேலே தெய்வசாப மிருக்கிறது" என்று ரவீந்திரநாத டாகுர் அவருக்கு மறுமொழி சொன்னராம். அதாவது, இந்த நிமிஷத் தில் செல்வத்திலும், பெருமையிலும் நம்மைக் காட்டி லும் அமெரிக்கா தேசத்தார் உயர்வு பெற்றிருந்த போதிலும், இந்த நிலைமை எப்போதும் மாறும மிருக்குமென்று அமெரிக்கர் நினைப்பது பிழை. நாங்கள் தெய்வத்தையும் தர்மத்தையும் நம்பி யிருக்கிறோம். கீழே விழுந்தாலும் மறுபடி எழுந்து விடுவோம். அமெரிக்கா விழுந்தால் அதோகதி. ஆதலால், இனிமேலேனும் ஹிந்து தர்மத்தை அனு சரித்து உலக முழுவதிலும் எல்லா தேசத்தாரும் உடன் பிறப்பென்றும், சமானமென்றும் தெரிந்து கொண்டு, பரஸ்பரம் அன்பு செலுத்தினால் பிழைக் கலாமென்று ரவீந்திரர் அவர்களுக்குத் தர்மோப தேசம் செய்கிறார்.

வெளித் தேசத்தாருக்குத் தர்மோபதேசம் செய்கையில், நமது நாட்டில் குற்றங்கள் நடப்ப தைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா? இங்கே,

அநாவசியமான ஜாதி விரோதங்களும், (அன்புக் குறைவுகளும்) அவமதிப்புக்களும் வளரவிடலாமா? அவற்றை அழித்து உடனே அன்பையும், உடன் பிறப்பையும் நிலைநாட்டுவது நம்முடைய கடமை யன்றோ?

எது எப்படியானாலும், இந்த தினத்தில் இந்த க்ஷணத்தில் நாமெல்லோரும் (பறையர், பார்ப்பார், எல்லாரும்) ராஜாங்க விஷயத்தில் ஒரே ஜாதி. இப்போது எங்களுக்கு அதிகாரிகள் தயவு செய்ய வேண்டிய விஷயம் என்னவென்றால்;

எல்லா ஜாதியாரும் சீட்டுப் போட்டுப் பிரதி நிதிகள் குறிக்க வேண்டும். அந்தப் பிரதிநிதிகள் சேர்ந்ததொரு மஹாசபை வேண்டும். ராஜ்யத்தில் வரவு செலவு உட்பட எல்லா விவகாரங்களும் மேற்படி மஹாசபையார் இஷ்டப்படி நடக்க வேண்டும். அவ்வளவுதான். மற்றபடி ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை விட்டு விலகவேண்டு மென்ற யோசனை எங்களுக்கில்லை. மேற்படி பிரார்த்தனை பிராமணர் மாத்திரம் செய்வதாக அதிகாரிகள் நினைக்கலாகாது. எல்லா ஜாதியாரும் சேர்ந்து விண்ணப்பம் செய்கிறோம். விடுதலை விண்ணப்பத் துக்கு நல்ல உத்தரவு கொடுக்கவேணும்.

குறிப்பு:—இக்கட்டுரை பாரதியார் நூல்கள் மூன்றும் தொகுதியில் சமூகம் என்னும் பகுதியில் தேசீயக் கல்வி என்ற கட்டுரையின் ஒருபகுதியாகத் தவருகச் சேர்க்கப்பட்டுள்ளது. தேசீயக் கல்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். இது தனிக் கட்டுரையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே முழுவதையும் இங்கு வெளியிடுகிறோம்.

வளர் பிறை

காளிதாசன்

11 ஜனவரி 1917 — கள மார்கழி 28

பார்க்க:—பாரதி நூல்கள் இரண்டாம் தொகுதி. பகுதி—கதைக் கொத்து.

தர்மம்

சக்திதாஸன்

16 ஜனவரி 1917 — கள தை 4

இக்கட்டுரை மூன்றும் தொகுதியில் வெளிவந்துள்ளது. பகுதி-தத்துவம்.

ஆனால் இதன் கடைசி இரு பத்திகளாகிய கீழ்க்கண்டவை அதில் வெளியாகவில்லை. அவற்றை இங்கு தருகிறோம்.

இவருடைய கேள்விகள் சற்று விநோதமாகத் தோன்றியபடியால் அவற்றைப் பற்றி இத்தனை தூரம் எழுதும்படி நேரிட்டது. மேற்படி விசாரணைக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டுமானால் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவர்கள் வேண்டும்.

பொதுவாக எனக்குள்ள புராதனக் கொள்கையை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நல்லொழுக்கமாவது என்னவென்றால் தெய்வத்தை நம்பிப் பிறருக்குத் தீங்கு நினைக்காமல் நம்மிஷ்டப்படி நடத்தல்.

நாற்குலம்

சக்திதாஸன்

13 ஜனவரி 1917 நளதை 6

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி—சமூகம்.

பழைய உலகம்

காளிதாஸன்

19 ஜனவரி 1917 நளதை 7

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி –சமூகம்.

கிளிக் கதை

காளிதாஸன்

26 ஜனவரி 1917 நளதை 14

பார்க்க :—இரண்டாந் தொகுதி. பகுதி— கதைத் கொத்து.

குடிப் பாங்கு

காளிதாஸன்

2 பிப்ரவரி 1917 நளை 21

இங்கிலாந்திலுள்ள "ந்யூ ஸ்டேட்ஸ்மன்" என்ற பத்திரிகையில் மிஷி தேசத்துக் குடியுரிமைக் காப்பு மஹாசபையின் கிளையாகச் சேர்ந்த வியாபார ஐக்யப் பகுதிச் சங்கத்தின் கௌரவ காரியதரிசி ஒரு கடிதமெழுதி யிருக்கிறார். அதில் ஒரு பகுதி இங்கு மொழி பெயர்க்கப்படுகிறது. மிஷி மஹா சபையின் நோக்கங்கள் என்னவென்றால் :—

1. 1916-ஆம் வருஷத்து ராணுவச் சேவக விதிகளை நீக்கிவிடும்படி வேலை செய்வதும், நமது (ஆங்கிலேய)ஜாதிக்கு ராணுவச் சேவகம் எப்போதும் கட்டாயமாகாதபடி தடுப்பதும்;

2. சொல்லுரிமை, குடிவிசாரணை (படை விசாரணை யல்லாதது) முதலிய ப்ரிடிஷ் ஜாதி யாரின் மற்றக் குடியுரிமைகளையும் காப்பாற்றிக் கொள்ளுதல்;

3. குடி விடுதலைக்கு இடர் விளைவிக்கக்கூடிய ராணுவச் சேவகச் சட்டம், பூமி ரக்ஷணைச் சட்டம் முதலிய சட்டங்களின் அமுலைக் கவனித்துக் கொண்டு வருதல்;

4. ஷி சட்டங்களின் குண காரியங்களை வளரவிடாதபடி எதிர்த்தல் என்பன.

உள்நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் ஸாமுயெல் ஷி சபையின் நோக்கங்களைக் குறிக்குமிடத்தே தாம் விரோதப்படுவதாகவும், ஷி சபையின் காரியம் தேச நன்மைக்குக் கேடு விளைவிக்குமென்றும் சொல்லுகிறார். ஆனால் இந்த சபையின் தலைவரோ ராபர்ட் ஸ்மில்லி, பண்டித க்ளிபோர்டு, மாஸிங் ஹாம், ப்ரெய்ல்ஸ் போர்டு முதலிய கீர்த்தியுள்ள பண்டிதர். இவர்களுடைய கார்டிப் நகரத்துக் கூட்டத்திற்குக் கிரயச் சீட்டு வாங்கி வந்த ஜனங்களைத் தவிர்த்து மற்றப் பிரதிநிதிகளின் விவரம் பின்வருமாறு:—

வியாபார ஐக்கியக் கிளைகள்-220 பிரதிநிதி. வியாபார சபைகளும் ஸ்தலத் தொழிற் சங்கங்களும் அனுப்பிய பிரதிநிதிகள் 37.

ஸமூஹ (ஸோஷலிஸ்ட்) கக்ஷி சபைகளும் ஸமாதான சபைகளும் அனுப்பிய பிரதிநிதிகள் 100. மதாபிமான சங்கத்தார்களின் பிரதிநிதிகள் 13. கூட்டுறவு சபையார்களின் பிரதிநிதிகள் 16. ஸ்திரீ சபையாரின் பிரதிநிதிகள் 29. பகுதிப் படாதோர் 34.

இந்த மஹா சபையுடன் 500 சபைகள் வரை சேர்ந்திருக்கின்றன.

மேற்படி காரியதரிசி சொல்லியிருப்பதிலிருந்து ஷி சபையின் காரியங்கள் உள்நாட்டு மந்திரிக்கு ஸம்மதமில்லை யென்று தெரிகிறது. அப்படியிருந்தும், உள்நாட்டு மந்திரி அவர்களுடைய கூட்டத்தைத் தடுக்காமலிருந்தது அவருடைய பெருந்தன்மையை விளக்குகிறது. ஜனங்களின் உரிமைகளை எதிர்த்தால் பிரமாதமுண்டாகுமென்ற தீர்மானத்

தினுல் உள்நாட்டு மந்திரி மேற்படி கூட்டத்தை அதிகாரிகள் தடுக்காதபடி நியமித்திருக்கலாமென்று மேற்படிகாரியதரிசிதமது கடிதத்தில் சொல்லுகிறார். அதை நாம் நம்பவில்லை. ப்ரிடிஷ் மந்திரிகள் இயற்கையிலேயே குடியுரிமைகளைத் தடுக்க மனதில்லாதவர்கள். இது நிற்க. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

ஆதலால், ஷி குடியுரிமைக் காப்புச் சபையார் தேசப் பொதுமைக்கு விபத்து நேர்ந்திருப்பதைத் தடுத்து வெற்றி பெறுவதாகிய ஒரே நோக்கத்துடன் எல்லாக் காரியங்களும் செய்யாதபடி சில்லரைச் சட்டங்களின் மெதுவான ப்ரயோகங்களைக் கண்டனம் பண்ணிக் கொண்டிருப்பது லௌகிகமில்லை யென்றாலும், இந்த விஷயத்தில் அவர்களுடைய செய்கை விபரீதமென்பது மெய்யேயானாலும், அவர்களுடைய வார்த்தையில் எத்தனை குன்றுமணி உண்மை சேர்ந்திருக்கிறதென்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

யுத்தம் நடப்பது காரணமாக ஜனங்களுடைய ஸாதாரண உரிமைகளை அதிகாரிகள் புறக்கணிப்பது சில ஸமயங்களில் அவசியமாக ஏற்பட்ட போதிலும், ஒரேயடியாக ஜன தர்மங்களைப் படுகுழியிலே கொண்டு அமிழ்த்தி விடும்படி ஜனத் தலைவர் பார்த்துக் கொண்டிருக்கலாமா? யுத்த காலத்தில் ஜன உரிமை எவ்வளவு தூரம் வளைய இடங் கொடுக்கலாம்? அதை எல்லைப் படுத்த வேண்டிய காரியம் இப்போது ஐரோப்பியப் பண்டிதர்களை வந்து சூழ்ந்திருக்கிறது.

நான் விஷயங்கள்

காளிதாஸன்

13 பிப்ரவரி 1917 நவ மாசி 2

குறிப்பு:—இக்கட்டுரை மூன்றும் தொகுதியில் சமூகம் என்ற பகுதியில் வெளியாகியுள்ளது.

இதில் உள்ள ஒரு பகுதியான பருவ நிகேதப்பு என்னும் பாகம் பஞ்சசங்கம் என்ற தலைப்பின் கீழ் கலைகள் என்னும் தனிக் கட்டுரையாக இருக்கிறது.

நம்பிக்கை

13 பிப்ரவரி 1917 நவ மாசி 2

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி—தத்துவம்.

தொழில்

5 மார்ச் 1917 நள மாசி 22

I

(வசனத்திரட்டு – "ஆர்ய" பத்திரிகை)

1. மனுதர்ம சாஸ்திரம் சொல்லுகிறது.— தொழிலாளியின் கை தொழில் செய்யும்போது பரிசுத்தமாகிறது.

2. சீ-பிங் என்ற சீன ஞானி:—தர்மிஷ்டன் எப்போதும் முயற்சியோடிருப்பான்.

3. (நபி) ஸலோமான் என்ற யூதஞானி:- சோம்பேறியின் மனவிருப்பம் அவனையே கொல்லு கிறது.

4. தோல்ஸ்தோய் என்ற ருஷிய ஞானி:— தொழில் எத்தனை அசுசியாக இருந்தாலும், அதைச் செய்வதில் அவமானமில்லை. சோம்பலொன்று தான் அவமானம்.

5. உத்தம ஸூக்தம் என்ற பௌத்த நூல் சொல்லுகிறது:—சோம்பல் ஒரு குற்றம். தொழி லின்றி வாழ்தல் ஒரு மலம்.

6. தோரோ என்ற அமெரிக்க ஆசிரியர்:— உடம்பை சோம்பலுக்கும் சொகுசுக்கும் இரை

யாக்கி வைத்திருப்பவனே ஞானியாகக் கொள்ள லாகாது. ஆத்மாவுக்கு உடம்பே முதலாவது சீடன்.

7. கார்லைல் என்ற ஆங்கிலேய ஆசிரியர்:— சந்தேகம், விசனம், மனச்சோர்வு, கோபம், ஏக்கம், இந்தப் பிசாசுகளெல்லாம் மனிதனை அடிக்கும் பொருட்டுப் பதுங்கி நிற்கின்றன. அவன் சோம்ப லுக்கிடங்கொடுக்கும் போது இவையெல்லாம் அவனை வந்து தாக்குகின்றன. தீவிரமாக உடம்பை உழைப்பதே இந்தப் பிசாசுகள் அடிக்காமல் தன் னைக் காத்துக் கொள்ளுவதற்கு நிச்சயமான வழி. தொழிலைக் கைக்கொண்டால், பிறகு எந்தப் பிசாசும் பக்கத்தில் நெருங்காது. மிஞ்சி வந்தால், தூரத்திலிருந்து உறுமும். அவ்வளவுதான்.

8. மோந் தாஞ் என்ற ப்ரான்ஸ் தேசத்துப் பண்டிதர்.—சோம்பலை நரகவாதனைகளில் ஒன்று க் கணக்கிடவேண்டும். அதைச் சிலர் சொர்க்க இன்பங்களில் ஒன்றாக நினைக்கிறார்கள்.

9. நபி ஸாலேமான்: சோம்பேறியே, எறும் பினிடம் போ. அதன் நெறிகளைப் பார். உனக் குப் புத்தி வரும்.

II

விளக்கம்

காளிதாஸன்

மேலே மொழிபெயர்த்திருக்கிற வசனங்களில் தொழிலில்லாதவனுக்கு ஆத்ம ஞானமில்லையென்று தோரோ (6) சொல்லுகிறார். ஆத்மாவுக்கு முதலா வது சிஷ்யன் சரீரமென்பது அவர் கொள்கை. ஆத்ம ஞானி சோம்பேறியாக இருக்கமாட்டானென்ற இவருடைய கொள்கை பகவத்கீதையின் கருத்துக்கு

இணங்கியதேயாகும். தொழிலின்றியிருப்பவனுக்கு விடுதலையில்லை, ஞானமில்லை, பக்தியில்லை. அவனுக்குச் சோறு கிடையாது; தண்டச் சோறு தின்று தொழில் செய்யாதிருப்பவன் கொழுத்து நோய் கொண்டு சாவான். இந்த விஷயங்கள் பகவத்கீதையில் மிகத் தெளிவாகச் சொல்லப்படுகின்றன.

கார்லில் (7) என்ற ஆங்கிலேய ஆசிரியர் தொழிலின்றி யிருப்பவனைச் சந்தேகம் முதலிய பிசாசுகள் வந்து தாக்குமென்று சொல்லிய வார்த்தை பொது அனுபவத்திலே காணத்தக்கது. சந்தேகம், பயம் முதலிய பிசாசுகள் வந்து தாக்காமலிருக்கும் பொருட்டாகவும், அங்ஙனம் தாக்கும் போது அவற்றை மடிக்கும் பொருட்டாகவும் தொழிலென்ற மருந்தைக் கடவுள் கொடுத்திருக்கிறார்.

பூஜை, கல்வி, போதனை முதலியனவும் சரீர உழைப்புப் போலவே கவலையை நீக்கி உடம்பைப் பேணும். உண்மையாகச் செய்யப்படும் பூஜையும், உபதேசமும் எல்லாத் தொழில்களைக் காட்டிலும் சிறந்தன. பொய்ப் பூஜையும், காசைப் பெரிதாக நினைத்துச் செய்யும் ஞானோபதேசமும் மிகவும் இழிந்த தொழில்களாகும். பல இடங்களில் வியாபாரிக்குள்ள மதிப்புப் பூசாரிக்கும் குருக்களுக்கும் இல்லாதிருக்கக் காண்கிறோம். இவர்களுக்கு மதிப்புக் குறைவுண்டாகும் காரணம் உண்மைக் குறைவு தவிர வேறொன்றுமில்லை. அறிவை நல்ல வழிகளில் உழைப்பவனுடைய உடம்பு முயற்சியில்லாமல் சோம்பிப் படுத்திருக்க நியாயமில்லை. சோம்பேறியின் விருப்பங்கள் கவலைகளாக மாறுகின்றன. கையினால் உழைக்காமல் மனத்தால் விரும்புவோன் தன்னைத்தானே தின்று கொள்ளுகிறான். சோம்பேறியின் மனத்தைக் கவலைகள் சூறையாடுவது போல், அவனுடம்பை வியாதிகள் சூறையாடு

கின்றன. முயற்சியினாலே செல்வம் வருமென்றும் முயற்சி யில்லாவிட்டால் வறுமை வருமென்றும் திருவள்ளுவர் சொல்லுகிறார். முயற்சி யில்லாத வருக்கு நோய் வரும், பந்தங்கள் வரும்; அவர்கள் மோந்தாஞ் ஆசிரியர் (8) சொல்வது போல் இவ்வுல கத்திலேயே நரகவாதனைப்படுவார்கள், ஆதலால் ஹிந்துக்களாகிய நாம் முயற்சியைக் கைவிடாமல் நடத்தவேண்டும். முயற்சியுண்டானால் உடம்பிலே வலிமையுண்டு. உள்ளத்திலே மகிழ்ச்சியுண்டு, கல்வியுண்டு, செல்வமுண்டு. நீண்ட வயதும் புகழும் இன்பங்களுமுண்டு. முயற்சி யிருந்தால் பயமில்லை. முயற்சி யுண்டானால் வெற்றியுண்டு. முயற்சி உடை யவனுக்கு விடுதலை கைகூடும்.

பொழுது போக்கு

28 மார்ச்சு 1917 தள பங்

(காளிதாஸனுக்கும் ஸந்தோஷராயருக்கும் நடந்த சம்பாஷணை)

காளிதாஸன் எழுதியது

ஸந்தோஷராயர்:—காளிதாஸரே, பத்
களில் ஏதேனும் இன்று புது விசேஷங்களுண்ட

காளிதாஸன்:—ஒன்றுமில்லை.

ஸந்:—ருஷியாவில் ராஜ்யம் புரண்டு
தாகவும், இரண்டே சில்லரை ஜார் ராஜி
கொடுத்ததாகவும் போட்டிருந்ததே; அதற்க
என்னயிற்று?

காளி:—இரண்டே சில்லரை ஜார் என்
அதென்ன?

ஸந்:—பழைய ஜார் நிக்கொலஸ் ஒன்று
ருடைய ரகஸ்யப் பிள்ளைதான் சில்லரை;
ஒன்றே சில்லரை. பின்பு சக்கரவர்த்தியின்
யாகிய மைக்கேல்; ஆக இரண்டே சில்லரை.

காளி:—சரிதான்.

ஸந்:—ருஷியாவில் நிரங்குசமாகப் பத்தி
சுதந்திரமில்லாமலும், பேச்சுச் சுதந்திர

மலும், தம்மிஷ்டப்படி அரசாண்டுவந்த ஜார் சக்ர வர்த்திகளின் அதிகாரம் தொலைந்து ஜனங்களின் அதிகாரம் ஏற்பட்டதுபற்றி உமக்கு சந்தோஷ முண்டாகவில்லையா?

காளி:—வாஸ்தவந்தான்.

ஸந் :—என்ன ஓய் வாஸ்தவந்தானென்று இலேசாகச் சொல்லுகிறீரே? ஜனதிகாரத்துக்குத் தானே ஐரோப்பாவில் இத்தனை பெரிய சண்டை நடக்கிறது? அதற்காகத்தானே நம்முடைய பிரிட்டிஷ் சிநேகிதர்களும் மற்ற தேச ராஜ்யத் தாரும் கோடி கோடியாகப் பணத்தை வாரி இறைக் கிறார்கள்? லக்ஷக்கணக்கான மனிதர்களைப் பலியிடு கிறார்கள்? பூமண்டல முழுவதும் ஜனதிகாரமும், விடுதலையும் நிலைபெறும். அப்போதுதான் நம்மு டைய நேச ராஜ்யங்களின் நோக்கம் முழுதும் நிறைவேறி, இவர்களுடைய கீர்த்தி எக்காலத்திலும் அழியாமலிருக்கும். ருஷியாவில் பழைய ராஜாங் கத்தை எதிர்த்து, அதன் பொருட்டாகச் சிறைப் பட்டிருந்த தேசாபிமானிகளை யெல்லாம் விடுவித்து விட்டு, அவர்களுக்குப் பதிலாக ரஹஸ்யப் போலீ ஸாரைச் சிறைக்குள்ளே தள்ளிவிட்டார்களென்று பத்திரிகையில் வாசித்தேன். இதில் எனக்குண்டான ஸந்தோஷம் சொல்லி முடியாது.

காளி:—சரிதான்.

ஸந்:—ருஷியாவிலே இதுவரை தேசாபி மானிகள் பட்டுவந்த கஷ்டங்களை ஆதிசேஷ னாலேகூட வர்ணிக்க முடியாது. போலீஸ்காரரின் சந்தேகத்துக்குட்பட்டவர்கள் ஸைபீரியாக் காடு களிலும், உள்நாட்டுச் சிறைகளிலும் துன்பப்பட்டு மடிந்த கொடுமைகளை யெல்லாம் நீர் சரியாகக் கேள்விப்பட்டதில்லையென்று நினைக்கிறேன். கேள்விப்

பட்டிருந்தால் இப்போது நீர் அதிகமாக ஸந்தோஷ மடைவீர்.

காளி:—சரிதான். ஆனல் நீர் போன மாஸம் என்னைப் பார்த்தபோது ஜார் சக்ரவர்த்தியையும் அவருடைய மந்திரிகளையும் புகழ்ந்து பேசினதாக ஞாபகமிருக்கிறது.

ஸந்:—ஓயாமல், ஹிந்துக்களைப் புகழ்ந்து கொண் டிருந்தால் நீர் மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண் டிருப்பீர். போன மாஸம் நான் ஜார் சக்ரவர்த்தி யைப் புகழ்ந்த காரணம் வேறு. ராஜ்யத்தில் எத்தனை கஷ்டங்களிருந்தபோதிலும், ரஸ்புதீன் முதலிய துர்மந்திரிகளின் வார்த்தையைக் கேளாமல், அவர் நம்முடைய நேச ராஜ்யங்களின் விஷயத்தில் உண்மை செலுத்தி வந்ததன் பொருட்டாக அவரைப் புகழ்ந்தேன். இப்போது.....

காளி:—சரி; சரி; நிறுத்தும். வேறேதேனும் கதை சொல்லும் கேட்கிறேன்.

ஸந்:—ஏழெட்டு நாளைக்கு முன்பு நம்மூருக் கடுத்த பிள்ளைப்பட்டி யென்ற கிராமத்தில் ஒருவன் கோபத்தால் தன் மனைவி வயிற்றில் மிதித்தானும். அவள் செத்துப் போய் விட்டாளாம். அந்த விஷயம் இப்போது போலீஸ் விசாரணையிலிருக்கிறதாம். நீர் கேள்விப்பட்டீரா?

காளி:—ஆம்.

ஸந்:—அதிலிருந்து, அந்தக் கிராமத்து ஜனங்க ளெல்லாம் ஆலமரத்தடியில் ஒரு கூட்டம் கூடி இனி மேல் யாரும் பெண்டாட்டியை அடிக்கக் கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டார்களாம். அது கிடக்கட்டும். காளிதாஸரே, உம்மிடம் நான் ஒரு முக்கியமான விஷயம் கலந்து பேசவில்லையே?

காளி:—சங்கதி யென்ன?

ஸந்:—ஏப்ரல் மாதம் 22-ந் தேதி ஒரு வால் நக்ஷத்திரம் எரி நக்ஷத்திரம் ஒன்றைத் தன் வாலில் கவ்விக் கொண்டுவந்து பூமியின்மேல் மோதப் போவ தாகவும் அதனால் இந்த பூமண்டலம் தூள் தூளாக நொறுங்கிவிடப் போவதாகவும் சொல்லுகிறார்களே? அது வாஸ்தவமாக இருக்குமா?

காளி:—பொய்க் கதை.

ஸந்:—உமக்கெப்படித் தெரியும்? அமெரிக்கா தேசத்தில் யாரோ ஒரு பெரிய வான சாஸ்திரப் பண்டிதர் சொல்லியிருக்கிறாரே? அது பொய் யென்று நீர் எப்படிக் கண்டீர்?

காளி:—பொய்க் கதைதான். எனக்கு நிச்சய மாகத் தெரியும். ஏப்ரல் மாதம் 23-ம் தேதி நீர் என்னிடம் வந்து சேரும். அப்போது காரணங்கள் சொல்லுகிறேன்.

ஸந்:—பூமி தூளாய்ப்போன பிறகு நான் உம்மிடம் வந்து கேட்பதெப்படி? நீர் விடை சொல்வதெப்படி?

காளி:—இந்த பூமியில் இன்னும் நாமே நெடு நாளிலிருந்து பலவித நியாயங்கள் நடந்து நிறை வேறுவதைப் பார்க்கப் போகிறோம். பூமியில் நல்ல யுகம் தோன்றப் போகிறது. மனித ஜாதி முழு மைக்கும் விடுதலை யுண்டாகப் போகிறது. நீர் சொல்லிய ருஷிய ராஜ்யப் புரட்சியானது, இனி வரப்போகிற நற்காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்று. பூமி தூளாகாது. மனிதர் ஒருவருக் கொருவர் செய்யும் அநீதி தூளாகும்.

ஸந்:—சரி; சரி; உம்முடைய ஞான மூட்டையை நம்மிடம் அவிழ்க்கத் தொடங்கிவிட்டீர்.....

எனக்குக் காபி சாப்பிட நேரமாகிறது. நான் போய் வருகிறேன்.

இவ்வாறு சொல்லி ஸந்தோஷராயர் எழுந்து போய்விட்டார். ஸந்தோஷராயர் வெள்ளிக்கு எப்படிப் பேசியபோதிலும் மனதுக்குள் தெய்வபக்தி யுடையவர். மனுஷ்ய ஜாதியின் முதுகின் மேலே பல்லாயிர வருஷங்களாகச் சுமந்து போயிருக்கும் அநீதியாகிய மலை நிறுறிப் போகவேண்டுமென்பதே அவருடைய கருத்து.

கடற் பாலத்தில் வர்ணசிரம சபை

காளிதாஸன்

7 ஏப்ரல் 1917 கலா பங்தவி 25

வஸந்த காலத்தில், ஒரு நாள் காலையில் இள வெயில் அடிக்கும் நேரத்தில் வேதபுரத்திலுள்ள கடற்பாலத்தின் கடைசியில், நடுக் கடலின் மீது, ஒரு செம்படவன் உட்கார்ந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அங்கே நானும், எனது நண்பர் சக்ரவர்த்தி சேஷய்யங்காரும் சரீர சுகத்திற்காக நடை பழகப் போனேம். அங்கு புதிதாகச் செய்து வைக்கப்பட்டிருந்த ராஜாங்கத் தோணிகளின் நிழலிலே போய்ச் சிறிது நேரம் உட்கார்ந்து ஆயாஸம் தீர்த்துக் கொள்ளலாமென்று சேஷய்யங் கார் சொன்னார். அந்த நிழலிலே போய் உட்கார்ந் தோம். என் கையில் சில வர்த்தமானப் பத்தி ரிகைகள் கொண்டு போயிருந்தேன். அவற்றை யெடுத்து வாசித்துக் கொண்டிருந்தேன். சேஷய்யங் காருக்குப் போது போகவில்லை. அவர் அந்த மீன் பிடிக்கும் செம்படவனிடத்திலே போய்ப் பேச்சுக் கொடுத்தார். அவனே மீன் சரியாகக் கிடைக்க வில்லையென்ற கோபத்திலிருந்தான். சிறிது நேரம் கழித்த பிறகு சேஷய்யங்கார் என்னை நோக்கி, "வீட்டுக்குக் கிளம்பலாம்; புறப்படும்" என்றார்.

நான் சொன்னேன் :—

"ஸ்வாமி, நான் காலையில் காபி குடித்துவிட்டுத் தான் வீட்டிலிருந்து புறப்பட்டேன். எனக்கு இங்கே சிறிது நேரம் தனியே யிருப்பதில் பிரிய முண்டாகிறது. நீர் அவஸரமானால் வீட்டுக்குப் போம். நான் கொஞ்சம் இங்கே இருந்துவிட்டு வருகிறேன்" என்றேன்.

அப்போது சேஷய்யங்கார் புன்சிரிப்புடனே, "நான் ஆஹாரமில்லாமல் வெளியே புறப்படும் வழக்கம் எப்போதுமே கிடையாது. எனக்கும் பசியில்லை. ஆதலால், நானும் இங்கேயே உம்மோடு சிறிது நேரம் பொழுது போக்கத் தயாராக இருக்கிறேன். இந்த இடத்தில் ஒரு சபை கூடிப் பேசினால் மிகவும் நன்றாக இருக்கும். என்ன செய்யலாம்? அந்தச் செம்படவன் பேச வரமாட்டான். அவன் மீன் கிடைக்கவில்லை யென்று என் மேலே கோபித்துக் கொள்ளுகிறான். நீரோ பத்திரிகையிலுள்ள அண்டப் புளுகுகளையெல்லாம், வேத வுண்மை போலே கருதி, மஹா சிரத்தையுடன், நுழைந்து நுழைந்து வாசித்துக் கொண்டிருக்கிறீர். விடுங் காணும்! பத்திரிகையை அப்பாலே போடும். காற்று மிகவும் ரஸமாக வீசுகிறது. எனக்கு இந்த இடத்தை விட்டுப் போக மனதாகவில்லை. ஏதாவது பேச்செடும்" என்று சொன்னார்.

விதியே சேஷய்யங்கார் ரூபமாக வந்து நம்மைப் பேச்சுக்கிழுக்கிற தென்பதை நான் தெரிந்து கொண்டு பின்வருமாறு சொல்லலானேன் :—

"ஸ்வாமீ, என்னால் வஞ்சனையில்லை. சபை போடுவோம், அதைப்பற்றி யாதொரு ஆக்ஷேபமு மில்லை. ஆனால் உபந்யாஸ மெல்லாம் நீர்தான்

செய்யவேண்டும். நீர் உபந் யாசி; நான்தான் சபைக் கூட்டம். நடத்தும்" என்றேன்.

அதற்கு சேஷய்யங்கார் சொல்கிறார்:—

"நாம் உபந்யாஸ கர்த்தா. நீர் அக்ராஸனாதிபதி, அந்தச் செம்படவன் தான் சபை" என்றார்.

அப்போது, சற்று தூரத்திலே யிருந்த அந்தச் செம்படவன் சொல்லுகிறான்:—

"சாமிமாரே, நீங்கள் வந்தாலும் வந்தீர்கள்; எனக்கு மூன்று மீன் கூட முழு மீனாகக் கிடைக்க வில்லை." சேஷய்யங்கார் இதைக் கேட்டவுடனே கால் ரூபாயை அவன் கையிலே கொண்டு போய்க் கொடுத்து அவனை யழைத்து வந்து நாங்களிருந்த நிழலிலே உட்காரும்படி செய்தார். இவருடைய படாடோபத்தைக் கண்டு ஆரம்பத்திலே அவன் கொஞ்சம் பயந்தான். பிறகு அவர் சொன்னபடி கேட்டால் காசு கிடைக்குமென்று தெரிந்து கொண்டு, அவன் எங்கள் பக்கத்தில் வந்து உட் கார்ந்தான்.

சேஷய்யங்கார் உபந்யாஸிக்கலானார்:—

"நாலு ஜாதி தான் உண்டு. பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ரர். படித்தவன் பிராமணன்; வீரன் க்ஷத்திரியன்; தந்திரசாலி வைசியன்; தொழிலாளி சூத்திரன். இது எந்த தேசத்திலும் உண்டு. எந்தக் காலத்திலும் உண்டு. இதை மாற்றவே முடியாது."

செம்படவன்:—"மெய்தான் சாமி; மெய்தான் சாமி" என்றான்.

சேஷய்யங்கார்:—"இந்தச் செம்படவன் மகன் படித்து சாஸ்திரத் தேர்ச்சி யடைந்து பிரமஞானி யாய் விட்டால் அவனுக்கு என் பெண்ணை விவாகம்

செய்து கொடுப்பேன். அதில் தோஷமில்லே'' என்றார்.

செம்படவன் நடுங்கிப் போனான். ஐயங்காருக்கு புத்தி ஸ்வாதீனமில்லேயென்று நினைக்கத் தொடங்கினான்.

சேஷய்யங்கார் மொழிகிறார்:—''ஆனால் குலத்தையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். குலத்தளவே யாகும் குணம் என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். அம்பட்டனுடைய குழந்தை சிறு பிள்ளேயாக இருக்கும்போதே ஒருவரும் சொல்லிக் கொடுக்காமல் தானுகவே சிரைக்கக் கற்றுக் கொள்ளுகிறது. கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்; ராஜா வீட்டுப் பிள்ளே இயற்கையாகவே சைன்யம் வகுத்து விளேயாடிப் பழகுகிறது. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால் பிறவி ஒருவனுடைய குணத்தையும் தொழிலேயும் நிர்ணயிக்கத்தான் செய்கிறது. ஆதலால் இப்போதுள்ள ஜாதிப் பிரிவை அதிகமாக மாற்றக் கூட வேண்டியதில்லே. 'எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும் அக்குடியிற் கற்றேரே மேல் வருக' என்று சொல்லி பிராமணப் பதவியிலே சேர்க்க வேண்டும். இதற்கிடையே திருஷ்டி தோஷம் புத்திசாலித் தனமில்லே. அதை உடனே நிறுத்திப் போடவேண்டும். 'தீண்டாத ஜாதி' என்கிற பேச்சே கூடாது. அது வெறும் பயித்தியம். நந்தன் சிலேயை அறுபத்து மூன்று நாயன்மாருக்கு நடுவிலே வைத்து குருக்கள் மணியடித்துக் கும்பிடவில்லேயா? ஜாதியாவது குலமாவது! இவையெல்லாம் லௌகிகம். இதனுலே மனுஷ்ய ஸமத்வத்துக்குக் குறைவு நேரிடக் கூடாது. ராம்தாஸ், கபீர்தாஸ் அவர்கள் சொன்னதெல்லாம் பொய்யா?''

இவ்வாறு சேஷய்யங்கார் நெடுந்தூரம் சொன்னார். போகப் போக அவருடைய பிரசங்கத்தில் நான் கொஞ்சம் கவனக் குறைவாக இருக்கும்படி நேரிட்டது. ஏனென்றால் இவர் பேசிக் கொண்டிக்கும் போதே எங்கள் பக்கத்தில் ஒரு கிழவன் வந்து நின்றான். அவனுக்கு சுமார் அறுபது வயதிருக்கும் போலே தோன்றிற்று. ஆனால் திடகாத்திரமுடையவன். அவன் சேஷய்யங்காருடைய பிரசங்கத்தை மிகவும் ஜாக்கிரதையாகக் கேட்டுக் கொண்டு வந்தான். சேஷய்யங்கார் சொல்லும் வார்த்தைகளிலே ஒன்றிரண்டைக் கேட்டுப் புன்சிரிப்புச் சிரித்தான். ஒரிரண்டு வார்த்தைகள் அவன் முகத்திலே கோபக் குறி விளைவித்தன. நான் அவனைக் கையினால் சமிக்கை காட்டி என்னருகே வரும்படி சொன்னேன். ஸமீபத்தில் வந்தான். "நீ என்ன ஜாதி?" என்று கேட்டேன். "பறையன்" என்றான். இதைக் கேட்டவுடன் சக்ரவர்த்தி சேஷய்யங்கார் திரும்பிப் பார்த்தார்.

II

சக்ரவர்த்தி சேஷய்யங்கார் கிழச் சாம்பானை உட்காரச் சொன்னார். அவன் உட்கார்ந்தான். "நான் சொல்லிய வார்த்தைகளை நீ மிகவும் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாயே, நீ யார்? உன் பெயர் என்ன?" என்று சேஷய்யங்கார் சொன்னார்.

அப்போது கிழச்சாம்பான் சொல்லுகிறான்:—

"சாமிகளே, நான் பஞ்சம ஜாதி. என் பெயர் லக்ஷ்மணன். பிராம்மணரே எங்களுக்கு குரு. முன்பொரு மாட்டுக் கொட்டகையில் எங்கள் தாயாகிய ஆதியை பகவன் என்ற பிராம்மணன் மனைவியாகச்

செய்து கொண்டான். பிராம்மண ஜாதி எங்களுக்குத் தகப்பன் முறை. இக்காலத்தில் பலர் எங்களுக்கு உபகாரம் பண்ண வருகிறார்கள். எல்லா மனிதரும் சரிசமானமென்றும் மனிதருக்குள் எவ்விதமான பேதமும் கிடையாதென்றும் பலர் சொல்லுகிறார்கள். எல்லாம் வாய்ப் பேச்சாகத் தானிருக்கிறது. நடத்தையில் ஒன்றையும் காணவில்லை. ஹிந்து மதத்தில் எங்களுடைய நிலைமை தாழ்ந்திருக்கிற தென்றும், கிறிஸ்து மதத்தில் சேர்ந்தால் எங்களுடைய நிலைமை மேன்மைப்படுமென்றும் சொல்லிக் கிறிஸ்தவப் பாதிரிகள் எங்களிலே சிலரைக் கிறிஸ்து மதத்தில் சேர்த்தார்கள். அதில் யாதொரு பயனையும் காணவில்லை. நூற்றிலொரு வனுக்குப் பத்துப் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கிடைக்கிறது. மற்றவர்களெல்லாரும் துரைமாரிடத்தில் சமையல் வேலை பண்ணுதல், பயிரிடுதல், குப்பை வாருதல் முதலிய பழைய தொழில்களைத்தான் செயது வருகிறார்கள். எனக்கு முன்னோருடைய மதமே பெரிது. கிறிஸ்தவர்களுடன் எங்களுக்குக் கொடுக்கல், வாங்கல், சம்பந்தம், சாப்பாடு ஒன்றுமே கிடையாது. என்ன கஷ்டமிருந்தாலும் நாங்கள் ஹிந்து மதத்தை விடமாட்டோம். உங்களைப்போலே எல்லாப் பார்ப்பாரும் எங்களிடம் அன்பு பாராட்டினால், பிறகு எங்களுக்கு யாதொரு குறையுமில்லை. தொழில் ஏதாயிருந்தாலும் குற்றமில்லை. ஒரே தேசத்தில் பிறந்து, ஒரே மதத்தைச் சேர்ந்து, ஒரே கூட்டமாக இருக்கும் ஹிந்துக்கள் ஒருவருக்கொருவர் அன்போடிருக்க வேண்டாமா? எங்கள் ஜாதிக்காரருக்குச் சோறும் துணியும் நேரே கிடைத்து வருகிறதா என்பதைக்கூட மற்ற ஹிந்துக்கள் கவனியாமலிருப்பது நியாயமா? எந்தத் தொழில் செய்து பிழைத்தாலும் தெய்வ பத்தி இருந்தால் இஹத்தில் மேன்மையும்

பரத்திலே மோக்ஷமும் உண்டு. திருவள்ளுவர் எங்கள் குலத்தில் வளர்ந்தார்."

இங்ஙனம் அவன் பேசிக்கொண்டு போகையில் சக்ரவர்த்தி சேஷய்யங்கார் அவனை நோக்கி, "உனக்கு வயதென்ன?" என்று கேட்டார்.

"நீங்களே சொல்லுங்கள். எனக்கு வயதெவ் வளவிருக்கலாம்?" என்று கிழச் சாம்பான் திருப்பிக் கேட்டான்.

"அறுபதிருக்கும்?" என்றார் அய்யங்கார்.

"என்னைப் பார்த்தவர்களெல்லாம் ஐம்பதறுபது வயதென்றுதான் மதிக்கிறார்கள். ஆனால் எனக்கு எண்பது பிராயமாய் விட்டது. இந்தப் பாலம் கட்டினபோது எனக்குத்தெரியும். அந்தக் காலத் தில் நான் இருவது வயதுப் பிள்ளை. நானும் இதில் வேலை செய்தேன். நித்தம் மூன்றணைக் கூலி" என்று கிழவன் சொன்னான்.

"இப்போது உனக்கு ஜீவனம் சுகமாக நடந்து வருகிறதா?" என்று அய்யங்கார் கேட்டார்.

"சுகந்தான் சாமி. இரண்டு பெண்ணும் ஒரு பிள்ளையும் கடவுள் கொடுத்திருக்கிறார். இரண்டு பெண்ணையும் சரியான இடத்தில் கட்டிக் கொடுத்து விட்டேன். மகன் பயிர்த் தொழில் செய்கிறான். நான் மாட்டு வண்டி வைத்திருக்கிறேன். கடலோரத் துக்குக் கிடங்குகளிலிருந்து சரக்கேற்றி வந்தால் வியாபாரிகள் கூலி கொடுப்பார்கள். அதில் எனக் குக் கூடியவரை சரியான வரும்படி கிடைத்து வரு கிறது. இப்போது சண்டையினால் மணிலாக் கொட்டை ஏற்றுமதி குறைந்திருக்கிறது. அதனால் எனக்கு வரும்படியில்லாமலிருக்கிறது. இருந்தா லும், கடவுள் கிருபையால் போஜனத்துக்குக் கஷ்ட மில்லை" என்று கிழச் சாம்பான் சொன்னான்.

"இவவளவு படிப்பு நீ எங்கே படித்தாய்?" என்று நான் அந்தக் கிழச் சாம்பானிடம் கேட்டேன். அதற்குக் கிழச்சாம்பான் சொல்கிறான்:—

"என்னுடைய பிதாவுக்கு வாத்தியார் வேலை. அவர் தமிழிலே மேலான படிப்புள்ளவர். நானும் திருக்குறள் முதலிய சாஸ்த்திரங்கள் படித்திருக்கிறேன். படிப்பிலே என்ன பயனுண்டு, சாமி? பெரியோர்களுடைய சேர்க்கையால் தெய்வபக்தி ஏற்பட்டது. அதையே ஊன்றுகோலாகக் கொண்டு பிழைத்து வருகிறேன்" என்றான்.

அப்போது சேஷய்யங்கார் அவனை நோக்கி;—

"இந்த தேசத்து ஜாதிக்கட்டு அநியாயமென்று உனக்குத் தோன்றவில்லையா? தெருவுக்குள் உங்களவர் வரக்கூடாதென்று மற்ற ஜாதிக்காரர் ஏற்பாடு செய்திருப்பது பற்றி உனக்கு வருத்தமுண்டாகவில்லையா? உன் மனம் அதை நினைத்து நினைத்துக் கொதிக்கவில்லையா?" என்று கேட்டார்.

அதற்குக் கிழச் சாம்பான் :—

"இல்லை, சாமீ; என் மனம் அதிலே கொதிப்படையவில்லை. மனிதருடைய இஷ்டப்படி இந்த உலகம் நடப்பதாக மூடர் நினைக்கிறார்கள். நீங்கள் சொல்லிய அநியாயம் என் கண்ணுக்குத் தெரியத்தான் செய்கிறது. அதிலே வருத்தமில்லை. விதிப்படி எல்லாம் நடக்கிறது. அநியாயம் உலகம் முழுதையும் சூழ்ந்திருக்கிறது. சீக்கிரம் அழிந்து போய்விடும். உலகத்தில் அநியாயம் குறைவுபடும்போது எங்கள் ஜாதிக்கும் நியாயம் கிடைக்கும். அதைப் பற்றி எனக்குக் கொஞ்சமேனும் பயமில்லை, எந்த அநியாயமும் உலகத்தில் நீடித்து நிற்காது. ராவணாதிகள் இப்போதிருக்கிறார்களா? அவர்கள் காலத்தில் என்ன அநியாயம் நடந்தது! பிராமணர்

களுடைய யாகத்தை அழிக்கவில்லையா? மனிதர் களைப் பிடித்துப் பிடித்துத் தின்னவில்லையா?.....

கேட்டீர்களா? சாமிமாரே? என் தகப்பனார் இறந்துபோய் இப்போது நாற்பது வருஷமாகிறது. அவர் தொண்ணூற்றிரண்டு வயதிருந்தார். சாகும் வரையில் பேச்சு வார்த்தை தள்ளாடவில்லை. உறுதி யாகவே யிருந்தார். அவர் செத்துப் போவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னே ஒரு நாள் பாதி ராத்திரியில் என்னை எழுப்பிப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு பல செய்திகள் சொன்னார். அதில் ஒரு வார்த்தை இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. கேட்டீர்களா, சாமிமாரே? என் தகப்பனார் சொன்னார்: 'அடே, லக்ஷ்மணா, நான் எப்போது செத்துப் போவேனென்று தெரியாது. ஆனால் என்னுடைய குரு எனக்குச் சொல்லி வைத்த ஆச்சரியமொன்றை உனக்குச் சொல்லிவிட்டுப் போகிறேன். கலியுகம் ஐயாயிரம் வருஷத்துக்குப் பிறகு ஒரு புது யுகம் பிறக்கும். அதுதான் கலியுகத்துக்குள்ளே கிருதயுகம். அப்போது இந்த உலகமே மாறும். அநியாயங்களெல்லாம் நொறுங்கித் தவிடுபொடி யாகி விடும். நாலு குலம் மறுபடியேற்படும். அந்த நாலு குலத்தாரும் வெவ்வேறு தொழில் செய்து பிழைத்தாலும், ஒருவர்க்கொருவர் அநியாயம் செய்யமாட்டார்கள். துரோகம் செய்யமாட்டார்கள். அன்பே தெய்வமென்று தெரிந்து கொள்ளுவார்கள். அன்பிருந்தால் குழந்தையும் தாயும் ஸமானம்; ஏழையும் செல்வரும் ஸமானம்; படித்தவனும் படியாதவனும் ஸமானம்; அன்பிருந்தால் மனிதனும் தெய்வமும் ஸமானம்; அன்பு பூமியிலே மேலோங்கி நிற்கும்.' அப்போது மாதம் மூன்று மழை நேரே பெய்யும். பஞ்சம் என்ற வார்த்தையே இராது. தெற்கு தேசத்தில் பிராமண குலத்தில் கபில முனிவரும் அகப் பேய்ச் சித்தரும் திரும்பி அவதாரம்

செய்வார்கள். அவர்கள் ஊரூராகப் போய் ஜனங்களுக்கு தர்மத்தைச் சொல்லி ஜாதி வழக்கையெல்லாம் தீர்த்து வைப்பார்கள். அப்போது தர்மம் நிலை பெற்று நிற்கும். நீ இருக்கும்போதே இந்தப் புதிய யுகம் ஆரம்பமாய்விடும். உன் கண்ணாலே பார்ப்பாய்' என்று என் தகப்பனார் சொன்னார்."

இங்ஙனம் அந்தக் கிழச் சாம்பான் சொல்லி முடித்தான். பிறகு நேரமாய் விட்டபடியால் சபையைக் கலைத்து விடலாமென்று நான் சொன்னேன். சேஷய்யங்கார் அந்தக் கிழச் சாம்பானைப் பல வார்த்தைகள் சொல்லிப் புகழ்ந்தார். பிறகு அவ்விருவரும் தனியாகப் போய் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பால் சேஷய்யங்கார் செம்படவன் கையில் இன்னும் கால் ரூபாய் கொடுத்து, "என்னால் உனக்கு நஷ்டமேற்பட்டதற்குச் சரியாய்ப் போய்விட்டது" என்றார். கிழச் சாம்பானும் விடை பெற்றுக்கொண்டு போனான். நானும் சேஷய்யங்காரும் திரும்பி வீட்டுக்கு வருகையிலே அவர் என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. ஏதோ தன் மனதுக்குள் தீர்க்கமான யோசனை செய்துகொண்டு வந்தார். இடையிடையே அவர் முணுமுணுவென்று சொல்லிய வார்த்தைகளில் இரண்டொன்று என் காதில் பட்டது.

"ஹிந்து தேசமே! உன்னுடைய மஹிமையை நான் என்னென்று புகழ்வேன்?" என்றார்.

குறிப்பு :—இக் கட்டுரையின் இரண்டாம் பாகம் 17-1-1917-ல் வெளியானது.

காமதேனு

7 மே 1917

பார்க்க : முன்னும் தொகுதி-பகுதி-தத்துவம்.

விளக்கு

சக்திதாசன்

10 மே 1917 பிங்கள சித்திரை 28

"எழுத்தறி வித்தவன் இறைவனுகும்."

வாத்தியாரும் சரி, தெய்வமும் சரி. கோயிற் குருக்களே கொண்டாடுவது போலே பள்ளிக் கூடத்து வாத்தியாரையும் கொண்டாட வேண்டும். பர்மாவில் ஆயிரம் ஆண் பிள்ளைகளில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 376 பேர் என்றும்; அதே மாதிரி கணக்கு பரோடாவில் 1000-க்கு 175; திருவாங்கூரில் 248; கொச்சியில் 243; வங்காளத்தில் 140 என்றும், சென்னை மாகாணத்தில் எழுத்து வாசனையுடையவர்கள் 1000-க்கு 138 பேரென்றும் 1911-ம் வருஷத்து ஜனக் கணக்கில் தெரிகிறது. பர்மாவில் புத்த குருக்கள் படிப்புச் சொல்லிக்

கொடுப்பதை ஒரு கடமையாக வைத்துக் கொண் டிருப்பதால் கொஞ்சம் நல்ல நிலைமையிலிருப்பதாகத் தோன்றுகிறது. பரோடாவில் கல்வி விருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின் றன. திருவாங்கூர், கொச்சி ஸமஸ்தானங்களி லுள்ள சுதேசி அதிகாரிகள் தமது கடமையை பரோடாவுக்கு முந்தியே படிப்பு விஷயத்தில் கொஞ் சம் அதிக சிரத்தையுடன் செலுத்தத் தொடங்கிய தாகவும் ஏற்படுகிறது. இந்த விஷயத்தில் நம்மவர் சர்க்கார் அதிகாரிகளுடைய உதவியை எதிர்பார்ப் பது பயனில்லாத முறை. நாட்டை ஆளுவதிலே மிகுந்த செலவு உண்டாவதால் படிப்பை விருத்தி செய்யப் பண்மில்லை யென்று அதிகாரிகள் எத் தனையோ தரம் ஸாங்கோ பாங்கமாகச் சொல்லி விட்டார்கள். "படிப்புச் செலவுக்கென்று தனித் தீர்வை போடுங்கள்; ஜனங்கள் சந்தோஷத்துடன் செலுத்துவார்கள்" என்று கோகலே விளக்கி விளக்கிச் சொன்னார். அது சர்க்காருக்கு சம்மத மில்லை. ஆகவே, நமது தேசத்து ஜனங்களை ஐரோப்பாவிலுள்ள ஜாதியாரைப் போலவும் ஜப்பா னியரைப் போலும் படிப்பு மிகுந்த ஜனங்களாகச் செய்வதற்கு சர்க்கார் அதிகாரிகளிடமிருந்து பணம் கிடைக்குமென்று நம்பியிருப்போர் நெடுங்காலம் படிப்பில்லாமலே யிருப்பார்களென்பது "உள்ளங்கை நெல்லிக்கனி போல" விளங்குகிறது. திருவள்ளுவர் சொன்னார் :—

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்."

படியாதவனுக்கும் படித்தவனுக்கும் தாரதம்யம் எத்தனை யென்றால், மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ளதத்தனை.

கூடித் தொழில் செய்

இங்கிலீஷ், ஸம்ஸ்க்ருதம், தமிழ் என்ற பாஷைகளில் ஏதேனும் ஒன்று படித்து யாதொரு உத்தியோகமுமில்லாமல் சும்மா இருக்கும் பிள்ளைகளுக்கு நான் ஒரு யோசனை கண்டு பிடித்துக் கொடுக்கிறேன். இஷ்டமானால் அனுசரிக்கலாம். அனுசரித்தால் லாபமுண்டு.

கூடி வினை செய்வோர்
கோடி வினை செய்வார்

கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து, கிராமந்தோறும் யாத்திரை செய்யுங்கள். ஊருராகப் போய்ப் பள்ளிக்கூடங்கள் போடுவதே கைங்கரியமாக வைத்துக் கொள்ளுங்கள். ஆரம்பத்தில் வண்டிச் செலவுக்குப் பணமில்லையானால் நடந்து போகவேண்டும். மற்றபடி ஆஹார வ்யவஹாரங்களுக்கு நமது பூர்வ மதாசார்யார்களும், தம்பிரான்மாரும், ஞானிகளும், சித்தர்களும், பக்தர்களும் செய்த படியே செய்யுங்கள். எங்கே போனாலும் உயர்ந்த மதிப்பும், உபசாரங்களும் ஏற்படும். கூட்டத்துக்கு விருந்து காட்டிலேகூடக் கிடைக்கும். அங்கங்கே திண்ணைப் பள்ளிக்கூடங்களும், குடிசைப் பள்ளிக் கூடங்களும் போட்டுத் திறமையுடையோரை வாத்தியாராக நியமித்துக்கொண்டு போகலாம். யாத்திரையின்பம், தேசத்தாரின் ஸத்காரம், வித்யாதான புண்யம், சரித்திரத்தில் அழியாத கீர்த்தி இத்தனையும் மேற்படி கூட்டத்தாருக்குண்டு. படிப்பு எல்லா மதங்களுக்கும் பொது. எல்லா தேசங்களுக்கும் பொது. எல்லா ஜாதிகளுக்கும் பொது. திருஷ்டாந்தமாக, ஐரோப்பியர் அதிசப் பயிற்சி செய்திருக்கும் ரஸாயனம் முதலிய சாஸ்த்ரங்கள் நமக்கு மிகவும் அவஸரம். எவ்விதமான பயிற்சிக்கும் தேச

பாஷைகள் எழுதவும் படிக்கவும் செய்விப்பதே ஆதாரமாகும். அதை முதலாவது வேரூன்றச் செய்ய வேண்டும். ஹிந்துப் பிள்ளைகளே, உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. கூட்டங் கூடி நாட்டைச் சுற்றுங்கள். தமிழ் வளர்ந்தால் தர்மம் வளரும். பிராமணர் முதலாகப் பள்ளர் வரையிலும், எல்லா ஜாதிகளிலும், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகுதிப்பட்டால், அநாவசியப் பிரிவுகள் நிச்சய மாகக் குறைவு படும். நமக்குள் கைச்சண்டை மூட்டி விடுவோரையும், பாஷைச் சண்டை, சாதிச் சண்டை மூட்டிவிடுவோரையும் கண்டால் ஜனங்கள் கை கொட்டிச் சிரிப்பார்கள். ஹிந்துக்களாகிய நாமெல் லாரும் ஒரே கூட்டம், ஒரே மதம், ஒரே ஜாதி, ஒரே குலம், ஒரே குடும்பம், ஒரே உயிர் என்பதை உலகத் தார் தெரிந்து கொள்ளுவார்கள். அதனால் பூமண்ட லத்துக்கு க்ஷேமமுண்டாகும்.

விடுதலை

காளிதாஸன்

26 மே 1917 பிங்கள வைகாசி 13

திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்கிற மூன்று புருஷார்த்தங்களையும் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளுக்குள் பாடிக் காட்டிய திறமையைக் கண்டு வியந்து சிலர் ஔவையாரிடம் சொன்னார்களாம். ஔவையார் நான்கு புருஷார்த் தங்களையும் ஒரே வெண்பாவுக்குள் பாடிக் காட்டினளாம்.

ஈதல்அறம்; தீவினை விட்டீட்டல் பொருள்; எஞ்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு [ஞான்றும்
பட்டதே யின்பம், பரனிணைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

கொடுப்பது தருமம்.

பாட்டைக் கொடுத்தாலும் சரி; நாட்டைக் கொடுத்தாலும் சரி; பணம், கல்வி, மருந்து, தைரி யம், ஏதேனுமொரு நல்ல பொருளை உடையவன் வேண்டியவனுக்குக் கொடுத்தால் அஃதறம். உலகத் தில் ஸாமான்ய மனிதனைச் சூழ்ந்து மிக்கோர், ஸமானஸ்தர், தாழ்ந்தோர் என மனிதர் மூன்று வகையாகக் காணப்படுகிறார்கள். இந்த மூன்று திறத்தாருக்கும் அவன் கொடுக்க வேண்டிய

கொடைகள் காலம், தேசம், இவற்றுக்குத் தக்க படி அந்தந்த விதமாக மாறி நிற்கும். இன்னின்ன காலத்தில் இன்னின்னருக்கு இன்னின்ன பொருள் கொடுக்க வேண்டுமென்பது தர்மிஷ்டனுக்கு ஸ்வ பாவத்திலேயே தெரியும். சேர்க்கப்படுவது செல்வம். மனிதனுக்கு இன்பம் தரும் பண்டங்களையும் அவற் றைக் கொள்வதற்கு நல்ல கருவியாகிய பொன்னை யும் சேகரித்து வைக்க வேண்டும். இடைவிடாமல் சேர்க்க வேண்டும். கை பற்றின படியாகவே இருக்க வேண்டும். ஆனல் தீயகாரியம் செய்து, கெட்ட தொழில் செய்து சேர்த்த செல்வம் நிற்காது. செல் வம் சேர்த்த பிறகு அதன் உரத்தால் பிறர்க்குத் தீங்கு செய்வாரும் விரைவிலே கெடுவார். "அல்லற் பட்டாற்றுது அழுதகண்ணீ ரன்றே செல்வத்தைக் தேய்க்கும் படை" என்று திருவள்ளுவரும் சொன் னர். துன்பப்பட்டார் அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது, அந்தத் துன்ப முண்டாக்கியவனு டைய ஐசுவரியத்தை அறுத்தெரியும் ஆயுதமாகும். செல்வம் இனிது. அது முயற்சியினல் சேர்க்கப்படு வது. பயனுள்ள தொழிலே மேன்மேலும் ஊக்கத்து டனும் அறிவுடனும் செய்வதால் பொருள் பெருகும். தீயது செய்தாலன்றிப் பொருள் தேட முடியா தென்று மூடர் நினைக்கிறார்கள். தீயது செய்யாதபடி சேகரிப்பதே பொருளென்றும், மற்றையது பல துன்பமுண்டாக்கி விரைவிலே அருந்து போவதோர் மருளென்றும் ஔவை சொல்லுகிறாள்.

பெண்ணும், ஆணும் அன்பு கொண்டு வாழ் வதே இன்பங்களிலெல்லாம் சிறந்த இன்பம். உண வும், ஸ்நானமும், பூவும், சந்தனமும் முதலிய இன் பங்களெல்லாவற்றைக் காட்டிலும் காதலின்பமே சிறந்தது. காதலுடைய இருவர் கருத்திலே ஒன்று பட்டவராய் ஆதரவு கொள்ளும் நிலையை மனிதர்

கட்டுப்பாடுகளாலும், பணச் செருக்காலும், அநீதி யாலும் பெற விரும்புகிறார்கள். ஆண் பெண் உற வினால் வரும் துன்பந்தான் மனிதருக்கு இவ்வுலகத் தில் மற்றெல்லாத் துன்பங்களைக் காட்டிலும் அதிக மாக ஏற்பட்டுவிட்டது. விவாக முறையைச் சில தேசங்களில் நரகம்போலே செய்து விட்டார்கள். தெய்வம் கொடுக்கும் இன்பத்தை மனிதர் அறியா மையாலும் பாபசிந்தையாலும் துன்பமாக மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

தெய்வத்தை நம்பி மேற்படி மூன்றனுள் எது வும் இன்றியமையாத தில்லையென்று கொண்டு, வருவதுதானே வருமென்று சொல்லி, எல்லாம் தெய்வத்தின் செய்கையாதலால் நமக்கெவ்வித மான பொறுப்புமில்லை யென்று நடப்பதே விடுதலை இன்பம். துன்பம் எது நேர்த்தாலும் சரியென்று மனச்சுவலையை ஒரேயடியாக நெருப்பிலே போட்டுக் கொளுத்திவிட்டு தெய்வத்தின் நினைப்பே கதி யென்று நிற்பது விடுதலை. "எல்லாத் தருமங்களையும் விட்டு, என்னையே சரணடைக" என்று கீதையும் சொல்லிற்று.

இந்த விடுதலை பெற்றவன் பண்டாரமாகிக் கந்தையுடுத்துப் பிச்சை வாங்கித் தின்பானென்று சில பாமர ஜனங்கள் நினைக்கிறார்கள். அது முற் றிலும் தவறு. ஆயிரத்திலொரு ஜீவன்முக்தன் பண்டார வழியிலே சென்றாலும் செல்லக்கூடும். ஆனால் அதுவே மார்க்கமென்று நினைத்துவிடக் கூடாது. ஜனகன் ஜீவன் முக்தி பெற்று ராஜ்ய மாண்டான். அர்ஜுனனும் அப்படியே. ரிஷிக ளெல்லாரும், பெண்டு பிள்ளைகளுடன் சுகமாக வாழ்ந்தார்கள். விடுதலை பெற்றவர் எந்தத் தொழில் செய்தாலும் செய்வார்கள். ஆனால் அந்தரங்க நம்பிக்கை தெய்வமொன்றினிடத்தேயே செலுத்தி

வாழ்வார்கள். "எத்தொழிலைச்செய்தாலும், ஏதவத் தைப்பட்டாலும், முக்தர் மனமிருக்கு மோனத்தே" என்பது முன்னோர் வாக்கு. பரனை நினைந்து முன் முன்றையும் விட்டு விடுதல் இன்பமென்று ஔவை கூறினாள். பற்று விட்டிருப்பதே விடுதலை. உள்ளத் துறவே துறவு. உள்ளத்துறவுடைய மனிதனை நாம் என்ன அடையாளத்தாலே கண்டு பிடிக்கலாம்? பக்தி முதிர்ச்சிக்கு எது தவறுத லக்ஷணம்? "அஞ்சாதே!" என்றது வேதம் பயம் நீங்கி யிருப் பதே விடுதலைக்கு லக்ஷணம். ஒருவன் உண்மை யாகவே தெய்வத்தை நம்பினனை, வீணுக்குச்சொல்லு கிறனை என்பதை அறிய வேண்டுமானால் ஆபத்து வேளையிலே பார்க்க வேண்டும். ஆபத்து நேரும் போது நெஞ்சு நடுங்காம லிருப்பவன் ஞானி, பக் தன், முக்தன். மரணத்துக் கஞ்சாதவன் தெய் வத்தை உண்மையாகச் சரணடைந்தவன். தெய் வத்தை நம்பினால் தீமை நமக்கு வாராதென்பதை ப்ரத்யக்ஷ ஞானமாகக் கொண்டு ஜீவன் முக்தர் எந்தப் பதவியிலிருந்த போதிலும் நிகரற்ற வீரராக விளங்குவார்.

தெலுங்க மஹா சபை

சக்திதாஸன்

9 ஜூன் 1917 பிங்கள வைகாசி 27

சென்ற வெள்ளிக்கிழமை (ஜூன் 1) யன்று நெல்லூரில் கூடிய ஆந்திர மஹாசபையில் சபா நாயகர் ஸ்ரீ வெங்கடப்பய்ய பந்துலு செய்த உபந் யாஸம் கவனிக்கத்தக்கது. ராஜநீதி சாஸ்த்திரத்தில் தெலுங்கர் நெடுங்காலத்துப் பெருமையுடையார். பாடலீபுத்ர நகரத்தில் நடந்த ஆந்திர ராஜ்யமும் பிற்காலத்தில் தமிழ் நாட்டைக் கட்டியாண்ட விஜயநகரத்து ராஜ்யமும் கீர்த்தி மிகுந்தனவன்றே? தெலுங்கர் தமிழரை ஆண்ட அடையாளங்கள் நமது பாஷையிலும் ஆகாராதிகளிலும் அழிக்க முடி யாதபடி பதிந்து கிடக்கின்றன. நமது ஸங்கீதமும் நாட்டியமும் தெலுங்கிலேயே இன்றுவரை முழுகிக் கிடக்கின்றன. பாடகர்கள் பாடும் கீர்த்தனங்களில். உயர்தர மெல்லாம் தெலுங்குக் கீர்த்தனங்கள். தாசிகள் ஆட்டத்தில்பாடும் வர்ணங்கள் ஜாவளிகள் முதலியவற்றில் நல்ல உருப்படியெல்லாம் தெலுங்கு. நமது கிராமங்களிலுள்ள தெலுங்க ரெட்டிகளும், நாயுடுமாரும், ஆந்த்ரபிராமணப் புரோகிதர்களும், தெலுங்க தாசிகளும் ராயர் சம்ஸ்தான காலத்தில் இங்கே உறுதி பெற்றவர்கள். நமது விவாக காலங் களில், பாடும் பத்யம், லாலி முதலானதெல்லாம்

தெலுங்குமுறை. நமது பாஷையில் "கவனம்" (ஆழ்ந்துநோக்குதல்), "ஜாகுஸு" "எச்சரிக்கை", "துரை", "வாடிக்கை," "கொஞ்சம்" முதலிய பதிற் றுக்கணக்கான தெலுங்குச் சொற்கள் சேர்ந்திருக் கின்றன. தெலுங்கர் தமிழ் நாட்டை ஆண்டபோது, அநீதியே கிடையாது, தமிழருக்கு வேறு நீதி தெலுங் கருக்கு வேறு நீதி என்ற பேதம் கிடையாது. தெலுங்கு ஜாதி, ராஜ நீதியிலே நிபுணத்தன்மை உடையது.

மேற்படி கொள்கைக்கு நல்ல திருஷ்டாந்தமாக, இக்காலத்திலும்கூடத் தெலுங்கு தேசத்தார் தமிழ நாட்டிலும் ராஜாங்க வ்யவஹாரங்களில் தீவிர புத்தி செலுத்துகிறார்கள். ஆனால் நமக்குள் ஜாதி பேதமிருக்கிறது என்றால் ஜாதிபேதம் இந்தியா வில் மாத்திரமில்லை, உலகத்தில் எல்லா தேசங்களி லும் இருக்கிறது. இந்தியாவில் கொஞ்சம் தீவிர மாகவும், விநோதமாகவும், மாற்றுவது கஷ்டமாக வும் இருக்கிறது. இப்போது பூமி முழுவதிலும் நடந்து வரும் மஹாப்ரளயத்தில் இந்த ஜாதிபேதம் தவிடு பொடியாய்ப் போய்ப் புதிய மாதிரி உண்டா கும். இதுவெல்லாம் ஏன் சொல்ல வந்தேனென்றால், தமிழ்நாட்டுஜனங்கள் வீண்சண்டைகளிலேபொழுது போக்குகிறார்கள். தெலுங்கர் ஜனபிவிருத்திக்கு வழியாகிய நல்ல உபாயங்களிலே புத்தி செலுத்தி வருகிறார்கள். சுதேசிய விஷயத்தில் இப்போது தெலுங்கருக்குள் இருக்கும் பக்தி சிரத்தையிலே நாலிலொரு பங்குகூடத் தமிழ் ஜனங்களிடம் இல்லை. சென்ற வெள்ளிக் கிழமையன்று கூட மேற்படி நெல் லூர் ஆந்த்ர மஹாசபைப் பந்தலில் வந்தேமாதரம் என்ற கோஷம் அபரிமிதமாக இருந்ததென்று தந்தி சொல்லுகிறது. கொஞ்ச காலத்துக்கு முன்பு, கூட லூரில் கூடிய மாஹானசபையில் "வந்தேமாதரம்"

பாட்டுக் கூடப் பாடவில்லை யென்று கேள்விப்பட்டேன். தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு சபைகூட அப்படி நடந்திராது. இது நிற்க,

மேற்படி சபையில் ஸ்ரீ வேங்கடப்பய்யா சபா நாயகராகப் பேசிய வார்த்தைகளின் ஸாரம் பின் வருமாறு:—

1. தெலுங்கு தேசத்தைத் தனிமாகாணமாகப் பிரிக்க வேண்டும்.

2. இந்தியாவுக்குத் தன்னாட்சி கொடுக்க வேண்டும்.

3. இயன்றவரை, இந்தியா முழுவதையும், பாஷைகளுக்குத் தக்கபடி வெவ்வேறு மாகாண மாக்க வேண்டும். அதாவது, மதராஸ், பம்பாய், ஐக்ய மாகாணம், மத்ய மாகாணம், பஞ்சாப், பங்காளம் என்ற பிரிவுகளை மாற்றித் தமிழ்நாடு, தெலுங்குநாடு, மாராட்டிய நாடு, கன்னட நாடு, ஹிந்துஸ்தானம், வங்க நாடு என்று பாஷைக்கிரமப் படி வகுக்க வேண்டும்.

4. ஸ்வபாஷைகளில் கல்விப் பயிற்சி செய்விக்க வேண்டும். ராஜ்ய காரியங்களும் இயன்ற வரை ஸ்வபாஷையில் நடக்க வேண்டும்.

மேற்படி நாலம்சங்களில் முதலாவது, மூன்றாவது, நாலாவது இம்மூன்றும் ஒரு பகுதி; இரண்டாவது மற்றொரு பகுதி. இரண்டாவது தாய்ப் பகுதி; மற்றவை கிளைப் பகுதிகளாகும்.

என்னுடைய அபிப்ராயத்தில் மேற்கண்ட கொள்கை யெல்லாம் நியாயமென்றே தோன்றுகிறது. ஆனாலும், இந்த ஸமயத்தில் ஆந்திரரைத் தனிப் பிரிவாக ருஜுப்படுத்துவதைக் காட்டிலும்,

ஆஸேது ஹிமாசல பர்யந்தம் உள்ள ஹிந்துக்க ளெல்லாம் ஒன்று என்ற மூல மந்திரத்தை நிலை நாட்டுவதே அவசியமென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட் டம். வேதத்தை நம்புவோ ரெல்லாம் ஸஹோதரர். பாரத பூமியின் மக்களெல்லாம் ஒரே தாய்வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம் ஜாதிபேதம் குலபேதம் பாஷாபேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுத்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்பு வோரெல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே ரத்தம், ஒரே குடர், ஒன்று.

ஹிந்துக்கள் உயர்ந்த நிலைமைக்கு வர வேண்டு மானால் ஐக்யநெறியை உடனே அனுசரிக்க வேண் டும். போன வருஷம் கிழக்கடலோரத்திலே பெரிய புயற்காற்றடித்தது. ஒன்று கூடியிருந்த வீடுகள் பிழைத்தன. தனிக் குடில்களெல்லாம் காற்றிலே பறந்து போயின. உலகத்தில் புதிய ஞானம், புதிய வாழ்க்கை, புதிய அறம், புதிய நெறி தோன்றக் கூடிய காலம் பிறந்து விட்டதென்று மேதாவிக ளெல்லாரும் ஒருங்கே சொல்லுகிறார்கள். இங்ஙனம் புதிய ஞானம் பிறக்க வேண்டுமானால் அதற்கு ஹிந்து மதமே முக்ய ஸாதனமென்று நாம் சொல்லு கிறோம். ஸ்வாமி விவேகாநந்தர், ரவீந்த்ர நாத டாகூர், ஜகதீச சந்திரவஸு முதலிய பெரியோர் களும் அங்ஙனமே சொல்லுகின்றார்கள். இந்த ஸமயத்தில் ஹிந்துக்கள் பிரிவு பேசலாமோ? ஹிந்துக்கள் பிரிந்து கிடந்தால், ஹிந்து தர்மத்தின் மஹிமையை உலகத்தார் காண்பதெப்படி?

ஹிந்து தர்மம் பெருமாள் கோயிலைப் போலே; நிற்பது எங்கே நின்றாலும் அத்தனை பேருக்கும் ப்ரஸாதமுண்டு. பகவத் ஸந்நிதியில் ஜாதிபேத

மில்லை. அத்தனை பேரும் கலந்து நிற்கலாம். ஹிந்து தர்மம், சிதம்பரத்தைப் போலே. அதனுள்ளே, பறையரும் ஒளியில் கலந்து விடலாம். மேலும் தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடமில்லை. தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக்கூடத்து சாஸ்திரங்களெல்லாம் தமிழ்ப் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும்போதும், இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர், தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி. தமிழிலபிமானமுள்ளவன் ஹிந்து தர்மத்தைக் கைக்கொண்டு நிற்பவன். அதுவே தமிழபிமானியைச் சோதிக்கும் வழி. ஏனென்றால் தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய் மொழியிலும், திருக்குறளிலும், கம்ப ராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபிமானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை. மேற்படி நூல்களை நன்றாக உணர்ந்தவன் ஹிந்து தர்மத்தாலேயே இந்த உலகம் நிலைபெற்று நிற்கு மென்பதை அறிவான். ஸர்வ தர்மங்களுக்கும் ஹிந்து தர்மமே வழிகாட்டி யென்பதைக் காண்பான். ஹிந்து தர்மத்தை நிலைநிறுத்திலால் ஆந்திரர், கன்னடர், மராட்டியர், ஹிந்துஸ்தானிகள், குஜராத்திகள், வங்காளிகள், தமிழர், மலையாளர் எல்லாருக்கும் நல்ல காலம் பிறக்கும். ஆதேசம் சொல்லுகிறது:—"வேத வழியே வழி. வேறு வழியில்லை."

பெண்

12 மேன் 1917 பிங்கள வைகாசி 30

பார்க்க :—மூன்றும் தொகுதி - பகுதி - மாதர்.

அர்ஜுன சந்தேகம்

காளிதாசன்

16 மேன் 1917 பிங்கள ஆனி 3

பார்க்க :— இரண்டாம் தொகுதி - பகுதி - கதைக் கொத்து.

ப்ராயச்சித்தம்

காளிதாஸன்

21 ஜூன் 1917 பிங்கள ஆவி 8

என்னுடைய ஸ்நேஹிதர்களில் ஒருவராகிய ராமராயர் இங்கிலாந்துக்குப் போயிருந்தார். திரும்பி வேதபுரத்துக்கு வந்தார். அவருக்கு ஒருவித மான வேதாந்தப் பயித்தியம். ப்ரம்மமே ஸத்தியம். லோகமெல்லாம் மித்தை. ஆதலால் எல்லாரும் ஸந்தியாஸம் வாங்கிக்கொள்ள வேண்டும். தலையை மொட்டை அடித்துக் கொள்ள வேண்டும். சடைகளாகத் திரித்து விடலாம். அப்படிச் செய்தாலும் குற்றமில்லை. எப்போதும் ஓம், ஓம் என்று சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். அல்லது ஐம் புலன்களையும், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நான்கு அந்தக்கரணங்களையும் உள்ளே இழுத்துக்கொண்டு சுத்த ப்ரம்ம நிலையோ, அல்லது அதற்குப் போகிற பாதையோ, ஆகிய நிர்விகற்ப ஸமாதியில் நிற்கவேண்டும். இது அவருடைய மதம்; ஆனால் அவருடைய நடை மற்ற மனுஷ்யர்களைப் போலேதான்.

ஸந்யாஸம் வாங்கவில்லை; தலை மொட்டையுமில்லை; சடையுமில்லை; ஓங்காரத்தைத் தவிர வேறு வார்த்தைகளும் சொல்லிக்கொண்டுதான் வருகிறார். நிர்விகற்ப ஸமாதியிலே அவர் இருப்பதை நான் பார்த்ததே கிடையாது.

மேற்படி ராமராயர் இங்கிலாந்தில் இருக்கும் போது, ஐரோப்பியர் கண் பார்க்காமல் கை எப்டிச் சமைக்கும்? ஐரோப்பியர் சமையல் பண்ணின பதார்த்தங்களை நாளொன்றுக்கு நான்கு முறையாகப் பத்து வருஷ காலம் நிர்விக்நமாக போஜனம் செய்துகொண்டு வந்தார். (இந்த விஷயத்தில் அவர்மேலே அதிகக் குற்றம் சொல்ல இடமில்லை. ஐரோப்பாவில் ஐரோப்பியர் சமையல் பண்ணினதைத் தின்னுமல் எப்படிப் பிழைக்க முடியும்? இங்கிருந்து பிராம்மணப் பரிசாரகர்களில் நூறு நூற்றைம்பது பேரைக் கொண்டு லண்டன் பட்டணத்தில் குடியேற்றினால் நம்மவர்கள் போய் ஜாதியாசாரங்களுக்கு விரோதமில்லாதபடி அங்கிருந்து படித்து வைதிகக் கலெக்டர்களாகவும் வைதிக பாரிஸ்டர்களாகவும் திரும்பி வர இடமுண்டாகும். ஸ்வாமி விவேகானந்தர் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஸஞ்சரித்த காலத்தில் பசுக் கறி முதலியவற்றை யதேஷ்டமாக சாப்பிட்டதாகப் பாதிரிகள் இந்தியாவில் கூக்குரல் போட்டதைப் பொறுக்க முடியாமல், சென்னப் பட்டணத்திலிருந்து சில வைதிக சிஷ்யர்கள் வருத்தப்பட்டு விவேகானந்தருக்குக் காயிதம் போட்டார்கள். அடுத்த கப்பலில் ஒரு வைதிக பரிசாரகனும், வைதிக போஜனங்களும் இந்தியாவிலிருந்து அனுப்பினால், தான் வைதிகமாக உண்பதில் ஆக்ஷேபமில்லையென்று விவேகானந்தர் மறுமொழி எழுதினராம்.) ராமராயர் இங்கிலாந்தில் போய்ப் பத்து வருஷ காலம் இருந்து வியாபாரம் பண்ணிவிட்டுக் கொஞ்ச காலத்துக்கு முன்பு, வேதபுரத்துக்கு வந்து சேர்ந்தார். இங்கே அவர் கையில் கொஞ்சம் காசிருப்பதைக் கண்டு சில வைதிகர்கள் அவரைப் பிராயச்சித்தம் செய்து கொள்ளும்படி சொன்னார்கள். அவர் பண்ணிக் கொள்ளவில்லை. ஆனால் இங்கு வந்த பிறகு சுத்த

மான பிராமணர் சமையல்தான் சாப்பிடுகிறார். பிராமண ஆகாரம் அவருக்கு நன்றாக ஒத்து வருகிறது. உடம்புக்கு ஒன்றும் செய்வதில்லை. மற்ற நடைகளும் அப்படியேதான். மூன்று வேளையும் ஸந்த்யாவந்தனம், மாத்யான்ஹிகங்கள் தவறுவதில்லை. அமாவாசை தோறும் சரியான தர்ப்பணம்; வருஷத்தில் ஐந்தாறு சிராத்தம். எல்லாம் கிரமமாகவே நடத்தி வருகிறார். ஒரே ஒரு புரோஹிதரும் அனேக லௌகிகரும் இவரை ஜாதியில் சேர்த்துக்கொண்ட மாதிரியாகவே நடந்து வருகிறார்கள். பல புரோஹிதரும், சில லௌகிகரும் கொஞ்சம் ஒட்டியும் ஒட்டாமலும், தாமரை நீர் போலிருக்கிறார்கள். சிலர் ஒட்டாமலே விலகியிருக்கிறார்கள். போன மாஸம் மேற்படி ராமராயர் என்னிடம் ஊர்க்காரருடைய திருப்தியை உத்தேசித்துத் தான் ப்ராயசித்தம் பண்ணிக் கொள்ள இஷ்டப்படுவதாக அறிவித்தார். நான் உடனே மேற்படி விஷயத்தை இந்த ஊர் வைதிகர்களுக்கெல்லாம் சிரோமணியாகிய ரங்கநாத சாஸ்திரிகளிடம் போய்ச் சொன்னேன். இந்த ரங்கநாத சாஸ்திரிகளுடைய மாப்பிள்ளை ஒருவன் ரங்கூனிலே போய்க் காபிக் கடை வைத்திருக்கிறான். தமிழ்த் தேங்குழல், தமிழ் முறுக்கு, தோசை, வடை கடலைச் சுண்டல் முதலிய பக்ஷணங்களைக் கொஞ்சமேனும் வட இந்தியா ஆர்ய சம்பந்தமில்லாதபடி நன்றாகப் பண்ணிக் கொடுத்து அங்குள்ள தமிழ் மக்களெல்லாம், இந்த பிராமணனே மிகவும் அருமையாகப் பாராட்டினபடியால் நல்ல பணக்காரனாகி, அங்கே தனது மனைவியாகிய மேற்படி சாஸ்திரிகளுடைய பெண்ணும், தானும் நாலைந்து குழந்தைகளுமாக சௌக்கியத்தோடு வாழ்ந்து வருகிறான். இந்தக் காரணத்தை யொட்டி மேற்படி ரங்கநாத சாஸ்திரிகள் மாப்பிள்ளையுடன் எவ்வித

மான சம்பந்தமுமில்லாமல் கத்தரித்து விட்டார். இவருடைய மனவி மூலமாகக் காயிதப் போக்கு வரவு நடக்கிறது. அதில் கூட இவர் கவனம் செலுத்துவதில்லை. இதே காரணத்தை யனுசரித்து அதாவது இவருடைய மாப்பிள்ளை ரங்கூனுக்குப் போனதை உத்தேசித்து, இந்த சாஸ்திரிகள் தம்முடைய வைதிகத்தை மிகவும் விஸ்தாரப்படுத்தி வைத்திருக்கிறார். மற்றவர்களுடைய வைதிகம் ஆறு முழமென்று வைத்துக் கொண்டால் இவருடைய வைதிகம் பன்னிரண்டு முழம். இந்த ப்ராமணர் இங்கே வைதிகர்களுக்குத் தலைவர். இவரிடம் நான் போய் ராமராயருக்குப் பிராயச்சித்தம் செய்து வைக்க வேண்டு மென்று சொன்னேன்.

அப்போது மேற்படி ரங்கநாத சாஸ்திரிகள் என்னைப் பார்த்து, "நீர் இந்த விஷயத்தை ஏன் கவனிக்கிறீர்?" என்று கேட்டார். நான் வைதிக மென்றும் அவர் நினைத்துக்கொண்டிருக்கிறார். அவர் கேள்விக்கு நான் மறுமொழி சொல்லாமல், "ஸமுத்ர யாத்திரை செய்தவன் பண்ண வேண்டிய ப்ராயச்சித்த மெப்படி?" என்று கேட்டேன்; (இது வரைக்கும் சொன்ன கதை யெல்லாம் பீடிகை. இனிமேல் எழுதப் போகிற வசனங்களே நான் சொல்ல வந்த விஷயம். ப்ராயச் சித்தம் கடல் யாத்திரைக்கு எப்படி நடத்த வேண்டுமென்று நான் கேட்டதற்கு ரங்கநாத சாஸ்திரி சொல்லிய மறுமொழி கொஞ்சம் தர்க்க சாஸ்த்ர ஞானியாக இருந்த போதிலும் எனக்கே கேட்க ரஸமாக இருந்தபடியால், பிறருக்கும் தெரிவிப்போம் என்ற எண்ணத்துடன் இங்கெழுதலானேன்.) ரங்கநாத சாஸ்திரிகள் சொல்லுகிறார்:—

"இங்கிலிஷ் படித்தவன் பண்ணுகிற ப்ராயச் சித்த மெல்லாம் 'ஹம்பக்' (பொய் வேஷப்)பராயச்

சித்தம். இங்கிலிஷ் படித்தவனுக்கு இந்த விஷயத்தில் கொஞ்சமேனும் நம்பிக்கை கிடையாது. ருஷ்யாவிலே ராஜ்யம் புரண்டு போச்சுதாமே. ஜாதிகுல மெல்லாம் லோக முழுதிலும் தலைகீழாகக் கவிழ்ந்து போமென்று ஆனிபெஸன்ட் பத்திரிகையில் போட்டிருந்ததாமே! 'தன் மத்யே' இன்னுமொரு பேச்சு உப்மிடத்தில் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டே யிருந்தேன். ஆனி பெஸன்டுக்கு அஷ்டமாசித்துகளும் வருமென்று தஞ்சாவூரில் ஒரு பெரிய யோகீசுவரர் என்னிடம் நேரில் சொன்னார்.....உமக்குத் தெரியாதா? போகட்டும் போம்....மொத்தத்தில் உத்தம ஸ்த்ரீ. வெள்ளைக்கார ஜாதியில் பிறந்து நம்முடைய ஹிந்து மதத்தைச் சேர்ந்து விட்டதாக வாயினலே எப்போது சொன்னாளோ, அவள் நம்மைச் சேர்ந்தவளாகவே நினைக்க வேண்டும். இந்த விஷயத்தில், காளிதாஸரே, நம்முடைய அபிப்பிராயமென்ன வென்றால், எந்தக் குலமாக, எந்த ஜாதியாக இருந்த போதிலும் நமது ஆலயத்தில் வந்து கும்பிட்டால் அவர்களை நாம் ஹிந்துவாக நினைத்து ப்ரேமை செலுத்த வேண்டும். இந்த ஆனிபெஸன்ட்கூட பூமி முழுதிலும் ஸஹோதரத்தவமும் ஸமத்துவமும் ஏற்படப் போகிறதென்று சொல்லுவதாகக்கேள்வி. அந்த வார்த்தை ஸத்தியமாகத்தான் இருக்கும். அந்தம்மாள் வெகு தூரம் படித்தவளாமே? அஷ்டமாஸித்தி யென்கிற வார்த்தை வந்தால் அஸாதாரணமான புத்தியாவது உண்டென்பது நிச்சயந்தானே? நம்முடைய சாஸ்த்திரங்களும் அப்படியேதான் சொல்லுகின்றன. கலி மேலே போகப் போக ஜனங்களுக்குள்ளே கலப்பு மிகுதிப் பட்டுக் கடைசியில் ஒரே குலமாய்விடுமென்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. ஆனல் அது கெட்ட அர்த்தத்திலே சொல்லுகிறது. எல்லாரும் ஒரே

குலமாய்க் கெட்டுப் போவார்களென்று சொல்லு கிறது. யதார்த்தம் அப்படியில்லே. ப்ரஹ்மாண்ட புராணத்தில் நான் ஒரு சுலோகம் படித்தேன். அது இப்போது ஞாபகமில்லே. அதிலே என்ன போட்டிருக்கிறதென்றால் கலியுகத்திலேயே ஒரு கிருதயுகம் வரும் என்று போட்டிருக்கிறது. கலி முற்றி உலகம் நாசமாய்ப் போகுமென்ற வாக்யங் களே நான் சோதனே போட்டுப் பார்த்திருக்கிறேன். அவற்றை யெல்லாம் காட்டிலும் மேற்படி ப்ரஹ் மாண்ட புராண வாக்யமே ப்ரமாணமென்று நான் நிச்சயமாக ருஜுப்படுத்துவேன். காளிதாஸரே, நீரும் அதை நம்பும். இதெல்லாம் ஏன் சொல்லு கிறேனென்றால் உம்முடைய ஸ்நேகிதர் ராமராயர் ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ளப் போகிறதாகச் சொன்னீரே? அது அவசியமில்லே. இன்னும் கொஞ்ச காலத்தில் கிருதயுகம் வந்து விடுமானால், அவருக்கு யாதொரு சிரமமுமில்லே. எல்லாரும் ஸமானம். அட, க்ருத யுகம் வரவேயில்லே; இந்தக் கலியுகமே சாசுவதமாக இருக்கப் போகிற தாக வைத்துக் கொள்வோம். அதிலும், அதிக மாகப் பொய் சொல்லாமல் இருப்பது விசேஷம். கலி தானாகவே முற்றுவது போதாதென்று நாம் ஒரு பக்கம் அதைப் பொய் சொல்லிப் பழுக்க வைப்பதில் என்ன சுகம்? கடல் யாத்திரை பண்ணி னால் என்ன குடி முழுகிப் போச்சு? ஏன் காணும், காளிதாஸரே, உம்மைத்தான் கேட்கிறேன். கடல் யாத்திரை பண்ணினால் என்ன? இருக்கிற பிரா மணர்களெல்லாரும் ஸ்மிருதி வாக்யம் தவறுதபடி தான் நடக்கிறார்களோ? நம்முடைய மாப்பிள்ளே ரங்கூனுக்குப் போய் அங்கே நல்ல கோடீசுவரனாக வாழ்கிறான். மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, பங்க ளூர், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், புதுச்சேரி, கும்பகோணம் இத்யாதி க்ஷேத்ரங்களில் வளிக்கும்

இங்கிலிஷ் பிராமணர்களுக்குள்ளே ஸந்த்யா வந்தனம் எவ்வளவும் சொற்பம்? தீர்த்த பானம் கூட நடக்கத்தான் செய்கிறது. ராமராமா! இந்த ரிஷிகளெல்லாரும் என்ன ப்ராயச்சித்தம் பண்ணுகிறார்கள்? என் மாப்பிள்ளை ரங்கூனில் நித்ய கர்மானுஷ்டானங்கள் தவறுமல் நடத்தி வருகிறானென்று கேள்வி. அவன் வந்தால் ஜாதி ப்ரஷ்டன் தானே? ப்ராயச்சித்தம் பண்ணினால் கூட நான் சேர்த்துக் கொள்ள மாட்டேன். தள்ளுங்காணும்! ப்ராயச்சித்தமாவது, வெங்காயமாவது! நான் ஏதோ உதர நிமித்தமாக இந்த வைதிகத்தை விட முடியாமல் கட்டுப் பட்டுக் கிடக்கிறேன். இதில் மற்றவர் வந்து சேர்வதிலே எனக்கு ஸம்மதமில்லை. ராமராயர் ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ளுவதில் எனக்கு இஷ்டமில்லை. ரூபாய் ஐந்நூறு கொடுத்தால் செய்து வைக்கிறேன். ஆக்ஷேபமில்லை. அப்படியே அவர் ப்ராயச்சித்தம் செய்தாலும் நான் அவருடன் பந்தியிலிருந்து சாப்பிட மாட்டேன்'' என்றார். இதை நான் ராமராயரிடம் வந்து சொன்னேன். ராமராயர் ப்ராயச்சித்த யோசனையை நீக்கி விட்டார்.

பெண் விடுதலை

காளிதாஸன்

25 ஜூன் 1917 **சிங்கள ஆனி 12**

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி—மாதர். இப் பகுதியில் பெண் விடுதலை (1) என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.

தாதாபாய் நௌரோஜி

சி. சுப்பிரமணிய பாரதி

4 ஜூலை 1917 பிங்கள ஆவணி 21

தாதாபாய் நௌரோஜி ஜீவதசைமாறி ஆத்ம தசை யடைந்து விட்டார். 92 வருஷம் இந்த உலக வெள்ளத்திலே எற்றுண்டு பயன் மாறிப் போன மண் தோணியைக் கழந்துபோய் விட்டார். அவருடைய புகழுடம்பிலிருந்து ஹிந்துஸ்தானத் தின் கார்யங்களை ஆத்ம ஸ்வரூபியாகி நடத்தி வருவார். "தாதாபாய் நௌரோஜி இறந்து போனார். தாதாபாய் நௌரோஜி நீடூழி வாழ்க."

★

தாதாபாய் நௌரோஜி இறந்து போகவில்லை. அதனாலேயேதான் நீடூழி வாழ்கவென்று சொல்ல இடம் உண்டாகிறது. நம்பிக்கைக்குப் பெயர் தாதாபாய் நௌரோஜி; அதற்கு மரணம் இல்லை. நம்பின காரியம் கைகூடும் என்ற வசனத்தை ஹிந்துக்கள் நம்பும்படி செய்வதற்காகத் தோன்றிய பெரியோர்களில் தாதாபாய் ஒருவர். தன்னை மறந்து குற்றுயிரோடு கிடந்த ஹிந்து தேசம் மறுபடியும் உயிர் கொண்டு, ஸ்மரணைபெற்று வலிமை காட்டும் என்று தாதாபாய் ஒரு நாளா, இரண்டு நாளா, 70 வருஷம் இடைவிடாது நம்பினார்.

அவர் சாகுமுன்னே ஹிந்துஸ்தானம் பிழைத்து விட்டது. ஹிந்துக்களுடைய சக்தி ஏறுவதைக் கண்ணுலே பார்த்த பிறகுதான் அந்தக் கிழவனு ருடைய பிராணன் பிரிந்தது. ஹிந்துக்களுக்கு இந் தியாவில் அதிகாரம் கிடைக்க வேண்டுமென்று 70 வருஷங்களுக்கு முன்னே தாதாபாய் நெளரோஜி கண்டுபிடித்தார். 11 வருஷங்களுக்கு முன்னே கல்கத்தா காங்கிரஸ் சபையில் ஹிந்துக் களுக்கு ஸ்வராஜ்யம் வேண்டும் என்று தாதாபாய் முரசடித்தார். இந்தியா முழுவதும் அந்த வார்த்தை பரவி அசைக்க முடியாமல் நிலைபெற்றதைக் கண்ட பின் உயிர் துறந்தார். 1905-ம் வருஷத்தில் சென் னப்பட்டணத்தில் சுதேசமித்திரன் ஜி. சுப்ரமணிய அய்யர் என்னிடம் ஒரு நாள் தாதாபாய் நெளரோ ஜியின் 80-வது பிறந்த நாள் விசேஷம் கொண்டாட வேண்டும் என்று சொன்னர். "பார்லிமெண்ட் சபைக்கும், மந்திரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் மூச்சு விடாமல் விண்ணப்பம் எழுதி தாதாபாய் ஒரு பயனும் அறியாமல் கிழத் தன்மை முற்றிக் கிடக்கிறார். இவருக்குப் பிறந்த நாள் கொண்டாடி நாம் என்ன பயன் பெறப் போகிறோம்?" என்று கேட்டேன்.

அப்போது ஜி. சுப்ரமண்ய அய்யர் சொன்னர்: "தாதாபாய் உறுதியுடைய மனிதன். அவர் நினைத்த காரியங்கள் கடைசிவரை ஈடேறத்தான் செய்யும். ஹிந்து ஜனங்கள் பசியாலும் பிணி யாலும் அழிந்து போகாமல் காக்கவேண்டும் என் றும் அதற்கு ஆங்கிலேயேர் நமக்குத் தன்னுட்சி கொடுப்பதே உபாயம் என்றும் தாதாபாய் நெளரோஜி சொல்லிக் கொடுத்தார். நமக்கெல்லாம் தேச பக்தி அவர் கொடுத்த பிச்சை. அவரை நாம் ஆசார்யராகக் கொண்டாட வேண்டும்" என்று சொன்னர்.

பல வருஷங்கள் கடந்தன. இன்று தாதாபாய் நௌரோஜியை உயிர் பெற்ற ஹிந்துஸ்தானம் ஆசாரிய ஸ்தானத்தில் கொண்டாடி ஊரூராகப் புகழ்ச்சி பேசுவதைக் காணும்போது ஜி. சுப்ர மண்ய அய்யர் போட்ட மதிப்பு சரியென்று விளங்கு கிறது. வைஸ்ராய்களும் கவனர்களும் இப்போது நௌரோஜிக்குப் பெருமை சொல்லுகிறார்கள். உயிரோடிருக்கும்போதே அவரை ராஜாங்கத்தார் மிகவும் மேன்மைபடுத்தி உபசரிக்கத் தொடங்கி விட்டார்கள். ஸ்வராஜ்யக் கொள்கைக்கு மேன்மை யும் வெற்றியும் உண்டென்பதை தாதாபாய் பல விதங்களிலே காண்பித்தார்.

★

தாதாபாய் நௌரோஜியினுடைய விண்ணப்ப உபாயம் நமக்குக் கைகூடி வருமோ என்பது ஒரு சந்தேகம். நாமே பல விண்ணப்பங்கள் ராஜாங்கத் தாருக்கு எழுதிப் பயனே இதுவரை பெறுமல் இன்றும் எதிர்பார்த்த நிலைமையில் இருக்கிறோம். நம்முடைய விண்ணப்பங்களை அதிகாரிகள் உடனுக் குடனே கவனித்தால் நமக்கும் நல்லது; அவர்களுக் கும் நல்லது. ஜனங்களுக்குள்ளே அதிருப்தி பரவாமல் நம்முடைய நோக்கம் நிறைவேறும். தாதாபாய் போன்ற ஸ்வராஜ்யத் தலைவர்களிடம் அதிகாரிகள் நேருக்கு நேராக மந்திராலோசனை செய்தால் நல்லது. நம்மிடத்திலே தோன்றி யிருக்கும் புதிய சக்தியை அதிகாரிகள் கண் திறந்து பார்க்காமல் புறக்கணித்திருப்பது தந்திர சாஸ்திரக் துக்குப் பொருந்திய செய்கையன்று.

தாதாபாய் தெய்வ பக்தியுடையவர். அதனாலே தான் நான் அவருக்கு மேற் புகழ்ச்சியுரை எழுதத் துணிந்தேன். ராஜ்ய விஷயங்களிலே கலந்து காங்

கிரஸ் சபைக்குப் போன மாத்திரத்திலேயே ஒரு வன் மதிப்புக்கிடமாக மாட்டான். தெய்வ பக்தியை மூலபலமாகக் கொண்டதனாலேயே தாதாபாய் கார்யஸித்தி பெற்றார். ஆதலால் பக்தியே தாரகம். ஒவ்வொருவனும் தெய்வ பக்தி பண்ணலாம். வியாபாரி, தச்சன், அம்பட்டன், ராஜா, மந்திரி, பிராமணன், பறையன் எல்லோரும் தெய்வபக்தியாலே மேன்மை பெறுவார். எந்தத் தொழிலும் தெய்வ பக்தியால் வெற்றி யடையும். தாதாதபாயினுடைய பூதசரீரத்திலிருந்த சக்தியைக் காட்டிலும் ஆயிர மடங்கு அதிக சக்தி அவருடைய நாமத்தில் புகுந்து, அப்பெயர் நினைப்பினாலே ஹிந்து ஜாதி மேன்மை பெறும்படி நேரிடலாம். பராசக்தியின் இஷ்டப்படி உலகம் அசைகிறது. பாரசக்தி இப் போது நம்பிக்கையை உலகம் முழுதும் பரப்பு கிறாள். சில தினங்களின் முன்பு ஒரு இங்கிலீஷ் சாஸ்திரி கடவுளைப்பற்றி எழுதி யிருக்கும் புஸ்தக மொன்றை வாசித்துக் கொண்டிருந்தேன். சரணாகத தர்மத்தை அந்த நூல், நமது விசிஷ்டாத்வைதி களைப்போல் அத்தனை தெளிவாகச் சொல்லுகிறது. ஹிந்து மதம் உலக முழுமையும் வியாபித்துக் கொண்டு வருகிறது.

நம்பிக்கையின் ஸஹஸ்ரநாமங்களில் தாதாபாய் நௌரோஜி என்பதொன்று. நம்பிக்கை வெற்றி பெறும். நம்பிக்கை நீடூழி வாழ்க.

குறிப்பு : தாதாபாய் நௌரோஜி 30—6—1917-ல் காலமானார்.

அவரைப் புகழ்ந்து அவருடைய எண்பதாவது ஆண்டு நிறைவுக் காலத்தில் பாரதியார் தாதாபாய் நவுரோஜி என்ற பாடல் பாடியிருக்கிறார். அப்பாடல் முதல் தொகுதியில் வெளியாகியுள்ளது.

மழை

காளிதாஸன்

12 ஜூலை 1917 பிங்கள ஆனி 29

குறிப்பு: இக்கட்டுரை இரண்டாம் தொகுதியில் கதைக் கோத்து என்ற பகுதியில் வெளியாகியுள்ளது. முதல் தொகுதியில் ஸ்வ சரிதையும் பிற பாடல்களும் என்ற பகுதியில் மழை என்ற தலைப்புடன் உள்ள பாட்டு இக் கட்டுரையில் வந்ததேயாகும்.

கட்டுரையும் பாட்டும் பாரதியார் தாம் நேராகப் புதுச்சேரியில் அனுபவித்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து அற்புத மாக உருவாகியுள்ளன. காற்று வேகத்தையும், மின்னல் வீச்சையும், இடி முழக்கத்தையும், மழை ஆரவாரத்தையும் பாட்டிலேயும் அதன் சொற்சேர்க்கையிலேயும் நாம் பளிச் சென்று காண்கிறோம்.

ராகவ சாஸ்திரியின் கதை

காளிதாஸன்

13 ஜூலை 1917 பிங்கள ஆனி 30

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி—கலைகள். இந்த ராகவ சாஸ்திரியை வைத்து பாரதியார், மலையாளம் (1) மலையாளம் (2) நம்பூரிகளும் தீயரும். மலையாளத்துக் கதை என்று மேலும் நான்கு கட்டுரைகள் எழுதியுள்ளார். அவையும் மூன்றும் தொகுதியில் உள்ளன.

கண்ணன் பாட்டு

1917-ல் அதாவது பிங்கள வருஷம் ஆவணி மாதத்தில் பாரதியார் எழுதிய கண்ணன் பாட்டின் முதற் பதிப்பு வெளியாகி யிருக்கிறது.

திரு. பரலி. சு. நெல்லையப்பப் பிள்ளை அவர்கள் பிங்கள ஆவணி 1 என்று தேதியிட்டு இதற்கு ஒரு முகவுரை எழுதி யுள்ளார்கள். அதிலே, "ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர்; தெய்வீகப் புலவர்; ஜீவன் முக்தர். இவர் தமிழ் நாட்டு ரவீந்திரநாதர். இவர் எனது தமிழ் நாட்டின் தவப்பயன்" என்றும், "இந்த ஆசிரியன் காலத்திற்குப் பின், எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின், இவர் பாடல்களைத் தமிழ் நாட்டு மாதர்களும் புருஷர் களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை நான் இப்பொழுதே காண்கிறேன்" என்றும் திரு. நெல்லையப்பர் எழுதியிருக்கிறார்.

'கண்ணன்—என் அரசன்' என்ற பாடல் இந்த முதற் பதிப்பில் காணப்படவில்லை.

முதற் பதிப்பு வெளியாகி இரண்டு ஆண்டுகளில் இதன் இரண்டாம் பதிப்பு வந்திருக்கிறது. அதற்கு வ. வெ. சு. ஐயர் சித்தார்த்தி ஆவணி 22 என்ற தேதியிட்டு ஒரு அழகிய முன்னுரை எழுதியிருக்கிறார்.

"கவிதா ரீதியாகப் பார்க்கும்போது, இக் கீர்த்தனங் களுள் பெரும்பாலவையிலுள்ள சுவை தேனினும் இனிதா யிருக்கிறது.

"இன்னொன்று: கவிதை அழகை மாத்திரம் அனுபவித்து விட்டு, இந்நூலின் பண்ணழகை மறந்து விடக்கூடாது. இதிலுள்ள பாட்டுக்களிற் பெரும்பாலவை தாளத்தோடு

பாடுவதற்காகவே எழுதப்பட்டவையா யிருக்கின்றன. கடற்கரையில் சாந்தி மயமான சாயங்கால வேளையில், உல கனைத்தையும் மோஹ வயப்படுத்தி நீலக் கடலையும் பாற் கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங் களைக் கற்பனை கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந்நூலிலுள்ள பாட்டுக்களை மானிக்கங்களாக மதிப்பர்.''

இவ்வாறு வ. வெ. சு. ஐயர் தமது முன்னுரையிலே குறிப்பிடுகிறார்.

கண்கள்

சி. சுப்பிரமணிய பாரதி

19 அக்டோபர் 1917

'கண்கள் சிவந்து பெரியவாய்' என்றார் நம் மாழ்வார்.

எம்பெருமானுடைய கண்களைச் சொல்லுகிறார். விடுதலை பெற்ற ஜீவன் முக்தர்களுடைய கண்ணும் திருமாலுடைய கண்ணைப் போலவே இருக்கும். தாமரைப் பூவைப் போலே கண் வேண்டும் என்பர். திறந்த பார்வை வேண்டும்.

மூடின கண் மறைந்த ஒளியைக் காட்டுகிறது. யோகி கண்மூடி ஜபம் பண்ணுகிறானே அதை நான் சொல்லவில்லை. ஸாமான்ய ஜனங்கள் கண்ணை முழுதும் விழித்துப் பார்க்காமல் அரைப் பார்வையும் கோணற் பார்வையும் பார்க்கும்படி செய்கிற அஞ்ஞானத்தையும் பயத்தையும் பழிக்கிறேன். இது நிற்க.

நான் சென்னப்பட்டணத்தில் இருந்தபோது ஒரு சாமியாருடன் ஸ்நேகப்பட்டேன். அவர் சுதேசியம், அன்னிய வஸ்து பகிஷ்காரம், ஸ்வராஜ்ய ஸ்தாபனம் என்ற விஷயங்களைப் பற்றி ஆத்திரத்தோடு பேசுவார். அவர் கண்களை இமைக்காமலே நெடுநேரம் இருப்பார்; மனிதர் இமைக்காமலே இருந்து விடலாம் என்று அந்தச் சாமியார் சொல்லு

வதுண்டு. அது நல்ல பழக்கம். ஸூர்யனையே பார்த்துக் கொண்டிருந்தால் ஞானதிருஷ்டி உண்டாகும். கண்ணில் வீரம் ஏற்படும்.

ஸாதாரணமாக இருவருடைய கண்கள் ஸந்தித்தால், "இவன் ஏனடா நம்மை முறைச்சுப் பார்க்கிறான்?" என்கிற எண்ணம் இருவர் மனசிலும் உண்டாகிறது; ஒருவன் கன்னத்தைச் சாய்த்துக் கொள்ளுகிறான். அல்லது இருவரும் சாய்த்துக் கொள்ளுகிறார்கள். நேருக்கு நேர் கண்ணுக்குக்கண் பார்த்து இரண்டு பேர் நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பது துர்லபம்.

பொய் இல்லாவிட்டால் பார்வை நேராகும்!

கவனி!

பொய் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.

பயம் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.

கவனி!

பொய் தீர்ந்தால் பயம் தீரும்.

பயம் தீர்ந்தால் பொய் தீரும்.

நேரே பார்த்தால் விரோதக் குறியென்று யோக்யன் ஏன் நினைக்க வேணும்? அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உன் மனசில் என்ன இருக்கிறதென்று தெரிந்து கொள்ளும் பொருட்டாக உன் கண்ணை நேரே பார்க்கிறேன். விரோதமில்லை. அவமரியாதையில்லை. விஷயம் தெரிந்து கொள்ளும் பொருட்டு.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு நாள் முழுதும் ஸூர்யனை இடைவிடாமல் பார்த்து உபாசனை செய்தாராம். இது நல்ல வழக்கம். கண் இருக்கும் போது ஸூர்ய நமஸ்காரம் செய்வோம்; அதனால் ஞான திருஷ்டி யேற்படும்:

குழந்தைகள்

காளிதாஸன்

25 அக்டோபர் 1917

ஐரோப்பாவில் பல தேசங்களில் சண்டையினால் ஆள் மிகவும் சேதப்படுவதிலிருந்து அங்கே பல பண்டிதர் இனி வரப்போகும் ஜனத்தொகையாகிய குழந்தைகளை நேரே பாதுகாக்கும் விஷயத்தில் அதிக சிரத்தை பாராட்டி வருகிறார்கள். மேல் வகுப்புக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் அளவு கீழ் ஜாதிக் குழந்தைகளுக்கு அங்கே படிப்பு இதுவரை கற்றுக் கொடுக்கவில்லை. கீழ் வகுப்புக் குழந்தைகளை அதிபால்யத்திலே தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வேலை செய்யச் சொல்லி வருவதால் அவர்களுடைய அறிவு விசாலமடையாதொரு வழியுமில்லாமற் போகிறது.

யந்திரத் தொழிற்சாலைகள் மனிதரை மிருகங்களுக்கு ஸமானமாகச் செய்து விடுகின்றன. காலை முதல் மாலை வரை ஒருவன் ஒரு மனையின் மேலிருந்து கொண்டு, நரக வாதனை போன்ற தீராத யந்திரச் சத்தத்தினிடையே, யந்திரத்துக்குள் கொஞ்சங் கொஞ்சமாகப் பஞ்சை நுழைத்துக் கொண்டிருந்து விட்டு, ஸாயங்காலம் வீட்டிற்கு வந்தவுடன் குடித்து மதிமயங்கிக் கிடந்து, மறுநாள்

காலை பொழுது விடியுமுன்னே மறுபடி பஞ்சு போடப் போய்விடுகிறான். இவன் தன்னுடைய அறிவை விசாலப்படுத்தவும், உலக இன்பங்களை அநுபவிக்கவும், தியானம் பூஜை முதலிய தெய்வக் காரியங்கள் செய்யும் நேரமெங்கே?

எப்போதும் இடைவிடாமல், அவன் காதில் யந்திரத்தின் பேய்க் கூச்சலும், கண்முன் இரும்பும் பஞ்சும் மாறுமல் இருப்பதால் அந்த மனிதன் நாளடைவில் மனிதத் தன்மை மாறித் தான் ஒரு இரும்பு யந்திரம் போலாய் விடுகிறான். இந்தத் தொழிலுக்குச் சிறு குழந்தைகளைக் கொண்டு விட்டால் அவற்றின் கதி என்னுகும்?

இங்ஙனம் பாழடைந்து குட்டிச்சுவராய்ப் போகும் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுமென்றும், மேல் ஜாதிக் குழந்தைகளைப் போலே கீழ் ஜாதிக் குழந்தைகளுக்கும் தக்க வயதாகும் வரை படிப்பும் நாகரிகமும் கற்றுக் கொடுத்துத் தொழிற் சாலைகளில் சேராமல் தடுக்க வேண்டுமென்றும் மேற்குந் திசையாரில் பல பண்டிதர் முயற்சி செய்து வருகிறார்கள்; படிப்பாளிகளில் அநேகர் இந்த யுத்தத்தில் மடிந்து போவதால், சண்டை முடிந்த பிறகு ஐரோப்பாவில் கல்வியின் நிலைமை மிகவும் சீர்கெட்டுப் போயிருக்குமென்பதில் ஸந்தேகமில்லை. இது நிற்க.

நமது தேசத்தில் எல்லாருக்கும் ஆரம்பப் படிப்பு ஸர்க்கார் செலவில் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீ கோகலே வைஸ்ராய் சபையில் கூகூ என்று கத்திப் பார்த்தார். செலவுக்குப் பணம் இல்லை என்று சொல்லி அதிகாரிகள் கையை விரித்து விட்டார்கள். இது சண்டைக்கு முந்தி! இப்போதோ கேட்கவே வேண்டியதில்லை. இனி மேல் போகப் போகச் சண்டைச் செலவும்,

சண்டை முடிந்தால் வாங்கின கடனுக்கு வட்டிச் செலவும் அதிகப்பட்டுக் கொண்டு போகும் ஆதலால் நாம் ராஜாங்கத்தாரிடம் இவ்விஷயத்தில் அதிக உதவி எதிர்பார்க்க இடமில்லை.

ஆண், பெண், அடங்கலாக நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இனம் படிப்புக் கட்டாயமாய்ச் சொல்லி வைக்கவேண்டும். இது ராஜாங்கத்தாருடைய கடமை. ஆனால் நம்முடைய ராஜாங்கத்தார் இப்போதுள்ள நிலைமையில் அவர்கள் இந்தக் காரியம் செய்யமாட்டார்கள்.

நமக்கு நல்ல காலம் எப்போது வருமோ தெய்வத்துக்குத்தான் தெரியும். அதுவரை அதிகாரிகள் எப்படியிருந்த போதிலும், அதைப் பொருட்டாக்காமல் நாட்டிலுள்ள பணக்காரர் மற்றெல்லாவித தர்மங்களைக் காட்டிலும், ஜனங்களுக்கு அறிவு விருத்தியும், தைரியமும், தேச பக்தியும் உண்டாகத் தகுந்த சுதேசியக் கல்வி ஏற்படுத்திக் கொடுப்பதைப் பெரிய தர்மமாகக் கருதி, அதிலே பணம் செலவிட முற்படும்படி மேற்படி பணக்காரருக்கு நல்ல புத்தி ஏற்படுத்திக் கொடுக்குமாறு தெய்வத்தை வேண்டுகிறோம். ஒரு நாட்டில் உள்ளஎல்லாவிதமான குறைகளுக்கும் புத்திக் குறையே ஆதாரம். இது படிப்புக் குறைவினால் உண்டாவது. இந்தக் குறையை நீக்குவதில் நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் மிகவும் அவஸரம்.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

உள்ளுருத்த விளக்கம

காளிதாஸன்

26 அக்டோபர் 1917

1. உச்சரி-சொல்.

உச்சரி என்பதை உத்-சரி என்று பிரித்தால் மேலே (உயர்ந்த படியில் நட) என்று பொருள் படுகிறது. சொல்லும்போது மேல் நிலையில் நின்று சொல்க.

2. 'கை' என்பதற்குத் தெலுங்கில் 'செய்' என்று பெயர். க, ச மாறுதல் இயல்பு. 'கை' என்ற சொல்லுக்கே செய் என்று பொருள். தொழில் செய்யாமல் இருக்கும் கையை நெருப்பிலே வை; கரியாவது கிடைக்கும் என்றர்த்தம்.

3. காக்கை ஒரு பறவையின் பெயர்.

காக்கை என்றால் காப்பாற்றுதல் என்றும் அர்த்தம். தெருவில் நாம் பண்ணுகிற அசுத்தங்களை யோசிக்கும் போது காக்கை யில்லாமல், பேராஸல் நாமெல்லோரும் நாற்றமெடுத்துச் செத்துப்போவோம் என்பதில் சந்தேகமில்லை.

காக்கைகள் பிதிர்க்களுடைய வாஹனங்கள் என்றும் அவற்றுக்கு சிராத்தாதி ஸமயங்களிலும், தினந்தோறும், வாயஸாந்தம் போடவேண்டும் என்றும் நமது முன்னோர் சொல்லி யிருக்கிறார்கள்,

காக்கைக்கு நூறு வயது. அது எளிதிலே சாகாது. புயற்காற்றில் பதினாயிரக் கணக்கான காக்கைகள் மடிந்தன. தெருவெல்லாம் காக்கை செத்து விழுந்து கிடந்தது. பார்த்தவர்கள் அழுதார்கள். இரண்டு காக்கையோ மூன்று காக்கையோ மிஞ்சி யிருப்பதுபோலே தோன்றிற்று. இப்போது பார்த் தால் ஏறக்குறைய பழைய ஜனத்தொகை காக ஜாதியில் உண்டாய் விட்டது. காக்கை வலிய பறவை; அது நம்மைக் காக்கிறது; அதை நாம் கும்பிடவேண்டும்.

4. வருஷம் என்பது மழை; ஆண்டுக்கும் பெயர்.

5. திருப்பதி என்பது ஒரு க்ஷேத்திரத்துக்கும், ஸௌபாக்ய நிலைமைக்கும் பெயர்.

6. அன்னம் என்றால் உணவு.

அன்னம் என்பது வஸ்து.

ஸத்தியத்துக்கும், ப்ரஹ்மத்துக்கும் அன்னம் என்று பெயர். பிராம்மணர் "ஸத்யந்த்வர்த்தேந பரிஷிஞ்சாமி" என்று சொல்லி அன்னத்தை ஜலத் தில் சுற்றுகிறார்கள். அங்கு ஸத்யம் என்றது ஆகா ரத்தை; ரிதம் என்றது ஜலத்தை. ஸத்யம் என்பது உண்மைக்கும், ரிதம் நேர்மைக்கும் பெயர். நேர்மை யாவது தைர்யம். நாம் அறிந்த உண்மைப்படி நடக்கும் துணிவு. உண்மை ப்ருதிவியினுடைய அம் சம்; துணிவு ஜலத்தினுடைய அம்சம் என்று வேதாந்த சாஸ்திரம் சொல்லுகிறது.

அன்னம் அமிர்தம்.

வைஷ்ணவர், 'போஜனமாயிற்று?' என்பதற்கு 'அமுது செய்தாயிற்று?' என்கிறார்கள். அன்னம் அமிர்தமென்பதே ராமானுஜருடைய சித்தாந்தம். உண்மையை நேர்மையாலே காக்கவேண்டும்.

ஆதலால் அன்னத்தைக் காப்பாற்றத் தெரியா தவன் மூடன்.

பசு

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி

8 நவம்பர் 1917

பசுவின் சாணத்துக்கு நிகரான அசுத்த நிவாரண மருந்து உலகத்தில் அக்நியைத்தான் சொல்லலாம். வீட்டையும், யாகசாலையையும், கோவிலையும் நாம் பசுவின் சாணத்தால் மெழுகிச் சுத்தப்படுத்துகிறோம். அதனைச் சாம்பர் ஆக்கி அச் சாம்பரை விபூதி என்று ஜீவன் முக்திக் குறியாக வழங்குகிறோம்.

பசுவென்பது ஒளிக்குப் பெயர்.

பசுமாடு பத்தினிக்கும் மாதாவுக்கும் ஸமானம். அதன் கண்ணைப் பார்!

அதன் சாணமே விபூதி; அதன் பால் அமிர்தம்

வைத்தியரும் யோகிகளும் பசுவின் பாலை அமிர்தம் என்கிறார்கள். வேதமும் அப்படியேதான் சொல்லுகிறது.

பசுவை ஹிந்துக்களாகிய நாங்கள் தெய்வமாக வணங்குவதால், நாங்கள் பெரும் பகுதியாக வாழ்வதும், எங்களுடைய பூர்வீக சொத்துமாகிய இந்த தேசத்தில் பஹிரங்கமாகப் பசுவின் கொலை யாரும் செய்யாமல் இருப்பதே மரியாதை யாகும்,

இதைத்தான் ஆப்கானிஸ்தானத்து அமீர் சாஹெப் நமது தேசத்து முஸல்மான்களிடம் சொல்லிவிட்டுப் போனார். ஹிந்துக்களின் கண் ணுக்குப் படாமல் என்ன இழவு வேண்டுமானாலும் செய்துகொண்டு போங்கள்.

பகிரங்கமாக எங்கள் நெஞ்சை உடையும்படி செய்வதில் உங்களுக்கு லாபமென்ன? பேகாரில் கலகம் நேர்ந்ததுபோல் மொஹரம் பண்டிகை சம யத்தில் நாட்டில் வேறெந்தப் பக்கத்தில் எவ்வித மான கலகமும் நடக்காமல், மொஹரம் பண்டிகை சுபமாக முடிவெய்தி, ஹிந்து மஹமதிய ஸஹோத ரத்வம் ஸ்தாபனமாய்விட்டது பற்றி நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன்.

ஒரே, ஓரிடத்தில் மாத்திரம் கலகம்! அதுவும் நடக்காமல் இருந்திருக்க வேண்டும்! அந்தப் பக்கத்து ஜனத் தலைவருடைய குற்றம்; போனால் போகிறது. ஹிந்து முஸ்லிம் ஒன்று; இணங்கி வாழ்வது நன்று.

பசுவையும், காளையையும் ஹிந்துக்கள் தெய்வ மென்று கும்பிடுவதுபோல், கஷ்டப் படுத்தாமல் மரியாதையாக நமது முன்னோர் நடத்தியபடி இப் போது நடத்துவதில்லை. வண்டிக்காரன் மாட்டைக் கொல்லுகிறான். இடையன் பசுவுக்குப் பொய்க் கன்றுக்குட்டி காட்டி, அதன் சொந்தக் கன்றைக் கொல்லக் கொடுக்கிறான். ஹிந்துக்களாகிய நாம் பார்த்துக் கொண்டு சும்மாதானே இருக்கிறோம்? வெறுமே பூவைப் போட்டுக் கும்பிட்டால் மாத்திரம் போதுமா?

நம்முடைய பக்தியை நாம் செய்கையில் காண் பிக்க வேண்டும். காண்பித்தால் பிறரும் நமது கொள்கைகளுக்கு அவமதிப்புச் செய்யாமல் மரியா தையாக நடந்து கொள்வார்கள்.

நகரம்

சக்திதாஸன்

20 நவம்பர் 1917

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி - சமூகம்.

செல்வம்

சக்திதாஸன்

28 நவம்பர் 1917

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி - சமூகம்.
செல்வம் (1) என்ற தலைப்பில் இக்கட்டுரை வந்துள்ளது.

ஹிந்து தர்மம்

காளிதாஸன்

29 நவம்பர் 1917

வாரீர் நண்பர்களே, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஹிந்து தர்மத்தைப் பரவும்படி செய்ய வேண்டுமானால் அதற்கு இதுவே மிகவும் ஏற்ற தருணம். ஆஹா! ஸ்வாமி விவேகாநந்தரைப் போலே பத்துப் பேர் இப்போதிருந்தால் இன்னும் ஒரு வருஷத்துக்குள் ஹிந்து தர்மத்தின் வெற்றிக் கொடியை உலகமெங்கும் நாட்டலாம். அந்தக் கண்டங்கள் யுத்தமாகிய சுழற் காற்றுக்குள்ளே அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கையிலே, ஹிந்து தர்மத்தை எவன் கவனிப்பான் என்று கூறிச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். அந்த ஆக்ஷேபம் சரியன்று. சண்டைக் காலந்தான் நமக்கு நல்லது. இந்த ஸமயத்திலேதான் மனுஷ்ய அஹங்காரத்தின் சிறுமையும் தெய்வத்தினுடைய மஹிமையும் மனுஷ்யனுடைய புத்திக்கு நன்றாக விளங்கும். இவ்வுலக இன்பங்களே தர்மத்தினாலே பெற்றாலொழிய அவை இன்பங்கள்போலே தோன்றினாலும் துக்கமாகவே முடியும். அவரவர் கர்மத்தின் பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும். வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை யறுப்பான். நாம் இன்று நூறு ஸப்மரீன் வைத்துக்

கொண்டு பிறருடைய கப்பல்களைத் தகர்த்தால் நாளை மற்றொரு ஜாதியார் ஆயிரம் ஸப்மரீன் கட்டி நம்முடைய கப்பல்களை நொறுக்கிப் போடுவார்கள். பாம்பைக் கொல்ல ஒரு கீரிப் பிள்ளையுண்டு; பகை பகையை வளர்க்கும். நாம் மற்றவரை அடிமைப் படுத்தினால் நம்மை அடிமைப்படுத்த வேறு யாரேனும் முளைப்பார்கள்.

இவ்வுலகத்தில் நாம் செய்கிற ஒவ்வொரு செய்கையும், ஸ்வப்ரயோஜனத்தைக் கருதாமல், லோகோபகாரத்தை முன்னிட்டுக் கொண்டு செய்ய வேண்டும். தீராத ஆவலும், அவஸரமும், ஓயாத பரபரப்பும் உள்ள ஜ்வர வாழ்க்கை நாகரிகமாக மாட்டாது. சரியான நாகரிகத்துக்கு சாந்தியே ஆதாரம். யந்திரப் பீரங்கிகளும் ஸப்மரீன்களும் நாகரிகத்துக்கு அடையாளமல்ல. நிலக்கரிச் சுரங்கங்களும் ஆகாச வெடிகுண்டுகளும் அபிவிருத்திக்கு லக்ஷணமல்ல. அவை மனுஷ்யனுக்குப் பலமல்ல, துணையல்ல; அவை மனிதனுக்குப் பகை. மனுஷ்யனையும் அவனுடைய நாகரிகத்தையும் அழிக்கும் குணமுடையன.

கர்வத்தினாலே மரணம் உண்டாகும். அடக்கம் பொறுமை ஜீவகாருண்யம் என்ற குணங்களே உண்மையான நாகரிகத்தையும் நித்ய ஜீவனையும் விளக்கும். இப்படி நூற்றுக் கணக்கான ஹிந்து தர்மக் கொள்கைகளை நாம் உலகத்தார் கேட்க முழங்குவதற்கு இதுவே நல்ல தருணம். இந்த ஸமயத்தில் மனுஷ்ய ஸமூகம் அழிந்து போகாமல் அதைக் காப்பாற்றி நல்ல வழியிலே சேர்க்கக் கூடிய ஜாதியார் நம்மைத் தவிர வேறு யாருமில்லை. கண்ணைத் திறந்து பூமண்டல முழுதையும் ஒரே பார்வையாகப் பார்த்தால் நான் சொல்வதுண்மை யென்பது தானே விளங்கும். இவ்விஷயத்தை

ஆழ்ந்து யோசனை பண்ணி இங்கிருந்து வெளி நாடு களுக்கு நூற்றுக் கணக்கான பிரசங்கிகளை அனுப்பும் படி ராஜாக்களையும் ஜமீன்தார்களையும் செட்டியார் களையும் மடாதிபதிகளையும் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன்.

உயிரின் ஒலி

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

26 டிசம்பர் 1917

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி-தத்துவம்.

மிளகாய்ப் பழச் சாமியார் என்ற கதை 29—11—1917க் கும் 29—12—1917 க்கும் இடையே வெளியாகியுள்ளது. அந்தத் தேதி எனது குறிப்பில் கிழிந்து போயிருக்கிறது. இக் கதை இரண்டாம் தொகுதி கதைக் கொத்து என்னும் பகுதி யில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

கத்திச் சண்டை

காளிதாஸன்

10 ஜனவரி 1918 **பிங்கள மார்கழி 27**

பார்க்க:—இரண்டாம் தொகுதி. பகுதி-கதைக்கொத்து.

தமிழ் நாட்டின் விழிப்பு

சக்திதாஸன்

25 ஜனவரி 1918 பிளங்கள தை 13

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி-கலைகள்.

இக்கட்டுரையின் முடிவிலே 'இன்னும் வரும்' என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதே தலைப்புடன் வேறு கட்டுரை வந்ததாகத் தெரியவில்லை.

கலியுக கடோற்கசன்

26 ஜனவரி 1918 பிங்கள தை 14

பார்க்க :—இரண்டாம் தொகுதி. பகுதி-கதைக் கொத்து.

கோபந்நா

காளிதாஸன்

20 பிப்பரவரி 1918 பிங்கள மாசி 9

காலை ஒன்பது நாழிகை யிருக்கும். இள வெயில் காய்கிறது. வீதியில் வரிசையாக நிற்கும் தென்னை மரங்களில் கிளிகள் இணையிணையாகப் பறந்து விளையாடுகின்றன. வாஞ்ஞளியாகிய வெள்ளத்தில் புறுக் கூட்டங்களும், கொக்கு சபைகளும் தனி ராஜப் பருந்துகளும், நீந்திக் களிக்கின்றன. சிறு குருவிகள் ஊசலாடுகின்றன. காக்கைகள் ஓடிப் பறந்து திரிந்து ஜீவன உத்யோகத்தை மிகவும் சிரத்தையுடன் நடத்தி வருகின்றன. வானமுழுதிலும் பக்ஷிகளின் ஒலி நிரம்பிக் கிடந்தது.

அந்த ஸமயத்தில் தெருவிலே ஒரு தென்னை மரத்தில் ஒரு வண்ணான் இரண்டு கழுதைகளைக் கொண்டு கட்டினான். தென்னை மரத்தின் மேலிருந்து மைனா பக்ஷி ஆச்சரியமாகக் கூவிக் கொண்டிருந்தது. இதைக் கேட்ட கழுதைகள் தாமும் ஊளையிடத் தொடங்கின. இதைக் கேட்டு வீதி வழியே போய்க் கொண்டிருந்த பாலர் இருவர் மேற்படி கழுதைகளின் ஒலியை அனுகரணம் பண்ணித் தாமும் ஊளையிடலாயினர். இதைக் கேட்ட கழுதைகளில் ஒன்றுக்கு மிகவும் ஸந்தோஷமுண்டாய், ஸாதா

ரணக் கழுதைகள் போல "வாள்! வாள்!" என்று கத்தாமல் ஹூ, ஹூ, ஹூ என்று வெற்றிச் சங் கூதுவது போல கோஷிக்கலாயிற்று.

இந்த வேடிக்கையை நான் கவனித்துக்கொண் டிருந்தேன். அப்போது அஸாதாரண அப்ராக்ருத ஒலி யொன்று காதில் விழுந்தது.

ஒரு குருடன் பிச்சைக்கு வந்தான். அவனை ஐந்து வயதுள்ள ஆண் குழந்தை யொன்று கோலைப் பற்றி அழைத்துக் கொண்டு வந்தது. அவனுடன் ஒரு ஸ்திரீயும் வந்தாள்.

அந்தக் குருடனுக்குக் கண் தெரியுமோ, அதா வது அவன் மெய்க் குருடில்லையோ, வேஷக் குருடு தானே என்று எனக்கொரு சந்தேகம். அவனு டைய கண்ணைத் திறந்துகொண்டு தானிருந்தான். அதாவது, விழிக் கண் குருடு என்ற வகுப்பைச் சேர்ந்தவன் போலேயிருந்தான். அந்தக் கண்களை நான் பார்த்தேன். அவற்றில் புத்திக் குறிப்பு தகதகவென்று ஜ்வலித்துக் கொண்டிருந்தது. 55 வயதுள்ள கிழவன். சுக்குப் போலே, பனங் கிழங்கு போலே, ஒற்றை நாடியான, மிகவும் உறுதி கொண்ட உடம்பு. இடுப்புக்கு மேலே ஒட்டகத்தில் பாதிப் பங்கு கோணல் காணப்பட்டது. ஆனால் இயற்கையிலேயே கோணலா அல்லது அந்த மனி தன் வேண்டுமென்று தன்னுடம்பைக் கோண லாகச் செய்து கொண்டானோ, என்னால் நிச்சய மாகச் சொல்ல முடியாது. செம்பட்டை மயிர். நெற்றியிலே பட்டை நாமம். ஆஹா! அவன் முகத்தின் அழகை—அதாவது குழிகள் விழுந்த, மேடு பள்ளமான, வெயிலில் மழையில் காற்றில் அடிபட்டு முதிர்ந்து, சதைப்பற்றுக் கொஞ்சமேனு மில்லாமல், ஆனாலும் சக்திக் களஞ்சியமாக விளங் கிய அவன் முகத்தின் அழகை—நான் எப்படி

வர்ணிப்பேன்? நான் சித்திரமெழுதிப் பழகாதது பற்றி மிகவும் வருத்தப்படுகிறேன். ஹா, ஹிந்துஸ்தானத்து ஏழை, பரதேசி, பண்டாரம், யோகி, பிச்சைக்கார வகுப்புக்களில் சில அற்புதமான முகங்கள், எத்தனையோ அற்புதமான முகங்கள் நாள்தோறும் என் கண்ணில் படுகின்றன. அளவிறந்த துயரத்தாலோ, கஷ்டங்களாலோ, தவத்தாலோ, யோக சித்தங்களாலோ இவர்களிலே பல்லோர் அழுக்குப் படிந்த தேவ விக்ரகங்களின் முகங்களை யுடையோராக விளங்குகின்றனர். அதையெல்லாம் பார்த்தெழுதி வைக்க எனக்குச் சித்திரத் திறமையில்லை. புகைப் படம் பிடித்து வைக்கலாமா என்று யோசனை பண்ணுகிறேன். இது நிற்க.

மேற்படி குருடன் போட்ட சத்தத்தைத்தான் மேலே அப்ராக்ருதமென்றும் அஸாதாரணமென்றும் சொன்னேன். இந்த ஸம்ஸ்கிருத பதங்களின் பொருள் என்னவென்றால் அந்த மாதிரிச் சத்தம் நான் இதற்கு முன்பு கேட்டதே கிடையாது. ஆனால் அந்தக் குரல் எந்த ஜாதியென்பதைக் கூறமுடியும். கல்லுளி மங்கான், தெருப் புழுதியிலே உருண்டு உருண்டு, ஏழுமலையானென்று கூவிக் கையில் உண்டியல் செம்பு கொண்டு பணம் சேர்க்கும் ஏழுமலையாண்டி முதலியவர்களின் குரலைப் போன்றது. ஆனால் ஒரு மூன்று மாஸத்துப் பச்சைக் குழந்தையின் சத்தத்தைக் காட்டிலும், முப்பது வருஷத்துத் தேர்ச்சி கொண்ட கல்லுளி மங்கானுடைய சத்தம் எத்தனை மடங்கு கடினமாக இருக்குமோ, அத்தனை மடங்கு அந்தக் கல்லுளி மங்கானுடைய சத்தத்தைக் காட்டிலும் நமது கதா நாயகனுகிய சந்தேகக் குருடனுடைய குரல் கடினமானது. எனவே 32 மூங்கிற் கழிகளைச் சேர்ந்த

படியாக அறுக்கும் சத்தத்தைப் போலே, மேற்படி குருடனுடைய சத்தம். உன்னுடைய காதைத் தொளைத்துவிட வில்லையோ என்று என்னிடம் கேட்பீர்களானால், அப்படித் தொளைக்கவில்லை, அதாவது அவனுடைய சத்தம் கர்ணகடூரமில்லை. சிங்கத்தின் ஒலி கடினமாக இருந்தாலும், பயங்கர மாக இருந்தாலும் கல்லுளி மங்கானுடைய சத்தத் தைப் போல் அருவருப்புக்கிடமாகாது. நெஞ்சிலே மூச்சுப் பலம் இருந்தால் எவ்வளவு கடினமான சத்தமும் காதுக்கு சுகமாகவே கேட்கும்.

மேற்படி குருடனுடைய—அதாவது ஸம்சயக் குருடனுடைய சத்தம் என் காதுக்கு சுகமாகத்தா னிருந்தது. காலம் சென்ற ஸ்ரீ வில்லிப்புத்தூர் முத்தையா பாகவதருடைய பாட்டைத் தமிழ் நாட்டிலே பலர் கேட்டிருக்க மாட்டார்கள். கொப் பூழிலிருந்து, ஹாகார, ஹூம்காரங்கள் கொண்டு வருவதில் அந்த பாகவதர் மஹா சமர்த்தர். ஆகாச வாணம் ஏறும்போது "ஹ்விஸ்" என்று கம்பீரமாக ஒரு சத்தம் உண்டாகிறதே, அந்தச் சத்தம் மேற்படி பாகவதர் பாட்டில் எப்போதுமே யிருக்கும். அவர் பெரிய குஸ்திக்காரரும்கூட. மூச்சையடக்கி வேலை செய்வதில் பெரிய பெரிய ஹைதராபாத்து பஹல்வான்கூட அவருக்கு சமான மாகமாட்டார்கள். அந்த பாகவதர் செத்த பிறகு, அந்த மாதிரிக் குரலிலே ஹகாரம் பேசுவது மேற் படி குருடனிடத்திலேதான் கண்டேன். ஆனால் இந்தக் குருடன் பாடவில்லை. கூவினான். அந்தக் கூவுதலுக்கும் சந்தமிருந்தது. இவனுடைய சத்தத் தின் கனமோ என்றால் மேற்படி பாகவதர் தொண் டையைவிட 90 மடங்கு வலிமையுடையது. குழந் தைப் பிராயத்திலே இவன் சங்கீதப் பயிற்சி செய் யாமல் பிச்சைத் தொழிலைக் கைக்கொண்டானே என்றெண்ணி வருத்தப்பட்டேன்.

அத்தக் குருடன் கூவுகிறான்:....“தீராத வினை தீர்த்து வைப்பேன், கோபந்நோ!” அவனுடன் பிச்சைத் தகரப் போகணி யெடுத்துக் கொண்டு வந்த ஸ்திரீ எதிர்மொழி சொல்லுகிறாள்:—“கோவிந்தா!”

அந்தக் குருடன் கூவுகிறான்:—“ஆறுத புண்ணை ஆற்றி வைப்போன், கோபந்நோ!”

ஸ்திரீ:—கோவிந்தா!”

குருடன்:—“சனிக்கிழமை, கோபந்நோ!”

ஸ்திரீ:—“கோவிந்தா!”

குருடன்:—“நல்ல நாள் கோபந்நோ!”

ஸ்திரீ:—“கோவிந்தா!”

குருடன்:—“திருப்பதி வேங்கடாசலத்தைப் பார்த்து வந்தேன், கோபந்நோ!”

ஸ்திரீ:—“கோவிந்தா!”

குருடன் :—“ஏழுமலையான் தீர்த்து வைப்பான் கோபந்நோ!”

ஸ்திரீ:—“கோவிந்தா!”

குருடன்:—“ஹா! ஹா! மாறுத் தலைவலி மாற்றி வைப்பேன், கோபந்நோ!”

ஸ்திரீ:—கோவிந்தா!”

குருடன்:—ஹா! ஹா! கண்ணில்லாதவருக்குக் கண் கொடுப்பேன், கோபந்நோ!”

ஸ்திரீ:—“கோவிந்தா!”

கடைசி வாக்கியத்தைக் கேட்டவுடன் எனக்கு விநோதமாகத் தோன்றிற்று. கண்ணில்லாக் குருடன் பிறருக்குக் கண் கொடுப்பேன் என்று

சொன்னால் யாருக்குமே வேடிக்கையாகப் புலப் படாதா?

அப்போது என்னுடன் குள்ளச்சாமி என்ற யோகீசுரர் இருந்தார். அவர் என் மன நிலையை நான் சொல்லாமலே தெரிந்து கொண்டு பின்வரு மாறு சொல்லலாயினர்:—

"இதோ, போகிறானே, இவன் போன ஜன் மத்தில் திருதராஷ்ட்ர ராஜனாக இருந்தான். அவனுடன் போகிறாளே, அவள் காந்தாரியாக இருந்தவள்.

"போன ஜன்மத்தில், தம்பி மக்களுடைய சொத் தைத் தன் பிள்ளைகள் சூதினால் அபஹரிக்கையிலே தான் ஒன்றும் தடுத்துச் சொல்லாமல் பிள்ளை துரியோதனன் பக்கம் சேர்ந்துகொண்டு வேடிக்கை பார்த்த குற்றத்துக்காக விதி இவனை இந்த ஜன் மத்தில் பிக்ஷைக்காரனாகவும் பிறவிக் குருடனாகவும் செய்தது. காந்தாரி பதிவிரதையாகையாலே தானும் கூட வந்தாள். ஐந்து வயதுக் குழந்தை கோலைப் பிடித்துக்கொண்டு போகிறானே அவன்தான் விகர் ணன்" என்றார்.

அப்போது நான்:—"ஐயோ, திருதராஷ்டிரன் மஹாவித்வானாயிற்றே. அவனுக்கிந்த கதி வர லாமோ?" என்று சொல்லி வருத்தப்பட்டேன்.

அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறார்:— "போன ஜன்மத்தில் ராஜாவாகவும் பண்டிதனாகவும் இருந்தான். ஆனால் இந்த ஜன்மத்தில் ஏழையாகப் பிறந்து பலவிதக் கஷ்டப்பட்டுப் பிறகு பூர்வ புண்ணிய சேஷத்தால் சதுரகிரியில் ஒரு மஹரிஷி யிடம் பகவந் நாமத்தின் மஹிமையைத் தெரிந்து கொண்டு, உண்மையான பக்தி மார்க்கத்தில்

சேர்ந்தபடியால் இவன் இப்போது ஜீவன் முக்தனாய் விட்டான்.

"அவனுடைய தகரப்போகணி தூக்கிக்கொண்டு போகிற காந்தாரி 'கோவிந்தா! கோவிந்தா!' என்று கத்துகிறாளே அதன் பொருள் தெரியுமா? .....சொல்லுகிறேன் கேள். தன்னுடைய கணவன் பரம பதத்தைக் கண்டு கோவிந்த ஸ்தானத்தை அடைந்து விட்டானென்பதை அவள் உலகமறிய முழங்குகிறாள். அவளுடைய பாதிவ்ரத்ய மஹிமையினால் இவன் இந்தப் பதவி யடைந்தான்" என்று சொன்னார்.

நான் அப்போது குள்ளச் சாமியிடம்:—"ஜீவன் முக்தி பெற்றும் பிச்சைத் தொழில் ஏன் செய்கிறான்?" என்று தவறுதலாகக் கேட்டேன். அவர் அதற்கு நேரே மறுமொழி கூறாமல் தாம் முன்பு கூறி வந்ததற்குத் தொடர்ச்சி சொல்வதுபோல:—"ஆகையால், இவன் போன ஜன்மத்தில் இருந்ததைக் காட்டிலும் இப்போது கோடிமடங்கு மேலான நிலைமையிலிருக்கிறான். இவனைக் குறித்து நீ கவலைப்படவேண்டிய அவசியமில்லை" என்றார். அப்போது நான் குள்ளச்சாமியை நோக்கி:—"எனக்குப் பூர்வ ஜன்ம விஷயத்தில் இன்னும் நிச்சயமான நம்பிக்கை ஏற்படவில்லை" என்றேன். இதைக் கேட்டவுடன், அந்த யோகீசுரர் எனக்கு மறுமொழி கொடுக்காமல், "அரே! ராம், ராம்" என்று சொல்லி நகைப்புக் காட்டி ஓடிப் போய் விட்டார்.

பின்பு, குருடன் போன திசையிலே திரும்பினேன்.

மறுபடி குருடன் கத்துகிறான்:—"தென்னை மரத்திலே கிளி பறக்குது, கோபந்நா!"

ஸ்திரீ: – கோவிந்தா!"

குருடன்:—"சிதம்பரத்திலே கொடி பறக்குது கோபந்நோ!"

ஸ்திரீ:—கோவிந்தா!"

குருடன்:—தென்னை மரத்திலே கிளி பறக்குது கோபந்நோ!"

ஸ்திரீ:—"கோவிந்தா!"

இங்ஙனம் உருவங்களும் ஒலியும் எனது புல னெல்லையைக் கடந்து சென்றுவிட்டன.

திரு விளக்கு

காளயுக்தி சித்திரை 31-ந் தேதி அதாவது 13 மே 1918 தேதியன்று புதுச்சேரியில் பாரதியார் வீட்டில் நடந்த திரு விளக்குப் பூஜையைப் பற்றி இக்கட்டுரை கூறுகிறது. ஆகவே அந்தத் தேதிக்குச் சற்றுப் பிந்தி இது எழுதப்பட் டிருக்க வேண்டும்.

இக்கட்டுரை மூன்றும் தொகுதியில் மாதர் என்னும் பகுதியில் வெளிவந்துள்ளது.

சித்திரக்காரருக்குக் கடிதம்

9 ஜூலை 1918

ஓம் சக்தி

தங்களுக்கும் எனக்கும் பின்னே எழுதிக்கொள்ளக் கூடிய உடன்படிக்கைப்படி ஏற்படப் போகிற புஸ்தக வியாபார ஸம்பந்தமாக இப்போது தங்களிடம் முன்பணமாகப் பெற்றுக்கொள்ளுகிற ரூபாய் நூற்றைம்பது ரூ. 150-க்கு இதை ஏற்புச் சீட்டாகவும் கடன் பத்திரமாகவும் அங்கீகரிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

9 ஜூலை 1918,
புதுச்சேரி

சி. சுப்பிரமணிய பாரதி

ஸ்ரீமான்

டி. ஜி. கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள்,

நாச்சியார்கோயில்

சித்திரக்காரர்.

ஸ்வராஜ்யம்

சக்திதாசன்

5 அக்டோபர் 1918 கானயுக்தி புரட்டாசி 20

சென்னை "ஹிந்து" பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதிய கடிதமொன்றில் "அமெரிக்காவும், ஐர்லாந்தும், இந்தியாவும்" என்ற மகுடத்தின் கீழே ஒரு குறிப்பெழுதியிருக்கிறார். அதில் அமெரிக்கா ஸ்வாதீனமடைந்த திருநாளாகிய ஜூலை நாலாந் தேதி கொண்டாட்டங்கள் ஆங்கிலேயர்களாலேயே இங்கிலாந்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்ட செய்தியைக் குறித்துப் பேசுகிறார். [இங்கிலீஷ் ராஜ்யத்தை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றி பெற்று (யுனைடெட் ஸ்டேட்ஸ்) அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1776-ஆம் வருஷம் ஜூலை மாஸம் நாலாந் தேதியன்று விடுதலைக் கொடி நாட்டின.] மேற்படி லண்டன் நிருபர் எழுதுகிறார்.

"இன்று ஜூலை நாலாந் தேதியன்று (ஆங்கிலேயராகிய) நாமெல்லோரும் நம்முடைய அமெரிக்க ஸஹோதரருடன் கலந்து ஐக்யநாடுகளின் விடுதலையை ஆவலுடன் கொண்டாடுகிறோம்."

இன்று ஆங்கிலேயர் சொல்லும் வார்த்தைகளையும், செய்யும் செய்கைகளையும் 142 வருஷங்களுக்கு முன்பு சொல்லியும், செய்துமிருப்பார்களாயின்

தேசத் துரோகிகளென்னும், கலகக்காரரென்றும் சொல்லி மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும். இதனைப் பல ஆங்கிலேயர் இப்போது நினைத்திருக்கக் கூட மாட்டார்கள். அதே ஆங்கிலேயரில் சிலர் இக் காலத்தில் "விடுதலைபெற நியாயமாகப் போராடும்" வேறு சில ஜாதியார் விஷயத்தில் என்ன மாதிரியான வார்த்தை சொல்லுகிறார்கள்?

இங்கு ஒரு முக்யமான பேதத்தை மேற்படி லண்டன் நிருபர் மறந்துவிட்டார். ஐக்ய நாடுகள் விடுதலைக்காகப் படை சேர்த்துப் போர் புரிந்து ப்ரான்ஸ் தேசத்தின் உதவியால் இங்கிலாந்தை வென்றன. ஐர்லாந்து கலகங்கள் செய்து விடுதலை பெற முயன்று வருகிறது.

இந்தியாவோ அப்படியில்லை. ஆங்கிலேயரிட மிருந்து ஸமாதானமாகவே ஸ்வராஜ்யம் சட்டத்துக் கிணங்கிய முறைகளால் பெற விரும்புகிறது.

"உபாயத்தால் ஸாதிக்கக்கூடிய கார்யத்தைப் பராக்கிரமத்தால் ஸாதிக்க முடியாது" என்று பஞ்ச தந்திரம் கூறுகிறது. மேலும் நமக்கு ஆங்கிலேயர் ஸமாதானமாகவே ஸ்வராஜ்யம் கொடுத்து விடு வார்கள் என்று நினைப்பதற்குக் காலதேச வர்த்த மானங்கள் மிகவும் அனுகூலமாகவேயிருக்கின்றன.

எங்ஙனமெனில் மந்திரி மிஸ்டர் மான்டேகுவும், ராஜப்ரதிநிதி லார்டு செம்ஸ்போர்டும் சேர்ந்து தயார் செய்திருக்கும் சீர்திருத்த ஆலோசனைப் புஸ்த கத்தில் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றனர். "இந்தியாவின் எதிர்கால நிலை டில்லி நகரத்திலே னும் ஸிம்லாவிலேனும் வைட்ஹாலிலேனும் நிச்ச யிக்கப் படுவதன்று. ப்ரான்ஸ் தேசத்துப் போர்க் களங்களிலே நிச்சயிக்கப்படும்" என்கிறார்கள்.

இங்ஙனம் மந்திரியும் ராஜப்பிரதிநிதியும் கூறுவதன் பொருள் நமக்குத் தெளிவாக விளங்கவில்லை. எனினும், நேசக் கக்ஷியாருக்கு வெற்றி கிடைத்தால் நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க முடியுமென்று அவர்கள் சொல்வதாகவே நாம் பொருள் கொள்ள நேர்கிறது.

இதனிடையே இந்தியாவில் இந்து-மஹமதிய பேதங்களிருப்பதாகக் காட்டி அதினின்றும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கத் தகாதென்று சொல்லும் ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர் முதலிய வெளிநாட்டு, உள்நாட்டு துரோகிகள் எல்லார் வாயிலும் ஸ்ரீமான் ஸய்யது ஹசேன் இமாம்-நமது விசேஷ ஜனசபைக் கூட்டத்தின் அதிபதி-மண்ணைக் கொட்டிவிட்டார். "எல்லா வகுப்புகளும் இப்போது கொண்டிருக்கும் ஐக்ய புத்தியையும், எல்லார் நலமும் ஒன்றென்ற கருத்தையும் எதிர்க்க முடியாது" என்று அவர் சொல்லுகிறார்.

மேலும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் மிகவும் அவசியமென்பதை விளக்கிக் காட்டும் பொருட்டாக நீதி நிபுண ஸய்யது ஹஸேன் இமாம் ஸாஹப் சொல்லும் பின்வரும் வாக்கியங்களுக்கு ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர் என்ன மறுமொழி சொல்லக் கூடும்? ஹஸேன் இமாம் கூறுகின்றார்:—

"எல்லாவிதமான அன்னியாதிபத்தியங்களைக் காட்டிலும் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தார் மீது செலுத்தும் அன்னியாதிபத்தியம் மிகக் கொடியது என்று மக்காலே சொன்னார். இது மக்காலே காலத்தில் எத்தனை உண்மையோ அத்தனை இக்காலத்திலும் உண்மையே. அவர் வார்த்தை மற்ற தேசங்களுக்கு எவ்வளவு பொருந்துமோ அத்தனை இந்தியாவுக்கும் பொருந்தும். அன்ய நுகத்தடியின் கஷ்டத்தை இந்தியா உணர்கின்றதென்பதை மறுத்

தல் மூல ஸத்யங்களைப் பார்க்க மாட்டோமென்று கண்ணை மூடிக் கொள்வதேயாகும். இந்தியாவில் ப்ரிடிஷ் ராஜ்யத்தை ஆதரித்துப் பேசுவோர் இந்நாட்டிற்கு ப்ரிடிஷார் பரோபகார சிந்தனை கொண்டு மட்டும் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்நாட்டு ஜனங்கள் தமக்குத் தாமே தீங்கு செய்து கொள்ளாமல் காக்கும் பொருட்டாகவும், நம்மவரின் தர்ம நியாயத்தை உயர்த்தும் பொருட்டாகவும் லௌகிகச் செல்வம் ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டாகவும், இதுபோன்ற பல காரணங்களின் பொருட்டாகவும் அவர்கள் இங்கு வந்ததாகச் சொல்லப்படுகிறது; இவையெல்லாம் பஷுபாதிகள் வழக்கமாகச் சொல்லும் அரைமொழிச் சொற்களேயாம். உண்மை யாதெனிலோ, ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஏற்படுத்தப் பட்டது, இந்தியாவின் நன்மைக்காக அன்று. இந்தியாவினின்றும் பணத்தை ஏராளமாய்த் திரட்டிக்கொண்டு போய் ப்ரித்தானியாவுக்கு நன்மை செய்யும் பொருட்டாக ஏற்பட்டது. பொன்னுசையுடன் மண்ணுசையும் கலந்தது. பிறகு கம்பெனியாரிடமிருந்து அரசு மகுடத்தின் கீழே கொண்டு வரப்பட்ட பின் பொருளாசையும் அதிகார ஆவலும் ஆட்சி செய்வோருக்குக் குறைவு படவில்லை. பேதம் யாதெனில், யதேச்சதிகாரத்தை இப்பொழுது ஒழுங்குப்படி நடத்துகிறார்கள். அந்தக் கொள்ளை சாஸ்த்ர தோரணையில் நடந்து வருகிறது!" என்று நம்முடைய ஜனசபைத் தலைவர் சொல்லுகிறார், "இஃதெல்லாம் ஜனங்களுக்குத் தெரியும். இது அவர்கள் நெஞ்சை உறுத்துகிறது. எனவே பண்டைச் செயல்களுக்கெல்லாம் இப்போது (ஆங்கில அதிகாரிகள்) பரிகாரம் அல்லது ப்ராயச்சித்தம் செய்யவேண்டுமென்று ஜனங்கள் கேட்கிறார்கள்" என்று கூறி ஸய்யது இமாம் முடிக்கிறார்.

இதுதான் விஷயம் முழுதும்.

இவ்வித அதிகாரிகளின் கையினின்று நம்மை மீட்டு நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டு மென்று மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ர வர்த்தியிடம் அழுத்தமாகப் ப்ரார்த்தனை செய் கிறோம்.

எங்களுக்கு உடனே ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று வணக்கத்துடனும் எங்களுடைய பரிபூரண ஜீவபலத்துடனும் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறோம்.

பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம்

21 டிசம்பர் 1918

ஓம் சக்தி

கடையம்

21 டிசம்பர் 1918.

ஸ்ரீமான் நெல்லையப்ப பிள்ளைக்கு நமஸ்காரம்.

நான் ஸௌக்யமாகக் கடையத்துக்கு வந்து சேர்ந்தேன். இவ்வூருக்கு நான் வந்த மறுநாள் பாப்பா பாட்டு, முரசு, நாட்டுப் பாட்டு, கண்ணன் பாட்டு இவை வேண்டுமென்று பலரிடமிருந்து கடிதங்கள் கிடைத்தன.

என் வசம் மேற்படி புஸ்தகங்கள் இல்லை. உன்னிடம் மேற்படி புஸ்கங்களிருந்தால் அனுப்பக் கூடிய தொகை முழுதும் அனுப்பும்படி ப்ராத்திக்கிறேன்.

"பாஞ்சாலி சபதம்"—இரண்டு பாகங்களையும் சேர்த்து ஒன்றுக அச்சடிப்பதற்குரிய ஏற்பாடு எது வரை நடந்திருக்கிறதென்ற விஷயம் தெரியவில்லை. இனிமேல் சிறிது காலம்வரை நான் ப்ரசுரம் செய்யும் புஸ்தகங்களை போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் காட்டி அவருடைய அனுமதி பெற்றுக்

கொண்ட பிறகே ப்ரசுரம் செய்வதாக ராஜாங் கத்தாருக்கு நான் ஒப்பந்தமெழுதிக் கொடுத்திருக் கிறேன்.

ஏற்கெனவே 'பாஞ்சாலி சபதம்' (முதற் பாகம்) வெளிப்பட்டிருக்கிறபடியாலும், ப்ரசுரம் செய்பவன் நானன்றி நீயாதலாலும் இதை அச்சிடுமுன் மேற்படி ஒப்பந்த விதியை அனுஸரித்தால் அவசியமில்லை யென்று தோன்றுகிறது.

அப்படியே காண்பித்தாலும் தவறில்லை. நமது நூல் மாசற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் ஹானிங்டன் எனக்கு மிகவும் அன்புள்ள ஸ்நேஹிதர்; தங்கமான மனுஷ்யன். ஆதலால், அநாவசியமான ஆக்ஷேபங் கற்பித்து நமது கார்யத்தைத் தடை செய்யக் கூடியவரல்லர். நீயே மேற்படி நூலை அவரிடங் காட்டி அனுமதி பெற்றுக் கொள்ளுக.

பாப்பா பாட்டு முதலியன உன்னிடம் இல்லா விட்டால் உடனே அவற்றை மீட்டும் ப்ரசுரம் செய்தல் மிகவும் அவஸரம்.

இவை முதலிய எல்லா விஷயங்களைப்பற்றி உன் னிடம் நேரே பேச விரும்புகிறேன்.

இதன் பொருட்டாக இக் கடிதம் கண்டவுடன் இங்கு நீ நேரே புறப்பட்டு வந்து சேரும்படி வேண்டு கிறேன். ஸ்ரீமான் குவளை—க்ருஷ்ணய்யங்கார் முதலிய நம்முடைய நண்பர்களுக்கு என் நமஸ் காரத்தைத் தெரிவிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன். இன்னும் ப்ரசுரம் செய்யவேண்டிய நூல்கள் என் னிடம் பல இருக்கின்றன. நான் இப்போது ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வந்துவிட்டபடியால் நமது ப்ரசுரங் களுக்கு பணம் கொடுக்கக் கூடிய நண்பர்களும் பலர்

இருக்கிறார்கள். உன்னை ஸஹாய புருஷனாகக் கொண்டால் ப்ரசுர காரியம் தீவிரமாகவும் செம்மையாகவும் நடைபெறுமென்று தோன்றுகிறது.

எதற்கும், நீ உடனே புறப்பட்டு இங்கு வந்து சேரும்படி ப்ரார்த்திக்கிறேன்.

உனக்கு மஹாசக்தி அமரத்தன்மை தருக.

உனதன்புள்ள,

சி. சுப்பிரமணிய பாரதி.

எட்டயபுரம் அரசருக்குச் சீட்டுக் கவிகள்

2 மே 1919

குறிப்பு:—இச் சீட்டுக் கவிகள் இரண்டும் முதல் தொகுதியில் ஸ்வசரிதையும் பிற பாடல்களும் என்ற பகுதியில் சேர்க்கப் பட்டுள்ளன.

புதுச்சேரியிலிருந்து கடயம் வந்து அங்கு சில காலம் பாரதியார் வசித்தார். அங்கிருந்து பிறகு எட்டயபுரம் சென்றபோது இவை எழுதப் பெற்றிருக்கின்றன.

வேப்ப மரம்

(ஒரு சிறிய கதை)

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

26 ஜூன் 1919 சித்தார்த்தி ஆனி 7

இளவேனிற்காலத்தில் ஒரு நாள். காலை வேளையில் நான் மலயகிரிச் சார்பிலே தனியாக உலாவிக் கொண்டிருந்தேன். நெடுந்தூரம் சுற்றிய பிறகு என் உடம்பில் சற்றே இளைப்புண்டாயிற்று. அந்த இளைப்புத் தீரும் பொருட்டாக அங்கொரு தோப்புக் குள்ளே போய் ஒரு வேப்ப மரத்தடியில் படுத்துக் கொண்டேன். இன்பமான காற்று வீசிற்று. சிறிது நேரத்துக்குள் கண்ணயர்ந்து நித்திரையில் ஆழ்ந்து விட்டேன். அப்போது நான் கண்ட அபூர்வமான கனவை இங்கெழுதுகிறேன்.

நான் தூங்கிக் கொண்டிருக்கையில், "ஏ மனிதா, ஏ மனிதா, எழுந்திரு; எழுந்திரு" என்று அமானுஷிகமாக ஒலியொன்று கேட்டது. இந்த ஒலியைக் கேட்டவுடன் கண்ணை விழித்தேன். உண்மையாகவே விழிக்கவில்லை. கனவில் விழித்தேன். அதாவது விழித்துக் கொண்டதாகக் கனவு கண்டேன்.

விழித்து, "யார் கூப்பிட்டது?" என்று கேட்டேன்.

"நான்தான் வேப்பமரம்; நான்தான் கூப் பிட்டேன்; எழுந்திரு" என்று மறுமொழி உண்டா யிற்று.

உடனே நான் யோசிக்கலானேன்:—

"ஓஹோ, ஓஹோ! இது பேயோ, பிசாசோ, யக்ஷர், கிந்நரர், கந்தர்வர் முதலிய தேவ ஜாதி யாரோ, வனதேவதைகளோ, யாரோ தெரியவில்லை. இல்லாவிட்டால் வேப்பமரம் எங்கேனும் பேசுவ துண்டோ? அட, போடா, பேயாவது? அதெல்லாம் சுத்தக் கட்டுக்கதை யன்றோ? நாம் உண்மையாகவே கண்ணை விழித்து ஜாக்ர நிலை யடையவில்லை. இன்னும் கனவு நிலையிலேதானிருக்கின்றோம். இந்த ஒலி கனவில் கேட்கும் கற்பனையொலி"—இங்ஙனம் நான் யோசனை செய்துகொண்டிருக்கையில், "ஏ மனிதா, ஏ மனிதா, எழுந்திரு" என்று மறுபடி சத்தமுண்டா யிற்று.

"நீ யார்?" என்று பின்னுங் கேட்டேன்.

"நான் வேப்பமரம். என் அடியிலேதான் நீ படுத்திருக்கிறாய். உனக்குச் சில நேர்த்தியான விஷயங்கள் கற்றுக் கொடுக்கும் பொருட்டாக எழுப்புகிறேன்" என்று மறுமொழி வந்தது.

அப்போது நான்:—"சரி, நமக்குத் தெரியாத விஷயங்கள் உலகத்தில் எத்தனையோ உண்டென்று ஷேக்ஸ்பியரே சொல்லி யிருக்கிறார். அந்தப்படி மரங்களுக்குப் பேசும் சக்தி இருக்கலாம். அவ் விஷயம் நமக்கு இதுவரை தெரியாமலிருக்கலாம். ஆதலால் இந்த மரத்துடன் ஸம்பாஷணை செய்து விஷயத்தை உணர்ந்து கொள்வோம்" என் றெண்ணிக் கண்ணைத் திறந்துகொண்டெழுந்து நின்றேன்.

(உண்மையாகவே எழுந்து நிற்கவில்லை. எழுந்து நின்றதாகக் கனவு கண்டேன்.)

எழுந்து நின்று கொண்டு:—"வேப்பமரமே. உனக்கு மனித பாஷை எப்படித் தெரிந்தது? மனிதரைப்போல் நெஞ்சு, வாய், தொண்டை, அண்ணம், நாக்கு, பல், உதடு என்ற கருவிகளில்லாத போது மனித பாஷை பேசுவது ஸாத்யப் படாதே? எங்களிலே பல் மாத்திரம் விழுந்தவர் களுக்கும் உச்சரிப்பு நேரே வராமல் போகிறதே. அடி நாக்கில்லாதவர்கள் ஊமையாய்ப் போகிறார் களே. அப்படியிருக்க நீ மனித சரீரமே யில்லாமல் மனித பாஷை எங்ஙனம் பேசுகிறாய்?" என்று கேட்டேன்.

அப்போது வேப்பமரம் சொல்லுகிறது:—

"கேளாய், மானுடா, மனிதனுக்கு ஒரே வாய்தானுண்டு. எனக்கு உடம்பெல்லாம் வாய். மனித பாஷை பேசுவதற்கு வாய் முதலிய புறக் கருவிகள் மனிதரைப் போலவே யிருத்தல் அவசிய மென்று நீ நினைக்கிறாய். ஸாதாரண ஸ்திதியில் அவை அவசியந்தான். ஆனால், நான் ஸாதாரண மர மில்லை. நான் அகஸ்த்ய முனிவரின் சிஷ்யன். தமிழ் பாஷையில் எனக்குள்ள ஞானம் இக்காலத்தில் அகஸ்த்யரைத் தவிர வேறு யாருக்குமே கிடை யாது....."

வேப்பமரம் பின்னுஞ் சொல்லுகிறது:

"நடந்த கதையை அடியிலிருந்து சொல்லு கிறேன். மானுடா, கவனத்துடன் கேள். எனக்கு இப்போது முப்பது வயதுதானாகிறது. நான் இள மரம். பதினைந்து வருஷங்களின் முன்பு ஒரு நாள் வஸந்த காலத்தின்போது இராவேளையில் ஆச்சர்ய மான நிலா வீசிக்கொண்டிருந்தது. நான் விழித்

துக் கொண்டிருந்தேன். ஸாதாரணமாக மரங்கள் மனிதரைப் போலவே பகல் முழுவதும் விழித்துக் கொண்டிருக்கும். இரவானவுடனே தூங்கும். அன்றிரவு எனக்கு எந்தக் காரணத்தாலோ தூக்கமே வரவில்லை. நிலாவையும், வானத்தையும், சூழ்ந்திருக்கும் மரங்களையும் பார்த்துக்கொண்டு பிரமானந்தத்தில் மூழ்கியிருந்தேன். அப்போது பதினாறு வயதுடைய, மிகவும் அழகான மனித ஆண் பிள்ளையொருவனும், அவனைக் காட்டிலும் அழகான பன்னிரண்டு வயதுடைய மனிதப் பெண் ஒருத்தியும் அதோ தெரிகிற நதியில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். சிறிது நேரத்துக்குள்ளே அவ்விருவரும் ஸாமான்ய மனிதரில்லையென்பது எனக்குத் தெளிவாய்விட்டது. சிறகுகளில்லாமல் அவர்கள் வானத்தில் பறந்து விளையாடுவது கண்டேன். பிறகு ஒருவருக்கொருவர் பேசிய வார்த்தைகளிலிருந்து அவர்கள் இன்னாரென்று தெரிந்துகொண்டேன். அவ்விருவரும் யாரெனில் அகஸ்த்ய மஹரிஷியும் தாம்ரபர்ணியம்மனும். அகஸ்த்யர் ஸாதாரண காலத்தில் கட்டை விரலளவுடைய வடிவந் தரித்திருப்பது வழக்கம். ஆனால் அவர் காமரூபி. அதாவது, நினைத்தபோது நினைத்த வடிவந் தரிக்கும் திறமை படைத்தவர். தாம்ரபர்ணியம்மனும் அப்படியே. ஆதலால் அவ்விருவரும் அப்போது அதி சுந்தரமான மனுஷ்ய ரூபந்தரித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கிரீடை பொழுது விடியும்வரை நடந்தது. அப்பால் தாம்ரபர்ணி மறைந்துவிட்டாள்.....''

வேப்பமரம் சொல்லுகிறது:— ''கேளாய், மானுடா, கவனத்துடன் கேள். தாம்ரபர்ணியம்மன் பகலைக் கண்டவுடன் மறைந்து சென்று விட்டாள் அகஸ்த்யர் மாத்திரம் தனியாக வந்து எனதடியில்

இப்போது நீ நிற்குமிடத்திலே - படுத்துக்கொண்டு யோக நித்திரையில் ஆழ்ந்தனர். எனக்கு அந்த ஸமயத்தில் அகஸ்த்யருடைய சக்திகளெல்லாம் நன்றாகத் தெரியாது. ஆதலால், அவர் யோகத்திலிருக்கிறாரென்பதை அறியாமல் ஜலக்கிரீடையின் சிரமத்தால் ஸாதாரண நித்திரையிலிருக்கிறாரென்று நினைத்தேன். பொழுது விடிந்து ஏறக்குறைய ஒரு ஜாமமாயிற்று. அப்போது அதோ, உனக்கெதிரே ஒரு புளியமரம் நிற்கிறது பார்—அந்த மரத்தின் கீழேயுள்ள புற்றிலிருந்து ஒரு பெரிய நல்லபாம்பு 'ஹுஸ்' என்ற சீத்காரம் செய்துகொண்டு அகஸ்தியர் படுத்திருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து பாய்ந்து வரலாயிற்று. அதைக் கண்ட மாத்திரத்தில் நான் திடுக்கிட்டுப் போனேன். ஐயோ; இந்தக் கொடிய பாம்பு இந்த மஹா புருஷனைக் கொன்றுவிடப் போகிறதே! இவரை எப்படியேனும் கண் விழிக்கும்படி செய்வோமானால் தம்முடைய தவ வலிமையினால் பாம்பை அடக்கி விடுவார்" என்றெண்ணி அவரை விழிக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் என் இலைகளை அவர் மீது சொரிந்தேன். அவர் விழிக்கவில்லை. இதற்குள் பாம்பும் அவரை நெருங்கி வந்து அவருடைய பாதத்தில் இரண்டு முறை கடித்தது. முன்றாம் முறை கடிக்கும் பொருட்டும் படத்தைத் தூக்கிற்று. அத்தருணத்தில் அவர் கண்ணைத் திறந்து பார்த்துக் கயிற்றைத் தூக்குவதுபோல் எளிதாக அந்தப் பாம்பைக் கையால் எடுத்துக் கழுத்தில் வளைய வளையச் சுற்றிக்கொண்டார். அந்தப் பாம்பும் கயிற்றைப் போலவே ஒன்றும் செய்யாமல் பரம ஸாதுவாக அவர் கழுத்தில் கிடந்தது. கடியுண்ட இடத்தில் இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. அதில் அவர் கொஞ்சம் மண்ணை யெடுத்துப் பூசினார். புண் உடனே ஆறிப்போய் சாதாரணத்

தோலாய்விட்டது. இதைக் கண்டு நான் மிகவும் ஆச்சர்யமடைந்தேன். இப்படிப்பட்ட மஹானிடம் ஒரு வார்த்தை பேசக்கூட யோக்கியதையில்லாமல், ஊமை மரமாய்ப் பிறந்து விட்டோமே என் றெண்ணித் துயரப்பட்டேன். எப்படியேனும் எனது கருத்தை அவருக்குத் தெரிவிக்க விரும்பி அவர் காலின்மீது சில மலர்களையும் இலைகளையும் சொரிந்தேன். அவர் தலையை நிமிர்த்தி என்னை நோக்கி;—

'வேப்பமரமே' என்று கூப்பிட்டார்.

வேப்பமரம் பின்னுங் கதை சொல்லுகிறது:— கேளாய், மானுடா, கவனத்துடன் கேள், இங்ஙனம் என்னை அகஸ்த்யர் கூப்பிட்டவுடனே என்னையறியாமால என் கிளைகளிலுள்ள வாய்களி னின்றும், 'ஏன் முனிவரே?' என்ற தமிழ்ச் சொற் கள் உதித்தன. என் உடம்பு முழுவதும் புளகித மாய் விட்டது. மாற்றிப் பிறக்க வகையறிந்து கொண்டேன். வேப்பமரப் பிறவி போய் எனக்கு மனிதப் பிறவி யுண்டாயிற்றென்று தெரிந்து கொண்டேன். உடம்பு மாறவில்லை. உடம்பு மாறினுலென்ன, மாறுவிட்டாலென்ன? நாம் உடம் பில்லை. நான் ஆத்மா. நான் போதம். நான் அறிவு. திடீரென்று வேப்பமரச் சித்தம் மாறிப் போய் எனக்குள் மனுஷ்ய சித்தம் சமைந்து விட்டது. மனுஷ்ய சித்தம் ஏற்பட்டாலன்றி மனித பாஷை பேச வருமா? கோடி ஜன்மங்களில் நான் பெற்றி ருக்க வேண்டிய பயனை அந்த முனிவர் எனக்கு ஒரே கணத்தில் அருள் செய்தார். எனக்கேற்பட்ட ஆனந்த மிகுதியால் என் பூக்களையும் இலைகளையும் கணக்கில்லாமல் அவருடைய பாதத்தின் மீது வர்ஷித்தேன். அவர் விகவும் மகிழ்ச்சி பூத்தவராய் 'ஏ, வேப்ப மரமே, நேற்றிரவு நானும் தாம்ரபர்ணி

யும் இங்கு ராம நதியில் ஜலக்ரீடை செய்து கொண் டிருந்த காலத்தில் நீ பார்த்துப் பெரு மகிழ்வெய்திப் பல ஆசீர்வாதங்கள் கூறினாய். அதை நான் ஞான திருஷ்டியால் உணர்ந்தேன். அப்பால் சிறிது, நேரத்துக்கு முன்பு நான் யோக சமாதியிலிருந்த போது இந்தப் பாம்பு வருவதைக் கண்டு நீ என்னைக் காக்க விரும்பி என்னை எழுப்பும் பொருட்டாக என் மீது நின் இலைகளையும் பூக்களையும் சொரிந்தாய். இங்ஙனம் நீ என்னிடம் காட்டிய அன்பிற்குக் கைம் மாறுக உனக்கு நான் ரிஷிபோதம் கொடுக்கிறேன். இதனால் உனக்கு ஸகல ஜந்துக்களின் பாஷைகளிலும் சிறந்த ஞானம் இயல்பாகவே உண்டாய்விடும். எல்லா ஜந்துக்களினிடத்திலும் ஸமமான பார்வை யும் ஸமமான அன்பும் உண்டாகும். எல்லா உயிர் களிடத்திலும் தன்னையே காண்பதாகிய தேவ திருஷ்டி ஏற்படும். இவற்றால் நீ ஜீவன் முக்தி பெறு வாய்' என்றார். அது முதல் நான் அவர் கூறிய சக்தி களெல்லாம் பெற்று, யாதொரு கவலையுமில்லாமல் யாதொரு பயமுமில்லாமல் ஜீவன் முக்தி பத மடைந்து வாழ்ந்து வருகிறேன்'' என்று வேப்ப மரம் சொல்லிற்று. உடனே நான் அந்த வேப்ப மரத்தடியில் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி னேன். ''உனக்கென்ன வேண்டும்?'' என்று கேட்டது. அப்போது நான் அந்த வேப்ப மரத்தை நோக்கி:— ''உனக்கெப்படி அகஸ்த்யர் குருவோ அப்படியே நீ எனக்கு குரு. அந்த முனிவர் உனக் கருள் புரிந்த ஜீவன் முக்தி பதத்தை நீ எனக்கருள் புரியவேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தேன்.

''கொடுத்தேன்'' என்றது வேப்ப மரம்.....

இந்த ஸமயத்தில் நான் உண்மையாகவே தூக்கந் தெளிந்து கண்ணை விழித்தெழுந்து நின் றேன்; எழுத்தாணிக் குருவிகளும், சிட்டுக் குருவி

களும் வேறு பலவிதமான குருவிகளும் பறந்து கூவி விளையாடிக் கொண்டிருந்தன. அணில்களும் ஒந்தி களும் ஆடியோடிக்கொண்டிருந்தன. காக்கைகளும், கிளிகளும், பருந்துகளும், தட்டான் பூச்சிகளும், வேறு பலவகை வண்டுகளும் ஒளிக்கடலிலே களித் தோணி கொண்டு நீந்துவதுபோல் உலாவி வந்தன. கண்ணுக்குப் புலப்படாத மறைவிலிருந்து ஓராண் குயிலும் ஒரு பெண் குயிலும் ஒன்றுக் கொன்று காதற் பாட்டுகள் பாடிக்கொண்டிருந்தன.

ஆண்குயில் பாடுகிறது:—

"துஹூ, துஹூ, துஹூ
துஹூ, துஹூ, துஹூ
ராதா ரே."

[இதன் பொருள்:—

நீ, நீ, நீ.
நீ, நீ, நீ.
ராதை யடீ.]

பெண் குயில் பாடுகிறது:—

"துஹூ, துஹூ, துஹூ
ராதா க்ருஷ்ண, க்ருஷ்ண, க்ருஷ்ண."

வேப்பமரம் தனது பசிய இலைகளை வெயிலில் மெல்ல மெல்ல அசைத்துக் கொண்டிருந்தது. "என்ன ஆச்சர்யமான கனவு கண்டோம்" என் றெண்ணி யெண்ணி வியப்புற்றேன். இதற்குள் வெயிலேறலாயிற்று. எனக்கும் பசியேறத் தொடங் கிற்று. வேப்ப மரத்துக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டுத் தோப்பினின்று புறப்பட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

காந்தாமணி

(ஒரு சிறு கதை)

ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதி எழுதியது.

14 செப்டம்பர் 1919

"காந்தாமணி, உங்கப்பா பெயரென்ன?" என்று பாட்டி கேட்டாள். ஒரு கிணற்றங்கரையில் நடந்த ஸங்கதி. கோடைக் காலம். காலைவேளை. வானத்திலே பால ஸூர்யன்—கிரணங்களை ஒழிவில்லாமல் பொழிந்து விளையாடுகிறான்; எதிரே நீலமலை; பச்சை மரங்கள்; பசுக்கள்; பல மனிதர்; சில கழுதைகள்; இவற்றின் தொகுதி நின்றது. வெயிலொளி எந்தப் பொருள்மீது பட்டாலும் அந்தப் பொருள் அழகுடையதாகத் தோன்றுமென்று ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிராயன் சொல்லுகிறான்; எனக்கு எந்த நேரத்திலும் எந்தப் பொருள்களும் பார்க்க அழகுடையவனவாகத் தோன்றுகின்றன.

ஆனால் காலை வேளையில் மனிதக் கூட்டத்தில் கொஞ்சம் உற்சாகமும் சுறுசுறுப்பும் அதிகமாகக் காணப்படுவதால் அப்போது உலகம் மிகவும் சந்தோஷகரமான காட்சியுடையதாகிறது.

தோட்டத்துக்கு நடுவே ஒரு கிணறு. அத் தோட்டத்தில் சில அரளிப்பூச் செடிகள்; சில

மல்லிகைப்பூச் செடிகள்; சில ரோஜாப்பூச் செடிகள். அக்கிணற்றிலிருந்து அதற்கடுத்த வீதியி யிலுள்ள பெண்களெல்லோரும் ஜலம் எடுத்துக் கொண்டு போவார்கள்.

இந்தக் கதை தொடங்குகிற அன்று காலையில் அங்கு காந்தாமணியும் பாட்டியையும் தவிர ஒரு குருட்டுக் கிழவர் தாமே ஜலமிறைத்து ஸ்நானத் தைப் பண்ணிக் கொண்டிருந்தார். போலீஸ் உத்தியோகத்திலிருந்து தள்ளுபடியாகி அதிலிருந்து அந்தக் கிராமத்துக்கு வந்து தமது வாழ்நாளின் மாலைப் பொழுதை ராமநாமத்தில் செலவிடும் பார்த்தசாரதி அய்யங்கார் அங்கு பக்கத்திலே நின்று கிழவியைப் குறிப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மேற்படி கிணற்றுக்கருகே ஒரு குட்டிச்சுவர். அதற்குப் பின்னே ஒரு வேப்பஞ் சோலை. அங்கு பல மூலிகைகளிருக்கின்றன. அவற்றுள் ஒன்று மிகுந்த பசி உண்டாக்குமென்று என்னிடம் ஒரு சாமியார் சொன்னார். அது கொண்டு நான் மேற்படி மூலிகையைப் பறித்து வரும் பொருட்டாக அந்தச் சோலைக்குப் போயிருந்தேன். வானத்தில் குருவிகள் பாடுகின்றன. காக்கைகள் 'கா, கா' என்று உபதேசம் புரிகின்றன. வானவெளியிலே ஒளி நர்த்தனம் பண்ணுகிறது. எதிரே காந்தாமணியின் திவ்ய விக்ரஹம் தோன்றிற்று.

"உங்கப்பா பெயரென்ன?" என்று பாட்டி காந்தாமணியிடம் கேட்டாள்.

"எங்கப்பா பெயர் பார்த்தசாரதி அய்யங்கார்" என்று காந்தாமணி புல்லாங்குழலைப் போல் ஊதிச் சொன்னாள். கிழவி, போலீஸ் பார்த்தஸாராதி அய்யங்காரை நோக்கி, ஒரு முறை உருட்டி விழித்

தாள். போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்கார் கையுங் காலும் வெலவெலத்துப் போனர். அவருக்கு முகமும் தலையும் வெள்ளை வெளேரென்று நரைத்துப் போய்த் தொண்ணூறு வயதுக் கிழவனைப்போலே தோன்றினலும் உடம்பு நல்ல கட்டு மஸ்துடையதாகப் பதினெட்டு வயதுப் போர்ச் சேவகனுடைய உடம்பைப் போலிருக்கும். அவர் ஆண் புலி வேட்டைகளாடுவதில் தேர்ச்சி யுடையவரென்று கேள்வி. பாம்பு நேரே பாய்ந்து வந்தால் பயப்படமாட்டேனென்று அவரே என்னிடம் பத்துப் பதினைந்து தரம் சொல்லியிருக்கிறர்.

அப்படிப்பட்ட சூராதி சூரனுகிய பார்த்தஸாரதி அய்யங்கார் கேவலம் ஒரு பாட்டியின் விழிப்புக்கு முன்னே இங்ஙனம் கைகால் வெலவெலத்து மெய் வெயர்த்து முகம் பதறி நின்றதைக் கண்டு வியப்புற்றேன்.

அப்பால் அந்தப் பாட்டி காந்தாமணியிடம் மேற்படி போலீஸ் அய்யங்காரைக் சுட்டிக் காட்டி:—"இதோ நிற்கிறரே, இந்தப் பிராமணன், இவரா உங்கப்பா?" என்று கேட்டாள்.

அதற்குக் காந்தாமணி தன் இரண்டு கைகளையும் வானத்திலே போட்டு, முகத்திலே வாஞ்ஞளியை நகைக்கத் தக்க ஒளியுடைய நகை வீச,—"ஏ, ஏ, இவரல்லர்; இவர் கன்னங்கரேலென்று ஆசாரியைப் போலிருக்கிறரே! எங்கப்பா செக்கச் செவேலென்று எலுமிச்சம் பழத்தைப் போலிருப்பார். இவர் நரைத்த கிழவரன்றே? எங்கப்பா சின்னப் பிள்ளை" என்று காந்தாமணி உரைத்தாள்.

அப்போது போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்கார் காந்தாமணியை நோக்கி:—"உங்கப்பாவுக்கு எந்த ஊரிலே வேலை?" என்று கேட்டார்.

"எங்கப்பா சங்கரநாதன் கோயில் ஸப்-இன்ஸ் பெக்டர்" என்று காந்தாமணி சொன்னாள். பார்த்த ஸாரதி அய்யங்கார் தலையைக் கவிழ்த்துக் கொண் டார். அவருக்கு "ஸப்—இன்ஸ்பெக்டர்" என்ற பெயர் பாம்புக்கு இடிபோல். அப்போது காந்தா மணிக்கும் பாட்டிக்குமிடையே பின்வரும் ஸம்பா ஷணை நிகழலாயிற்று.

"நீங்கள் அக்கா, தங்கை எத்தனை பேர்?" என்று பாட்டி கேட்டாள். அப்போது காந்தாமணி சொல் கிறாள்:—"எங்கக்காவுக்குப் பதினெட்டு வயது. போன மாஸந்தான் திரட்சி நடந்தது; ஸ்ரீ வைகுண்டத் திலே. எனக்கு அடுத்த மாஸம் திரட்சி. என் தங்கை ஒரு பெண் திரள நிற்கிறது. நாங்கள் மூன்று பேரும் பெண்கள். எங்கப்பாவுக்குப் பிள்ளைக் குழந்தை இல்லையென்று தீராத மனக் கவலை. என்ன செய்யலாம்? பெருமாள் அநுக்ரஹம் பண்ணினு லன்றே தாழ்வில்லை? அதற்காக அவர் சோதிடம் பார்த்தார். எங்கம்மாவுக்கு இனிமேல் ஆண் குழந்தை பிறக்காதென்று பாழாகப் போவான் ஒரு ஜோதிடன் சொல்லிவிட்டான். அதை முத்திரை யாக முடித்துக்கொண்டு இந்த அறுதலிப் பிராம ணன், எங்கப்பா அடுத்த மாஸம் மன்னார் கோவிலில் ஒரு பெண்ணை இளையாளாகக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறார். முகூர்த்தமெல்லாம் வைத் தாய் விட்டது" என்றாள்.

"மன்னார் கோவிலில் உங்கப்பாவுக்குப் பெண் கொடுக்கப் போகிற மாமனுடைய பெயரென்ன?" என்று அந்தப் பாட்டி கேட்டாள். அதற்குக் காந்தாமணி:—"அவர் பெயர் கோவிந்தராஜய்யங் காராம். அந்த ஊரிலே அவர் பெரிய மிராசாம். அவருக்கு ஒரு பெண்தானும். கால் முதல் தலைவரை அந்தப் பெண்ணுக்கு வயிர நகை சொரிந்து கிடக்கிற

தாம். தேவ ரம்பையைப்போல் அழகாம் அந்தப் பெண்'' என்றுள்.

''அப்படிப்பட்ட அழகான பணக்கார இடத்துப் பெண்ணை இளையாளாகக் கொடுக்கக் காரண மென்ன?'' என்று பாட்டி கேட்டாள். ''அந்தப் பெண் திரண்டு மூன்று வருஷங்களாய் விட்டன. தாயும் இறந்து போய் விட்டாள். அதன் நடையுடை பாவனைகளெல்லாம் ஐரோப்பியமாதிரி. ஆதலால் இதுவரை அதற்குக் கலியாணத்துக்கு யாரும் வர வில்லை. எங்கப்பா அந்த ருதுவான வார்த்தையெல் லாம் வீண் பொய்யென்று சொல்லித் தாம் கல்யா ணம் பண்ணிக்கொள்ள ஸம்மதப்பட்டு விட்டார். மேலும் இவருக்கு மனதுக்குள்ளே ஸந்தோஷந்தான், தமக்கு ருதுவான பெண் கிடைப்பதுபற்றி. இன் றைக்குக் காலையிலேகூட அவரும் எங்கம்மாவும் பேசிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் இந்த ஊர்ச் சத்திரத்திலேதான் ஒரு வாரமாக இறங்கி யிருக் கிறோம். எங்கப்பாவும் அம்மாவும் பேசிக்கொண் டிருந்தபோது அம்மா சொன்னுள்:—'மன்னூர் குடிப் பெண் திரண்டு மூன்று வருஷமாய் விட்டதாக இந்த ஊரிலே கூடப் பலமான ப்ரஸ்தாபம். ஆண், பெண் எல்லோரும் ஒரே வாக்காகச் சொல்லுகிறார்கள்' என்றுள். அப்பா அதற்கு:—'நெவர் மைண்ட். அந்தக் குட்டி திரண்டிருப்பதைப் பற்றி நமக்கு இரட்டை ஸந்தோஷம். நமக்குப் பணம் கிடைக் கும். ஆண் பிள்ளை பிறக்கும். குட்டி ஏராளமான அழகு. இந்த மாதிரி இடத்திலே ஐ டோன் கோர் எடேம் எபௌட் சாஸ்த்ரங்கள். நாம் சாஸ்திரங் களைப் புல்லாக மதிக்கிறோம்' என்றார்....'' என்று காந்தாமணி சொன்னுள்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிற சத்தம் என் காதில் விழுந்தது. என்னுடைய பார்வை

முழுவதும் போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்கார் மேல் நின்றது. அவரைப் பார்த்துக் கொண்டே யிருக்கையிலே என் மனதில் திடீரென்று ஒரு யோசனை பிறந்தது. அங்கிருந்தவர்களில் எனக்குக் காந்தாமணியின் முகந்தான் புதிது. பார்த்தஸாரதி ஐயங்காரையும் தெரியும். அந்தக் கிழவியையுந் தெரியும். அந்தக் கிழவி அய்யங்காரிச்சியில்லை; ஸ்மார்த்தச்சி. அந்த கிராம முன்சீபின் தங்கை. அவளுக்கும் போலீஸ் பார்த்ஸாரதி அய்யங்காருக் கும் பால்யத்தில் பலமான காதல் நடைபெற்று வந்ததென்றும், அதனால் போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்காருக்கும் மேற்படி கிராம முன்ஸீபுக்கும் பல முறை யுத்தங்கள் நடந்தனவென்றும், அந்த யுத்தங்களிலே ஒன்றின் போதுதான் பார்த்தஸாரதி அய்யங்காருக்கு ஒரு கண்ணில் பலமான காயம் பட்டு அது பொட்டையாய் விட்டதென்றும் நான் கேள்விப்பட்டதுண்டு. அந்தக் கேள்வியையும் மன தில் வைத்துக் கொண்டு இப்போது மேற்படி ஸ்திரீ களின் ஸம்பாஷணையின்போது மேற்படி அய்யங் காரின் முகத்தில் தோன்றிய குறிப்புகளையும் கவனித்தவிடத்தே என் மனதில் பின் வரும் விஷயம் ஸ்பஷ்டமாயிற்று.

கிழவியினிடத்தில் பழைய காதல் தனக்கு மாறு மல் இன்னும் தழல் வீசிக்கொண்டிருக்கிறதென்ற செய்தியை ஐயங்கார் கிழவியினிடம் ஸ்திரப்படுத் திக் காட்ட விரும்புகிறரென்றும், காந்தாமணி முதலிய யுவதிகளின் அருகே கூடத் தனக்கு அக் கிழவியின் வடிவே அதிக ரம்யமாகத் தோன்றுகிற தென்றும் உணர்த்த விரும்புகிறரென்றும் தெரிய லாயிற்று. ஆனால் அவருடைய முகக் குறிப்புக் களிலே பாதி பொய் நடிப்பென்பதும் தெளிவாகப் புலப்பட்டது.

ஏனென்றால். காந்தாமணியையும் அக்கிழவியையும் ஒருங்கே தன் கையால் படைத்து, இருவருக்கும் பிதவாகிய பிரமதேவன் கூடக் காந்தாமணியின் ஸந்நிதியில் அந்தக் கிழவியைப் பார்க்கக் கண் கூசுவான். அப்படியிருக்கக் கிழவியின்மீது அங்கு காதற் பார்வையை அசைவின்றி நிறுத்த முயன்ற போலீஸ் பார்த்தஸாரதி ஐயங்காரின் முயற்சி மிகவும் நம்பக் கூடாத மாதிரியில் நடைபெற்று வந்தது.

இந்த ஸங்கதியில் மற்றொரு விசேஷமென்னவென்றால் மேற்படி அய்யங்காரை நான் விருக்ஷ மறைவிலிருந்து கவனித்துக் கொண்டு வந்தது போலவே காந்தாமணியும் கிழவியும் அவரை அடிக்கடி கடைக்கண்ணால் கவனித்துக்கொண்டு வந்தார்கள். பெண்களுக்குப் பாம்பைக் காட்டிலும் கூர்மையான காது; பருந்தைக் காட்டிலும் கூர்மையான கண். எனவே பார்த்தஸாரதி அய்யங்காருடைய அகத்தின் நிலைமையை நான் கண்டது போலவே அந்த ஸ்திரீகளும் கண்டு கொண்டனரென்பதை அவர்களுடைய முகக் குறிகளிலிருந்து தெரிந்துகொண்டேன்.

என்னை மாத்திரம் அம்மூவரில் யாரும் கவனிக்கவில்லை. நான் செடி கொடிகளின் மறைவில் நின்று பார்த்தபடியால் என்னை அவர்களால் கவனிக்க முடியவில்லை.

இப்படியிருக்கையிலே அங்கு இருபது வயதுள்ள ஒரு மலையாளிப் பையன் பெருங்காயம் கொண்டு வந்தான். சில்லறையில் பெருங்காயம் விற்பது இவனுடைய தொழில். இவன் பலமுறை அந்தக் கிராமத்துக்குப் பெருங்காயம் கொண்டு வந்து விற்பதை நான் பார்த்திருக்கிறேன். இவனைப்பற்றி வேறொன்றும் நான் விசாரித்தது கிடையாது.

இவன் பார்வைக்கு மன்மதன் போலிருந்தான். கரிய விழிகளும், நீண்ட மூக்கும், சுருள் சுருளான படர்ந்த உச்சிக்குடுமியும் அவனைக் கண்டபோது எனக்கே மோஹமுண்டாயிற்று.

அந்த மலையாளி கிணற்றருகே வந்துட்கார்ந்து கொண்டு கிழவியிடம் தாஹத்துக்கு ஜலங் கேட்டான். அவனைப் பார்த்த மாத்திரத்தில் காந்தாமணி நடுங்கிப் போனதைக் கவனித்தேன். அப்பால் அந்த மலையாளி காந்தாமணியை ஒருமுறை உற்றுப் பார்த்தான். அவள் தன் இடுப்பிலிருந்த குடத்தை நீரோடு நழுவ விட்டுவிட்டாள். அது தொப்பென்று விழுந்தது. காந்தாமணி அதைக் குனிந்தெடுத்து;.... "ஐயோ; நான் என்ன செய்வேனம்மா? குடம் ஆறங்குல ஆழம் அமுங்கிப் போய் விட்டதே? எங்கம்மா எனக்குத் தூக்குத் தண்டனை விதிப்பாளே?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள்.

மார்புத் துணியை நெகிழவிட்டாள்; பொதியை மலைத் தொடரை நோக்கினாள்.

இந்தக் காந்தாமணி மேற்படி மலையாளிப் பையனிடம் காதல் வரம்பு மிஞ்சிக் கொண்டவ ளென்பதை நான் தொலைவிலிருந்தே தெரிந்து கொண்டேன், பின்னிட்டு விசாரணை பண்ணியதில் காந்தாமணியின் பிதாவாகிய பார்த்தசாரதி ஐயங்கார் பூர்வம் நெடுநாள்மலையாளத்தில் உத்தியோகம் பண்ணிக் கொண்டிருந்தாரென்றும் அங்கு மிகச் சிறிய குழந்தைப் பிராய முதலாகவே காந்தாமணிக்கும் அந்த மலையாளிக்கும் காதல் தோன்றி அது நாளுக்குநாள் வளர்ந்து வருகிறதென்றும் வெளிப்பட்டது. ஸப்-இன்ஸ்பெக்டர் அய்யங்கார் திரவிய லாபத்தை உத்தேசித்துக் காந்தாமணியைப் பென்ஷன் டிப்டி கலெக்டரும் கூந்தலாபுரம் ஜமீன்

திவானுமாகிய ஐம்பத்தைந்து வயதுள்ள கோழம் பாடு ஸ்ரீநிவாஸாசார்யர் என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டார். அந்த ஸ்ரீநிவாஸாசார் யருடன் வாழக் காந்தாமணிக்கு சம்மதமில்லை. இந்தச் செய்தியெல்லாம் எனக்குப் பின்னிட்டுத் தெரிய வந்தது.

அன்று கிணற்றங்கரையில் என் கண் முன்னே நடந்த விஷயத்தை மேலே சொல்லுகிறேன். காந்தாமணி குடத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு, "எங்கம்மா வைவாளே, நான் என்ன சொல்வேனம்மா?" என்று அழுது கொண்டே போனாள். ஆனால் அவள் தன்னுடைய தாய் தந்தையர் இருந்த சத்திரத்துக்குப் போகவில்லை. நேரே, அந்த ஊருக்கு மேற்கேயுள்ள நதிக்குப் போனாள். தாகத்துக்கு நீர் குடித்த பின்பு மலை யாளியும் அந்த ஆற்றங்கரையை நோக்கிச்சென்றான். இதற்குள்ளே எனக்கு ஸந்தியாவந்தன காலம் நெடுந்தூரம் தவறிவிட்டபடியால் நான் அந்தக் கிணற்றடியை விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அன்று மாலை என் வீட்டுக்கு மேற்படி கிராமத்து வாத்தியார் சுந்தர சாஸ்திரி வந்தார். வந்தவர் திடீரென்று:—,'கேட்டீர்களோ, விஷயத்தை; வெகு ஆச்சர்யம்! வெகு ஆச்சர்யம்;" என்று கூக்குர லிட்டார்.

"என்ன ஓய் ஆச்சர்யம்? நடந்ததைச் சொல்லி விட்டுப் பிறகு கூக்குரல் போட்டால் எனக்குக் கொஞ்சம் சௌகர்யமாக இருக்கும்" என்றேன். "சத்திரத்திலே ஸப்-இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி அய்யங்கார் சங்கரநாதன் கோவிலிலிருந்து வந்து இறங்கியிருக்கிறாரோ, இல்லையோ? அவர் ஒரு பெண்ணையும் கூட்டிக் கொண்டு வந்தார். அவ ருடைய மகள். அந்தக் குட்டி வெகு அழகாம்.

திலோர்த்தமை, ரம்பை யெல்லாம் இவளுடைய காலிலே கட்டி அடிக்க வேண்டுமாம். அதற்குப் பெயர் காந்தாமணியாம். சொல்லுகிறபோதே நாக்கில் ஜலம் சொட்டுகிறது. காந்தாமணி, காந்தாமணி. என்ன நேர்த்தியான நாமம். ரஸம் ஒழுகுகிறது.....''

இங்ஙனம் ஸுந்தர சாஸ்திரி காந்தாமணியை வர்ணித்துக்கொண்டு போவதை நான் இடையே மறித்து :— ''மேலே நடந்த சரித்திரத்தைச் சொல்லும்'' என்றேன்.

''அந்தக் காந்தாமணியைக் காணவில்லை யென்று விடியற்காலமெல்லாம் தேடிக் கொண்டிருந்தார்கள். இப்போதுதான் அம்பாசமுத்திரத்திலிருந்து ஒரு தந்தி கிடைத்ததாம். இன்று பகல் 3 மணிக்கு மேற்படி காந்தாமணியும், ஒரு மலையாளிப் பையனும் கிறிஸ்துவக் கோவிலில் விவாகம் செய்து கொண்டார்களென்று அந்தத் தந்தி சொல்லுகிறதாம்'' என்றார்.

சில தினங்களுக்கப்பால் மற்றொரு ஆச்சர்யம் நடந்தது. கிராமத்து மாஜி போலீஸ் சேவகர் நரைத்த தலைப் பார்த்தஸாரதி அய்யங்காரும், அன்று கிணற்றங் கரையில் அவருடைய காதற் பார்வைக்கிலக்காயிருந்த கிழவியும் ரங்கூனுக்கு ஓடிப் போய் விட்டார்கள். பின்னிட்டு அந்தக் கிழவி தலை வளர்த்துக்கொண்டு விட்டாளென்றும் பார்த்தஸாரதி ஐயங்காரும் அவளும் புருஷனும் பெண்ஜாதியுமாக வாழ்கிறார்களென்றும் அய்யங்கார் அங்கொரு நாட்டுக்கோட்டை செட்டியிடம் வேலை பார்த்துத் தக்க சம்பளம் வாங்கிக்கொண்டு க்ஷேமமாக வாழ்கிறரென்றும் ரங்கூனிலிருந்து செய்தி கிடைத்தது.

குறிப்புகள்

சக்திதாஸன்

21 ஜனவரி 1920 ரௌத்திரி தை 9

எளிதாக ஸம்ஸ்க்ருதம் படிக்கும் வழி

1921 ஜனவரி 11-ஆந் தேதி சுதேசமித்திரனில் 'ஒளிர்மணிக் கோவை' என்ற மகுடத்தின் கீழே எழுதப்பட்டிருந்த குறிப்புக்களில் "இந்தியாவுக் கொரு பொதுப் பாஷை" என்ற தலைப்பின் கீழுள்ள குறிப்பைப் பார்த்துவிட்டு, நம் சந்தாதார் ஒருவர்; "(1) பண்டாரகரால் வெளியிடப்பட்டுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புஸ்தகம், (2) பஞ்ச தந்திரம்-தமிழ் மொழிபெயர்ப்புடன்-ஆகிய இவ விரண்டும் எங்கே கிடைக்கும்", என்று நம்மைக் கேட்கிறார். வடமொழியும் இங்கிலீஷும் கலந்து பண்டாரகர் வெளிப்படுத்தியிருக்கும் மூல நூல் சென்னையில் பெரிய பாடசாலைப் புஸ்தக வியாபாரி எவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். அதன் தமிழ் மொழிபெயர்ப்பு, திருவண்ணுமலை டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல் : தமிழ்ப் பண்டிதருக்கெழுதினால் கிடைக்குமென்று தெரிகிறது. பஞ்ச தந்திரம், வட மொழியிலுள்ள மூல நூலுக்கு நேரான தமிழ் மொழிபெயர்ப்பு இதுவரை யாவராலும் செய்யப் படவில்லையென்பதை மிக வருத்தத்துடன் தெரி

வித்துக்கொள்கிறேம். தாண்டவராய முதலியார் எழுதியிருக்கும் தமிழ்ப் பஞ்ச தந்த்ரம் ஸம்ஸ்க்ருதத் திலிருந்து நேராக மொழி பெயர்க்கப்பட்டதன்று. மஹாராஷ்ட்ர பாஷையில் பஞ்ச தந்திரக் கதைகளை மட்டும் ஒருவாறு தொகுத்திருந்ததொரு நூலி னின்றும் கதைகளைத் திரட்டித் தமிழில் அந்த முதலியார் வெளிப்படுத்திவிட்டாரென்று தெரிய வருகிறது. எனவே பூமண்டல முழுமையிலும் தனக் கொரு நிகரில்லாத ராஜ்யநீதி சாஸ்த்ரமும், ஹிந்துக்களின் அறிவு நுட்பத்துக்குப் பெரும் புகழுமாகி விளங்கும் ஸம்ஸ்க்ருத பஞ்சதந்திரமும், தமிழில் இயற்கையாக மொழி பெயர்க்கப்பட்டவில்லை. அதன் அழகான நீதி வசனங்களில் பெரும்பான்மை தமிழ் மொழி பெயர்ப்பிலேயில்லை. மேலும் தமிழ்ப் பஞ்ச தந்திரத்தைப் படித்தால், இஃதொரு ஸாமான்யமான கதைப் புஸ்தகமென்று தோன்று கிறதேயன்றி, உலகத்து ராஜ்ய தந்த்ர சாஸ்த்ரங் களுள்ளே இது சிரோமணியென்பது துலங்கவில்லை. இப்போது தமிழ் நாட்டில் புதியதோர் அறிவுக் கிளர்ச்சி எழுச்சி கொண்டிருப்பதினின்றும், இனி, விரைவிலே அந்நூல் தமிழில் நேராக மொழி பெயர்க்கப்படு மென்பது நிச்சயந்தான். ஆயினும் நற்காலத்தில் அவ்வித மொழி பெயர்ப்பில்லை. எனி னும், இதுபற்றி மனஞ்சலிக்க வேண்டாம். அன் றைக் குறிப்பில் எழுதியிருந்தபடி, முதல் நூல், (பஞ்ச தந்த்ரம்) வடமொழியில் மிக மிக எளிய, மிக ஸரளமான, மிகத் தெளிந்த, ஸாமான்ய நடையில் அமைந்திருக்கிறது. அதன் பொருள் எத்தனை அபூர்வமாகவும், ஆழமாகவும், நுட்பமாகவும், ஆச்சரியமாகவும் அமைந்திருக்கிறதோ அத்தனை எளிமையாகவும் ஸாதாரணமாகவும் அதன் வாக்ய நடை அமைந்துள்ளது. எனவே, அன்று தெரிவித்த படி, பண்டாரகர் முதற்பாட புஸ்தகத்தையும்,

இரண்டாம் பாட புஸ்தகத்தில் ஒரு பகுதியையும் ஏழெட்டு மாதங்களுக்குள் படித்துணர்ந்து கொண்டால், பிறகு பஞ்சதந்திரத்தை மூலத்திலேயே, பிறருதவி வேண்டாமல் வாசித்து யாரும் பொருளறிந்து கொள்ளலாம்.

தொழிற்கட்சியின் உதவி

"ஹிந்து" பத்திரிகையில் சாந்த நிஹள ஸிங் எழுதியிருக்கும் வியாஸ மொன்றில், இந்தியா விடுதலை பெறும் விஷயத்தில் ப்ரிட்டிஷ் தொழிற் கக்ஷியாரின் ஸஹாயத்தை எத்தனை தூரம் எதிர் பார்க்கக் கூடுமென்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார். இவ்விஷயமாக இவர் நேரே தொழிற் கக்ஷித் தலைவருள்ளே முக்யஸ்தரைக் கண்டு ஸம்பாஷணை செய்திருக்கிறார். ஸ்ரீ நிஹள ஸிங் சொல்லியிருப்பதன் சுருக்கமான கருத்துப் பின்வருமாறு:—தொழிற் கக்ஷியில் இரண்டு பகுதிகளிருக்கின்றன. இப்போதுள்ள கவர்ன்மெண்ட் மாறித் தொழிற்கக்ஷி கவர்ன்மெண்ட் ஏற்பட்டால் மந்திரி ஸ்தானங்களெய்தக் கூடிய மிஸ்டர் க்ளான்ஸ் (பொதுத் தொழிலாளிகளின் தேசீய ஐக்ய ஸங்கத் தலைவர்), மிஸ்டர் ஆர்தர் ஹெண்டர்ஸன் (தொழிற் கக்ஷியின் கார்யதர்சி), மிஸ்டர் ஆடம்ஸன் (பார்லிமெண்ட் தொழில் ஸமிதியின் அதிபர்) முதலியவர்களும் இவர்களைச் சேர்ந்தோரும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கிடைக்க வேண்டுமென்றும், அதில் தொழிற் கக்ஷியார் இயன்ற மட்டுந் துணை புரிய வேண்டுமென்றும் கருதுவாரே யாவார். ஆனால், அதற்கு மாண்டேகு செம்ஸ்போர்ட் திருத்தங்களை அங்கீகாரம் செய்து கொண்டு, அதனால் எய்தக்கூடிய நலன்களையெல்லாம் பாடுபட்டெய்தி, அப்பால் அதிக உரிமைகள் கேட்பதே தக்க வழியென்பது இவர்களுடைய கருத்து. இந்தக் கருத்தையொட்டி இந்தியர் நடந்து

கொண்டால் மாத்திரமே மேற்கூறிய தொழிற் கக்ஷித் தலைவர்கள் நமக்குத் துணை புரிவார்களென் றும், நம்மவர் ஒத்துழையாமையைக் கைப்பற்றினால் பிறகு, அவர்களுடைய உதவியை எதிர்பார்க்க வேண்டியதில்லையென்றும் ஸ்ரீமான் நிஹள ஸிங் சொல்லுகிறார். ஆனால் மேற்கூறிய தலைவர்கள் சேர்ந்த பகுதியைத் தவிர ஆங்கிலத் தொழிற் கக்ஷிக் குள்ளேயே மற்றொரு பகுதியிருக்கிறது. அந்த மற் றொரு பகுதியார், பார்லிமெண்ட் அனுஷ்டானங் களைக் கடைப்பிடித்தொழுகி, அவற்றின் மூலமாகத் தொழிற் கக்ஷியின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளாமல், பலாத்காரமான புரட்சி முறையாலே தொழிலரசு ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்க முடையவர்கள். இந்தியா ஒத்துழையாமையைக் கைக்கொள்ளுமிடத்தே, பிற்கூறிய தொழிற் பகுதி யினரின் ஆதரவை மட்டுமே எதிர்பார்க்கலாமென்று ஸ்ரீ நிஹள ஸிங் தெரிவிக்கிறார். இங்ஙனம் ஸ்ரீ நிகள ஸிங் வரையறுத்துப் பாகுபாடு செய்திருப்பதில் ஒரு சிறிதுண்மையிருத்தல் மெய்யே யெனினும், இது முற்றிலும் சரியென்று நாம் நினைக்க இடமில்லை. ஏனென்றால், ஒத்துழையாமை முறை பலாத்காரச் செயல்களை மறுக்குமியல்புடையது; புரட்சி மார்க் கத்தைச் சார்ந்ததன்று. எனவே, ஆங்கிலத் தொழி லாளிகளில் மனுஷ்ய ஜாதியின் ஸமத்வத்தையும், ஸ்வாதீனத்தையும் வேண்டும் இயல்புடையோர், பலாத்கார முறைகளை வேண்டாத ஸமாதானப் பிரியராகிய போதிலும், இந்தியர் ஒத்துழையாமை யைக் கைக் கொண்டது பற்றி மனவருத்த மெய்த மாட்டார்கள். தம்மால் இந்தியாவுக்குச் செய்யக் கூடிய உதவியை அவர்கள் எப்போதும் செய்வார்கள். திருஷ்டாந்தமாகக் கார்லல் வெட்ஜ்வுட் தொழிற் கக்ஷித் தலைவருள்ளே புரட்சி வகுப்பைச் சேராதவ ரென்றே கொள்ள வேண்டும். மேலும், இவர் நம்

நாட்டில் எழுந்திருக்கும் ஒத்துழையாமைக் கிளர்ச்சியில் அபிமானமில்லாதவர். புதிய சட்ட சபைகளை நாம் உபயோகப் படுத்தியே விடுதலைக்கு வழி தேட வேண்டுமென்ற கருத்துடையவர்.

அப்படியிருந்தும், காங்கிரஸ் ஸபையில் இவரை நோக்கி, ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி அய்யர்:—"ருஷியாவுக்கும், ஐர்லாந்துக்கும் பரிந்து பேசும் தாங்கள் இந்தியா ஒத்துழையாமையைக் கைக் கொண்ட போதிலும் பார்லிமெண்டில் எங்கள் சார்பாக நின்று போராட மாட்டீர்களோ?" என்று கேட்டபோது, என்ன மறுமொழி சொன்னார்?

"இந்தியா ஒத்துழையாமையைக் கைக்கொண்டாலும், வேறென்ன செய்தாலும் நான் இந்தியர் விடுதலை பெறும் பொருட்டு வேலை செய்வதை நிறுத்தமாட்டேன்" என்று விடையளித்தார்.

தொழிற் கக்ஷியில் புரட்சிக்காரரல்லாதாரிடையேயும் இந்தக் கர்னல் வெட்ஜ்வுட் போன்றோர் பலர் இருக்கக் கூடுமென்றே எதிர்பார்க்கிறோம்.

இதன் பெயரென்ன?

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில், ஸர் வாலன்டைன் கிரால் பின்வருமாறு பரிதபிக்கிறார்:—

"பத்து வருஷங்களின் முன்னே, டில்லி நகரத்துக்கு வெளியே, இந்தியாவில், பண்டு இஸ்லாமிய ஆதிக்கமிருந்ததற்குச் சிறந்ததொரு சின்னமாகிய குதுப்மினார் என்ற கோரியின் கீழே ஒரு நாள் காலையில் சில மஹமதிய நண்பர்கள் என்னோடு ஸம்பாஷணை செய்துகொண்டிருந்தனர். இனி இந்திய ஸ்வராஜ்யமும், ஹிந்து ஆதிக்கமும் நேர்ந்தால் இந்திய மஹமதியரின் கதி என்ன ஆகுமோ என்றெண்ணி அவர்கள் பெருமூச்செறிந்தார்கள். இன்றைக்கு அவர்களில் சிலர் ஸ்ரீமான் காந்தியின் பரம

சிஷ்யராக இருக்கிறார்கள். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் "ஹிந்து முஸ்லிம் கீ ஜய்" என்ற சத்தம் பிறந்துவிட்டது. மஹமதியரின் மசூதிகளுக்குள் ஹிந்துக்கள் உபன்யாஸகராய் முஸ்லிம்களுக்கு ஸ்வராஜ்ய உபதேசம் பண்ணுகிறார்கள். டில்லி நகரத்தில், சில தினங்களின் முன்பு உலேமாக்களின் ஸர்வ பாரத ஸங்கம் நடைபெற்றபோது அங்கு ஸ்ரீ காந்தி விருந்தாளியாகச் சென்றிருந்தார். இதைக் காட்டிலும் விநோதமான செய்தி ஹிந்துக்களின் கொள்கைக் கிணங்கி முஸல்மான்கள் முக்யமான உத்ஸவ காலங்களில் பசுக்களை விட்டு ஆடுகளைக் கொல்ல உடம்பட்டதாகும். ஆனால் இப்படிச் செய்யலாமென்று அக்பர் சக்கரவர்த்தி விதித்திருக்கிறார்."

என்று மேன்மேலும் ஸர் வாலன்டைன் தமது மனவருத்தத்தை விஸ்தரித் தெழுதிக்கொண்டு போகிறார். பொறுமையும் வயிற்றெரிச்சலும் இந்த வார்த்தைகளில் கொழுந்து விட்டெரிகின்றன. இப்படிப்பட்ட மனோபாவ விலாஸங்களை இங்கிலாந்தில் ப்ரகடனம் செய்வதனால் யாருக்கென்ன பயன் விளையுமென்று "டைம்ஸ்" பத்திரிகை அதிகாரிகள் நினைக்கிறார்கள் என்பதை நம்மால் ஊஹிக்க முடியவில்லை.

வரம்பு கடந்து விட்டமை

ஆனால் தேசீயப் பாடசாலைகளில் ஹிந்துமத கிரந்தங்களுக்குத் தக்கபடி கல்வி கற்பிக்கப்படுமாதலால் அப்பாடசாலைகள் முஸல்மான்களுக்குப் பயன்பட மாட்டாவென்று ஸர் வாலன்டைன் சொல்லும் போதுதான், அவர் நம்பிக்கையின் வரப்புக்கு வெளியே பஹிரங்கமாக வந்து நிற்கிறார். ஏனெனில் தேசீயப் பாடசாலைகளில் முஸ்லிம் பிள்ளைகளுக்கு முஸ்லிம் மத நூல்களே உபதேசிக்கப்படுமென்பது ஸகலருக்குந் தெரிந்த விஷயம்.

தேசீயக் கல்வி

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

13 மே 1920	ரௌத்திரி சித்திரை 31
18 மே 1920	ரௌத்திரி வைகாசி 5
20 மே 1920	ரௌத்திரி வைகாசி 7
21 மே 1920	ரௌத்திரி வைகாசி 8
28 மே 1920	ரௌத்திரி வைகாசி 15

மேலே குறிப்பிட்ட தேதிகளில் இக்கட்டுரை தொடர்ச்சியாக வெளியாகியிருக்கிறது.

இது பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் சமூகம் என்னும் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தொகுதியில் உள்ளது சுதேசமித்திரனில் வெளியானதைவிடச் சற்று விரிவாக இருக்கிறது.

மேலும் தேசீயக் கல்வி (2) என்ற தலைப்பில் மற்றொரு கட்டுரையும் மூன்றும் தொகுதியில் உள்ளது.

இந்நூலில் காலம் என்ற கட்டுரையின் கீழ் உள்ள குறிப்பையும் பார்க்க.

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

20 ஜூன் 1920

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி தத்துவம். இக்கட்டுரை ஒரு சொற்பொழிவின் ஸாரமாகும். கடையத்திற்கு அருகிலுள்ள பொட்டல் புதூரிலே பாரதியார் ஒரு முஸ்லிம் சபையில் இதை நிகழ்த்தியிருக்கிறார். பொட்டல் புதூர் முஸ்லிம்கள் பாரதியாரிடம் குர்ஆன் உபதேச மொழிகளைக் கேட்டின்புற்றதை ஸ்ரீமதி செல்லம்மா பாரதியும் குறிப்பிட்டுள்ளார்கள்.

சில குறிப்புகள்

காளிதாஸன்

15 நவம்பர் 1920 ரௌத்ரி கார்த்திகை 1

ஐர்லாந்து

ஐர்லாந்து விஷயமாகவும், உள்நாட்டுத் தொழிலாளர் கிளர்ச்சி விஷயமாகவும் இங்கிலாந்து தேசத்தாரின் மனம் மிகவும் குழம்பிப் போயிருக்கிறதென்று லண்டன் "டைம்ஸ்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளைப் பார்த்தால் மிகத் தெளிவாக விளங்குகிறது. முக்யமாக, ஐர்லாந்தில் அதிகாரிகள் செய்யும் "எதிர்ச் செயல்கள்" உலக முழுதிலும் ஐரிஷ் ஆட்சிக்குப் பேரவமானம் விளைக்கக்கூடிய விஷயமாதலால், அதன் ஸம்பந்தமாக ஆங்கிலேயர் மனதில் மிகுந்த அதிர்ச்சி யுண்டாயிருக்கிறது. போலிஸாரையும் ராணுவத்தாரையும் எவ்விதத்திலேனும் கஷ்டப்படுத்தியவர்கள் அல்லது கஷ்டப்படுத்தக் கூடியவர்களாகிய "ஸீன்பீன்" கக்ஷியாரை மாத்திரமே அதிகாரிகள் அழிக்கவில்லை. பல மாஸங்களாகவே, இஷ்டமான வீடுகளில் பிரவேசிப்பதும், வீட்டாரைச் சுட்டுக் கொல்வதும், வீடுகளையும் பண்ணைகளையும் கிராமங்களையும் கொளுத்துவதுமாக விளையாடிக்கொண்டு வருகிறார்களென்று சொல்லப்படுகிறது. இந்த நிலைமையிலே கொண்டு சேர்த்தாகிய ராஜதந்த்ர முறைமைக்கு லாய்ட் ஜ்யார்ஜ்

முதலிய மந்திரிகள் ஆரம்பத்திலேயே ஸம்மதமளித்த தாகவும் சிலர் தெரிவிக்கிறார்கள். லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை பிற்போக்குடையது. இன்றைக்கும் ஐர்லாந்து ஸ்வாதீனமடையும் விஷயத்தில் "டைம்ஸ்" பத்திரிகைக்குக் கொஞ்சமேனும் அனுதாபம் கிடையாது ஐர்லாந்து தேசத்தார் தாங்கள் ஸ்தாபித்திருக்கும் குடியரசை எப்படியேனும் காப்பாற்ற வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டு வருகையிலே, லண்டன் "டைம்ஸ்":—"காலக்கிரமத்தில் ஐர்லாந்து தேசத்தாரையும் சேர்த்துக்கொள்ளக் கூடியதான ஓராட்சி முறை ஐர்லாந்தில் விளைவதற்குரிய சட்ட திட்டங்களை ஏற்படுத்திவிட வேண்டும்" என்று ஆசீர்வாதம் பண்ணுகிறது. அந்த பாஷையைக் கவனித்தீர்களா? ஸ்வராஜ்ய விஷயத்தில் ஐர்லாந்துவாஸிகளுக்குள்ள தாகத்தின் வேகத்தையும் இப் பத்திரிகையின் ஆமையெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வெகு விநோதமாகத் தோன்றும். இப்படிப்பட்ட லண்டன் "டைம்ஸ்" கூடப் 'பழி வாங்குதல்' என்ற பெயரை வைத்துக்கொண்டு ஆங்கிலேயத் துருப்புகள் ஐர்லாந்தில் நடத்தும் சட்டத்துக்கும் மனித நாகரிகத்துக்கும் விரோதமான கொடுஞ் செயல்களை மிக்கவும் உக்ரமாகக் கண்டிக்கிறதென்றால் அக் கொடுஞ் செயல்கள் எத்தனை கொடுமையாக இருந்திருக்க வேண்டுமென்பதை நேசர்களே ஊகித்தறிந்து கொள்ளலாம். மேலும் இந்த விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலிய ஆங்கில மந்திரிகளின் உபந்யாஸங்கள் கடிதங்கள் முதலியவற்றைப் படித்துப் பார்க்கும்போது, நிலைமை கை கடந்து போய்விட்டதென்றும், இந்த ஐர்லாந்தின் ஸம்பந்தமாக இன்னதுதான் செய்ய வேண்டுமென்பதே ஆங்கில ராஜ தந்திரிகளுக்குத் தெரியவில்லை யென்றும் விளங்குகிறது.

துருக்கியின் நிலை

துருக்கிக்கும் நேசக் கக்ஷியாருக்கும் நடந்த உடம்பாட்டைத் துருக்கி இன்னும் உறுதி செய்ய வில்லை. மறுபடியும் ஒரு முறை தேசீயக் கக்ஷியாரால் துருக்கிக்குச் சற்றே ஸௌகர்யம் ஏற்படலாமென்று தோன்றுகிறது. பால்கன் யுத்த முடிவில் துருக்கி தோற்றுப் போய்விட்டது. தேசீயக் கக்ஷிக்கு விரோதமான மனிதர் துருக்கியில் ஆட்சி செலுத்தி வந்தனர். அவர்களுடைய கொள்கை எப்படி யிருந்த தென்றால்:—உள்நாட்டில் தேசீயக் கக்ஷியாரின் சக்தி யைக் குறைக்கும் பொருட்டு, அன்னியரின் உதவி பெற்று அதனால் அந்த அன்னியர்கள் நம்மைக் குதிரை யேறக்கூடிய நிலைமை ஏற்பட்டாலும் பெரி தில்லை; நாட்டை அன்னியர் கொண்டு போனாலும் போகுக; ஆனால் தேசீயக் கக்ஷியார் ஆளக் கூடாது. இங்ஙனம் கருதும் மனிதர் செய்துகொண்ட உடம் பாடு எப்படி யிருக்கும்! மேலும், லண்டன் நகரத்தில் பால்கன் தேசத்தார்களுக்கும் துருக்கிக்கும் உடம் பாடு கையெழுத்திடப்பட்டது. அதில், மற்ற நிபந் தனைகளுடனே, அட்ரியானோபிள் ஜில்லாவைத் துருக்கி விட்டுவிட வேண்டுமென்ற நிபந்தனையும் சேர்ந்திருந்தது. அக்காலத்தில், அன்வர்பாஷா முதலிய தேசீயக் கக்ஷித் தலைவர்கள் துணிவாகவும் தைரியமாகவும் வேலை செய்தபடியால் துருக்கிக்கு அட்ரியா நோபிள் நஷ்டமாகாமல் மிஞ்சிற்று. திடீ ரென்று அன்வர்பாஷா முன்னிருந்த கோழை மந்திரி களைத் தூக்கி எறிந்துவிட்டு, அதிகாரத்தைக் கைவசப் படுத்திக்கொண்டு, அட்ரியா நோபிளை இழக்கப் போவதில்லை யென்று தெரிவித்துவிட்டார். இதற்குள், பால்கன் தேசங்கள் ஒன்றுக்கொன்று போராடத் தொடங்கித் தங்கள் மனஸ்தாபங்களைத் தீர்ப்பதற்குப் பிறர் மத்யஸ்தத்தை வேண்டக்கூடிய

நிலைமைக்கு வந்துவிட்டபடியால் அவற்றுல் துருக்கியை வற்புறுத்த முடியவில்லை. ஆனல், "லண்டன் உடம்பாட்டை நாங்களன்றே கூட இருந்து முடித்து வைத்தோம்? அப்படியிருக்க அவ் வுடம்பாட்டுக்கு மாறுக அட்ரியா நோபிள் துருக்கி வசத்திலிருப்பதை நாங்கள் அங்கீகாரம் செய்ய மாட்டோம்" என்று ஆங்கில மந்திரிகள் சொன் னர்கள். அதற்கு அன்வர்பாஷா:—"தங்கள் இஷ்டப் படி என்ன வேண்டுமானலும் செய்து கொள்ளலாம். ஆனல் அட்ரியா நோபிளைக் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லிவிட்டார். ஒன்றும் நடக்கவில்லை. துருக்கிக்கு அட்ரியா நோபிள் மிஞ்சிற்று. அதுபோல் இப்போது ஆசியா மைனரிலுள்ள அனடோலியாவின் ராஜதானியாகிய அங்கோரா நகரத்தில் கமால் பாஷா தேசீயக் கக்ஷிப் படைகளையும், தக்க உபபலங் களையும் வைத்துக்கொண்டு கான்ஸ்டாண்டி நோபிள் நகரத்திலுள்ள துருக்கிய அதிகாரிகளிடம் த்ரேஸ், ஸ்மர்ன மாகாணங்களை இழந்துவிடாமல் இருக்கும் படி வற்புறுத்தி வருகிறார். இப்போது ஸெவர் உடம் பாட்டை உறுதி செய்யுமாறு நேசக் கக்ஷியார் வற்புறுத்தியதற்கு உத்தரமாகத் துருக்கி கவர் மெண்டார் அவ்விஷயம் இப்போது அத்தனை அவஸரமில்லை யென்று கமால் பாஷாவின் கூட்டத் தாரை ஸமாதானப்படுத்தும் பொருட்டாக அதைச் சற்று மெதுவாகவேகவனிக்கும்படி நேர்கிறதென்றும் தெரிவித்திருக்கிறார்கள். நேசக் கக்ஷியாருக்குள் ளேயே ஸமாதான நிபந்தனைகளைப் பற்றிய பூர்ண மனவொற்றுமை யில்லாமலிருப்பதை யறிந்தே துருக்கிய அதிகாரிகளுக்கு இங்ஙனம் சொல்ல தைர்யம் ஏற்பட்டிருக்கக் கூடுமென்று நினைக்கிறோம். ஜெர்மனி விஷயத்திலேயே பிரான்ஸுக்கும் இங்கி லாந்துக்கும் மேன்மேலும் அபிப்பிராய பேதங்கள் தோன்றி வருகின்றன. அமெரிக்காவோ சொல்ல

வேண்டியதில்லை; "இங்கிலாந்தினிடம் எனக்கு விரோதம் கிடையாது" என்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக நியமனம் பெற்றிருக்கும் ஹார்டிங் என்பவர் சொல்லுகிறார். நம்முடைய பிராண ஸ்நேஹிதனாக உயிர்த்துணையாக இருந்த ஒருவன் இப்போது நமக்கும் தனக்கும் விரோதமில்லை யென்று சொல்ல நேர்ந்தால் முன் இருந்த ஸ்நேஹ நிலை எத்தனை தூரம் குறைந்து போய்விட்டதென்பது சொல்லாமலே விளங்கும். இத்தாலியோ மிகவும் அபாயகரமான உள்நாட்டுக் குழப்பத்தில் அழுந்திக் கிடக்கிறது. இந்த நிலையில் தான்மேன் தமது கழுத்திலே அவசரமாகச் சுருக்குப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று துருக்கி நினைத்தே இங்ஙனம் வாயிதா போடுகிறதென்று தோன்றுகிறது. ஆனால் இங்ஙனம் துருக்கி கொடுத்த உத்தரத்தில் நேசக் கக்ஷியாருக்குக் கோபமுண்டாய் அவர்கள் இதுவரை துருக்கி ராஜாங்கப் பொக்கிஷத்துக்குச் செய்துகொண்டு வந்த பண உதவியைக் குறைத்துவிடப் போகிறார்களென்றும் அதன் மேலும் துருக்கி சரிப்பட்டு வராவிட்டால் இறுதிச் சீட்டுப் பிறப்பிக்க நேருமென்றும் நேற்றுக் கிடைத்த ராய்ட்டர் தந்தியொன்று சொல்லுகிறது. இதனின்றும், துருக்கி மந்திரிகள் என்ன விதமான செய்கையை மேற்கொள்வார்களென்பது தெரியவில்லை.

ஆனால், நேசக் கக்ஷியாரின் இறுதிச் சீட்டு (எங்கள் வார்த்தையை அங்கீகாரம் செய்யாவிட்டால் யுத்தந் தொடங்குவோமென்ற சீட்டு) துருக்கியரை நடு நடுங்கச் செய்துவிடுமென்று தோன்றவில்லை.

ஸர்வதேச ஸங்கம்

நேசக் கக்ஷியாரால் மிகவும் ஆரவாரத்துடன் நடத்தப்பட்டு வரும் "ஸர்வதேச ஸங்கம்" செத்துப்

போய்விட்டதென்று அமெரிக்காவின் புதிய ஜனதிபதி மிஸ்டர் ஹார்டிங் சொல்லியதாகத் தெரிகிறது. ஆரம்பத்தில், அநேகமாகப் பெரும் பகுதி, ஜனதிபதி வில்ஸனுடைய வேண்டுதல்களை முன்னிட்டே இந்த ஸங்கம் அமைக்கப்பட்டது. இங்ஙனம் அமெரிக்காவின் முயற்சியால் ஏற்பட்ட இந்த ஸங்கத்தை இப்போது அமெரிக்காவே சாபமிடுதல், காலத்தின் மாறுபடும் குணத்தையும், அந்த ஸங்கத்தின் மாற்ற முடியாத துர்க்குணத்தையும் ஒருங்கே விளக்குகிறது. நிறைவேற்றமுடியாத, நிறைவேற்ற வழியில்லாத பல பல தீர்மானங்களில் பொழுது செலவிட்டுக்கொண்டிருக்கும் அந்த ஸங்கத்தை அமெரிக்கா இனி ஒரு சிறிதேனும் பொருட்படுத்தப் போவதில்லை யென்பது மேலே காட்டிய மிஸ்டர் ஹார்டிங்கின் வாக்கிலிருந்து நன்கு விளங்குகிறது. ஸமீப காலத்தில் ஐரோப்பாவில் ப்ரஸ்ஸல்ஸ் நகரத்தில் நடந்த திரவிய ஸங்கத்தின் முன்பு ஒரு அமெரிக்க ராஜதந்திரி பேசுகையில்:—"வேலை செய்ய மனமில்லாத நாடுகளுக்கு ஆஹாரம் கொடுக்கமாட்டோம்; ஸமாதானம் செய்துகொள்ள மனமில்லாத ராஜ்யங்களுக்குப் பணம் கடன் கொடுக்கமாட்டோம். இதுவே அமெரிக்காவின் நியாயமான கொள்கை" என்று சொன்னார். இதைக் குறித்துப் பேசுமிடத்தே, 'நியூ இந்தியா' பத்திரிகை சொல்லுகிறது:—"இங்கிலாந்தில் ஒரு பொது எலெக்ஷன் நடந்து அதினின்றும் உதார குணமுடையவர்கள் அதிகாரம் பெற்று அதனால் ருஷியாவுடன் ஸமாதானமும், ஐர்லாந்துக்கு ஸமாதான வாழ்க்கையும் ஏற்படுமாயின், பிறகு உலகத்து தேசங்களில் மிகச் செல்வமுடையதாகிய அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு நிறையப் பணமும் உணவும் வர இடமுண்டாகும்" என்கிறது. இதை நோக்குமிடத்து அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கே, போதிய அளவு

கடனுதவி கிடைப்பது நிறுத்தப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் தமது செல்வத்தையெல்லாம் மஹாயுத்தத்தில் இழந்து போயின. அமெரிக்காவிடம் கடன் கேட்கப் போனால், "ஸமாதானத்தை வேண்டாத தேசங்களுக்குப் பணம் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லுகிறது. ஒவ்வொரு சிறு ராஜ்யத்துக்குங்கூட விடுதலை யேற்படுத்திக் கொடுப்பதற்காக மஹாயுத்தம் நடத்துகிறோமென்று உருப் போட்டுக்கொண்டிருந்த ஆங்கிலேய மந்திரிகள் இப்போது ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க மறுப்பதைப் பார்த்து அமெரிக்காவில் பலர் ஆச்சரியப்படுகிறார்கள். இப்படிப்பட்ட மந்திரிகளின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெறுவது கொண்டே "ஸர்வ தேச சங்க"த்தினிடம் அமெரிக்காவுக்கு நம்பிக்கை போய்விட்டதென்று தோன்றுகிறது.

ரஸத் திரட்டு

காளிதாஸன்

19 நவம்பர் 1920 சௌத்திரி கார்த்திகை 5

"ஐர்லாந்துக்கு ஸ்வதந்த்ரம்
கொடுக்க மாட்டோம்."

இந்த மாதிரி தர்ம ஸமாசாரங்களைக் கொஞ்சம் மறை பொருளாக மூடின பாஷையில், சற்றே இரண்டர்த்தம் தோன்றும்படியாகப் பேசுவது இதுவரை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் போன்ற "ராடிகல்" (வேர்த்திருந்த) ராஜ தந்திரிகளின் வழக்கமாக இருந்தது. அதிலும், அமெரிக்காவிடம் யுத்த ஸமயத்தில் ஏராளமாகப் பணம் கடன் வாங்க வேண்டியிருந்தபடியாலும், மற்றபடி ஆஹார வஸ்துக்கள், ஸைன்யத்துக்கு வேண்டிய பண்டங்கள், மனித பலம் முதலிய வேறு பல உதவிகளும் அவசியமாக இருந்தபடியாலும், விடுதலை விஷயத்தில் ஏராளமான பக்தி, ஆவேசம் காட்டுவதும், விடுதலை மறுப்புக் கொள்கைகளை மிகவும் ஜாக்கிரதையான, இரண்டு பொருளுடைய, மொழிகளில் மறைத்துச் சொல்வதும் ஆங்கில மந்திரிகளுக்கு அவஸரமாகவும் இன்றியமையாதன ஆகவும் ஏற்பட்டன. இப்போது சண்டை முடிந்துவிட்டது. அமெரிக்கா மேலே கடன் கொடுக்கக்கூடிய மனமில்லாது போய்விட்டது

மல்லாமல் ஜெர்மானியருக்காக ஓதப்பட்ட தர்ம ஸூத்ரங்களை யெல்லாம் இங்கிலாந்தும் அனுஸரித்து ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டு மென்று பல அமெரிக்கத் தலைவர் வற்புறுத்து கிறார்கள். கடன் கொடுக்கவும் மாட்டோம். நம் கீழேயிருக்கும் தேசத்தை வேறு வெட்டிவிட வேண்டு மென்று வற்புறுத்த வருவானும். தர்ம ஸூத்ரங் களாம்! தர்ம ஸூத்ரங்கள் நம்முடைய எதிரிகளிட முள்ள குற்றங்களை உலகத்தாருக் கெடுத்துக் காட்டு வதற்கு உதவியாகப் பாதிரிகளாலும் பண்டிதர் களாலும் அமைக்கப்பட்டன. நாம் செய்யும் அநி யாயங்கள் நம்முடைய ஸௌகர்யத்துக்கு அவசிய மானவை. ஸௌகர்யத்தைக் குறைத்துக்கொண்டு தர்ம ஸூத்ரங்களைக் கவனிப்பது நமக்குப் பொருந் தாது. இங்ஙனம் பர்யாலோசனை செய்து ஆங்கிலேய மந்திரிகள் விடுதலை மறுப்பு விஷயத்தை முன்போல் இன்பமான பாஷையால் மறைத்து வைக்கும் சடங் கைக்கூடக் கைவிட்டு முரட்டு பாஷையில் கெட்டி யாக, ஐர்லாந்துக்கு விடுதலை கிடையாதென்று ஸாதிக்கத் தொடங்கி விட்டார்கள். ஐர்லாந்து விஷயமான ரஸமிகுந்த லண்டன் ராய்ட்டர் தந்தி யொன்று நேற்று வந்தது. அதன் விவரமான வடிவத்தை நேற்றை மித்திரன் தந்திப் பக்கங்களிலே காணலாம். மிஸ்டர் ஆஸ்க்வித் (மாஜி ப்ரதம மந்திரி) இங்கிலாந்துக்கு ராணுவ விபத்துக்கள ஏற்படாதபடி தடைகளேற்படுத்திக்கொண்டு மற்றப்படி ஸம்பூர்ணமான ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று பார்லிமெண்ட் ஸபையில் சொன்னார்.

எழுந்தார் லாய்ட் ஜ்யார்ஜ் மந்திரி. கத்தியைச் சுழற்றத் தொடங்கிவிட்டார். மெய்யான உருக்குக் கத்தியன்று; பாஷைக் கத்தி; வாக்கு வாள். ஐர்லாந்

துக்கு ஸ்வாதீனம் கொடுத்த பிறகும்கூடப் பழைய புண்களை மறந்து ஐர்லாந்து இங்கிலாந்திடம் நட்புச் செலுத்துமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நம்பவில்லை. அவரால் நம்ப முடியவில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறு குறு குறு குறு என்னுமாம். அவருடைய இனத்தார் பண்ணிய பிழைகளெல்லாம் அவருக்குத் தெரியாதா? எனினும், ஆங்கிலேயர் தம்மைப் போலே பிறரையும் நினைத்து ஸித்தாந்தங்கள் ஏற்படுத்துவது தவறென்றும் ஐரிஷ் ஜாதியாருடைய சரித்திரத்தை நோக்குமிடத்தே, அவர்கள் நெடுங் காலமாகக் கஷ்டப்பட்டுப் பரிசுத்தமடைந்த கூட்டத்தாராதலால், அவர்களுடைய மனம் கல்மனதாக இராமல் நன்றுக்குழைந்து, பக்குவப்பட்டு, தெய்வ பக்திக்கு வசப்படுவதாகச் சமைந்திருத்தல் விளங்குகிறதென்றும், ஆதலால், ஐர்லாந்து தனக்கு ஸ்வாதீனம் கிடைத்தால், விரைவிலே இங்கிலாந்தின் பழைய பிழைகளை மறந்து, இங்கிலாந்துடன் உண்மையான நட்புப் பாராட்டியே வருமென்றும் நான் நினைக்கிறேன். ஐர்லாந்துக்கு ஸ்வாதீனம் கொடுத்தால், அந்நாட்டிற்கும், இங்கிலாந்துக்கும் கேடு சூழும் பிற நாடுகளுக்கும் அஃதோர் தூண்டுதலாகுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுகிறார். ஐரிஷ் துறைமுகங்களின் பரிபாலனம் இங்கிலாந்தின் கையினின்றும் நழுவுமாயின், அதனால் இங்கிலாந்தின் ராணுவ சக்திக்கு பங்கம் நேருமென்றார். அங்ஙனம் நேரும்படி செய்யக்கூடிய எந்த ஏற்பாட்டையும் இங்கிலாந்து அங்கீகரிக்க முடியாதென்கிறார்.

மற்றக் குடியரசு நாடுகளுக்குள்ள ஸ்தாபனம் ஐர்லாந்துக்குக் கொடுக்க வேண்டுமென்று மிஸ்டர் ஆஸ்க்வித் வாயினால் சொல்லிய போதிலும், அவருடைய உட்கருத்து அப்படியில்லை யென்பதை

மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் எடுத்துக் காட்டுகிறார். ஏனென்றால், ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுப்பதில் கடற் சண்டைத் தயாரிப்புக்களுக்கு ஸ்தலங்களாகக்கூடிய துறைமுகங்களின் மேற்பார்வை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரிடம் வைத்துக் கொள்ளலாமென்று மிஸ்டர் ஆஸ்க்வித் சொல்லுகிறார். அப்படியானால், கானடா, ஆஸ்திரேலியா முதலிய குடியேற்ற அரசுகளின் ஸ்தானத்தை ஐர்லாந்துக்குக் கொடுப்பதாக மாட்டாது. ஏனென்றால், கானடா, ஆஸ்திரேலியா முதலிய குடியேற்ற நாடுகள் தம் துறைமுகங்களின்மீது பரிபூர்ணமான, வகுக்கப்படாத தனியதிகாரம் செலுத்தி வருகின்றன.

மேலும், 1918-ஆம் வருஷத்தில் ஐர்லாந்து தேசத்து "ஸின்பீன்" கக்ஷியார் ஜெர்மனியுடன் கலந்து ப்ரிடிஷ் அரசாட்சிக்கு விரோதமாக நடத்திய சூழ்ச்சியைப்பற்றிய அறிக்கை யொன்று சீக்கிரத்தில் ஸர்க்காரால் ப்ரசுரம் செய்யப்படுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவித்தார்

ஐர்லாந்து தேசத்துக் கடல் துறைகள் ப்ரிடனுக்கு எத்தனை விபத்தாக மாற்றத்தக்கன வென்பதும், "ஸின்பீன்"கள் அவற்றை எங்ஙனம் பயன்படுத்தச் சதியாலோசனை நடத்தினார்களென்பதும், அவர்கள் அங்ஙனம் பயன்படுத்த முடியாமற் போயினதெப்படி யென்பதும், அவர்களை இங்கிலாந்து தன் கைக்குள் இறுகப் பிடித்துக் கொண்டிராவிட்டால் இன்னும் அப்படியே வேலை செய்வார்களென்பதும் ஸர்க்கார் ப்ரசுரம் செய்யப் போகிற அறிக்கையில் நன்றாக விளங்குமாம். ஆதலால், ஐர்லாந்தை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும் கைப்பிடியை நெகிழவிடப் போவதில்லையென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுகிறார்.

இங்கு,

" மீ தெழும் மொக்குளன்ன யாக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோ, இருபது திண்தோள்
உண்டா(க)?"

(நீர் மீதெழும் குமிழி போன்ற இந்த சரீரத்தை விட்டாலும் விடுவேனேயல்லாமல், என் உறுதியான தோள் இருபது மிருக்கையிலே, நான் ஸீதையை விடுவேனென்று நினைக்கவுஞ் செய்யலாமோ?)

என்று ராவணன் சொல்லியதாகக் கம்பர் எழுதியிருக்கிற வரிகள் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றன. ராவணனுடைய கதி மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் வரக் கூடாதென்று நான் மனப்பூர்வமாகக் கடவுளை வேண்டுகிறேன். ஐர்லாந்து தன் கடற் படையையும் நிலப் படையையும் தன் இஷ்டப்படி சமைத்து நடத்துவதென்ற அம்சம் சேர்ந்த எந்த ஏற்பாட்டையும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் எந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்ள முடியாதென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவிக்கிறார். இந்த விஷயத்தை ஐயந்திரிபற, மிகத் தெளிவாக, எல்லோரும் உணரும்படி அழுத்திச் சொல்ல விரும்புவதாகவும் அவர் தெரிவிக்கிறார். எந்தக் காலத்துக்குமா? அதாவது, யுகாந்தம் வரைக்குமா? உலக முடிவு வரை, எப்போதுமே, ஐர்லாந்துக்குத் தன் இஷ்டப்படி படை சமைத்துப் பராமரிப்பதாகிய, மற்றக் குடியேற்ற நாடுகளுக்குள்ள, உரிமை கிடைக்கக் கூடாதென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுவது எனக்கு ஒரு பக்கத்தில் வருத்தத்தையும் மற்றொரு பக்கத்தில் நகைப்பையும் விளைவிக்கிறது. விரைவில் ஐர்லாந்தின் விஷயத்துக்கு ஒரு முடிவேற்பட வழியில்லாமலிருப்பது பற்றி வருத்தமும், இப்படிப்பட்ட மந்திரிகள் வசம் இங்கிலாந்து அகப்பட்டுக்கொண்டு தாழ்வடைகிறதென்று வருத்தமும், மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் உலக முடிவுரை ஐர்லாந்தை அடிமைப்

படுத்தி ஆள முடியுமென்று நம்புவதை எண்ணு மிடத்தே பெரு நகைப்பும் தோன்றுகின்றன. இரும் புருஷாயா, நம் இஷ்டமான வரை நமது காலடியிலே போட்டிருப்பதற்கு! மனிதர் கூட்டமன்றே? உலக மெங்கும் ஸமத்வ ஞானத்தை வற்புறுத்துவதாகிய கல்வித் தீ ஓங்கிக்கொண்டிருக்கையிலே ஒரு கூட்டத் தார் மற்றொரு பிரமாண்டமான லக்ஷக்கணக்கான ஜனக் கூட்டத்தை எத்தனை காலம் தாழ்ந்த நிலையிலே அழுத்தி வைத்துக் கொண்டிருத்தல் ஸாத்யப்படும்?

குடியேற்ற நாடுகளைப் போன்ற ஸ்தானம் ஐர் லாந்துக்குக் கொடுத்தால் உடனே மிகவும் எளிதாக, ஆறு லக்ஷத்துக்கு மேல் ஏழு லக்ஷம் வரை கட்டாய ராணுவ ஸேவகம் விதித்து ஐர்லாந்தியர் பெரிய ஸேனை அமைத்துக் கொள்வார்களென்றும், அதி னின்றும் இங்கிலாந்திலும் கட்டாய ராணுவ ஸேவகம் விதிக்க நேருமென்பதைத் தொழிற் கக்ஷியார் உணர்ந்துகொள்ள வேண்டுமென்றும் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் எச்சரித்தார். இதில், மிகவும் ரஸமான உபகதை யொன்று கிளைக்கிறது. அதாவது, கட்டாய ஸேவகம் வருமென்று பய முறுத்துவதில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தொழிற் கக்ஷியாரை மட்டும் பெயர் குறிப்பிட்டுப் பேசியதன் நியாயமென்ன? ஐர்லாந்துக்கு விடுதலை வேண்டு மென்பதில் அனுதாப முடையோர், இங்கிலாந்தில் தொழிற் கக்ஷியாரிடையே மாத்திரந்தானே இருக் கிறார்கள்? மற்றக் கக்ஷியாரிடையே கிடையாதா? திருஷ்டாந்தமாக, ஸர்க்கார் உத்யோகம் கிடைக்கும் வரை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தாமே, ஐர்லாந்தின் விடுதலைக்காக மனமுருகிக் கண்ணீர் விட்டுக்கொண் டிருக்கவில்லையா? எனவே, தொழிற் கக்ஷியாரைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டதன் காரணம்

யாதென்றால், கட்டாய ராணுவ ஸேவகம் சட்ட மாகும் பக்ஷத்தில் அது மற்ற திரவிய வந்தர், வியா பாரிகள், உபாத்தியாயர், மந்திரிகள் முதலிய வகுப் பினரைத் தீண்டுவதைக் காட்டிலும் ஏழைத் தொழி லாளிகளையே அதிகமாகத் தீண்டுமென்ற விஷயம் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜின் மனதிலிருந்து, அது அவரை மீறியே, வேறொரு விஷயத்தைப் பற்றிப் பேசுகையில், அவர் நாவிற்கு வந்துவிட்டது. இது நிற்க, ஐர்லாந்தின் விஷயமாக மந்திரி லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லும் விஷயங்களை மீட்டும் கவ னிப்போம்.

மேலும், ஐர்லாந்திலேயே, (ப்ராடஸ்டெண்ட்) வர்க்கத்தாரின் தொகையும் செல்வாக்கும் மிகுதிப் பட்டதுவும், இங்கிலீஷ் ஆட்சிக்குச் சார்பாக நின்று பொது ஐரிஷ் விடுதலையை எதிர்ப்பதுவுமாகிய அல்ஸ்டர் மாகாணத்தை அதன் ஸம்மதத்துக்கு மாறுக எந்தப் பார்லிமெண்டுக்கும் (அதாவது, ஐரிஷ் பார்லிமெண்டுக்கு) உட்படுத்துவதாக உத் தேசங் கிடையாதென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அழுத்திக் கூறினர். அல்ஸ்டர் மாகாணத் துக்குத் தனிப் பார்லிமெண்ட் கொடுப்பதே, ஒற்று மையை நிலை நிறுத்துவதற்குத் தக்க உபாயமென்று தெரிவித்தார். எந்த ஒற்றுமையை? ஐரிஷ் ஒற்று மையையா! ஒரு தேசத்துக்கு இரண்டு பார்லி மெண்ட் கொடுத்து, அந்த தேசத்தை ஒற்றுமைப் படுத்துவது விநோதமான வழிதான். லண்டனில் ஒரு பார்லிமெண்ட், மாஞ்செஸ்டரில் ஒரு பார்லி மெண்ட் வைத்து இங்கிலீஷ் ஒற்றுமையை அதிகப் படுத்தலாமென்ற யோசனையை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அங்கீகாரம் செய்வாரா? ஐரிஷ் சுங்கத் தீர்வையும் வருமான வரியும் ப்ரிடிஷ் கவர்ன்மெண் டாரின் ஆதிக்கத்தின் கீழேதான் வைத்துக்கொள்ளப்

போகிறார்களாம். அதுவும் இன்றியமையாததுதா னென்பதற்கு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஏதேதோ நொண்டி முகாந்தரம் சொல்லுகிறார்.

இந்தக் கொள்கைகளுடனே இவர்கள் செய்யப் போகிற ஸ்வராஜ்யச் சட்டத்தை ஐர்லாந்து வாஸிகள் தடி முனையாலேகூடத் தீண்டமாட் டார்கள். இதை ஐர்லாந்தில் யாரும் சிறிதேனும் அங்கீகாரம் செய்துகொள்ள மாட்டார்களென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தாமே அங்கீகரிக்கிறார். அங்ஙனம் அவர் அங்கீகாரம் புரிந்தும், அவரும் அவ ருடைய கூட்டத்தாரும் பார்லிமெண்டில் ஸ்வராஜ்ய மசோதா வொன்றைக் கொண்டு விட்டுக்கொண்டு, முதல் வாதம், இரண்டாம் வாதம் முதலிய வீண் யாட்டுகளில் ஏன் வீணை நேரத்தைச் செலவிடு கிறார்களென்ற விஷயம் எனக்கர்த்தமாகவில்லை. ஒரு வேளை ஒரு நிஷ்ப்ரயோஜனச் சட்டத்தை மிகவும் படாடோபங்களுடன் செய்து முடித்துக் கையில் வைத்துக்கொண்டே:—"நாங்களென்ன செய்வோம்? ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கப் போனோம். அவர்கள் வாங்கிக்கொள்ள மறுக்கிறார்கள். எனவே, எங்கள் பொறுப்புக் கழிந்தது" என்று சொல்லித் தங்கள் மனஸாக்ஷிக்கும் அமெரிக்கர் முதலியவர் களின் கூக்குரலுக்கும் ஒரு கழிப்புக் கழித்து விடலாமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜும் அவ ருடைய நண்பர்களும் நினைப்பதாகத் தோன்று கிறது.

ஆனால், இங்ஙனம் நாடகம் காட்டுவதிலிருந்து ஐர்லாந்து வாஸிகள் ஸமாதான மெய்த மாட்டார்க ளென்பதையும், ஐர்லாந்தில் ஸமாதான மேற்படும் வரை, இங்கிலாந்திற்கு ஸமாதானம் ஏற்பட வழி யில்லை யென்பதையும் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஒருங்கே மறந்துவிட்டது பற்றி வருத்தப்படுகிறேன.

விநோதத் திரட்டு

சக்திதாஸன்

19 நவம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 5

(1) ஐரிஷ் நிலைமை

ஐர்லாந்துக்கு விடுதலை கொடுக்கும் பக்ஷத்தில் அது ஐர்லாந்து இங்கிலாந்துக்கு விரோதமான செய்கைகள் செய்வதுமன்றி, இங்கிலாந்துக்குப் பகையான மற்ற நாடுகளும் தீங்குகள் செய்வதற்கோர் தூண்டுதலாக இருக்குமென்ற அர்த்தத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சில தினங்களின் முன்பு காமன்ஸ் ஸபையில் பேசியதைக். குறித்து ஏற்கெனவே நமது பத்திரிகையில் எழுதி யிருக்கிறேன். வேறு பல ப்ரிடிஷ் ராஜ தந்திரிகளும் ஐர்லாந்தைக் குறித்துப் பேசுமிடத்தே அந்நாடு இங்கிலாந்தின் பாரிசத்திலுள்ளதொரு சத்துருவென்று சொல்லி வருகிறார்கள். "ஐரிஷ் குடியரசின்" ஜனாதிபதியாகி, அமெரிக்காவுக்குப் போய் வஸிக்கும் மிஸ்டர் டி-வலேரா என்பவருடைய ஸ்தானத்தில் வேலை பார்த்துவரும் மிஸ்டர் ஆர்தர் (g) க்ரி (f) பித்ஸ் என்பவர் ப்ரசுரம் செய்திருக்கும் அறிக்கை யொன்றில் நாம் எதிர்பார்த்த வண்ணமே மேற்கூறிய ப்ரிடிஷ் ராஜ்ய தந்திரிகளின் கொள்கையை மறுத்துப் பேசுகிறார். "நீங்கள் உங்களுடைய கொள்கைகளாலேயே ஐர்லாந்தைப் பகையாகச் செய்து

கொண்டு விட்டீர்கள். உங்களுடைய ராஜ்ய முறையை மாற்றி விடுங்கள். ஐர்லாந்து தேசத்தார் தங்களுக்கிஷ்டமான ராஜாங்க முறைமையை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமையுடையோ ரென்பதை அங்கீகாரம் செய்து கொள்ளுங்கள். உடனே ஐர்லாந்து உங்களிடம் நட்புள்ள தேசமாய்விடும். உங்களுடன் ஸமாதானத்தோடும் அன்போடும் வாழத் தொடங்கும் என்று மிஸ்டர் ஆர்தர் க்ரிபித்ஸ் சொல்லுகிறார். "ஸின்பீன்" கக்ஷியின் தலைவர்களுடைய கருத்து இங்ஙனமிருக்கிறது. எனினும், இந்த முறைப்படி ஐர்லாந்தைத் தனக்குப் பகையென்ற நிலைமையினின்றும் பெயர்த்துத் துணையாகச் செய்து கொள்ளுதற்குரிய தீர்க்காலோசனை ப்ரிடிஷ் மந்திரிகளுக்கு இப்போதேற்படுமோ என்பது எனக்கு மிகவும் ஸந்தேஹமாகத்தான் இருக்கிறது.

(2) கிரேக்க தேசத்தில் ஸ்திதி

கிரேக்க தேசத்து ஜனங்கள் ஸமீபத்தில் நடந்த "எலெக்ஷன்"களில் வாக்குக் கொடுத்திருக்கும் மாதிரியைப் பார்க்கையிலே அவர்கள் முன்னிருந்த கான்ஸ்டன்டைன் ராஜாவே திரும்பிப் பட்டத்துக்கு வரவேண்டுமென்று விரும்புகிறார்களென்பது நிச்சயமாகத் தெரிகிறது. இந்தக் கான்ஸ்டன்டைன் ராஜா கெய்ஸர் சக்ரவர்த்தியின் ஸஹோதரிக்குக் கணவரென்பதையும், யுத்த காலத்தில் கெய்ஸருக்கனுகூலமாக இருந்தா ரென்பதையும் கருதி, முன்னர் அவரை ராஜ பதவியினின்றும் தள்ளியவர்களாகிய இங்கிலாந்து முதலிய நேசக் கக்ஷியார் அவர் மீளவும் கிரேக்க தேசத்து ராஜாவாகக் கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். கான்ஸ்டன்டைனுக்கப்பால் நேசக் கக்ஷியாரின் கைப்பொம்மையாகிய வெனிஜிலாஸ் என்ற கிரேக்க மந்திரியின் உதவியுடனே, கிரேக்க ஆட்சியைத்

தங்களிஷ்டப்படி மாற்றிக் கான்ஸ்டன்டைனுடைய இளைய மகனெருவனைப் பட்டத்தில் வைத்திருந் தார்கள். இந்தப் பிள்ளை ஸமீபத்தில் குரங்கு கடித்த தலால் இறந்துபோய் விட்டார். எனவே கிரேக்க தேசம் இப்போது ராஜா இல்லாமல் இருக்கிறது. கான்ஸ்டன்டைன் அரசரின் மற்றொரு குமாரரைப் பட்டத்துக்கிருக்கச் சொல்லியதில் தமது பிதாவே ராஜா ஆகவேண்டுமென்று கருதி அவர் ராஜ பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். கிரேக்க ஜனங்கள் கான்ஸ்டன்டைன் ராஜாவையே மறுபடி ஸிம்ஹாஸனத்துக் கழைக்கிறார்கள். எலெக்ஷனில் வெற்றி பெற்ற கக்ஷிக்குத் தலைவராகிய ஸ்ரீமான் குநாரிஸ் என்பவர் கான்ஸ்டன்டைன் ராஜாவுக்கே மறுபடி பட்டங் கொடுக்க வேண்டுமென்ற நிச்சயத் தோடிருக்கிறார். அந்தந்த தேசத்தாரிஷ்டப்படி அந்தந்த ராஜ்யம் ஆளப்பட வேண்டுமென்று நேசக் கக்ஷியார் வாயால் ஓயாது சொல்லுகிறார்களேயன்றிக் கார்யத்தில் வரும்போது, உலகத்து ராஜ்யங்களில் பலஹீனத்தோடிருப்பவனவற்றை யெல்லாம், இவர்க ளுடைய ஸௌகர்யங்களுக்கிசைந்தபடி இந் நேசக் கக்ஷியார்களின் அபிப்பிராயங்களுக்கு, பலாத்கார மாகவேனும் உட்படுத்த முயற்சி செய்கிறார்கள். கிரேக்க தேசத்து ஜனங்கள் தங்களிஷ்டப்படி ராஜா ஏற்படுத்திக்கொள்வதைக்கூடத் தடுத்துப் பேசத் தங்களுக்கதிகாரமுண்டென்று நேசக் கக்ஷியார் நினைக்கிறார்கள். இதினின்றும் கிரேக்கர் நேசக் கக்ஷியின் கூட்டத்தை விட்டுப் பிரிந்து செல்லவும் விரும்பக் கூடுமென்று கருதுகிறேன்.

(3) பாரஸீகத்துக்கு ஸௌக்ய காலம்

பாரஸீகத்திலுள்ள ப்ரிடிஷ் துருப்புகள், இந் தியத் துருப்புகள் முழுவதையும் ப்ரிடிஷ் கவர்ன் மெண்டார் அங்கிருந்து மீண்டு வரும்படி கட்டளை

பிறப்பித்து விட்டார்களென்று ஸமீபத்தில் வந்த லண்டன் தந்தியொன்றினால் விளங்குகிறது. இது போலவே, மெஸபடோமியாவில் ப்ரிடிஷரால் அமைக்கப்பட்டு வரும் அராபிய ஆட்சியின் வசம் அந்நாட்டை ஒப்புவிப்பதாகிய நோக்கத்துடன் அங்குள்ள இந்திய, பிரிடிஷ் ஸைந்யங்களையும் மிகவும் குறைத்து விடும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. சிறிது காலத்தின் முன்பு வட மேற்குப் பாரஸீகத்திலிருந்து போல்ஷ்விக்கரைத் துரத்தும் பொருட்டாக ப்ரிடிஷ் படைகள் உப யோகப்படுத்தப் பட்டனவென்று இந்தியா கவர்ன் மெண்டார் வெளியிட்ட அறிக்கையிலிருந்து லண்டன் "டைம்ஸ்" முதலிய ஆங்கிலப் பத்திரிகை களுக்குக் கோபமூண்டு அவை ப்ரிடிஷ் கவர்ன்மெண் டாரைக் கண்டித்தெழுதுகின்றன. "அந்த அறிக்கை உண்மையா, பொய்யா? பொய்யானால் அதனை உடனே ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் மறுக்க வேண்டும். அதனை வெளியிட்டது பற்றி இந்தியா கவர்ன்மெண்டாரைக் கண்டிக்கவும் வேண்டும்" என்று லண்டன் "டைம்ஸ்" சொல்லுகிறது. எது எப்படியாயினும், பாரஸீகத்திற்கு இவ்விஷயம் பெரியதோர் நிவர்த்தியாகவே கருதத் தக்கது. ஆரம்பத்தில் இதனால் பாரஸீகத்துக்கு அன்னியர் களிடமிருந்து இடையூறுகளும், கஷ்டங்களும் நேரிடலாம். எனினும், காலக்கிரமத்தில், இதி னின்றும் பாரஸீகத்துக்கு வயிற்றுப் பூச்சி வெளி யேறியதால் மனிதனுக்கு நலமேற்படுதல் போல முற்றிலும் நன்மைதானேற்படுமென்பது எனக்கு நிச்சயம்.

சுதேசமித்திரன்
பத்திரிகையும் தமிழ் நாடும்

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

30 நவம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 16

வடக்கே, ஸ்ரீ காசியினின்றும், தெற்கே தென் காசியினின்றும், இரண்டு தினங்களின் முன்னே, இரண்டு கடிதங்கள் என் கையில் சேர்ந்து கிடைத்தன. அவை யிரண்டும் சிறந்த நண்பர்களால் எழுதப்பட்டன. அவற்றுள் ஒன்று "பஹிரங்கக் கடிதம்." மற்றது ஸாதாரணக் கடிதம். ஆனால் இரண்டிலும் ஒரே விஷயந்தான் எழுதப்பட்டிருக் கிறது; ஒரே விதமான கேள்விதான் கேட்கப் பட்டிருக்கிறது. அதே கேள்வியைச் சென்னையி லுள்ள வேறு சில நண்பர்கள் என்னிடம் நேராகவும் கேட்டனர். இந்த நண்பர்களுக் கெல்லாம் இங்கு பொதுவாக மறு மொழி யெழுதிவிடுதல் பொருந்து மென்றும், அவர்களுக்கு இஃது திருப்தி தருமென்றும் நினைக்கிறேன். இவர்களெல்லாரும் என்னிடம் கேட்கும் கேள்வியின் சுருக்கம் பின்வருமாறு:—

"ஒத்துழையாமை விஷயத்தில் உம்முடைய முடிவான கொள்கை யாது? சுதேசமித்திரன் பத்திரிகை ஒத்துழையாமையை பகிரங்கமாகவும் முடிவாகவும் எதிர்க்காவிடினும், அதில் உள்ளுர

அபிமான மில்லாதது போல் காணப்படுகிறதே? அப்படியிருக்க, நெடுங்காலத்து தேசாபிமானியாகிய நீர் இந்த ஸமயத்தில் அப்பத்திரிகையில் வேலை செய்ய அமர்ந்தது நியாயமா?'' என்று கேட்கிறார்கள்.

இவர்களுக்கு நான் தெரிவிக்கும் உத்தரம் பின் வருமாறு. தென் இந்தியாவில் தேசீயக் கக்ஷிக்கு மூலபலமாக சுதேசமித்திரன் பத்திரிகையொன்று தான், ஆரம்பமுதல் இன்றுவரை, ஒரே நெறியாக, நிலை தவறுமல் நின்று, வேலை செய்துகொண்டு வருகிறதென்ற செய்தியைத் தமிழ் நாட்டில் யாரும் அறியாதாரில்லை. ஸமீபத்தில் நடந்த கல்கத்தா விசேஷ காங்கிரஸ் தீர்மானங்களில் ஒன்றின் விஷயத்தில் மாத்திரம் ஸ்ரீமான் சுதேசமித்திரன் பத்திராதிபர், பெரும் பகுதியாரின் தீர்மானம் இப்போது கார்யத்தில் நிறைவேற்ற முடியா தென்று சொல்லும் ஸ்ரீயுத விபின சந்த்ரபாலர், சித்த ரஞ்ஜனதாஸர் முதலிய பழுத்த தேசாபிமானத் தலைவர்களின் கொள்கையை ஆமோதிக்கிறார். ஒத்துழையாமையைத் தவிர தேச விடுதலைக்குச் சரித்திர பூர்வாங்கமான வேறு வழிகள் இருக்கின்றன. இந்த ஒத்துழையாமை முறையையே மிகவும் உக்ரமாகவும், 'தீர்வை மறுத்தல்' முதலிய அதன் இறுதிப் படிகளை உடனே உட்படுத்தியும், அனுஷ்டித்தால், ஒருவேளை அன்ய ராஜாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதாகிய பயன் அதனால் விளையக் கூடும்.

எனினும் இப்போது காண்பிக்கப் பட்டிருப்பதாகிய முதற் படியின் முறைகளால் அந்தப் பயன் எய்துவது ஸாத்தியமில்லை. தேசாபிமானிகள் மாத்திரமே சட்ட ஸபை ஸ்தானங்களை பஹிஷ்காரம் செய்ய மற்ற வகுப்பினர் அந்த ஸ்தானங்களை

யெல்லாம் பிடித்துக்கொள்வதினின்றும் இந்தியாவில் ஆங்கில ஆட்சியை ஸ்தம்பிக்கச் செய்தல் அரிதென்று தோன்றுகிறது. இங்ஙனமே வக்கீல்கள் தம் உத்தியோகங்களையும், பிள்ளைகள் படிப்பையும் விடும்படி செய்தல் இப்போது நம்மால் முற்றிலும் ஸாதிக்க முடியாத விஷயமாகத் தோன்றுவதுடன், அதனால் குறிப்பிட்ட பயனெய்திவிடுமென்று தீர்மானிக்கவும் இடமில்லை.

என்னுடைய சொந்த அபிப்பிராயப்படி, ஸ்வதேசியக் கொள்கைகளை மேன்மேலும் தெளிவாகவும், உறுதியாகவும், ஜனங்களுக்குள்ளே ப்ரசாரம் புரிவதும், ராஜரீகச் சதுரங்க விளையாட்டில், ஸமாதானமாகவே, எதிரி கலங்கும்படியானதோர் ஆட்டமாடி, ஸரியான ஸமயத்தில் ஸ்வராஜ்யத்தைக் கட்டியெடுத்துக் கொள்ள முயற்சி புரிவதுமே—சரித்திர ஸம்மதமான உபாயங்களாகும். இந்த முறையில் ஜனங்கள் சட்டத்தை யுடைக்கவும், அதிகாரிகள் யந்திர பீரங்கிகளை வைத்துக்கொண்டு ஜனங்களைச் சூறையாடுவதும் நேருமென்ற ஸம்சயத்துக் கிடமில்லாமலே வேலை செய்ய முடியும். ஏனைய முறைகள் நாட்டைக் குழப்பத்திலே கொண்டு சேர்க்கவும் கூடும். ராஜ வீதி யிருக்கையிலே சந்து, பொந்துகளின் வழியாக ஏன் செல்ல வேண்டும்? குழப்பம் சிறிதேனும் நேராதபடிக்கே, நமக்கு ஸ்வராஜ்யம் கிடைக்கும்படி காலதேச வர்த்தமானங்களும், தெய்வ சக்தியும் நமக்கனுகூலமாக இருப்பது வெளிப்படையாகவும் நிச்சயமாகவும் தெரியும் போது, பல இந்தியருக்குப் பிராணச் சேதமும் மற்றப் பெருஞ் சேதங்களும் விளைக்கக் கூடிய குழப்ப வழியில் நாமேன் போக வேண்டும்? ஸ்ரீமான் காந்தியின் கூட்டத்தாரும் உண்மையாகவே தேச நலத்தை விரும்புகிறார்களாதலால், சுதேசமித்திரன் பத்திரிகை

அவர்களை எவ்வகையிலும் புண்படுத்த மனமில்லா மல், ஸ்வ ஜனங்களென்ற அன்பு மிகுதியால் அவர் களை இயன்றவரை ஆதரித்துக் கொண்டும் வருகிறது. அபிப்ராய பேத முடையவர்களும் தேசாபிமானி களாக இருப்பாராயின், அவர்களை நாம் மிக மதிப் புடன் நடத்த வேண்டுமென்ற நியாயத்துக்கு இத் தருணத்தில், சுதேசமித்திரன் பத்திரிகை ஓரிலக்கிய மாகத் திகழ்ந்து வருகிறது. இங்ஙனம் பெருந்தன்மை பாராட்டும் பத்திரிகையைக் கூட மஹாத்மா காந்தி யின் புது முறையை முற்றிலும் அனுஷ்டித்துத்தீர வேண்டுமென்ற கருத்துடைய என் நண்பர் சிலர் பொதுமையும், தீர்க்காலோசனையுமின்றிப் பல வழி களிலே பழி கூறி வருவதைக் காணுமிடத்து எனக்கு மிகுந்த மன வருத்த முண்டாகிறது. தேச பக்தர்களுக்குள்ளே முடிவான கொள்கைகளைப் பற்றியன்று; வெறுமே தற்கால அனுஷ்டானங்களைப் பற்றி அபிப்பிராய பேதமுண்டாகும் போது, உடனே பரஸ்பரம் ஸம்சயப்படுதலும் பழி தூற்று தலும் மிகக் கொடிய வழக்கங்களென்று நான் நிச்சயமாகவே கூற வல்லேன். இந்த நிலைமை என் மனதில், சில வைஷ்ணவர்களுக்குள்ளே வடகலை, தென்கலைச் சண்டைகள் நடப்பதையும், வீடு வெள்ளை பூசுதல் விஷயமான ஓரபிப்பிராய பேதத் தைக் கொண்டு தமக்குள்ளே சண்டை செய்து பிரியும் மதி கெட்ட ஸ்திரீ புருஷரின் நடையையும் நினைப்புறுத்துகிறது.

இந்தக் குணத்தை நம்மவர் அறவே விட்டொழி தாலன்றித் தற்காலம் இந்தியா இருக்கும் நிலையில், நாம் விடுதலைக்காகப் பொது முயற்சி செய்வதில் பல இடுக்கண்கள் விளையக் கூடும். எடுத்ததற் கெல்லாம் ஜாதிப்ரஷ்டம் செய்யத் தீர்மானிக்கும் குணத்தை நாம் ராஜாங்க விஷயங்களில் செலுத்

தினுல், பெருங் கேடுகள் வந்து குறுக்கிடும். "உன்வழி உனக்கு; என்வழி எனக்கு: இந்தியாவுக்கு உடனே ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற லக்ஷ்யத்தில் நீயும் நானும் ஒன்று பட்டிருக்கிறோம். எனவே நாம் பரஸ்பரம் இயன்ற வரையிலெல்லாம் உதவி செய்து கொள்ளக் கடவோம். உதவி புரிதல் இயலாத இடத்தேவெறுமே இருப்போம். ஆனுல் எக்காரணம் பற்றியும், நம்முள் பகைக்க வேனும், பழி கூற வேனும், ஸம்சயப்பட வேனும், வேறெவ்வகையிலும் இடுக்கண் புரியவேனும் ஒரு போதும் மாட்டோம்" என்ற பரஸ்பர உணர்ச்சி தேசபக்தர்களுக்குள் எப்போதும் குன்றுதிருக்க வேண்டும்.

இவ்வித உணர்ச்சி நம்மவருள் பலப்பட்டு சுதேசமித்திரன் முதலிய மேன்மையார்ந்த கருவி களைப் போற்றிக் கையாண்டு, நம்மவரெல்லாரும் கூடி முயன்று, பாரதமாதாவின் ராஜரீக விலங்குகளை நீக்கி, விடுதலை யேற்படுத்திக் கொடுக்கப்போகிற ஸுதினம்—நல்ல நாள்—எப்போது வரப் போகிற தென்பதை ஒவ்வொரு நிமிஷமும் மிக ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறேன்.

விநோதக் கொத்து

சக்திதாஸன்

30 நவம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 16

"மார்னிங் போஸ்ட்" பத்திராதிபரின் கற்பனைச்சித்தி

"மார்னிங் போஸ்ட்" பத்திராதிபர் மனஸாகூஷிப்படி எழுதும் விஷயத்தில் அத்தனை கீர்த்தியடைந்தவரல்லர். எனினும் அவருடைய ஸமீபக் கற்பனையொன்றைப் படித்துப் பார்க்கையிலே, அவர் அபாண்டக் கதைகளெழுதும் வித்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அபிவிருத்தி செய்து வருகிறரென்று புலப்படுகிறது. மந்திரி மாண்டேகு இந்தியாவில் ஒத்துழையாமைக் கிளர்ச்சியை அழித்துவிடும் பொருட்டு அடக்கு முறைகளை யதேஷ்டமாக அனுஷ்டித்து, அக்நி மழை பெய்யும்படி இந்தியாவிலுள்ள அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்பது அப்பத்திராதிபருடைய கருத்து. அங்ஙனம் மாண்டேகு கட்டளை செய்யாமலிருப்பதன் காரணம் யாதென்று அப்பத்திராதிபர் ஆராய்ச்சி செய்து பார்க்கிறார். அந்த ஆராய்ச்சியில் அவர் கண்ட முடிவு மிக விநோதமானது. உலக முழுமையிலுமே ராஜாங்கப் புரட்சி யேற்படுத்த வேண்டுமென்ற கருத்துடைய ருஷிய ஜநாதிபதி

ஸ்ரீமான் லெனினுடைய கொள்கைகளில் மந்திரி மாண்டேகு ஒரு வேளை அனுதாபம் செலுத்து கிறாரோ, எப்படியோ என்று அப்பத்திராதிபர் ஊஹிக்கிறார். உள்நாட்டு ராஜரீக விஷயங்களில் ஏற்பட்ட கக்ஷி பேதத்தைக் கருதி இங்ஙனம் அடாப் பழிகள் ஏற்படுத்தி விடுவது மேற்றிசையில் சில கீழ்த் தர ராஜ தந்திரிகளுக்குள்ளே வழக்கமாக இயல் பெற்று வருகிறது. அந்த வழக்கம் நம்மவருக் குள்ளேயும் பரவி விடாமலிருக்க வேண்டுமென்பதே என் ப்ரார்த்தனை.

வெனிஜிலாஸின் கதி

நேசக் கக்ஷியாருக்குச் சார்பாக நின்று, யுத்த காலத்தில் கான்ஸ்டன்டைன் ராஜாவை யவன (கிரேக்க) ஸிம்ஹாஸனத்தினின்றும் தள்ளி, அதனால் உள்நாட்டில் தோன்றிய கிளர்ச்சியை வெளி யுதவியால் நசுக்கித் தம்மைத் தாமே கிரேக்கின் ஸ்வேச்சாதிபதியாகச் சமைத்துக்கொண்ட மந்திரி வெனிஜிலாஸுக்குக் காலம் சரியான கூலி கொடுத்து விட்டது. கிரேக்க ராஜதானியாகிய அத்தேனியா (ஏதென்ஸ்) நகரத்திலிருந்து, நவம்பர் 18-ஆம் தேதி புறப்பட்ட தந்தியொன்றில், இவர் அந்த நாட்டி னின்றும், ப்ரிடிஷ் போர்க் கப்பல்களின் பாது காப்பில் வெளியேறிச் சென்று விட்டதாகத் தெரி விக்கப்படுகிறது. நேசக் கட்சியார் ஆட்டியபடி யெல்லாம் ஆடும் பொம்மையாகத் தான் இருந்து கொண்டு, அவர்களுடைய பட்டாள உதவியால் தன் இஷ்டப்படி யெல்லாம் யவன தேசத்தை ஒரு பொம்மைபோல் ஆட்டிக்கொண்டு வந்த வெனிஜி லாஸ் இப்போது, ஸமீபத்தில் நடந்த எலக்ஷனில் தோல்வியடைந்ததுமன்றி, எந்த ராஜாவை வீழ்த்து வதில் இந்த மஹான்(!) அன்ய ராஜாங்கத்தாருக்கு உதவி செய்து தன்னுடைய யஜமான விசுவாஸத்தை

உலக சரித்திரத்தில் நிலை நிறுத்தி வைத்தாரோ, அந்தக் கான்ஸ்டன்டைன் ராஜாவே மீளவும் பட்டத்துக்கு வர வேண்டுமென்று தேசத்தில் பெரும் பகுதியார் உறுதி செய்து விட்டார்கள். இந்த விஷயத்திலும் நேசக் கக்ஷியின் முக்கிய வல்லரசுகளுக் குள்ளேயே, தெளிவான அபிப்பிராய பேதங்கள் தோன்றி யிருக்கின்றன. யுத்தம் முடிந்து, யுத்தத் திலே தாமடைந்த வெற்றியின் லாபங்களைப் பங் கிடத் தொடங்கிய கால முதல் நேசக் கக்ஷி ராஜ்யங் களுக்குள்ளே அபிப்பிராய ஒற்றுமைகளைக் காட்டி லும் அபிப்பிராய பேதங்களே அதிகமாக ஏற்பட்டு வந்திருப்பதைக் கவனிக்குமிடத்து, அவற்றுடன் இப் போது புதியதோர் ஸங்கடம் நேர்ந்திருப்பதொரு மிகையாகத் தோன்றுது. முழுகக் குளித்தால் பிறகு குளிரில்லை யென்பது தமிழ் வசனம். சில தினங்களின் முன்பு பார்லிமெண்ட் ஸபையில் மிஸ்டர் போனர்லா பேசியபோது, கிரேக்க தேசத்தின் ஸம்ரக்ஷக பதவி யைப் ப்ரான்ஸும், இங்கிலாந்தும் கைவிட்டு விட்ட தாகவும், ஆதலால் இப்போது அந்நாட்டின் உள் விவகாரங்களில் குறுக்கிடும் அதிகாரம் அவ் வல்லரசு களுக்குக் கிடையாதென்றும் தெரிவித்தார். ப்ரான்ஸ் தேசத்து மந்திரிகளோ கான்ஸ்டன்டைன் ராஜாவை மறுபடி கிரேக்க ஜனங்கள் பட்டத்துக்கு வைக்கக் கூடாதென்று பஹிரங்கமாக ஆக்ஷேபித்து வருகிறார்கள். இனி நேசக் கக்ஷியைச் சேர்ந்த மூன்றுவது ஐரோப்பிய வல்லரசாகிய இத்தாலியின் அபிப்பிராயத்தைக் கவனித்தால், பிரான்ஸ் சொல் வதற்கு நேர் விரோதமாக இருக்கிறது.

கான்ஸ்டன்டைன் ராஜா பட்டத்துக்கு வாராமல் தடுக்கும் எந்தக் கார்யங்களிலும் தான் ஸம்பந்தப்பட முடியாதென்று இத்தாலி ஸ்பஷ்ட மாகத் தெரிவித்துவிட்டது. அமெரிக்கர்—ஐக்ய

நாடுகளை இன்னும் நேசக் கக்ஷியுடன் சேர்த்துக் கணக்கிடலாமோ, எப்படியோ, என்றுல் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. எனினும் அமெரிக்காவை இப்போதும் நேசக் கக்ஷியினருடனே சேர்த்துக் கணக்கிடுதல் பெருங் குற்றமாகாதென்றே நினைக் கிறேன். அந்த அமெரிக்கா இத்தருணத்தில் கிரேக்க ஜனங்களின் ஸ்வ நிர்ணயத்துக்கு மாறுன ப்ரான்ஸ் தேசக் கொள்கையை ஆதரிக்குமென்று நான் நினைக்க வில்லை. நேசக் கக்ஷியாரின் பொது நிலைமை இவ்வா றிருக்க, நேற்றுவரை அந்தக் கட்சிக்கு கிரேக்க தேசம் ஒரு அலங்காரமாக இருந்தது. துருக்கியின் உடைமைகளிற் சிலவற்றை நேசக் கக்ஷியார் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத் ததுபோல், தனக்குக் கீழ்படுத்திக் கொடுக்கப்பெற்ற கிரேக்க தேசத்து ஜனங்கள், இப்போது மற்ற நேசக் கக்ஷியாரின் அபிப்பிராயங்களைக் குறித்து என்ன நினைக்கிறார்களென்பதைக் கவனிப்போம். அவர்கள் நேசக் கக்ஷியாரின் எண்ணங்களைச் சிறிதேனும் பொருட்டாக்கவில்லையென்று தெரிகிறது.

நேற்று மித்திரனில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக் கும் ராய்ட்டர் தந்தியொன்றில், கிரேக்க ஜனங்களும், கவர்ன்மெண்டாரும், கான்ஸ்டன்டைன் ராஜா திரும்ப வருவதைக் குறித்து ஸந்தோஷக் கொண் டாட்டங்கள் நடத்தி வருகிறார்களென்றும், எல்லா ஸர்க்கார் கச்சேரிகளிலும், நியாய ஸ்தலங்களிலும் கான்ஸ்டன்டைன் ராஜாவின் சித்திரங்களைத் தொங்கவிட்டு வைக்க வேண்டுமென்று கவர்ன் மெண்டார் கட்டளை பிறப்பித்திருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. மேலும் லண்டனில் கிரேக்க ராஜாங்கத்தின் முக்ய ஸ்தானுதிபதியாக வேலை பார்த்தவரும், சென்ற பதினேழு வருஷங்களாக லண்டனிலிருந்து, கிரேக்க தேசத்துக்கும் இங்கிலாந்

துக்கும் நட்புறுதி யுண்டாகுமாறு பாடுபட்டு வந்த வருமாகிய ஸர் ஜான் ஸ்டவ்ரிட் என்பவர் வெனிஜி லாஸுக்கு ஒரு அனுதாபத் தந்தி யனுப்பியது காரணமாக அந்த ஸ்தானாதிபதியை இப்போதுள்ள கிரேக்க கவர்ன்மெண்டார் உத்யோகத்தைவிட்டு நீக்கியதாயுந் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெனிஜி லாஸ் மந்திரியைப் போலவே ருஷியாவை நேசக் கக்ஷிக்கு வாலாக்கிவிட முயற்சி செய்த கெரன்ஸ்கி என்ற ருஷிய மந்திரியை மித்திரன் நேயர்கள் மறந் திருக்க மாட்டார்களென்று நம்புகிறேன். ஒரு காலத்தில், கெரன்ஸ்கியை ருஷியா தேசத்து நெப் போலியன் என்று சில ஆங்கிலேயப் பத்திராபதிபர் முதலியோர் சொல்லி வந்தனர். இன்று அந்தக் கெரன்ஸ்கியின் பெயரையே உலகத்தார்மறந்துவிடக் கூடிய நிலைமை வந்துவிட்டது. மிஸ்டர் வெனிஜி லாஸ், மிஸ்டர் கெரன்ஸ்கி இவ்விருவரில் ஸ்வதேசா பிமானப் பரிசு யாருக்குக் கொடுக்கலாமென்று யோசித்தால் அந்த யோசனையில் ஒரு முடிவுக்கு வருதல் ஸாத்தியமில்லை யென்றே தோன்றுகிறது.

ஜெர்மனியை ஸர்வதேச ஸங்கத்தில் சேர்த்துக் கொள்ளலாமா?

ஸர்வ தேச ஸங்கத்தில் ஜெர்மனியைச் சேர்த் துக்கொள்ள வேண்டுமென்று, நார்வே, ஸ்வீடன், தென் ஆபிரிகா, ஸ்விட்ஜர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், தென் அமெரிக ராஜ்யங்களிற் பல, இங்கிலாந்து என்ற தேசங்கள் சொல்லுவதாகவும், ஜப்பான், சீனு தேசங்கள் இங்கிலாந்தின் கருத் தையே தழுவி நிற்குமென்று நம்பப்படுவதாகவும், ப்ரான்ஸ், பெல்ஜியம், போர்த்துகல், போலந்து, ஆஸ்த்ரேலியா, நியூஜிலாந்து, கானடா, ஜெக்கோஸ் லாவியா என்னும் அரசுகள் ஜெர்மனியைச் சேர்க்க

லாகாதென்று தடுப்பதாகவும், ஸமீபத்தில் கிடைத்த ராய்ட்டர் தந்தியொன்று சொல்லுகிறது. இதனிடையே, தமக்குள் பரஸ்பரம். "அதிகாரப் பத்திரம்" கொடுத்துக் கொண்டு நேசக் கக்ஷியார் தம் இஷ்டப்படி வெளிநாடுகளை ஆண்டுவர முயல்வதில் அனுஷ்டிக்கப்படும் தற்கால முறைமையை ஜெர்மனி எதிர்ப்பதாகவும், தானிழந்த குடியேற்ற நாடுகளின் எதிர்கால நிலை தற்காலத்தில் அவற்றைக் கைப்பற்றியாள்வோரால் நிர்ணயிக்கப்படத் தக்கதன்றெனவும், ஸர்வதேச ஸங்கத்தாராலேயே முடிவு செய்யப்பட வேண்டுமெனவும் ஜெர்மனி சொல்வதாகவும், வேறொரு தந்தியிலே கூறப்படுகிறது. ஜெர்மனி ஸர்வதேச ஸங்கத்தில் சேரும்படி ஏற்பாடு செய்வார்களோ மாட்டார்களோ அதைக் குறித்து எனக்கதிகக் கவலையில்லை. எப்படியாவது ஆசியா முதலிய வெளிக் கண்டங்களின் நாடுகளை ஐரோப்பியர் தமதிஷ்டப்படி பரஸ்பரம் "அதிகாரப் பத்திரம்" எழுதிக் கொடுத்து அநீதியாக ஆள்வதென்ற ஏற்பாடு சிதறிப் போகவேண்டுமென்பதே என் பிரார்த்தனை. அந்தப் பிரார்த்தனை நிச்சயமாக விரைவில் நிறைவேறுமென்பதற்குப் போதிய அடையாளங்கள் தற்கால ஐரேப்பாவின் நிலைமையிலே காணப்படுகின்றன.

இதில் மிகவும் ஆறுதலுக்குரிய அம்சம் எதுவெனில் பங்கிடற்குரிய ராஜ்யங்களின் தொகைமிகக் குறைவாகவும், அவற்றைப் பங்கிட்டாள விரும்பும் ராஜ்யங்களின் தொகை மிக அதிகமாகவும் ஏற்பட்டிருத்தலேயாம். ஊரிரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். கூத்தாடிகளுக்குள்ளே கக்ஷி பேதங்கள் மிகுதிப்பட்டால் ஊராருக்கு நல்லது.

வெறும் வேடிக்கை

காளிதாஸன்

1 டிசம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 17

குறிப்பு.—இத்தலைப்புடைய கட்டுரையில் ஜாதிபேத விநோதங்கள், திராவிடக் கக்ஷி, ஜப்பான் தேசத்து திருஷ்டாந்தம் என்ற மூன்று பகுதிகள் உள்ளன. அவற்றில் முதற் பகுதி தனிக் கட்டுரையாக பாரதி தூல்கள் மூன்றும் தொகுதியில் சமூகம் என்ற பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆதலால் மற்ற இரு பகுதிகளை மட்டும் இங்கே தருகிறேன்.

திராவிடக் கக்ஷி

நான், ஸமீபகாலம் வரை, திருநெல்வேலி ஜில்லாவின் மேற்கோரத்தில் ஒரு நாகரிகமடைந்த கிராமத்தில் குடியிருந்தேன். பொதுப்படையாக நல்ல நாகரிகமடைந்த அந்த கிராமத்துக்கு ஜாதி பேத விரோதங்கள் ஒரு களங்கமாக ஏற்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவப் பாதிரிகளின் செல்வாக்கு இந்தியாவில் மற்றெந்தப் பகுதியைக் காட்டிலும் அதிகமாகச் சென்னை மாகாணத்திலும், இந்த மாகாணத்தில் மற்றப் பிரதேசங்களைக் காட்டிலும் மிகுதியாகத் திருநெல்வேலி ஜில்லாவிலும் ஏற்பட்டிருக்கிறதென்ற செய்தி நம்மவரில் பெரும்பான்மையோருக்கும் தெரிந்திருக்கக்கூடும். ஆதலால், இங்கிலிஷ் படித்த பிள்ளைகளுக்குள் அந்த ஜில்லாவில் அநேகர் கிறிஸ்தவப் பாதிரிகள் உபதேசத்துக்கு

அதிகமாகச் செவி கொடுத்துவிட நேர்ந்ததென்று நான் தெரிவிப்பது பலருக்கோர் வியப்பாகத் தோன்றுது. ஹிந்து மதத்தை வேரறுத்து, இந்தியாவில் கிறிஸ்து மதத்தை ஊன்றுவதே முக்ய நோக்கமாகக் கொண்டு வேலை செய்துவரும் அப்பாதிரிகள், ஹிந்து மதத்துக்கு பிராமணரே இதுவரை காப்பாளிகளாக இருந்து வருதல் கண்டு, அந்தப் பிராமணரை மற்ற ஜாதியார் பகைக்கும்படி செய்தால் தம் முடைய நோக்கம் நிறைவேறுமென்று யோசிக்கத் தொடங்கினர்கள். இங்ஙனம், மற்ற ஜாதிப் பிள்ளைகளுக்கு ஹிந்து மதத்தில் துவேஷ புத்தியுண்டாக்குவதற்கு அடிப்படையாக பிராமணத் துவேஷம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்ற கருத்துடையோர் சென்னை நகரத்து முக்யமான கல்வி ஸ்தலங்கள் சிலவற்றிலுமிருந்து நெடுங்காலமாக வேலை செய்து வருகிறார்கள். காமம், குரோதம் முதலிய தீய குணங்களை வேதம் அஸுரரென்று சொல்லி, அவற்றைப் பரமாத்மாவின் அருள் வடிவங்களாகிய தேவர்களின் உதவியால், ஆரியர் வெற்றி பெறுதற்குரிய வழிகளைப் பற்றிப் பேசுகிறது; இந்த உண்மையறியாத ஐரோப்பிய ஸம்ஸ்க்ருத வித்வான்கள் சிலர் அஸுரர் என்று முற்காலத்தில் ஒரு வகுப்பு மனிதர் இந்தியாவிலிருந்தார்களென்றும், அவர்களை ஆரியர் ஜயித்து இந்தியாவின் ராஜ்யத்தைப் பிடித்துக் கொண்டு, அதன் பூர்வக் குடிகளைத் தாழ்த்திவிட்டன ரென்றும் அபாண்டமான கதை கட்டிவிட்டார்கள். இதை மேற்கூறிய கிறிஸ்தவப் பாதிரிகள் மிகவும் ஆவலுடன் மனனம் செய்து வைத்துக் கொண்டு தம்மிடம் இங்கிலிஷ் படிப்புக்காக வரும் பிள்ளைகளில் பிராமணரைத் தவிர மற்ற வகுப்பினர்-தென் இந்தியாவில் மாத்திரம்-அஸுர வம்சத்தாரென்றும், ஆதலால் பிராமணர் இவர்களுக்குப் போன யுகத்தில் (வேத மெழுதிய காலத்தில்!) விரோதிகளாக இருந்தன

ரென்றும் ஆதலால் இக்காலத்தில் அந்தப் பிள்ளைகள் அஸுரக் கொடியை மீளவும் தூக்கிப் பிராமணரைப் பகைக்கவேண்டுமென்றும் போதிக்கத் தொடங்கினார்கள். இந்தியாவிலுள்ள ஜாதி பேதங்களைத் தீர்த்துவிட்டு இங்கு ஸமத்வ தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அந்தப் பாதிரிகள் இந்த வேலை செய்யவில்லை. ஹிந்து மதத்துக்குக் கேடு சூழவேண்டுமென்ற நோக்கத்துடன் செய்தார்கள். ஆனால், இதில் மற்றொரு விநோதமுண்டு. அஃதியா தென்றல் இந்தியாவில் பிராமணர்களிலேயே முக்காற் பங்குக்குமேல் பழைய சுத்தமான ஆர்யர்களல்லரென்றும் விசேஷமாகத் தென் இந்தியாவில் இவர்கள் பெரும்பகுதி அஸுர வம்சத்தாருடன் கலந்துபோனவர்களின் சந்ததியாரென்றும், அப்பாதிரிகளும் அவர்களுக்கு இந்த அம்சத்தில் குருக்களான ஜரோப்பிய பண்டிதரும் தெரிவிக்கிறார்கள். எனவே பிராமணராகிய நாங்கள் இப்போது உங்களைப்போலே அஸுர ராக்ஷஸராய்விட்ட பிறகும் நீங்கள் எங்களைப் பகைக்கவேண்டுமென்று அந்தப் பாதிரிகள் போதிப்பது முன்னுக்குப் பின் முரண்படுகிறதன்றோ? மேலும் இந்த "திராவிடர்" என்போர் அஸுர, ராக்ஷஸர்களின் சந்ததியாரென்பதும் அவர்களிடமிருந்து பிராமணர் ராஜ்யம் பிடித்த கதையும் யதார்த்தமென்று வேடிக்கைக்காக ஒரு க்ஷணம் பாவனை செய்து கொள்வோம். அப்படிக்கிருந்தாலும் அந்த ஸம்பவத்தில் பிராமணரின் மந்திரத்தால் அஸுரர்களை ஜயித்ததாகத் தெரிகிறதேயன்றி மாக்ஸ் முல்லரின் கருத்துப்படிக்கும் பிராமணர் அரசாண்டதாகத் தெரியவில்லை. பிராமணர்களையடுத்து, க்ஷத்திரியர்களே ராஜ்யமாண்டனரென்று தெரிவிக்கப்படுகிறது. தவிரவும் அந்த ஸம்பவம் நடந்து இப்போது புராணங்களின் கணக்குப்படி பார்த்தால் பல லக்ஷங்களோ

கோடிகளோ வருஷங்கள் கடந்து போயின. ஐரோப்பியப் பண்டிதரின் கணக்குப்படி பார்த்தாலும் எண்ணூயிர வருஷங்களுக்குக் குறைவில்லை. இப்படியிருக்க அந்தச் சண்டையை மறுபடி மூட்டுவது என்ன பயனைக் கருதி? யதார்த்தமாகவே, இந்தியா தேச சரித்திரத்தில் ஹிந்துக்களுக்குள்ளேயே தமிழருக்கும் தெலுங்கருக்கும், தெலுங்கருக்கும் ஒட்டருக்கும், ஒட்டருக்கும் வங்காளிகளுக்கும், வங்காளிகளுக்கும் ஹிந்துஸ்தானிகளுக்கும், பஞ்சாபிகளுக்கும், பஞ்சாபிகளுடன் ராஜபுத்திரருக்கும், இவர்களுடன் மஹாராஷ்ட்ரருக்கும், மகாராஷ்ட்ரருடன் ஏறக்குறைய மற்றெல்லாப் பிரிவினருக்கும், இவற்றைத் தவிர. ஹிந்துக்களுக்கும் மஹமதியருக்கும் இடையே கணக்கற்ற யுத்தங்களும், அரசு புரிந்தலும் அடக்கியாளுதலும் நடந்து வந்திருக்கின்றன. இதுபோல், ஒரு நாட்டின் உட்பகுதிகளுக்குள் யுத்தங்கள் இந்தியாவில் மாத்திரமின்றி, ஆஸ்திரேலியா முதல் இங்கிலாந்துவரையுள்ள ஸகல தேசங்களிலும் ஓயாமல் நடந்து வந்திருப்பதாகச் சரித்திரம் தெரிவிக்கிறது. இங்ஙனம் நம் நாட்டில், சமீபகால சரித்திரத்திலேயே நிகழ்ந்த எண்ணற்ற போராட்டங்களை மறந்து இன்று தெலுங்கர், தமிழர் முதலிய ஹிந்துக்களும் மஹமதியரும் ஸஹோதரரைப்போல் வாழ வேண்டுமென்ற உணர்ச்சி பரவியிருக்க, எண்ணூயிர வருஷங்களுக்கு முன் "மந்திரங்களாலும், யாகங்களாலும், அஸுர, ராக்ஷஸர்களை ஜயித்த பிராமணர்களை மாத்திரம் நம்மவர் எக்காலத்திலும் க்ஷமிக்காமல் உலக முடிவு வரை விரோதம் செலுத்திவர வேண்டுமென்று சொல்லுதல் பெரும் பேதைமையன்றோ? தவிரவும், இந்த நவீன "அல்லாதார்" தாங்கள் அஸுர வம்சத்தாரென்று செல்வதே முற்றிலும் தவறென்பதை ஏற்கெனவே நன்கு நிரூபணம்

செய்திருக்கிறேன். ஜாதி பேதங்களின் கொடுமைகளை உடனே அழித்துவிட வேண்டுமென்பதை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன்.

ஜப்பான் தேசத்து திருஷ்டாந்தம்

ஜப்பானில் தீண்டாத வகுப்பினருட்படப் பலவித ஜாதி பேதங்களிருந்தன. எனினும் காலஞ் சென்ற மிகாடோ சக்ரவர்த்தி நவீன உலகத்தின் அவஸரங்களைக் கருதி அங்கு ராஜாங்க விஷயங்களில் ஜாதி பேதங்களைக் கருதக்கூடாதென்று சட்டஞ் செய்தார். எத்தனையோ நூற்றாண்டுகளாக இயல் பெற்று வந்த பேதக் கொடுமைகள் அங்கு ராஜரீகத் துறையில் மட்டுமேயன்றி, ஸமூஹ வாழ்விலும் புலப்படாதபடி அதிசீக்கிரத்தில் மறைந்து போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவுக்கும் இதுதான் வழி. நாம் ஏற்கெனவே தெரிவித்தபடி ஸ்வராஜ்யம் கிடைத்தால் இந்த ஜாதி பேதத் தொல்லைகளையெல்லாம் சட்டம் போட்டு நீக்கி விடலாம். இப்போதுள்ள அதிகாரிகள் இவ்வித மான சட்டம் ஏற்படுத்துவார்களென்று எதிர் பார்ப்பதே தவறு. ஆதலால் இந்தியாவின் ஸமூஹ வாழ்க்கையில் ஸமத்வமேற்படுத்த விரும்புவோர் முதலாவது ராஜரீகத் துறையில் ஸமத்வமேற்படுத்த முயலும் "காங்ரஸ்" கக்ஷியாருடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டும் என்று கருதுகிறேன்.

விநோத விஷயங்கள்

காளிதாஸன்

2 டிசம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 18

ஸர். ஹாமர் க்ரீன்வுட்டின் உபதேசம்

காரியமாக வேண்டுமானால் குதிரையின் காலையும் பிடிக்கலாமென்ற ராஜ்ய நீதியை ஐரிஷ் மந்திரியாகிய ஸர். ஹாமர் க்ரீன்வுட் நன்கு படித்து வைத்திருக்கிறார். சில தினங்களின் முன்பு ப்ரிடிஷ் பார்லிமெண்ட் ஸபையில் இவர் பேசியபோது ஐர்லாந்திலுள்ள ரோமன் கத்தோலிக்க குருக்களுக்கு ஒரு விஞ்ஞாபனம் செய்திருக்கிறார். எதைப்பற்றியெனில், முன்பு மஹாயுத்த காலத்திலே ஐர்லாந்தில் கட்டாய ராணுவ ஸேவகம் ஏற்படுத்துவதை ஐர்லாந்தின் கத்தோலிக்க குருக்கள் எத்தனை தீவிரமாகவும் உக்ரமாகவும் எதிர்த்தார்களோ, அத்தனை உக்ரமாகவும், தீவிரமாகவும் ஐர்லாந்தில் இப்போது நடக்கும் ஸின்பீன் கொலைகளை அவர்கள் எதிர்த்து வேலை செய்ய வேண்டுமென்றும், ஜனங்கள் தங்களிடமுள்ள துப்பாக்கி முதலிய ஆயுதங்களை குருக்களின் வசம் ஒப்புவித்துவிட வேண்டுமென ஆலயங்களில் செய்யப்படும் உபதேசங்களிடையே அவர்கள் ஜனங்களைத் தூண்டுதலே நல்ல உபாயமென்றும் மந்திரி ஹாமர் க்ரீன்வுட் தெரிவிக்கிறார். ஆமாம்!

வாஸ்தவந்தான்! ஆனால், முன்பு, கட்டாய ராணுவ சேவக முறைமையை ஐரிஷ் கத்தோலிக்க குருக்கள் எதிர்த்த காலத்தில் அவர்களுக்கு ஸர். ஹாமர் க்ரீன்வுட் எவ்வளவு தூரம் ஆமோதிப்பும் உதவியும் செய்தாரென்ற விஷயத்தை நாம் சற்றே தெரிந்து கொள்ள விரும்புகிறோம். மேலும், இங்ஙனம் ஜனங் களிடமிருந்து பறித்துக்கொண்ட ஆயுதங்களை அந்த குருக்கள் அப்பால் கடலில் எறிந்துவிட வேண்டுமா? அல்லது ஆலயங்களிலேயே வைத்துப் பூஜை செய்ய வேண்டுமா, அல்லது அவற்றை ஆங்கிலேயப் போலிஸாரிடமும் சிப்பாய்களிடமும் ஒப்புவித்து ஐரிஷ் ஜனங்களையே வேட்டையாடும்படி கேட்டுக் கொள்ள வேண்டுமா என்ற விஷயத்தில் மந்திரி க்ரீன்வுட் தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக் காமல் இருந்தது பற்றி வருத்தப்படுகிறேன்.

2. மிகவும் நன்றி தெரிவிக்கிறோம்!

சென்ற நவம்பர் 25-ந்தேதி யன்று, மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஐர்லாந்தில் ராணுவச் சட்ட மேற் படுத்துதல் இப்போது விரும்பத்தக்கதன் றென்ப தாகவே மந்திரி ஸபையார் முடிவாகத் தீர்மானம் செய்து விட்டன ரென்றும், அது விரும்பத்தக்க தாகவும் பயனளிக்கத் தக்கதாகவும் தோன்றிய வுடனே கவர்ன்மெண்டார் அதைப் பிரயோகம் செய்து விடுவார்களென்றும் அறிவித்தார். இந்த தயவின் பொருட்டு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் ப்ரிடிஷ் மந்திரி ஸபையாருக்கும் ஐர்லாந்து வாஸி களும், உலகத்தாரும், மிகமிக நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்களென்பதில் ஸந்தேஹ மில்லை. ஆனால் தாமரைப் பூவைச் சித்தரிப்பதும் தங்கத்திலே தங்க முலாம் பூசுவதும் மிகையாகு மென்று ஆங்கிலேயே மஹா கவியாகிய ஷேக்ஸ்பியர்

சொல்லியது போல் இப்போது ஐர்லாந்தில் நடை பெறும் ஆங்கில ஆட்சி முறையில் ராணுவச் சட்டத் தைக் கொண்டு சேர்த்தல் மிகையாகு மென்று தோன்றுகிறது. ராணுவச் சட்டத்தின் ஆதிக்கத் தில் ஐரிஷ் ஜனங்களின் ஸ்வதந்த்ரங்களை இப்போ தைக் காட்டிலும் அதிகமாகக் கட்டுப்படுத்த முடியு மென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நினைக்கிறாரா?

3. ப்ரான்ஸ் தேசத்தின் குட்டிக்கானம்

ப்ரான்ஸ் தேசத்து வியாபாரிகளும் தொழிற் சாலைத் தலைவர்களும், ருஷ்யாவுடன் வியாபார ஸம்பந்தங்களேற் படுத்திக் கொள்ள அனுமதி கொடுத்துவிட வேண்டுமென்று ப்ரெஞ்ச் கவர்ன் மெண்டார் முடிவான தீர்மானஞ் செய்துவிட்டதாக ராய்ட்டர் தந்தி யொன்று தெரிவிக்கிறது. எனவே இங்கிலாந்தும் போல்ஷ்விக்கர்களுடன் வியாபாரம் பண்ணுவதாகச் செய்து கொண்ட தீர்மானம் உறுதியாய் விடுமென்பதில் ஸந்தேஹமில்லை. இங் ஙனம் ருஷியாவுடன் ஆங்கிலேயர் வியாபாரஞ் செய்யலாகா தென்று வற்புறுத்துவதில் லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் முதலிய ஆங்கிலத் தலைவர் பலர் மிதமிஞ்சிய காகிதமும், மையும், நேரமும் செல விட்டிருக்கிறார்கள். காலக் கிரமத்தில் நடந்து தீர வேண்டிய காரியமொன்றை மேற்படி "டைம்ஸ்" பத்திராதிபர் முதலாயினோர் வீணுகக் கடத்திக் கொண்டு போக முயற்சி புரிந்தனர். இன்றைக் கில்லாவிட்டால் நாளை அல்லது மறுநாள், அல்லது அதற்கடுத்த நாள், ருஷியாவுடன் வியாபாரந் தொடங்குதல் இன்றியமையாததாய் விடும். ருஷியா சிறிய தேசமா? ஐரோப்பாவில் முக்காற் பங்கு ருஷியா. அந்த தேசத்தை எத்தனை காலம் ஜாதி ப்ரஷ்டம் பண்ணி வைக்க முடியும்? அவர்களுடைய

ராஜாங்கக் கொள்கைகள் இங்கிலாந்தில் பரவுவதற்கு வியாபார சம்பந்தங்கள் ஸாதனமாகக் கூடுமென்று இங்கிலாந்திலுள்ள பழங் கக்ஷியார் அஞ்சுகிறார்கள். என்ன செய்பலாம்? லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபருக்கு ஸம்மத மில்லாத கொள்கைகள் இங்கிலாந்தில் புகாதபடி தடுப்பதற்காக: ப்ரிடிஷ் ஜனங்கள் ஒரு மகத்தான தேசத்துடன் வியாபாரம் செய்வதால் நேரும் ஸௌகரியங்களை எத்தனை காலம் நிறுத்தி வைக்க உடம்படுவார்கள்? ஆங்கில கவர்ன்மென்டார் ருஷியர்வுடன் வியாபார சம்பந்தங்கள் தொடங்கும்படி ஆங்கில ஜனங்களுக்கு அனுமதி கொடுத்தவுடனே நம்முடைய இந்திய கவர்ன்மெண்டாரும் இங்குள்ள வியாபாரிகளுக்கும் அதே அனுமதி கொடுப்பார்களென்று நம்புகிறேன். அதன் மூலமாக ருஷியக் கொள்கைகள் இந்தியாவிலும் பரவிவிடக் கூடுமென்று அஞ்சுவோர் யாரேனுமிருப்பாராயின், அந்த அச்சம் அநாவசிய மென்றும் ஆதலால் அதனை விட்டொழித்து விடவேண்டு மென்றும் அவர்களுக்கு நான் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். ருஷியக் கொள்கைகள் ருஷிய வியாபார ஸம்பந்தங்களால் ஒருவேளை இங்கு பரவுமிடத்தே அவற்றை எதிர்த்தடித்து வேலை செய்ய நம்முடைய இந்திய கவர்ன்மெண்டாரிடமுள்ள பப்ளிஸிடி பீரோ என்ற விளம்பர ஸபையாரால் முடியாதா? நாமேன் வீணுகப் பயப்பட வேண்டும்?

4. "விளம்பரசபை"யின் தமிழ்

ராஜாங்கத்தாரால் நியமிக்கப் பட்டிருக்கும் விளம்பர ஸபையார் பத்திரிகை படிப்போருக்காகவும், பொது ஜனங்களுக்காகவும், அடிக்கடி துண்டுப் பத்திரிகைகள் முதலியன ப்ரசுரம் செய்து

வருதல் நேசர்களுக்குத் தெரிந்த செய்தியேயாம். ஆனல் இந்த ஸபையாரின் ப்ரசுரங்களில் உள்ள இலக்கணத் தவறுகளுக்கும், பிரயோகத் தவறு களுக்கும் கணக்கேயில்லை. தமிழ் பாஷையில் வெளி வரும் ப்ரசுரங்களைப் பற்றி மாத்திரம் நான் இங்கு பேசுகிறேன். பெரும்பாலும், மற்ற தேச பாஷை களிலும் இதே மாதிரியாகத்தான் இருக்கக் கூடு மென்று ஸம்சயிக்கிறேன்.

பொதுவாக ராஜாங்கத்தாரின் கெஜட்டுகள், நியாய ஸ்தல மொழி பெயர்ப்புகள் முதலிய முக்ய மான தமிழ் ப்ரசுரங்களில் வழுக்கள் நிறைந்த தாய், ஸாதரணத் தமிழருக்கர்த்தமாக வழியில்லாத தமிழ் பாஷையே வழங்கி வருதல் ப்ரஸித்தம். எனினும் ஜனங்களுக்கர்த்தந் தெரியாமல் "கெஜட்" வர்த்த மானங்கள் ப்ரசுரிப்பதைக் காட்டிலும், கக்ஷிப் பிரதி கக்ஷிகளும், தர்க்கங்களும் நடத்தி ஜனங்களுக்கு அபிப்பிராய மாறுதலுண்டாகும்படி சர்க்கார் வக்கீல் வேலை செய்ய வந்த இடத்தில் ஜனங்களுக்கு விளங்காத, இலக்கணத் தவறுகள் நிறைந்த பாஷையை வழங்குதல், நூறு மடங்கு அதிகப் பரிஹாஸத்துக் கிடமாகுமென்பதை ராஜாங்கத் தாருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

5. "ஸின்பீன்" வேட்டை

ஐர்லாந்தில் இப்போது குடியரசு முறையைக் கைக்கொண்டிருக்கும் "ஸின்பீன்" என்ற ஸ்வா தீனக் கக்ஷியாரை ஐரிஷ் அதிகாரிகள் வெகு கோலா ஹலமாக வேட்டையாடி வருகிறார்கள். வழக்கம் போலவே, கொலை செய்த குற்றவாளிகள் ஒரு புறமிருக்க, அந்தக் கொலைகளைத் தம் உபதேச முதலியவற்றால் தூண்டியதாகக் கருதப்படும் ஜனத் தலைவர்களைப் பிடித்தடைப்பது மிகவும் எளிதாத

லால், ஐரிஷ் அதிகாரிகள் இத்தலைவர்களை மிகவும் சுறுசுறுப்பாகக் கைதி செய்யத் தொடங்கிவிட்டனர். ஐரிஷ் குடியரசுத் தலைவரான மிஸ்டர் டிவலேரா அமெரிக்காவிலிருப்பதால், அவருக்குப் பிரதியாக ஐரிஷ் குடியரசின் ஜனாதிபதி ஸ்தானத்தை வகித்து வரும் மிஸ்டர் ஆர்தர் க்ரிபித் என்பவர் சென்ற வெள்ளிக்கிழமை (26-நவம்பர்) கைதி செய்யப் பட்டார். இவர் ப்ரிட்டிஷ் காமன்ஸ் ஸபை மெம்பர் களில் ஒருவர். மறுநாள், நவம்பர் 27-ஆந் தேதி யன்றைக்கும், அதற்கடுத்த 28-ஆந் தேதியிலும் மிஸ்டர் ஆர்தர் க்ரிபித் ஐரிஷ் நிலைமையைக் குறித்து மாஞ்செஸ்டர் நகரத்தில் உபந்யாஸங்கள் செய்யப் போவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங் ஙனம் அவரைப் பேசவிட்டால் அதினின்றும் ஜனங் களுக்குள் ராஜாங்கத் துவேஷம் பரவக்கூடும் என்று சொல்லி உள்நாட்டு மந்திரி அந்த உபந்யாஸங்களைத் தடுத்துவிட்டார். அதனையடுத்து மிஸ்டர் க்ரிபித் தைச் சிறைப்படுத்தவும் செய்திருக்கிறார்கள்..இவரை யன்றி வேறிரண்டு பார்லிமெண்ட் மெம்பர்களும், ஒரு உபாத்யாயரும் உட்பட்ட மற்றுஞ் சில ஸின்பீன் தலைவர்களையும் பிடித்து வைத்திருக்கிறார்கள். மிஸ்டர் ஆர்தர் க்ரிபித்தை ஜனங்களுக்குத் தெரி யாமல் எங்கேயோ ரஹஸ்யமாகக் கொண்டுபோய் வைத்திருப்பதாகத் தெரிகிறது. இங்ஙனம் மிஸ்டர் க்ரிபித்தை இங்கிலாந்தில் பிடித்ததற்கு முகாந்தரங் கூறுமிடத்தே, டப்ளின் நகரத்தில் அவருடைய வீட்டைப் போலீஸார் சோதனையிட்டதாகவும் அப் போது மேலும் ஆராய்ச்சி நடத்துவதற்கிடமான சில முக்யக் காயிதங்கள் போலீஸார் வசம் கிடைத்த தாகவும் அந்த ஆராய்ச்சி முடிவுவரை அவரை அடைத்து வைத்திருக்கப் போவதாகவும், மந்திரி ஹாமர் க்ரீன்வுட் சொன்னார். ஆனால், அதே காலத்தில் "ஸின்பீன்" கக்ஷியார் தாங்கள் இங்கி

லாந்துடன் யுத்தம் நடத்திவருகிறபடியால் தாங்கள் பிடிபட்ட இடத்தே தங்களை யுத்தக் கைதிகளாக நடத்த வேண்டுமென்று ஐரிஷ் தலைவர் சொல்வதை ஒருவாறு கவர்ன்மெண்டார் அங்கீகாரம் செய்து கொண்டே இவ்வித வேலை செய்து வருவதாகவும், அக்கொள்கைக் கிணங்கவே, இப்போது பிடிபட்டிருக்கும் ஐரிஷ் தலைவர்களை பந்தோபஸ்தில் வைத்து யுத்தக் கைதிகளைப்ப நடத்த உத்தேசங் கொண்டிருப்பதாகவும், ஒரு தந்தி மூலமாக அறிக்கையிடப் படுகிறது. இங்ஙனம், ஐர்லாந்தில் நடக்கும் போராட்டத்தை ஆங்கிலோ-ஜெர்மனிய யுத்தம் போல் ஓர் ஆங்கிலோ-ஐரிஷ் யுத்தமாக பாவித்து நடத்த வேண்டுமென்பது ப்ரிட்டிஷ் மந்திரிகளின் உண்மையான நோக்கமாயின், அந்த நோக்கத்தை வெளி யுலகத்தார் அதிகமாகக் கொண்டாட மாட்டார்களென்று தோன்றுகிறது.

ஸம பலமுடைய தேசங்களுக்குள்ளே யுத்தம் ஸாத்யப்படும். ஏற்கெனவே பல நூற்றாண்டுகளாக இங்கிலாந்தின் கீழேயிருப்பதும், பல நூற்றாண்டு களாக விடுதலைக்குக் கிளர்ச்சி நடத்தி வருவதும், இப்போது குடியரசு வேண்டுவதுமாகிய சார்பு நாடொன்றை அடக்கும் தொழிலுக்கு "யுத்தம்" என்ற பட்டம், ஸின்பீனர்களாலே சூட்டப் பட்டாலும், பொறுப்புள்ள மந்திரிகள் அப்பட்டத்தை அங்கீகரித்தல் பெருந் தவறென்று நினைக்கிறேன். ஆனால் இங்கிலாந்தில் எக்காலமுமில்லாத படி ஸகல—ஸகஷி—மந்திரி சபை சேர்த்து மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நடத்தி வரும் வேடிக்கையான ஆட்சி முறையில் இப்படி விநோதங்கள் ஏற்படுவது எனக்கு ஆச்சர்யமாகத் தோன்றவில்லை. கண்ணுக் குத் தெரியாமல் மறைந்திருந்து போலீஸாரைச் சுட்டு விட்டோடும் நூறே சில்லரை ஐரிஷ் ஸின்பீன

ருக்கு விரோதமாக ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யம் யுத்தம் செய்யப் புறப்பட்டிருக்கிறதென்றால், இது கேட் போருக்கு நகை விளைவிப்பதொரு செய்கையன்றோ ?

6. காலத்தின் மாறுதல்

சென்ற ஐந்து மாஸங்களுக்குள்ளே ஜெர்மனியி லிருந்து 6 லக்ஷம் கடிகாரங்களும், எழுபத்தீராயிரம் ஸங்கீத வாத்யங்களும், மாஸந்தோறும் ஆயிரம் மோட்டார் வண்டிகளும், பதினாயிரம் காலன் ஜெர்மன் சாராயங்களும் இங்கிலாந்துக்கு இறக்கு மதியாயிருப்பதாகவும், இன்னும் இவ்வருஷத்துக் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னே சுமார் பத்து லக்ஷம் பவுன் கிரயமுள்ள விளையாட்டு ஸாமான்கள் இறக்குமதியாகப் போவதாகவும் ராய்ட்டர் தந்தி தெரிவிக்கிறது. ஜெர்மனி இன்னும் உடன்படிக் கையின் நிபந்தனைகளை முற்றிலும் நிறைவேற்றாத படியால் அந்நாட்டை இப்போது ஸர்வதேச ஸங் கத்தில் சேர்க்கப் போவதில்லை யென்று மற்றொரு தந்தி சொல்லுகிறது. அதற்குள் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் இத்தனை நெருங்கிய வியாபார ஸம்பந்தங்கள் ஏற்பட்டுவிட்டன. உலக முடிவுவரை அல்லது யுத்தம் முடிந்து நெடுங்காலம்வரை மானிட ராக்ஷஸராகிய ஜெர்மனியருடன் எவ்விதமான உறவுகளும் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாதென்றும், அவர்களிடம் ஸாதாரண மனித பாவனை செலுத் தாமல் ஸகல விதங்களிலும் அவர்களை பஹிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் மஹாயுத்தம் நடக்கும் போதெல்லாம் கூக்குரலிட்டுக் கொண்டிருந்த ஆங்கிலப் பத்திராதிபப் புலிகள் முதலியோர் இப் போது இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட் டிருக்கும் நெருங்கிய வியாபார ஸம்பந்தங்கள் முதலியனவற்றைப்பற்றி என்ன நினைக்கிறார்களென் றறிய இச்சைப் படுகிறேன்.

உலக விநோதங்கள்

காளிதாஸன்

3 டிசம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 19

1. லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையும் ஒரு கிறிஸ்தவ குருவும்

"நற்றுமரைக் கயத்தில் நல்லன்னம்—சேர்ந்தாற் போல்"!—இங்கிலாந்தில், ஒரு கிறிஸ்தவ குரு தம் ஆலயத்தில் சிஷ்ய கணங்களுக்கு மதோபதேசம் செய்து வருமிடையே, லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் தேச பக்தியையும், உயர்ந்த லக்ஷியங்களையும், ஞான மஹிமை வாய்ந்த உபதேசங்களையும், அச்சமற்ற பெருந் தன்மையையும் மிக வியந்து ஸ்தோத்ரம் பண்ணியதாக அந்தப் பத்திரிகையிலேயே ஒரு செய்தி ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

தன் உற்பத்தி முதலாகவே, உலகத்து விடுதலைகளையும் சீர்திருத்தங்களையும் எதிர்த்துக்கொண்டே வருவதும், அதுபற்றி அநேக மனுஷ்யாபிமானிகளால் நிந்திக்கப்பட்டிருப்பதுமாகிய அப்பத்திரிகையை, உலகத்தாரெல்லாரும் பரஸ்பரமாகிய ஸகோதர உணர்ச்சியும், ஸமத்வ ஞானமும், மாறுத அன்பு முடையோராக ஒழுக வேண்டும் என்று போதித்த ஏசுகிறிஸ்து நாதரின் ஸமய குரு ஒருவர்

பூஷித்துப் பேசுதல், ஐரோப்பாவில் பலருக்கு ஸாதாரணமாகத் தோன்றக் கூடுமெனினும், வெளி யுலகத்தாருக்குப் பெரு வியப்பாகத் தோன்றுமென் பதில் ஐயமில்லை.

2. மிஸடர் ஆர். வில்லியம்ஸ் பார்லிமெண்ட் அபேட்சகர்

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் மேலே குறித்த மகுடத்துடன் ப்ரசுரிக்கப்பட்டிருக்கும் குறிப்பொன்றிலே, இங்கிலாந்தில் தொழிற் கக்ஷியில் ஏற்பட்டிருக்கும் புதிய குழப்பங்களுக்கு ஒரு திருஷ் டாந்தம் காட்டப்பட்டிருக்கிறது. இந்த மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவர் "பூட்டில்" என்னும் பிரதேசத் திற்குத் தொழிற் கக்ஷியைச் சேர்ந்த பார்லிமெண்ட் அபேக்ஷகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் ஆங் கிலத் தொழிற் கக்ஷியின் நிர்வாஹ ஸமிதியில் ஓரங் கத்தினர். ஆங்கிலத் தொழிற் கக்ஷியோ, "கம்யூ னிஸம்" என்றும் "போல்ஷவிஸம்" என்றும் பல வாறுகக் கூறப்படும் நவீன ருஷியக் குடியரசின் "ஸமூஹ உடைமை"க் கொள்கையைக் கண்டனஞ் செய்து மறுத்திருக்கிறது. இந்த ஆர். வில்லியம்ஸ் என்பவரோ மேற்படி ஸமூஹ உடைமைக் (கம்யூ னிஸ்ட்) கக்ஷியைச் சேர்ந்தவர். சென்ற ஆகஸ்ட் மாஸத்தில் இவர் தேசீயக் "கம்யூனிஸ்ட்" கக்ஷியின் நிர்வாக ஸபைக்கு ஓர் அபேக்ஷகராக வெளிப்பட் டார். பார்லிமெண்ட் ஸபையைக் கருவியாக வைத்துக்கொண்டு இப்போதுள்ள ஸமூஹ நிலையைக் கவிழ்த்துவிட வேண்டுமென்ற பக்ஷத்தைச் சேர்ந் தவர். "பார்லிமெண்ட் சபையில் மந்திரி ஸபையைச் சேர்ந்த ஒருவர் பேச எழுந்த போதெல்லாம் அவரை நோக்கி 'நீர் பொய்யன்' என்று சொல்லக் கூடிய "கம்யூனிஸ்ட்" மெம்பரொருவர் அந்த ஸபையிலி ருப்பது அந்தக் கக்ஷிக்கு ஒருவித பலமேயாகும் என்று

இவர் பஹிரங்கமாகச் சொல்லுகிறாராம். இங்கிலாந்திலுள்ள தேசீய ஸமூஹ உடைமைக் கக்ஷி ருஷியாவில் மாஸ்கோவிலுள்ள ஸர்வதேச சங்கத்தின் ஒரு கிளையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதாம். அந்த ஸங்கத்தினின்றும் "பொது ஜனத் தலைமை" "பலமான உள்நாட்டுச் சண்டைக்குத் தயார் செய்தல்" என்ற கொள்கைகளை ஸ்வீகரித்துக் கொண்டிருந்ததாம்.

இப்படிப்பட்ட போல்ஷவிக் கொள்கைகளை ஆதரிக்கும் மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவரை ஆங்கிலத் தொழிற் கக்ஷியார் தமது நிர்வாக ஸபையில் ஒரு மெம்பராக வைத்திருப்பது பற்றி லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் வியப்புத் தெரிவிக்கிறார். அதே காலத்தில் "கம்யூனிஸ்ட்" கக்ஷி தன்னை ஒரு கிளையாகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று ஆங்கிலத் தொழிற் கக்ஷிக்கு விடுத்ததொரு விண்ணப்பத்தைத் தொழிற் கக்ஷி நிராகரித்து விட்ட செய்தியும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இங்ஙனம் "கம்யூனிஸ்ட்" கக்ஷியை நிராகரிக்கும் தொழிற் கக்ஷியார் மேற்கூறிய மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவரையும் உதறித் தள்ளி விடாமல் தமது சார்பில் அவரை ஒரு பாலிமெண்ட் அபேக்ஷகராக நியமித்திருப்பது பொருந்தாத செய்கை யென்று அந்நிருபர் குறிப்பாலுணர்த்துகிறார்.

3. பக்ஷிகளைப் போல் பாடும் தேரை

லண்டன் நகரத்திலுள்ள ஐந்து சாலைக்கு மிஸஸ் கய்லிவிங்ஸ்டன் என்ற ஸ்த்ரீ அர்ஜென்டைன் ராஜ்யத்துச் சிறு தேரையொன்று இனம் கொடுத்திருக்கிறாள். அந்தச் சிறு ஐந்து ஒரு அங்குல நீளந்தானிருக்கிறது. அதன் மேற்புறம் மஞ்சள் புள்ளிகளுடன் கருநிறமுடையதாக இருக்கிறது. கீழ்ப்

பக்கத்திலும் அதன் வலை போன்ற பாதங்களினடியிலும் இரத்தச் செம்மை கொண்ட புள்ளிகள் தோன்றுகின்றன. இதைத் திடுக்கிடச் செய்யும் போதும், கோபமூட்டிய இடத்தும் அப்படியே மல்லாந்து படுத்துக்கொண்டு யோகம் ஸாதிக்கிறது. அப்போது செத்ததாக நடிக்கிறது. அல்லது "எச் சரிக்கை" வர்ணங்களைப் புலப்படுத்துகிறது. இதில் ஆண்பால் பெண்பால் இரண்டும் குட்டி வளர்க்கும் பருவங்களில் உரத்த குரலில் பாடுகின்றன. அந்தப் பாட்டின் ஒலி ப்ரிட்டிஷ் க்ரீன் ஃபிஞ்ச் பக்ஷியின் குரலைப் போலவேயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

4. ஸய்யிது துறைமுகத்தில் (போர்ட் ஸயிது) போல்ஷவிக் உபத்ரவங்கள்

சென்ற அக்டோபர் மாஸ முடிவில் ஸூயேஸ் கால்வாய்க்கு வட புறத்தேயுள்ள ஸய்யிது துறை முகத்தில், பலமான தொழிற் கலகங்கள் நேரிட்டதாக லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. ஸூயேஸ் வாய்க்கால் வேலையாட்களைத் தொழில் நிறுத்தும்படி கலகக்காரர் தூண்டியும் அது பலிக்கவில்லை யென்று தெரிகிறது. இவ்வாறு பலிக்காமற் போனதன் காரணம் அந்த வேலையாட்களின் சம்பளங்களில் கம்பெனியார் தக்கபடி மிகுதி செய்து கொடுத்திருப்பதேயாம். ஆனால் வேறு சில தொழிலாளிகள் (அக்டோபர் முடிவில்) இன்னும் தொழில் நிறுத்திய நிலைமையிலேதான் இருந்தனராம். எகிப்தின் பட்டாளமொன்று ஸய்யிது துறைமுகத்துக்கு வந்திருக்கிறது. கலகக்காரர் சிறைச் சாலையை உடைக்க முயன்றார்களாம். இங்ஙனம் அவ்விடத்தில் குழப்பமேற்பட்டிருப்

பதற்கு போல்ஷவிக்கரின் சேஷ்டைகளே முக்யக் காரணமெனினும், அந்தத் துறைமுகத்தில் வழங்கப் படும் "ப்ரான்" (Franc) என்ற ப்ரெஞ்ச் நாணயத் திற்கு விலை மதிப்புக் குறைவு நேர்ந்திருத்தலும் ஒரு வாறு காரணமாகுமென்று, லண்டன் "டைம்ஸ்" சொல்லுகிறது. இந்த நாணயத்திலேயே அங்குள்ள வியாபார ஸ்தலத் தலைவர் தங்கள் வேலையாட்களுக் கெல்லாம் சம்பளம் கொடுக்கும் வழக்கம் இருப்ப தாகத் தெரிகிறது.

5. ஸ்வராஜ்யம் வேண்டும்

தேசியக் கக்ஷித் தலைவராக இருந்து அரிய வேலை செய்த ஒரு வடநாட்டு வக்கீல், பின்னிட்டுப் பல வேறு காரணங்களைக் கருதி ஸர்க்கார் கக்ஷியுடன் பழகத் தொடங்கித் தம்முடைய ஸ்வதேசிய முயற்சி களைச் சிறிது சிறிதாகத் தளரவிட்டு வந்தார்.

அன்பு மேலிட்டு, உயர்தர ப்ரிடிஷ் அதிகாரி யொருவர் அத்தலைவரின் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தார். அத் தலைவருக்கு ஏறக்குறைய எட்டு வயதுள்ள பெண் குழந்தை யொன்றிருந்தது. அந்தக் குழந்தை தன் வீட்டில் தான் பிறந்து அறிவு தெரிந்த பிராய முதலாகவே ஸ்வராஜ்யத்தைப் பற்றி ஓயாமல் கேட்டுப் பழகியிருந்தபடியால் அதற்கு ஆங்கிலேயரிடமிருந்து நாம் ஸ்வராஜ்ய மடைய வேண்டுமென்ற எண்ணம் பலமாக ஏற்பட் டிருந்தது. ஒருநாள், மேற்கூறிய ப்ரிடிஷ் அதிகாரி அத்தலைவரின் வீட்டுக்கு வந்திருந்தபோது, அக் குழந்தையிடம் வேடிக்கையாக ஸம்பாஷணை செய்யத் தொடங்கினர். அந்தக் குழந்தை மிகவும் ஸாமர்த்தியமாக மறுமொழி சொல்லிக் கொண்டு வந்தது. இந்தக் குழந்தைக்கு ஏதேனும் ஸம்மானம் கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் ப்ரிடிஷ் அதி

காரி அதை நோக்கி:—"உனக்கென்ன வேண்டும்?" என்று கேட்டார். ஆங்கிலேயரிடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டியது ஸ்வராஜ்யந்தானென்று பாடம் படித்து வைத்திருந்த அக்குழந்தை உடனே:—"ஸ்வராஜ்யம் வேண்டும்" என்று மறுமொழி சொல்லிற்றும். அந்தக் காலம் முதல் மேற்படி தலைவரின் வீட்டுக்கு வருவதை அந்த ப்ரிடிஷ் அதிகாரி நிறுத்தி விட்டதாகக் கேள்விப்படுகிறேன்.

உலக விநோதங்கள்

காளிதாஸன்

8 டிசம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 24

1. துருக்கிச் செய்தி

முஸ்லிம் உலகம் முழுதையும் புண்படுத்தித் துருக்கியையும் ஒரு சிறிய சார்பு ராஜ்யத்தின் பதவிக்குக் கொணர்ந்த ஸெவர் உடன்படிக்கையை மாற்றுவதாகிய விஷயத்தில் (கான்ஸ்டாண்டிநோபில் நகரத்திலுள்ள) துருக்கிய ராஜாங்கத்தார் உறுதிகொண்டு நிற்க உடம்படுவாராயின், துருக்கிய தேசீயக் கக்ஷித் தலைவராகிய கமால் பாஷா, தம் முடைய படைகளையும் செல்வாக்கையும் அவர் களுக்கெதிராகச் செலுத்தி வருவதை நிறுத்தி, அவர்களுக்குத் துணைப்படுத்த சம்மதிக்கிறரென்பது நேயர்களுக்குத் தெரிந்த செய்தியேயாம். இது வரை பிடிவாதத்தாலோ, தம்மினத்தாருடன் அபிப் ராய பேதங்களை சரிப்படுத்திக் கொள்ளுதல் அதி காரிகளுக்குக் கஷ்டமாகத் தோன்றுமென்ற கார ணத்தாலோ, நேசக் கக்ஷியாரிடம் தாக்ஷிண்யத் தாலோ துருக்கி ராஜாங்கத்தார் கமால் பாஷா வுடன் ஸமாதானம் செய்து கொள்ளாமலிருந்தார் கள். ஆனல் நேற்றுக் கிடைத்த ராய்ட்டர் தந்தி யொன்றில், உள்நாட்டு மந்திரி, கடற்படை மந்திரி,

வியாபார மந்திரி என்போருட்பட்ட ராஜாங்கத் தூதர் கணமொன்று கான்ஸ்டாண்டி நோபிளி லிருந்து புறப்பட்டுக் கமால் பாஷாவின் கூட்டத்தா ருடன் உடன்படிக்கைப் பேச்சுக்கள் பேசும் பொருட் டுக் கமால்பாஷாவின் ஸ்தானமாகிய (ஆசியா மைனரிலுள்ள) அங்கோரா நகரத்துக்குப் போய்க் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போதேனும், துருக்கி கவர்மெண்டார் உள்ளொற்றுமையை நாடி வேலை செய்வது துருக்கிக்கு நற்காலத்தைக் குறிப்ப தாகவே கொள்ளவேண்டும்.

2. சிறிய ராஜ்யங்களுக்கெல்லாம் சுயேச்சையும் சுயநிர்ணயமும்!

சுயேச்சையும் சுயநிர்ணயமும் இல்லாத சிறிய ராஜ்யங்களுக்கு, அவற்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டே ஐரோப்பாவில் நான்கு வருஷங்கள் மஹாயுத்தம் நடத்துவதாக ஐரோப்பிய ராஜ்ய தந்திரிகள் பல்லவி பாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மேற்படி மஹா பிரளயத்தின் தற்கால விளைவு களை மாத்திரம் பார்க்கும்போது, ஏற்கெனவே சுய நிர்ணய அதிகாரம் வைத்துக்கொண்டிருந்த தேசங் களுக்குக்கூட இப்போது அவ்வுரிமை மறுக்கப்பட்டு வருகிறது. நேற்றைய ராய்ட்டர் தந்தி பான்றில், கிரேக்க ராஜாங்கத்தார் சிறிது காலத்துக்கு முன்பு இருபது கோடியே இருபது லக்ஷம் த்ராக்மா (என்ற கிரேக்க நாணயம்) தங்கள் நாணய சாலைகளில் அச் சிட்டதுபற்றி நேசக் கக்ஷியார் ஆக்ஷேபந் தெரிவித் திருக்கிறார்களென்றும், அக்கார்யம் செய்யும் முன்பு கிரேக்க ராஜாங்கத்தார் நேசக் கக்ஷியாரிடமிருந்து அநுமதி பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென அறிக்கையிட் டிருக்கிறார்களென்றும் சொல்லப்படு கிறது. நல்ல வேலை! ஒரு தனி ராஜாங்கத்தார் தங்களிஷ்டப்படி நாணயமடித்துக் கொள்ளவுங்

கூடாதென்ற நிலைமையில் ஐரோப்பாவிலுள்ள சிறு ராஜ்யங்களை நேசக் கக்ஷி ராஜதந்திரிகள் அடக்கியாள முயலுகிறார்களென்று தெரிகிறது. உதவி செய்த கிரீஸ் தேசத்துக்கு இப்படி நிபந்தனையேற் படுத்தியிருக்கிறார்கள். ஆனாலும் என்ன செய்யலாம்? நாம் எத்தனை பெரிய வல்லரசாக இருப்பினும், "நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்கும்" என்ற பழமொழியை மீறிச் செல்லுதல் இயலாது. என்ன செய்யலாம்? ஏதென்ஸ் நகரத்தில் வெனிஜிலாஸ் இல்லையே! அவரிருந்தால் பணம் அடித்தல், புஸ்தகம் அடித்தல், ராஜாவுக்குச் சோறு போடுதல் எல்லா விஷயங்களிலும் நேசக் கக்ஷியாரின் கட்டளையை எதிர்பார்த்து நடப்பார். அவர் போய் விடவே, நேசக் கக்ஷியாரின் செங்கோல் பாக்தாதிலும் கெய்ரோவிலும், டப்ளினிலும் ஒளி வீசுவது போல் அத்தேனு நகரத்தில் நேராக வீசாவிடினும், சற்று மறைந்தேனும் வீச இடமில்லாமல் போய் விட்டது. இவ்விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் ப்ரெஞ்சு மந்திரி ஸ்ரீமான் லேகுக்கும் என் அனுதாபம் தெரிவிக்கிறேன்.

3. மாதர் ஸமத்வம்

இங்கிலாந்தில் கீர்த்தி பெற்றிருந்த பொருள் சாஸ்த்ர பண்டிதராகிய மிஸ்டர் பா (f) ஸட் (Fawcett) என்பவரின் மனைவியும், பெண்களுக்கு வாக்குச் சீட்டு வேண்டுமென்ற கக்ஷித் தலைவியரில் ஒருவருமான மிஸஸ் பாஸட் என்பவர், சில தினங்களின் முன்பு லண்டனில், "நகரத்தாரின் ஸமத்வத்தை வேண்டும் ஸங்கங்களின் தேசீய ஐக்ய ஸபை" என்ற ஸபை முன்பு விவாகம் செய்து கொண்ட ஸ்திரீகளின் பதவியைக் குறித்து ஒருபன்யாஸம் செய்தார். அதனிடையே அவர் பின்வரும் ரஸமான கதையொன்று சொல்லுகிறார். 1870ஆம்

வருஷத்துக்கு ஸமீபத்தில், ஒரு நாள் என் சட்டைப் பையிலிருந்த பணம் களவு போயிற்று. களவு செய்த மனிதன் அகப்பட்டான். அவன்மீது நியாய ஸ்தலத்தில் வழக்கு நடந்தது. நானும் நியாயஸ்தலத்துக்குப் போயிருந்தேன். அப்போது அந்தத் திருடன் மீது நியாய ஸ்தலத்தில் வாசிக்கப்பட்ட குற்றப் பத்திரிகை பின்வருமாறு தொடங்கிற்று:—'ஹென்ரி பாஸட் என்பவரின் உடமையாகிய மிலிஸென்ட் பாஸட் என்ற ஸ்திரீயிடமிருந்து டாம் ஜோன்ஸ் என்பவன் ஒரு பணப் பையைக் களவு செய்ததாகக் குற்றஞ் சாற்றப் படுகிறான்' என. நான் ஏற்கெனவே ஸ்திரீகளுக்கு ஸ்வதந்த்ரம் வேண்டுமென்ற கக்ஷியைச் சேராதிருந்தேனுயின், என்னை "உடைமை"ப் பொருளாக வர்ணித்த அந்த வாக்கியம் என்னை உறுதியாக அந்தக் கக்ஷியில் கொண்டு சேர்த்திருக்கும்"—என்று அந்தப் பண்டிதை கூறுகிறார்.

உலக விநோதங்கள்

காளிதாஸன்

9 டிசம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 25

1. நன்றி மறவாமை

"தீயினுற் சுட்ட புண் உள்ளாறும்; ஆறுதே
நாவினுற் சுட்ட வடு"

என்றார் திருவள்ளுவர். ஆதலால் ராஜ்ய தந்திரி களாகவும் ராஜரீக உபந்யாஸகராகவுமிருந்து தேசத் துக்கு நன்மை செய்ய விரும்புவோர் சொற்களை உபயோகப்படுத்தும் விதத்தில் மிகவும் ஜாக்ரதை செலுத்தவேண்டும். தேச விடுதலைக்கு முதலா தாரம் தேச ஐக்கியமென்பது குழந்தைகளுக்குக்கூட தெரிந்த விஷயம். அதிலும் தேசீயக் கக்ஷி யாருக்குள்ளே பலமான ஐக்கிய உணர்ச்சி யிருத்தல் இன்றியமையாதது. ஆதலால் தேசீய வாதிகள் தம்முள் கருத்து மாறும்போதும், கண்டனம் செய்தல் அவசியமாகத் தோன்றும்போதும் தம் இனத்தாரை மாறுத மனவருத்தத்துக்குட் படுத்தக்கூடிய கடூர பாஷை சொல்வதை முற்றிலும் தவிர்த்து விடுதல் நன்று. சென்ற திங்கட்கிழமை மாலை நான் திருவல் லிக்கேணிக் கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத் துக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு வாலிபர் ப்ர ஸங்கம் செய்தபோது நம்மவர்களில் வயதானவர்கள்

தேச ஸேவையைத் துறந்து விட்டார்களென்றும், இனி இளைஞர்கள் காப்பாற்றினாலன்றி தேசம் கதியற்றதாய் விடுமென்றும் தெரிவித்தார். காந்தி சிறு பிள்ளையா? விஜயராகவாச்சார்யர் சிறு பிள்ளையா? மதிபால் கோஷ் சிறு பிள்ளையா? மதன் மோஹன மாளவியா சிறு பிள்ளையா? நம்முள் வயதேறியவர்கள் தேச பக்தியைத் துறந்து விட்டதாக மேற் கூறப்பட்ட மஹான்கள் இருக்கும்வரை நாம் உச்சரிப்பது சரியா? இந்தியாவின் விருத்தத் தலைவர்களுக்கு யௌவன இந்தியர் செலுத்தும் நன்றி இதுதானா?

2. ஐரோப்பிய நாகரிகம்

ஐரோப்பிய நாகரிகத்தைக் குறித்துத் தம்முடைய கல்கத்தா உபந்யாஸமொன்றில் கர்னல் வெட்ஜ்வுட் பேசிய வார்த்தைகள் படிப்பதற்கு ரஸமாக இருப்பதால் அவற்றை இங்கு மொழிபெயர்த்துக் காட்டுகிறேன். கர்னல் வெட்ஜ்வுட் சொல்லுகிறார்:—

"ஐரோப்பிய நாகரிகம் இந்தியாவில் வந்து தங்கிப் போய்விடும் என்று தோன்றுகிறது. அதைத் தடுக்க வேண்டும். அந்த நாகரிகம் அநியாயத்தை அஸ்திவாரவாக உடையது. அது யோக்கியதையற்ற பொருளாசையை ஆதாரமாகக் கொண்டது. அந்த நாகரிகத்தை நீங்கள் கைக்கொள்ள மாட்டீர்களென்று நம்புகிறேன். அது அநீதியை ஆதாரமாகக் கொண்ட தென்பதற்குக் காரணம் சொல்லுகிறேன். தொழிலாளிகள் செல்வத்தை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தொழிலால் உற்பத்தியாகும் செல்வத்தை அவர்கள் அனுபவிக்க இடமில்லை. இது அநியாயமன்றோ? நீதியை ஆதாரமாகக் கொள்ளாமல் அநீதியை ஆதாரமாகக்

கொண்ட ஜனஸமூஹம் பிழையானது. அதைஎப்படி அழித்துவிடலாமென்பதைக் குறித்து நாம் யோசனை செய்ய வேண்டும்.. தொழிலாளிகளுக்கு அதிகக் கூலி கொடுக்க வேண்டுமென்று மாத்திரம் நான் சொல்லவில்லை. அவர்களுடைய தொழிலின் முழுப் பயனையும் அவர்கள் அனுபவிக்க வேண்டு மென் கிறேன்" என்றார். முதலாளிகள் முதல் போட்ட அளவுக்கு அவர்களும் பயன் பெற வேண்டு மென் பதைக் கர்னல் வெட்ஜ்வுட் மறுத்துப் பேசுவதாக நினைப்பது நியாயமன்று. ஆனால், தொழிலாளரின் தொழிலால் பெருமளவில் முழுப் பயனும் தொழி லாளிகளையே சேர வேண்டுமென்பதுதான் அவ ருடைய கொள்கை. மேலும் முதலாளிகள், தொழி லாளிகள் என்ற பேதமின்றித் தொழில் செய்வோரே நாட்டிலுள்ள தொழிற் களங்களுக்கெல்லாம் அதி பதிகளுமாய் விட வேண்டுமென்ற கொள்கை அவர் மனதிலிருக்கக் கூடும்.

இயன்ற வரை, நகரத்து ஜனங்கள் அனைவருமே ஏதேனுமொரு வகையில் பொது நலத்துக்காகத் தொழில் செய்து தீரவேண்டு மென்பதும், அங்ஙனம் நாட்டு மக்கள் அனைவரும் தொழில் செய்யுமிடத்தே தொழிற்சாலை யுரிமையும் பொதுவாகிவிட வேண்டு மென்பதும் நவீன ஐரோப்பியத் தொழிற் கக்ஷியாரின் கொள்கையாதலால், அதையெண்ணியே கர்னல் வெட்ஜ்வுட் மேலே காட்டிய வசனங்களைக் கூறியிருக்கிறார். ஆனால் கீழ்த்திசையிலும் தொழி லாளிகளின் நிலைமை அதேமாதிரியாகத்தானிருக்கும் போது மேற்றிசை நாகரிகத்தை மட்டும் கர்னல் வெட்ஜ்வுட் குறிப்பிட்டுப் பழி பேசியதன் நோக்கம் யாதென்று நம்மவரிலே சிலர் திகைப்பெய்தக்கூடும். ஆனால், மேலெழுந்தவாறாகப் பார்க்கும் போது, இவ்விஷயத்தில் மேற்றிசையும் கீழ்த் திசையும்

ஒரே மாதிரியாகவே இருப்பதாகத் தோன்றினும், ஆழ்ந்து கவனிக்கும்போது. வேற்றுமை புலப்படும். மேற்றிசை நாகரிகத்தின் ஆதிக்கம் இங்கு தொடங்கிய காலத்துக்கு முன்பு நம் நாட்டுத் தொழிலாளிகள் பெரும்பாலும் தத்தம் தொழில்களுக்குத் தாமே முதலாளிகளாகவும் இருந்தனர். முதலாளி ஒருவன் பணம் போட்டுப்பலரைக் கூலியாட்களாக்கி, வேலை வாங்கி அவர்களுக்குச் சொற்பக் கூலி கொடுத்து விட்டு, அவர்களுடைய தொழிலால் உற்பத்தியான பண்டங்களை விற்றுக் கிடைக்கும் லாபத்தில் பெரும்பகுதியைத் தான் அழுத்திக்கொள்ளும் முறை இந்தியாவில் ஸாதாரணமாகக் கிடையாது. இது நம்முடைய தேசத்து நாகரிகத்தின் நோக்கத்துக்கு மாறுனமுறை. இந்த உண்மையை அன்னிய ராயினும், கர்னல் வெட்ஜ்வுட் ஸுலபமாகத் தெரிந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. இங்கிலாந்திலும், பிற இடங்களிலுமுள்ள தொழிற் கக்ஷியார் நமக்கு எங்ஙனமேனும் ஸ்வராஜ்யம் கொடுக்கும்படி ப்ரிடிஷ் ராஜாங்கத்தை வற்புறுத்தக் கூடுமாயின், அதனால் உலக முழுமைக்கும் நன்மை யேற்படும். மேற்றிசையின் தற்கால நாகரிகம் அநியாயத்தைப்பற்றி நிற்பதென்றும், ஆதலால் அழித்துவிடத்தக்கதென்றும் கர்னல் வெட்ஜ்வுட் சொல்லுகிறார். அதை நாமும் அங்கீகாரம் செய்கிறோம். ஆனால் அந்த அநியாய நாகரிகத்தை அழிக்கும் உபாயமெப்படி? நியாயத்தைக் கொண்டு நிறுத்தினால் அநியாயம் தானே அழிந்து விடும். சிலர் அநியாயத்தை அழிப்பதற்கு மேன்மேலும் அதிக அநியாயம் பண்ண வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அப்படியில்லை. நியாயம் ஸாதிப்பது ஸுலபமென்றும், லாபகரமென்றும், மனிதர் தெளிவாக அறிந்துகொண்ட மாத்திரத்தில் அநியாயத்தைத் தாமே நிறுத்தி விடுவார்கள்.

ஒளியைக் காண்பித்தால் இருள் தானே அகன்று விடும். மேற்றிசையின், அநாகரிகத்தை மாற்ற வேண்டுமாயின், கீழ்த்திசை நாகரிகம் அங்கு பரவும் படி செய்வதே அதற்குரிய உபாயமாகும். கீழ்த்திசை நாகரிகத்துக்கு இந்தியாவே இலக்கியமாக விளங்கு கிறது. எனவே உண்மையான கிழக்கு நாகரிகம் ஐரோப்பாவுக்கு வேண்டுமென்று கர்னல் வெட்ஜ் வுட் முதலியவர்கள் விரும்புவராயின் அ தை இந்தியாவிலிருந்தே பெற முடியு மென்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனல் இந்தியா இப்போதிருக்கும் பராதீன நிலைமையிலே தனது பூர்விக நாகரிகத்தின் உயர்ந்த லக்ஷியங்களைத் தன் வாழ்விலே நிறைவேற்றிக் கொள்வதற்குமே திறமைகளை யிழந்து நிற்கிறது. இந்தியா பராதீன மாக இருக்கும்வரை ஐரோப்பியரிற் பெரும் பகுதி யரர் இதைக் குரு நாடாக ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். இந்த நிலையில், அவர்கள் தம்மிட முள்ள குற்றங்களை நீக்கி நம்மிடமுள்ள குணங்களைப் பற்றிக் கொள்ளுதல் எதிர்பார்க்கத் தக்க விஷய மன்று. எனவே, கீழ்த்திசை நாகரிகம் இந்தியாவில் மறுபடி சுடர்விட்டெரிவதை ஐரோப்பியர் கண்டு தமது நாகரிகத்தினும் இது சிறந்ததென்றுணரும் படி செய்யவேண்டும். இதற்கு இந்தியா ஸ்வராஜ்யம் பெற்ருலன்றித் தகுந்த சௌகர்யங்களேற்பட மாட்டா. எனவே, வெளியுலகத்து மனுஷ்யாபி மானிகள் இந்தியா ஸ்வராஜ்யம் பெறும்படி உழைப் பது நமக்கு நன்மையாவதுடன், ந ம மைக் காட்டிலும் அவர்களுக்கே அதிக நன்மையாக முடியும்.

விசேஷக் குறிப்புக்கள்

சக்திதாஸன்

10 டிசம்பர் 1920 சொத்திரி கூடிதிகை 26

1. ஜெர்மனியில் ரவீந்த்ரநாதரின் நாடகம்

ஜெர்மனியில் மெய்ன் நதிக் கரையிலுள்ள ப்ராங்க்போர்ட் நகரத்தில் சென்ற நவம்பர் 27ஆம் தேதியன்று ஸ்ரீமான் ரவீந்த்ரநாத டாகூரின் புதிய நாடகமாகிய "இருட்டறை வேந்தன்" என்பது ஜெர்மானிய பாஷையில் நடித்துக் காட்டப்பட்டது. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் பலதடவை டாகூரின் நாடகங்கள் சில முறை நடித்துக் காட்டப் பட்டிருக்கின்றன. ஆனால் ஐரோப்பாவில் இதுதான் முதல் முறையென்று தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவின் நாகரிகம் உலகத்தில் பரவுவதற்குத் தொழில் புரியும் நமது காலத் தொழிலாளிகளில் ரவீந்த்ர பாபுவை முன்னணியில் சேர்க்க வேண்டும்.

2. "நோபல் ப்ரைஸ்" என்ற வெகுமானம்

முன்பு, ரவீந்த்ரநாத டாகூருக்கு "நோபல் ப்ரைஸ்" கிடைத்த செய்தியை நேயர்கள் மறந் திருக்க மாட்டார்கள். இந்த வெகுமானம் ஸ்வீடன் தேசத்து வித்யா ஸங்கத்தார் மூலமாக ஒரு வித்யாபிமானி வைத்த நிதியினின்றும், அவ்வவ்

வருஷத்தில் நாகரிக உலக முழுதிலும் இலக்கியத் திலும், சாஸ்திரத்திலும் மிகச் சிறந்த வித்வான் களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ரவீந்த்ரநாத் டாகுருக்குக் கிடைத்த வெகுமதி ரூபாய்க் கணக்கில் சுமார் லக்ஷத்திருபதாயிரமாயிற் றென்பது நம்ம வருக்கு நினைப்பிருக்கக்கூடும். பரிசு இத்தனை பெரும் தொகையாக இருப்பது மன்றி, இதனைப் பெறுவோர் உலகத்து வித்வான்களில் சிறந்தோ ரென்ற ஸ்தானமும் ஏற்படுவதால், ஒவ்வொரு தேசத்தாரும் தத்தம் நாட்டுக் கவியரசர்களுக்கு அந்த ஸம்மானம் கிடைக்க வேண்டு மென்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட இந்தப் பரிசு களில் இலக்கியப் பரிசு (1919 ஆம் வருஷத்துக் குரியது) ஸ்விட்ஜர்லாந்து தேசத்துக் கவியாகிய கார்ல் ஸ்பித்தலர் என்பவருக்குக் கிடைத்திருக் கிறது. 1920ஆம் வருஷத்துக்குரிய மேற்படி ஸம்மானத்தை நார்வே தேசத்துப் புலவராகிய நட்ஹாம்ஸன் என்பவர் பெற்றிருக்கிறார்.

3. கார்ல் ஸ்பித்தலர்

இவர் ஸ்விட்ஜர்லாந்து தேசத்தில் லுஸெர்ன் நகரத்தில் பிறந்தவர். இவருக்கு இப்போது 75 வயதாகிறது. ஜெர்மனி தேசத்துக் கீர்த்திபெற்ற பண்டிதராகிய நியட்ஷ் என்பவருக்கு ஸமானமாக இவரைச் சிலர் சொல்லுகிறார்கள். 1889 ஆம் வரு ஷத்தில் இவர் "ப்ரொமீதியஸ்", "எபிமெத்துஸ்" என்ற இரண்டு நூல்கள் வெளியிட்டார். இவருக்கு இந்த வெகுமானம் கிடைத்ததுபற்றி ஸ்வீடன் தேசத்திலும் இங்கிலாந்து முதலிய இடங்களிலும் சில பத்திரிகைகள் மிக ஆச்சர்யப் படுகின்றன. இவர் ஏற்கெனவே எழுதியுள்ள நூல்களில் நல்ல திறமை காண்பிக்கப்பட்டிருப்பது மெய்யே யாயினும் வயது மிகுதியால் இப்போது இவர் சக்தி குன்றிப்

புதிய கவிதைப் படைப்புகள் செய்யுந் திறனின்றி யிருப்பதாக அப்பத்திரிகைகள் சொல்லுகின்றன. இங்கிலாந்திலுள்ள தாமன் ஹார்டி, பெர்னார்ட்ஷா, ஜான் கார்ல்ஸ்வர்த்தி என்போரும் பிரான்ஸிலுள்ள அந்தோல் ப்ரான்ஸ், ரோமாய்ன் ரோலான் முதலிய வர்கள் இவரைக் காட்டிலும் இலக்கிய வெகுமதிக்கு அதிகத் தகுதியுடையோரென்று சொல்லப்படுகிறது. மேலும் ஆங்கிலப் புலவர்களிலே ருட்யார்ட் கிப்ளிங் ஒருவருக்குத்தான் இதுவரை இப்பரிசு கொடுக்கப் பட்டிருப்பதினின்றும், இங்கிலாந்துக்கு ஸ்வீடன் கலா ஸங்கத்தார் சரியான நியாயம் செலுத்தவில்லை யென்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கார்ல் ஸ்பித்தலர் என்பவரை மிக உயர்வாகக் கொண்டாடு வோர் ப்ரான்ஸ் தேசத்தில் பலர் இருப்பதாக மற்றொரு திறத்தார் கூறுகின்றனர். ஜெர்மனியிலும் இவருக்கு மிகுந்த கீர்த்தி யிருந்ததாம். ஆனல் மஹா யுத்தத்தின்போது ஜெர்மானியர் பெல்ஜியம் தேசத்து நடுநிலைமைக்கு பங்கம் விளைத்ததுபற்றி இந்தப் புலவர் ஜெர்மனியை உக்ரமாகக் கண்டித்துப் பேசியதினின்றும், இவருக்கு ஜெர்மனியிலிருந்த மதிப்புக் குறைவு பட்டதாகத் தெரிகிறது.

4. நட்ஹாம்ஸன்

1920ஆம் வருஷத்து நோபல் இலக்கியப் பரிசு கிடைக்கப்பெற்ற நட்ஹாம்ஸனுக்கு அது தகு மென்று கொள்ளுகிறார்கள். நுத்ஹாம்ஸன் என்பது இயற் பெயரில்லை யென்றும், இலக்கியத்திற்காக இவர் தாமே ஏற்படுத்திக்கொண்டதோர் புனைபெய ரென்றும் அறிகிறோம். இவர் 1860 ஆம் வருஷத்தில் எளிய தாய் தந்தையர் வயிற்றில் பிறந்தார். அவ ருடை ஆரம்ப வேலைகளாகிய ஒரு காவியமும் ஒரு கதையும் 1878 ஆம் வருஷத்தில் வெளியிடப்பட்டன. ஆனல் அவற்றல் நஷ்டம் வந்ததே யன்றி லாபம்

வரவில்லை. பிறகு அவர் நார்வேயிலிருந்து அமெரிக் காவுக்குப் புறப்பட்டுப் போனார். அங்கே, ஒரு வயலில் உழவு வேலை செய்து வந்தார். "ட்ராம்" வண்டி ஓட்டினார். 1885ஆம் வருஷத்தில் மறுபடி நார்வேக்கு மீண்டு இலக்கியத் தொழில் தொடங் கினார். மறுபடி தோல்வி ஏற்பட்டது.

பிறகு ந்யூபவுண்ட்லாந்து தீவில் மூன்று வருஷம் மீன் பிடிக்கிற படகில் வேலை செய்து வந்தார். அப்பால் "பட்டினி" என்றொரு கதை யெழுதி வெளி யிட்டார். அதில் பெரும் பகுதி அவருடைய சொந் தக் கதை. அந்தப் புஸ்தகம் வெற்றியடைந்தது. அது முதல் அவர் வெளியிட்டு வரும் பல நூல்களால் அவருடைய கீர்த்தி உறுதி பெற்று விளங்குகிறது.

குறிப்பு :—நோபல் 'பவுதிக சாஸ்ரத்ர'ப் பரிசுகளில் 1919-ஆம் வருஷத்துப் பரிசு யாருக்கும் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது; ஆனால் 1920-ஆம் வருஷத்துப் பரிசு ப்ரான்ஸ் தேசத்தில் ப்ரதெய் (Bretehil) நகரத்தில் ஸர்வ தேசீய நிறையளவுக் கார்யஸ்தலத்தில் தலைமையதி காரியாகிய மிஸ்டர் ஸி. இ. (g) கிய்யோம் என்பவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இங்கிலிஷ் பாஷையிலுள்ள வில்லியம் என்னும் நாமமே ப்ரெஞ்சு பாஷையில் (g) கிய் யோம் என்று வழங்குதலறிக.]

5. கலகக்காரர்

மெஸபடேமியா எவ்வகையிலும் ப்ரிடிஷ் ராஜாங்கத்தின் ஒரு பகுதியாகக் கணிக்கப்படத் தகாததாகையால், அங்கு போர் செய்யும் அராபி யரைக் "கலகக்காரர்" என்று சொல்லுதல் பொருந் தாதென்று சிறிது காலத்திற்கு முன்பு லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை எழுதிற்று. ஸாதாரண யுத் தத்தில் கைதிகளாக எதிரிகள் அகப்பட்டால், அவர் களை எப்படி நடத்த வேண்டுமோ, அப்படியே அந் நாட்டரபியர் கைதிகளாகும் போது செய்ய வேண்டு

மேயன்றி, கலகக்காரருக்கு விதிக்கும் தண்டனை அராபியருக்கு விதிக்கக் கூடாதென்ற மேற்கூறிய லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் அபிப்ராயத் தின்மீது லண்டனில் நடைபெறும் "இந்தியா" பத்திரிகை வியாக்யானம் செய்கிறது. அங்ஙனம் ஸமாவா என்ற இடத்தில் போர் செய்யுமிடையே இறந்து போன மிஸ்டர் புகானன் என்ற ஆங்கிலேயர் ஒருவரைக் கொன்றதில் ஸம்பந்தப்பட்ட ஒரு அரபி யின்மீது கொலைக் குற்றம் சாற்றி ஆங்கிலேய அதிகாரிகள் அவனைத் தூக்கிலிட்டுக் கொன்ற தாகத் தெரிகிறது. இப்படி ஒரு யுத்த வீரனுகிய அரபியை ஆங்கிலேயர் கொலையாளியாக பாவித்துக் கொலை செய்ததைக் கருதி அந்த "இந்தியா" பத் திரிகை மிக்க பரிதாபமுணர்த்துகிறது. ஆனால், லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் மேற்கூறிய கொள்கையை நாம் அங்கீகரிப்போமாயின், ப்ரிட் டிஷ் ராஜாங்கத்தில் ஒரு பகுதியில்லாத மெஸபொ டேமியாவில் ஸைந்யத்தைக் கொண்டு வைத்துக் கொண்டு அந்நாட்டைச் சூறையாடு முறைமையில் ஓரிரண்டு தனிக்குற்றந்தானு காணலாம்? அடிமுதல் நுனிவரை அந்தச் செய்கை முழுமையும் பெருங் குற்றமே யன்றே?

பட்டணத்துச் செய்திகள்

காளிதாஸன்

24 டிசம்பர் 1920 **ரௌத்ரி மார்கழி 10**

ஒரு ட்ராம்வே உத்யோகஸ்தர் சாகத் தெரிந்தார்

சில தினங்களுக்கு முன் திருவல்லிக்கேணியி லிருந்து சென்னைக்கு ட்ராம் வண்டி யேறி வந்து கொண்டிருக்கையிலே முனிஸிபல் குப்பை மோட் டார் ஒன்று ட்ராம் வண்டிக்கு ஸமீபமாக வந்து கொண்டிருந்தது. இடையே ஒரு போலீஸ் சேவகர் நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் தப்பிய ஒரு க்ஷணத்துக்குள் குப்பை மோட்டார் ட்ராம் வண்டியோடு உராய்ந்தது. இடையே, ட்ராம் ஏறு பலகைமேல் ஒருவர் நின்று கொண்டிருந்தார். இவர் நடுங்கிப் போனர். ஆஸல் பொடி மனிதனைபடி யால் காயமில்லாமல் தப்பினர். வண்டியிலிருந்த ஆண்களும் பெண்களும் இவர் பிழைத்ததுபற்றி ஈசனை ஸ்தோத்ரம் செய்தார்கள். "ஒரு நூலினடி யிலே நிற்கிறது மனிதனுடைய ஆவி! இதில் எத்தனை கவலைகள், எத்தனை பயங்கள், எத்தனை போராட் டங்கள், கஷ்டங்கள், மனிதர் தமக்குத் தாமே மூடத் தன்மையால் விளைவித்துக் கொள்கின்றனர்!" என்று சொல்லி ஒரு ஸ்திரீ ஞானோபதேசம் செய்

தாள். இது நிற்க, மோட்டார் முதலியன விடுவோர் இயன்றவரை ட்ராம் மார்க்கத்தை விட்டு விலகி யோட்டுதல் அவசியமென்று தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

ட்ராம் வண்டியில் ராஜீய வாதம்

"புதிய யுகம் வரப் போகிறது; மாண்டேகு ஸ்வராஜ்யக் குட்டிப் போடப் போகிறரென்று சத்தம் போட்டதெல்லாம் கடைசியாக, வெங்கட ரெட்டி, ஸுப்பராயலு ரெட்டி, ராம ராயனிங்கார் என்ற மூவரும் நம்முடைய மாகாணத்துக்கு மந்திரி களாக வந்திருக்கிறார்கள். இஃதென்ன விநோதம்!"

என்று, இன்று காலை எனக்கெதிரே ட்ராம் வண்டியிலுட்கார்ந்திருந்த எழுபது வயதுள்ள ஒரு வைஷ்ணவ 'பிராமணர் கூறினர். அதைக் கேட்டு, அவரருகிலிருந்த மஹமதியரொருவர்:— "எவர் வந்தாலென்ன? சென்னப் பட்டணத்திலே பிராமணர் வந்தாலும் கிலாபத்துக்கு வேலை செய்ய மாட்டார்கள். மற்ற ஜாதியார் வந்தாலும் கிலா பத்தைக் கவனிக்கமாட்டார்கள். இது தரித்திரம் பிடித்த நகரமையா இது! லாஹோர், லக்னவ் டில்லி, பம்பாய், கல்கத்தா பக்கங்களிலே கிலா பத்துக்கு என்ன வேலை செய்கிறார்கள் தெரியுமா?" என்றார். அப்போது, ஒரு ஐரோப்பிய வியாபார ஸ்தலத்துக் கார்யஸ்தர்போலே தோன்றிய முதலி யார் ஒருவர்—"பிராமணர்கள் வந்தால் அதிகமாக ஆங்கிலேய உத்தியோகஸ்தருக்கு அடிமைப்பட மாட்டார்கள். எனவே, ஜனங்களுக்குக் கொஞ்சம் நியாயம் கிடைக்கும். மற்றக் கூட்டத்தார் இன்னும் அது சரியாகப் படிக்கவில்லை" என்றார். அப்பால் கலாசாலை மாணாக்கராகிய ஒரு அய்யர்:—

"பிராமணரில்லாமல் மற்றவர் மந்திரிகளாக நியமிக்கப்பட்டது எனக்கு சந்தோஷந்தான். தாங்களே ஐரோப்பியக் கல்விக்குப் பிறப்புரிமை கொண்டோரென்றும் ஆதலால் ஐரோப்பியக் கல்வியில் தாம் பெறக்கூடிய தேர்ச்சி மற்ற ஜாதியாரால் எய்தவே முடியாதென்றும், ஆதலால் உயர்ந்த ஸர்க்கார் ஸ்தானங்களெல்லாம் தங்களுக்கே கிடைக்குமென்றும் சென்னை மாகாணத்து பிராமணரில் சிலர் மிகவும்கர்வம் பாராட்டி வருகிறார்கள் அவர்களுடைய கர்வத்தைத் தீர்க்க இது நல்ல மருந்தாகி வந்தது. ஆனால் பிராமணரைத் தவிர வேறு ஜாதியாரை நியமிப்பதில் பிராமணத் துவேஷம் ஒன்றையே பெருங் கடமையாகவும், பரம தர்மமாகவும், ஜன்ம லக்ஷ்யமாகவும் நினைக்கிறவர்களை விட்டு, இதர ஜாதியாராயினும் பிராமணத் துவேஷமில்லாதவர்களையே லார்ட் வில்லிங்டன் நியமித்திருக்க வேண்டும்" என்றார்.

"இதுவரை பிராமணரைப் பகைத்துக் கொண்டிருந்த போதிலும், இப்போது மந்திரி ஸ்தானம் கிடைத்ததிலிருந்தேனும், இவர்கள் அதிகப் பொறுப்புணர்ச்சியும் விசால புத்தியும் உடையவர்களாய்த் தமது பெயரைக் காத்துக்கொள்ள வேணும். இயன்றவரை எல்லா வகுப்பினருள்ளும் பக்ஷபாதமில்லாமல் பொதுவாக நடந்து வர முயற்சி செய்வார்களென்று நம்புகிறேன்" என்று மேற் கூறிய முதலியார் சொன்னார். இவர் சொல்லியதில் ஒருவித உண்மை யிருக்கக் கூடுமென்று என் புத்திக்குப் புலப்பட்டது. ஆனால் அதற்குள் நான் ட்ராம் வண்டியிலிருந்து இறங்குவதற்குக் காலமாய் விட்டபடியால் அந்த ரஸமான ஸம்பாஷணையைத் தொடர்ந்து கேட்க இடமில்லை.

ரஸத் திரட்டு

காளிதாஸன்

10 ஜனவரி 1923 ரௌத்ரி மார்கழி 27

நிறவேற்றுமை

அமெரிக்காவில் செந்நிற இந்தியர் என்ற ஜாதியாருடன் அங்கு புதிதாக ஐரோப்பாவினின்றும் குடியேறிய வெண்ணிற மனிதர் ஒத்துவாழ முடியாமல் அவர்களைச் சுட்டழித்த செய்தி, ஆஸ்த்ரேலியாவின் புராதனக் குடிகளை வெள்ளையர் அழித்து முடித்த செய்தி, ஒரு நீக்ரோவன் ஒரு வெள்ளை ஸ்திரீயை விரும்பினால் அவனைச் சட்டப்படி விசாரணை செய்யாமல் ஜனங்கள் அடித்தும் கல்லெறிந்தும் கொல்வதாகிய-இன்றைக்கும் அமெரிக்காவில் உள்ள அனுஷ்டானம், ஐரோப்பியரின் ஆட்சிக்குட்பட்ட இந்தியா முதலிய இதர நிறத்தாருடைய நாடுகளில் நிறவேற்றுமை காரணமாக ஏற்படும் அநீதிகள், அமெரிக்காவிலும் கனடாவிலும் ஜப்பானியரும் இந்தியரும் குடியேறி யிருப்பதால் அங்குள்ளவருக்குண்டாகும் பொறுமை, குடியேற்ற நாடுகளில் ஆசியாக்காரருக்குச் செய்யப்படும் கொடுமைகள் இவற்றுலெல்லாம் நிறவேற்றுமை பற்றிய பேத உணர்ச்சிகள் சில நூற்றாண்டுகளாக வெள்ளையரிடம் ததும்பிக் கிடப்பதாக நிச்ச

யப்படுவதை முகாந்தரமாகக் கொண்டு ஹிந்து பத்திரிகையில் நிற வேற்றுமை உணர்ச்சி மனித இயற்கைக்கே சகஜமென்றும் இது சமீபத்தில் இவ் வுலகை விட்டுப் பெயராதென்றும் எழுதப்பட்டிருந்த அபிப்பிராயத்தை ஏற்கெனவே சில தினங்களின் முன்பு மறுத்தெழுதியிருக்கிறோம். அங்ஙனம் மறுத்தெழுதுகையில் ஆசியாக் கண்டத்தாருக்கு இந்த உணர்ச்சி எப்போதுமே கிடையாதென்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

அங்ஙனம் நாம் சொல்லியதற்கு வேறொரு நேர்த்தியான உபபலம் அகப்பட்டிருக்கிறது. அதனை நம் நேயர்களுக்குத் தெரிவித்தல் பயனுடையதாகும் என்று நினைக்கிறோம்.

சுக்ர நீதியிலுள்ள பிரமாணம். 1921 ஜனவரி மாஸத்து 'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையிலே சரித்திர ஆராய்ச்சியில் கீர்த்தி மிகுந்தவராகிய ஸ்ரீ விநய குமார சர்க்கார் என்பவர் சுக்ர நீதியின்படி ராஜ்யத்தின் செல்வ ஆதாரங்கள் என்ற மகுடத்தின் கீழ் எழுதிவரும் சிறந்த வியாசத்தின் 5-ம் பகுதி வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஸ்ரீ சர்க்கார் சுக்ர நீதியினின்றும் பலமான மேற்கோள் எடுத்துக் காட்டிப் பூர்விக இந்தியாவில் சேனாதிபதி வேலை மந்திரி வேலை முதலாக ஸகல ஸ்தானங்களுக்கும் இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியாரையும் நியமிக்கலாமென்ற ஏற்பாடிருந்ததுடன் மிலேச்சர் யவனர் முதலிய மத்திய ஆசியாவாசிகளையும் தென் ஐரோப்பாவைச் சேர்ந்த வெள்ளை மனிதர்களையும் இந்தியாவில் எந்த உத்தியோகத்துக்கும் நியமிக்கலாமென்ற ஏற்பாடு இருந்ததென்றும் உள்ளங்கை நெல்லிக்கனி போல மிகத் தெளிவாக விளங்கும்படி ருசுப்படுத்துகிறார். இங்குள்ள ஜாதிபேதங்களைக் கூட நாம் சீர்திருத்த இடமிருப்பினும் வெள்ளையர்

கற்பிப்பது போல் இதனை உலகெங்குமில்லாத பெருங் கொடுமையாகப் பாவித்தல் சிறிதேனும் நியாயமில்லை. இந்த விஷயமும் ஸ்ரீமான் சர்க்காரின் வியாசத்தில் தெளிவுபடுகிறது.

எல்லா மனிதரும் சமமென்ற கொள்கையை ஸமூஹ வாழ்க்கையில் ஸ்தாபனம் செய்யும்வரை மானிடருள்ளே இகல், பொறுமை, வஞ்சனை, போர் முதலிய ஏற்பாடுகள் நீங்க மாட்டாவாதலால் அக் கொள்கையை எப்படியேனும் அனுஷ்டானத்துக்குக் கொணர்ந்து விடவேண்டுமென்று ஐரோப்பிய ஞானிகள் பேராவல் கொண்டிருக்கின்றனர். இந்தியா ராஜாங்க விடுதலை பெற்றுவிடுமாஞல் தன் அனுஷ்டானத்தாலே உலகத்தாருக்கு இக்கொள்கையின் நலங்களை விளக்கிக் காட்டி உலகமுழுவதும் இதனைப் பரவச் செய்தல் ஸாத்யப்படும்.

ஸமத்துவக் கொள்கையின் லோககுரு பாரதமாதா

வெறும்மே ஐரோப்பிய வித்வான்கள் செய்வது போல் இவ்விஷயமாக நூல்களும் பத்திரிகை வியாசங்களும் ப்ரசுரிப்பதனலும் உபந்யாஸங்கள் செய்வதாலும் அதிக பயனேற்படாது. தன் உபதேசப்படி தானே நடக்காத ஐரோப்பாவின் உபதேசங்களில் வெளியுலகத்தாருக்கு நம்பிக்கை பிறப்பதெப்படி? எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தியாவின் நெஞ்சில் வேதாந்தக் கொள்கை ஊறிக் கிடக்கிறது. இந்த வேதாந்தம் லௌகிகமான அனுஷ்டானத்தில் பரிபூரணமான ஸம்பூர்ணமான ஸமத்துவம் ஏற்படுத்தும் இயல்புடையது. ஆனல் நமக்கும் ஐரோப்பியரின் உறவாலேதான் இக்கொள்கையில் உறுதி ஏற்பட்டது. எனினும் ஐரோப்பியர் அதை

நடத்திக் காட்டக் கூடிய அளவு தெளிவு பெற வில்லை. இக்கொள்கை அவர்களுக்குப் புதிது. புதிய கொள்கை உண்மையென்று நிச்சயப்பட்ட மாத்திரத்தில் அதை அனுஷ்டித்துத் தீர்க்க வேண்டுமென்பதில் இந்தியாவுக்குள்ள துணிவு ஐரோப்பாவுக்குக் கிடையாது. ஆனால் நாம் இக்கொள்கையை முற்றிலும் அனுஷ்டித்தல் அன்ய ராஜ்யத்தின் கீழே ஸாத்யப்படவில்லை. ஆதலால் நமக்கு ஸ்வராஜ்யம் இன்றியமையாதது. இந்தியா ஸ்வராஜ்யம் பெறுவதே மனித உலகம் அழியாது காக்கும்வழி.

வெண்மை நிறத்தோரின் ஆட்சி விஸ்தாரம்

பூமண்டலத்தின் தரையளவு சுமார் 5,30,00,000 (ஐந்து கோடியே முப்பது லட்சம்) சதுரமைல். இதில் 4,70,00,000 (நான்கு கோடியே எழுபது லட்சம்) சதுரமைல் விஸ்தாரமுள்ள பூமி வெண்மை நிறத்தோரின் ஆதிக்கத்திலிருக்கிறது. இங்ஙனம் உலகம் ஒரு சிறு கூட்டத்தாரின் கீழே அகப்பட்டிருப்பதில் அச்சிறு கூட்டத்தார் தங்களுடைய வயிற்றையும் தமக்கு வேண்டிய இன்பங்களையும் மாத்திரமே கவனிப்பதுடன் மற்ற உலகத்தாரெல்லாரும் தங்களைக் காட்டிலும் தாழ்வென்றும் நினைத்துக் கொண்டிருக்குமிடத்தே ஸமத்வக் கொள்கையின் கதி என்னுகிறது?

ரங்கூன் ஸர்வகலா ஸங்க பஹிஷ்காரம்

சக்திதாஸன்

18 ஜனவரி 1921 ரௌத்திரி தை 6

ரங்கூன் ஸர்வகலா ஸங்கத்தையும், ராஜாங்க உதவி பெற்ற மற்றப் பாடசாலைகளையும், மாணாக்கர் பஹிஷ்காரம் செய்யும்படி நேர்ந்த விருத்தாந்தங்களைக் குறித்து, மிஸ்டர் மோங் தின் மோங் விடுத்திருக்கும் அறிக்கையை நோக்குமிடத்தே, ஸர்க்கார் அறிக்கை பக்ஷபாதமுடைய தென்பது வெளிப்படுகிறது. ரங்கூன் ஸர்வகலா ஸங்கத்தின் நிர்மாண நிபந்தனைகள் ஆக்ஷேபத்துக் கிடமானவையென்று ஜனங்கள் கூக்குரலிட்டதை அதிகாரிகள் சிறிதேனும் பொருட் படுத்தாமல் நிராகரித்துவிட்டு, அந்த நிர்மாணத்தை மிதமிஞ்சிய விரைவுடன் சட்டமாக்கினர்கள்

இந்த விஷயத்தில் பர்மிய அறிவாளிகள் செலுத்திய ஆத்திரத்தை அதிகாரிகள் கவனிக்கவேயில்லை. இவ்வித அசிரத்தையை பர்மிய அறிவாளிகள் முன்னேப்போல, ஆட்டுக் குட்டித்தனமாகப் பொறுத்துக் கொண்டிருப்பார்களென்று, "ஆகாசத்திலிருந்து நேராக இறங்கி வந்த" ஆங்கிலேய அதிகாரிகள் தீர்மானம் செய்து கொண்டனர். ஜெர்

மனியிலும் ருஷியாவிலுந்தான் காலச் சக்கரம் சுழலுகிறதென்றும் பர்மாவில் சுழலவில்லையென்றும், ஸ்தம்பித்து நிற்கிறதென்றும், மேற்படி ஆகாச குமாரர்கள் எண்ணினார்கள். ஆனால், பர்மாவில் காலச்சக்கரம் இங்கிலாந்தைக் காட்டிலும் அதிக வேகமாகச் சுழன்று வந்திருக்கிறது. இந்த விஷயந் தெரியாமல் வழக்கம்போலே அதிகாரிகள் மஹாத்மா காந்தியின்மீது பழி சுமத்தி அவரைத் தூற்றுகிறார்கள்.

பர்மிய படிப்பாளிகளுக்கும், அதிகாரிகளுக்கு மிடையே நிகழ்ச்சி பெற்றிருக்கும் மனஸ்தாபத்தின் ஆதாரம் பின்வருமாறு:—பம்பாய் மாகாணத்தைப் போல் பர்மா ஒன்றரை மடங்கு பெரிது. ஆயினும், பர்மா முழுமைக்கும் ரங்கூன் நகர மொன்றி லுள்ள இரண்டே முதல்தரக் கலாசாலைகளிருக் கின்றன. பர்மா முழுமைக்கும் உயர்தரப் பாட சாலைகள் 23; ஆரம்பப் பாடசாலைகள் சுமார் 8000 (எண்ணூயிரம்). பம்பாய் மாகாணத்திலோ 200 (இருநூறு) உயர்தரப் பாடசாலைகளுக்கதிகமே யுள் ளன. ஏறக்குறைய 15000 (பதினையாயிரம்) ஆரம்பப் பாடசாலைகளிருக்கின்றன.

இந்த நிலைமையில், பர்மா கவர்ன்மெண்டார் ரங்கூன் யூனிவர்ஸிடியை மாகாணத்துக்குப் பொது வாக்காமல், வஸதி ஸஹிதமாக, (ரங்கூன் நகரத்தில் வந்து வஸிப்போருக்கு மாத்திரம் பயன்படும்படி) வைக்க வேண்டுமென்று தீர்மானித்தபோது, ஜனங் களுக்கு வருத்த முண்டாயிற்று. ஏனென்றால், ஸர்வகலா ஸங்கம் மாகாணத்துக்குப் பொதுவாக இருக்குமாயின், அதன் மூலமாக அதிகப் பிள்ளைகள் கலைடத்தேற முடியும். இப்போதுள்ள சட்டப்படி, அதன் கட்டிடத்தில் ஏராளமான பணம் செலவு செய்துகொண்டு வாஸம் செய்யக்கூடிய மிகச் சில மாணக்கருக்கே அது பயன்படும். வஸதி ஸஹித

மான ஸர்வகலா ஸங்கத்தால் விளையக்கூடிய விசேஷ நன்மைகளை மாணுக்கர் எய்தும்படி செய்வதே நோக்கமெனின்; அப்போது, மாகாண முழுமைக்கும் போதியவாறு ஐம்பது அல்லது நூறு ஸங்கங்கள் ஸ்தாபனம் செய்வதற்குரிய பணச் செலவை ராஜாங்கத்தார் பொறுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

மேலும், அந்த ஸர்வகலா ஸங்கத்துடன் ரங்கூன் நகரத்திலுள்ள பாடசாலைகளை மாத்திரமே சேர்க் கலாமென்று சட்டம் செய்திருக்கிறார்கள். எனவே, மற்ற எவ்விடத்திலும் முதல்தரக் கலாசாலை ஏற் படுத்தக் கூட வழியில்லாமற் போய்விடும். ஸர்வகலா ஸங்க ஸம்பந்தமில்லையெனில் முதல்தரக் கலாசாலை ஸ்தாபித்தல் பயன்படாதன்றே?

ராஜாங்கத்தார் ஜனங்களுக்குக் கல்வியளிக்க வேண்டுமென்ற விருப்பம் உண்மையாகவே உடையோரென்று காண்பிக்க வேண்டுமாயின், மாகாணமெங்கும் ஆயிரக் கணக்கான பாடசாலைகளையும் கலாசாலைகளையும் ஸ்தாபித்து, அங்கங்கே முக்ய நகரங்களில் வஸதி ஸஹிதமான ஸர்வகலாஸங்கங்களை அமைத்தல் இயலும்படி செய்யவேண்டும்.

இதையன்றி, ஒரு வருஷ ஆரம்பப் பயிற்சி அதிகமாக வைத்திருத்தல், "ஸெனேட்" ஸபையில் பிரதிநிதித் தன்மையின்மை, என்ற வேறு சில அம்சங்களிலும் பர்மியப் படிப்பாளிகளின் கொள்கை ஸர்க்கார் கொள்கையினின்றும் மாறுபட்டிருக்கிறது.

இந்த அம்சங்களனைத்திலும் பொது ஜனங்களின் நன்மைக்கும் தீர்மானத்துக்கும் தக்கபடி தம்முடைய சட்டத்தை மாற்றிக் கொள்வதே ஜனங்களிடையே கொழுந்து விட்டெறியும் அதிருப்திக் கனலை அவிக்க வழியாகுமன்றி, மஹாத்மா காந்தியை தூஷணை செய்வதில் அதிகப் பயன் விளையாதென்பதை பர்மா கவர்னர் தெரிவாராகுக.

உலக நிலை

சக்திதாஸன்

19 ஜனவரி 1921 ரௌத்திரி தை 7

லார்ட் மில்நரைத் தள்ளியதால் முகாந்தர மென்ன?

குடியேற்ற மந்திரி ஸ்தானத்திலிருந்து லார்டு மில்நர் விலகிக் கொண்டதாகவும், அவர் எகிப்தின் விஷயத்தில் செய்த வேலையினால் அந்த விலகுதல் ஏற்படவில்லை யென்றும் ராய்ட்டர் இந்தியாவுக்கு மிக ஸங்கரஹமாக ஸாதித்திருக்கிறார். "என் பிதா மெத்தையில் ஒளிந்திருக்க வில்லை" யென்று, கதை யில் ஸாக்ஷ்ய முரைத்த குழந்தையின் நல்லெண் ணத்தை எய்தியே ராய்ட்டர் இங்ஙனம் தந்தி கொடுத்திருக்கிறரென்று வெளிப்படை யாகவே தோன்றுகிறது. எகிப்துக்கு, ஆதியில், (ப்ரான்ஸ், அமெரிகா முதலிய தேச ராஜ்யங்களின் தூண்டு தலாலே) ஏறக்குறைய ஸ்வாதீனமே கொடுப்பதாக விளம்பரம் செய்துவிட்டார்கள். ஸூயேஸ் கால்வா யைத் தமக்கு வைத்துக் கொண்டார்கள். வேறு சில பூமிகளையும் பல உரிமைகளையும் கவர்ந்து கொண்ட னர். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பரிபூர்ண ஸ்வா தீனம் கொடுப்பதாகவே வாக்குறுதி செய்து, பூமண் டலமறிய் முழங்கி விட்டார்கள். இந்தியாவைப்

போல் எகிப்து பண வரவுள்ள பூமியில்லை. மெஸப டோமியாவை விழுங்கியதற்கு இஃதொரு பரிஹாரம் போன்றதாய் முஸல்மான்களை நமக்கு வசப்படுத்தக் கூடும். ஸூயேஸ் கால்வாய்தான் எகிப்திலே ஸாராம்சம். அதை நாம் வைத்துக்கொண்டாய் விட்டது. மேலும் நமது படை எப்படியேனும் எகிப்திலிருக்குமாதலால், எகிப்து தேசத்து ராஜாங்கத்தாரை ஸ்வாதீனங் கொடுத்த பின்னரும், நமது கைப் பொம்மைகளாக நம் இஷ்டப்படி ஆட்டிவரலாம். இப்போதைக்கு ப்ரான்ஸ், அமெரிகா முதலிய நேச கோடிகளின் வயிற்றெரிச்சலுக்கு இஃதோர் ஆறுதல் போலாகக் கூடும். தவிரவும், அந்த தேசம் விடுதலைக்காக எப்பாடும் படக்கூடிய நிலைமையிலிருக்கிறது. என, இங்ஙனம் பல காரணங்களை உத்தேசித்து ஆங்கில மந்திரிகள் ஆரம்பத்தில் எகிப்துக்கு ஸ்வாதீனங் கொடுப்பதாகிய இதிஹாஸத்தை ப்ரசுரப் படுத்தினர்கள். பின்னிட்டு, "நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது." என்ன செய்யலாம்? லாய்ட் ஜ்யார்ஜ் உபதேசம் பண்ணுகிறார். கடவுள் தீர்ப்புப் பண்ணுகிறார்.

எதிர்பாராத விளைவுகள்

ஆங்கில மந்திரிகள் தினை விளைத்தோ மென்று கருதித் தினையறுக்கச் சென்ற இடத்தே பனை முளைத்திருக்கிறது. எகிப்துக்கு இவர்கள் ஸ்வாதீன விளம்பரம் செய்ததினால், முஸ்லிம் உலகத்தின் கோபம் ஆறவில்லை. முன்னிலும் அதிகமாகக் கொதித் தெழுந்தது. எகிப்தை விடப் போகிறார்களா? வாஸ்தவந்தான். துருக்கியை ஏன் விடவில்லை? விடுவிக்கவில்லை? மெஸபொடோமியாவை, ஸிரியாவை ஏன் விடவில்லை? விடுவிக்கவில்லை? பாரஸீகத்தை ஏன் விழுங்க முயன்றார்கள்? அரபியாவை ஏன் விழுங்க முயலுகிறார்கள்? இந்தியாவுக்கு விடு

தலை எப்போது? இத்தனை கேள்விகள் சீறுவாணம் வீசிக் கொண்டிருந்த இடத்தில் எகிப்துக்கு இவர்கள் ஸ்வாதீன விளம்பரம் செய்ததினின்றும் உலகத்து முஸல்மான்களின் புதிய மனக் கொதிப்புக்கள் அடங்கவில்லை. இப்படித்தான் நேருமென்பதை யாரும் முன் யோசனையாலே தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் அவருடைய ப்ரிய ராஜரீகத் துணைவருக்கும் ஊஹ சக்தி குறைவு. நாளைக்குக் காலியில் இன்ன கார்யம் இப்படியாகக் கூடுமென்பதை யுணரும் எதிர்கால ஞானமில்லாதோர் மந்திரி ஸ்தானத்துக்குத் தக்கோரல்லர். எனினும், இவர்கள் அதனாலே ஸங்கடங்களுக்குட்படுவது கிடையாது.

மாற்றிச் சொல்லும் வித்தையில் மஹா மஹோபாத்யாயர்

ஏனெனில்-ஒரு முறை சொல்லியதை மறுமுறை மனஸ்ஸாக்ஷியை வீசி யெறிந்துவிட்டு, மாற்றிச் சொல்லும் வித்தையில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ்ம், அவருடைய ஸஹ மந்திரிகளும் மஹா மஹோபாத்யாயப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். அமெரிகாவிலிருந்து "ஸ்வதந்தர பரியோஷணை ஸங்கத்தின்" (1) அத்யக்ஷகர்களாகிய ஆங்கில மந்திரிகள் எதிர்பார்த்த கைம்மாறுகள் கிடைக்கவில்லையென்று புலப்படுகிறது. அதினின்றும், எகிப்துக்குக் கொடுத்த வாக்குறுதியை அசைக்கலா மென்ற உத்தேசம் மேற்படி அத்யக்ஷகர்களுக்கேற்பட்டு விட்டதோ என்றெமக்கோர் ஐயமுண்டாகிறது. அங்ஙனம் அந்த வாக்குறுதியைக் கொஞ்சம் புதிய வ்யாக்யானங்களுக் குட்படுத்துவதற்கு முகவுரையாக லார்ட் மில்நரைச் சிறிது காலத்துக்கு விலக்கி வைத்திருக்கிறார்களென்று தோன்றுகிறது. ஆனால் இதிலும் உத்தேசந்தான் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ்

கூட்டத்தாருக்குரியது. தீர்ப்பு கடவுளுக்குரியது. முதலாவது, கடவுளுக்கும் இரண்டாவது எகிப்துக்கு முரியது.

"கிலாபத்" விஷயம்

ஸ்மர்ஞவில் ஆஹாரமின்றி வருந்தும் முஸ்லிம் களுடைய ஸம்ரக்ஷிப்புக்கு பாரத மத்ய "கிலாபத்" ஸமிதியார் ஐயாயிரம் பவுன் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. இது போன்ற செயல்களே உலகத்து முஸ்லிம்களுக்குள் ஏற்கெனவே யுள்ளதாகிய ஸஹோதரப் பற்றுதலை இன்னும் உறுதிப் படுத்தும் நற்செயல்களாம். இது நிற்க, கிலாபத் ஸமிதிகளின் முயற்சியால் ஒத்துழையாமைக் கொள்கை நாட்டில் உறுதியடைந்து வருதல் யாராலும் மறுக்க முடியாத செய்தி. இந்த ஸமயத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் அசிரத்தையாக இருப்பதைப் பார்த்து நமக்குப் பெரு வியப்புப் தோன்றுகிறது. "ஸெவர்" உடம்பாடு, அநீதி, நஷ்டம், அபகீர்த்தி - இவை வேண்டுமா? முஸ்லிம்களின் நட்பு, நீதி, கீர்த்தி, நஷ்டமெய்தாமை இவை வேண்டுமா? இந்திய முஸ்லிம்களே இக்காலத்தில் உலகத்து முஸல்மான் களுக்கு முக்யப் பிரதிநிதிகள். இந்திய முஸ்லிம்கள் என்ன நினைப்புகள் கொண்டிருக்கிறார்களென்பதை இந்தியா கவர்ன்மெண்டார் மேன் மேலும் அழுத்த மாக வற்புறுத்தித் தெரிவித்தலான்றித் தாமாகவே தெரிந்து வேலை செய்யக்கூடிய அத்தனை புத்திமான் களுமல்லர் லாய்ட் ஜ்யார்ஜ் ஸபை மந்திரிகள்.

குறிப்புகள்

சக்திதாஸன்

19 ஜனவரி 1921 ரௌத்திரி கை 7

ஸௌந்தர்ய மஹால் உபந்யாஸத்தில் கர்னல் வெட்ஜ்வுட் இந்த மாகாணத்தாருக்கு ஓரிரண்டு நேர்த்தியான புத்திமதி சொல்லி யிருக்கிறார். இந்த கவர்ன்மெண்டுக்குச் சட்ட ஸபையில் தோன்றும் எதிர்க் கக்ஷி நாளுக்கு நாள்வளர்ச்சி யெய்தித் தீரும். பார்லிமெண்ட் அனுஷ்டானங்களைப் பழமைப்பட்ட சிதலமான, பிளவுபட்ட முறைகளிலே அனுஷ்டிக்கும் ராஜாங்கத்தாருக்கு எதிர்க் கக்ஷி மேன்மேலும் வளர்ச்சி பெறுமென்பது திண்ணம். முதலாவது விதிகளையும் உபவிதிகளையும் தக்கவாறு மாற்றி ஒரு சீட்டாளிக் கூட்டத்துக்கொரு பிரதிநிதியென்று ஏற்படுத்த வேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதி முறையை ஒழித்துவிட வேண்டும். அது வெறும் சதி, ஏமாற்றென்பது திருஷ்டாய் விட்டது. பிரமணரல்லாதாருக்குத் தனியாக ஸ்தானங்கள் ஏற்படுத்தியது புத்தியில்லாத குழந்தை விளையாட்டன்றி மற்றில்லை. மஹமதியர்களுக்குப் பொதுக் கூட்டத்துடனே சீட்டுப் போடலாமென்ற ஏற்பாடு வைத்திருந்தால், அவர்கள் பொதுவாக எல்லாப் பிரதிநிதிகளிலும் யார் யார் முஸ்லிம் அனுகூலங்களைக் கவனியாதிருந்தனரோ, அவர்களை யெல்லாம் நீக்க முயன்று

ஸபையில் தமக்கு அதிக பலம் ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள். இப்போது அவர்கள் குறிப்பிட்ட சிலரையன்றி மற்றப் பிரதி நிதிகளின்மீது எவ்வித சக்தியுமில்லாதிருக்கிறார்கள். அச் சிலரோ சட்ட சபையில் எப்போதும் சிறு பகுதியாகவே யிருப்பார்கள் என்று கர்னல் வெட்ஜ்வுட் சொன்னார்.

தீர்வைப் பாகுபாடு

குறிப்பிட்ட அளவைக் காட்டிலும் அதிக விஸ்தாரமான பூஸ்திதியுடையவர்களுக்கு அதிகமான தீர்வை விதித்தால், அவர்கள் அந்த ஸங்கடத்தைப் பொறுக்க முடியாமல், தங்களுடைய நிலத்தில் மிஞ்சின பகுதிகளைச் சிறு குடியானவர்களுக்கு விற்கத் தலைப்படுவார்கள். அதினின்றும், பூஸ்திதி முழுமையும் இப்போது மூன்றே முக்கால் மனிதரின் கையில் சிக்கிக் கொண்டிருக்கையிலே பண்ணைத் தொழிலாளிகள் தம் தொழிற்பயனே யுண்ண மாட்டாத கூலியாட்களாக இருக்கும் நிலைமை மாறிவிடும். பூஸ்திதி ஆதி திராவிடரிடையேயும், மற்றக் குடியானவரிடையேயும் அதிகமாகப் பரவுதலெய்தியிருக்கும். இதைக் கருதிப் பெரிய பூஸ்திதிகளுக்கு அதிகத் தீர்வை விதிக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கர்னல் வெட்ஜ்வுட் அபிப்பிராயப்படுகிறார். இந்தியாவில் பூஸ்திதி விவகாரத்தை முற்றிலும் நியாயமாகத் தீர்த்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறோம். வரம்புக்கு மிஞ்சின தீர்வையை ஒரு பகுதியாருக்கு மாத்திரம் விதித்தல் அநியாயமென்பதில் ஐயமில்லை. கொள்ளைக்காரனும் கொள்ளையடிக்கக் கூடாது. உலகத்தில் கொள்ளை கூடாதென்று நிலைநிறுத்த வந்த தர்மிஷ்டர்களும் கொள்ளையடிக்கக் கூடாது. இப்போது கர்னல் வெட்ஜ்வுட் காட்டுகிற பாதை கடைசியாக லெனினுடைய கொள்கையில் வந்து முடியும். அதாவது,

பூஸ்திதிகளே யெல்லாம் ராஜாங்கத்தார் ஜனங்களுக் கென்று சொல்லிப் பலாத்காரமாகப் பறித்துக் கொண்டு உடையவரைத் தெருவில் விடவேண்டு மென்ற கொள்கை.

இங்ஙனம் கொள்ளையிடாமல், ஏழைகள், அதாவது, பூஸ்திதியில்லாதவர்களிடம் ஊர்ப் பொது நன்மைக்கும் அபிவிருத்திக்குமுரிய ஸகலவித வேலை களும் வாங்கிக்கொண்டு, அதற்குக் கைம்மாறாக, ஒருயிர் மிச்சமில்லாமல், அத்தனை ஏழைகளுக்கும் தகுந்த ஆஹாரம் கொடுத்துவிட வேண்டுமென்று சட்டஞ் செய்துவிட்டால் போதும். ஒருயிரேனும், ஒருபோதேனும், சோறின்றி இளைக்க ராஜாங்கம் இடங் கொடாதென்ற உறுதிப்பாடு ஏற்பட்டுவிடும். அடே அப்பா! பசிப் பயமொன்று மாத்திரம் நீங்கி விட்டால் மனித ஜாதி என்ன மேன்மையடைந்து நிற்கும்! இங்ஙனம், ஸமாதானமான முறையில் இந்தப் பசித் தொல்லையை இந்தியா மாற்றிவிட் டிருப்பதைக் கண் முன்னே காணில், மற்ற உலகத்து நாடுகளும் இந்த அறநெறியைப் பின்பற்றி யொழுகும். இதற்கு ஸ்வராஜ்யம் வேண்டும்!

இங்கிலாந்தில் தொழிலற்றோரின் நிலைமை

தொழிலின்றி யிருப்போருக்குள்ளேதான், இங் கிலாந்து போன்ற தேசங்களில், ருஷியக் கொள் கைகள் வெகு தீவிரமாகப் பரவி வருகின்றன. பொதுவாக அக்கொள்கைகள் தொழிலாளரைக் குறித்தன. ஆதலால் தொழிலாளரிற் பலர் அக் கொள்கைகளை அங்கீகாரம் செய்கிறார்கள். எனினும், அக் கொள்கைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில் தொழிலாளர் காட்டும் சிரத்தையைக் காட்டிலும், தொழிலின்றி, உணவின்றி வருந்தும் கூட்டத்தார் பல மடங்கு அதிக சிரத்தை காட்டு

கிறார்கள். எனவே, பொதுவாக ஜனோபகார சிந்தையால் மாத்திரமேயன்றி, ராஜ்ய தந்திரத்தின் அவஸரங்களாலும் ஐரோப்பிய ராஜ தந்திரிகள் தத்தம் நாடுகளில் தொழிலற்றிருப்போருக்கு ஏதேனும் நிவாரணம் செய்ய வேண்டுமென்ற அவசியத்துக்குட்பட்டிருக்கிறார்கள். எனவே, இங்கிலாந்தில், தொழிலில்லாதோரைப்பற்றி ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணை ஸபை யொன்றுளது. அதில் வந்து தம்முடன் கலந்து வேலை செய்யும்படி தொழிற் சங்கங்களின் ஐக்ய மஹாஸமாஜத்தாருக்கு ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அழைப்புப் பத்திரமனுப்பினார்கள். அந்தத் தொழிலாளிகள் இது தம்மால் இயலாதென்று சொல்லி மறுத்துவிட்டார்கள். ஸர்க்கார்க் கமிட்டி மூலமாக யாதொரு பயன்படக்கூடிய தொழிலும் நடக்காதென்றுணர்ந்த அத்தொழிற் பிரதிநிதிகள் அவ்விஷயமாகத் தம்மால் இயன்ற பரிஹாரங்கள் செய்யும் பொருட்டுத் தம்முடைய சொந்த ஆலோசனை ஸமிதியொன்று நியமனம் செய்திருக்கிறார்கள்.

ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரின் கருக்கு யோசனை

கவர்ன்மெண்ட் கார்யங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைத்தால் அவர்களுக்கும் ஆறுதல் ஏற்படும்; தொழிலின்றி யிருப்போர் பலருக்கு ராஜாங்கத்தார் தொழிலேற்படுத்திக் கொடுக்கவும் வழியுண்டாகும். இங்ஙனம் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் சொல்லிய உபாயத்தைத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், ஸர்க்கார் வேலையாட்களும் நிராஹரித்து விட்டனர். ஏனென்றால், குறைந்த நேரம் வேலை செய்து, தொழிலாளிகள் அதற்குத் தக்கபடி குறைந்த சம்பளம்

பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்ட் சொல்லுகிறது. இப்போதுள்ள சம்பளத்துக்குக் கீழே வாங்கினால் ஜீவிக்க முடியாதென்று தொழிலாளிகள் சொல்லுகிறார்கள்.

இந்தியாவில் தொழிலற்றிருப்போர்

இங்கிலிஷ் படித்தவர்களுக்குள்ளே குறைவாகவும் அதாவது ஆயிரக்கணக்காகவும், இங்கிலிஷ் படிப்பில்லாதவர்களுக்குள்ளே மிகுதியாகவும் அதாவது லக்ஷக்கணக்காகவும் யாதேனும் தொழில் செய்து பிழைக்க வேண்டுமென்ற ஆவலும் தொழில் செய்யுந் திறமையுமுடையோராயினும் தொழிலகப்படாமல் வறுமைப் பிசாசினால் கிழிப்புண்டு மடிகிறார்கள். ஏனென்று கேட்பாரில்லை. ராஜாங்கத்தார் இந்த விஷயத்தை ஸ்மரிக்கவேயில்லை. ராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள் இதைக் கருதுவில்லை. மடாதிபதிகள், தர்மகர்த்தாக்கள் இதனை ஸ்மரிக்கவில்லை. ஜனத் தலைவர்கள், ராஜ்ய தந்திரிகள் இதைக் கருதவில்லை. உபந்யாஸகர்களும், பத்திராதிபர்களும், உபாத்யாயர்களும் இதைப் புறக்கணித்து விடுகிறார்கள். இந்தியாவிலே பசியால் மடிவோரைப் பார்த்திரங்குவாரில்லையா? தெய்வமில்லையா?

கால விளக்கு

சக்திதாஸன்

4 பிப்ரவரி 1921 ரௌத்திரி தை 23

"நாகரிகத்தின் ஊற்று"

ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரி ஸ்தானத்திலிருந்தவராகிய ஸ்ரீமான் க்ளெமான்ஸோ சில தினங்களாக இந்தியாவில் ஸஞ்சாரம் பண்ணி வரும் செய்தி நம் நேயர்களுக்குத் தெரிந்ததேயாம். இவருக்குச் சில நாட்களின் முன்னே பம்பாயில் நடந்த விருந்தின்போது இவர் செய்த ப்ரஸங்கத்தில் பின்வரும் ஸார மயமான வாக்யம் காணப்படுகிறது:—

"ப்ரான்ஸிற்காக இரத்தம் சிந்திய மக்களைப் பெற்ற தேசத்தை வந்து பார்த்தது எனக்குப் பெருமையுண்டாக்குகிறது. ப்ரெஞ்ச் குடும்பங்களுடன் இந்திய சிப்பாய்களிருந்தபோது நான் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய மரியாதையும் அன்பும் ப்ரான்ஸ் தேசத்தாரை மோஹிக்கும்படி செய்தன. கீழ்த்திசையானது நாகரிகத்தில் குறைந்ததன்று. அன்பு மானுஷீகம் என்பவற்றிற் குரிய மஹோந்நதலக்ஷ்யங்களெல்லாம்கீழ்த்திசையிலிருந்து வந்தன. மேற்குத் திசையார் அவற்றை ஸ்வீகரித்துத் தம்முடைய லக்ஷ்யங்களாகச் செய்து கொண்டனர். எனவே, உங்களைக் காட்டிலும் உயர்ந்த நாகரிகத்

தின் ப்ரதிநிதியாக என்னை மதித்து நான் உங்களோடு பேசவில்லை. (இந்தியாவாகிய) நாகரிகத்தின் ஊற்றை நோக்கி நீஞ்சி வந்தவனுக என்னை மதிக்கிறேன்" என்றார்.

இவர் யார்? ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரியாக இருந்து அதி ஸமீப காலத்தில் விலகியவர். வெறும் இலக்கியப் படிப்பு மட்டும் உடையவரல்லர். மிகவும் பழுத்த லௌகிகத் தேர்ச்சியும், ஐரோப்பிய ராஜ தந்த்ரத்தில் மஹாகீர்த்தி வாய்ந்த நிபுணத் தன்மையு முடையவர். இவரே பத்து வருஷங்களுக்கு முந்தி இவ்விதமாகப் பேசியிருக்கமாட்டார். இரண்டு வருஷங்களுக்கு முன் இப்படிப் பேசியிருக்க மாட்டார். நினைத்துக்கூட இருக்கமாட்டார். ஐரோப்பிய நாகரிகமே மேம்பட்டதென்று நினைத் திருப்பார். இன்றைக்கு இந்தியாவை வந்து கூடிய வரை நிஷ்பக்ஷபாதமான, தெளிந்த விழிகளுடன் பார்க்கும்போது, இந்த எண்ணம் இவர்மீது வற் புறுத்தப் படுகிறது. இவருடைய வசனத்தை நன்றாக ஊன்றிப் படிக்கும்படி நம்மவர்களை வேண்டுகிறேன். இவர் என்ன சொல்லுகிறார்? ஐரோப்பிய நாகரிகத் தின் பரம லக்ஷ்யங்கள் அவர்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றக் கருதும் தர்மங்கள், ஐரோப்பாவுக்கு சொந்தமல்ல வென்றும் அவை கீழ்த்திசையி லிருந்தே கிடைத்தன வென்றும் சொல்லுகிறார். நாமே ஐரோப்பாவுக்கு லக்ஷ்ய தானம் செய்தோ மென்றும் நம்முதவியின்றி அவர்கள் இன்னும் பச்சை குத்திய நிர்வாணமான காட்டு ஜனங்களா கவே யிருந்திருப்பார்களென்றும் அங்கீகரித்துக் கொள்ளுகிறார். ஆசியாவிலிருந்து நாகரிகம் ஐரோப் பாவுக்குச் சென்றது. ஆசியாவின் நாகரிகத்துக்கு மூல ஸ்தானம் நமது பாரத வர்ஷம். ஆனால் முற்காலத்தில் நாம் எத்தனை உயர்ந்த நிலைமையி லிருந்து உலகத்திற்கு எத்தனை அரிய நலங்கள்

செய்த போதிலும் இப்போது நாம் சரியான நிலைமையிலில்லாதிருப்போமானால் நமது பண்டைக் காலப் பெருமை யாருக்கும் நினைப்பிராது. இன்று மீண்டும் நமது தேசம் அபூர்வமான ஞானத் திகழ்ச்சியும் சக்திப் பெருக்கமும் உடையதாய்த் தலை தூக்கி நிற்பதே நமது பெருமையைக் குறித்து ஸ்ரீமான் க்ளெமான்ஸோ முதலியவர்கள் மேலே காட்டியபடி பூஷித்துப் பேசக் காரணமாகிறது. எனினும், நாம் உலகத்திற்குப் புது வழி காட்டத் தகுதியுடையோமென்பதை ருஜுப்படுத்தி யிருக்கிறோமேயன்றி இன்னும் அந்த ஸ்தானத்தில் நாம் உறுதி பெறவில்லை. "மேற்குத் திசையிலிருப்பது போலவே இங்கும் மனிதர், பரஸ்பரம் அன்பு செலுத்தும்படி விதித்த கடவுளின் கட்டளையை மறந்து, ஒருவருக் கொருவர் விரோதிப்பதையும் கொலை புரிவதையும் கண்டு நான் வ்யஸனப் படுகிறேன்" என்று ஸ்ரீ க்ளெமான்ஸோவே சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த ஸமயத்தில் இந்தியாவில் பரவிவரும் ஸாத்விக தர்மக் காற்றை சுவாஸியாமலிருப்பாரானால், ஸ்ரீ க்ளெமான்ஸோவின் வாக்கில் இந்த வார்த்தை உதித்தே யிராதென்று நான் நிச்சயமாகக் கூறுவேன். இப்போது ஸ்ரீ க்ளெமான்ஸோ பாரீஸ் நகரத்திலிருந்தால் அங்கு மறுபடி வீசி வரும் ஜெர்மானிய விரோதக் காற்று இவரையும் தாக்கி, இவருடைய புத்தி ஸாத்விக நெறிகளிலே செல்ல இடங் கொடுத்திராது. எனவே, இந்தியா அன்பு நெறியால் வலிமை யோங்கி உலகை நடத்த வேண்டுமென்ற கொள்கையை ஆசரிக்கத்தொடங்கிவிட்டது. இந்த ஆசாரத்தின் ஆரம்பக் கலைகளே மிகவும் ஆச்சர்யமாக, உலகத்தாரெல்லாருங் கண்டு வியக்கும்படி யிருக்கின்றன. இனி இக் கொள்கை இந்தியாவில் மக்களுக்குள்ளே எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் பூர்ணமாக ஸ்தாபிக்கப்பட்டு விளங்கும்

காலத்தைக் கடவுள் விரைவிலே அருள் செய் வாராகுக.

ஸிர்ஸி ஜில்லா கமிஷனர்

பம்பாய் மாகாணத்தில் ஸிர்ஸி ஜில்லா கமி ஷனர் மிஸ்டர் காடெல் என்பவரிடம் மூன்று இந்திய கனவான்கள் ஒரு விண்ணப்பம் கொண்டு போனர் கள். அப்போது அந்த மூவரையும் மிஸ்டர் காடெல் அடித்தார்; புடைத்தார்; கழுத்தை நெரித்தார். இந்தப் படிக்கு ஸிர்ஸி நகரத்தார் மூன்று பேர் கையெழுத்திட்டு "பம்பாய் க்ரானிகள்" பத்திரி கைக்குஒரு கடித மெழுதினர்கள்.பின்னிட்டு பம்பாய் கவர்ன்மெண்ட் கார்யதரிசி மிஸ்டர் கரேரர் என் பவர் அவ்விஷயமாக ஸர்க்கார்ப் பக்கத்து வாக்கு மூலமொன்றை அதே பத்திரிகைக்கனுப்பினர். அதற் குப் பிறகு மறுபடி மூன்று பேர் மேற்படி ஸம்பவம் நடக்கையில் ஸாக்ஷிகளாக நின்று பார்த்தோர் அந்தப் பத்திரிகைக்குக் கையொப்பமிட்டனுப்பி யுள்ளகடிதமொன்றில் ஸர்க்கார் வாக்குமூலம்பிழை யென்றும் மிஸ்டர் காடெல் மனதறிந்து, வேண்டு மென்றே புடைத்தா ரென்றும் தெரிவிக்கிறார்கள்.

பம்பாய் கவர்னர் இந்த விஷயத்தைக் குறித்து விசாரணைகள் நடத்தி வருகிறார். ஆனல் மாமூல்படி அடித்த உத்தியோகஸ்தரை மாத்திரம் விசாரித்து, அவர் தாம் புஷ்பாஞ்சலி செய்ததாக எழுதும் அறிக்கையைப் படித்து, கவர்ன்மெண்டார் திருப்தி கொண்டிருந்தால் போதாது. கை வீசி அடிக்கும் அநாகரிக மனிதர் ஸர்க்கார் உத்யோகஸதர்களா கவும் ஜில்லா "மாஜிஸ்ட்ரேட்களாக"வும் இருந்து நீதி பரிபாலனம் செய்யும் கோலத்தை இந்தியா இன்னும் ஒரு க்ஷணங்கூடப் பொறுத்திராது.

மிஸ்டர் காடெல் அடித்த காரணம்

இதைப் பற்றிய பூர்வ கதையை ஸமீபத்தில் ப்ரசுரமாயிருக்கும் ஸாக்ஷிகளுடைய கடிதத்தி

லிருந்து ஸங்க்ரஹமாக எடுத்தெழுதுகிறோம்:— வண்டிகளைக் கமிஷனருடைய அவசியத்துக்காகப் பிடித்து வரும்படி போலீஸாருக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்தக் கட்டளையை நிறைவேற்றுகையிலே பலவித அதிக்கிரமங்களிழைத்தனர். ஒரு காளைக்குக் கழுத்தில் புண்ணுப் இரத்த மொழுகிக் கொண்டிருந்தது. அந்தக் காளையையும், வண்டி சொந்தக்காரர்களையும் உடன் கொண்டு, நகரத்து ப்ரமுகர் கமிஷனரிடம் அதன் ஸம்பந்தமாக மனுச் செய்துகொள்ள வந்தார்கள். துரைக்கு வண்டி கொடுக்கச் சொன்னால், அதை யெதிர்த்து மனுக் கொடுக்க வந்தார்கள் பார்த்தாயா என்ற கோபம் கமிஷனரின் தலைக்கேறி விட்டது. உடனே அபிமன்யு சண்டை! கண்டவனுக்கெல்லாம் அடி, குத்து, மிதி, உதை! ஆனால் இந்த அபிமன்யுவுக் கெதிரே வில்லாளிகளில்லை; வெறுமே விண்ணப்பச் சொல்லாளிகள் இருந்தனர். எனவே, மிஸ்டர் காடெல் உயிர் தப்பியதுமல்லாமல், பின்னிட்டு ஸர்க்கார் விசாரணையிலே விஷயங்களை உண்மை தவறிச் சொல்லிவர இடமேற்பட்டதென்று மேற்படி சாக்ஷிகள் தெரிவிக்கிறார்கள்.

ஸ்ரீமான் போமான்ஜியின் நல்கொடை

பம்பாயில் மாணக்கர்களுடைய இயக்கத்தில் ஸ்ரீமான் போமான்ஜி மிகவும் சிரத்தையெடுத்து வருவதாகத் தெரிகிறது. இந்த இயக்கத்தை நடத்தி வருபவராகிய ஸ்ரீமான் தேச பாண்டேயினிடம் ஸ்ரீ போமான்ஜி 10,000 ரூபாய் கொடுத்திருக்கிறார். பாடசாலை விட்டு ஒத்துழையாமைக் கிளர்ச்சிக்கு உதவி செய்யும் மாணக்கர்களின் தற்காலச் செலவுகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளும்படி இந்தப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சில குறிப்புகள்

சக்திதாஸன்

8 பிப்ரவரி 1921 ரௌத்திரி தை 27

கட்டாயக் கூலி

சிம்லா பிரதேசங்களிலும், அவற்றையடுத்த குமாலன் பிரதேசங்களிலும் கட்டாயக் கூலி முறை இன்றும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. எவராவது நிர்வாஹ உத்தியோகஸ்தர் அல்லது ராணுவ உத்தியோகஸ்தர் அல்மோரா, நைநிதல், கட்வால் என்ற ஜில்லாக்களில் யாத்திரை செய்வாராயின், "பட்லாரி" எனப்படும் கிராமாதிகாரிகளுக்கு இத்தனை கூலியாட்கள் தயார் செய்து கொடுக்கும் படி கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. பட்லாரியாரை வேண்டுமானலும் கூப்பிடலாம். அங்ஙனம் மைல் கணக்காக நடந்து வந்து, பிறகு மைல் கணக்காக மூட்டைகளைச் சுமந்து சென்று மீட்டும் அந்தக் கூலியாட்கள் தத்தம் வாஸஸ்தலங்கள் போய்ச் சேர மூன்று நாட்கள் பிடிக்கின்றன. இந்த மூன்று நாளுக்கும் சேர்த்துச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஆறணு. மகன் சாகக் கிடக்கும்போது பிதாவைக் கூலிவேலைக்கழைத்தால் அப்பிதா தன் மகனைக் கவனியாமல், துரைக்கு மூட்டை சுமக்க வந்து தீரவேண்டும். வராவிட்டால் 5 ரூபாய் அபராதம்.

இந்தமாதிரி அந்த ஜில்லாக்களில் வஸிப்யோர் கட்டாய வேலைக்கு வரவேண்டுமென்று ஸர்க்கா ருக்கும் அந்த ஜனங்களுக்கும் நெடுங் காலத்துக்கு முன்னே செய்துகொள்ளப்பட்டதோர் உடம்பா டிருக்கிறதாம்! பின் சந்ததியாரை ஜில்லாக்கணக்காக அடிமைகளாக இருக்கும்படி பூர்வ ஸந்ததியாரில் ஒரு சில மனிதர் எழுதிக் கொடுக்கும் உடம்பாடு செல்லாதென்பதை நம் அதிகாரிகள் அ றி ய மாட்டார்கள் போலும்! சென்ற 18 வருஷங்களாக இந்த அனுஷ்டானத்தை ஒழித்து விடும்படி அந்தப் பிரதேசத்தார் ஸர்க்காருக்கு ஓயாமல் வி ண்ணப்பஞ் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். அந்த விண்ணப் பங்களை அதிகாரிகள் கழிவுக் காகிதக் குப்பையிலே போட்டுவிட்டுச் சும்மா இருந்து வருகிறார்கள்.

சாத்விக எதிர்ப்பு

ஆனால் இந்தியாவில் தோன்றியிருக்கும் புதிய ஸாத்விக சக்தி லிம்லாக் குன்றுகளையும் சூழ்ந்து விட்டது. ஜனவரி 13–ஆம் தேதியன்று அல்மோரா ஜில்லாவிலுள்ள "வ்யாகரேசுரம்" என்ற ஊரில் ஒரு பெரிய சந்தை நடந்தது. அப்போது ஜனங்களெல் லாரும் கூட்டங் கூடிக் "கூலி உதார்" என்று வழங் கப்படும் இந்தக் கட்டாயக் கூலி முறைமைக்கு இனி உட்படுவதில்லையென்று பி ர தி க் கி னை செய்து கொண்டார்கள்.

இரண்டு மூன்று ஜில்லா வாஸிகள் அத்தனை பேரையும் ஒருங்கே கூலியாட்களாகப் பாவித்து நடத்தும் இந்த மிருகத்தனமான முறைமையால், ஜனங்கள் சில ஸமயங்களில் பனியிலே மூட்டை சுமக்கமாட்டாமல் விறைத்துச் செத்துப் போய் விடுகிறார்கள். இந்த முறையினிடம் உண்டாகிய அருவருப்பு மிஞ்சி ஜனங்கள் கலகஞ் செய்யக்கூடிய

நிலைமையிலிருக்கிறார்களென்று மிஸ்டர் ஸி. எப் ஆண்ட்ரூஸ் தெரிவிக்கிறார். இதையும், உத்யோகஸ் தர்களுக்கு காய், கறி, ஆடு, கோழி, ரொட்டி மா, விறகு முதலியன ஜனங்களிடம் பெறும் முறையையும் நாட்டில் வைத்தாதரிக்கும் ராஜாங்கத்தார் நாகரிகப் பதவியுடையவர்களாக மாட்டார்கள்.

"கௌரவ" ராம ராயனிங்காரின் ஸமத்வ ஞானம்

சில தினங்களின் முன்பு அமலாபுரத்தில் பஞ்சமர்களின் பிரதிநிதிக் கூட்டமொன்று நம் மாகாணத்துப் புதிய பிராமணரல்லாத மந்திரிகளை ஸந்தித்தபோது அம்மந்திரிகளில் ஒருவராகிய ஸ்ரீமான் ராமராயனிங்கார் மிகவும் ரஸமாகப் பேசியிருக்கிறார். இதுவரை பிராமணரல்லாத வகுப்பினர் பஞ்சமர்களிடம் தக்கபடி அனுதாபம் செலுத்தாமல் இருந்துவரும் காரணம் பிராமணர்களுக்கு மனவருத்த முண்டாகுமென்ற பயத்தைத் தவிர வேறில்லை யென்றும், இப்போது பிராமணரல்லாதாரில் மேற்குலத்தார் பிராமர்களின் ஆதிக்கத்தை உதறி எறிந்து விட்டபடியால், இனிமேல் பிராமணரல்லாதார் பஞ்சமர்களை மிகவும் ஆதரிக்கத் தொடங்கி விடுவார்களென்றும் இந்த மந்திரி சொன்னார். மேலும் இனிமேல் பிராமணரல்லாதோரில் மேற்குலத்தார் பஞ்சமர்களைப் பரிபூர்ண ஸமத்வத்துடனும் சொந்த ஸஹோதரர் போலவும் நடத்த முற்றிலும் விருப்பத்தோடிருக்கிறார்கள் என்று இவர் சொன்னார். இங்ஙனம் இவர் பிராமணரல்லாதோரும் பஞ்சமரல்லாதோருமாகிய மற்ற ஹிந்துக்கள் அனைவரும் இப்போதே பஞ்சமர்களை முழுதும் ஸமானமாக நடத்த உடன்படுகிறார்களென்று எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு உறுதி சொல்லுகிறரென்பது நமக்கு விளங்கவில்லை.

ஏற்கெனவே ஹிந்துக்களில் பிராமணர் முதலிய எல்லா வகுப்புகளிலும் அங்கங்கே ஜாதிக்கட்டுக்களை உதறிவிட்டு எல்லா ஜாதியாரையும் ஸமானமாக நடத்தி வருகிறார்களென்பது மெய்யே. பொதுப் படையாக எல்லா வகுப்புகளிலும் ஜாதிக்கட்டுக்கள் தளர்ச்சி பெற்று ஸமத்வக் கொள்கை ஓங்கிக் கொண்டு வருகிறதென்பதும் மெய்யே. ஆசாரத் திருத்த முயற்சி ஆரம்ப முதல் நீதிபதி ரானடே முதலிய பிராமணர்களாலே அதிக சிரத்தையுடன் போற்றப்பட்டு வருகிற தென்பதை நாம் மறக்கக் கூடாது. ஆனால் இவற்றைக் கொண்டு, இன்றைக்கே பிராமணரல்லாதாரில் மேல் வகுப்பினர் பஞ்சமர் களோடு ஸமானமாக உறவாடத் தயாராக இருக் கிறார்களென்று சொல்லுதல் அதிசயோக்தி. எனிலும் ஸ்ரீராமராயனிங்கார் தம்மளவிலேனும் தாம் சொல் லியதை மெய்ப்படுத்திக் காட்டுவாரென்று நம்பு கிறேன். இவ்விஷயத்தில் இவர் மனத்தோடு பேசினாரா, அல்லது வெறுமே வெளிப் பேச்சுத்தானா, என்பதைப் பஞ்சமத் திராவிட நண்பர்கள் பரி சோதனை செய்து பார்க்கும்படி வேண்டுகிறேன்.

ஜெர்மனியிடம் பணம் வாங்குதல்

ஜெர்மனியிடம் வசூலிக்கவேண்டிய தொகை யைக் குறித்து நேசக் கக்ஷியாருக்குள்ளே ஒருமுகமான அபிப்பிராய ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது. அதாவது ப்ரான்ஸ் தேசத்தார் கேட்டபடி நம்பத் தகாத பொன் குவைகள் ஜெர்மனியிடம் வாங்கும் விஷ யத்தில் இதுவரை மனமிணங்காதிருந்த இங்கிலாந்து முதலிய தேசத்தாரும் இப்போதிணங்கி விட் டார்கள். ஆனால் அதே காலத்தில் "நேசகர்கள்" கேட்கும் அபரிமிதமான தொகைகளை ஜெர்மனியால் செலுத்த முடியாதாகையால், நேசக் கக்ஷியாரின் ஏற்பாடுகளைத் தள்ளி அவற்றுக்கு மாற்றேற்பாடுகள்

சில தயார் செய்து கொடுப்பதாக ஜெர்மன் மந்திரிகள் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். எனவே நேசக் கக்ஷியாருள் ஏற்பட்ட இணக்கத்தினின்றும் நாணய மாற்றுச் சந்தைகளிலும் பங்குப் பத்திரச் சந்தைகளிலும் எதிர்பார்க்கப்பட்ட மாறுதல்கள் தோன்றவில்லை. ஏனென்றால், நேசக் கக்ஷியாரின் வேண்டுதலுக்கிணங்கும்படி ஜெர்மனியை இவர்கள் வற்புறுத்த முடியுமா என்பதைப் பற்றி வியாபாரி களுக்குள்ளே ஸம்ஸயம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் ஜெர்மனி தான் செலுத்த வேண்டிய ஈட்டுப் பணங் களை 'மார்க்' என்ற ஜெர்மன் நாணயங்களில் செலுத்தும்படி உடன்பாடு விதிக்கிறது. எனவே, இப்போது ஜெர்மன் ராஜாங்கத்தார் கோடிக் கணக் கான காயிதப் பணத்தை அடித்து, "மார்க்" நாண யத்தின் மதிப்புக் குறைந்து போகும்படி செய்வார் களோ என்றும் வியாபாரிகள் பயப்படுகிறார்கள். இதுபற்றியே நேசக் கக்ஷியாரின் நாணயங்களுக்கு எதிர்பார்க்கப்பட்டபடி மதிப்பேறவில்லை யென்று லண்டன் நகரத்துப் பொருள் நிபுணர்கள் சொல்வ தாக ராய்ட்டர் தெரிவிக்கிறார். இப்போது (ஜன-31) ஒரு பவுனுக்கு 24 மார்க் விலை. ஜெர்மன் ஜனங் களின் மனதில் நேசக் கக்ஷியார்களின் முடிவுபற்றி மிக்க அதிருப்தியும் கொதிப்பும் ஏறியிருப்பதாகத் தெரிகிறது.

ஹாஸ்யம்

காளிதாஸன்

10 பிப்ரவரி 1921 ரௌத்திரி தை 29

பத்திரிகைகளில் "பால்" வேற்றுமை

உயிரில்லாத வஸ்துக்களுக்குக்கூட ஆண்பால், பெண்பால் கற்பித்தல் கவிகளின வழக்கம். ஸம்ஸ்க்ருதம் முதலிய புராதன பாஷைகள் சிலவற்றிலும், ப்ரெஞ்சு, ஹிந்தி முதலிய நவீன பாஷைகள் சில வற்றிலும், பெரும்பான்மையான பொருட் பெயர்களுக்கு மட்டுமேயன்றி, குணப் பெயர்களுக்குங் கூடப் பால் வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த பாஷைகளைக் கற்போர் சொற்களில் இறுதியெழுத்துக்களைக் கொண்டும், நெடுங்கால அனுபவத்தைக் கொண்டும் இன்ன சொல் இன்ன பாலைச் சேர்ந்ததென்று நிர்ணயித்துக் கொள்ளுகிறார்கள். ஆனல் தமிழ், இங்கிலிஷ் முதலிய பெரும்பான்மையான பாஷைகளில் இந்தக் கஷ்டம் கிடையாது. "மக்கள், தேவர், நரகர் உயர் திணை. மற்றுயிருள்ளவும், இல்லவும் அஃறிணை" என்ற தமிழிலக்கண விதியே பொதுவாக எல்லா பாஷைகளுக்கும் பொருந்தி நிற்கிறது. எனினும், இப்போது சிறிது காலமாகத் தமிழிலேயே, பத்திரிகைகளின் பெயர்களுக்குச் சிலர் ஆண்பால், பெண்பால் வகுக்கத்

தொடங்கியிருப்பது மிகவும் விநோதமாகத் தோன்று வதால், இங்கு அதைக் குறித்து எழுத நேர்ந்தது. முதலாவது இவ்வழக்கம் "தேச பக்தன்" பத்திரி கையில் தொடக்க மெய்திற்றென்று நினைக்கிறேம். அப் பத்திரிகையின் பழைய பத்திராதிபராகிய ஸ்ரீமான் கலியாண ஸுந்தர முதலியாருடைய காலந் தொட்டே அதில், "சுதேச மித்திரன் சொல்லு கிறன்", "தேச பக்தன் சொல்லுகிறன்" என்பன போன்ற பிரயோகங்கள் வழங்கி வருகின்றன. இப் போது ஸ்ரீமான் முதலியார் நடத்திவரும் "நவ சக்தி"ப் பத்திரிகையிலும் அவ்வழக்க மிருந்து வருகிறது. எனவே, சில தினங்களுக்கு முன் ஏதோ தொழிலாளர் விஷயமாக மேற்கூறிய இரண்டு பத்திரிகைகளுக்குள்ளே எழுந்திருக்கும் விவாதம் மிகவும் ரஸமாக இருக்கிறது. "தேச பக்த"னை ஆண் பாலாக்கி ஸ்ரீ முதலியார் எழுதி வருகிறார். "தேச பக்தன்" புதிய பத்திராதிபரோ, "நவ சக்தி"யைப் பெண் பாலாக்கிவிட்டார்! திருஷ்டாந்தமாக மேற்படி ஆண்பால் பத்திரிகையிலுள்ள பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள். "தேச பக்தன் தன் பிரதி நிதியை ஏன் அனுப்பவில்லை யென்று நவசக்தி கேட் கிறள்", "அவர் சொல்லி யனுப்பியதையும் நவ சக்தி மறந்துவிட்டாள் போலும்." இந்தப் புதிய வழி ரஸமாகத்தான் இருக்கிறது. ஆனால் இதைப் பொது வழக்கமாக்க முயன்றால், பலவித ஸங்கடங்கள் ஏற் படுமென்று தோன்றுகிறது. முக்யமாக, அன்ய பாஷைப் பத்திரிகைகளைக் குறித்துப் பேசுமிடத்தே தான் அதிகக் கஷ்டம்; "லண்டன் டைம்ஸ்", "ஈவினிங் ந்யூஸ்" என்பன பலவின்பாற் பெயர்க ளாதலால் 'டைம்ஸ் சொல்லுகின்றன', 'ஈவினிங் ந்யூஸ் பரிஹாஸம் பண்ணுகின்றன' என்றெழுத நேரும்! மேலும் 'பெர்லினர் தகப்ளாத்', 'ப்ராங்க் புர்த்தெர் ஜெய்துங்' என்பவை போன்ற ஜெர்

மானியப் பத்திரிகை நாமங்கள் ஆண்பாலோ பெண் பாலோ, ஒன்றன்பாலோ, பலர்பாலோ, பலவின் பாலோ அறிகிலோம். இவை போன்ற சிரமங்களைக் கருதி ஸாதாரணமாக, வழக்கம் போலவே, எல்லாப் பத்திரிகைகளின் பெயர்களையும் ஒன்றன் பாலாகவே வழங்கி விடுதல் நன்றென்று நினைக்கிறேன்.

"யானைக்கால்" வியாதிக்கு முகாந்தரம்!

தென் இந்தியாவில் ஒரு நகரத்தில் ஒரு செல்வ மிகுந்த வியாபாரிக்கு இரண்டு கால்களிலும் யானைக் கால் நோய் வந்து கால்கள் உரல்களைப் போலாய் விட்டன. ஆனால் அந்தச் செட்டியார் தமக்கு யானைக்கால் நோயென்று சொல்ல மனமில்லாமல், யாராவது, "காலிலே என்ன?" என்று கேட்டால் தம்மிடம் மோட்டார் சைக்கிள் வண்டி யிருப்ப தாகவும், அதில் ஏறிச் செல்லும்போது, அது தம்மை ஏங்கேயோ மரத்தில் மோதிக் கீழே தள்ளிவிட்ட படியால் கால்கள் வீங்கி யிருக்கின்றன என்றும் சொல்வதுண்டு. அதுபோல் ஆங்கிலேய ராஜ தந்திரி களில் சிலர் தமது தேசத்திலேற்பட்டிருக்கும் வறு மைக்கும் பணத்தட்டுக்கும் காரணம் சொல்லும் போது தங்கள் தேசத்தில் செழித்துக் கிடக்கும் செய் பொருள்களை மற்ற ஐரோப்பிய தேசத்தார்கள் விலைக்கு வாங்க முடியாதபடி பரம ஏழைகளாய் விட்டபடியால் தங்களுடைய வியாபாரம் வீழ்ச்சி பெற்றிருப்பதாகவும் அதனால் பணக் கஷ்டம், தொழிலின்மை மிகுதி முதலியன தோன்றிவிட்ட தாகவும் "ஷரா" சொல்லுகிறார்கள். ஆனால் மேற் கூறிய இதர ஐரோப்பிய தேசங்களின் ராஜ தந்திரிகள் தத்தம் நாடுகள் ஏழ்மைப்பட்டதற்கு என்ன முகாந்தரம் சொல்லித் தப்புகிறார்களோ தெரியவில்லை. அவர்கள் இங்கிலாந்தின்மீது குறை

சொல்லுகிறார்களோ அல்லது, ஆசியாவைக் காண்பிக்கிறார்களோ அறியோம்.

புதிதாகச் சென்னை நிர்வாஹ ஸபையில் சேர்ந்த பிராமணரும், (பஞ்சமரும், ஐரோப்பியருமாகிய பிறரும்) அல்லாதார் வகுப்பைச் சேர்ந்த மந்திரிகள் தமிழர்களும் அல்லாதார் என்பதைத் தமிழராகிய பிராமணரும் (பஞ்சமரும் பிறரு)மல்லாதார் ஒருவர் என்னிடம் வந்து முறையிட்டார். ஹும்! இந்த பாஷை சரிப்படாது. நடந்த விஷயத்தை நல்ல தமிழில் சொல்லுகிறேன். தமிழ் வேளாளரொருவர் இப்போது மந்திரிகளாகச் சேர்ந்திருக்கும் ரெட்டியாரும், நாயுடுவும், ஸ்ரீராமராயனிங்காரும் தெலுங்கர்களென்றும், தமிழ் நாட்டுக்குப் பிரதிநிதியாக இவருள் எவருமில்லாமை வருந்தத்தக்க செய்தியென்றும் என்னிடம் வந்து முறையிட்டார்.

"ஜஸ்டிஸ் பாடம்"

எனக்கு "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் வாசித்த வியாஸமொன்று மேற்படி கதை கூறி வருகையிலேயே ஞாபகத்துக்கு வருகிறது. அதில் அந்த "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் "ஹிந்து" பத்திராதிபருக்குப் பல பல ஞலேபதேசங்கள் செய்திருக்கிறார். அவற்றின் மொத்தக் குறிப்பு யாதென்றால் ஆங்கிலேய அதிகாரிகளின் ஆட்சியை இந்த க்ஷணமே பஹிஷ்காரம் செய்துவிட வேண்டுமென்ற "காங்கிரஸ்" கக்ஷியைச் சேர்ந்த பத்திராதிபர் யார் மந்திரியாக வந்தாலும் கவனிக்கக் கூடாதென்பது. அவர்களிடமுள்ள குணதோஷங்களை எடுத்துக் கூறவும், அந்த ஸ்தானத்துக்குப் பிறரை சிபார்சு செய்யவும் "ஹிந்து"வுக்குத் தகுதி கிடையாதென்பது.

ஏன் தகுதி கிடையாது? அதைக் குறித்துத் தர்க்கமெப்படி? "ஹிந்து" ஜனங்களுக்குப் பிரதி

நிதி; அதிகாரிகளுக்கு விளக்கு. ஜனங்களுடைய நன்மைக்கிசைந்தவாறு அதிகாரிகள் நடக்கும்படி கவனிக்க வேண்டியது அந்தப் பத்திரிகையின் கடமை. இந்த ராஜாங்கத்தை மாற்றி இதைக் காட்டிலும் தர்மமான ராஜாங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று நாங்கள் முயற்சி செய்கிறோம். இதனிடையே இந்த அதிகாரிகள் எங்கள் வீடுகளில் தீயைக் கொளுத்திலல் நாங்கள் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டுமென்று "ஜஸ்டிஸ்" பத்திராதிபரின் தர்க்க சாஸ்த்ரம் போதிக்கிறதா? நாங்கள் ராஜாங்கத்தைப் புதுப்பிக்க விரும்புவது பற்றி நாங்கள் இவர்களுக்கு உதவி செய்வதை நிறுத்துவோம். இவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டனம் செய்துகொண்டிருப்போம். ஜனங்களுக்கெடுத்துக்காட்டி, அந்த உபாயத்தின் மூலமாக, இவர்கள் தங்கள் தவறுகளை நீக்கிக் கொள்ளும்படி வற்புறுத்துவோம். ஜன கோபத்துக்கு இவர்கள் எப்போதும் அஞ்சித் தீரவேண்டுமென்பதை நாம் அறிவோம். எனவே இவர்களுக்கும் நமக்குமிடையே நிகழ்ச்சி பெற்றுவரும் தர்ம யுத்தத்தில் அந்த அறிவைப் பயன்படுத்தாமல் விடமாட்டோம். எங்களுடைய தர்க்கம் "ஜஸ்டிஸ்" பத்திரிகைக்குத் தெளிவுபடுகிறதென்று நினைக்கிறோம்.

அன்னிய வஸ்து பஹிஷ்காரம்

"ஹிந்து" பத்திராதிபரிடம் "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் மற்றொரு குற்றம் கண்டு பிடிக்கிறார். அதாவது, அன்ய வஸ்து பஹிஷ்காரத்தை ஜனங்களுக்குப் போதித்துவிட்டுத் தாம் அன்ய வஸ்துக்களின் விளம்பரங்களுக்குத் தமது பத்திரிகையில் இடங் கொடுக்கிறரென்ற குற்றம்! சபாஷ்! இந்தக் குற்றத்துக்காக "ஹிந்து" பத்திராதிபருக்குப் பெருந் தண்டம் விதிக்கலாம்! அதிலும் "ஜஸ்டிஸ்"

பத்திரிகை நம்மை ஐரோப்பிய வியாபாரிகளுடைய விளம்பரம் போடும் குற்றத்துக்காகத் தண்டனைக் குட்படுத்த அதிகாரமுடையது! ஐரோப்பிய ஸம்பந்தமே அங்கில்லையே! இது குற்றமென்று "ஜஸ்டிஸ்" சொல்வது பேதமை. விளம்பரங்களில்லாமல் இக் காலத்தில் பத்திரிகை நடத்த முடியாது. இது இந்தியருக்குத் தெரியும். ஆதலால் பத்திரிகைக்குள்ளே பத்திராதிபர் எழுதியிருக்கும் கருத்தைக் கவனித்து நடப்பார்களேயன்றி விளம்பரத்தைக் கவனித்து தேசக் கடமையை நிர்ணயிக்க மாட்டார்கள். "ஹிந்து" பத்திரிகையில் "சுருட்டு" விளம்பரம் போட்டிருக்கிறது. அதனின்றும் "ஹிந்து" பத்திராதிபர் உலகத்தாரையெல்லாம் புகையிலைச் சுருட்டுக் குடிக்கும்படி வற்புறுத்துகிறரென்று நிச்சயித்தல் பொருந்துமா? "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் "காந்தி சரித்திரம்" என்ற புஸ்தகத்தின் விளம்பரம் ப்ரசுரிக்கப்பட்டால் அதனின்றும் "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் மஹாத்மாவின் கொள்கைகளைப் பரப்ப விரும்புகிறரென்று நிச்சயித்து விடலாமா? "ஹிந்து" விளம்பரங்களைப் பிரசுரம் செய்வதை நிறுத்திவிட்டால், ஜஸ்டிஸின் வருமானம் அதிகப்படுமென்பது அப் பத்திரிகையின் ஆட்சேபத்திற்குக் காரணமோ?

அப்படி நிச்சயிக்கும்படி இந்தியர்கள் அத்தனை மூடர்களல்லர். மேலும், மனம் வேறு, சொல் வேறு, செயல் வேறுக நிற்பது தவறென்று "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் பிறருக்கு போதிப்பதைப் பார்த்து எனக்கு மேன்மேலும் நகைப்பு விளைகிறது.

நேசக் கக்ஷியாரின் "மூட பக்தி"

சக்திதாஸன்

11 பிப்ரவரி 1921 ரௌத்திரி தை 30

"ரெயிக் ஸ்தாக்" என்ற ஜெர்மன் ஜனப் பிரதி நிதிகளின் ஸபையில் ஹெர் வோன் ஸிமோன்ஸ் என்ற ஜெர்மானிய மந்திரி சில தினங்களின் முன்பு நேசக் கக்ஷியாரின் பாரீஸ் ஸமாஜத்தில் முடிவு செய்யப்பட்ட நஷ்டஈட்டுத் தொகைகளைப் பற்றிப் பேசுகையில், ஜெர்மனியுடன் ஸமரஸமான வாதங் கள் செய்து பெறக்கூடியதைக் காட்டிலும் ஜெர் மனிக்குக் "கட்டளை" பிறப்பிப்பதனால் அதிகம் பெறக்கூடுமென்ற மூட பக்தியை நேசக் கக்ஷியார் நீக்கிவிடுதல் தகுமென்று எச்சரிக்கை செய்தார். ஏற்கெனவே ப்ருஸ்ஸெல்ஸ் நகரத்தில் நடைபெற்ற அர்த்த சாஸ்த்ர நிபுணர்களின் ஸங்கத்தில் ப்ரெஞ்ச் பிரதிநிதியாகிய ஸ்ரீமான் லேதூ என்பவ ரால் திட்டஞ்செய்யப்பட்டு மற்ற ஆங்கில, ப்ரெஞ்ச் அதிகாரிகளாலும் அங்கீகரிக்கப் பெற்றிருக்கும் ஏற்பாட்டை நேசக் கக்ஷியார் இங்ஙனம் திடீரென்று கைவிட்டு விட்டதைக் குறித்து ஹெர் வோன் ஸிமோன்ஸ் வியப்புத் தெரிவித்தனர். லண்டனில் நடத்தப்போகிற ஸபைக்கு ஜெர்மன் பிரதிநிதி களையும் அழைக்கப் போவதாக மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவித்திருந்தார். அதாவது; பாரீஸ்

ஸமாஜத்தின் தீர்மானங்களை ஜெர்மானியர் ஒப்புக் கொள்வாராயின் பிறகு லண்டன் சபைக்கு அவர் களைப் பிரதிநிதிகளனுப்பும்படி கேட்கவேண்டு மென்பது மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜின் கருத்து. ஆனால் அதன் ஸம்பந்தமான அழைப்புக் கடிதம் இன்னும் தங்கள் வசம் கிடைக்கவில்லையாதலால், அந்த ஸபையில் சேர்வதா, அல்லது அதை பஹிஷ்காரம் செய்வதா என்பதைக் குறித்து இன்னும் ஜெர்மானியர் நிச்சயமுரைக்க இயலா தென்று வோன் ஸி மோன்ஸ் கூறினார். ஆயினும், நேசக் கக்ஷியாரின் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டு மேலே விவாதங்கள் நடத்துவது ஸாத்ய மில்லை யென்றும், அத்தீர்மானங்களுக்கெதிரிடை யாக ஜெர்மானிய ஆலோசனைகளை வெளியிடப் போவதாகவும் அந்த மந்திரி தெரிவித்தார்.

நேசக் கக்ஷியாரின் பரீஸ் தீர்மானங்களின்படி ஜெர்மனி நாற்பத்திரண்டு வருஷங்களில் இருபத் தீராயிரத்து அறுநூறு கோடி (226000,000,000) தங்க "மார்க்" அல்லது முந்நூராயிரங் கோடி (3000,000,000,000) காயித "மார்க்" செலுத்த வேண்டுமென்றும், அதனுடனே, இன்னும் 42 வருஷங்கள் வரை ஜெர்மனியின் ஏற்றுமதிகளின் கிரயத்தில் 100-க்கு 12 வீதம் செலுத்திக்கொண்டு வரவேண்டு மென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. பிந்திய வகையில் இன்னும் ஓரிரண்டாயிரம் கோடி "மார்க்" அதிகமாகத் தட்டலாமென்று நேசக் கக்ஷியார் நினைப்பதாக வோன் ஸி மோன்ஸ் சொல் லியபோது ரெயிக் ஸ்தாக் அங்கத்தினர் நகைத்தார் களென்று ராய்ட்டர் தந்தி தெரிவிக்கிறது. இதினின் றும் ஜெர்மானியர் நஷ்டஈட்டுத் தொகை செலுத் தும் விஷயத்தில் நேசக் கக்ஷியாரின் கட்டளையை உடனே எதிர்த்! பேச்சில்லாமல் நிறைவேற்றுவார்க

ளென்று நினைக்க இடமில்லாமலிருக்கிறது. இந்தத் தீர்மானங்களை ஜெர்மானியர் அங்கீகரியாவிடின் அவர்களுக்கு விதிப்பதாக எண்ணியிருக்கும் தண்டனைகளுக்கிடையே அவர்களை ஸர்வதேச ஸங்கத்தில் சேர்க்கமாட்டோமென்ப தொன்று. ஆனால் அந்த ஸங்கத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ளும் படி ஜெர்மனி இன்னும் பிரார்த்தனை யனுப்பவில்லை யாதலால், அந்த தண்டனை அதிகமாகப் பொருட்படுத்தத் தக்கதன்றென்று வோன் ஸி மோன்ஸ் குறிப்பிட்டபோது "ரெயிக் ஸ்தாக்" அங்கத்தினர் கரகோஷம் புரிந்தார்களாம்.

அமெரிக்கப் பத்திரிகைகளிற் பெரும்பாலானவும், ராஜதந்திரிகளிற் பெரும்பாலோரும், இவ் விஷயத்தில் ஜெர்மனிக்கனுகூலமாகவே பேசுதல் குறிப்பிடத்தக்கது. ஜெர்மானியரால் இந்த பாரத்தைச் சுமக்க முடியாதென்றும், இந்த ஏற்பாட்டிலிருந்து அமெரிக்க வியாபாரத்துக்கு இடையூறு விளையுமென்றும் அமெரிக்காவில் பலமானநம்பிக்கை யேற்பட்டிருப்பதாக ராய்ட்டர் தெரிவிக்கிறார். ஜனதிபதி வில்ஸனுடைய பத்திரிகையாகிய "நியூ யார்க் உலகம்" என்பது,— 'ஜெர்மன் ஏற்றுமதிகளின் மீது விதிக்கும் தீர்வையால் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் வஸ்துக்களின் அளவு குறைந்துவிடும். இதினின்றும் விளைபொருள் வாங்குவதற்கு வேண்டிய நாணயம் ஜெர்மனிக்குக் குன்றிப் போகும். எனவே ஜெர்மனி மீளவும் உத்தாரணம் பெறுதல் இயலாது போய்விடும்' என்றெழுதுகிறது.

இவ்வாறு அமெரிக்காவில் ஜெர்மனிக்குத் தக்க உபபலமிருப்பதைக் கருதுமிடத்தே, வோன் ஸி மோன்ஸ் சொல்லியபடி நேசக் கக்ஷியாரின் திட்டம் வெறும் மூடபக்தியாகத்தான் முடியுமென்ற எண்

ணம் எவருக்கு முண்டாகக்கூடும். ஆனால், இங்ஙனம், மஹாயுத்தத்தால் நேசக் கக்ஷியார்களுக்கு விளைந் திருக்கும் நஷ்டங்களை சிரமமில்லாமல் ஜெர்மனியின் தலையில் கட்டித் தாம் தப்பிவிடலாமென்று கருதும் மூட பக்தியைக் காட்டிலும் மற்றொரு பெரிய மூட பக்தி யிருக்கிறது. அதைக் குறித்துச் சில வார்த்தை கள் சொல்லுதல் நமது கடமை என்று நினைக் கிறோம். அந்த மூட பக்தி நேசக் கக்ஷியாருக் குள்ளே பொதுவாக இருப்பினும், அவர்களுக்குள் மந்திராலோசனை முதலிய விஷயங்களில் தலைமை பூண்டிருக்கும் இங்கிலாந்தினிடம் மிகவும் விசேஷ மாகக் காணப்படுகிறது. இதனை ஒரு திருஷ்டாந்த மூலமாக விளக்குகிறோம்.

ரெயிக் ஸ்தாக்கில் மேற்கூறிய ஸ்ரீஸிமோன்ஸின் உபந்யாஸம் இந்த மாஸம் (பெப்ருவரி) முதல் தேதி யன்று நடைபெற்றது. அதே முதல் தேதியன்று ஐர்லாந்தில் கார்க் நகரத்தில் ராணுவ விசாரணைக் கொலைத் தண்டனை யொன்று நிறைவேற்றப் பட்டது. ராணுவ விசாரணையின் கீழ் இதுதான் முதலாவது கொலைத் தண்டனை யென்று ராய்ட்டர் தெரிவிக்கிறார். கொரி யென்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவனிடம் அனுமதிச் சீட்டில் லாத கைத் துப்பாக்கி யொன்றிருந்ததாகக் குற்றஞ் சாற்றி, அக் குற்றத்துக்காக அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அடக்கு முறை களால் ஐர்லாந்துக் கலகத்தை நசுக்கிவிடத் தீர் மானஞ் செய்திருக்கிறார்களென்று இதனால் நன்கு விளங்குகிறது. இதைத்தான் நாம் பரம மூடபக்தி யென்று சொல்லுகிறோம். ஜனங்கள் ஏற்கெனவே கொடுமையை எதிர்த்துக் கலகம் புரியும்போது, அந்தக் கலகத்தை அடக்க இன்னும் அதிகக் கொடுமையை வழங்குதல் உபயோகமற்ற-தீமையை

மிகுதிப் படுத்தக் கூடிய—முறை யென்பதை உலக சரித்திரம் மீட்டும் மீட்டும், மீட்டும் எத்தனையோ திருஷ்டாந்தங்களால் விளக்கியிருக்கிறது. எனிலும் அதே முறையைத்தான் எரியாவில் ப்ரான்ஸ் தேசத்தார் கையாள முயலுகிறார்கள். மெஸபொடோமியாவிலும் அரபியாவிலும் ஆங்கிலேயர் அதைத்தான் கையாண்டு வருகிறார்கள். கிரேக்கர் துருக்கியில் அதே கிரீடை செய்து வருகிறார்கள். அச்சம், சினம் முதலிய சித்த விருத்திகள் தோன்றும்போது ஸாதாரண மனிதர் புத்தி தவறி வேலை செய்தல் ஸஹஜம். அந்த ஸமயத்தில் ஜனங்களுக்கு யுக்தி, அனுபவம், சாஸ்திரம் என்ற மூன்று வித ப்ரமாணங்களும் பறந்துபோய் விடுகின்றன. எனவே புத்தி ஹீனமான கார்யங்கள் செய்து பெரிய நஷ்டங்களுக்குள்ளாகின்றனர்.

ஆனால், இவ்விதமான கார்யங்களை ராஜாங்கத்து மந்திரிகள் செய்வாரானால், அவர்கள் ராஜ்ய பாரத்துக்குத் தகுதியற்றோராய் விடுகிறார்கள். மேலும், மனுஷ்ய ஸஹோதரத்வம், ஸமத்வம் இவை ஐர்லாந்துக்குண்டா, இல்லையா? அரபியாவுக்கும், மெஸபொடோமியாவுக்கும், இந்தியாவுக்கும், எகிப்துக்கும் அவை உண்டா, இல்லையா? இல்லையெனில், ஏன் இல்லை?: தெய்வ விதிகளுக்கு மாற்றில்லை. கொடுமையும் அநீதியும் செய்வோர் கொடுமைக்கும் அநீதிக்கும் இரையாவர். பிறரை அடிமைப் படுத்துவோர், தாம் அடிமைகளாக்கப்படுவர். அநியாயம், ஸமத்வ விரோதம் முதலியவற்றால் ஐரோப்பிய மஹாயுத்தத்தில் அபாரமான கஷ்டங்களுக்குட்பட்டும், ஐரோப்பிய ராஜதந்திரிகளுக்கு இன்னும் புத்தி தெளியாமலிருப்பதுபற்றி விசனப் படுகிறோம்.

"பூகோள மஹா யுத்தம்"

சக்திதாஸன்

12 பிப்ரவரி 1921 ரௌத்திரி மாசி 1

ஐரோப்பாவைப் பிடித்த சனியன் இன்னும் முற்றிலும் நீங்கியதாகத் தெரியவில்லை. சென்ற நான்கு நூற்றாண்டுகளில் ஐரோப்பா கல்வித் தேர்ச்சி, இயற்கை யறிவு முதலியவற்றில் எவ்வளவோ மேன்மையடைந்திருக்கிறது. ஆனால் அதை அக் கல்வி முதலியவற்றால் எய்தக் கூடிய முழு நலத்தையும் எய்தாதபடி தடுத்து, ஏறக்குறைய ஸ்மசான நிலைமையில் கொண்டு சேர்த்தது யாதெனில், அதன் ஓயாத போர் நினைவு! ஐரோப்பாவில் ஸதா ஏதேனுமோர் யுத்தம் நடந்து கொண்டிருக்கும். அல்லது விரைவில் ஒரு யுத்தம் வரப் போவதாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

அந்தக் கண்டத்தாரின் மனதிலிருந்து யுத்த பயம் முற்றிலும் நீங்கியிருந்த ஒற்றை க்ஷணமேனும் பல நூற்றாண்டுகளாகக் கிடையாது.

இதனிடையே, சென்ற நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவின் ஒருபாகத்தினுள்ளே ஒதுங்கி வாழ்ந்த வெள்ளை ஜாதியர்கள் இன்றைக்கு ஐரோப்பா முழுதையும், அமெரிக்காக் கண்ட முழுதையும், ஆஸ்திரேலியாவையும், ஆப்ரிக்காவில்

முக்காலே யரைக்காற் பங்கையும், ஆசியாவில் பாதிக்கு மேற் பகுதியையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

இங்ஙனம் இந்த நான்கு நூற்றாண்டுகளுக்குள்ளே பல கண்டங்களை வெல்லும் சக்தி இவர்களுக் கேற்பட்டதன் காரணம் வெடி மருந்துப்பாக்கி, பீரங்கிகள். இந்த ஆயுதங்கள் மற்றக் கண்டத்தாரின் வசப்படு முன்பு வெள்ளை ஜாதியருக்கு வசப்பட்டன. அதனால் பூமண்டலம் அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழே வீழ்ந்தது.

ஆனால், இங்ஙனம் உலக முழுதையும் வென்று அங்கெல்லாம் தங்களுடைய வியாபாரத்தையும் நிலை நிறுத்தி ஏராளமான செல்வங்கள் திரட்டி ஐரோப்பாவுக்குக் கொணர்ந்த ஐரோப்பியர் அந்தக் குவை குவையான திரவியங்களையும் அவர்களுக்கு "ஸயன்ஸ்" ஞானத்தால் இயற்கையின் மீது கிடைத்த புதிய சக்திகளையும் யுத்தத்தில் உபயோகப் படுத்துவதே முதற் கடமையாகக் கருதினர்.

திருஷ்டாந்தமாக, வான விமானம் பறக்கத் தொடங்குவதற்கு முன்னதாகவே ஐரோப்பியர் அதைப் போரில் உபயோகப்படுத்துவ தெப்படி என் பதைக் குறித்து யோசனை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

இந்த குணத்திலிருந்து கடைசிப் பயனுக விளைந்த ஐரோப்பிய மஹா யுத்தத்தினால் தாம் எய்திய கஷ்டங்களை உணர்ந்த பின்னராவது அவர்களுக்கு இந்த குணம் அடியோடு தொலைந்துவிட்ட தென்று நினைத்தோம். ஆனால் பிறவிக் குணத்துக்கு மட்டை வைத்துக் கட்டினால் போதுமா? இத்தனை கஷ்டங்களுக்குப் பிறகும் இந்த குணம் அவர்களைக் கொஞ்சம் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

உள்நாட்டுக் குழப்பத்தை அடக்குவதற்கு வேறு நியாயமான வழி தெரியாமல், பிற நாடுகளுடன் போர் தொடுத்து, அதினின்றும் ஸ்வ ஜனங்கள் ஏராளமாக மடிந்து தொலைவார்களாதலால் அங்ஙனம் உள்நாட்டுக் கலகம் தானே சாந்தி பெற்று விடுமென்று எதிர்பார்த்துப் பிற தேசங்களோடு போர் தொடங்குதல் சக்தியற்ற ராஜ தந்திரிகளின் ஹீன மார்க்கங்களில் ஒன்று.

அதை முன்பு ருஷியா தேசத்துச் சக்ரவர்த்தி அனுஸரித்தார். அவர் அதனால் எய்திய முடிவைக் கண்டும் புத்தி தெளியாமல், இன்று வேறு சில ஐரோப்பிய தேசங்களின் ராஜ தந்திரிகள் அந்த வழியை அனுஸரிக்க எண்ணுகிறார்களென்று நினைக்க பலமான ஹேதுக்கள் இருக்கின்றன.

ஆனால், இனி ஐரோப்பாவில் அல்லது மேற்கு ஐரோப்பாவில், குறைந்த பக்ஷம் இன்னும் 30 வருஷங்களுக்கு ஜனங்கள் யுத்தத்தின் பெயரையே ஸ்மரிக்க மாட்டார்களென்பது திண்ணம். கூடு கண்ட பூனை அடுப்பங்கரையை அணுகாது.

எனினும், ஐரோப்பிய தேசத்தார்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கும் விரோதங்களை மூடும் பொருட்டு ஐரோப்பா முழுவதையும், அல்லது வெள்ளை ஜாதியார் அனைவரையும் ஆசியா, ஆபிரிகா ஜனங்களின் மீது போருக்கு விடலாமென்று சில மதி கேடர் யோசனை செய்கிறார்கள்!

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை பொறுப்புத் தன்மையுடையதாகத் தன்னை மிகவும் கணித்துக் கொள்ளுகிறது. இங்கிலாந்து தேசத்து மந்திரிகளைக் காட்டிலும் தனக்கு ப்ரிடிஷ் பரிபாலன விஷயத்தில் ஆயிரம் பங்கு அதிகப் பொறுப்புணர்ச்சி யிருப்பதாக நடிக்கிறது. அந்தப் பத்திரிகை (தனது 1921 ஜனவரி 15-ஆம் தேதிப் பதிப்பில்) மிஸ்டர் மக்ளூர் என்ற

அமெரிக்கப் பத்திரிகாசிரியரொருவர் எழுதிய "மேற்கும் கிழக்கும் விரோதம்" என்ற வ்யாஸத்தை ப்ரசுரம் செய்திருப்பதுடன், அதைக் குறித்து ஒரு தலையங்கக் குறிப்பும் வரைந்திருக்கிறது.

அந்த வ்யாஸத்தின் கருத்து யாதெனில் எதிர் காலத்தில் ஸமீபத்திலே (ஏற்கெனவே நடந்த ஐரோப்பிய மஹா யுத்தத்தைக் காட்டிலும் பன் மடங்கு கொடிய) பூகோள மஹா யுத்தமொன்று நடக்கப் போகிறதென்பது. இந்த யுத்தம் வெள்ளை ஜாதியாருக்கும் இதர வர்ணத்தாருக்குமிடையே நடக்குமாம். ஜப்பானியரையும் சீனரையும் அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் தம்முள்ளே பிரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதை உத்தேசித்து மஞ்சள் வர்ணத்தாருக்கும் வெள்ளையருக்கும் சண்டை வருமாம். ஜப்பானில் பூமி கொஞ்சம்; ஜனத்தொகை அதிகம். அதற்கு அதி சமீபத்தில் அமெரிகா இருக்கிறது. அங்கு விஸ்தாரமான பூமிகளிருக்கின்றன. ஜனத்தொகை மிக சொற்பம். இன்னும் உழவின் கீழே கொணராத மிக வளமார்ந்த மைதானங்கள் ஆயிரக் கணக்கான மைல்களில் பரவிக் கிடக்கின்றன. கனடாவிலுள்ள நிலங்களை நன்முக முழுமையும் பண்படுத்தினால் அதில் விளையக் கூடிய கோதுமை மனிதக் கூட்டத்தில் பாதிக்குப் போதிய உணவாகுமென்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

உலகத்திலுள்ள பூமியையெல்லாம் இங்ஙனம் ஐரோப்பியர் சூழ்ந்து கொண்டு, நிலத்துக்குத் தவிக்கும்; ஜனங்களைத் தம் சூழல்களுக்குள் ப்ரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதை ஜப்பான் ஆக்ஷேபிக்கிறது. வலியவன் பேச்சு இறுதியில் வெல்லுமென்ற ஐரோப்பியக் கொள்கையை சாதகமாக எண்ணி ஜப்பான் தன் சண்டைக் கப்பல்களை அதிகப்படுத்திக்

கொண்டு வருகிறது. தன் பீரங்கிகளைப் பெருக்குகிறது. தன் படைகளைப் பலப்படுத்துகிறது.

இதைக் கண்டு அமெரிகாவுக்கு நடுக்க மேற்பட்டிருக்கிறது. அமெரிகாவுக்கு இங்கிலாந்து கழுத்து வரை கடன் பட்டிருக்கிறது. இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் நட்புடம்பாடு செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனல், ஜப்பானுடன் சேர்ந்துகொண்டு இங்கிலாந்து அமெரிகாவுடன் போர் செய்யாதென்று மிஸ்டர் மக்ளூர் ப்ரமாணம் பண்ணுகிறூர். அதை லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் மனப்பூர்வமாக ஆமோதிக்கிறூர்.

மேலும் தென் ஆசியாவிலும் ஆப்பிரிகாவிலு முள்ள ஜனங்கள் ஐரோப்பாவின் ஆட்சியைத் தள்ளிவிடப் போகிறூர்களாம். அவர்களிடம் ஆயுதங்கள் இல்லேயேயெனில், அவர்கள் அவற்றை மிக விரைவில் செய்து கொள்வார்களென்று மிஸ்டர் மக்ளூர் சொல்லுகிறூர்.

இந்த யுத்தத்தில் சில ஐரோப்பிய தேசத்தார் ஆசியாக் கண்டத்தாரின் பக்கத்திலே சேர்ந்து கொள்ளக் கூடுமென்று மிஸ்டர் மக்ளூர் சொல்லுகிறூர்.

எனவே, வெள்ளே ஜாதியாருக்குப் பெரிய ஆபத்து வரப் போகிறதென்று மிஸ்டர் மக்ளூர் பலமாக எச்சரிக்கிறூர். ஆனல் ஆசியா இந்தியாவின் தலேமைக்குட்பட்டது. இந்தியா ஐரோப்பியரைக் கூடக் கொல்ல விரும்புவதில்லே. திருத்த விரும்புகிறது. எனவே, ஐரோப்பியர் இந்தப் புதிய பயத்திற் கிரையாதல் அவசியமில்லே. அது வெறும் பேதையச்சம். ஆனல் நம்முடைய சொல் ஐரோப்பாவில் எட்டுவதைக் காட்டிலும் லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் சொல் அதிகமாகவும் விரைவாகவும் எட்டுமே? அதற்கென்ன செய்யலாம்?

மணித் திரள்

காளிதாஸன்

14 பிப்ரவரி 1921 ரௌத்ரி மாசி 3

வாளும் எழுதுகோலும்

என்றைக்குமே ராஜ்ய தந்த்ரத்தில் வாளைக் காட்டிலும் எழுதுகோலுக்கே மஹிமை அதிகம். அதிலும் ஐரோப்பிய மஹா யுத்தத்தின் பிறகு இக் கொள்கை முன் எப்போதையுங் காட்டிலும் அதிக ஆழமாகவும் உறுதியாகவும் பூமண்டலத்து ராஜ்ய தந்த்ரிகளின் மனதில் பதிந்து விட்டது. ப்ரான்ஸ் தேசம் ஒன்றில் மாத்ரமே:இந்த மஹா யுத்தத்தில் பத்து லக்ஷம் ஜனங்கள் மடிந்திருப்பதையும் இன்னும் பல லக்ஷங்கள் அங்கஹீனராய் விட்டதையும் எடுத் துக்காட்டி, அப்பால் இங்கிலாந்திற்கும் இ தவிடக் குறையாத நஷ்டமேற்பட்டிருக்கு மென்பதைச் சுட்டிச் சில தினங்களின் முன்பு ஸ்ரீமான் க்ளெ மான்ஸோ என்ற ப்ரெஞ்ச் ராஜதந்த்ரி (இப்போது இந்தியாவில் யாத்ரை செய்துகொண்டு வருபவர்) இனிமேலேனும் உலகத்தார் யுத்தப் பைத்தியத்தை விட்டுத் தொலைத்தல் அவஸரமென்பதை வற்புறுத் தியது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

அமீர் அமானுல்லாகான்

1921 ஜனவரி 10-ஆந் தேதி திங்கட்கிழமை யன்று காபூல் நகரத்தில் ப்ரிடிஷ் தூதர்களை வர

வேற்கும் பொருட்டாக ஒரு பெரிய தர்பார் நடத்தப் பட்டது. அப்போது ஆப்கன் அரசராகிய அமீர் அமானுல்லாகான் செய்த உபந்யாஸத்தினிடையே, காபூலில் நடத்தும் ஆங்கில-ஆப்கன் ஆலோசனை ஸபையில் தம்முடைய முக்ய ப்ரதிநிதியாக ஸர்தார்-இ-ஆலா முஹம்மது கான் தர்ஜியை நியமனம் செய்ததற்குப் பின் வருமாறு காரணம் சொன்னார்:- "ஸர்தார் முஹம்மத் நாதிர்கான் போர்த் தொழி லாளியாதலால் நான் அவரை நியமனம் செய்ய வில்லை. ஸர்தார்-இ-ஆலா முஹம்மது கான் தர்ஜி எழுதுகோற் பயிற்சியுடையவராதலால் அவரையே நியமனம் செய்திருக்கிறேன். ஏனென்றால் இந்தக் காலத்தில் வாளைக் காட்டிலும் எழுதுகோலே அதிக அவசியமானது" என்றார். இந்த உண்மையான கொள்கையை ஆப்கன் அமீர் எப்போதும் மறக்காம லிருப்பாரென்று நம்புகிறோம். தேசத்தின் அபி விருத்திக்குப் பரோபகார சிந்தையுள்ள மேதாவி களின் இடையறாத உழைப்பே ஸாதனம். வாள் சிறிது காலத்துக்குக் காப்பாற்றுவதுபோலே நடிக் கும். பிறகு ஸர்வ நாசத்தில் கொண்டே சேர்க்கும். எனவே இந்தியாவுக்கு "வாள் பலம்" அல்லது தற்கால பாஷைப்படி பீரங்கி பலம் இப்போதில் லாமை கருதி, நாம் எப்படி விடுதலை பெறப்போகிறோ மென்று எவரும் ஏங்குதல் வேண்டா. தைர்யமும் ஒற்றுமையும் தந்திரமும் சேர்ந்தால் இவற்றுக் கெதிரே கோடி பீரங்கிகள் நிற்பினும் அஃதோர் பொருட்டன்று.

"டைம்ஸ் ஆப் இந்தியாவின் விகடம்"

பம்பாயில் பிரசுரமாகும் "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையின் பிரதிநிதியொருவருடனே ஸ்ரீ ஆகாகான் செய்த ஸம்பாஷணை அப்பத்திரிகை யில் இரண்டு வாரங்களுக்கு முன்பு வெளியிடப்பட்

டிருந்தது. அதில் ஸ்ரீ ஆகாகான் துருக்கி உடம் பாட்டை மாற்றும் விஷயத்தில் இங்கிலாந்து தலைமை வஹித்து நடத்தவேண்டுமென்று சொல்லி யிருந்தார். இப்போது ஆகாகானுடைய இஷ்டப் படியே நடந்துவிட்டதாக அப்பத்திரிகை தன் தலையங்கமொன்றில் ஸந்தோஷச் செய்தி தெரிவிக் கிறது! என்ன நடந்தது? ஆங்கிலேயர் முற்பட்டு மூண்டு வேலை செய்து "ஸேவர்" உடம்பாட்டின் அநீத நிபந்தனைகளை மாற்றித் துருக்கியை அதன் பழைய பெருமையில் ஸ்தாபித்து விட்டார்களா? அஃதன்று! துருக்கியுடம்பாட்டின் விஷயமாக எதிர் காலத்தில் செய்யவேண்டிய கார்யங்களைக் குறித்து ஆலோசனை செய்யும் பொருட்டு அடுத்த மாஸம் லண்டனில் ஒரு ஸபை நடத்தப்போவதாகத் தீர் மானித்திருக்கிறார்கள், இதைத்தான் அந்தப் பத் திரிகை ஆகாகானுடைய அபீஷ்ட ஸித்தியாகக் காண்பிக்கிறது! ஆனால் லண்டனில் இந்த ஸபை நடத்துவது மிகவும் கெட்ட அடையாளமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் ப்ரான்ஸ் மந்திரி களும் இத்தாலி மந்திரிகளும் இவ்விஷயத்தில் துருக்கிக்கு ஒரு வேளை அனுதாபம் செய்யக்கூடும். மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலிய ஆங்கில மந்திரி களோ எப்படியாவது கிரேக்கரின் நட்பைப் பாது காக்க வேண்டுமென்பதிலும், துருக்கியிடமிருந்து பறிக்கப்பட்ட நாடுகளை அதனிடம் மீட்டும் ஒப்பு விக்கக்கூடா தென்பதிலும் ஒரே உறுதியாக நிற்கிறார்கள்.

கிறிஸ்தவ நாகரிகத்துக்குக் காவலாளி

வேல்ஸ் தேசத்து லிபரல் மஹா ஸங்கத்தின் நிர்வாக உத்யோகஸ்தருடன் சில தினங்களுக்கு முன்பு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஒரு ரஹஸ்ய ஸம் பாஷணை நடத்தினார். எனினும் இந்தக் கூட்டத்தில்

மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் பேசிய விஷயம் பின்னிட்டு இங்கிலாந்தில் ப்ரசுரமாய், ராய்ட்டர் தந்தி மூல மாக நமக்கெட்டி யிருக்கிறது. அதிலேகூட மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஜெர்மனி கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை விட்டுக் கொடுப்பதும் கிறிஸ்தவ ஜனங்களை மீட்டும் துருக்கியின் ராஜாங்க நுகத்தடியின் கீழே கொணர்வதும் "லிபரல்" கக்ஷி யின் நோக்கத்துக்கு விரோதமென்று வற்புறுத்திக் காட்டியிருக்கிறார். இதுபோலவே, துருக்கியிட மிருந்து பறிக்கப்பட்ட பூமிகளை அதன்பால் மீட்டும் விடுவதினின்றும் கிறிஸ்தவ நாகரிகத்துக்கு ஹானி வருமென்ற தமது கொள்கையை ஆங்கிலத் தலைமை மந்திரி இதுவரை எத்தனையோ முறை சொல்லி யிருக்கிறார். எனவே, லண்டனில் இப்படிப்பட்ட மந்திரிகளின் ஆதிக்கத்தின் கீழே நடத்தப் போகிற கூட்டத்தில் துருக்கிக்கு எள்ளளவேனும் நியாயம் கிடைக்காது. கிரேக்க தேசத்துக்குப் பிடுங்கிக் கொடுத்த பிரதேசங்களில் கிறிஸ்தவர்கள் வாஸம் புரிவதால் அவற்றைத் துருக்கிக்கு மீட்டும் ஒப்பு விப்பது சரியில்லையென்று சொல்லும் ஆங்கிலேய முதல் மந்திரி மெஸபொடோமியாவில் கிறிஸ்தவ ஜனத் தொகையில்லை யென்றுணர்ந்தும் அதை யேன் துருக்கியிடம் கொடுத்துவிடக்கூடாது? அந்த மெஸபொடோமியாவை இங்கிலாந்து கிறிஸ்தவ நாகரிகத்தால் மஹிமைப்படுத்த எண்ணங்கொண்டு விட்டது. ஆதலால் அதையும் விடக்கூடவில்லை; என்ன செய்யலாம்?

மயிலே, மயிலே

"மயிலே, மயிலே, இறகு போடு" என்றால் போடாது. வற்புறுத்தி இறகைப் பிடுங்கவேண்டும். வெறும் வாய்ப் பேச்சால் இங்கிலாந்தினிடமிருந்து நீதி பெறுதல் ஸாத்யமில்லை. இந்தியாவிலும், மற்ற

முஸ்லிம் தேசங்களிலும் பலமான கிளர்ச்சி நடத்தினலன்றி, "ஸேவர்" உடம்பாடு நியாயப்படி மாற்றப்படுதல் ஸாத்யமில்லை. "கிளர்ச்சி செய்யுங்கள்!" "கிளர்ச்சி செய்யுங்கள்!" "கிளர்ச்சி செய்யுங்கள்!" என்று முக்காலும் கூறி, ஸ்ரீமான் தாதாபாய் நவுரோஜி கல்கத்தா காங்கிரஸ் ஸபையில் செய்த உபதேசத்தையே இன்று நான் முஸ்லிம் உலக முழுமைக்கும் செய்கிறேன். ஆசியா வாஸிகள் அனைவருக்கும் செய்கிறேன்.

அடக்கு முறைகள்

1921 பெப்ருவரி 10-ஆந்தேதியன்று ஸ்ரீ காசியில் தேசீய ஸர்வ கலாசாலையொன்று மஹாத்மா காந்தியால் திறந்து வைக்கப்பட்டது. அந்த விசேஷம் நடக்கும்போது பிரமாண்டமான ஜனத்திரள் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த ஐக்ய மாகாணத்து விவசாயிகளின் தலைவராகிய பாபா ராம் சந்தர் என்ற ஸந்யாஸியைத் துப்பாக்கியில் மருந்தேற்றிக்கொண்டு போலீஸார் பெருங் கூட்டமாக வந்து கைதி செய்ததாகத் தெரிகிறது. கூட்டத்தார் மனக் கொதிப்பினல் கலகம் செய்வார்களென்றும், அதை முகாந்தரமாகக் காட்டித் தாங்கள் ஏராளமாக ஜனங்களைச் சுட்டுத் தள்ளுவதுமன்றி, மஹாத்மா காந்திக்கும் ஏதேனும் ஆபத்துண்டாக்கலாமென்றும் போலீஸார் எதிர்பார்த்தனர் போலும். ஆனல் அந்த அவமானத்தை ஜனங்கள் ஸமாதானமாகப் பொறுத்திருக்கும்படி தலைவர்கள் சொல்லியது கேட்டு ஜனங்கள் சும்மா இருந்து விட்டனர். எனவே, போலீஸார் பாபா ஒருவரை மாத்திரங்கொண்டு மீண்டேகினர். தேசீய ஸர்வ கலாசாலையின் ஆரம்ப விசேஷங்கள் நடத்தும் இடத்திலே தானே பாபாவைப் பிடிக்கவேண்டும்? தனியாக அவர் வீட்டிலிருக்கும்போது பிடிக்கக்

கூடாதா? கூட்டத்தார் அவசரப்பட்டு மனம் பதறி ஏதேனும் செய்திருந்தால் என்னென்ன ஆபத்துக்கள் விளைந்திருக்குமோ யார் அறிவார்? இங்ஙனம் முற்றிலும் விரும்பத்தகாத விரஸமான வழிகளில் ராஜாங்கத்தார் அடக்கு முறைகளை அனுஸரிப்பதி னின்றும் அவர்களுக்கு ஏற்கெனவே தேசத்தி லுள்ள மதிப்புக் குறை இன்னும் மிகுதியுறு மென் பதை அவர்கள் அறியாதது பற்றி வருத்தமடை கிறோம். மேலும் போலீஸார் இப்படி அநாகரிக மாக வேலை செய்த போதுகூட மனக்கொதிப்புக் கிடங் கொடுக்காமல் தலைவர்களின் சொற்படி கேட்டு ஜனக்கூட்டத்தார் அடங்கியிருந்தது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. பொறுத்தா ரன்றோ பூமியாள்வார்?

தீப்பொறிகள்

காளிதாஸன்

14 பிப்ரவரி 1921 ரௌத்திரி மாசி 3

பாரத தேசத்தாரின் அகத்தில் தழல் வீசி எரிந்து வரும் தேசபக்திப் பெருங்கனலின் பொறிகள் சில இங்கு காண்பிக்கப்படுகின்றன.

"வில்லர்" ஸமாஜம்

பீலர் (Bhils) அல்லது வில்லர் எனப்படும் மலைக் குடிகள் ராஜபுத்ர ஸ்தானத்துச் சரித்திரத்தில் மிகவும் கீர்த்தி பெற்றவர்கள். கல்வி முதலிய நாகரிகச் சின்னங்களில் இந்த ஜாதியார் மற்ற பாரதவாஸிகளைக் காட்டிலும் குறைவுபட்டோராயினும், வீரத்தன்மையில் யார்க்கும் இளைத்தோரல்லர். புதிய ஸ்வதேசியத் தீ இவர்களிடத்தும் பாய்ந்து விட்டது. எனவே இவர்கள் தோஹாத் என்ற ஊரில் ஒரு பெரிய தேசாபிமானக் கூட்டம் நடத்தினர். அந்தக் கூட்டம் நடைபெறுமல் தடுத்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் அதிகாரிகள் சில தினங்களின் முன்பு இக்கூட்டத்தாரின் குருவாகிய குருகோவிந்தர் என்பவரைச் சிறைப்படுத்தி விட்டார்கள். அதனின்றும், அந்த ஸமாஜம் தடைப்படவில்லை. பெப்ருவரி 6-ஆந் தேதியன்று தோஹாதில் "வில்லர்" ஸமாஜம் கூடிற்று.

மஹாத்மா காந்தியின் முக்யத் துணைவரில் ஒருவ ராகிய ஸ்ரீமான் படேல் அக்ராஸனம் வஹித்தார். முஹமதியச் சிங்கமாகிய மௌலானு ஷௌகத் அலியும் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

ஸ்ரீமான் படேலின் ப்ரஸங்கம்

சுமார் 10,000-பீல் (வில்லர்) ஜாதியார் கூடி யிருந்த அக் கூட்டத்தின் முன்பு ஸ்ரீ படேல் செய்த அக்ராஸன உபந்யாஸத்தினிடையே பின் வருமாறு பேசினர்:—

"உங்களுடைய குருவை நள்ளிரவில் எழுப்பி ராஜாங்கத்தார் அவருக்கு யாதொரு முன் எச் சரிக்கை செய்யாமலும், அவருடைய குழந்தையைப் பார்க்கக்கூட இடங் கொடுக்காமலும், இரவு 'ரயில்' வண்டியில் ஏற்றிக்கொண்டு போய்விட்டார்கள். அவருடைய முக்ய சிஷ்யர்கள் நூற்றுக்கணக்காக அந்த நேரத்தில் அவரோடிருந்தார்கள். என்னினும் அவர்கள் அதிகாரிகளைப் பலாத்காரமாக எதிர்க்காம லிருந்ததுபற்றி நான் மகிழ்ச்சி யடைகிறேன். நாம் தார்மிகமான வெற்றி பெறுவோமென்பதற்கு இஃதோர் அடையாளமாகும். பல குற்றங்கள் புரிந்து வரும் இந்த ராஜாங்கத்தாருக்கு நீங்கள் ஆதரவு செய்யும் குணத்தை முற்றிலும் விட்டுவிட வேண்டும். பீல் ஜாதியாரே! நீங்கள் இவ்வுலகத்தில் யாருக்கும் அஞ்சியிருக்கக் காரணமில்லை. உங்களு டைய வேண்டுதல்கள் மிக சொற்பம். உங்களுடைய வாஸமோ புலிகளுடனே செய்யப்படுவது. நீங்கள் ஏன் எதற்கும் அஞ்ச வேண்டும்? கட்டாயக் கூலி வேலைக்கு நீங்கள் ஒருபோதும் உட்படக் கூடாது. எது நேர்ந்தாலும் அம்முறைமையை நீங்கள் எதிர்த்துத் தீரவேண்டும்."

மௌலானா ஷௌகத் அலியின் பேச்சு

மாலைக் கூட்டத்தின்போது, அந்த ஸமாஜத்தில் ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதை ஆதரித்துப் பேசுகையில் ஸ்ரீமான் ஷௌகத் அலி பின் வருமாறு பேசினார் :—

"என் 'பீல்' ஸஹோதரரைப் பார்ப்பதற் கென்றே நான் விசேஷ ஆவலுடன் இங்கு வந்திருக் கிறேன். ஸ்வதேசத்திற்கும் ஸ்வதர்மத்துக்கும் நீங்க ளெல்லோரும் முழுத் தொண்டு புரிய வேண்டும். தைரியத்தோடிருக்க வேண்டும். மஹாத்மா காந்தி காட்டியிருக்கும் வழியை சிரத்தையுடன் பின்பற்றி யொழுக வேண்டும். மனத் தளர்ச்சி யெய்தி விடா தீர்கள்! ராஜாங்கத்தார் உங்களுடைய குருவைப் பிரித்து விட்டது பெரிதில்லை. நமக்குள்ளே நூற்றுக் கணக்கான குருக்கள் தோன்றப் போகிறார்கள். மஹாத்மா காந்தியைக்கூட அதிகாரிகள் தீவாந்தரத் துக்கனுப்புவராயின், அல்லது சுட்டுக் கொல்வ ராயின், நம்மிடையே பற்பல காந்திகள் கிளைப் பார்கள். ராஜாங்கத்தார் இதனை அறிந்து நடப் பாராக!" என்றார்.

"காந்தி" குல்லா

இந்த மாஸம் 3-ஆந் தேதியன்று பேரார் மாகா ணத்திலுள்ள அமராவதி நகரத்தில் டிப்டி கமிஷன ராகிய மிஸ்டர் ஆர். ஏ. வில்ஸன் என்பவருக்கும் அவருடைய கச்சேரியில் குமாஸ்தாவாக வேலை செய்து வரும் ஸ்ரீமான் கிர்காம்கார் என்பவருக்கும் நடந்த ஸம்பாஷணை பின் வருமாறு :—

மிஸ்டர் வில்ஸன் :—"உம்முடைய தலை யிலிருப்பது 'காந்தி' குல்லாவா?"

ஸ்ரீமான் கிர்காம்கார் :—ஆம்."

"மிஸ்டர் வி :—"ஸ்ரீமான் காந்தியின் கொள்கை களையெல்லாம் நீர் அங்கீகாரம் செய்து கொள்ளு கிறீரா?"

ஸ்ரீமான் கி :—"ஆம்."

மிஸ்டர் வி :—"அப்படியானால் இந்த ராஜாங் கத்தாருக்கு நீர் ஏன் உதவி செய்துகொண்டிருக் கிறீர்?"

ஸ்ரீமான் கி :—"பாரத ஜனஸபை (காங்க்ரஸ்) இன்னும் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் தம் உத்யோ கங்களை விடும்படி கட்டளை பிறப்பிக்கவில்லை."

மிஸ்டர் வி :—"ராஜாங்கத்தை அழித்துவிட வேண்டுமென்பது ஸ்ரீமான் காந்தியின் கொள்கை. அதை நீர் ஆமோதிக்கிறீரா?"

ஸ்ரீமான் கி :—"ஆம், ஆமோதிக்கிறேன்."

மிஸ்டர் வி :—"அப்படியானால் உம்முடைய வேலையை உடனே ராஜிநாமா கொடுத்துவிட வேண்டும்.....மேலும், எங்கள் ராஜாங்கத்தினிட மிருந்து ஏறக்குறைய எட்டு மாஸங்களாக நீர் சம்பளம் வாங்கிக்கொண்டு வருகிறீர். அதனுடன், நீர் இப்படிப்பட்ட கொள்கைகள் வைத்துக் கொண் டிருப்பது பொருந்துமா?"

ஸ்ரீமான் கி :—"இந்த ராஜாங்கத்துக்கு நான் உதவி புரிந்து வருதல் வெட்கத்துக் கிடமான செய்தியேயாம். ஆனால் நான் சில அவஸரங்களைக் கருதி அங்ஙனம் செய்ய நேர்ந்தது. எனினும் எனது தேசத்தின் ஆணை தோன்றுமிடத்தே நான் இந்த உத்யோகத்தை விட்டுவிடக் காத்திருக்கிறேன்."

மிஸ்டர் வி :—"நீர் அந்தக் குல்லாயை மாற்ற ஸம்மதப்படுவீரா?"

ஸ்ரீமான் கி :—"மாட்டேன்."

மிஸ்டர் வி :—"உம்முடைய தைர்யத்தை மதிக்கிறேன். எனினும், இந்த விஷயத்தைக் குறித்து இன்றிரவு யோசனை செய்து பார்த்து, அப்பால் என்னிடம் உம்முடைய நிச்சயத்தைத் தெரிவிப்பீராக."

மறு நாள் காலையில், ஸ்ரீமான் கிர்காம்கார், மிஸ்டர் வில்ஸனிடம் தம்முடைய ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்துவிட்டார்.

"தீண்டாமை" என்ற பாதகம்

தேசபக்தி யென்பது நம்மவருக்கு அன்னியரால் நேரும் தீண்டாமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல் புடையதன்று. நமக்கு நாமே செய்துகொள்ளும் அநீதிகளையும் நீக்குமியல்புடையது. எனவே தேச பக்த சிகாமணியாகிய மஹாத்மா காந்தி நாம் இன்னும் ஒன்பது மாஸங்களுக்குள்ளே ஸ்வராஜ்யம் பெற்று விடுவோமென்று சொல்லிய போதிலும், அதற்கொரு முக்யமான நிபந்தனை சொல்வதை நாம் கவனிக்க வேண்டும்.

தம்முடைய "பெளவன இந்தியா" பத்திரிகை யில் மஹாத்மா பின் வருமாறெழுதுகிறார்:— "சில வகுப்பினரைத் தீண்டாதவராகக் கருதும் பாவத்தை ஹிந்துக்கள் அகற்றினாலன்றி, ஸ்வராஜ்யம் ஒரு வருஷத்திலும் வாராது? நூறு வருஷங்களிலும் வாராது....ஹிந்து மதத்தின் மீது படிந்திருக்கும் இந்தக் களங்கத்தை நீக்குதல் ஸ்வராஜ்யம் பெறுதற் கவசியமாகு மென்ற தீர்மானத்தைக் காங்க்ரஸ் ஸபையார் நிறைவேற்றியது நன்றேயாம்....மேலும் இந்தத் தீண்டாமை யென்பது மதக் கொள்கை

களால் அனுமதி செய்யப்பட்டதன்று. இது சாத்தானுடைய தந்திரங்களில் ஒன்று" என்கிறார்.

அடிக்கடி "காந்தி கீ ஜேய்" என்று ஆரவாரம் செய்யும் நம்மவர்கள் இந்த அம்சத்தில் மஹாத்மா சொல்லியிருக்கும் வார்த்தையைக் கவனிப்பார்களென்று நம்புகிறேன். நம்முடைய ஸமூஹ வாழ்வில் அநீதிகள் இருக்கும்வரை நமக்கு ஸ்வராஜ்யம் ஸித்தியாகாதென்ற கொள்கையை நான் அங்கீகரிக்கவில்லை. ஆனால், "வினை விதைத்தவன் வினையறுப்பான்." நம்மவருக்குள் பரஸ்பர அநீதியுள்ள வரை தேசத்தில் ஸமாதானமிராது. நாம் பலவகைகளிலே துன்பப்பட நேரும்.

புதுமைகள்

சக்திதாஸன்

18 பிப்ரவரி 1921 ரௌத்திரி மாசி 7

பொம்மிடி ரெயில்வே விபத்து

"தென் இந்தியா ரெயில்வே, பொம்மிடியில் நடந்த பயங்கரமான விபத்தைக் குறித்து நம் நேயர்கள் சிலருக்கு மறதி யேற்பட்டிருக்கக்கூடும். அது நடந்து இப்போது ஏறக்குறைய இரண்டு மாஸங்களாகின்றன. அதில் 40 பேருக்கு மேலே இறந்து போனார்கள். ஏராளமான பொருட் சேதம் ஏற்பட்டது. ரெயில்வே பாதுகாப்பு விஷயத்தில் புது முறைகள் அனுஸரிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். விசேஷத் தகுதி பெற்ற நிபுணர்களென்று உயர்ந்த சம்பளம் வாங்கும் ஐரோப்பிய மேற் பார்வை உத்யோகஸ்தர்கள் அதி ஜாக்ரதையுடன் வேலை செய்வதாகத் தெரிவிக்கிறார்கள். பொது உத்தரவுகளும் தொழிற் கட்டளைகளும் மலிந்து போயின. இவ்வளவையும் மீறி மேற்படி விபத்து நேர்ந்திருப்பதினின்றும், ரெயில்வே பராமரிப்பில் எங்கோ ஒரு மூலையில் பிழை யிருப்பதாக விளங்குகிறது. ஸம்பவம் நடந்த காலத்தை யொட்டி ஸ்தலத்திலேயே ஒரு "கலப்பு விசாரணை" நடத்தப் பட்டது. அதில் பத்திரிகைப் பிரதிகளும் பொது

ஜனங்களின் பிரதிநிதிகளும் ஸாக்ஷியாக இருக்க அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆனால் அந்த விசாரணை ஸபையின் தீர்மானங்கள் இன்னும் ப்ரசுரம் செய்யப்படவில்லை" என்று ஒரு நிருபர் சென்னைப் பத்திரிகையொன்றில் முறையிட்டெழுதியிருக்கிறார். இதனிடையே வண்டியோட்டி, தீ வேலையாள், ஸ்டேஷன் அதிகாரி, அவருடைய உப அதிகாரி இத்தனை பேரையும் வேலையினின்று ஒதுக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இத்தனை காலமாக இந்த விபத்துக்கு யார் பொறுப்பாளியென்று நிச்சயப் படுத்தாமலிருப்பது மிகவும் வியப்புத் தருகின்றது. எவரும் பொறுப்பில்லையாயின், மனிதராலே தடுக்கொணாதவாறு அவ்விபத்து நேர்ந்திருப்பதாயின், அதையாவது ஏன் வெளிப்படுத்தாமலிருக்கிறார்கள்? இந்த மாதிரி ஸமீப காலத்தில் வேல்ஸில் நடந்த விபத்தில் சேதம் இதைக் காட்டிலும் மிகக் குறைவாயினும், அது நடந்த பத்து தினங்களுக்குள்ளே அதன் காரணமின்ன தென்பதையும் பொறுப்பாளிகள் இன்னு ரென்பதையும் நிர்ணயித்து வெளிப்படுத்தி விட்டார்கள். இந்த பொம்மிடி, விபத்தின் காரணமும், இதன் பொறுப்பாளிகள் எவரென்பதும் இன்னும் ஏன் நிச்சயிக்கப் படவில்லை? இந்தியாவில் பிரயாணிகளுடைய உயிருக்கு மதிப்புக் குறையென்ற கொள்கையை இன்னும் ரெயில்வே அதிகாரிகள் விடாது பற்றியிருக்கிறார்களா? இந்த ரெயில்வே அதிகாரிகள் தாம் வெளியிடற்குரிய அறிக்கையை வெளியிடச் செய்யும் பொறுப்பு யாரைச் சேர்ந்தது?

"என்னிடம் ஒரு கைத்துப்பாக்கி இருந்தால்!"

கிரேக்கரிடம் இன்னும் சற்றே அதிஸைந்ய மிருந்தால், நேசக் கக்ஷியார் 'ஸேவர்' உடம்பாட்டை மாற்றுவதென்ற பேச்சை ஆரம்பித்தே யிருக்க மாட்

டார்கள். ஆதலால், கிரேக்கர் தமது படையை மிகுதி செய்வதில் அதிக சிரத்தை செலுத்தி வருகிறார்கள். ஜெர்மனியிலுள்ள சட்ட அனுமதி பெறுத படைக் கூட்டங்களைக் கலைத்துவிட வேண்டுமென்று நேசக் கக்ஷியார் எவ்வளவோ சொல்லிக்கொண்டிருக்க, அதை மீறி ஜெர்மானியர் இன்னும் ரஹஸ்யமாகப் படைகளைத் திரட்டிவருகிறார்கள். ஜப்பானும் அமெரிக்காவும் கப்பற் படைகள் கட்டும் விஷயத்தில் தீவிரமான வேலை செய்து வருகின்றன. ஆஸ்த்ரேலியாவும் கனடாவும் தமக்குக் கப்பற் படைகள் அமைக்துக்கொள்ள முயலுகின்றன. இங்கிலாந்து தனது ஸைந்யத்தை அதிகப்படுத்த முயற்சி செய்கிறது. இவர்களெல்லாரும் உலகத்தில் நித்யமாகவும நிரந்தரமாகவும், சாசுவதமாகவும் ஸமாதானம் நின்று நிலவ வேண்டுமென்ற கொள்கையையே தரித்திருப்பதாகச் சில ஸமயங்களில் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனல் ஸதா மண்ணுசை காரணமாகப் படைகளைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய குணம் இந்த மாஸம் (பெப்ருவரி) 11-ஆந் தேதி வெள்ளிக்கிழமை காலையில், திருவாங்கூர் எல்லையிலுள்ள ஆராமொழிக் குன்றினருகே, திருவாங்கூர்ப் போலீஸ் சேவகராலே பிடிக்கட்டட்ட காசி நாடான் என்ற கீர்த்திபெற்ற கள்வனுடைய குணத்தையொத்தது. இவர்களுடைய மனமும், உள்ளமும், அந்தக் காசி நாடானுடைய மனதையும் உள்ளத்தையும் ஒத்தன. இந்தக் காசி நாடானுடைய விருத்தாந்தம் "சொன்னை மெயில்" பத்திரிகைக்கு அதன் திருநெல்வேலி அறிக்கையாளரால் தந்தி மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது. சென்ற பல மாஸங்களாக நாங்கனேரி, சோனமாதேவி தாலுகாக்களில் பிரபலமான வழிப் பறிகளும், கொள்ளைகளும் நடத்தி வரும் ஜம்புலிங்க நாடான் என்பவனுடைய படைத்

தலைவர்களில் இந்தக் காசி நாடான் ஒருவன். இவனுக்கு இப்போது வயது இருபத்து மூன்று இவனைப் போலீஸார் கைதியாக்கிய ஸமயத்தில் இவன் சொல்லிய வார்த்தைகள் பின்வருவன: "ஹா! நீ வைத்திருப்பது போன்ற கைத் துப்பாக்கி யொன்று மாத்திரம் என்னிடம் இருந்தால் நான் திருவாங்கூரை ஆளுவேன்" என்றானும். திருநெல் வேலிக் கள்வரிடையேயும் பல அலெக்ஜாந்தர்கள் இருக்கிறார்கள்!

பெர்லின் நகரத்தில் இந்தியன் கொலையுண்ட மாயம்

சென்ற மாஸம் (ஜனவரி) 23-ஆந் தேதியன்று பெர்லின் நகரத்திலிருந்து லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு வந்திருக்கும் தந்தி யொன்றில் ஸிங் என்ற இந்திய இளைஞனொருவன் கொலையுண்ட விஷயத்தைக் குறித்து பெர்லின் நகர் முழுதிலும் பெருங் கலக்கமேற்பட்டதாகத் தெரிகிறது. விஷயம் ஜெர்மன் போலீஸாரின் விசாரணையிலிருக்கிறது.

"ஜெர்மனியிடம் நட்புக் கொண்ட இந்தியர்களின் ஸபை" என்பதாக பெர்லினில் ஒரு ஸபை இருக்கிறது. அந்த ஸபையார் இந்தியாவில் உள்ள ப்ரிடிஷ் ஆட்சி ஸபை முறைக்கு விரோதமாக ஜெர்மனியிலே கிளர்ச்சி செய்து வருவதாக லண்டன் "டைம்ஸ்" நிருபர் சொல்லுகிறார். அது ஆரம்பித்து நெடுங்காலமாகவில்லை. சென்ற (1920-ஆம்) வருஷம் டிஸம்பர் மாஸம் 7-ஆந் தேதியன்று அந்த ஸபை ஜெர்மன் அதிகாரிகளின் அனுமதியுடன் திறக்கப்பட்டது. அந்த ஸபைக்குத் தலைவரின் பெயர் எமீர்தேகிப் அர்ஸ்லான். இவர் மஹாயுத்தம் தொடங்கிய காலத்தில் துருக்கிப் பார்லிமெண்டில்

மத்யக் கக்ஷியின் தலைவராக இருந்தவர். மற்ற அங்கத்தாரில் ஸ்ரீமான் பிள்ளை, கர்னல் எமெர்ஸன் முதலியவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ப்ரிடிஷாருக்கு விரோதமாக நடைபெறும் இந்த ஸபையை ஜெர்மானிய அதிகாரிகள் மிக ஆவலுடன் ஆதரித்து வருவதாக "டைம்ஸ்" நிருபர் தெரிவிக்கிறார். வெஸ்ட்(f)பாலியா மாகாணத்து ஆலைத் தலைவர்கள் அந்த ஸபைக்குப் பண உதவி செய்திருக்கிறார்கள். இது நிறக.

மேற்படி ஸிங் கொலையுண்ட விஷயத்தில் அவனுடைய ஜெர்மானிய மனைவியையும், அவளுடைய மாதா பிதாக்களையும், ஜெர்மன் போலீஸார் ஸம்சயப்பட்டுப் பிடித்து வைத்திருக்கிறார்கள். இவன் விவாகமாகுமுன்பு அந்த ஸ்திரீயினிடம் தனக்கு இந்தியாவில் ஏராளமான செல்வமிருப்பதாகச் சொல்லி அவளை வஞ்சித்ததாகவும், அவளும் அப்படியே இவனிடம் தன் பிதா மிக்க செல்வமுடையவனென்று பொய் சொன்னதாகவும், ஆதலால் விவாகமாய் இருதிறத்து உண்மையுந் தெரிந்த பின்னர், அந்த தம்பதிகளுக்குள்ளே மனவருத்த மேற்பட்டிருந்ததாகவும் போலீஸார் தெரிவிக்கிறார்கள்.

வெனிஸிலாஸின் தீர்மானம்

கிரேக்க ஸிம்ஹாஸனத்தின் மீது கான்ஸ்டன்டைன் ராஜா வீற்றிருக்கும்வரை தாம் ராஜீக விவகாரங்களில் சிறிதேனும் ஸம்பந்தப்படாமல் விலகிக்கொள்ளப் போவதுறுதியென்று வெனிஜிலாஸ் தம் நண்பரொருவர் மூலமாகத் தமது கக்ஷியைச் சேர்ந்த முக்ய கிரேக்கப் பத்திரிகையில் விளம்பரம் செய்வித்திருக்கிறார். அங்ஙனமானால், இவர் பஹிரங்கமாக யவன ராஜ்யத்து விவகாரங்

களில் கலந்துகொள்ளாவிட்டாலும், ரஹஸ்யத்திலே கான்ஸ்டன்டைனுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்து கொண்டிருப்பார். வெளியரசுகளின் மூல மாகச் செய்யும் சூழ்ச்சிகளால் இவர் தம் ராஜ்யத் திற்கு அதிகத் தீங்கிழைக்க முடியாது. ஆனல் கிரேக் கர்களுக்குள்ளேயே கக்ஷி பேதங்கள் ஏற்படுத்த இவருக்கு இடமேற்படக் கூடாது.. அதற்கிடமேற் பட்டால் பிறகு கிரேக்க ஸிம்ஹாஸனம் கான்ஸ்டன் டைனுக்கு உறுதியில்லை. வெனிஜிலாஸ் பழைய காலத்து நரி. அதனல் அஞ்சத் தக்கதென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனல் வாலறுந்த நரி-ஆதலால் அஞ்சத் தக்கதன்று.

இந்தோ ராஜரீக அலங்கோலங்கள்

இந்தோர் ஸம்ஸ்தானத்தில் நிகழ்ச்சி பெற்று வரும்-ஸ்த்ரீகளைக்கடத்திக்கொண்டுபோவது ஸம்பந் தமான-அலங்கோலங்களைக் குறித்து ஏற்கெனவே நமது பத்திரிகையில் பேசி யிருக்கிறோம். இப்போது அந்த வதந்திகளெல்லாம் சுத்தப் பொய்யென்று அந்த ஸம்ஸ்தான அதிகாரிகள் ஒரு வருஷம் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். சென்ற மறுப்புரை ஸெப்டம்பர் மாஸத்திலே இந்த விஷயத்தைக் குறித்து இந்தோரில் ப்ரசுரமாகும் "மல்லாரி மார்த் தாண்ட விஜயம்" என்ற பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இந்தக் கெட்ட செயல்களுக்குக் காரணமாவோரைக் குறித்து யாரேனும் ராஜாங்கத்தாருக்குத் தகவல் கொடுக்கலாமென்றும், அங்ஙனம் தகவல் கொடுப் போருக்கு வலிமையுடைய அதிகார துஷ்டர்களாலே கேடேதும் நேராமல் ராஜாங்கத்தார் இரண்டு வாரம் வரை பாதுகாப்பார்களென்றும், அந்த அறிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அந்த விளம்பரத்துக்கப்பால் எவனும் வந்து

யாதொரு தகவலும் கொடுக்கவில்லை. அந்தத் தீச் செயல்களில் உயர்ந்த ராஜாங்க உத்யோகஸ்தர் ஸம்பந்தப்பட்டிருந்ததால் எவ்வித ருஜுவும் கிடைக்கவில்லை யென்று ஸம்ஸ்தான அறிக்கை சொல்லுகிறது. ஆனால் உயர்ந்த உத்யோகஸ்தர் களுக்கு விரோதமாக உயர்ந்த உத்யோகஸ்தர் களிடம் வாக்குமூலம் கொடுக்கத் துணியும் நிர்ப் பாக்யனுக்கு ராஜாங்கத்தார் இரண்டு வாரம் மாத் திரமே பாதுகாப்பருளினால் போதுமா? இதை மஹாராஜா கவனியாதது பற்றி வருத்த மடை கிறோம். இனி ஸ்ரீ கோவிந்தராவ் நிகோஷ்காரின் மகளுடைய விவாகத்தின் ஸம்பந்தம்ாக அவருக் கும் அவருடைய குடும்பத்தாருக்கும் மஹாராஜா வின் உத்தரவுப்படி நேர்ந்த அவமானங்களும் துன்பங்களும் மேற்படி நிகோஷ்காராலே கான்பூர் மாஜிஸ்ட்ரேட் முன்பு செய்து கொள்ளப்பட்ட பிரமாணப் பத்திரிகையில் விவரிக்கப்பட்டன.

அந்தப் பிரமாணப் பத்திரிகை வெறும் பொய் யென்று மஹாராஜா தெரிவிக்கிறார். மஹாராஜா தாம் நேராக அந்த விவாகத்தைப் பற்றி எவ்வித மான அபிப்ராயமும் சொல்லவில்லை யென்றும், அதைக்குறித்து விசாரணை செய்யும்படி ஹைகோர்ட் டுக்கு முறைப்படி உத்தரவு கொடுத்ததாகவும், ஹைகோர்ட்டார் அந்த விவாகம் செல்லாதென்று தீர்ப்புச் சொல்லி விட்டார்களென்றும் ஸம்ஸ்தான அறிக்கை தெரிவிக்கிறது. இவ்விஷயம் இந்தோர் "லா ரிபோர்ட்" வரிசையில் ப்ரசுரமாயிருப்பதாகவும் அறிக்கை சொல்லுகிறது. மேலும் இப்போதுள்ள மஹாராஜா சென்ற 10 வருஷங்களாகப் பட்டம் ஆளுகிறார். இதுவரை இவருடைய ஆட்சியின்மீது எவ்விதமான முறையீடுகளும் வெளிப்படவில்லை. இந்தோர் ஸம்ஸ்தானத்தின் வேலையினின்று, ராஜ

விரோதம் பற்றியும், கெட்ட நடை பற்றியும் ஸமீப காலத்தில் தள்ளுண்ட உயர்தர உத்யோகஸ்தர்களே இந்தப் பொய் வதந்திகளால் மஹாராஜாவுக்கும் அவருடைய ஆட்சிக்கும் அவமதிப்பிழைக்க விரும்பி, இவற்றைப் பரப்புகிறார்களென்று ஸம்ஸ்தான அறிக்கை கூறுகிறது. எனிலும் ஸ்ரீ கோவிந்த ராவ் நிகோஷ்காரின் முறையீடுகளைக் குறித்து இந்தோர் ஸம்ஸ்தானத்தார் சொல்லும் ஸமாதானத்தில் நமக்கு முழுத் திருப்தி பிறக்கவில்லை. இவ்விஷயத்தைக் குறித்து ஜனத் தலைவர்கள் ப்ரத்யேகமான விசாரணை செய்து தம்முடைய முடிவுகளை நாட்டோருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

மஹாமகம்

ஸ்ரீமான் சி. சுப்ரமணிய பாரதி

24 பிப்ரவரி 1921 ரௌத்ரி மாசி 13

இந்த்ரனே தேவ தேவன் என்ப. மற்ற மனிதருக்கு வானவர் எப்படியோ, அப்படி வால்மீகி, காளிதாஸர்களையும், தமிழில் கம்பனையும் புகழேந்தியையும், இங்கிலீஷில் ஷெல்லியையும், "கவிகளின் கவி" என்று சிறப்பித்துச் சொல்லுகிறார்கள். அதாவது, மற்ற மனிதருக்குக் கவிகளால் எத்தனை புதிய சுவை கிடைக்கிறதோ அத்தனை புதிய சுவை கவிஞருக்கு அவ் வால்மீகி முதலியவர்களிடம் கிடைக்கிறதென்பது குறிப்பு.

அதுபோல கும்பகோணத்திலுள்ள அமிர்தவாவிகள் என்று சொல்லப்பட்ட பொற்றாமரைக் குளம், மஹாமகக் குளம். இவ்விரண்டும் புண்ய தீர்த்தங்களுக்குப் புண்ய தீர்த்தமென்று புராணம் சொல்லுகிறது. அதெப்படியெனில் முற்காலத்தில் ஒன்பது தீர்த்த தேவதைகளும் ஈசனிடத்தில் சென்று, "கடவுளே, உலகத்திலுள்ள பாவிகளெல்லாரும் எங்களிடம் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களையெல்லாம் எங்களுக்குக் கரைத்து விட்டுவிட்டுப் புண்யாத்மாக்களாகிச் செல்லுகின்றனர். நாங்கள்

சம்பாதிக்கும் இந்தப் பாவங்களுக்கெல்லாம் விமோசனம் அருள் புரிய வேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்தனர். அவர்களிடம் கருணை பாலித்து எம் பெருமான், "புண்ய தீர்த்தங்களே! பாவங்களாலே தீண்டப்படாத அமிர்த வாவிகள் இரண்டு நான் கும்பகோணத்தில் சமைத்திருக்கிறேன். அவற்றில் சென்று ஸ்நானம் புரிந்தால் உங்களுடைய பாவங்கள் விலகிவிடும்" என்று கட்டளை புரிந்தார்.

பன்னிரண்டு வருஷங்களுக் கொருமுறை இங்கு கங்கை முதலிய தீர்த்த தேவதைகள் வந்து ஸ்நானம் புரியும் ஸமயமாகிய மஹாமக புண்ய காலம் நேற்று (பெப். 22) செவ்வாய்க் கிழமையன்று கும்பகோணத்தில் கொண்டாடப்பட்டது. லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் நேற்று அதில் ஸ்நானம் செய்திருப்பார்கள்.

ஆனால், இத்தனை பேர்களும் ஸர்வ பாப ரஹிதர்களாய்ப் பரம சுத்தத் தன்மை யெய்தி விடுவார்களோ என்று சில மதப் பற்றில்லாதார் ஆக்ஷேபிக்கலாம். தீர்த்த ஸ்தலங்கள், புண்ய க்ஷேத்ரங்கள், எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கின்றன. யூதர்கள் யெருஸலேமைப் புண்ய க்ஷேத்ரமென்கிறார்கள். கிருஸ்தவர்கள் யெருஸலேம், நஜரேத், ரோமாபுரி முதலிய பல பல புண்ய க்ஷேத்திரங்களைக் கொண்டாடுகிறார்கள். முஸ்லிம்கள் மக்கம், மதீனம், யெருஸலேம் முதலிய கணக்கற்ற க்ஷேத்ரங்களைக் கொண்டாடுகிறார்கள் பௌத்தர் கயை முதலிய ஆயிரக் கணக்கான புண்ய க்ஷேத்ரங்களைப் போற்றி வருகிறார்கள். எனவே, அறியாமை காரணமாகவோ, மறதி காரணமாகவோ சில கிறிஸ்தவப் பாதிரிகள் புண்ய க்ஷேத்ர யாத்திரை ஹிந்துக்களுக்கு மாத்திரம் விசேஷமாக ஏற்பட்ட வழக்கமென்று கருதுவார் போல், ஹிந்து மதத்தின்மீது இவ்விஷயத்

தில் பழி கூறுவதை நாம் புறக்கணித்து, மதவாதி களுக்குள்ளே இவ் வழக்கத்தை மறுத்துரைப்போர் யாருமிருக்க நியாயமில்லை யாதலால் மதப் பற்றில் லாதவர்களே மேற்கூறிய கேள்வி கேட்டார்களென்று குறிப்பிட்டோம்.

ஆனால், மதப் பற்றுடையார், அஃதற்றோர் என்னும் இரு திறத்தாரும் உணர்ந்துகொள்ளும்படி, இதுபோன்ற தீர்த்த யாத்திரைகளின் தத்துவத்தை இங்கு விளக்குவோம். இவற்றில் பாவமழிந்து புண்யத் தன்மை பெற வேண்டுமானால், உண்மை யான நம்பிக்கை யிருக்கவேண்டுமென்று நம்முடைய புராதன ஹிந்து சாஸ்த்ரங்கள் மிகத் தெளிவாக வற்புறுத்தி யிருக்கின்றன. உண்மையான மனக் கோளின்றி கங்கையில் முழுகினாலும், மஹாமகத்தில் மூழ்கினாலும் பாப கர்மம் தொலையாதென்று சாஸத் ரங்கள் தெளிவுபடத் தெரிவிக்கின்றன. இனிமேல் நாம் பாவம் பண்ணுவதில்லையென்ற மனே நிச்சயம் வேண்டும்.

தீர்த்த யாத்திரையின் அர்த்தமும் பயனும்

இந்தத் தீர்மானந்தான் பரிசுத்தத் தன்மை கொடுக்கிறது. ஒருவன் இந்த க்ஷண முதல் பாவம் செய்வதில்லையென்று மனவுறுதி செய்து கொள்ளுத லாகிய அக்நி மயமான செய்கையாலேயே அவன் அதுவரை செய்த பாவமெல்லாம் எரித்துவிடப் படுகிறது. "ஞானாக்நிஸ் ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேர்ஜுன" என்று பகவத் கீதையில் கடவுள் சொல்லியிருக்கிறார். பாவத்தை இனிச் செய்ய வில்லையென்ற தீர்மானம் உண்மையாக இருக்க வேண்டும். ஞானமே அவ்வளவுதான். அதைக் காட்டிலும் பெரிய ஞானம் கிடையாது. சிலர் தவத்தால் ஞானமெய்த நாடுகிறார்கள். சிலர்

தானத்தால், சிலர் ஆராய்ச்சியால், சிலர் தியானத் தால், சிலர் பூஜையால் ஞானமெய்த முயலு கிறார்கள். ஆனல் எல்லா வழிகளும் உண்மையான வழிகளே. இவையெல்லாம் ஞானத்தைத் தரும். ஆனல் எந்த வழியாலே தரும்? பாவத்தைத் தீர்த்து விடுதலாகிய வழியிலே தரும். அவற்றல் பாவம் நீங்கும். அதனல் மோக்ஷம் அல்லது அறிவு மயக்கம் தெளியும். அதிலிருந்து ஞானமுண்டாகும். ஞான மாவது எல்லாம் கடவுள் மயமென்ற அனுபவம். பாவமாவது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பம் விளைவித்தல். இங்ஙனமே, புண்யமாவது தனக் கேனும் பிறர்க்கேனும் துன்பக் கலப்பில்லாத சுத்த மான இன்பம் விளைவித்ததற்குரிய செய்கையென்பது சாஸ்த்ர கோடிகளின் பரம ஸித்தாந்தம். எல்லாம் ஆத்மா—எல்லாம் கடவுள் ஆதலால், எல்லாம் தான் என்ற ஞானத்தால் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் குணம் நீங்கிவிடும். அதாவது பாவம் போய்விடும். நியாயம் புண்யம்; அநியாயம் பாவம். ஹிதம் புண்யம்; அஹிதம் பாவம். ஸத்யம் புண்யம்; அஸத்யம் பாவம். திருப்தி புண்யம்; துக்கம் பாவம்.

மரணமாவது பாவத்தின் கூலியென்று கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறது.

"இங்ஙனம் பாவத்தைத் துறந்துவிட விரும்பு வோனுக்கு மனே நிச்சயமும், ஞான உதயமும் கதி யாயின், பணச் செலவு செய்து ரயிலேறிக் கும்ப கோணத்துக்கும், காசிக்கும், ராமேசுவரத்திற்கும் ஏன் போகவேண்டும்?" என்று சிலர் வினவக்கூடும்.

மன மாறுதல்கள் சாசுவதமான இடத்தே விரதங்கள் என்று கூறப்படும். பெரிய சாசுவதமான ஸங்கல்பங்கள் விரதங்களெனப்படும். இந்த விர தங்கள் மனிதருடைய நினைப்பில் நன்றாக அழுந்தும்

பொருட்டு ஆன்றோர் உலகமெங்கணும் இவற்றுக்குச் சில சடங்குகள் வகுத்திருக்கிறார்கள். கல்வி தொடங்கப் போகிறபோது ஒரு சடங்கு நடத்தப் படுகிறது. விவாகம் பண்ணும்போது மிகவும் கோலாகலமான கிரியைகள் நடக்கின்றன. புதிய வீட்டில் குடி புகும்போது ஒரு சடங்கு நடத்துகிறோம். இவற்றின் நோக்கம், நாம் ஏதேனும் அமங்களத்தை நீக்கி மங்களத்தை சாசுவத உடைமையாகச் செய்து கொள்ள வேண்டுமென்பதேயாம். நான் மேலே கூறியபடி, மரணம் பாவத்தின் கூலி என்று கிறிஸ்தவ வேதம் சொல்லுவதைக் கருதுமிடத்தே, அமங்கள மனத்திலும் அமங்களமானது பாவமென்று விளங்குகிறது. எனவே, மங்களங்களிற் சிறந்தது புண்ய மென்பதும் வெளிப்படையாம்.

இப்படிப்பட்ட பாவத்தைக் களைந்து புண்யத்தைப் போர்த்துக்கொள்வதாகிய ராஜ விரதத்துக்கு ஒரு சடங்கு வேண்டாவோ? அவ்விதச் சடங்கே மஹாமக முதலிய புண்ய தீர்த்த யாத்திரை யென்க.

புதுமைகள்

காளிதாஸன்

2 மார்ச் 1921 ரௌத்திரி மாசி 19

ஸோவியட் ருஷ்யாவில் பணம் தொலைந்தது!

லாரின் என்பவருடைய அறிக்கையின்மீது ஸோவியட் கவர்ன்மெண்டார் (ருஷியக் குடியரசு ராஜாங்கத்தார்) ஓர் தீர்மானம் பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி அரசிறை யாட்சித் தலைவர் தகுந்த உத்யோகஸ்தர்களுடனே கலந்துகொண்டு இன்னும் ஒரு மாஸ காலத்திற்குள்ளே ஒரு 'நகல்' சட்டம் தயார் செய்து பிரதிநிதி ஸபையாருக்குத் தெரிவிக்க வேண்டும். அந்தச் சட்டத்தின் கருத்து யாதென்றால், தொழிலாளருக்கும், வேலையாட்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் உண விலாகாவில் கொடுக்கப்பட்ட, முதல், இரண்டாந் தரத்து ஆஹாரச் சீட்டுகளுக்குத் தரப்படுவன உட்பட்ட எல்லா சாமான்களுக்கும் பணம் கொடுக்கும் முறையை ஒழித்துவிட வேண்டும் என்பது. ராஜாங்கத்துக்குரிய அல்லது நகர ஸபை களுக்குரிய வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர், வேலையாட்கள், அவர்களுடைய குடும்பத்தார்களிட மிருந்து பண வாடகை வாங்குவதை நிறுத்தி விடுவதும் அந்தச் சட்டத்தின் நோக்கம். இங்ஙனமே,

தொழிலாளருக்கும் வேலையாட்களுக்கும் ஸங்க ஸ்தாபனங்களுக்கும் முடிய ஷி இலாகாவால் கொடுக்கப்படும் அடுப்புக்கரி வகைகளனைத்திற்கும் பணக்கிரயம் கொடுக்க வேண்டியதில்லை யென்றும், வாயு, மின்ஸாரம், டெலிபோன், நீர், சாக்கடை முதலியவற்றுக்கும் பணம் கொடுக்க வேண்டியதில்லை யென்றும் அச்சட்டம் நியமிக்கும்.

ராஜாங்கப் "பணந் தொலைத்தல்" கமிஷன்

இதனிடையே ருஷிய ராஜாங்கத்தார் ஒரு விசேஷ ஸமிதி யேற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஸமிதியில் ஒரு மாஸ காலத்திற்குள்ளே பணக் கிரயங்கள் என்ற ஏற்பாட்டையே அழித்துவிடுதற் குரிய விஸ்தாரமான திட்டமொன்று சமைத்துக் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றுள், பாங்க் கணக்கு, ஸோவியட் தொழிற் சாலைகளினிடையேயும் ஸோவியட் ஸங்கங்களி னிடையேயும் பரஸ்பரம் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் முதலியனவும் அடங்கும். இந்த ஏற்பாடுக ளெல்லாம் விரைவாக அநுஷ்டானத்திற்கு வந்து விடுமென்று மேலே கூறிய ஸ்ரீமான் லாரின் என்பவரே அமெரிக்கப் பத்திரிகை யொன்றில் எழுதி யிருக்கிறார். இதே காலத்தில் ஸ்ரீமான் லாரினுல் சொல்லப்பட்ட மற்றொரு யோசனையும் நிறைவேற்றப்படு மென்று தெரிகிறது. இந்த யோசனையை ஏற்கெனவே ராஜாங்கத்தார் அங்கீ காரம் புரிந்துவிட்டனர். அதாவது, ரயில் பாதை வழியாகப் போகும் ஸாமான்களுக்குத் தீர்வைப் பணம் வசூல் செய்யாமை, ஏறக்குறையப் பெரும் பான்மை ரயில்வே யாத்திரைக் கட்டணங்கள் வாங்குவதை நிறுத்திவிடுதல் முதலியவற்றைக் குறித்தது.

ஆரம்பங்கள்

1918-ம் வருஷத்தில் மாஸ்கோவில் நடை பெற்ற "ஸோஷலிஸ்ட்" ஸமாஜத்தில் குழந்தை களுக்குக் கொடுக்கும் ஆஹாரம் முதலியவற்றுக்கும், தொழிலாளருக்குக் கொடுக்கும் ஆஹாரம், துணி, வாஸஸ்தலம் முதலியவற்றுக்கும் பணம் வாங்கக் கூடாதென்ற யோசனை ஸ்ரீமான் லாரினுலே சொல் லப்பட்டது. அதை ஸமாஜத்தார் ஒரு மனதுடன் அங்கீகாரம் செய்து கொண்டனர். அவ்வருஷ ஏப்ரல் மாஸத்தில் குழந்தைகளுக்கெல்லாம் ருஷி யாவில் இனும் ஆஹாரம் போடுவதாக ராஜாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குழந்தைகளின் வயதளவு 14-ஆக வைத்திருந்தது பின்பு 16-ஆக உயர்த்தப்பட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு, வேலையாட்களுக்கெல்லாம் இனமாகத் துணி கொடுக்கப்பட்டது. அப்பால் சவர்க்காரம் எல்லாத் தொழிலாளருக்கும் விநியோகம் செய்யப்பட்டது. அப்பால் சாதாரணக் கடிதங்களுக்குத் தபாற் கிரய மாகப்பணம் செலுத்தும் வழக்கம் நிறுத்தப்பட்டது. அப்பால் வேலையாட்களின் கூலிக்குப் பணம் கொடுப் பதனிடத்தில் ஸாமான் கொடுப்பதென்றேற் பட்டது. இப்போது மேற்கூறியவற்றை யெல்லாந் திரட்டி, ஒரேயடியாக ஸர்வ விஷங்களிலும் பண மில்லாதபடி செய்துவிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

உண்மையான புதுமை

மனுஷ்ய நாகரிகத்தின் ஆரம்பகாலந் தொட்டே பணப் பழக்கமிருந்து வருகிறது. இதனல் விளைந்த துன்பங்கள் எண்ணற்றன. அந்தப் பழக்கத்தை இப்போது மனித ஜாதியில் பத்திலொரு பங்கு ஜனத் தொகையை ஆளும் ராஜாங்கத்தார் திடீ ரென்று நிறுத்த உத்தேசிக்கிறார்கள். இதனல்

புதிய ஸௌகர்யங்களேற் படுவதுடனே, பணப் பழக்கத்தால் இயன்று வரும் பழைய ஸௌகர்யங் களுக்கு இடையூறில்லாமல் செய்து விடக் கூடு மானால், ருஷியாவை இவ்விஷயத்தில் உலகத்தார் பின்பற்ற முயல்வார்களென்பதில் ஸந்தேஹமில்லை.

ஸென்ட் நிஹல்ஸிங் சொல்வது

ஸ்ரீமான் ஸென்ட்-நிஹல்ஸிங் "பால் மால்" கெஜட்டின் தலையங்கப் பக்கத்தில் எழுதியிருக்கும் வ்யாஸ மொன்றில் நம் எதிர்கால வைஸ்ராயாகிய லார்டு ரீடிங்குக்குச் சில புத்தி வசனங்கள் சொல்லி யிருக்கிறார். ப்ரிடிஷார் மீட்டு மிட்டும் வாக்குறுதிகள் செய்து அவற்றை உடைப்பதினின்றும் இந்தியாவில் அமைதி ஏற்படாதென்று ஸ்ரீமான் ஸிங் எச்சரிக் கிறார். இந்தியச் சட்டப் புஸ்தகத்திலுள்ள அடக்கு முறைச் சட்டங்களையும் உத்தரவுகளையும் அறவே ஒழித்து விடுவதாக லார்ட் ரீடிங் இந்தியாவில் இறங் கியவுடனே உறுதி மொழி கொடுக்க வேண்டு மென்று ஸ்ரீமான் ஸிங் விரும்புகிறார். அவ்வுறுதி மொழியை விரைவில் நிறைவேற்றவும் வேண்டு மென்கிறார். ரௌலட் சட்டத்தையும், இந்தியாவில் பேச்சு ஸ்வதந்த்ரத்தையும் பத்திரிகை ஸ்வதந்த்ரத் தையும் சுருக்கக்கூடிய மற்றச் சட்டங்களையும் அழிக்கும்படி சிபாரிசு செய்கிறார். இந்தியர்களின் ஸம்மதத்தின்மீது இந்தியாவை ஆளுவதாக ப்ரிடி ஷார் ஒருபுறம் கதை சொல்லிக் கொண்டு மற்றொரு பக்கத்தில் அடக்கு முறைகளை நடத்திக் கொண் டிருந்தால், ப்ரிடிஷ் வாக்குறுதிகளை இந்தியர் நம்பு தல் ஸாத்யப்படாமற் போகுமென்பதைக் குறிப்பிடு கிறார். இவ்விஷயம் ராய்ட்டர் தந்தி மூலமாக இந் தியாவுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஸ்ரீமான் ஸிங் சொல்வதை இங்கிலாந்திலுள்ள சிலர் ஆதரிக்கக் கூடுமெனினும், இங்குள்ள அதி

காரிகள் அவர் விருப்பத்தைத் தாமும் ஆதரிக்க மாட்டார்கள்; லார்ட்-ரீடிங் ஆதரிக்க இடம் கொடுக்கவும் மாட்டார்களென்று தோன்றுகிறது. இங்குள்ள அதிகாரி வர்க்கத்தார் பாக்ய ஹீனராகிய (ப்ரான்ஸ் தேசத்து) (b) பூர் (b) போன் ராஜ குடும் பத்தாரைப் போலவே எதனையும் புதிதாகத் தெரிந்துகொள்வதுமில்லை. எதனையும் மறப்பது மில்லை என்று "ஹிந்து" பத்திராதிபர் எடுத்துக் காட்டியிருப்பது மெய்யேயாம். இவர்களைச் சீர் திருத்து முன்பு இந்தியாவுக்கு ப்ரிடன் வேறென்னசீர் திருத்தங்கொடுத்த போதிலும் இந்தியாவில் அமைதி யேற்படாதென்பதுதிண்ணம். பரிபூர்ணஸ்வராஜ்யங் கொடுப்பதே இந்தியா, ப்ரிடன் இரண்டு தேசங் களுக்கும் ஹிதமான வழி; அதுதான் சரியான சீர் திருத்தம். மற்ற எவ்விதமான சீர்திருத்தங்களையும் இங்குள்ள அதிகாரிகள் குட்டிச்சுவராக்கி விடுவார்கள்.

புதுமைகள்

காளிதாஸன்

5 மார்ச் 1921 ரௌத்திரி மாசி 22

இல்லாத காலிலே நோவு தெரிதல்

ஐரோப்பிய மஹாயுத்தத்தில் கால் பறி கொடுத்த கூட்டத்தார் ப்ரான்ஸ் தேசத்தில், இதர தேசங்களைப் போலவே ஆயிரக் கணக்கான ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் நவீன முறையில் மரக் கால்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கால்கள் மிகவும் ஸௌகர்யமான முறையில் அமைக்கப்பட்டிருப்பதால், இவர்கள் சிறிது காலத்திற்குள் அவற்றை ஸாமான்யக் கால்களாகவே பாவித்து விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மனுஷ்யனுடைய மனதின் விநோத சுபாவங்களைக் கருதுமிடத்தே இஃதோர் ஆச்சரியமில்லை யெனலாம். ஆனால் இதற்கு மேலே மற்றொரு விநோதமான அனுபவத்தைக் குறித்துச் சில தினங்களின் முன்னே ''லண்டன் டைம்ஸ்'' பத்திரிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருந்த குறிப்பொன்றை நோக்குமிடத்தே மிகவும் ஆச்சர்யம் விளைகிறது. பாரிஸ் பட்டிணத்தில் அநேக ப்ரபல வைத்யர்கள் இஃதுண்மை யென்று ஒருமைப்பாடு தெரிவித்திருக்கிறார்களாம். அதாவது, மேற்படி மரக்கால்களின் பாதத்தில் நோவு தெரிவதாக எத்

தனையோ மரக்கால் மனிதர் வந்து வைத்தியர்களிடம் சிகிச்சை கேட்கிறார்களாம்!

"இஃதென்ன பைத்தியம்! தொடைமுதல் தாள் வரை நல்ல மரக்கட்டையோ அது போன்ற வேறு ஜட ஸாமாஞ்ஞே! அதன் மரத்தாளில் நோயிருப்பதாம்! அதனைத் தொடைக்கு மேலுள்ள சரீரம் உணர்வதாம்! இஃதென்னே பேதைமை!" என்று பலர் வியப்புறலாம். ஒருவர் இருவர் சொன்னால் அவர்களைப் பித்தரென்று கூறித் திரஸ்காரம் புரிந்துவிடலாம். ஒரே மாதிரியாக அநேகர் வந்து சொல்லும் போது, பின்னும் அது பேதைமை தானென்பதை நாம் உணர்வோமெனினும் அதைக் குறித்து சாஸ்த்ர ஆராய்ச்சி யேற்பட இடமுண்டாயிற்று. மனுஷ்யனுடைய மனதில் எத்தனை விதமாக மூடக் கொள்கைகள் ஜனிக்கின்றன! எத்தனை மயக்கங்கள், எத்தனை மோஹங்கள், எத்தனை மறதிகள்! நாகரிகமடைந்த, பயிற்சி பெற்ற அறிவுகளிலும் ஆயிரம் வகை விசித்திரமான மூட பக்திகளும் மஹாமூட பயங்களும் குடி புகுந்திருக்கின்றன! இஃது சாஸ்த்ர ஆராய்ச்சிக்குரிய விஷயமே.

ஐர்லாந்துக்குக் கார்டினல் போர்ன் சொல்லும் புத்தி

"கார்டினல்" என்பது ரோமன் கத்தோலிக்க குருக்களின் சிரேணியில் மிக உன்னத ஸ்தானத்தைக் குறிப்பிடுவது. கார்டினல் போர்ன் என்பவர் ஐரிஷ் பாதிரி வர்க்கத்தைச் சேர்ந்தவர். இவர் ஐர்லாந்து வாஸிகளுக்கு விடுத்திருக்கும் ஸ்ரீமுகமொன்றில், ஸ்வதேசத்தின் மீதுள்ள ப்ரேமை மிகுதியால், தம் வசமின்றிச் சிலர் கடவுளின் விதிகளுக்கும் கத்தோலிக்க மதத்திற்கும் விரோதமான ஸபைகளில் ஸம்பந்தப்பட்டிருப்பதாகத் தோன்று

கிறதென்று சொல்லி அதனைக் கண்டனம் பண்ணி யிருக்கிறார். 1867-ஆம் வருஷத்தில் (f) பீனியன் பழிச் செயல்கள் லண்டனில் ஐர்லாந்தியரால் நடத் தப்பட்டபோது கார்டினல் மானிங் கொடுத்த எச்ச ரிக்கையைத் தாம் இப்போது மீட்டும் கொடுப்பதாக அவர் தெரிவிக்கிறார். அதாவது இப்போது ஸின் பீனர்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாக, ஐர்லாந் தில் ஏராளமாகவும் இங்கிலாந்திலே சொற்பமும் நடத்தி வரும் கொலைச் செயல்கள் முதலியன கிறிஸ்தவ மதத்துக்கும் கடவுளுடைய விதிகளுக்கும் விரோதமென்பது இருவடைய கருத்து. மனிதர் பரஸ்பரம் பகைக்கவாயினும் கொல்லவாயினும் கூடாதென்றும், ஸஹோதரரைப் போல் நேசிக்க வேண்டு மென்றும் யேசு கிறிஸ்து நாதர் கட்டளை யிட்டிருப்பதை உத்தேசித்து, அவருடைய சிலு வைக்கு ஐரிஷ் ப்ரதிநிதியாகிய கார்டினல் போர்ன் இங்ஙனம் ஸ்ரீமுகம் பிறப்பித்தமை முற்றிலும் பொருத்த முடைய செய்கையேயாம். பகைவர்கள் நம்மைத் துன்புறுத்தும் போதும் நாம் அவர்கள் மகிழ்ச்சி யடையும்படி துன்பத்துக்குள்ளாகி நிற்க வேண்டுமேயன்றி, அவர்களைத் துன்புறுத்தலாகா தென்பது கிறிஸ்தவ தர்மம். ஆனால் ஐரோப்பிய மஹா யுத்தத்தில் யேசு கிறிஸ்துவின் பக்தர்கள் பரஸ்பரம் லக்ஷக் கணக்காக பீரங்கிகளாலும், எறி குண்டுகளாலும், விஷக் காற்றாலும் கொன்ற ஸமயத்தில் இந்தப் பாதிரிகள் எங்கே போயிருந் தார்கள்? ரோமாபுரியில் போ பானவர் மாத்திரம் இடைக்கிடையே யுத்தத்தை நிறுத்தி ஸமாதானந் தேடினால் நல்லதென்று யுத்தத்தின் பிற்பகுதிக் காலத்தில் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அந்தந்த தேசத்து குருக்கள் போரைக் கண்டித்து ஏதேனும் சொன்னார்களா? மூலைக்கொரு பக்ஷ மாகத் தத்தம் கக்ஷியே நியாயமென்றும், தத்தம்

கக்ஷிக்கே வெற்றியும் எதிரிகளுக்குத் தோல்வியும் கொடுக்க வேண்டுமென்றும் யேசு கிறிஸ்துவையே பிரார்த்திக்க ஆரம்பித்தார்கள்! இப்போதும் ஆங்கிலேயர் சட்டமின்றி ஐர்லாந்தில் செய்து வரும் பலாத்காரக் கொடுஞ் செயல்களைக் கண்டிக்காமல் ஸின்பீனரை மாத்திரம் கண்டிப்பதில் பயனில்லை. பயிற்சியற்ற, தொகை குறைந்த, திறமை மிகுந்த படையை வைத்துக்கொண்டு ஸின்பீனர் எவ்விதக் கார்யங்கள் செய்கிறார்களோ அதே விதமான செயல்கள் பயிற்சி வாய்ந்த தொகையேறிய திறமை குன்றிய படையைக் கொண்டு ஆங்கிலேயாராலே செய்யப்படுகின்றன.

இங்கிலாந்திலேகூட மிஸ்டர் ஆஸ்க்வித் முதல் லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் வரை பல திறப் பட்ட ராஜ தந்திரிகளும் ஐர்லாந்தில் இப்போதுள்ள பரிதாபகரமான நிலைமைக்கு ஸீன்பீன் படையையும் ஆங்கிலப் படையையும் ஒருங்கே பொறுப்பாக்கிக் கண்டித்துப் பேசுகிறார்கள். "யதா ராஜா, ததா ப்ரஜா". ராஜாங்கமே சட்டத்தை மீறி திருஷ்டாந்தங் காட்டினால் பிறகு ஜனங்கள் சட்டத்தை மீறி நடக்கும்போது அவர்களைக் குற்றங்கூற வாய் ஏது?

பாதிக் கல்யாணம்

"ராஜாவின் மகளை விவாகம் பண்ணிக்கொள்ள எனக்கு ஸம்மதம். அந்தப் பக்கத்து ஸம்மதந் தெரிய வேண்டியதுதான் குறை வு. எனவே பாதிக் கல்யாணம் ஆய்விட்டது" என்று ஒரு விகட கவி சொன்னானும். அதுபோல் எமீர் (f) பெய்ஸல் மெஸபொடேமியாவுக்கு ராஜாவாக இருக்கத் தாம் ஸம்மதப்படுவதாகத் தெரிவிக்கிறார். இவரும் இவருடைய பிதாவும், வேலிக்குள்ளிருந்த பாம்பைப் பிடித்துக் காதுக்குள் விட்டுக்கொள்வது போல,

ஆங்கிலேயர்களையும் ப்ரெஞ்சு ஜனங்களையும் மத்ய ஆசியாவுக்கு நல்வரவேற்று உபசரித்த மஹான்கள்; தற்கால ஸௌகர்யமொன்றைக் கருதி நீண்ட கால யோசனையை இழந்து நடந்த கூட்டத்தைச் சேர்ந்த வர்கள். இந்த எமீர் பெய்ஸூல், ஏற்கெனவே, தம்மை ஸிரியாவுக்கு ராஜாவாகச் செய்வார்க ளென்று எதிர்பார்த்து இறுதியில் ப்ரான்ஸ் தேசத் தார் அதை விழுங்கிச் செல்லத் தாம் ஏமாறிப் போன பிரபு. இப்போது இவர் லண்டன் நகரத்தில் போய்ப் பத்திராதிபர்களுக்குக் குழையடித்துக் கொண்டிருக்கிறார். மெஸபொடேமியாவில் ஆங்கி லேயர்கள் வீணாக ஆட்களையும், செல்வத்தையும் பலி கொடுத்து வருவதில் ஆக்ஷேபம் செலுத்துவோ ரிடையே தம்மையும் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்று இவர் "டெய்லி டெலிக்ராப்" பத்திரிகைக் கார்யஸ்தரிடம் தெரிவித்திருக்கிறார். ப் ரி டி ஷ் மந்த்ராலோசனையையும் உதவியையும் கொண்டு மெஸபொடேமியாவை ஆளக்கூடிய ராஜாங்க மொன்றை அராபியர் ஸ்தாபனம் செய்ய ஆயத்த மாக இருக்கிறார்களாம். பிரிடிஷாருடைய ராஜீக திரவிய உரிமைகளுக்குப் பங்கம் நேராதபடி அரப் கவர்ன்மெண்டார் உறுதி மொழி கொடுப்பார் களாம். தேசத்தின் இயற்கைப் பொருள்களைக் காட்டி ஏராளமான கடன் வாங்க முடியுமாம்..... ஐயோ, பாவம்! எமீர் பெய்ஸூல் பகற்கனவு காண் கிறார். இவர் ஹிந்துதேச சரித்திரம் வாசித்திருப்பா ராஞல், தம்முடைய தேச ஆட்சியாகிய கரும்புத் தோட்டத்தைப் பிறர் ஆளாமல் தாம் ஆளச் செய்யும்படி இங்கிலிஷ் யானையை உதவிக் கழைத் திருக்க மாட்டார். இனி கால சக்ரத்தின் சுழற்சியால் மெஸபொடேமியாவில் அரப் ஆட்சி ஏற்பட்டாலும், அதில் எமீர் பெய்ஸூலுக்கு யாதொரு ஆதிக்கமும் இராதென்பது திண்ணம்.

காலக் கண்ணாடி

சக்திதாஸன்

15 மார்ச் 1921 ரௌத்திரி பங்குனி 2

சமாசாரப் பத்திரிகைகள்

இங்கிலாந்தில் சில முக்யமான வாசகசாலைத் தலைவர் இவ்வருஷத் தொடக்கத்தில், மற்றப் பழம் பத்திரிகைகளை விலக்குக் கொடுத்ததுபோல், "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையை மட்டும் கொடுக்காமல் உலக சரித்திரத்துக்கு ஆதாரமாகச் சேகரித்து வைத்தார்களென்று தெரிவிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் அத்தகைய பதவி நம் சுதேசமித்திரனுக்குக் கடவுள் அனுக்ரஹம் செய்யும்படி பிரார்த்திக்கிறேன். வர்த்தமானப் பத்திரிகைகளின் நிலைமை பொதுப்படையாகவே நாள்தோறும் ஏறிக்கொண்டு வருகிறது. உலகத்து ராஜ்ய தந்த்ரங்களுக்குப் பொதுஜன ஆதரவு அவசியமென்ற விதி பலப்பட பலப்படப் பத்திரிகைகளின் சக்தி மிகுதிப் பட்டுக் கொண்டு வருகிறது. வியாபாரிகளுக்கு வர்த்தமானப் பத்திரிகை இன்றியமையாத விளக்காய்விட்டது. கைத்தொழில் வளர்ச்சிக்கும் பத்திரிகைகள் தூண்டு தலாகி வருகின்றன. இலக்கியத் துறையிலும் பத்திரிகைகள் மேன்மேலும் மாண்புயர்ந்து வருமென்று தோன்றுகிறது.

பாரமார்த்திக தர்சனம்

இங்ஙனம் லௌகிக வெற்றியை வேண்டு வோருக்கு மாத்திரமே பத்திரிகை முக்யமான தென்று கருதல் வேண்டா. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற பெரியோரின் வாக்குப்படி உலகத்து நிகழ்ச்சிகளெல்லாம் கடவுளுடைய செயல்களேயாதலால், பத்திரிகை படித்தல் தெய்வ பக்தியுடையோருக்கும் பேராநந்தம் விளைத்தற் குரியது. கடவுள் மனித உலகத்தை எங்ஙனம் நடத்திச் செல்கிறனென்பதை விளக்குவதே சரித் திரப் பயிற்சியின் மேலான பயனென்று பூர்வாசார் யர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அங்ஙனமாயின், இந்த அம்சத்தில் சரித்திர நூல்களைக் காட்டிலும் பத்திரிகைகள் பன்முறை அதிகமான பயன் தரு மென்பதில் ஐயம் சிறிதேனுமுண்டோ?

ஆனால் தற்காலப் பத்திரிகைகளில் பக்ஷபாத குணம் அதிகமாகக் காண்பிக்கப்படுகிறது. தேசப் பக்ஷபாதங்களும் கக்ஷிப் பிரிவுகளும் மலிந்து கிடக் கின்றன. இவற்றை நீக்கிவிட்டால் பத்திரிகையின் மஹிமை இன்னும் நெடிதோங்கி வளர இடமுண் டாகும். இதனிடையே, இந்தியாவிலுள்ள பத்திரி கைகள் ஐரோப்பிய, அமெரிகப் பத்திரிகைகளி லிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள. விஸ்தாரமான செய்தி யெல்லை; ரஸ மாகச் செல்லும் திறமை-இவற்றில் இந்தியாவி லுள்ள பத்திரிகைகளைக் காட்டிலும் மேற்றிசைப் பத்திரிகைகள் மிக உயர்ந்த நிலையிலிருக்கின்றன. அதிலும், இந்தியாவிலுள்ள தேசபாஷைப்பத்திரிகை களின் நிலைமை சில அம்சங்களில் மிகவும் பரிதாபத் துக்கிடமாக இருக்கிறது. கடிதங்களெழுதுவோரில் பலர் இலக்கணப் பயிற்சிகூட இல்லாமல் பத்திரிகைக் கெழுதத் துணிகிறார்கள். அவற்றைப் பத்திராதி

பர்கள் சில ஸமயங்களில் பிழைகளையாமலே ப்ரசுரம் செய்து விடுகிறார்கள். இதுவுமன்றி இலக்கணப் பயிற்சியற்ற சிலர் பத்திராதிபராக இருக்கும் விநோதத்தையும் இந் நாட்டிலே காண்கிறோம். நவீன நாகரிகத்தின் முக்யச் சின்னங்களிலொன்றாகிய பத்திரிகைத் தொழிலில் நாம் மேன்மை பெறவேண்டுமானால், மேற்கூறப்பட்ட பிழைகளைத் தீர்த்துக் கொள்ளக் கடவோம்.

தொழிலாளர் கிளர்ச்சி

சில தினங்களின் முன்பு பெல்ஜியத்தில் ஒரு தொழிற்சாலையைத் தொழிலாளிகள் கைப்பற்றிக் கொண்டார்களென்று ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. எனவே பொது உடைமைக் கக்ஷி என்ற காட்டுத் தீ ஐரோப்பா என்ற மனுஷ்ய வனத்தில் ருஷியா முழுவதையும் சூழ்ந்து கொண்டது மன்றி மற்ற இடங்களிலும் அங்கங்கே திடீர் திடீர் என்று வெடித்துத் தழல் வீசி வருவது காண்கிறோம். போல்ஷெவிஸ்ட் கொள்கையை மத்ய ஆசியாவில் பரவவிடக் கூடாதென்றெண்ணும் ஆங்கிலேய மந்திரிகள் இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்த்ரியா, துருக்கி, ப்ரான்ஸ் முதலிய நாடுகளில் மிகுதியாகவும், இங்கிலாந்து, நார்வே, ஸ்வீடன், பெல்ஜியம், டென்மார்க் முதலிய தேசங்களில் சற்றே மட்டாகவும் அக் கொள்கை வியாபித்து வருவதை எங்ஙனம் ஸஹிக்கிறார்களென்பது புலப்படவில்லை. என்ன செய்யலாம்? ஆங்கிலேயப் பழங்கதை யொன்றிலே சொல்லப் பட்டதுபோல, கான்யூட் ராஜா சொல்லுக்குக் கடல் கீழ்ப்படிந்து நடக்குமா?

ஐப்பானில் ஜாதி பேதம்

நான் ஜாதி பேதத்துக்கு நண்பனல்லேன். இந்தியர்களெல்லாரும், அல்லது ஹிந்துக்களெல்

லாரும் ஒரே ஜாதி யென்ற ஸாதாரண இங்கிலிஷ் படிப்பாளிகளின் கொள்கையை நான் அனுஸரிக்க வில்லை. உலகத்து மனிதர்கள் எல்லாரும் ஒரே ஜாதி "வஸுதைவ குடும்பம்" என்ற பர்த்ருஹரி யின் கொள்கையைத் தழுவியுள்ளேன். மனித ஜாதியும் மற்ற ஜந்து ஸமூஹங்களும் ஒரே குடும்ப மென்ற (d) டார்வின் என்னும் ஆங்கில சாஸ்த்ரி யின் கருத்தைப் பின் பற்றுகிறேன். எல்லா ஜீவர் களும் கடவுளுடைய அம்சமென்ற பகவத்கீதையின் பரமோபதேசத்தைக் கடைப் பிடித்து நிற்கிறேன். ஒரு பிராமணனை, ஒரு ஆங்கிலேயனை, ஒரு ஆட் டைக் கொல்லுதல் அல்லது அடிப்பதால் எய்தும் பாவம் ஒரே மாதிரி. உபசரிப்பதால் அல்லது வணங் குவதால் எய்தும் புண்யமும் ஒரே தன்மையுடையது. இஃதென் உண்மையான, யான் ஒழுக்கப்படுததி வருகிற கொள்கை. எனிலும் ஜாதி பேதம் தொலை யும் வரை நாம் ஸ்வராஜ்யம் புரியத் தகுதி பெற மாட்டோம் என்று சொல்வோருடைய பேச்சுக் காசு பெறுதென்பதை நான் உறுதியாகத் தெரி விக்க விரும்புகிறேன். திருஷ்டாந்தமாக, ஸமீப காலத்தில் கிடைத்த டோக்யோத் தந்திகளினின் றும் அங்கு பரம நீதி ஸபை (ப்ரவி கௌன்ஸில்) அக்ராஸனாதிபதியான யமகாடாபிரபு என்பவரும், வேறு பல அரண்மனை அதிகாரிகளும் ராஜிநாமாக் கொடுத்து விட்டார்களென்று தெரிகிறது. இதன் காரணம் யாதென்றால் பூர்வகால முதலாக ஐந்து பழைய குடும்பங்களிலிருந்து மட்டுமே சக்ரவர்த்தி வம்சத்தார் பெண்ணெடுப்பது வழக்கமாக நடை பெற்று வந்திருக்க, இப்போது அந்த வழக்கத்துக்கு மாறுகப் பட்டத்திளவரசருக்கு அவ்வைந்து குடும் பங்களில் சேராத சேனாதிபதி கூனி இளவரசர் என் பவரின் மகள் இளவரசி நாகாகோ என்பவளை மணம் புரிய நிச்சயித்திருப்பதேயாம். ஜப்பானியப்

பரம நீதி ஸபைத் தலைவர் எவ்விதமான ஜாதி பேதம் பாராட்டுகிறார் பார்த்தீர்களா! விவாக ஸம்பந்தமான இடையூறுகளை உத்தேசித்தே யூனெடெட் ஸ்டேட்ஸ் மக்களான நாகரிக சிகாமணிகள் தமது களவாண்ட தேசத்தில் ஜப்பானியர் அடியெடுத்து வைக்கக் கூடாதென்று கூக்குரல் போடுகிறார்கள். மற்றப்படி வெள்ளை ஜாதியர்களுக்குள்ளே இருக்கும் விவாகத் தடைகள் பல. ஜாதி பேதமாவது முக்யமாக விவாகத்தடை; இரண்டாம் பக்ஷம் ஸமபந்தி போஜனத்தடை. இவை யிருத்தல் தவறு, ஆனல் இவை ஸ்வராஜ்ய ஸ்தாபனத்திற்கு விரோத மென்று கூறுவோர் பச்சை அறியாமையாலே அங்ஙனம் சொல்லுகிறார்கள்.

"ரிஷிகள் கடன்"

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

21 மார்ச் 1921 ரௌத்திரி பங்குனி 8

கல்கத்தா சர்வகலாசாலை விசாரணை ஸபையின் முன்னே கீர்த்தி பெற்ற பாரத புத்திரர் ஒருவர் எழுதிக் கொடுத்த அறிக்கையொன்றில், பூர்வ காலத்து இந்தியர்கள் என்ன நோக்கத்துடன் கல்வி கற்பித்து வந்தன ரென்பதைச் சுருக்கிக் காட்டும்படி. பின்வருமாறு சொல்லுகிறார் :—

"இந்தியாவில் கல்வியைப்பற்றிய கொள்கை இன்னதென்பது இந்திய சாஸ்திரங்களில் தெரிந்த, குறிப்பான பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. இக் கொள்கை குறைந்த பக்ஷம் முப்பது நூற்றாண்டாக இந்தியாவின் வாழ்க்கையை ஆண்டு வந்திருக்கிறது. எனவே, அதனைத் தெளிவுபடச் சொல்லுதல் அவசிய மாகிறது.....என் வசத்திலிருக்கும் ஆதாரங்களை நான் மிகவும் ஜாக்ரதையாக ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறேன். ஆதலால் ஜாக்ரதையான பாஷையை, ஜாக்ரதையான பதங்களுடனே வழங்கு வேன். கல்வியைப்பற்றிய இந்திய சித்தாந்தத்தைப் பின்வருமாறு எடுத்துக் காட்டலாம் :—

ஒவ்வொரு மனிதனும் சில கடமைகளுடனே பிறக்கிறான்; இவற்றை சாஸ்த்ரங்கள் 'கடன்கள்' (ரிணங்கள்) என்று கூறும். இவையாவன :—

1. (ஆத்மாவை ஆளும்) தேவர் கடன்.

2. (தேச பிதிரர் உட்பட) பிதிர்க்கள் கடன்.

3. சுற்றத்தார்க்கும், மற்ற மனிதர்க்கும் இறுக்கப்படும் கடன்.

4. உணர்வு வாய்ந்த ஜீவ ஜந்துக்கள் அனைத்திற்கும் செலுத்தவேண்டிய கடன்.

5. இவையனைத்திலும் மேலாக ரிஷிகளுடைய கடன். தனது வாழ்க்கைக்குப் பிரமாணமாகிய நாகரிகத்தின் புராதன ஸ்தாபகர்களுக்குச் செலுத்த வேண்டிய கடனே முக்கியமானது, முதன்மைப் பட்டது. ரிஷிகளுக்குச் செலுத்தவேண்டிய இந்தக் கடனை இறுக்கும் நெறி யாதெனிலோ வித்யாப் யாஸம்; கல்விப் பயிற்சி. அதாவது, அறிவை அதன் பொருட்டே தேடுதல்.

இப்படிப்பட்ட அற்புதமான கொள்கையி னின்றும் தோன்றி வளர்ச்சி பெற்றதாகிய அற்புத மான இந்தியக் கல்வி முறையைப் பதினெட்டாம் நூற்றாண்டில், நம்மவர் திடீரென்று கைவிட்டுவிட்ட விஷயத்தை ஸ்ரீமான் எஸ். கே. தத்தர் என்பவர் 1921 ஜனவரி இந்திய இளைஞர் (யங்மென் ஆப் இந்தியா) பத்திரிகையில் எழுதியிருக்கும் "கல்வி விவகாரம்" என்ற மகுடமுள்ள வ்யாஸத்தில் மிகவும் ஸாங்கோபாங்கமான சரித்திர விவரங்களுடனே குறிப்பிட்டிருக்கிறார்.

இதன் மத்யகால வடிவம் நமக்கெல்லாம் நன் றாகத் தெரியும். அதாவது மஹமதியர்களின் காலத் திற்கு முந்தி அநேக நூற்றாண்டுகளாகவும் மஹமதிய ஆட்சியின் காலத்திலும் இந்தியாவில் எத்தகைய கல்விமுறை இருந்ததென்பதை நாம் அறிவோம். இவை மஹமதிய நூல்களினின்றும் ஹிந்து சரஸ்த் திரங்களில் பிற்காலத்து சாஸ்த்ரங்களினின்றும் பின்

னிட்டுப் போதிய ஐரோப்பியக் கல்வியென்ற வெள்ளத்தில் அழிந்தது போக இன்றைக்கும் அங்கங்கே சிதறிக் கிடக்கும் பூர்வ முறைபற்றிய கல்விச் சாலைகளின் திருஷ்டாந்தத்தினின்றும் அறியக் கிடக்கின்றன.

ஆதி பூர்வ காலக் கல்வி எப்படி யிருந்ததென்பதை வேதோபநிஷத்துக்களிலிருந்தும், பிரமாணங்களிலிருந்தும், தர்ம சாஸ்திரங்களிலிருந்தும் தெரிந்து கொள்ள முடியும்.

இதற்கும் மேற்கூறிய மத்ய காலத்துக்குமிடை நின்ற காலத்துக் கல்விமுறை இதிஹாஸ, புராணங்களில் மிகவும் தெளிவாகப் புலப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவின் புராதன ராஜரீக முறைகளை ஸவிஸ்தாரமாக ஆராய்ச்சி யென்பதோர் திரிகாலக் கண்ணுடி மூலமாக உணர்ந்துகொள்வதில் சரித்திரம் பயில்வோருக்குள்ள சிரமம் பூர்வகாலக் கல்வி முறைகளை உணர்ந்துகொள்வதில் ஏற்படாது.

இந்தக் கல்வி முறைமை வேத காலந்தொட்டு நேற்றுவரை பலவகை வடிவங்களில் மாறி வந்திருக்கிறதெனினும், அதன் யதார்த்த ஸ்வரூபம் எப்போதும் மங்கியது கிடையாது. ஆகம ஞானம் அதன் லக்ஷியம் எப்போதும்! தெய்வ பக்தி அதன் கவசம் எப்போதும்! நல்லொழுக்கமும், நீதியும், அன்பும் அதன் முறைகள் எப்போதும்! மேலே ஸர்வ கலாசாலை விசாரணை ஸபையார் முன்பு செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டியபடி குறைந்த பக்ஷம் மூவாயிரம் வருஷங்களாகக் காப்பாற்றிக்கொண்டு வந்த, நீண்ட பக்ஷம் எத்தனையோ ஆயிரம் நூற்றாண்டுகளாக இந்தியாவில் பாதுகாக்கப்பட்டு வந்த இந்தக் கல்வி முறை பதினெட்டாம் நூற்றாண்டினிடையே திடீரென்று சிதறி

விழுந்ததின் காரணம் யாதெனில்; ஸ்ரீமான் எஸ். கே தத்தர் சொல்லுகிறார் :—

"இந்தக் கல்விக்கு திரவிய லாபமில்லாது போயிற்று. இனி, மீள, என்றேனும் ஏற்படக் கூடு மென்ற நம்பிக்கையும் இல்லாமற் போய்விட்டது. ஆதலால், இந்தியர்கள் இந்தக் கல்வியை ஆதரிக்க மனமில்லாதோராயினர்" என்றார்.

ஐரோப்பாவின் கல்வி முறை அந்த சமயத்திலே தான் ஐரோப்பாவிலே மத ஸம்பந்தங்களை வேர றுத்து சுத்த லௌகிகமாக மாறிக்கொண்டிருந்தது. எனவே ஐரோப்பியக் கல்வி ராஜாங்கத்தாரால் இந்த தேசத்தில் வற்புறுத்தப்பட்ட காலத்தில், அது மத ஒழுக்கங்களை ஆதாரமாகக் கொண்ட இந் நாட்டுக் கல்வி முறையுடன் சிறிதேனும் அனுதாப மில்லாததாயிற்று.

மேலே காட்டிய அறிக்கையில் இந்தியாவின் கல்வி நோக்கத்தைக் குறித்துக் காட்டுமிடத்தே "கல்விப் பயிற்சி"யாவது அறிவை அறிவின் பொருட் டாகவே தேடுதல் என்று விளக்கியிருக்கிறார். அதாவது "திரவிய லாபத்தை"க் கல்விப் பயிற்சிக்கு லக்ஷியமாகக் கொள்ளாமல்; அறிவுப் பயிற்சி தன் அளவிலே செய்யத் தக்கதென்றும், செய்தற்குரிய கடமையென்றும் தெரிந்து கொள்ளுதல்.

இந்தியக் கல்விக்கு லக்ஷணம் இஃதானால் பதி னெட்டாம் நூற்றாண்டில் அது திரவிய லாபந் தாராமை பற்றிக் கைவிடப்பட்டதென்று சொல் லுதல் முன்னுக்குப் பின் முற்றிலும் முரண்படுகிற தன்றோ?

இந்தியாவின் அழைப்பு

19 ஜூலை 1921 துன்மதி ஆடி 4

இஃது (யூனைடெட் ஸ்டேட்ஸ், மிஷிகன் மாகாணம், தெத்ருவா நகரத்திலுள்ள ஸ்ரீமதி மாட் (d) ராஸ்ஸடன் ஷர்மன் என்ற ஸ்திரீ எழுதிய இங்கிலீஷ் கவிதையினின்றும், ஸ்ரீமான் சி. சுப்பிர பாரதியால் மொழி பெயர்க்கப்பட்டது.)

வேண்டுகோள்

அன் பிற் கினிய இந்தியா! அகில
மதங்கள், நாடுகள், மாந்தருக் கெல்லாம்
தாயே! எங்கள் உணர்வினைத் தாண்டிய
சேய் நெடுங் காலத்தின் முன்னே சிறந்தொளிர்
குருக்களே யளித்துக் குலவயங் காத்தனே.
திருக்கிளர் தெய்வப் பிறப்பினர் பலரை
உலகினுக் களித்தாய்; உனதொளி ஞானம்
இலகிட நீயிங் கெழுந் தருளுகவே!
விடுதலே பெறநாம் வேண்டிநின் மறைவு
படுமணி முகத்தைத் திறந்தெம் பார்வைமுன்,
வருக நீ !. இங்குள மானுடச் சாதிகள்
பொருளகந் தவிர்ந்தமை வுற்றிடப் புரிகநீ !
மற்றவர் பகைமையை அன்பினுல் வாட்டுக!
செற்றவர் படைகளே மனையிடந் திருப்புக !

தாயே, நின்றன் பண்டைத் தநயராம்
மாயக் கண்ணன், புத்தன், வலிய சீர்
இராமனும், ஆங்கொரு மஹமது மினையுற்ற
விராவுபுகழ் வீரரை வேண்டுதும் இந்நாள்!
"தோன்றினேன்" என்று சொல்லி வந்தருளும்
சான்றோன் ஒருமுனி தருகநீ எமக்கே!
மோசே, கிறிஸ்து, நானக் முதலியோர்
மாசற வணங்கி மக்கள் போற்றிடத்
தவித்திடுந் திறத்தினர் தமைப் போலின்றொரு
பவித்திர மகனைப் பயந்தருள் புரிகநீ!
எம்முன் வந்து நீதியின் இயலைச்
செம்மையுற விளக்குமொரு சேவகனை அருளுக நீ!

உத்தரம்

கேள்! விடை கூறினள் மாதா! நம்மிடை
யாவனே யிங்ஙு தோன்றினன்? இவன் யார்?
உலகப் புரட்டர் தந்திர உரையெலாம்
விலகத் தாய்சொல் விதியினைக் காட்டுவான்.
மலிவு செய்யாமை: மனப்பகை யின்மை;
நலிவுறுத்தோரை நாம் எதிர்த்திடாமை;
தீச்செயல் செய்யும் அரசினைச் சேராமை;
ஆச்சரியப்பட உரைத்தனன் —அவையெலாம்.
வருக காந்தி! ஆசியா வாழ்வே!
தரும விதிதான் தழைத்திட உழைப்பாய்.
ஆன்மா அதனுல் ஜீவனை யாண்டு
மேனெறிப் படுத்தும் விதத்தினை யருளினுய்!
பாரத நாட்டின் பழம்பெருங் கடவுளர்
வீரவான் கொடியை விரித்து நீ நிறுத்தினுய்!
மானுடர் தம்மை வருத்திடும் தடைகள்
ஆனவை யுருகி அழிந்திடும் வண்ணம்
உளத்தினை நீ கனல் உறுத்துவாய்! எங்கள்
காந்தி மஹாத்மா! நின்பாற் கண்டனம்!

மாந்தருட் காண நாம் விரும்பிய மனிதனே !
நின்வாய்ச் சொல்லில், நீதி சேர் அன்னே
தன்வாய்ச் சொல்லினைக் கேட்கின்றனம் யாம்
தொழுந்தா யழைப்பிற் கிணங்கி வந்தோம் யாம்
எழுந்தோம்; காந்திக் கீந்தோம் எமதுயிர்.
இங்கவன் ஆவிக் கொள்கை வென்றிடவே.
அன்றைக் குணவுதான் அகப்படு மாயின்
நன்றதில் மகிழ்வோம்; விடுதலே நாடி
எய்திடுஞ் செல்வ எழுச்சியிற் களிப்போம்;
மெய்திக ழொற்றுமை மேவுவோம்; உளத்தே
கட்டின்றி வாழ்வோம்; புறத்தளைக் கட்டினை
எட்டுணை மதியா தேறுவோம்; பழம்போர்க்
கொலைத் தொழிற் கருவிகள் கொள்ளா தென்றும்
நிலைத்தன ஆகிய நீதிக் கருவியும்
அறிவுங் கொண்டே அரும்போர் புரிவோம்
வறியபுன் சிறைகளில் வாடினும்; உடலே
மடிய விதிப்பினும்; "மீட்டு நாம் வாழ்வோம்" என்
றடியுறக் கூறி வெற்றி யேறி,
ஒடிபடத் தளைகள், ஒங்குதும் யாமே.

ஐர்லாந்தும் இந்தியாவும்

காளிதாஸன்

19 ஜூலை 1921

மஹாயுத்தம் நடக்கும் காலத்தில், எடிஸன் என்ற அமெரிக மின்ஸார சாஸ்திரியின் விலையுயர்ந்த ஆராய்ச்சிக் கூடமொன்று தீப்பட்டெறிந்து போயிற்று.

அதுபற்றிச் சில நண்பர்கள் அவரிடம் துக்க விசாரணை புரிந்து கடிதமெழுதியிருந்தார்கள். அதற்கவர் சொன்னார்:—"என் கஷ்டம் ஒரு கஷ்டமா! அதோ! ஜெர்மனியில் கைஸர் சக்கரவர்த்தி இருக்கிறார், பாருங்கள். அவர் ஒருவரையும், அவருடைய பலமற்ற துணைவர் ஓரிருவரையும் எத்தனையோ அரசுகள் கூடி எத்தனையோ வகைகளால் போர் புரிகின்றன. அந்த ஒரு மனிதர் என்ன செய்வார், பாவம்! எனவே எனக்கு ஏதேனும் ஸங்கடம் நேரும் போதெல்லாம் நான் நம்மைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக பயங்கரமான விபத்துக்களாலே சூழப்பட்டிருக்கும் கைஸரை நினைத்து மனந் தேறுகிறேன்" என்றாராம்.

அக்காலத்தில் இக்கதை வெளியிடப்பட்டிருந்தது தொடர்ச்சியாகப் பத்திரிகை படித்து வரும் நண்பர்களிலே பலருக்கு ஞாபகமிருக்கலாம். அது போல், இந்தக் காலத்தில் நாம் மிஸ்டர் லாய்ட்

ஜ்யார்ஜைச் சூழ்ந்திருக்கும் ஸங்கடங்களின் தொகை யையும் அளவையும் கருதி நம்முடைய கஷ்டங்களை மறக்க முடியுமென்று தோன்றுகிறது.

ஐர்லாந்துக்கு ஏறக்குறைய இந்த முறை ஸ்வராஜ்யம் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் அமெரிகா சும்மா விடாது. கானடா சும்மா விடாது. ஆஸ்திரேலியா தென் ஆபிரிகா, நியூஜிலாந்து முதலிய குடியேற்ற நாடுகள் பொறுத்திருக்கமாட்டா. ப்ரான்ஸிடம் விடுதலைப் ப்ரஸங்கங்களை விரிக்க இங்கிலாந்துக்குச் சிறிதேனும் இடமில்லாமற் போய்விடும். உலக முழு மையிலும் அபகீர்த்தி ஏற்றும். இங்கிலாந்தின் சத்து ருக்கள் பெருமகிழ்ச்சியடைய ஹேதுவுண்டாகும். இத்தனை உதவிகளுமில்லாது போயினும் இப்போது ஸ்வராஜ்யம் கொடுக்காவிட்டால், ஐர்லாந்து சும்மா இராது. ஸ்வராஜ்யத்தை வற்புறுத்தும் பொருட்டு ஐர்லாந்தியர் ஐர்லாந்திலும், லண்டன் மான் செஸ்டர் முதலிய நகரங்களிலும் என்ன காரியங்கள் செய்து வந்தனரென்பதும், அதனால் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலியோருக்கு நேர்ந்த அஸௌகர்யங்கள் எவையென்பதும் நேயர்களுக்குத் தெரிந்த சங்கதி களேயாம்.

இத்தனை பலாத்காரங்களைக் கருதி ஸ்வராஜ்யம் கொடுத்துத் தொலைப்போம் எனிலோ, வட ஐர் லாந்து முதல் மந்திரியாகச் சில தினங்களின் முன்னே முளைத்திருக்கும் ஸர் ஜேம்ஸ் க்ரேக் ஏற்கெனவே போர்க் கொடியைத் தூக்கிவிட்டார். அல்ஸ்டர் மாகாணத்துக்குத் தனிப் பார்லிமெண்ட் சாசுவத மாக இருக்குமெனில், பிறகு ஐரிஷ் ஸ்வராஜ்யம் என்பதற்கு அர்த்தமே கிடையாது. ஐர்லாந்தை இரண்டாக வெட்டிப் பிறகு ஸ்வராஜ்யம் கொடுப்ப தென்றால், என்ன செய்கை அது!

அஃதொருவனே இரண்டாக வெட்டிக் கொன்ற பின்னர் அவனுக்கு மணம் புரிவிப்பதாகக் கூறுதல் போலும். எனவே, அல்ஸ்டர் என்றொரு பதார்த்தம் இருப்பதன் உண்மையை நன்குணர்ந்த ஸ்ரீமான் தெவலேரா, தாம் தமது குடியரசுக் கொள்கையை விட்டு "ஸ்மட்ஸ்" ஸ்வராஜ்யத்தை அங்கீகரிக்க ஆயத்தமாக இருப்பதாகவும், ஆனல் அல்ஸ்டர் தனது தனிப் பார்லிமெண்டை விட்டுவிட வேண்டு மென்றும் வற்புறுத்தினர். இங்ஙனமிருக்க, முன்பு யூனியனிஸ்ட் தலைவராக இருந்து இங்கிலீஷ் கவர்ன் மெண்டினிடமுள்ள அளவிறந்த பக்தியால், அதனை எதிர்த்துப் போர் செய்யப் படைகள் தயார் செய்தவ ராகிய ஸர் எட்வர்ட் கார்ஸனுடைய பட்டத்தில் இப்போதிருக்கும் அல்ஸ்டர் ப்ரதம மந்திரியான ஸர் ஜேம்ஸ் க்ரேக்::லண்டன் சமாதான ஸங்கத்திற்குத் தம்மை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அழைத்திருப் பதைக் குறித்துப் பேசிய உதாஸீன மொழிகளை ராய்ட்டர் தந்திகளினிடையே காணலாம்.

இங்கிலாந்திலும் லார்ட் டெர்பி முதலியவர்கள் மிஸ்டர் ஜ்யார்ஜைக் கடலில் கவிழ்த்து விடுவதற் குரிய யோசனைகள் இப்போது தீவிரமாகப் புரிவதன் காரணம் ஐர்லாந்துக்கு அவர் ஸ்வராஜ்யங் கொடுத்து விடுவாரோ என்ற பயத்தாலே யன்றிப் பிறிதில்லை.

கான்ஸர்வடிவ் கக்ஷியார் கைவிட்டால் பிறகு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கு பலிபிக் சமுத்திரந் தான் கதி.

இங்ஙனம் ஐர்லாந்து விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் இருதலைக் கொள்ளி எறும்பு போல இடர்ப்படுதல் ஒருபுறமிருக்க, இந்த சமயத்தில் இந்தியராகிய நாமும் அவரிடம் ஒரு செய்தியை மிக நன்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

அதாவது, ஐர்லாந்தைச் சென்ற பல நூற் றாண்டுகளாக மீட்டும் மீட்டும் போரில் அடக்கி, அதன் விடுதலை வேட்கையை மறுத்து வந்தீர்கள். ஐர்லாந்து மிகச் சிறிய நாடு. உண்மையில், இப் போதுகூட இங்கிலாந்திலுலே ஐர்லாந்தைப் போரில் மடக்கிவிட முடியும்.

அப்படியிருந்தும், உலக முழுமையிலும் எழுச்சி பெற்றிருப்பதாகிய, பெரிதோர் தர்மக் கிளர்ச்சியை முன்னிட்டு, ஐர்லாந்துக்குக்கூட இனி ஸ்வராஜ்ய மில்லை என்று மறுத்தல் இங்கிலாந்துக்கு ஸாத்யப் படாதென்று தீர்ந்து போய்விட்டது.

அப்படியிருக்க, 5000 வருஷங்களுக்கு முன்னே வேதாந்தப் பயிற்சி செய்தது; முப்பது கோடி ஜனங் களுடையது; இன்றைக்கும் ஜகதீச சந்திரர் முதலிய வர்களின் மூலமாக உலகத்தாருக்கு நாகரிகப் பாதையிலே வழி காட்டுவது; பூமண்டல சரித்திரத் திலே வீர்ய முதலிய ராஜ குணங்களில் நிகரற்ற தாகிய இந்தியாவுக்கு விடுதலை எப்போது தரப் போகிறீர்கள்?

என் ஈரோடு யாத்திரை

சக்திதாஸன் எழுதுகிறார்

4 ஆகஸ்ட் 1921

ஈரோட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். அது கொங்கு நாடு. ஆனால், அதற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் யாதொரு வேற்றுமையும் தென்படவில்லை. ஸ்வதேசிய நிகழ்ச்சி தோன்றிய காலம் முதலாக தமிழகத்தின் உட்பகுதிகளுக்கிடையே உள்ள அக வேற்றுமைகள் குறைவுபட்ட காரணத்தாலே புற வேற்றுமைகளும் குறைவு படுகின்றன.

இதற்குச் 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகள் பெரிதும் உதவி புரிந்தன என்பது நிச்சயம்.

கட்டை வண்டி ஒன்று கிடைத்தது. கட்டை வண்டியில் ஒரு மனிதன் நிமிர்ந்து உட்கார இடமில்லை. ஒன்றரை அடி நீளம். மாடு ஒரு சிறு பூனைக்குட்டி போன்று இருந்தது. நான் ஒன்று; வண்டிக்குடையவன் இரண்டு; அவனுக்குக் கீழே கூலிக்கு வண்டி ஓட்டும் சிறுவன் ஒருவன்; எங்கள் மூவரையும் மூன்று பர்வதங்களாக நினைத்து அந்த மாட்டுப் பூனை இழுத்துக்கொண்டு போயிற்று.

அரை மைல் தூரத்தில் உள்ள கருங்கல் பாளையத்தில் எனக்கு வேலை. அங்கு ஒரு சிநேகிதருடைய அழைப்பிற்கிணங்கிச் சென்றிருந்தேன். கருங்கல்

பாளையத்துக்குப் போய்ச் சேருமுன்னே மாடு வெயர்த்துப் போய்விட்டது. அதன் மேலே குற்றஞ் சொல்வதில் பயனில்லை. அது சிறு ஜந்து. அதன் மேலே நாங்கள் மூன்று கடி மனிதரும் ஒரு கழுத் தளவுக்குச் செய்யப்பட்ட விதானத்தை உடைய வண்டியும் சவாரி பண்ணுகிறோம்.

ஏறக்குறைய இரண்டு மணி நேரத்துக்குள்ளே கருங்கல்பாளையம் என்ற கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அந்தக் கிராமத்தில் ஆண் மக்கள் எல் லோரும் மஹா யோக்கியர்கள், மஹா பக்திமான்கள்; புத்திக் கூர்மையிலும், சுறுசுறுப்பிலும், தேசாபி மானத்திலும் மிகவும் பாராட்டுதற்குரியவர்கள்.

இவர்களுடன் ஸல்லாபம் எனக்கு எல்லா வகை களிலும் இன்ப மயமாக இருந்தது.

அங்கே ஒரு புஸ்தகசாலை இருக்கிறது. வாசக சாலை. அதன் காரியதரிசி ஒரு வக்கீல். மிக நல்ல மனிதர்; மஹா புத்திமான்; தேசபக்தியில் மிகவும் பாராட்டுதற்குரியவர்.

அந்த வாசகசாலை அவ்வூராரை நாகரிகப்படுத்து வதற்குப் பெரிதோர் சாதனமாக விளங்குகிறது. இங்ஙனம் அதனால் அவ்வூருக்குப் பலவித நன்மைகள் ஏற்பட்டு வருகின்றன என்பதை கனம் நரசிம்மையர் (சேலம் வக்கீல்), ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு, ஸ்ரீ கல்யாணசுந்தர முதலியார் முதலிய முக்கியஸ் தர்கள் தம் நற்சாக்ஷிப் பத்திரங்களாலே தெரிவித் திருக்கிறார்கள்.

இந்தச் சபையின் வருஷோத்ஸவக் கூட்டத்திற்கு நான் போய்ச் சேர்ந்தேன். என்னை ஒரு பிரசங்கம் பண்ணச் சொன்னார்கள். எனக்கு ஒரு விஷயந்தான் முக்கியமாகத் தெரியும். அதையே அங்கும் எடுத்துப் பேசினேன். அதாவது இந்த உலகத்தில் மானுடர்

எக்காலத்திலும் மரணமில்லாமல் இருக்கக் கூடுமென்ற விஷயம்.

ப்ரஹ்லாதனைப் போன்ற தெய்வ பக்தியும், மன்மதனைப் போன்ற ஏக பத்தினி விரதமும் ஒருவன் கைக்கொண்டிருப்பானையின், அவன் இந்த உலகத்திலேயே ஜீவன் முக்தியடைந்து, எல்லா அம்சங்களிலும் தேவ பதவி எய்தியவனாய், எப்போதும் மகிழ்ச்சி கொண்டிருப்பான் என்பது என்னுடைய கொள்கை. இந்தக் கொள்கையை நான் வேதபுராண சாஸ்த்ரங்கள், இதர மத நூல்கள், ஐரோப்பிய ஸயன்ஸ் சித்தாந்தங்கள், ஸ்ரீமான் ஜகதீஸ்சந்திர வஸுவின் முடிபுகள் என்னும் ஆதாரங்களாலே ருஜுப்படுத்தினேன். அங்குள்ள பெரிய வித்வான்கள் எல்லோரும் கூடி என்னுடைய தர்க்கத்தில் யாதொரு பழுதுமில்லையென்று அங்கீகாரஞ் செய்துகொண்டார். பிறகு மறு நாள் என்னை ஈரோட்டுக்கு வந்து வாய்க்கால் கரையில் ஒரு பொதுக்கூட்டத்திலே, 'இந்தியாவின் எதிர்கால நிலை' என்ற விஷயத்தைக் குறித்துப் பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். நான் உடம்பட்டேன். மறுநாள் கூட்டத்தைப்பற்றிய விஷயங்களை இங்கு விவரித்துக்கொண்டு போனால் இந்த வியாசம் மிகவும் நீண்டு போய்விடும். ஆதலால் இன்று இவ்வளவோடு நிறுத்தி மற்றை நாள் சம்பவங்களைப்பற்றி நாளை எழுதுகிறேன்.

குறிப்பு:—மேலே கூறியவாறு மற்றொரு கட்டுரை பாரதியார் எழுதியதாகத் தெரியவில்லை. முயன்று தேடியும் அதைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

ஒரு கோடி ரூபாய்

காளிதாஸன்

11 ஆகஸ்டு 1921 துன்மதி ஆடி 27

ஸெப்டம்பர் மாஸத்துக்குள் ஸ்வராஜ்யம் கிடைப்பதற்கு ஒரு கோடி ரூபாய் இன்றியமையாத தென்றும், அது கொடுக்காவிட்டால் இந்தியா தேசத்து ஜனங்கள் ஸ்வராஜ்யத்தில் விருப்பமில்லாத தேசத் துரோகிகளே யாவார்களென்றும் ஸ்ரீமான் காந்தி முதலியவர்கள் சொல்லிக்கொண்டு வந்தனர்.

ஜனங்கள் ஒரு கோடி ரூபாய் கொடுத்து விட்டார்கள். அந்தத் தொகை எங்ஙனம் செலவிடப் படுகிறது? எப்போது செலவு தொடங்கப் போகிறார்கள்? ஒரு மாஸத்திலோ, இரண்டு மாஸங்களிலோ, அன்றி இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளேயோ, ஸ்வராஜ்யம் கிடைக்க வேண்டுமாயின், அந்தத் தொகை ஏற்கெனவே செலவு தொடங்கியிருக்க வேண்டுமன்றே?

"ஒரு கோடி ரூபாய் கிடைத்தால்தான் ஸ்வராஜ்யம் வரும்" என்று சொல்லப்பட்ட வார்த்தைக்கு ஒரு பொருள்தான் உண்டு. அதாவது, அந்தப் பணம் ப்ரசாரத் தொழிலிலே செலவிடப் படவேண்டும். நாமோ பலாத்கார முறையை அனுஸரிக்கவில்லை. எனவே, அந்தக் கோடி ரூபாயை

ஸைந்யச் செலவுக்கு உபயோகப்படுத்துவதென்ற ஆலோசனைக்கு இடமில்லை. எனவே, ப்ரசாரத் தொழில் ஒன்றுதான் கதி. மேற்படி தொகையில் ஒரு பகுதிக்கு ராட்டினங்கள் வாங்கி ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கருதினால் அங்ஙனம் தாராளமாகச் செய்யலாம். வேறு எத்தனை வகைகளில் செலவு செய்ய விரும்பினாலும் செய்யலாம். ஆனால் அத்தனைக்கும் ஆதாரமான மூலவழி ப்ரசாரந் தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

ஏற்கெனவே, ப்ரசாரத்தில் இத் தொகையை எங்ஙனம் செலவு செய்யலாமென்பதைக் குறித்துச் சில வழிகள் இப்பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறேன். ஜில்லாவுக்கு 4 பேருக்குக் குறையாமல் மஹா நிபுணரான ஸ்வதேசீய ப்ரசாரகர் ஏற்பட வேண்டும்.

ஆனால், ப்ரசாரத் தொழில் இதுவரை தொடக்க முறுமல் இருப்பதன் காரணம் யாதென்பது துலங்க வில்லை.

இந்த விஷயத்தைக் குறித்துச் சென்னை மாகாணத்தில் வசூல் தொழிலை முக்கியஸ்தராக இருந்து நடத்திய என் நண்பர் சேலம் ஸ்ரீ ராஜகோபாலாசார் யரும் பிறரும் ஸ்ரீமான் மஹாத்மா காந்திக் கெழுதி வேண்டியன செய்வார்களென்று நம்புகிறேன்.

மற்றபடியுள்ள காங்க்ரஸ் ஸங்கங்களின் அங்கத் தினராலும் அனுதாபிகளாலும் மிகவும் சிரமப்பட்டு வசூல்செய்யப்பட்ட மேற்படி தொகை வீணுய்விடாத படி கவனிக்க வேண்டும். உலக சரித்திரத்தில் இந்த சந்தர்ப்பம் மிக முக்யமானது. இதில் உலக முழுமையிலும் பல அற்புதமான மாறுதல்கள் தோன்றி வருவது மாத்திரமேயன்றி, உலகத்திலுள்ள தேசங்களுக்கெல்லாம் விடுதலை பொதுவாகி விடுமென்றும்

புலப்படுகிறது. இத்தருணத்தில் விரைவிலே இந்தியா எங்ஙனமேனும் தன் ஸ்வதந்த்ரத்தை உறுதி செய்து கொள்ளுதல் அதன் கடமையாம். இதுவே, நமது தேசத்தில் பொதுஜனங்களின் மனதில் எப்போதும் விடாமற் பற்றியிருக்கும் பேராவலாகிவிட்டது. அது பற்றியே, மஹாத்மா காந்தி கேட்டபோது, ஜனங்கள் சிறிதேனும் லோபத்தன்மையின்றித் தங்கள் அளவிறந்த வறுமையையும் பாராட்டாமல், பணத்தை யதேஷ்டமாகவும் விரைவாகவும் கொடுத்துத் தங்கள்மீது பழிச் சொல்லுக்குச் சிறிதேனும் இடமின்றிச் செய்து கொண்டார்கள்.

ஒப்பந்தத்தில் ஒரு பாதி நிறைவேறிப் போய் விட்டது. அதாவது ஜனங்கள் பக்கத்திலே விதிக்கப் பட்ட கடமை நிறைவேறிவிட்டது. இனித் தலைவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டியதைத் தவிர வேறொன்றும் இல்லை.

நாம் இங்ஙனம் எழுதிக்கொண்டு வருகையிலே, ஸ்ரீமான் ராஜ்கோபாலாசார்யர் ஒரு கணக்கு ப்ரசுரம் செய்திருக்கிறார். அதில் சென்னை மாகாணத்து வசூல் எவ்வளவென்பதையும் அதில் செலவம் சங்கள் எவையென்பதையும் விவரித்துக் கணக்குகள் தெரிவிக்கிறார். அதில் மிகவும் சொற்பமான தொகையொன்று சுமார் (50,000 ரூபாயென்று நினைக்கிறேன்) ப்ரசாரச் செலவுக்காகப் போடப்பட்டிருக்கிறது. இந்த ரூபாய் போதாதென்பது என்னுடைய அபிப்ராயம். ப்ரசார விஷயத்தில் இந்தியா முழுதையும் ஒன்றுகப் பாராட்ட வேண்டும். இந்தியா முழுமைக்கும் ஒரே திட்டம், ஒரே முறைமை, ஒரே ப்ரசார ஸங்கம் தலைமையாக இருந்து இந்த ஸ்வராஜ்ய ப்ரசாரத்தை நடத்தி வராவிட்டால் நமக்கு எண்ணிறந்த ஸங்கடங்கள் விளையும். "கர்மம் உனக்குரியது; நீ பயனைக் கருதுதல் வேண்டா" என்று

கண்ணபெருமான் பகவத் கீதையில் சொல்லியிருப்பதற்கு இக்காலத்தில் பலர் பொருளுணர்ந்து கொள்ள மாட்டாதவர்களாக இருக்கின்றனர்.

பயனே மனிதருக்குக் கிடைக்காத நிலைமையில் தொழில் புரிய வேண்டுமென்பது கீதையில் சொல்லப்பட்டதாகச் சிலர் நினைக்கிறார்கள். அந்த அர்த்தத்தில் பகவான் அந்த வசனத்தை வழங்கவில்லை என்பது கீதை முற்றிலும் வாசித்துப் பார்த்தவர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும்.

தொழில் புரிந்துவிட்டு வெற்றி அகப்படுமோ அகப்படாதோ என்று எவரும் மனம் புழுங்குதல் வேண்டா. பயனுடைய தொழிலென்று புத்தியாலே நிச்சயிக்கப்பட்ட தொழிலை, ஒருவேளை அது பயன் தராதோ என்ற பேதை ஸம்சயத்தால் நாம் நிறுத்தி வைத்தல் தகாது. தொழிலுக்குப் பயன் நிச்சயமாக உண்டு. கடவுள் பின்னொரு பகுதியிலே சொல்லுகிறார்:—"பார்த்தா, தொழிலுக்கு வெற்றி இந்த உலகத்தில் மிகவும் விரைவாகவே எய்தப்படும்" என்று. தவிரவும், "மகனே, நற்றொழில் புரிந்த எவனும் இவ்வுலகத்தில் தீ நெறி எய்துவதில்லை" என்று பின்னே கடவுள் மற்றோரிடத்தில் விளக்கியிருக்கிறார்.

எனவே, வெற்றியைக் கடவுளின் ஆணையாகக் கண்டு, பயனைப்பற்றி யோசனையே புரியாமல், நம்மவர் ஸ்வராஜ்யத்துக்குரிய தொழில்களை இடைவிடாமல் செய்துகொண்டு வரக் கடவர்.

அதனை உடனே தொடங்கவும் கடவர். அதில் திரிகரணங்களை மீட்சியின்றி வீழ்த்திவிடவும் கடவர்.

ஸ்ரீ ரவீந்திரர் திக் விஜயம்

காளிதாஸன்

25 ஆகஸ்டு 1921 துன்மதி ஆவணி 10

" மன்னற்குத் தன் தேச மல்லால் சிறப்பில்லை ;
கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு."

ஆஹா, மனிதராகப் பிறந்தோரில் கீர்த்தி பெற்றுல் மாத்திரம் என்ன ப்ரயோஜனம்? என் நண்பர் பெயர் சொல்லப்படாத ஒருவருக்குக்கூட ஓரிடத்தில், ஒரு கூட்டத்தினிடையே ஒரு சுருதியா ருக்குள் ஒருவிதமான கீர்த்தி ஏற்பட்டிருக்கிறது.

நாளை அந்தக் சுருதி புகையாய்விடும். அந்தக் கூட்டம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அந்தக் கீர்த்தி, "பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விடுமே."

கீர்த்தியடைந்தால், மஹான் ரவீந்த்ரரைப் போலே அடைய வேண்டும். வங்காளத்தில் மாத் திரமா? இந்தியா முழுமையுமா? ஆசியா முழுதுமா? ஜெர்மனி, ஆஸ்த்ரியா, பிரான்ஸ் பூமண்டல முழு மையும் பரவின கீர்த்தி. இத்தனைக்கும் அவர் பாடிய பாட்டுகளோ வங்க பாஷையிலே உள்ளன. வெறும் மொழிபெயர்ப்புக்களைத்தான் உலகம் பார்த்திருக் கிறது. அதற்குத்தான் இந்தக் கீர்த்தி.

ஜெர்மனியிலே, இவருடைய அறுபதாம் வருஷக் கொண்டாட்டம் சில தினங்களின் முன்பு கொண்டாடப்பட்டது. அப்போது (பி) பெர்ன்ஸ்தாப் (எப்) முதலிய மஹா பிரமுகர்கள் கூடி ஒரு ஸமிதி சமைத்துக்கொண்டு, இக்காலத்தில் ஜெர்மன் பாஷையில் எழுதப்பட்டிருக்கும் மிக முக்யமான காவ்யங்களும், சாஸ்த்ர க்ரந்தங்களும், பிற நூல்களும் அடங்கிய மிக விலையுயர்ந்த புஸ்தகத் தொகுதியொன்று டாகுருக்கு ஸம்மானம் செய்தார்கள்.

ஜெர்மனி தேசம் இன்றைக்கும் ஐரோப்பாக் கண்டத்தின் வித்யா ராஜதானியாக விளங்குகிறது. ஜெர்மனியில் நமது பாரத ரவீந்த்ரராகிய நவீந்த்ரருக்கு நடத்தப்பட்ட உபசாரங்களெல்லாம் அவருக்குச் சேரமாட்டா. பாரதமாதாவின் பாத கமலங்களுக்கே சேரும். ஜெர்மனியில் உபசாரம் நடந்த மாத்திரத்திலே, அதைப் பின்பற்றி மற்ற முக்யமான ஐரோப்பிய தேசங்களெல்லாம் அவருக்குப் பூஜை நடத்துமென்பது சொல்லாமலே விளங்கும். அங்ஙனமே நடத்தியுமிருக்கின்றன என்பதைக் கீழே நன்கு விவரணம் புரிவோம்.

1921-ம் வருஷம், மே மாஸம், 21-ந் தேதியன்று, "ஹம்புர் கெர் ஜெய்துங்க" என்ற பத்திரிகையில் ஒருவர் எழுதியிருக்கும் நிருபத்தில் ஸ்ரீமான் டாகுரைப் பற்றிய பின்வரும் வசனங்கள் கவனிக்கத் தக்கன: "ஸ்ரீமான் ரவீந்த்ரநாத டாகுர் ஸபைக்குள் வந்து பிரவேசித்த மாத்திரத்தில் எங்கள் அறிவுக் கெட்டாத ஒரு சக்தி வந்து புகுந்தது போலிருந்தது. இந்த மனிதருடைய வாழ்க்கையில் ஒற்றை க்ஷணமாவது இவர் எல்லையில்லாத ஜகத்துடன் லயப்பட்டு நில்லாத க்ஷணம் கிடையாதென்பது தெளிவாகப் புலப்பட்டது. அவருடைய ஆரம்ப வசனங்களே மிகவும் வியக்கத்தக்கனவாக இருந்தன.

கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் நிகழ்ந்திருக்கும் ஸந்திப்பே இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய ஸம்பவ மென்று ரவீந்த்ரர் தம்முடைய முதல் வாக்கியமாகக் கூறினர். ஆசியா ஐரோப்பாவிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய உண்மைகள், ஆசியா ஐரோப்பா விடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய சக்திகள் பல இருக்கின்றன என்பதை ரவீந்த்ரர் மறுக்க வில்லை. இதனை மேற்றிசை உபந்யாஸங்களினிடையே அவர் பன்முறை அங்கீகாரம் செய்திருக்கிறார். இந்தியாவுக்கு வந்த பின்னர் சில ஆங்கிலோ இந்தியப் பத்ராதிபர்களுக்குப் பேரானந்தம் விளையும்படி மிகவும் அழுத்தமான பாஷையில் எற்புறுத்தி யிருக்கிறார். ஆனால் இஃதன்று அவருடைய முக்யோபதேசம். நாம் மேற்றிசையாரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய அம்சங்களைக் காட்டிலும், அவர்கள் நம்மிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் அதிகமென்பதே அவருடைய மதம். ஆசியாவையும் ஐரோப்பாவையும் ஒற்றுமைப் படுத்தினலன்றி, உலகத்தில் யுத்தங்கள் நிற்கப் போவதில்லை. ஆசியாவும் ஐரோப்பாவும் ஸமத்வம், ஸஹோதரத்வம், அன்பு என்ற தளைகளாலே கட்டப்பட்டாலன்றி, உலகத்தில் ஸமாதானத்துக் கிடமில்லை. ஸமாதானமே யில்லாமல், மனிதர் பரஸ்பரம் மிருகங்களைப் போலே கொலை செய்து கொண்டு வருமளவும், மனிதருக்குள்ளே நாகரிக வளர்ச்சியைப்பற்றிப் பேசுதல் வெற்றுரையேயாகு மென்று கூறிவிடுக்கு. ஆசியாவையும் ஐரோப்பாவை யும் இங்ஙனம் ஒற்றுமைப்படுத்துதற்குரிய பல புதிய உண்மைகளையும் அறங்களையம், தம்முடைய அற்புத மான நூல்களாலும், உபன்யாசங்களாலும் தெளிவு படுத்தி மகான் டாகூர் இந்த பூமண்டலத்தையே தமக்குக் கடன்படுமாறு செய்துவிட்டார். இதனை ஜெர்மனி முற்றிலும் நன்றாக உணர்ந்துகொண்டு,

அதன் பொருட்டாக நம் ரவீந்த்ரரிடம் அளவிறந்த மதிப்புச் செலுத்துவதுமன்றி அபாரமான நன்றியும் செலுத்துகிறது.

ஆஸ்த்ரியா தேசத்தில் பாரத கவிராஜ ரவீந்த்ரருக்கு நடந்த உபசாரங்கள் வர்ணிக்கத் தக்கன அல்ல. 1921 ஜூன் 26-ஆந் தேதியன்று, லண்டன் "அப்ஸர்வர்" பத்திரிகையின் வியென்நா நிருபர் எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறுகிறார்:—

"வியென்நா நகரத்துப் பொதுஜனங்களாலும் பத்திராதிபர்களாலும், ஒருங்கே இத்தனை ஆழ்ந்த பக்தி ப்ரத்தைகளுடனே, இத்தனை ஒருமனமான புகழ்ச்சி வந்தனைகளுடனே நல்வரவேற்கப்பட்டோர் வேறெவரும் கவிகளிடையேயுமில்லை, பெரிய பெரிய ராஜ்ய தந்த்ரிகளிடையேயுமில்லை, வீர ஸேனாபதிகளிடையேயு மில்லை; மன்னர்களிடையேயு மில்லை" என. ஆஹா! இஃதன்றோ கீர்த்தி. இதனைக் குறிப்பிட்டன்றோ, முன்பு திருவள்ளுவனாரும். "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றார்.

தன் பொருட்டாகச் சேகரிக்கப்படும் கீர்த்தியொரு கீர்த்தியாகுமா? ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்போனுடைய புகழே புகழ். ரவீந்த்ரநாதர் இந்தியாவை பூலோக குரு வென்று பூமண்டலத்தார் கண்முன்னே நிலைநாட்டிக் கொடுத்தார். அவருடைய திருவடி மலர்கள் வாழ்க.

இந்தியாவின் ஞானத்தை தேசமாகிய அமிர்தத்துக்கு, ஐரோப்பாவில் உயர்ந்த தரத்து மேதாவிகள் எத்தனை வேட்கையுடன் காத்திருந்தன ரென்பது மேலே கூறிய ஆஸ்த்ரிய நிருபரின் கடிதத்திலே மற்றொரு பகுதியில் பின்வரும் வசனத்தாலே நன்கு விளக்கப்படுகின்றது:—"இந்த நூற்றாண்டின் சிதறுபட்ட குழந்தைகளாகிய நாம் (ஐரோப்பியர்

இப்போது ஒற்றுமையை நாடித் தவிப்பது போல் இதுவரை எப்போதும் தவித்தது கிடையாது.) நரகவாதனைப் படுகிற நாம் இன்னும்எதிர்காலத்தில் இந்த மண்மீது தேவலோக அனுபவங்களெய்துவோம் என்று கனவுகள் காண்பதை விடவில்லை. இப்படியிருந்த எங்கள் முன்னே மற்றொரு லோகத்திலிருந்தொரு மனிதன் வந்தது போலே டாகுர் வந்தார். அவரை நல்வரவு கூறி உபசரிப்பதற்கு இப்போது நாம் தகுதி பெற்றிருப்பதுபோல் இதுவரை எப்போது மிருந்ததில்லை. இப்போது ஆயத்தமாக இருப்பது போல், இதுவரை எப்போதும் ஆயத்தமாக இருந்தது கிடையாது. இஃது நேற்று அவருக்கு நடந்த உபசாரங்களாலே நன்கு விளங்கிற்று'' என்று அந் நிருபர் கூறுகிறார்.

இனி பிரான்ஸ் முதலிய மற்ற தேசங்களில் இந்தக் கவீசுவரருக்கு நடந்த உபசாரங்களைப் பற்றிப் பேசு முன்னர், இவர் இந்தியாவின் எந்த உண்மையைத் தெரிவித்தபடியாலே இங்ஙனம் பாரத பூமிக்கு பூலோக குருத்தன்மை ஏற்படுத்திக் கொடுக்க வல்லோர் ஆயினர் என்பதைச் சற்றே ஆராய்ச்சி புரிவோம் :—

அஃது பழைய வேத உண்மை; எல்லாப் பொருள்களும் ஒரே வஸ்துவாகக் காண்பவன் ஒருவனுக்கு மருட்சியேது? துயரமேது? எல்லாம் ஒரே பொருளென்று கண்டவன் எதனிடத்தும் கூச்சமேனும், வெறுப்பேனும், அச்சமேனும் எய்தமாட்டான். அவன் எல்லாப் பொருள்களிடத்தும் அன்பும், ஆதரவும், ஸந்துஷ்டியும், பக்தியும் செலுத்துவான். எல்லாப் பொருளிலும் திருப்தி பெறுவோன் எப்போதும் திருப்தியிலிருப்பான். இங்ஙனம் மாறுத சந்தோஷ நிலையே முக்தி நிலையென்றும் அமர பதமென்றும் கூறப்படுவது. இதனை மனிதன்

அப்யாஸத்தாலும் நம்பிக்கையாலும் இந்த உலகத்தில் எய்திவிட முடியும். அஃதே வேதரஹஸ்யம்.

இந்த ஆத்ம ஐக்கியமான பரம தத்துவத்தை மிக இனிய தெளிந்த வசனங்களாலே ஐரோப்பாவுக்கு எடுத்துக் கூறியது பற்றியே ரவீந்த்ர கவிச் சக்ரவர்த்திக்கு ஐரோப்பா இங்ஙனம் அற்புத வழிபாடு செலுத்திற்று.

பாரதியாரின் எழுத்துப் பணி

(கால வரிசையில்)

1904	ஜூலை	தனிமை இரக்கம் — கவிதை — மதுரை விவேகபாநு மாத இதழ்.
1905	செப்.	15 வங்கமே வாழிய—கவிதை—சுதேச மித்திரனில் முதற் கவிதை.
	நவ.	வந்தே மாதரம்—கட்டுரையும், வந்தே மாதர கீதத்தின் முதல் மொழிபெயர்ப்பும்— சக்கரவர்த்தினி மாத இதழ்.
1906	ஜன.	29 வேல்ஸ் இளவரசருக்குப் பரதக் கண்டத் தாய் நல்வரவு கூறுதல்-கவிதை.
	பிப்.	13 விண்ணப்பம்—தேசீயப் பாடல்கள் அனுப்புமாறு அறிக்கை.
	பிப்.	24 வந்தே மாதரம்—கவிதை
	ஏப்.	4 என்னே கொடுமை—கவிதை
	ஏப்.	11 எனது தாய் நாட்டின் முன்னுட் பெருமையும், இந்நாட் சிறுமையும்—கவிதை.
	ஏப்.	இந்தியா வார இதழ் ஆரம்பம்.

ஜூலை 21 ஸ்வாமி அபேதானந்தர்—கட்டுரை—இந்தியா.

அபேதானந்த ஸ்வாமிகளின்மீது தோத்திரக் கவிகள்—கவிதை.

செப். 17 யான்—கவிதை

செப். 25 சந்திரிகை—கவிதை.

நவம். 26 ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலஞ் சென்றதைப்பற்றிய இரங்கற் பாக்கள்—கவிதை.

1907 மே 18 சென்னை வாசிகளின் நிதானமும் விபின சந்திரபாலரின் சந்நிதானமும்—கட்டுரை.

டி.ஸ. 17 திருவல்லிக்கேணி சுதேசிய கிருஷியம்—கடிதம்.

டி.ஸ. 19 காங்கிரஸ் நாஷனலிஸ்டு டெலிகேட்டுகளுக்கு நாட்டிஸ்—அறிக்கை.

டி.ஸ. எங்கள் காங்கிரஸ் யாத்திரை—துண்டுப் பிரசுரம்.

புதிய கட்சியின் கோட்பாடுகள்—துண்டுப் பிரசுரம்.

1907 ஸ்வதேச கீதங்கள்—மூன்று பாடல்கள் அடங்கிய முதல் பிரசுரம்.

இதில் வெளியான கவிதைகள் :
வந்தே மாதரம்
நாட்டு வணக்கம்
எங்கள் நாடு

1908 ஜன. ஸ்வதேச கீதங்கள்—முதல் கவிதை நூல்.

இந்நூலில் அடங்கிய கவிதைகள் :
வந்தே மாதரம்—1
வந்தே மாதரம்—2
நாட்டு வணக்கம்
எங்கள் நாடு
நடிப்புச் சுதேசிகள்
தொண்டு செய்யும் அடிமை
மேத்தா திலகருக்குச் சொல்வது
லாஜபத்ராய் துதி
லாஜபத்ராய் பிரலாபம்
தாதாபாய் நவுமராஜி
பூபேந்திர விஜயம்
சுதந்திரப் பெருமை
மாஜினியின் பிரதிக்ஞை
புது வருஷம்

செப். சென்னையில் வெளியான வார இதழ் இந்தியா நிறுத்தம்.

அக். 20 புதுச்சேரி இந்தியா தொடக்கம்

1908 லோகமான்ய பாலகங்காதர திலகர் — கவிதை — எம். வி. ஈசுவர அய்யர் எழுதிய ஸ்ரீ திலகரின் ஜீவிய சரிதம் என்ற நூலில்.

1909 செப். 7 விஜயா தொடக்கம்—கர்ம யோகி தொடக்கம்.

1909 ஜன்ம பூமி—சுதேச கீதங்கள் இரண்டாம் பாகம்.

இதில் அடங்கிய கவிதைகள் :
ஜாதீய கீதம்
ஜய பாரத !

பாரத தேவியின் திருத்தசாங்கம்
மாதாவின் துவஜம்

எங்கள் தாய்
தொண்டு செய்யும் அடிமை

நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்

ஆங்கிலேயன் ஒரு தேசபக்தனுக்குக் கூறுவது

தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி

பாரத தேவியின் அடிமை
அபேதானந்த ஸ்வாமிகளின்மீது
ஸ்தோத்திரக் கவிகள் :
சுதந்திரப் பெருமை
சுதந்திர தாகம்
சுதந்திரப் பள்ளு
சுதந்திர தேவியின் துதி
ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்

1910 ஜன. ஞானரதம்.

நவம். மாதா வாசகம்—மூன்றாவது கவிதை நூல்.

இதில் அடங்கிய கவிதைகள் :

மகா சக்தி
மகா சக்திக்கு விண்ணப்பம்
காளிக்கு ஸமர்ப்பணம்
நான்
மனத்திற்குக் கட்டளை
தெளிவு

ஸ்வசரிதை

ஜாதீய கீதம்
(புதிய மொழிபெயர்ப்பு)

பாரத மாதா திருப்பள்ளி
யெழுச்சி

கிருஷ்ணன் மீது ஸ்துதி

1912 பாஞ்சாலி சபதம்

பகவத் கீதை தமிழ் மொழி
பெயர்ப்பு

ஆறில் ஒரு பங்கு—கதை
கண்ணன் பாட்டு
குயில் பாட்டு

1913 மே சின்னச் சங்கரன் கதை—சுப்பிர
மணிய சிவாவின் ஞானபாநு
இதழில் ஆரம்பம்.

டி-ஸ. யோகசித்தி—கவிதை—ஞானபாநு

1916 ஜன. வேங்குழல்—கவிதை—ஞானபாநு

1914 புதிய ஆத்திசூடி
பொன்வால் நரி

மாதா மணிவாசகம்—தென் ஆப்
பிரிக்காவில் வெளியான பாரதி
கவிதை நூல்

இதில் வெளியானவை :
சரஸ்வதி தேவியின் புகழ்
ஸூர்ய தரிசனம்
வெண்ணிலா
ஹே காளி !

மகா சாளியின் புகழ்
மகா சக்தி பஞ்சகம்
மகா சக்தி வாழ்த்து
வெற்றி
அச்சமில்லை
சங்கு
அறிவே தெய்வம்
பரசிவ வெள்ளம்

1915 மே. பாப்பா பாட்டு—ஞானபானு

ஏப். ஞானபானு—கவிதை—ஞானபானு

ஜூன். 15 எதிர் ஜாமீன்—கட்டுரை

ஜூலை 1 சித்தக் கடல்

குறிப்பு :—இதற்குப் பின்பு வந்த கட்டுரை முதலிய வைகள் வரிசையாக இந்நூலிலேயே தரப் பட்டுள்ளன. அவற்றைக் கவ்வடு கொள்க. இதிலில்லாத சில விவரங்களைக் கீழே காண்க.

1917 கண்ணன் பாட்டு (முதற் பதிப்பு) —பரலி. சு. நெல்லையப்பர்.

1917 ரவீந்திரநாத தாகூரின் ஐந்து கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு

1918 நாட்டுப் பாட்டு (முதற் பதிப்பு) —பரலி. சு. நெல்லையப்பர்.

1921 ஆக. 25 ஸ்ரீ ரவீந்திர திக் விஜயம்—கடைசி யாக சுதேசமித்திரனில் வெளி யான கட்டுரை.

துணை நூல்கள்

1. மகாகவி பாரதியார்—வ. ரா.
2. பாரதியார் சரித்திரம்—செல்லம்மா பாரதி
3. கவிச்சக்ரவர்த்தி சுப்ரமணிய பாரதி சரிதம்
—ஆக்கூர் அனந்தாச்சாரி
4. புதுமைக்கவி பாரதியார்—தி. ஜ. ர.
5. என் குருநாதர் பாரதியார்—ரா. கனகலிங்கம்
6. பாரதியும் கவிதையும்—தங்கம்மாள் பாரதி.
7. வி. ஓ. சி. கண்ட பாரதி—வ. உ. சிதம்பரம்
பிள்ளை
8. பாரதி விளக்கம்—சுத்தானந்த பாரதி
9. பாரதியார்—'சக்தி தாசன்'
10. சுதேசமித்திரன்—தொகுதிகள் 1905-1921
(தினசரி, வார மும்முறைப் பதிப்புகள்)
11. இந்தியா—பாரதியார் நடத்திய வாரப்
பத்திரிகை இதழ்கள்
12. லோகோபகாரி—பரலி. சு. நெல்லையப்பர்
நடத்திய வாரப் பத்திரிகை இதழ்கள்
13. Bharathi and his Works—C. Viswanathan
14. பாரதி நூல்கள்—மூன்று பாகங்கள்
15. தாகூர் பஞ்ச வியாசங்கள்—பாரதியார் மொழி
பெயர்ப்பு
16. சித்திர பாரதி—ரா. அ. பத்மநாபன்